முன்னுரை

முன்னுரை எதற்கு என்று வாசகர்கள் வினவலாம். மறுப்பு எதற்காக என்று அவர்கள் ஏன் கேட்கலாகாது? மறுப்பு வந்த பின்னர், முன்னுரை தானாகவே வரவேண்டிய சங்கதிதானே? மறுப்பைத் தூண்டியது மானம். பொதுக் குடும்பத்தின் மானம் "சந்தி சிரிக்கலாகாது" என்பது எனது கொள்கை. அண்ணன் தம்பிமார்களும் பெற்றோர்களும் உறவினர்களும் வீட்டுக்குள்ளே அடித்துக்கொள்ளலாம். ஆனால் அந்தச் சத்தம் கதவைத்திறந்துகொண்டு, காற்றினிடம் அடைக்கலம் புகலாகாது. நான் பாரதத் தாயின் "கடைக்குட்டி". எனது அண்ணன்மார்களிற் பெரும் பான்மையோர் அஸ்திவாரத்தைப் பெயர்த்துத்தள்ளும் வீட்டுச்சண்டையில் ஈடுபட்டுக் கிடக்கின்றார்கள். எனவே, நமது குடும்பத்தின் மானத்தைப் பொருள் படுத்தாமல் வெளியே தூற்றிய மேயோவைப்பற்றி, அவர்கள் போதிய கவனம் செலுத்தவில்லை? அண்ணன்மார்களின் அசதி "கடைக்குட்டி" யின் காலமல்லவா? எனவே, மானத்தால் தூண்டப்பெற்று, இந்த மறுப்பு வெளிவந்துள்ளது. தாய் சென்றால், கன்று முன்னால் துள்ளிப்போடுவது போல, மறுப்புக்கு முன்னே, முன்னுரை துள்ளி நிற்கின்றது, ஓடவில்லை. பொதுக்குடும்பவாழ்க்கையைத் தூற்றிப் பேசியிருக்கும்மேயோவுக்கு, பொதுக்குடும்பத்தின் "கடைக்குட்டி" யாகிய நான், மறுப்பு எழுதவேண்டியது ஒருவகையில் பொருத்தமுள்ளதாகும். ஏனெனின், ஊர்வம்பை இழுப்பவன் குடும்பத்தின் "கடைக்குட்டி" யல்லவா? கடைக்குட்டியின் "ஊர் வம்பு" ச்சண்டையினின்றாயினும், குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படலாகாதா?

வ. ரா.

FOREWORD.

The thing that has now happened to Katherine Mayo's book is of profound significance. When the news first came to India that she had been slandered and insulted by an American woman, we were frankly angry. There was impotence in the anger; but there was no doubt as to the anger itself. With the lapse of months, however, the anger has spent itself and a new mood has come into being. Frankly recognising that the attack of "Mother India" was based on the facts noted originally by Indian reformers themselves educated men and women are now at the task of meeting the challenge of the book in a spirit of pure constructiveness. They concede the justice of the criticism and want to make India civilized. Dr. Muthulakshmi Reddi's Bill is a peace-offering to Miss Mayo: So is the current discussion about Mr. Sarada's proposed legislation. I welcome Mr. V. Ramaswami Iyengar's book as the most elaborate expression of this spirit.

Miss Mayo's attack is on Hindu India and I am a little unsure whether I have got firm grasp of the whole fact. But judging in as detached a spirit as it is possible for me to command, it strikes me that there are two ways Hindus could meet the book. You might say that Miss Mayo had no right to criticise or interfere with the hist growth and adaptations of Indian society and that it w partly ignorance and mostly impudence to poke her nos into affairs which were none of her concern. We might say in so many words "Dear lady, you had better min

your business. We have been at the task of running a stable society these thousands of years. We know something about marriage, a little about religion, how to get children into the world and to look after them in the home before they are sent out. We know there is such a thing as sex, how mad a thing it might be and how sane and constructive also. We are honest about recognising that humanity has to work out its destiny through the instrumentality of these bodies of ours and there are primary conditions of various kinds to be fulfilled. On the whole we think we have made not a bad job of it. It is true that we have widows and that some of them are no ascetics; but not all your unmarried women are ascetics either. We have early marriage, (child marriage too if you are particular) but your late marriages with its companionate developments of which we hear remote echoes here do not strike us as exactly pleasant or perfect nor according to our heathen notions even decent. A few of our child wives are raped, no doubt; but is it so much worse than loose morals, contraception among the unmarried, illegitimate births, abortions, baby farmers, infanticide and you know Europe and America are full of these things as India of raped child wives. These are the inevitable consequences of late marriages. You tell us about the untouchables; but is there no lynching among you, no Jim Crow Laws, no discrimination in railway trains, in Pullmans and sleepers, in hotel accommodation; do you allow whites to intermarry with coloured folks; is there not a man in America named Du Bois whose burning

pages should put to shame even Katherine Mayo in her most sanctimonious moods? God knows that there are evils enough in the world and humanity is still very imperfect in America as well as India. If you have a bit of reforming energy (and the world is sorely in need of it all), why do you not apply yourself to the reformation of your own people? At any rate we suggest to you that you cannot understand our difficulties or the supreme success with which we have surmounted a good many of them and that you had better go about your business".

The second position will be this:—We do not concede for a moment that this woman means well by us. She is probably an emissary of the British Government sent out to discredit us before the world on the eve of the Statutory Commission. If there was power enough, we should hand over the infamous libel to be burnt by the hangman. But (here comes the point) before the burning, we should look at her charges against us. We should acknowledge that we have been blundering in the past; but now that "Mother India" has been published and the lesson of its facts and statistics learned, we must be courageous enough to acknowledge that India had gone wrong these thousands of years and go forward boldly to the new time when European and American standards will be our standards, and we shall go into civilisation without faltering. Taking the position as a whole it must be conceded that it is the second of these answers that is likely to survive in the long run. My belief is that it is in the main correct. I welcome this book because along

with a merciless analysis of the book which is reminis-
-nt of what I have described as the first attitude there is
he equally candid admission that in the time before us
here are a hundred things great and small in which we
ust admit the justice of the criticism and break boldly
vay from the past into the western civilisation of the
ture. It seems to me that Mr. Ramaswami Iyengar
epresents that spirit, which is really the spirit of the
evolutionary.

I shall pause here to note my suspicion (only note)
hat human experience will throw us back into an
ppreciation of the soundness of traditional solutions.
But the recent failure of Gandhiji's calculus makes it
lear that educated India in whose hands rests the sha-
ng of national dreams and efforts is determined on going
e whole hog in civilising itself. It is not content with
e past, not content with India, not content with half
asures. Things have to be a good deal worse before
ey get better. I do not despair, because whatever indi-
luals might do to make fools of themselves there is a
rsistent element of permanent adaptability which will
ally save humanity. But the next century or two
ill be Miss Mayo's and Mr. Ramaswami Iyengar's. The
venty second century may be ours......that is my conso-
tion. But in the twenty second century, we shall
l be comfortably dead, they and I.

7, Lloyd Road, *Royapettah.* GEORGE JOSPEH.

நூன்முகம்.

இந்தியாவைக் குறித்து மிஸ். காதரைன் மேயோ எழுதிய நூல் நல்லதோ, கெட்டதோ பெயரெடுத்துவிட்டது. ஒரு அமெரிக்க மாது நம் நாட்டைக்குறித்து அவதூறாக எழுதியிருக்கிறாளென்ற சமாச்சாரத்தை முதலில் கேட்கும் போது நாம் உண்மையில் கோபமடைந்தோம். நாம் கோபம் கொண்டதில் பயன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கோபம் உண்டானது உண்மையே. அதற்கு ஆதாரமும் இல்லாமற் போகவில்லை. ஆனால் இந்த சிலமாத காலத்திற்குள் அந்தக் கோபமானது ஒரு வகையாகத் தணிந்து விட்டதென்றே சொல்லவேண்டும். அதற்குப் பதிலாக ஒரு புதிய உணர்ச்சியே நம் மனத்தில் உண்டாயிருக்கிறதென்று சொல்லுவது பொருந்தும். மேயோ தனது நூலில் என்னென்ன எழுதியிருக்கிறாளோ அவைகள் எல்லாம் நம் சீர்திருத்தக்காரர்கள் எண்ணாதவையல்ல; சொல்லாதவையல்ல. இப்பொழுது தாம் எண்ணி வந்ததையும், சொல்லிவந்ததையும் காரியத்திலே செய்து வருகிறார்களென்று சொல்லலாம்.

நம் நாடானது நாகரிகநாடு என்று கருதப்படுவதற்கு வேண்டிய வேலைகளை அவர்கள் விருப்பத்துடன் செய்து வருகிறார்கள். ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்களின் மசோதா மேயோவுக்கு சமாதானம் கூறுமல் போகுமா? சாரதா சட்டமும் சேர்த்துக்கொள்ளப்படலாம். ஸ்ரீ. வ. ரா. அவர்கள் எழுதிய இந்நூலையும் நான் வரவேற்கிறேன்.

மிஸ். மேயோ ஹிந்து இந்தியாவைப் பற்றியே முழுதும் எழுதியிருக்கிறாள். எனவே உள்ள சங்கதியை நாம் நன்கு கிரஹித்துக் கொண்டோமா என்பதைப் பற்றி எனக்கு

ஒரு சிறிது சந்தேகம்உண்டு. இருந்தபோதிலும் எனக்குத் தோன்றுவது என்னவென்ருல் இந்துக்கள் மேயோவின் நூலுக்கு இரண்டு விதங்களில் பதில் இறுக்கலாமென்று நினைக்கிறேன். இந்திய சமூகவாழ்வைப்பற்றியாவது, சரித்திர வளர்ச்சியைப்பற்றியாவது, மேயோ குறை கூறுவதற்கு அவர் யார் என்றும், அவள் அறியாத்தனத்தினுலும், அகம்பாவத்தினுலும், அவளுக்கு சம்பந்தமில்லாத விஷயத்தில் காலைவிட்டதைக் கண்டிக்காமலிருக்கமுடியாதென்றும் நீங்கள் சொல்லலாம். இன்னும் "அம்மணி! நீ உன் வேலையைப் பார்! எங்களுக்குக் கலியாணத்தைப் பற்றியும், மதத்தைப் பற்றியும், குழந்தை பெறல், வளர்த்தலைப்பற்றியும் கொஞ்சம் தெரியும். மனிதத்தன்மை உய்வு பெறுவதற்காகவுள்ள சில முக்கிய கடன்களை சரீர வாயிலாகவே செய்தல் வேண்டுமென்பதை நாங்கள் உணராமலில்லை. அவ்வாறு உணர்ந்து கடனுற்றுவதில் நாங்கள் பின்வாங்கினேமென்று சொல்வதற்கில்லை. இந்நாட்டில் விதவைகள் இருக்கிருர்களென்பதும் அவர்களிற் சிலர் இல்வாழ்க்கையையே முற்றுந்துறந்துவிடாமலிருக்கின்றனரென்பதும் வாஸ்தவமே. ஆனல் உங்கள் நாட்டில் கலியாணமாகாத கன்னிகள் எல்லோருமே இல்வாழ்வு தெரியாதவர்கள்தானு? இங்கு பால்யவிவாகம் (இன்னும் உங்கள் இஷ்டம்போல்சொல்லவேண்டுமானுல் குழந்தை விவாகம்) இல்லாமலில்லை; ஆனுல் உங்கள் நாட்டில் நடைபெறும் வயது சென்ற கலியாணங்களும், பின்னுல் ஏற்படுவதாகத்தெரியும் பலகஷ்டங்களும் எங்களுடைய மனதிற்கு மிகவும் ஆபாசமாகத்தான் தோன்றுகின்றன. குழந்தைக் கலியாணங்களினுல், குழந்தைகளிற்சில கற்பழிந்து கெட்டுவிடுகின்றன வென்பது வாஸ்தவமே. ஆனுல், கெட்ட நட-

வடிக்கை, கலியாணமாகாதவரிடமுள்ள கள்ள நட்பு, திருட்டுப் பிள்ளை பெறுதல், கருவழித்தல் இவைகள் எல்லாவற்றையும்விட கேவலமானது என்ன விருக்கிறது? மேற் கூறியவைகள் வயதுசென்ற கலியாணங்களினுல் தான் உண்டாகின்றன வென்பதில் என்ன சந்தேகம்? தீண்டாமையைக் குறித்து என்னமோ பிரமாதமாகப் பேசுகிறீர்கள். ஆனுல் உங்கள் நாட்டில் தீண்டாமை யென்பதே அற்றுப் போய்விட்டதா? புகைவண்டிகளிலாவது, ஹோட்டல்களிலாவது முழுசமத்துவமும் வழங்கப்படுகிறதா? வெள்ளை மனிதர் கறுப்பு மனிதர்களுடன் சம்பந்தம்வைத்துக் கொள்ளுகிறுர்களா? அமெரிக்காவில் டேபாய்ஸ் என்பவர் மேயோவும் தலைகுனியும்படியான நெருப்பு எழுத்துக்களை யெழுதவில்லையா? உலகத்தின் எந்த பாகத்திலும் தீமைகள் இருக்கின்றன வென்றும், அமெரிக்காவிலும் சரி, இந்தியாவிலும் சரி, மனிதன் குற்றமே அற்றவனுய் இல்லையென்றும் கடவுளுக்குத் தெரியும். சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற உணர்ச்சி உண்மையில் உங்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், உங்களுடைய நாட்டைப்பற்றி யேன் நீங்கள் சிந்தித்துக் கொள்ளக்கூடாது. எப்படியாயினும் எங்களுடைய நிர்ப்பந்தங்களையாவது அல்லது எங்கள் நிர்ப்பந்தங்களின் பெரும்பாகத்தை நாங்கள் எப்படி ஒழித்து வருகிறுமென்பதையாவது நீங்கள் அறிந்துகொள்ளமுடியாது. எனவே உங்களுடைய வேலையைநீங்கள் பார்த்துக்கொண்டுபோகலாம்.''

இரண்டாவது நிலைமைவருமாறு:—

இந்த மேயோ மாது நல்ல எண்ணத்தோடு நம்மைப் பற்றிப் பேசுகிறுளென்று நம்மால் கொஞ்சமும் நினைக்கமுடியாது. ராயல் கமிஷனுக்கு முன்பாக இந்தியாவை உலகமறி

யும்படி இழிவுபடுத்தி விடுவதற்காக பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட தூதாயிருக்கலாமோ வென்றே நினைக்கும்படியாயிருக்கிறது. நாமே அதிகாரிகளாயிருந்திருப்போமானால் நாம் அவளை என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம். இது கிடக்க, அவள் செய்த குற்றத்தைத் தவிர்த்து அவள் காட்டியுள்ள நமது குற்றங்களை நாம் நன்னேக்குடன் கவனிக்கவேண்டாமா? நாம் அநேக தவறுகள் செய்திருக்கிறோ மென்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இப்பொழுது மேயோவின் நூலும் வெளிவந்துவிட்ட படியால் அவள் கூறியுள்ள பல விஷயங்களின் கருத்தை நாம் தெரிந்துகொண்டு விட்டபடியாலும் இந்தியாவானது அநேக ஆயிர வருஷகாலமாகவே தப்பான வழியிற் சென்றிருக்கிறதென்றும் ஆனல் இந்தியாவுக்குப் புதியகாலம் உதயமாகி விட்டதென்றும், என்னாட்டிற்கும் இந்தியா பின்னடையாமலிருக்கு மென்றும் நாம் தைரியமாய்ச் சொல்லுவோம். மேயோபேரில் கோபமடைவதைக் காட்டிலும் அநேகமாய் நாம் இப்பொழுது இரண்டாவதாகக் கூறிக்கொண்டு வருவது தான் சரியென்று நம் மனதிற்குத் தோன்றுகிறது. நான் இந்த "மாயா மேயோ" என்ற நூலை வரவேற்கிறேன். ஏனென்றால் மேயோவின் நூலிலுள்ள ஒரு வரியையாவது இவர் காண்பிக்காமலாவது, பதிலளிக்காமலாவது விட்டுவிடவில்லை. மேலும் எங்கெந்த விடங்களில் உண்மையை ஒப்புக்கொள்ளவேண்டுமோ அங்கே ஒப்புக்கொள்ளுகிறார். பிறர் குறை கூறும்படியான குற்றங்களைக் களைந்தெறிந்து என்னாட்டிற்கும் முன்னாடாக மேலே செல்லவேண்டுமென்ற உணர்ச்சி ஆசிரியர் வ. ரா. விடம் பூர்த்தியாயிருப்பதை அவருடைய நூலில் காண்பித்துவிட்டார்.

முடிவான எந்தக்காலத்திலும் பழைய சங்கதிகளைப் பற்றி சிலாக்கியமாக எண்ணும் படியாகவே நம்முடைய அநுபவம் நம்மைத்தூண்டுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. மஹாத்மா காந்தியின் எண்ணங்கள் பலிக்காமற்போனதிலிருந்து இந்தியாவின் கதியைத்தாங்கி நிற்கும் படித்தவர்கள் இந்தியாவைச் சீர் திருத்தி நாகரிகத்தில் முன்னேறுவதற்கு வேண்டிய வேலைகளை விடாமுயற்சியுடன் செய்து வருகிறார்கள். அவர்கள் நடந்ததைக் குறித்து திருப்தியடையவில்லை. இப்பொழுதுள்ள இந்தியாவைப்பற்றியும் திருப்தியடையவில்லை. அரைகுறையான எந்த விஷயத்தாலும் அவர்கள் திருப்தியடைய முடியாது. காரியங்கள் நிரம்பக்கெட்டுத்தான் பிறகு நல்வழியில் சீர்திருத்த மடைய முடியும். நான் ஏங்கவில்லை; ஏனென்றால் யார் யார் என்னென்ன காரியங்கள் செய்த போதிலும், மனிதத்தன்மை உய்வு அடைவதற்கான வழி சற்று கோணலாயிருந்தாலும், மறைந்துவிடவில்லை. அடுத்த ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் மிஸ். மேயோவுக்கும், ஸ்ரீ. வ. ரா. வுக்கும் சொந்தமாயிருக்கும். ஆனால் 22-வது நூற்றாண்டு அநேகமாய் நம்முடையதாகலாம்—அந்த தைரியம் இல்லாமல் இல்லை. ஆனால் 22-ம் நூற்றாண்டில் நாமெல்லாம் இங்கிருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கமாட்டோம்—அவர்களும் சரி, நானும் சரி.

107, லாயிட்ரோட்,
இராயப்பேட்டை, சென்னை. } ஜார்ஜ் ஜோஸப்.

மாயா மேயோ

அத்தியாயம் 1.

தேவை என்ன ?

இந்த நூல் வெளிவருவதற்குத் தேவை என்ன என்று படிப்பவர்கள் வினவலாம். இந்த நூலைப் படிப்பவர்களுக்கு, இவ்வாறு கேட்க பாத்தியம் உண்டு. அது சந்தேகத்தையும் சந்தர்ப்பத்தையும் தெரிந்து கொள்ளுவதற்காக எழுந்த கேள்வியாகும். எனவே, இதற்குத் தக்க விடையும் சமாதானமும் கூறுவது ஆசிரியன் கடமை. இந்த "சமாதான" சரித்திரத்தை முன்னுரையில் எழுதுவது ஒருவித மாமூல்; மாமூல், மாமூல் என்று "மாரடித்து" க்கொண்டு வாழ்வதால் தானே, இந்தியர்கள் இந்த நிலைமைக்கு வந்து விட்டார்கள் என்று பரிதாபம் காண்பிப்பது போல அணைத்துப்பேசி, காதரைன் மேயோ மாது தாம் இந்தியாவின் பேரில் தொடுத்திருக்கும் அவதூறு ஜாப்தாவில், என்னுடைய முன்னுரை மாமூலையும் சேர்த்து விடுவார்களோ என்று அஞ்சி, சம்பிரதாயத்தை ஒழித்து, முன்னுரையை முதல் அத்தியாயமாகச் செய்தேன். நல்லது கெட்டதை பகுத்தறிய சக்தியோ விருப்பமோ இல்லாமல், முழுப் "போடாக" இந்தியர்களைப்பற்றி மேயோ மாது அவதூறு எழுதியிருக்கிறார்கள்.

மருக்கலப்பில்லா அவதூறும் கருணையற்ற நிற்ற ஜாப்தாவும் நிறைந்திருக்கும் அவர் நூலுக்கு மேயோ மாது "இந்தியத் தாய்" என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்தக்காலத்தைக் கலிகாலம் என்று வைதிகர்கள் கூறுவதுண்டு. எனவே, "இந்தியத் தாய்" என்று பெயர் கொடுக்கப்பெற்றிருக்கும் இந்த நூலில், மகள் தாயைப்பற்றி கட்டுக்கடங்காமல் அவதூறு பேசியிருப்பது யுகதர்ம மாகப் பாவிக்கப்படவேண்டும் போலும்!

தம்மைப்பற்றியும் தாம் எழுதியிருக்கும் இந்த நூலைப் பற்றியும் மேயோ மாது சில குறிப்புக்களைத் தந்திருக்கிறார்கள். நூலின் பெயர் "இந்தியத் தாய்" என்பதை வாசக நேயர்கள் அறிவார்கள். தம்மைக் காப்பாற்றி உயிர் கொடுத்த இந்தியக் குடியானவன் ஒருவனுக்கும்—அவனுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை—இந்தியப் பொது மக்களுக்கும் "இந்தியத் தாய்" என்ற நூல் அர்ப்பணம் செய்யப்பெற்றிருக்கிறது. நன்றி மறவாமை, மனிதனுக்கு இயல்பாய் இருக்க வேண்டிய உத்தம குணங்களில் ஒன்று என்று இந்தியாவில் கூறப்படுவதுண்டு. இந்நூல் அர்ப்பணம் செய்யப்பெற்றிருக்கும் சாதாரணக் குடியானவனுக்கும் இது தெரியும். அவன் பயனைக் கோராமல் நன்மையை நாடுவான், செய்வான்; நன்றி மறவான். ஆனால் நன்றி மறப்பது மேல் நாட்டில், அதுவும் அமெரிக்காவில், வழக்கமோ என்னவோ, யார் கண்டார்? தனிமரம் தோப்பாகாது. ஒரு மேயோவைக் கொண்டு, மேல் நாட்டையும் அமெரிக்காவையும் அளப்பது தவறு; என்றாலும் அதைக் குறிப்பிடுவது கட்சி வாதத்துக்கு விலகியதல்ல. தாயாக பாவிக்கப்பெற்ற இந்தியாவின் பொருட்டும், தமது உயிரைக் காப்பாற்றிய அந்த ஏழைக்

குடியானவன் பொருட்டும், உலகம் நல்ல உணர்ச்சிகளைக் கொண்டுதான் ஈடேறவேண்டும் என்ற பொறுப்பை மேற்கொண்டும், மேயோ மாது, தாம் கண்ட காட்சிகளையும் தாம் கேள்விப்பட்ட நிகழ்ச்சிகளையும் வைத்துக்கொண்டு, நிதானமாக நல்ல முடிவுகளுக்கு வந்திருக்கலாம். ஆனால்—! இதைத் தானே சொல்லவேண்டும். இந்த நூலின் நோக்கம், இந்த முதல் அத்தியாயத்தின் தேவையை விளக்கிக் காண்பித்து விடும்.

காதரைன் மேயோ என்பவர் யார் ? அவர் ஏன் இந்நூல் எழுதவேண்டும் ? அவர் அன்னிய நாட்டைச்சேர்ந்தவராயின், இந்தியாவுக்கு ஏன் வரவேண்டும் ? இந்தக்கேள்விகளுக்கு மேயோ மாதே தமது சொந்த சொற்களில் பதில் கூறட்டும். காதரைன் மேயோ என்பவர் ஒரு பெண்; அவருக்குக் கலியாணமாக வில்லை. அவருக்குக் கலியாணமாக வில்லையா, செய்து கொள்ள விருப்பமில்லையா என்ற கேள்வி பிறந்தால், அதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது. மேயோவுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை என்று மட்டும் தெரியும். அவர் அமெரிக்காக் கண்டத்திலிருக்கும் ஐக்கியமாகாணங்களைச் சேர்ந்தவர்; தாம் ஏன் இந்தியாவுக்கு வரவேண்டும் என்பதைப்பற்றி அவர் கூறும் சமாதானமும் சரித்திரமும் பின் வருமாறு:—

“ சராசரி அமெரிக்கனுக்கு உண்மையிலேயே இந்தியாவைப்பற்றி என்னதெரியும் ? அங்கு (இந்தியாவில்) காந்தி வசிக்கின்றார்; புலிகளும் வசிக்கின்றன என்று அவனுக்குத் (சராசரி அமெரிக்கனுக்கு) தெரியும். மேலும், கட்சிப் பிரதி கட்சிகளின் “வயிற்றுப்பிழைப்பு”ப் பிரசாரர்களின் மூலமாய் அவன் ஏதோ சிலவற்றைத் தெரிந்து கொண்

டிருக்கிறன். சமய நூல்கள் கதைள், பிரயாணப்புத்தகங்கள், நாவல்கள், பாட்டுக்கள்—இவைகளின் மூலமாயும் அவன் சிறிது தெரிந்து கொண்டிருக்கிறன்.''

இந்த நிலைமை தமக்குப் பிடிக்க வில்லையாம்! இந்த அதிருப்திதான் தம்மை இந்தியாவுக்கு அனுப்பியதன் மூல காரணமாகும் என்று கூறுகின்றார். காரணம் கூறுகின்ற விதரணையைப் பாருங்கள். சராசரி அமெரிக்கனுக்கு இந்தியாவைப் பற்றி உண்மையிலேயே என்ன தெரியும் என்ற கேள்வியைக் கேட்ட பின்னர், அதற்கு மேயோ பதிற் சொல்லும் இலக்கிய முறையைக் கவனிப்போம். "இந்தியாவில் காந்தி வசிக்கின்றார்: புலிகளும் வசிக்கின்றன" என்று அமெரிக்கனுக்குத் தெரியுமாம். மேயோ அவர்களின் இலக்கியச் சுவையே, அவரது விகாரமனப் பான்மையைக் காண்பிக்கும். இலக்கியத்தின் தேவைக்காகக் கூட காந்தியையும் புலியையும் ஜோடி சேர்த்துப் பேச அஞ்சுவார்கள் நற்பழக்கமுள்ளவர்கள். ஆனல் மேயோமாதுக்கு அத்தகைய அச்சம் சிறிதுமேயில்லை. இது அவரது நோக்கத்தையும் மனப்பான்மையையும் தெளிவாகக்காண்பிக்கின்றது. காந்தியை ஒரு புறத்திலும், புலியை இன்னொரு புறத்திலும் வைத்துப் பேசுவதை நாம் கௌரவமாகக் கொள்ளுவோம். ஜீவராசிகளில் குரூரத்தன்மைக்கு இலக்காயுள்ளது புலியென்றும் சாந்தத்திற்கும் அன்புக்கும் இலக்கியமாயுள்ளவர் காந்தியென்றும் பொருள் செய்து கொண்டு, நாம் சமாதானத்தை நாடுவோம். ஆனல் நகைச்சுவையின் பொருட்டுக்கூட இத்தகைய ஜோடி சேர்ப்பது தவறு என்று மட்டும் குறிப்பிட்டு விட்டு, மேலே செல்வோம்.

சராசரி அமெரிக்கன் இந்தியாவைப்பற்றிக்கொண்டுள்ள மனப்பான்மையைக் கண்டு அதிருப்தி பெற்ற மேயோமாது-

இனி இவரை மாயா மேயோ என்று அழைப்போம்....என்ன செய்தார்? இந்தியாவுக்கு நேரே வரவேண்டு மல்லவா? நோக்கம் நேர்மையுள்ளதாயிருப்பின், வழியும் நேராயிருந் திருக்கும். குட்டிக்கொள்ளுகிற பொழுதே கண்ணிற் குட்டிக் கொள்ளுகிறதா என்று கேட்பதுண்டு. அது போலவே மாயாமேயோ செய்து விட்டார்.

> " எனவே, 1925ஆ அக்டோபர் மாதத்துவக்கத்தில், நான் லண்டன் (நகருக்கு) ச் சென்றேன். (அங்கு) இந்தியா ஆபீசுக்குப் போனேன். (அப்பொழுது அங்கு) எனக்கு ஒருவரையும் "சுத்தமாக" த் தெரியாது. என்னுடைய திட்டத்தை (அவர்களிடம்) சொன்னேன்"

லண்டனிலிருக்கும் இந்தியா ஆபீசு என்பது என்ன என்று சிலருக்குத் தெரியாமலிருக்கலாம். இந்திய அரசாங் கத்திற்கும் ஆங்கில பார்லிமெண்டு மகாசபைக்கும் இடையே ஒருகூட்டத்தார் இருக்கிறார்கள். அவர்கள் தான் இந்திய மந்திரியும் அவர்தம் சபை அங்கத்தினர்களும். இவர்களுடைய காரியாலயத்திற்கு இந்தியா ஆபீசு என்றுபெயர். இந்தியாவுக்கு வந்து, அதன் நிலைமையைச் செவ்வனே நேரே தெரிந்துகொள்ள ஆவல் இருந்ததாகக்கூறும் மேயோவுக்கு இந்தியா ஆபீசில் என்னவேலை? இந்தியாவுக்குவர பாஸ்போர்ட்டு (பிரயாண அனுமதிச்சீட்டு) தேவையானால், இந்தியா ஆபீசுக்கு எழுதிப்போட்டால், தானகத்தபால் மூலமாகவந்து சேருகின்றது. "நீட்டி முழக்கிக்கொண்டு" மேயோ இந்தியா ஆபீசுக்குப் போகவேண்டிய தேவையிலேதான் போனதன் மர்மம் அடங்கியுள்ளது. சுண்ணம்பில் உண்டு சூட்சுமம் என்பார்கள். மேயோ அவர்கள் இந்தியா ஆபீசுக்குப்போனதிலே தான் இந்த நூல்தோன்றிய

தின் நோக்கமும் தேவையும் மூலகாரணமும் பரந்துகிடப்பதை, குறிப்பாகவும் ஊகத்தாலும் மட்டுமல்ல, தெளிவாகவும் விரிவாகவும் எவரும் தெரிந்துகொள்ளலாம். பகிரங்கத்திலே ஒரு இரகசியத்தை மூடிவைக்கலாம் என்பது ஒரு பரம இரகசியமாகும். இது சம்பந்தமாக, நல்லகதையொன்றுண்டு. ஸ்பெயின்நாட்டிற்கு பிரான்ஸ்நாட்டின் சக்கரவர்த்தியாயிருந்த நெபோலியன், ஒரு தூதனை அனுப்பவேண்டி வந்தது. இந்தவேலைக்காகத்தமது ஆப்தநண்பன் சேனாதிபதி லான் அவர்களைச் சக்கிரவர்த்தி பொறுக்கியெடுத்தார். லான் திகைப்படைந்து, "என்னை ஏன் பொறுக்கி யெடுத்தீர்கள்? நான் எதையும் மறைக்கமுடியாது, உண்மையைச் சொல்லிவிடுவேன். தங்களுடைய யோசனைகள் யாவற்றையும் முன் கூடியே ஸ்பானியர்கள் தெரிந்துகொண்டு, எச்சரிக்கையுடனிருப்பார்கள்" என்று வருந்தி சக்கரவர்த்தியினிடம் கூறினர். "நல்லது; அதுதான் வேண்டும். நீசொல்லுவது உண்மையென்று உனக்குத்தெரியும். ஆனால் நீ உண்மை பேசுவதாக ஸ்பானியர்கள் கருதாமல், நீ கூறுவதன் எதிரிடையை உண்மையாகக்கொண்டு மயங்கிப்போவார்கள். பகிரங்கத்தில் இரகசியத்தை மூடிவைக்கலாம் என்பதை இனி நீ தெரிந்து கொள்ளுவாய்" என்று நெபோலியன் புன்னகையுடன் கூறி அவர்களைத் தூதனாக அனுப்பியதாகக் கதையுண்டு. இந்தியா ஆபீசுக்குச் சென்றிருந்ததாகக் கூறும் மேயோ அங்கு நடந்ததை மறைத்துக் கூறக்காரணமில்லை என்று எண்ணி, இந்தியர்கள் ஏமாந்து போகவேண்டுமென்ற நோக்கங்கொண்டுதான், இந்தியா ஆபீசுக்கு தாம் சென்ற சங்கதி கூறப்பட்டிருக்கிறது என்று ராஜதந்திரநாடியை அறிந்தவர்களுக்குத்தெரியும். இருக்கட்டும்,

இந்தியாவுக்குப் பிரயாணமாகும் அத்தனை அன்னியர்களும் இந்தியா ஆபீசுகோயிலிலே கும்பிட்ட பின்னர்தான் இந்தியாவுக்கு வருகின்றார்களா ? இந்தியா ஆபீசுக்குச்செல்லுவது குறுக்குவழியா அல்லது நேர் சாதனமா ? மேயோவின் நோக்கத்துக்கு இந்தியா ஆபீசுப்பிரயாணம் குறுக்கு வழியாக விருக்கலாம். ஆனால் இந்தியாவுக்குவர, அது குறுக்கு வழியல்ல, இதுவும் போகட்டும்.

"(எனக்கு) யாரும் (இந்தப் பிரயாணத்திற்கு) பண உதவிசெய்யவில்லை; எந்தகட்சியையும் நான் சேர்ந்தவளல்ல; எந்த முடிவையும் முன்கூட்டியே நான் வைத்துக் கொள்ளவுமில்லை"

என்று மேயோ கூறுகின்றார். 'எங்கள் தகப்பனார் குதிருக்குள் இல்லை' என்று சொல்லுவதற்கு என்ன அர்த்தம்? இந்தக்கேள்விகளை மேயோவை யார் கேட்டார்கள்? யாரும் கேட்காமலே, பூசனிக்காயை நடுச்சபையில்போட்டு உடைப்பதுபோல, தமக்குப் பிறரால் பணஉதவி உண்டென்றும் கட்சிச்சார்பு இருக்கின்றது என்றும் முன்கூட்டியே முடிவுகளை (விசாரித்து, ஆராய்ந்துபார்க்காமல்) க்கொண்டவர் என்றும் கொள்ளக்கிடக்கின்றது. அதாவது இந்தியா ஆபீசின் பண உதவி, இந்தியா ஆபீசின்சார்பு, அவர்களுடைய முடிவுகள்—இவைகள் யாவையும் தமதாக மேயோ கொண்டால், அதில் வியப்பும் பொய்யும் ஒன்றுமேயில்லை. சுயநலக்காரர்களுக்கு, பொய்யர்களுக்கு, மூடர்களுக்கு, தன் மயக்கம் கொண்டவர்களுக்கு, கொள்ளைக்காரர்களுக்கு, வக்கீல்களுக்கு இவர்களுக்கு ஏனையோரின் பொருளையும் கட்சியையும் தம்முடையதாகப் பாவிக்கும் இயல்புண்டு. தன்னுடைய அல்லது தனதாக வேண்டும் என்றஎண்ணங்கொண்டு

தானே, ஒருவன் திருடுகிறுன். பிறருடைய பணஉதவி யையும், முடிவுகளையும், கட்சிச்சார்பையும் ஏற்கவில்லை என்று கூரைமேல் நின்று உரக்கக்கூவும் மேயோ, இந்தியா ஆபீசின் ஆசிர்வாதத்தையும் அறிமுகக் கடிதங்களையும் தாங்கி இந்தியாவுக்கு வந்தார். கிராமத்தார்கள் சொல்லு வது போல, இந்தியாவைக் 'கோலிபடித்துப் பார்த்தார்.' ஏழை இந்திய குடியானவனெருவனல் உயிர் காப்பாற்றப் பெற்ருர். முப்பது அத்தியாயங்கள் கொண்ட "இந்தியத் தாய்" என்ற அவதூறுக்களஞ்சிய நூலை வெளியிட்டார். இந்நூல் வெளியிடப்பெற்ற சிறிது காலத்திற்குள்ளாகவே, ஏழு பதிப்புக்களை அடையும் பாக்கியம் பெற்றுவிட்டது.

இந்த நூலைப்பற்றி பலர் (இந்தியர்களும் ஏனையோரும்) தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளார்கள். இந்தநூலை "சாக் கடைப் பரிசோதகரின் யாதாஸ்து" என்று மகாத்மா காந்தி அழைத்திருக்கிருர். இந்த நூல் "பொய்க்களஞ்சி யம்" என்று கவி ரவீந்திரர் கூறுகின்ருர். இந்தியர்கள் தற்போது சுயராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்கள் என்ற பொய்யை மேல் நாட்டார்களி னிடையே—முக்கியமாய் அமெரிக்கர்களின் மத்தியில்—பரப்பும் நோக்கங் கொண்டே, இது, "பிரசார" நூலாக வெளியிடப் பட்டுள்ளது என்று இந்திய அரசியல் வாதிகள் உள்ளம் குமுறுகின்ருர்கள். இந்தியாவின் ஊழல்கள் உள்ளபடியே தெளிவாக, இந்த நூலில் எடுத்துக்காண்பிக்கப் பெற்றிருக்கின்றன என்று அக மகிழும் இந்தியர்களும் ஏனையோரும் உளர். இந்த நூலின் நோக்கத்தையும் போக்கையும் கண்டித்துப் பல இந்தியர் களும் அன்னியர்களும் எழுதியிருக்கின்ருர்கள். "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" என்ற கீர்த்திவாய்ந்த வாரப்பத்திரிக்கை

யின்மூதறிவும் நேர்மையும் நிறைந்த ஆசிரியர், திரு. கே. நடராஜன் அவர்கள் இந்த நூலுக்கு ஆங்கிலத்தில் ஒருவித மறுப்பு எழுதியிருக்கின்றார். சமீபத்தில் ஆங்கில நாட்டுக்குச் சென்று திரும்பிவந்த, இந்தியா சட்ட சபை அங்கத்தினர் திரு. ஸி. எஸ். ரங்கய்யர் அவர்கள் ஆங்கில மொழியில் " தகப்பன் இந்தியா" என்ற ருசியுள்ள நூலை, மேயோவின் நூலுக்கு மறுப்பாக எழுதியுள்ளார்.

இலக்கிய சம்பந்தமாக, மேயோவின் நூல் எத்தகைய நடையைக் கொண்டது? கூறும் விஷயங்கள் சம்பந்தமாக, எத்தகைய தன்மையைக் கொண்டது? கட்டும் முடிவுகள் சம்பந்தமாக, அது எத்தகைய நோக்கங் கொண்டது? இவைகள் யாவும் ஆராய்ச்சிக்குரியன. மேலும், நமது சொந்தக் கண்களைக் கொண்டு, நமது நாட்டையும் நாகரிகத்தையும், நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டு முடிவுக்கு வரும்வழக்கத்தை நமது நாட்டில் பலர் இழந்து வருகின்றார்கள். எனவே புலியின் பயம் கால்பங்கும் "கிலி" யின் பயம் முக்கால் பங்கும் நம்மில் பலரை ஆட்டிவதைக்கின்றன. அவர்கள் நங்கூரம் இழந்த கப்பல்களைப் போலத் தத்தளித்து நிற்கின்றார்கள். அவர்களுடைய "கிலி"யைக்கண்டு, திடசித்த முள்ளவர்கள் கூட சோர்வடைந்து மனமொடிந்து போகின்றார்கள். நமது நாட்டாரின் தனிவாழ்வையும், பொது வாழ்க்கையையும், பற்றி அன்னியர்கள் பலர் உபதேச நூல்களும் பிரசங்கங்களும் செய்திருக்கின்றார்கள். அத்தகைய உபதேசநூல்களில் மேயோஎழுதிய "தாய் இந்தியா" என்ற நூல் ஒன்றாகும். நமது வாழ்வையும் நாட்டையும் பற்றி அன்னியர்கள் எழுதும் நூல்களை நம்மவர்கள் படிப்பது மட்டும் போதாது. அவைகளிற் கூறப்படும் விஷயங்களை உற்று

நோக்கி, சீர்தூக்கிப் பார்த்தூக்கொள்ள வேண்டியவைகளைக் கொண்டு, தள்ளவேண்டியவைகளைத் தள்ளவேண்டும். அன்னியர்கள் யாவரும் நமது பகைவர்கள் என்பதல்ல. நம்மவர் யாவருமே நாட்டுப் பற்றும் நடை நேர்மையும் கொண்டவர்கள் என்பதுமல்ல. மேலும் நமது பகைவர்கள்தான் நமது சிறந்தநண்பர்கள் என்பதுஒரு வகையில் பொருத்தமும் உண்மையும் கொண்டதாகும். மேயோவின் நூலை அன்னிய நாட்டார் படித்தால் அவர்களால் இந்தியாவின் உண்மையான வாழ்க்கைப் போக்கை அறிந்து கொள்ள முடியாது என்றும் இந்தியர்கள் இந்த நூலைப்படித்து தங்களைப் பிறர் எவ்வாறு நோக்குகின்றனர் என்று தெரிந்து கொள்ள இது பெரிதும் பயன் படும் என்றும் மகாத்மாகாந்தி கூறியிருக்கின்றார்.

இந்தநூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆபாசங்கள் அவ்வப்பொழுது பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அவைகளும் பொதுவாக மறுக்கப் பட்டிருக்கின்றன. இந்த நூலில் இந்தியர்களைப்பற்றி "நல்ல வார்த்தை" ஒன்றுமேயில்லாமைக்குக் காரணங்கள் இரண்டு எனக் கூறலாம். மேயோவின் ஒரு கண் பார்வையும் இந்தியர்கள் தன்னரசு இழந்து நிற்கும் நிலைமையும் தான்இரண்டுகாரணங்களாகும். வைத்தியனுடைய உலகத்தில் நோயாளிகளை மட்டும் தான் காணமுடியும். தேக சுகமுள்ளவர்களுக்கு வைத்தியர்களிடம் வேலை யில்லை. வைத்தியர்களின் தொழிலுக்கு தேக சுகமுள்ளவர்கள் தேவையில்லை. நோயாளிகளிடையே அதிகமாகப் பழகிய பழக்கமும் பண ஆசையும் சேர்ந்து கொள்ளின், வைத்தியர்களுக்கு தேக சுக முள்ளவர்களிடம்வெறுப்புத் தோன்றவும் கூடும். தாம் வைத்தியரென்றும் இந்தியர்கள் அனைவரும் நோயாளிகள் என்றும் தீர்மானமான முடி

வைக் கொண்டு, துவக்க முதல் எதையும் நோக்கி வந்திருக்கும் மேயோவின் கண்களில் இந்தியர்களின் உயர் வாழ்வைக் காண்பிக்கும் குறிப்புகள் படமுடியுமா ? எனவே, பிறர் தூண்டுதலின்றி, இந்தநூல் மேயோவால் எழுதப் பெற்றது என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுதும் அவருடைய பார்வைக்குறையையும் இந்தியர்களின் வாழ்வின் உண்மையான போக்கையும், ஏறக்குறைய பட்சபாத மில்லாத இந்திய தேச பக்தன் எடுத்துக் காண்பிக்கவேண்டும். மேயோவின் நோக்கம் நன்னோக்கம் என்று வைத்துக் கொண்டாலும், அந்த நோக்கத்தை வெளிக்காட்டி யிருக்கும் முறைதவறாகும். நோயாளியின் நோய் என்ன தென்றும் அது எத்தகைய கேடுகளை உண்டாக்கும் என்றும் வைத்தியன் நோயாளியிடம் கூறி, அவனைப் பயமுறுத்தி, நோய் நோயாளியைக் கொல்லுமுன்னர் வைத்தியனுடைய மொழிகள் நோயாளியைப் பிணமாக்க வேண்டியதில்லை. உண்மையைத் தான் யாவரும் பேச வேண்டும் என்று இருந்தாலும், அதைக் கூறும் முறையில்லையா? உண்மை பேசுவதால், மனிதனுடைய பலவீனம் அழிபட்டுப் போகவேண்டும். உண்மை பேசுவதால், பிறனுக்கு ஏக்க முண்டாகி, அவன் நடைப்பிணமாகின், இந்த முடிவைத்தரும் உண்மை பேசப்படாமலிருத்தலே, மேலானதாகும்.

மேயோவின் நூலின் தன்மையைச் சிறிது கூறிவிட்டு, அந்த நூல் சம்பந்தமாக நான் என்ன செய்யவிருக்கின்றேன் என்பதை வாசகர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேயோவின் நூலில் காணப் பெறும் விஷயங்களில் பொய்கள் இருப்பின், அவைகளை நான் எடுத்துக் காண்பிப்பேன். மறுக்கக்கூடியவைவும் அபிப்பிராய பேதத்-

துக்கு இலக்கா யுள்ளவைகளையும் சோதித்து, இந்திய முறையையும் என் அனுபவத்தையும் கொண்டு, அத்தகைய நிகழ்ச்சிகளுக்கும் பொருள் விளக்கம் செய்வேன். மேயோ கூறியிருப்பவைகளில் உண்மை காணப்பெறும் பகுதிகளை ஏற்பேன். அவர் காண்பிக்கும் தீய பழக்கங்களால் ஏற்பட்டிருக்கும் பலவீனங்களை ஒழிப்பதற்குரிய சாதனங்களையும் வசதிகளையும், எனக்குத் தெரிந்த வரையில், எடுத்துரைக்க வேண்டும் என்பது எனது அவா. அன்பும் அனுதாபமும் கற்பனையு மிழந்த ஒருவர் உண்மை பேசவேண்டும் என்ற ஆவலிருப்பினும், தமது "தலைக் கனத்தால்" தாம் எழுதுவது எவ்வாறு முறை தவறிப்போகும் என்பதற்கு, மேயோ எழுதிய நூல் போதிய சான்றாகும். காமாலைக் கண்ணனுக்குத் தான் பார்த்ததெல்லாம் மஞ்சள் நிறமாய்த் தோன்றுமாகில், அவனைக் கோபிப்பதில் பயனில்லை. எனவே, எத்தகைய நோக்கத்துடன், மேயோ, தமது நூலை எழுதியிருப்பினும் சரியே, அதைச் செவ்வனே ஆராயவேண்டும்.

நான் கையாளப் போகும் முறை பின்வருமாறு:— முப்பது அத்தியாயங்கள் கொண்ட இந்த நூலை, அத்தியாயக் கிரமப்படி எடுத்து, ஆராய்வேன். தேவைக்கு அதிகமான உருசியற்ற புள்ளி விபரங்களைக் கொடுத்து படிப்பவர்களின் ஆசையையும் சுவையையும் கெடுக்க, நான் கருத்துக் கொள்ளவில்லை. விவாதத்துக்குப் புறம்பேயுள்ள விஷயங்கள் எடுத்தாளப்பட மாட்டா. மேநாட்டாரின் வாழ்க்கையில் காணப்பெறும் ஆபாசங்கள் சில என்னால் குறிப்பிடப்படுமானால் அது மேனாட்டாரைப்பற்றி அவதூறு பேசவல்ல. மனித முயற்சிகள் பகிரங்கமாகவும் நன்னோக்கத்துடனும் சீர்திருத்தத்தின் பொருட்டு, எத்தனையோ செய்யப்பெறினும்,

அந்த முயற்சிகள்யாவும் அந்நாட்டாரின் இயல்புக்கும் வாழ்க்கையின் போக்குக்கும் இசைந்திருக்கும் அளவிலே தான் நற்பயன்களை அளிக்கக்கூடியன. ஒரு மனிதனை எந்தப் பழக்கம் கெட்டியாகப்பற்றிக் கொண்டிருக்கின்றதோ, அந்தப்பழக்கத்தில் இறுதியில் அவனுக்குவெறுப்புத்தோன்றுவது இயல்பு. அமெரிக்கா, ஐக்கிய மாகாணங்களில் பூரண மதுவிலக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்கர்கள் யாவரும் "குடி கேடர்களாய்" இருந்தமையினாலே தான், பூரண மதுவிலக்குத் தேவையும் சாத்தியமும் உண்டாயின என்று பொருத்தமுடன் கொள்ளலாம். மிகுந்த குடி, வலிப்பு, பைத்தியம் முதலியவைகளை உண்டாக்கும் என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். குடிகேடர்களின் சந்ததியிற் பிறந்த காதரைன் மேயோவுக்குப் பித்துக்கொண்டதனால், மனம் போன வாறெல்லாம் இந்த நூலில் எழுதப்பெற்றிருக்கின்றது என்று பொதுவாக அவதூறு பேசலாமா? நாம் எதைச்செய்ய, எந்த முடிவுக்கு வர அஞ்சுகின்றோமோ, அதை மேயோ கூசாமல் செய்திருக்கிறார். ஆனால் சீர்திருத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் உலக நாடுகளின் தீய வழக்கங்களை நான் எனது எழுத்தில் எடுத்துக் காண்பிக்க நேர்ந்ததால் இந்தியர்களின் தீய பழக்கங்களை மறைப்பதற்கல்ல. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட சில காரணங்களால், சாதாரண மனித இயல்பு எந்நிலையில் நிற்கும் அல்லது செல்லும் என்பதைக் குறிப்பிடுவதற்கேயாகும். இந்தியாவிற்கு வந்த அன்னியர்கள்—நல்லவர்களுமிருக்கலாம், கெட்டவர்களு மிருக்கலாம்—எவரும் மேயோவைப்போல, இந்தியர்களின் பேரில் கொடுமையும் பொய்யும் கொண்ட அவதூறு "குற்றப்பத்திரிகை" படித்ததில்லை.

எனவே, இந்தசந்தர்ப்பத்தில், மேயோகூறியிருக்கும் பொய்களை மறுத்தபின்னர், நமது வாழ்க்கையைச் செப்பனிடக்கூடிய வழிகளையும்—எனக்குத் தெரிந்த வரையில்—குறிப்பிட எண்ணியிருக்கிறேன்.

"நெருக்கடி காலத்தில் மௌனம் சாதிக்கும் ஒருவன் தான் பிறந்த நாட்டிற்கு துரோகம் செய்தவனாவான்" என்று நெபோலியன் சக்கரவர்த்தி உண்மையுடனும் உறுதியுடனும் கூறியிருக்கிறார். அவதூறுக்களஞ்சியமான இந்த நூலைக் கண்டும், வாய் பொத்திக்கொண்டிருந்தால், அது இந்தியர்களின் கோழைத்தனத்தைக் காண்பிக்கும்; அறிவிழந்த தன்மையை குறிப்பிடும்; சுய மரியாதை இல்லை என்று பறை சாற்றும் இந்த அவதூறுகள் யாவும் உண்மையென உலகத்தார்கள் கொள்ளுவார்கள். உலகத்தார் கொள்ளுவது மட்டுமல்ல; காலங்கடக்க கடக்க, நம்மவர்களே உண்மைதானோ என்று சந்தேகிக்கத் தொடங்கி, உண்மைதான்போலும் என்ற முடிவுக்கு வந்து விடுவார்கள். இது வெறும் கற்பனை அல்ல. இது மனோதத்துவத்தின் பரம இரகசியமாகும். ஆங்கிலேயர்கள் இந்தியாவைவிட்டுப் போய்விட்டால், இந்தியர்களால் சொந்தத்தில் அரசியல் நிர்வாகம் செய்ய முடியாது, என்ற பிரசாரம் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பெற்றது. துவங்கிய காலத்தில், அது மறுக்கப்படவில்லை. ஆங்கிலேயர்கள் நாட்டைவிட்டுப்போனால், இந்தியாவுக்கு நாசநாசம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணம், ஆயிரக்கணக்கான இந்தியர்களின் உள்ளத்தில் தற்போது வேரூன்றிக் கிடக்கின்றது. சமயத்தில் தைத்த தையல் சாகும் வரையில் நிற்கும் என்பார்கள். விஷமப் பிரசாரத்தினால், நம்மவர்கள் எவ்வளவு வரையில் ஏமாந்து நிற்கின்றனர் என்று கூறவும் வேண்டுமோ?

பஞ்ச பூதத்தால் ஆக்கப்பெற்ற உடலில் உயிர் இருக்குமளவும், மனிதன் எவனும் பட்சபாதமின்றி வாழமுடியாது. ஏதோ ஒரு அளவில் பட்சபாதம் இருக்கத்தான் செய்யும். அந்த அளவை கவனிக்க வேண்டியதில்லை. அந்த அளவுக்கு மீறினால்தான், அது உலகத்தாரின் பார்வைக்கும் தீர்ப்புக்கும் வருகின்றது. உலகத்தார் அனைவரும் மௌனமாய் ஒப்புக்கொண்டிருக்கும் அளவிலே, மேயோவின் பட்சபாதம் இருந்திருக்குமாகில், அது கவனிக்கத்தக்கதல்ல. காதலர்கள் ஒருவரை ஒருவர் மிகபடப் புகழ்ந்து கூறிக்கொள்ளுவதை, உலகத்தார் ஆட்சேபிப்பதில்லை. காதலர்களின் பரஸ்பரப் புகழுரையால், உலகத்தாருக்குக் கேடு உண்டாகாது. கற்பு என்ற நன்மைதான் ஏற்படும். காதலர்களின் புகழுரை பொய்மொழிகள் என்று கடிந்து பேசுபவன் உலகத்திலும் இருப்பானா? தனது காதலிக்கு இணை யாருமே உலகத்தில் இல்லை என்று நினைப்பவனுக்குத்தான் இல்வாழ்க்கையில் இன்பம் ஏற்படக்கூடும். அதுபோல, தான் பிறந்த நாடு பொன் நாடு என்று எண்ணும் தேசபக்தனுக்குத்தான் உள்ளப்பூரிப்பும், சக்திப்பெருக்கும், செல்வமும் பிறருக்கு உதவி செய்ய நினைக்கும் பெருந்தன்மையும் உண்டாகும். உண்மை என்பதை சமூக நலம், நாட்டுப்பற்று, சக்தி, தற்காப்பு, தியாகம், பெருவாழ்வு, சுயமரியாதை, அன்பு, ஏக்கமின்மை, ஜீவகாருண்யம், வீரம்போன்ற உணர்ச்சிகளிலே புகுத்தி, இசைத்துக் கூறுதல் வேண்டும்; அவ்வாறுதான் கூறுதல் முடியும். ஒன்றை வலியுறுத்தி உண்மையைப்பேசினால், ஏனைய உத்தம உணர்ச்சிகள் அழிந்து போகவும்கூடும். எனவே, முரணில்லாத உண்மையின் தன்மையைக் கொண்டுதான், மேயோவின் சொற்களை என்னால்

அளக்க முடியும். ஆங்கில சாம்ராஜ்பம் என்ற அடிமைத் தனத்தைப் பயிர் செய்யும் தோட்டத்தின் வாயிற்படிபண்டை இருந்த அயர்லாந்து தேசம் நீண்ட காலம் சுதந்திரத்தை இழந்து, தவித்து வாடிக்கொண்டிருந்தது. அந்த நாட்டின் சுதந்திரத்தின் பொருட்டு உழைத்து, உயிர் நீத்த உத்தமர்கள் எத்தனை பேர்களோ? அவர்களில் தலைசிறந்து விளங்குபவர் என மதிக்கப் பெறும் பாக்கியத்தை அடைந்தவர் காலஞ்சென்ற டெரன்ஸ் மாக்ஸ்வீனி என்பவர். அவர் சிறையில் எழுபத்தைந்து நாட்கள் பட்டினி விரதமிருந்து, அதனால் மாண்டார். அவர் "சுதந்திரத்தின் தத்துவங்கள்" என்ற நூல் எழுதியிருக்கிறார். சுதந்திரமிழந்த நாட்டில், தீயபழக்கங்கள், பலவீனத்தை வளர்க்கும் உணர்ச்சிகள், சோர்வையும் ஏக்கத்தையும் அளிக்கும் நிகழ்ச்சிகள் இல்லாமலிருக்குமா? என்றாலும், அயர்லாந்து நாட்டார்களின் பலவீனங்களை அழகும் அனுதாபமும், சக்தி தரிசனமும் நிறைந்த எழுத்துக்களால், மாக்ஸ்வீனி எடுத்துக் காண்பித்திருக்கிறார். "அடே" என்று தகப்பன் அழைப்பதற்கும் எஜமானன் அறைவதற்கும் வேற்றுமை யில்லையா? மனப்பான்மைதான் பிரம்மாண்டமான வேற்றுமையை உண்டாக்குகின்றது. கூலிக்கழுபவள் கண்ணீரும் தாலியிழந்தவள் கண்ணீரும் ஒன்றாகுமா? மேயோ எங்கே? மாக்ஸ்வீனி எங்கே?

உலகத்தை யாட்டிவைக்கும் வெள்ளையர்களின் சந்ததியில் பிறந்தோம் என்ற அகம்பாவமும், இணையற்ற நாகரீகத்தின் பயன்தாம் என்ற இறுமாப்பும், இந்தியா ஆபீசின் பேராதரவு தமக்குண்டு என்ற நம்பிக்கையும் பெருமையும், பொதுவாக கறுப்பர்கள் அவமதிக்கப் பெறலாம் என்ற

மனப்பான்மையும், எவரும் தண்டனையின்றி இந்தியர்களைப் பற்றி அவதூறு எழுதலாம் என்ற அறிவும் அத்தகைய எழுத்துக்குப் பொருளுதவி கிடைக்கும் என்ற உணர்ச்சியும், வந்த விருந்தினர்களிடம் கபடமின்றி, அடக்கத்துடன் பேசும் இந்தியத்தன்மையை தவறான துறைகளில் உபயோகப்படுத்தத் துணிந்த நம்பிக்கைமோசமும், பொய்களை உண்மையுடன் இசைத்துக்கூறும் வாதமுறை ஆற்றலும், மனிதர்களின் அற்பகுணங்களை மட்டும் மிகைபடக்கூறி, நாசவேலையில் ஈடுபடும் உள்ளமும், இயற்கையிலே கடுமொழிகளைப் பெய்யும் இயல்பும்—இவையும், நிகழ்ச்சிகளைநோக்கும் பொழுதும் அவைகளைத்தொகுத்து நூல்வடிவமாக எழுதும் பொழுதும், மேயோவுக்கு துரோகமற்ற துணைகளாய் நின்று உதவியிருக்கின்றன. எனவே, ஆங்கிலத்தில் எழுதப் பெற்றிருக்கும் முதநூல் எவ்வாறிருக்கும் என்பதை நண்பர்கள் ஊகித்துக்கொள்ளலாம். ஆனல் நான் எழுதப்போகும் அத்தியாயங்களுக்கு வேறு துணைகள் வேண்டும்.

> சுருதிப் பொருளே வருக!
> துணிவே, கனலே வருக!
> கருதிக்கருதிக் கவலைப் படுவார்
> கவலைக் கடலைக்கடியும் வடிவேல்.

என்று தமிழ் நாட்டின் நீண்டகாலத் தவப்பயனை காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியாருடன், நானும் இறைவனைத்துதிக்கின்றேன்.

அத்தியாயம் 2.

களியாட்டமா?

கல்கத்தாவிலிருக்கும் காளி கட்டத்தையும் அங்கு நிகழும் ஆட்டுப் பலியையும் பற்றி மேயோ இந்த அத்தியாயத்தில் வருணிக்கின்றூர். ஒவ்வொரு அத்தியாபத்திலும் காணப்பெறும் ஆட்சேபப் பகுதிகளை எடுத்துத் தொகுத்து இலக்கமிட்டு, விமர்சனம் செய்வதாக உத்தேசம் கொண்டிருக்கின்றேன். இந்த முறையை இறுதி வரையிலும் அனுஷ்டிப்பது எனது தீர்மானமாகும்.

திரு. ஹால்தார் என்ற பார்ப்பன நண்பருடன் காளிகட்டத்துக்குச் சென்றிருந்த மேயோ கூறுவதாவது :—“ ஆடு வெட்டுபவர்களின் பின்னே காத்திருந்த ஒரு ஸ்திரீ முன்னே ஓடிவந்து, குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை கொண்டு, தனது நாவினல் இரத்தத்தை நக்க, (நன்ருகத் தரையில்) படுத்துக்கொண்டாள். வேறொரு ஸ்திரீ, துணியில் இரத்தத்தைத் தோய்த்து, அதை மார்பில் அணிந்து கொண்டாள்.” மிருக பலி நடக்கும் இடங்களுக்குச் சென்றிருக்கும் அல்லது மிருக பலிக்களங்களின் அனுபவத்தைப் பெற்றிருக்கும் அன்பர்கள் இது எத்தகைய பொய்ம்மூட்டை என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள். பலி கொடுத்ததும், மேற் கூறிய ஸ்திரீ நமஸ்காரம் செய்திருக்கலாம். இந்த நிகழ்ச்சியை, எவ்வளவு கேவலமாகப் படும்படி எழுதியிருக்கிறூர் மேயோ! மிருக பலியை நாம் ஆதரிக்கவில்லை. உண்மையிலேயே கடவுளிடம் நம்பிக்கையுள்ள எவரும் ஆதரிக்கமாட்டார்கள். என்ருலும் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்

பிடுவதற்கு ஒரு முறையில்லையா? "அனேகமாய்ப் பத்து ஆண்டுகளுக் கொருமுறை, ஐரோப்பிய நாட்டார்களிற் பெரும்பாலர், அகண்டமான வெளியிலே 'நரபலி' (மனிதக்கொலை) செய்கின்றார்கள். அது இந்தியர்களுக்குத் தெரியாதே! நரபலியிடும்பொழுது வரும் ஆவேசத்தை நீங்கள் பார்த்ததில்லையே! ஆகா! அப்பொழுது மனிதன் மிருகமாகிவிடுகின்றான். என்ன பாவம்" என்று கடந்த ஐரோப்பியப் போரில் நடந்த குறிப்பிட்ட ஒரு சண்டையைப் பற்றி இந்தியன் எவனாவது எழுதி மேனாட்டாரின் நாகரீகத்தைக் கேவலப்படுத்தி பேசலாமா? காளிகட்டத்தில் கொலையுண்டவை ஆடுகள். ஆறறிவுபடைத்த மனிதர்கள் இலட்சக் கணக்கில் ஐரோப்பியப் போர்க்களத்தில் கொல்லப்படவில்லையா? அங்கேதான் உண்மையாக காளி அரசு செலுத்தி நர்த்தனம் புரிந்தாள் என்று சொல்ல வேண்டும். இந்தியர்கள் உருவக் காளியைக் கும்பிட்டால், மேநாட்டார் உயிர்க் காளியை கும்பிடுகின்றார்கள் என்று கூறுவது பொருந்தாதோ?

காளி கட்டத்தில், புகைப்படம் பிடித்துக்கொள்ள பிச்சைக்காரர்களும் சாதுக்களும் (சாம்பலை உடம்பிலே பூசிக்கொண்டு) தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறி, மேயோ புன்னகை புரிகின்றார். பணமில்லாமல் புகைப்படம் பிடித்துககொள்ள, அமெரிக்க நாட்டாருக்கு ஆசை இருக்காதோ? இது சாதாரண மனித இயல்பு. இதைப் பெரிது படுத்தி எழுதியிருப்பது, மேயோவின் கீழ்த்தரமான இலக்கியச் சுவையைக் காண்பிக்கின்றது. பிள்ளைப் பேற்றுக்காக, கணவனும் மனைவியும் வந்து கடவுளைத் துதிக்கின்றார் என்று திரு-ஹால்தார் அவர்கள் கூறுவ

தைக் கேட்டு, மேயோவுக்கு நகைப்பு எழுகின்றது. "நீங்கள் இருவரும் எப்பொழுதும் பிரியலாகாது" என்று கலியாண காலத்தில் ஸதிபதியின் கைகளை மாதாகோயிலில் சேர்த்துப் பிடித்தால், அதிற் பொருள் நிறைந்திருக்கும் போலிருக்கிறது! அகத்தில் தோன்றும் எண்ணங்களுக்கு ஏற்ற புறச் சின்னங்கள் காணும்பொழுது, சில காலத்தால் நகைப்புக்கு இலக்காக நிற்கும் என்பது உண்மை. ஆனால் அந்த நகைப்பிலும் அனுதாபம் நிறைந்திருத்தல் வேண்டும். இல்லையேல், எந்த நாட்டாரின் உயரிய பழக்கங்களைக்கூட, சாமர்த்திய விகடம் செய்து நகைப்புக்கும் அவமதிப்புக்கும் இலக்காக்கி விடலாம்.

காளி கட்டத்திலிருக்கும் மயானக் காட்சி யொன்றை மேயோ வருணிக்கின்றார். சுமங்கலி ஒருத்தி பாடையிலிருந்தனளாம். அவளை மயானத்திலிட்டு, தீ மூட்டினார்களாம். இறந்தவளின் பக்கத்தில் அவளுடைய உறவினர்களும் ஏனையோரும் ஒரு பத்து வயது பையனும்—எல்லோரும் கவலையற்று நின்றுகொண்டிருந்தார்களாம். வருத்தப் படவில்லையே அவர்கள் என்று மேயோ வருந்துகின்றார். அவர்கள் வருத்தப் படுவதைக் கண்டிருந்தால், "என்ன மடமை? மாண்டவர்கள் மீளுவார்களா? நாகரீகமும் நற்பழக்கமு மற்ற மக்கள்" என்று இதே மேயோ, எழுதியிருக்கவும் கூடும். அதாவது மனோ விகாரம் கொண்ட ஒருவன், எதை நோக்கினும் அல்லது எதைப்பற்றி எழுதினும், அந்த விகாரத்துக் கேற்ற பார்வையிலேதான் நோக்க முடியும்; அல்லது விகாரத்துக்கேற்ற அச்சிலே தான் எழுத்துக்களைப் பதிக்கமுடியும். இந்தத் தீ மூட்டல் காட்சியினிடையே ஐந்தாறு பிச்சைக்காரர்கள் திரிந்து

கொண்டிருந்தனராம். இவர்களை, மேயோ பார்க்காமல் இருக்க முடியுமா? இவர்களைப்பற்றி நூலில் குறிப்பிடாம லிருக்கமுடியுமா! சவத்தைப்புதைக்காமல் தகனம் செய்யும் ஹிந்து பழக்கத்தை, மேயோ குறிப்பால் கேலி செய்கின்றார். தகனப் பழக்கம் ஐரோப்பிய நாடுகளிலும் விரைந்து பரவி வருகின்றது என்பதை மேயோ அறிவார்; அதை நண்பர்கள் அறியவேண்டும்.

> "நீங்கள் ஏன் காளிகட்டத்திற்குச் சென்றீர்கள்? அது இந்தியா அல்ல. மிகவும் கீழ்த்தர நிலையிலும் அறியாமையி லும் ஆழ்ந்த இந்தியர்கள்தான் காளியைத் தொழுகின்றார் கள் என்று மறுநாள், பிரம்மஞான சபையைச் சேர்ந்த ஆங் கிலேயர் ஒருவர் என்னிடம் சொன்னார்."

என்று மேயோ எழுதியிருக்கிறார். இதை ஏற்றுக் கொள்ள, மேயோவுக்கு மனமில்லை. அன்னியர்களின் சொற்களை ஏற்கலாகாது என்று மேயோ எண்ணினார் போலும்! ஆங்கில நண்பர் கூறிய சொற்களை மேயோ, வங்காளப் பிராமணர் ஒருவரின் காதுகளில் ஏற்றுகின்றார். அந் தப் பார்ப்பானைப் பற்றி மேயோ சொரிந்திருக்கும் அடை மொழிகள் பல. தாம் கொண்டிருக்கும் முடிவுகளை ஆதரிப் பவர்கள் அறிவாளிகள், ஆராய்ச்சியாளர்கள், நடுநிலை தாங் கியவர்கள், ஒழுக்கமுள்ளவர்கள், உத்தமர்கள் என்று அடை மொழி வழங்குவது கட்சி வாதத்தின் இலட்சணங்களில் ஒன்றாகும்.

காளி வழிபாடு இந்தியாவில் குறைந்து வருகின்றது. போர்ச்சாதனங்களும் தூண்டுதல்களும் மலிந்து வரும் மே நாடுகளில் காளியின் தொண்டர்கள், கூளியின் பக்தர்கள் தன்மையிலும் எண்ணிக்கையிலும் அபிவிருத்தி யடைந்து

வருகின்றார்கள் என்று கூச்சமில்லாமல் என்னால் கூறமுடியும் போர் என்பதற்கு "நரபலி" என்று பொருள் கொடுத்து, இந்தியன் ஒருவன் நூல் எழுதுவானாகில், "வெள்ளையர்கள் யாவரும் அதைக்கண்டு, தலைகுனிந்து நிற்றல் வேண்டும். கேவலமான நிகழ்ச்சிகளை சில உபசாரச் சொற்களால் மாற்றி, உயர்வாகக் கூறிவிடலாம்; உயர்வுகொண்ட நிகழ்ச்சிகளை நாகரீகமற்ற சொற்களைக் கொண்டு இழிவு படுத்திக் கூறி விடலாம். உடல்வலி யுள்ளவன் என்றால் மரியாதையாகத் தோன்றும். தடியன் என்றால் கேவலமாகத் தொனிக்கும். தடியன் உடல் வலியுள்ளவன் தானே! உரைப்பதற்கும் வினோதமான சொற்களை மேயோ உபயோகிக்கின்றார்.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

அத்தியாயம் 3.

வரலாறு.

இந்தியர்களின் வாழ்க்கையை நேரே தெரிந்து கொள்ளும் பொருட்டுத்தாம் இந்தியாவுக்கு வந்ததாக மேயோ கூறுகின்றார். குறுக்குவழியாக "இந்தியா ஆபீசு" மூலமாக வந்தார் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியா ஆபீசின் ஆதரவு தமக்கு எவ்வளவு தூரம் இருந்திருக்கிறது என்பதைத் தெளிவாக, இறுமாப்புடன் குறிப்பிடுகின்றார். தாம் அடைந்த சிபார்சுக் கடிதங்களினாலும், ஆங்கில, இந்திய உத்தியோகஸ்தர்களின் மரியாதை கலந்த

உதவியானுலும் இந்தியாவை நன்ருகப் பார்க்க முடிந்தது என்று மேயோ கூறுகின்ருர். தாம் சொல்லுவதை பிறர் ஏற்கவேண்டும் ; மேலும் பரந்து கிடக்கும் இந்தியாவைத் தாம்நன்ருகப்பார்த்திருக்கிருர் என்றுகூருவிடின்மேயோவை நம்பார்களல்லவா? எனவே, பார்த்ததாகக் கூறவேண்டும். பார்ப்பதற்கு வசதிகள் இருந்தனவா என்ற கேள்வி பிறக்குமே! எனவே தமக்கேற்பட்ட உதவி வசதிகளைச் சொல்ல வேண்டும். அதனுல் இந்தியா ஆபீசு "பூனை" வெளியே குதிக்க நேர்ந்திருக்கிறது. உண்மையை மறைக்க முடியவில்லை. நோக்கம் நல்லதாயிருப்பின், உண்மையில் முரணிருக்காது. போகட்டும். மேயோவுக்கு உதவி செய்தவர்கள் அவரை ஒன்று வேண்டிக் கொண்டார்கள். "தனி நிகழ்ச்சிகளைக்கொண்டு, இந்தியா முழுதிற்கும் பொதுவான தத்துவங்களையும் பொதுவான விதிகளையும் சமைக்காதீர்கள்" என்று அவர்கள் மேயோவைக் கேட்டுக்கொண்டார்களாம். இந்தியாவைப்பற்றி ஒரு சிறிது தெரிந்தவர்களின் சொற்களை மேயோ கேட்கலாமோ. கேட்பின், அது அவரது சொந்த அறிவிற்கு இழுக்கா காதா? உதவி செய்தவர்களின் சொற்களை அவமதிப்பதுதான் நன்றி மறவாமைக்கு அறிகுறி என்பது மேயோவின் கருத்துப்போலும்! தனி நிகழ்ச்சிகளைநாட்டிற்குப்பொதுவானவைஎன்று தொகுத்து, மேயோ அவர்கள் தமது வேலையை எளிதாக்கிக் கொண்டிருக்கிருர்.

> " இந்த நேர்த்தியான, இந்தியர்களின் சிறப்பான கபடமற்றதன்மை."

என்று மேயோ குறிப்பிடுகின்ருர். இவ்வாறு கூறுவதுஎதற்காக? இந்தியர்களின் பொய்சொல்லாத் தன்மையை

உலகத்தாருக்கு எடுத்துப் புகழ்ந் துரைப்பதற்காகவா? அதைத் தாம் எடுத்துக்கொண்ட வேலைக்கு உபயோகப் படுத்திக்கொள்ளும் பொருட்டேயாகும். வறுமையிலும் கவலையிலும் துயரத்திலும் ஆழ்ந்திருப்பவர்கள் தங்கள் உள்ளக் கிடக்கைகளையும் தங்களுக்கு நேர்ந்துள்ள நிகழ்ச் சிகளையும், தங்களுக்கு மன அமைதி ஏற்படும் பொருட்டு தங்கள் ஆப்தர்கள் என மதிக்கப் பெறும் சிலரிடம் கூறலாம். ஆனால் அதை "ஆப்தர்கள்" வெளியிடலாமா? தம்மைச் சீர் திருத்தக்காரர் என்று மேயோ கருதிக் கொள்ளுகின்றார். முரண்கொண்ட கடமைகள் தோன்றுங்கால், சீர்திருத்தக் காரன் செய்வதுயாது என்பதைக் காண்பிக்க, மகாத்மா காந்தி தமது வாழ்வில் நடந்து காண்பித்திருக்கின்றார். 1919 வருஷத்தில் நமது நாட்டில் சத்தியாக்கிரக இயக்கம் காந்தியினால் தோற்றுவிக்கப் பெற்றது. இயக்கத்தின் அதிர்ச்சியினால், நாட்டின் சில பகுதிகளில் பலாத்கார நிகழ் ச்சிகள் தோன்றின. வீரம் காமில் கஜானா கொள்ளையடிக் கப் பெற்றது. ஆமதா பாத்தில் ஸர்க்கார் கட்டிடங்களிற் சில தீ வைக்கப்பெற்றன. தந்திக்கம்பி அறுக்கப்பெற்றது. ரயில் தண்டவாளங்கள் பெயர்க்கப் பெற்றன. இத்தகைய தீச் செயல்களைச் செய்தவர் யாவர் என்று தமக்குத் தெரி யும் என காந்தி எழுதி யிருந்தார். நாட்டில் எழுந்த கொடிய நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரிக்க, ஹண்டர் கமிட்டி என்று பெயர் தாங்கிய கமிட்டி யொன்றை, வைஸிராய் அவர்கள் நியமித்தார்கள். ஹண்டர் கமிட்டியின் முன்னர் பலர் சாட் சியம் கூறினார்கள். காந்தியும் சென்றார். "இந்தக் கொடிய செயல்களைச் செய்தவர்கள் யாவர் என்று தங்களுக்குத் தெரியும் என கூறுகிறீர்களே, அவர்களுடைய பெயர்களைச்

சொல்லக் கூடாதா" என்று கமிட்டியின் தலைவர் ஹண்டர் பிரபு காந்தியைக் கேட்டார். "உண்மை எனக்குத் தெரியும். ஆனால் நான் சொல்லமாட்டேன். ஏனெனின், நான் சீர்திருத்தக்காரன்; போலீசுக்கு உளவாளியல்ல" என்று காந்தி பதிற் கூறினாராம். எனவே, மேயோ அவர்களுக்கு இந்தியர்களின்பேரில் சீர்திருத்தக் காரரின் அனுதாபம் இருக்குமாகில், போலீசு ஒற்றனைப்போல நடந்துகொண்டிருக்கமாட்டார். "நம் குடும்பத்தின் மானத்தைக் குறைத்துவிடலாமே" என்று வேசி ஒருத்தி சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த புலவர் ஒருவர், "இழி தொழில் புரிபவர்களுக்கும் மானம் உண்டு எனத் தெளிந்து கொண்டேன்" என்று கூறியிருக்கிறார். காற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மழைக்காற்று, குளிர்ந்த தென்றற் காற்று, குப்பையைத் தூற்றும் காற்று. முன்னிரண்டு காற்றுகளையும் உலகத்தார் விரும்புவார்கள். முன்னிரண்டையும் நன்னோக்குக் கொண்ட சீர்திருத்தக்காரர்களுக்கு ஒப்பிடலாம் கடைசிக் காற்று, பிறரிடம் குற்றம் காணவேண்டும் என்ற தீர்மானங்கொண்ட அகம்பாவி எனக்கூறலாம். மேயோ மழைக்காற்று அல்ல, குளிர்ந்த தென்றற் காற்றுமல்ல. அவர் குப்பையைத் தூற்றும் புயற்காற்று.

தாம் இந்தியாவின் நிலைமையைக் காண வந்ததாகக் கூறுகின்றார். அந்த முறையில், நமது குறைகளை வெளியே எடுத்துத் தூற்றட்டும். அதுகூடப் பாதகமாகாது. ஆனால் அவர் எழுதிய எழுத்தினின்றும், கூறுகிற முடிவுகளினின்றும், கொடுக்கின்ற ஆதாரவினின்றும், அவர் இந்திய அரசாங்கத்தின் "வக்கீல்" எனத் தெளிவாகக் காணப்படுகின்றது. சாக்கடை, ஆஸ்பத்திரி, ஆலய வழிபாடு, சட்டசபை,

ரெயில் பிரயாணம், கலியாணம்—எதைப்பற்றி மேயோ எழுதினாலும் சரியே, "இந்தத் துறைகளில் இந்திய அரசாங்கத்தார் பட்டிருக்கும் பாடு மொழியும் தரமன்று, இந்திய அரசாங்கத்தார் செய்திருக்கும், செய்து வரும் நல்ல தொண்டுகளை, இந்தியர்கள் அறிந்து கொள்ளவில்லை. அறிந்துகொள்ளாததும் தவிர, அரசாங்கத்தாரை அனுவசியமாகத் தூற்றுகிறார்கள். தங்கள் முற்போக்குக்கு, இந்திய ஜனங்கள் ஒன்றுமே செய்யாது, வாளாக்கிடக்கின்றனர்" என்று ஓய்வின்றி, ஒவ்வொரு அத்தியாயத்திலும் மேயோ அவர்கள் இந்திய அரசாங்கத்தாரைத் தாங்கிப் பேசுகின்றார். இந்தியர்களைத் தூன்றுகின்றார். எனவே, மேயோவின் நூல் விஷமப் பிரசார நூல் என்றும், அது பட்சபாதமற்ற நூல் அல்லவென்றும், தூண்டுதலால் எழுதப்பெற்ற நூல் என்றும் கொள்ளக் கிடக்கின்றது.

"எங்களுடைய திக்கற்ற தன்மைக்கும் எங்கள் செயல் திறனும் சொந்த அறிவும் குறைந்து வருவதற்குங் காரணர்கள் எங்கள் பேரில் அரசு செலுத்தும் ஆங்கிலேயர்கள் என்று உண்மையுடன் நாங்கள் குற்றம் சாற்றுகின்றோம்."

என்று காந்தி கூறியிருப்பதாக, மேயோ எழுதியிருக்கிறார். இந்த நிலைமைக்கு யார் காரணர் என்பதை ஆய்ந்து குறிப்பிடும் பொருட்டே, தாம் இந்தியாவைச் சுற்றிப்பார்த்தது என்று கூறும் மேயோ அவர்கள், "இந்த நிலைமைக்கு இந்தியாவில் நடைபெறும் ஆங்கில ஆட்சி—அதன் தன்மை எவ்வாறு இருப்பினும்—மேற்கூறிய நிலைமைக்குக் காரணமல்ல" என்று மறுத்துக் கூறுகின்றார். இந்தியாவில் பிறந்து, வளர்ந்து, இந்திய அரசியல் நிர்வாகத்தின் பயனை தமது வாழ்க்கையில் அபரிமிதமாய் அனுபவித்த, அவசரப்பட்டு

எதையும் கூருத, எவரிடமும் அனுதாபம் காட்டும் காந்தியின் முடிவை, சில மாதச் சுற்றுப்பிரயாண அனுபவம் பெற்ற, கட்சிச் சார்பு கொண்ட, இந்தியர்களை ஆளும் ஆங்கிலேயர்களின் இனத்தைச் சேர்ந்த மேயோ தயங்காமல் மறுக்கின்ருர். நம்முடைய காந்தி என்பதனுல், நாம் அவரை நம்பவேண்டுமென்பதல்ல. அன்னிய நாட்டு மேயோ என்று அவரைத்தள்ளவேண்டு மென்பதல்ல. இந்தியாவைப் பற்றித் தெரிந்துகொள்ள, யாருக்கு வசதிகள் அதிகம் இருந்திருக்கும் என்ற விஷயத்தைக் கவனிப்பதுமட்டும் பொருத்த முடையதாகும். இதைத் தெரிந்து கொண்டால், இருவரில் எவர் உண்மை பேசும் தன்மை கொண்டவர் என்பது பின்னர் கவனிக்கப்படவேண்டிய சங்கதியாகும். தங்கள் முடிவுக்கு எவர் தக்க சான்றுகள் காண்பிக்கின்ருர்கள் என்பது பின்னர் பார்க்கவேண்டிய விஷயம், ஆக்க மனப்பான்மை யாருக்குண்டு, அழித்தல் மனப்பான்மை யாருக்கு இருக்கின்றது என்பது இறுதியில் உற்று நோக்கவேண்டிய பொருளாகும். காந்தி கூறியது உண்மையென்றும் மேயோ கூறுவது தவறு என்றும் காண்பிப்பதே, நாம் எழுதும் நூலின் நோக்கமாகும்.

"சோம்பல் திக்கற்ற தன்மை, செயல் திறனும் சொந்த அறிவும் இழந்த நிலை, நிலைத்து நிற்கும் சக்தியின் குறை, சோர்வற்ற பக்தியின்மை, உற்சாக மின்மை, ஜீவ தாதுவின் பலவீனம்——இந்தத் தன்மைகள் யாவும் இந்தியனுக்கு இன்றைக்குப் புதிதாக வந்தனவையல்ல; இவைகள் நீண்ட காலந்தொட்டே, அவனிடம் இருந்து வருகின்றன, அவைகளின் காரணங்களை நேரே தெரிந்து ஒப்புக்கொண்டு, தனது சொந்தக் கைகளியினுலேயே அவைகளைக் களைந்து

எறியத் தீர்மானங்கொண்டாலொழிய, (அத்தகைய்தன்மைகள்) நாளாக நாளாகச் செழித்துக்கொண்டே வரும்.''

மேற்கூறியது மேயோவின் தீர்ப்பும் சாபமும் ஆகும். சாபத்தைக் கண்டு எவரும் அச்சம் கொள்ளவேண்டியதில்லை இந்தக் குறிப்பில் காணப் பெறும் தோற்ற உண்மையை முதலில் ஏற்றுக் கொள்ளுவோம், இந்தியர்களின் முன்னேற்றம் அவர்களுடைய சொந்த முயற்சியைப் பொறுத்து நிற்கின்றது ; அவர்களை எவரும் (ஆங்கிலேயர்கள் உட்பட) கரையேற்ற முடியாது, என்பது தோற்ற உண்மையாகும் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் தர்மகர்த்தர்கள், இந்தியர்களின் கார்டியன்கள் என்பது, குறிப்பாக இந்தப் பொது விதியில் மேயோவால் மறுக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஒரு நாடு தனது சொந்த முயற்சியினாலேதான் முன்னேற முடியும் என்பதை இந்தியர்களிற் பெரும்பான்மையோர் தெளிந்துகொண்டு விட்டார்கள். தெளியாத சிலருக்கு, மேயோவின் குறிப்பு அறிவு கொளுத்தும் என்று நம்புகிறோம்.

தோற்ற உண்மை ஒருபுறமிருக்க, தீயதன்மைகளின் “காரணங்களை அறிந்து, ஒப்புக்கொண்டு”, இந்தியன் நடக்கவேண்டும் என்பதன் பொருள் என்ன? “இந்தியர்கள் மேநாட்டு நாகரிகத்தின் போக்கை ஏற்கவேண்டும் ; தங்கள் பண்டை நாகரிகத்தை உதறித் தள்ள வேண்டும். இந்த வேலைக்கு, மேயோ அவர்களை குருவாக இந்தியர்கள் கொள்ளவேண்டும்'' என்று மேற்கூறிய குறிப்பின் உண்மையான பொருளாகும். இது நான் எனது கற்பனையால் கொண்டபொருள் அல்ல. ஆய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். இந்தியர்களின் முன்னேற்ற சம்பந்தமாய்,

மேயோ மூட்டுந்தான் இவ்வாறு கூறுகிறார் என்று எவரும் எண்ண வேண்டாம். மேனாட்டு நாகரிக மோகத்தில் அமிழ்ந்து கிடப்பவர்கள் யாவருமே—அவர்கள் அன்னியர்களாயினும் சரி, இந்தியர்களாயினும் சரியே—இவ்வாறு தான் கூறுகின்றார்கள். எனவே, மேயோவுக்கு நம்மவர் அளிக்கும் பதில் நிலைத்த பதிலாக விருக்கவேண்டும். நான் குறிப்பிட்ட பொருள் மேயோவின் சொற்களுக்கு உண்டா என்பதை நான் மெய்ப்பிக்க வேண்டுமல்லவா?

இந்தியாவின் பலவீனங்கள் இன்றைய சங்கதிமட்டுமல்ல; அவைகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றன. காரணங்களை அறிந்து, தக்கன செய்யாவிடின், அவைகள் ஒழியமாட்டா. இவ்வாறு மேயோ கூறுகின்றார். பலவீனங்கள் நீண்ட காலந்தொட்டு இருந்து வருகின்றன என்று கூறப்படுவதால், இந்தியர்களின் வாழ்க்கைத் தத்துவமும் வாழ்க்கையின் போக்கும் தவறுடைத்தாயிருக்கவேண்டும்; ஏனெனின் பலவீனமும் சக்தியும் வாழ்க்கை முறையின் விளைவுகள் அல்லவா? எனவே, இந்தியர்களின் தவறான பண்டைக்காலத்து நாகரிகத்தை, அவர்கள் தள்ளவேண்டும். என்பது கொள்ளக்கிடக்கின்றது. தள்ளப் பெற்ற வாழ்க்கை முறைக்கு மாற்றுவேண்டாமா? உலகத்தில் தற்போது வெற்றியடைந்து நிற்பதுபோலத் தோன்றுவது மேனாட்டாரின் நாகரீகமல்லவா? அதை இந்தியர்கள் கொள்ளவேண்டும். அதையும் இந்திய அரசாங்கத்தின் மூலமாய்க் கொள்ளுதல் நலம் என்று கூறுவதற்குப் பரமகுரு மேயோ பல ஆயிரம் ஆண்டுகளாகப் பரம்பரையாக விருந்துவரும் ஹிந்து நாகரிகத்தை அடியோடு உதறித் தள்ளிவிடுவது என்பது முடியாது. "அடிப்படையிலேயே, ஹிந்து நாகரிகம் பலவீனங்

கொண்டதாயிருப்பின், அது இத்தனை நூற்றாண்டுகளாக நிலைத்திருக்கமுடியாது; இந்தியர்களும் அழிந்துபோயிருப்பார்கள்'' என்று கல்கத்தா பல்கலைக் கழகத்தின் உபத்தலைவரும் சிறந்த சரித்திரக்காரருமான திரு. யது நாத ஸர்க்கார் அவர்கள் கூறியிருக்கின்றார். இதை ஆதரித்துப்பேசும் உலக அறிஞர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றார்கள். ஹிந்து நாகரிகத்தின் மேல் கட்டிடத்தில் மாறுதல்கள் செய்யலாம். ஆனால் அதன் அடிப்படையான தத்துவத்தை மாற்ற முயன்றால், இந்தியர்களின் ஆவியும் இந்தியாவின் ஆன்மாவும் பறந்து போய்விடும். சிங்கம் யானையை அடித்துக்கொன்று விடுகின்றது. சிங்கத்துக்கு அஞ்சி, சக்தி சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற ஆசைகொண்டு, யானை தனது உருவத்தை மாற்றிக்கொள்ளமுடியுமா? அல்லது சிங்கத்தைப்போல, மாமிசத்தை யானை உட்கொள்ளமுடியுமா? யானை உலகத்தில் உயிருடனிருக்குமளவும் சாக பட்சினியாகத்தான் இருக்க முடியம். யானையினால் புலால் உண்ண முடியாது. அது போலவே, பரம்பரை வாழ்க்கையினாலும் பழக்க வழக்கங்களின் மூலமாயும் மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் இயல்பை மாற்ற நினைத்தால், அதனால் விளையக்கூடிய விபத்துகளை அளந்து கூற முடியாது. இதற்கு ஒரு உதாரண்ம் தருகின்றேன். ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் ஐரோப்பாவுக்குக் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது முஸ்லீம் நண்பரொருவர் அவருடன் கூடப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். பக்குவமாகக் சமைக்கப்பட்டிருந்த புலால் (மாமிச) உணவை முஸ்லீம் நண்பர் உண்டபின்னர், "உணவு மிகவும் சுவையுடன் சமைக்கப் பெற்றிருக்கிறது'' என்று ஆசியும் கூறினர்.

"ஆகா! என்ன செய்து விட்டீர்கள்? நீங்கள் உண்டது பன்றி மாமிசமல்லவா" என்று பக்கத்திலிருந்த ஒருவர், முஸ்லீம் கனவானிடம் கூறினர். கண் கொட்டித்திறக்கும் காலத்திற்குள், முஸ்லீம் கனவான் தாம் உட்கொண்ட உணவு யாவற்றையும் வாயினுல் எடுத்துவிட்டார். மாமிசம் சாப்பிடும் பழக்கத்தைக் கொண்ட முஸ்லீம் கனவான் பன்றி மாமிசம் என்ற கேள்விப்பட்டவுடனே, தம்மை மீறியே செய்த வேலையைப் பாருங்கள். அவர் வாயினுல் எடுத்தது, அவருடைய பரம்பரை வாசனை, பழக்க வழக்கத்தினுல் ஏற்பட்ட இயற்கையின் பயனுகும். பழுதையைப் பாம்பென்று மதித்து, நினைவு அழிந்து, உணர்ச்சியற்றுப் போனவர்களின் கதைகளிற் பலவற்றை நண்பர்கள் கேட்டிருப்பார்கள். பழக்க வழக்கங்களாலும் பரம்பரை வாசனையின் மூலமாயும் உண்டாய இயல்பு, இயற்கையில், பிறப்பினின்றும் விளைந்த தன்மையைப் போலவே, இயங்கும் இயல்பு கொண்டது என்பதை நூற்றுக்கணக்கான சம்பவங்களைக்கொண்டு, மெய்ப்பிக்கலாம். அந்தத்தன்மையையொட்டிமாறுதல்கள்செய்யலாமேயொழிய அதன்தொடர்பை அறவே அறுத்துவிட்டு, இந்தியர்கள் தங்கள் வாழ்க்கையில் மாறுதல்களை ஏற்படுத்திக்கொள்ள முடியாது. உனவே, பரம்பரையாக வந்துள்ள ஹிந்து நாகரீகத்தின் அடிப்படைத் தத்துவத்தை ஹிந்துக்கள் மேயோவின் சொற்களைக் கேட்டு, மாற்றிக்கொள்ள முடியாது. மேலும் இந்தியர்களின் மேற்கூறப்பெற்ற பலவீனங்கள் பண்டைக் காலந் தொட்டு, பாரம்பரையாக வந்துள்ளவையாயின், இந்தியர்கள் அனைவரும் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர், செத்துச் சாம்பராய்ப் போயிருக்கவேண்டும். மேயோ கூறி

யிருக்கும் பலவீனங்கள் யாவும் சமுதாயமாய் ஒரு சமுகத்தைப் பற்றிக் கொண்டிருப்பின், அந்த சமூகம் பத்துத்தலை முறைகளுக்கு அதிகமாக உயிர் வாழ்ந்திருக்க முடியாது. எனவே, மேயோகூறும் பலவீனங்கள் பரம்பரையாகப் பண்டைக்காலந் தொட்டு வந்தவையாக இருக்க முடியாது. இடைக்காலத்தில் தோன்றியிருத்தல் வேண்டும். எனவே அவை, புராதன ஹிந்து நாகரிகத்தின் விளைவுகள் என்று கூறும் மேயோவின் சொற்கள் ஆராய்ச்சியால் தோன்றிய தீர்ப்பல்ல. இதை நம்மவர்கள் நன்றாக உணருதல் வேண்டும்.

தற்போது, இந்திய ஜன சமூகத்தினிடையே பரந்து நிற்கும் பலவீனங்கள் இடைக்காலத்தில் தோன்றியவை என்பதை ஏற்றுக்கொண்டால் எப்பொழுது தோன்றின என்பது ஆராய்ச்சிக்கு உரியதாகும். அவைகள் ஆங்கில ஆட்சியின் பின்னரேதான், தோன்றியிருக்கின்றன என்று காந்தி கூறியிருக்கும் தீர்ப்பு, ஏற்கனவே, குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகள் பெரும்பாலும் ஆங்கில ஆட்சியின் பயன்கள் என்று பின்னர், தக்க சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்படும். இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் ஆங்கில ஆட்சிக்குத் தூண்டுதலாய் நிற்பது யாது? உலக மக்களுக்குள் வெள்ளையர்கள் உயர்ந்தவர்கள் என்று மேநாட்டு நாகரிக வாழ்க்கை முறையே உலகமக்களை—முக்கியமாய் வெள்ளையர்கள் நீங்கிய ஏனையோர்களை — உய்விக்கும் சாதனம் என்றும் வெள்ளையர்கள் நினைத்துக்கொண்டிருக்கும் எண்ணமும் அதனின்றும் எழும் இருமாப்பு உணர்ச்சியுமே, ஆங்கில ஆட்சிக்குத் தூண்டுகோல்களாக நிற்கின்றன. எனவே, இந்தியர்கள் மேநாட்டு நாகரிகத்தை ஏற்பது முடியாது, ஆகவே, பாவ மன்னிப்பு கேட்டுக்கொண்டு, இந்தியர்கள்

மேயோவைக் குருவாகவும் கொள்ளமுடியாது. "மின்னுவ தெல்லாம் பொன்னல்ல" என்பது முதுமொழி. இப்பொழுது ஆடம்பரமாய் நின்று, உலகத்தார்களின் கண்களைப் பறிக்கும், கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கும் மேநாட்டு நாகரிகம் சக்தி வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால் அது மக்களின் உய்வுக்காக எழுந்ததா அல்லது மக்களின் அழிவுக்காக ஏற்பட்டுள்ளதா என்பது இன்னும் தெளிவுபடவில்லை. மக்களை நாசமாக்கி வருகின்றது என்று காந்தி வற்புறுத்திக் கூறி வருகின்றார். மேலும் மேநாட்டில் வாழ்க்கைமுறை இன்னதுதான் என்று நிலைத்து ஒன்றும் கூறப்படவில்லை. உலகத்தில் இஸ்லாம் பிறந்து, சற்றேறக்குறைய 1300 ஆண்டுகள் ஆகின்றன. இப்பொழுது மேநாடுகளில் பரவிக் கிடக்கும் நாகரிகம் முஸ்லீம் அறிஞர்களின் ஆராய்ச்சியின் பயன் என்று கூறலாம். எனவே, இந்த 1300 ஆண்டுகளாக, மாற்றி மாற்றிச் சோதனை செய்யப் பெற்றுவரும் மேநாட்டு வாழ்க்கைமுறை நிலைத்ததென்று கூறமுடியாது. அரசியல் முதல் சமயம் வரையில், மேநாட்டார்களின் கருத்துகளும் கொள்கைகளும் அனுபவங்களும் மாறிக்கொண்டே வருகின்றன. அதாவது இயற்கைக்கு இயைந்ததாகவுள்ள வாழ்க்கை முறை இன்னும் மேநாட்டார்களால் காணப்பெறவில்லை என்பது தெளிவு. இந்தியர்களும் தங்கள் பண்டை நாகரிகத்தை புதிய சம்பவங்களுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்றவாறு, பல துறைகளில் சோதித்துப் பார்க்கலாம். ஆனால் மேநாட்டு வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ள முடியாது. மேநாட்டார் எங்கெங்கத் துறைகளில், வாழ்க்கையைச் சோதித்து நற்பயனை அடையாமல் தவிக்கின்றனர் என்பது பின்னர் கூறப்படும்.

இந்த அத்தியாயத்தில் குறிப்பிடக்கூடிய பகுதிகள் சிலவிருக்கின்றன. அவைகளை எடுத்துக்கொள்ளுவோம்.

(1) இந்தியாவில் வசிப்பவர்கள் பெரும்பான்மையில் கிராமவாசிகள்; அவர்களுக்கு எழுத்து வாசனை கிடையாது. தங்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாததைப் பற்றி, அவர்கள் அகமகிழ்கின்றார்கள் (2) பெண் உபாத்தியாயர்களை நியமிக்காததால், ஆரம்பக்கல்வி அபிவிருத்தி யடையவில்லை (3) பெண் உபாத்தியாயர்களை நியமித்தால், அவர்கள் கற்பழிந்து நாசமடைவார்கள் (4) இந்தியர்கள் தங்கள் கட்சிச்சண்டைகளை விடுத்து, தங்கள் உடலையும் ஆன்மாவையும் சீர்திருத்திக்கொண்டால், அவர்கள் விரைவில் முற்போக்கு அடைந்து விடுவார்கள். (5) 1919-ம் ஆண்டு (மாண்டேகு) சீர்திருத்தத்திற்குப் பின்னர், அதிகாரவர்க்கத்தினர் இந்தியப்பொது ஜனங்களுக்குக் கட்டளை யிடுவதில்லை; அவர்கள் நயமான முறையைக்கொண்டு, பொது ஜனங்களின் மனத்தைத் திருப்பி வருகின்றார்கள்.

இந்தியாவில் வசிப்பவர்கள் பெரும்பான்மையில் கிராமவாசிகள்தான். அவர்களுக்கு எழுத்துவாசனை கிடையாது என்று கூறுவது அவ்வளவாக இப்பொழுது உண்மையல்ல. இருபது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலையை, மேயோ அவர்கள் கூறுகின்றார்போலும்! தங்களுக்கு எழுத்து வாசனை யில்லாமைபற்றி, கிராம வாசிகள் அகமகிழ்கின்றார்கள் என்று மேயோ அவர்கள் குறிப்பிட்டிருக்கும் அவ்தூறு பொறுக்கக் கூடியதல்ல. படிப்பு வேண்டாம் என்று கிராமவாசிகள் மேயோவினிடம் சொன்னார்களா? அப்படியே அவர்கள் சொல்லி யிருந்தாலும், அதற்கும் ஒருவிதப் பொருள் உண்டு. தன் வயிறு வளர்க்க யாதொரு தொழி

னும் தெரியாமல், வெறும் எழுத்துப் பழக்கமட்டும் கொண்டு, சோற்றுக்கு எப்பொழுதும் பிறனைச் சார்ந்திருக்கும் ஒருவன் உயர்ந்தவனா? அல்லது எழுத்துப் பழக்க மில்லாவிடினும் கைத்தொழில் பழக்கத்தைக் கொண்டு, ஜீவனம் நடத்தும் ஒருவன் உயர்ந்தவனா? இந்தப் பொருளில், கல்வி வேண்டாம் என்று கிராமவாசிகள் ஒருக்கால் சொல்லியிருக்கவும் கூடும். ஆமாம்! "எழுத்து சோறு போடுமா" என்று அனுபவக் களஞ்சியமான கிராமவாசி யொருவன், சற்று மிடுக்காகவே, கேள்விகேட்டிருக்கலாம். ஜீவனோபாயமின்றித் தவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும் கிராமவாசி தன்னை கல்வி கற்றவனைக்காட்டிலும் உயர்ந்தவன் என்று எண்ணிக்கொள்ளின், அது இயல்புதான். ஆனால் படிக்கத் தெரியாததைப் பற்றி சந்தோஷப்படுகின்றான் என்று கூறுவது வீண் அவதூறாகும். இது மேயோவின் கற்பனை என்று தள்ளிவிடுவோம்.

பெண் உபாத்தியாயர்கள் அதிகமாயில்லை என்பது உண்மை. பெண் உபாத்திமார்கள் அதிகமாக நியமிக்கப் பெறாததால், ஆரம்பக்கல்வி இந்தியாவில் அபிவிருத்தி பெறவில்லை என்று கூறப்பெறுவது எவ்வளவு வரையில் உண்மை கொண்டதோ, தெரியவில்லை. "பொதுவாக உபாத்தியாயர்கள் இந்தியாவில் குறைவாக விருக்கின்றனர்; எனவே, பள்ளிகள் மிகுதியாக அமைக்கப்பெற முடியவில்லை; ஆகவே, கல்விப்பயிற்சித் தடைபட்டு நிற்கின்றது" என்று மேயோ அவர்கள் கூறியிருப்பார்களாகில், அதை ஏற்றுக் கொண்டிருக்கலாம். உபாத்தியாயர்கள் அதிகமாக முன் வாராததற்குக் காரணம் வேறு. உபாத்திமைத் தொழிலால், தனி இந்தியனுக்கு, வாழ்க்கை வசதிகள் ஏற்படுவதில்லை.

அவர்களுடைய ஊதியமோ, நிரம்பக் குறைவாகும். இது தான், ஆரம்பக் கல்வி உபாத்தியாயர்கள் அதிகமாக கிடைக் காமைக்குக் காரணமாகும். இது யாருடைய பிழை? உபாத்தியாயர்களின் பிழையா? அரசாங்கத்தாரின் தவறு? எது என்று இந்தியர்கள் அனைவருக்கும் தெரியும். இது சம்பந்தமாக, மேயோவின் அறியாப் பிழையை இந்தியர்கள் பொறுத்துக்கொள்ளுவார்கள். ஆனால், அவர் கூறியிருக்கும் மற்றொரு விஷயம், நமது நெஞ்சத்தை அறுக்கின்றது. பெண் உபாத்தியாயர்களை நியமித்தால், அவர்கள் கற் பழிந்து நாசமடைவார்கள் என்று மேயோ எழுத்தில் கூசா மல் பொறித்திருப்பதைக் கண்டு, இந்தியர்கள் மனம் பதறா மல் இருக்கமுடியாது. மேயோ எழுதியிருக்கும் நூலில், இந்தஅவதூறு அடிக்கடி காணப்பெறுகின்றது. இரகசியப் புணர்ச்சி, காமப்புணர்ச்சி, கற்பழிதல், முதலியவைகளைப் பற்றி மேயோ அவர்கள் பன்னிப் பன்னிப் பேசுகின்றார். நிந்தாஸ்துதி என்று ஒருவகைப் புகழுரை உண்டு. எதை நாம் சுவையுடன் கொள்ளுகின்றோமோ, அதை வெறுப்ப தாக வெளிப்படையாகக் கூறுவதற்கு நிந்தாஸ்துதி என்று பெயராகும். மேற் கூறியவைகளை வெறுப்பதாக வெளிக் காண்பித்துக்கொள்ளும் மேயோ அவர்களுக்கு, அவைகளில் எத்தகைய உணர்ச்சி இருக்கின்றதோ, யார் கண்டார்? சில ருக்கு, இத்தகைய மனோவிகாரம் உண்டு என்று வைத்திய நிபுணர்களும் மனோதத்துவ வல்லுனர்களும் கூறுகின்றார் கள். பெண் உபாத்திமார்கள் இந்தியாவில் எளிதிலே கற் பழிந்து நாசமடைகின்றார்களாம்! என்னபொய்? தனித்த இரண்டொரு சம்பவங்கள் இருந்திருக்கலாம். எந்த நாட் டிலேதான், இவ்வாறு நேர்ந்திருக்காது? கற்பைப்பற்றி வற்

புறுத்திப் பேசுபவர்களும் கற்பழிந்து, அல்லலுற்றவர்களா யிருந்திருத்தல்கூடும்.

மேயோவின் தர்க்கமுறையைப் பாருங்கள். இந்தியா வில் ஆரம்பக் கல்வி அபிவிருத்தி யடையவில்லை. கல்வியை கிராமவாசிகள் விரும்பாதது முதற் காரணம். பெண் உபாத் திமார்கள் நியமிக்கப் பெருதது இரண்டாவது காரணம். பெண் உபாத்திமார்களை நியமித்தால், அவர்கள் கற்பழிந்து நாசமடைவார்கள். ஆனால் உண்மையான காரணத்தைமட்டும் மேயோ கூறவில்லை. அரசாங்கத்தின் கவலையற்ற தன்மை மட்டும் குறிப்பிடப்படவில்லை. இந்திய அரசாங்கத்தின் பொருட்டு, பிரசார வேலை செய்ய முன்வந்திருக்கும் மேயோ, அவர்களின் தவறைச் சொல்லுவாரா? இந்தியர்களைக் குறை கூறவேண்டும்; அரசாங்கத்தாரை ஆதரித்துப் பேச வேண்டும். இதுதான் மேயோ நூலில் கைக் கொண்டிருக் கும் வேலையாகும். வேண்டுமென்றே, அரசாங்கத்தாரைக் குறை கூறுவது, எனது நோக்கமல்ல. நண்பர்களுக்கு, அனு பவமொன்றைத் தருகின்றேன். ரயில் பாதைகள் நாட்டில் அதிகமாகப் போடப்பட்டால், நாட்டின் செல்வம் அன்னி யர்களால் சுரண்டப்பட்டுவிடும் என்பது பொதுவாக நாட்டா ரின் கருத்தாகும். புதிய புதிய ரயில் பாதைகள் போடப்படு வதை,இந்தியர்கள் எத்தனையோ தடவைகள் ஆட்சேபித்திரு கின்றார்கள். அரசாங்கத்தார் இதைக் கவனித்ததே யில்லை. இந்தியர்களுக்கு விருப்பமில்லாத ஒன்றைச் செய்து பின் னர் அவர்களுக்குச் சுவையை உண்டாக்கவில்லையா? ரயில் பாதை அமைப்புக்குவேண்டிய டிரைவர்கள், கார்டுகள், ஸ்டேஷன்மாஸ்டர்கள், போர்ட்டர்கள் முதலியோர் அகப் படுவார்களா என்று அரசாங்கத்தார் கவலைப்பட்டகால

முண்டா? எனவே ஆரம்பக் கல்விக் குறையைப்பற்றி மேயோ கூறும் காரணம் பொய்யாகும் அல்லது அறியாமை யாகும்.

இந்தியர்கள் கட்சிச் சண்டைகளை விடுத்து தங்கள் உடலையும் ஆன்மாவையும் சீர்திருத்திக் கொண்டால், அவர்கள் விரைவில் முற்போக்கு எய்துவார்கள் என்று மேயோ எழுதியிருப்பதை, நாம்வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகின்றோம். அன்னிய ஆட்சி இந்தியாவிலிருக்கு மளவும், கட்சிச்சண்டைகள் இருக்கும் என்பது உண்மையாயினும், அவைகள் ஒழிக்கப் பெற்றாலன்றி, இந்தியர்கள் முன்னேற்றமடைய முடியாது. கிராமத்தார்கள் கூறுவது போல, மேயோ கூறியிருக்கும் உண்மை “நூற்றில் ஒரு வார்த்தை.” கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் உண்மையான தொண்டு செய்ய இந்தியர்கள் முற்படுவார்களாகில் கட்சிச் சண்டைகள் ஒழிந்து போய் விடும். தத்தம் இயல்புக்கு ஏற்ப கட்சிகள் கருமம் செய்யத் துவக்கினால் வீண் பேச்சுக்கள் யாவும் நின்று விடும். கதர் வேலையில் முனைந்திருக்கும் காந்தியால் கட்சிச் சண்டை கிடையாது. அரசாங்கத்துடன் ஒத்துழைக்க எண்ணங் கொண்டிருப்பவர்களால், கட்சிச்சண்டை தோன்றவில்லை. தீண்டாமை விலக்குக்காக உழைப்பவர்களின் மூலமாய்க் கட்சிச்சண்டை எழவில்லை. கிராம நிர்மாண வேலையில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்களின் மூலமாயும் பள்ளி உபாத்திமார்களின் மூலமாயும், கட்சிச் சண்டை உதயமாகவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காகப் பூசலிடும் அரசியல் வாதிகளால் கட்சிச் சண்டைகள் வலுவடைகின்றன. இவர்களுடைய சண்டை ஊக்கத்தை, மௌனமாய்த் தொண்டு செய்பவர்கள் குறைத்தல் வேண்டும்.

மாண்டேகு சீர்திருத்தத்திற்குப் பின்னர், அதிகார வர்க்கத்தினர், நயமானமுறைகளால்,இந்தியர்களின் மனத்தை மாற்றவேண்டி யிருக்கிறது என்று மேயோ அவர்கள் கூறியிருப்பது உண்மையல்ல. முன்போலவேதான், அரசியல் நிர்வாகம் நடைபெற்றுவருகின்றது. அதிகாரவர்க்கத்தினர் தங்கள் இயல்பையும் போக்கையும் மாற்றிக்கொள்ளவேயில்லை. கவர்னர், வைஸிராய் இவர்களிடம் "வீட்டோ" (தள்ளுபடி செய்யும்) அதிகாரம் இருக்குமளவும், அதிகார வர்க்கத்தினர் "நயமான" முறையைக் கையாளவேண்டுவதில்லை. மேலும் அதிகாரவர்க்கத்தினரின் முதுகெலும்பு போன்றவர்களான ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களின் சம்பளம், உரிமை முதலியன சட்டசபைகளால் வாதிக்கப்பெற உரியனவல்ல என்று மாண்டேகு சீர்திருத்தச் சட்டத்தில் காணப்பெற்றிருக்கிறது. எனவே, அதிகார வர்க்கத்தினர் ஜனங்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ளவேண்டிய தேவையே ஏற்படவில்லை. மாண்டேகு சீர்திருத்தம் வழங்கப்பெற்றது இந்தியர்களின் நலனையும் முற்போக்கையும் கருதியே என்று அதிகாரவர்க்கத்தினராலும் அவர்தம் நண்பர்களாலும் சென்ற சில ஆண்டுகளாகப் பிரசாரம் செய்யப்பெற்று வருகின்றதல்லவா? அதை யொட்டியே மேயோவும் மேற்கூறிய எழுத்தை எழுதியிருக்கின்றார்போலும்! மேயோவின் நூலில் இரண்டு விநோதங்களை அடிக்கடி காணலாம். இந்தியர்களின் காம உணர்ச்சி, அதிகாரவர்க்கத்தினரின் (ஆங்கிலேயர்களின்) அளவுகடந்த கருணை—இவ்விரண்டும் அடிக்கடி நூலில் கூறப்பட்டிருப்பதை நண்பர்கள் காணலாம். "வாதி தாவா மோசடி" என்று துவக்கி, பிரதிவாதியின் பெருந்தன்மையை விரித்துரைக்கும் வக்கீலைப்போல,

நூல் எழுதியிருக்கும் மேயோவுக்குக் கட்சிச் சார்பு உண்டா, இல்லையா என்பதைப்பற்றி நண்பர்கள் முடிவுகட்டிக்கொள்ளலாம்.

"நாலு திசையும் ஸ்வாதந்தர்ய நாதம் எழுகவே!
நரகமொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே!
ஏலு மனிதர் அறிவை யடர்க்கும் இருள் அழிகவே!
எந்த நாளும் உலகமீதில் அச்சம் ஒழிகவே!"

அத்தியாயம் 4.

"அடிமை மனப்பான்மை".

இந்த அத்தியாயத்தில், மேயோ அவர்கள், இந்தியர்களின் அடிமை மனப்பான்மையின் காரணங்களைப்பற்றிக் கூறுகின்றார்.

"சுயராஜ்யம் கிடைக்கப் பெறும்வரையில், ஒவ்வொன்றையும் ஒத்திப்போட்டுக்கொண்டு, அதனால் சுயராஜ்யத்தையே ஒத்திப்போடவேண்டாம். தைரியமுள்ள, நடை நேர்மைகொண்ட ஜனங்களுக்குத்தான் சுயராஜ்யம் கிடைக்கும் என்று காந்தி வற்புறுத்துகின்றார்."

என மேயோ உள்ளப் பூரிப்புடன், தமது கட்சிக்கு ஆதாரமாக இதை எடுத்தாண்டிருக்கிறார். காந்தி கூறுவது உண்மைதான். ஆனால் சுயராஜ்யம் வந்த பின்னர்தான், பல காரியங்கள் செய்ய முடியும் என்று காந்தியே அறிவார். சுயராஜ்யம் ஏற்பட்ட பின்னர், சட்டமூலமாக எளிதிலே செய்யக்கூடிய சில சீர்திருத்தங்கள்—உதாரணமாக பூரண மதுபான விலக்கு—இப்பொழுது செய்யப்பெறின், அவை

கள் அரசாங்கத்தாரால் குற்றமாக பாவிக்கப்படுகின்றன. எத்தகைய சீர்திருத்தத்தையும் கண்டு அஞ்சும் அரசாங்கம் அன்னிய மயமாயிருக்குமளவும், சிற்சில சீர்திருத்தங்களைத் தான் துவக்கி முடிக்க முடியும். மேலும் இந்த சீர்திருத்த முயற்சியையே, சுயராஜ்யப் போராட்டச் சாதனமாகக் கொள்ளலாம்.

'பாரத மாதாவினிடம் பக்தி செலுத்துவதாக, ஆவேசங் கொண்ட பேச்சுக்கள் மேடைப் பிரசங்கங்களில் நிகழ்கின்றன. ஆனல் இந்தியாவின் குழந்தைகள் (இவர்கள்) தங்கள் சொற்களுக்கேற்றவாறு, செயல் செய்வதில்லை. அவைகளைக்காப்பாற்ற தங்கள் முழுபலத்தையும்உபயோகிக்காமல், அவளுடைய வல்லமையுள்ள மக்கள், தங்களுக்குள்ளாகவே சண்டை செய்வதிலும் தங்கள் நிலைமையை நினைந்து அழுது கொண்டிருப்பதிலும், தங்கள் காலத்தைச் செலவிடுகின்றார்கள்.'

இவ்வாறு மேயோ எழுதுகின்றார். இது உண்மையிலும் உண்மையாகும். உடல் பொருள் ஆவியைத் தத்தமாக வழங்குவதாகக் கூவும் மேடைப் பிரசங்கிகள் தங்கள் சொற்படி நடப்பின், வெகு காலத்திற்கு முன்னரே இந்தியாவுக்கு சுயராஜ்யம் வந்திருக்கும். அவர்களை இப்பொழுது இகழ்ந்து பேசும் மேயோ, அழகிய நூலொன்று எழுதிப் புகழ்ந்து பேசியிருப்பார். மேயோ எழுதியிருக்கும் இந்தப் பகுதியை மனத்தி லிருத்திக்கொண்டு, இந்தியர்கள் வினையாற்றுவார்களாகில், இந்தியாவைப்பற்றிய இழிச் சொற்கள் கடல் கடந்து வரமாட்டா. சுயராஜ்ய சாதனமாகவுள்ள ஆக்க வேலைகளிற் சிலவற்றை, பிடிவாதத்துடன் இந்தியர்கள் செய்வார்களாகில், அவர்களுடைய உயரிய எதிர்கால வாழ்வைப்பற்றி

எவருமே சந்தேகப்படவேண்டிய தேவையில்லை. இதைப் பற்றி ஒல மிடுவதில் பயனில்லை.

காந்தியைத் தமக்கு ஆதரமாகக்கூறி, மேடைப் பிரசங்கிகளுக்குச் சுடச்சுடக் கொடுத்த மேயோ அவர்கள் அடுத்த படியாக எழுதுவதைப் பாருங்கள்.

> "இதனிடையே, (இந்திய) அரசியல் நிர்வாகம் செய்து வரும் இந்திய (ஆங்கிலேய) அரசாங்கத்தார், நிதானமாய் (ஆனல் உறுதியாய்) (இந்தியர்களின் முன்னேற்றத்தை நாடி) முற்போக்கு எய்தி வருகின்ருர்கள். அது தடைபடா விடின், ஒவ்வொரு பத்தாண்டுகளுக்குள் நல்லபயன் கிடைக்கும்".

இதுதான் மேயோவின் நூலின் உட்கருத்தாகும். காந்தி வலியிழந்து போய்விட்டார்; மேடைப் பிரசங்கிகளோ பயனற்ற கூட்டத்தார்; தம்மா லியன்றவரை, நன்ஞேக்குக் கொண்டு, இந்திய அரசாங்கத்தார் வினையாற்றி வருகின்ருர்கள். மேயோ எழுதியிருக்கும் நூலின் அரசியல் பல்லவி இதுவேயாகும். இந்திய அதிகார வர்க்கத்தினரால் உண்டான தீமைகளை எடுத்துக் காண்பிக்கும்பொழுது, அதனல் எற்பட்ட நன்மைகளைக் கூற, நான் பின்வாங்கமாட்டேன். அன்னிய அரசு பொன்னரசு எனினும் அது தன்னரசுக்கு ஈடாகுமா? தன்னரசைக் காட்டிலும் இந்தியர்களுக்கு நலன் விளைப்பது அன்னிய அரசுதான் எனப் பொருள் படும்படி இடைவிடாமல் எழுதும் மேயோவை நாம் கண்டிக்காமல் விருக்க முடியாது.

இந்தியாவின் முற்போக்கைக் கருத்தில் கொண்டு உழைத்துவரும் இந்திய அரசாங்கத்துடன், படித்த இந்தியர்கள்மட்டும் ஒத்துழைத்தால், அதுவே போதுமானதாகும்,

என மேயோ எழுதுகிறார். மீண்டும் வக்கீல் வேலைதான்! இந்தியாவில் ஒத்துழையாமை தோன்றிய பின்னர், இந்தியர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் வேண்டும் என்று உபதேசம் செய்யாத அன்னியர்கள் இல்லையெனக் கூறலாம். சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் இதாலியா தேசம் ஆஸ்திரியாவுக்கு அடிமைப் பட்டுக் கிடந்தது. இதாலியாவின் விடுதலைக்காக தமது யாவையும் அர்ப்பணம் செய்த இதாலிய தேச பக்தர்களுக்குள் தலைசிறந்து விளங்குபவர் ஜோஸப் மாஜினி என்பார். "இத்தாலியர்களின் செயல்திறன் செழித்து அவர்களுடைய ஊக்கமும் உள்வலியும் பெருக் கடைய வேண்டுமானால், ஆஸ்திரிய அரசியல் சார்பையும் ஆதரவையும் கொண்ட எந்தச் செயலிலும் இதாலியர்கள் இறங்கலாகாது. செயல் திறனையும் செயல் சந்தர்ப்பத்தையும் அரசாங்கத்தாரிட மிருந்து இதாலிய ஜனங்கள் பற்றிக் கொள்ள வேண்டும்" என மாஜினி நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியிருக்கிறார். இந்த எழுத்து அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒவ்வொரு நாட்டையும் பற்றிய உண்மையாகும். அடிமைகள் தங்கள் விடுதலையின் பொருட்டு கைக்கொள்ளவேண்டிய சாதனம் ஒத்துழையாமை தான் என்பது ஐரோப்பியர்கள் தங்கள் சரித்திரத்தின் மூலமாய்க் கண்டு தெளிந்து கொண்ட உண்மையாகும். இதை அறியாததுபோல, மேயோ எழுதுகின்றார். ஏனெனின் அடிமைப்பட்டுக் கிடப்பவர்கள் ஐரோப்பா, அமெரிக்காவில் வசிக்கும் வெள்ளையர்களல்லவே? தென் அமெரிக்கா என்பது ஒரு பெரிய கண்டம். அதிற் பல நாடுகள் இருக்கின்றன. அந்த நாடுகளிற் பல வற்றில் சதா கட்சிப் போர்கள் நிகழும். ஆண்டு தோறும் நிகழும் பொருள் சேதத்தையும் உயிர்ச்சேதத்தை

யும் சொல்லிமுடியாது. என்றாலும் அவர்களின் முன்னேற் றத்தின் பொருட்டு, ஐரோப்பியநாடு எதுவும் உள் நுழைந்து தலையிடுதல் கூடாது என்று அமெரிக்கா, ஐக்கியமாகாணங்க ளின் தலைவராயிருந்த மான்ரூே என்பவர் உலகத்தாருக்கு அறிவிப்பு ஒன்று விடுத்து விட்டார். மான்ரூே பிறந்த நாட் டிலே தோன்றிய மேயோ, அன்னிய ஆட்சியைப் பற்றி வியந்து கூறுகின்றார். நூறு ஆண்டுகளுக்குள் அமெரிக்கா அடைந்திருக்கும் மாறுதல்தான் என்னே !

சக்தியிருக்கும் ஒருவனுக்கு ஏனைய ஒருவன் தொண்டு செய்தால், தொண்டு செய்பவனைக் சபிக்காமலிருக்க முடி யாது. நாளடைவிலே, சக்தியுள்ளவன் தனது சொந்த வலி மையைச் சோம்பலினால், பொறுப்பின்மையால், இழக்கின் றான். இந்தியர்களின் முன்னேற்றத்தை, நன்னோக்குக் கொண்டு, இந்திய அதிகாரவர்க்கத்தினர் நாடினாலும், அது பெரும் பிழைபாகத்தான் முடியும். எந்த நோக்குக் கொண்டோ, இந்தியர்களின் செயல்திறனைக் கெடுத்துவரும் இந்திய அரசாங்கத்தாருக்கு, இந்தியன் எவனும் வாழ்த் துக் கூற முடியாது.

இந்தியப் போலீஸ், ஸிவில் இலாகா, சேனை யிம்மூன்றி லும் இருக்கும் ஆங்கிலேயர்களின் மொத்தத்தொகை 6,7432. பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும்.

> "இருபத்து நான்கு கோடியே, எழுபது இலட்சம் ஜனங்களின் அடிமைமனப்பான்மையின் காரணங்கள் மேற் கூறிய 67432 வெள்ளையர்கள் என்று இந்தியன் கூறுகின் றான்"

இது மேயோவின் எழுத்து; இவ்வாறு இந்தியன் கூறியிருந்தாலும், இதிற் பிழையதிகமில்லை. ஏன்? வேறுசில

சங்கதிகளைக் கவனிக்காமல், மேயோ இதை எழுதிவிட்டார். இந்தியாவின் நிலப்பரப்பென்ன? இந்தியாவின் நீளம் சுமார் 2100-மைல்கள். அகலம் சுமார் 1900-மைல்கள். இந்த நிலப்பரப்பில் சுமார் 32-கோடி ஜனங்கள் வசிக்கின்றார்கள். இந்தியாவின் மூன்று பக்கங்கள் கடலால் சூழப் பெற்றிருக்கின்றன. இந்தியாவிற்கு வடமேற்கில், சுதந்திர ஆப்கானிஸ்தானம் இருக்கின்றது. ஆப்கானிஸ்தானத்துக்குப் பக்கத்திலுள்ள நாடுகள் யாவும் ஸோவியத்து ருஷியாவுக்குச் சொந்தமானவை. இந்தியாவின் கிழக்கே, ஜப்பான் இருக்கின்றது; இந்தியாவின் செழிப்பு, ஆப்கானிஸ்தானம், ருஷியா ஜப்பான், இந்த மூன்று நாடுகளுக்கும் நன்றாகத் தெரியும். உலக நாடுகள் யாவும் இந்தியாவின் நிலவளத்தைத் தெரிந்து கொண்டிருக்கின்றன; நிலைமை இதுவாகும். இவ்வாறிருக்க, உலகநாடுகளனைத்தும்—ஆப்கானிஸ்தானம், ருஷியா, ஜப்பான் உள்பட—இந்தியாவின் பேரில் படையெடுத்து வராமலிருப்பதற்குக் காரணம் என்ன ? இந்தியாவிலிருக்கும் 67432 ஆங்கிலேயர்களின் வீரத்தைக்கண்டு அஞ்சி, அந்த நாடுகள் இந்தியாவின் பேரில் படை யெடுத்து வரவில்லையா? இதுதான் காரணம் என்று மேயோ அவர்கள் கூறத்தயாராயிருப்பாராகில், அதைப்பார்த்து உலகத்தார் நகைப்பார்கள். ஆனால் காரணம் வேறு. இந்தியர்களுக்குள் பெரும்பான்மையோருக்கு அடிமை மனப்பான்மை ஏற்பட்டிருப்பது, அவர்களிடமிருந்து அரசியல் நிர்வாகப் பொறுப்பு பறிமுதல் செய்யப்பட்டதால், நிர்வாகப்பழக்கம் அற்றுப்போய், அவர்கள் அடிமைப்பான்மை கொண்டிருக்கின்றார்கள். இந்தியாவில் பரம்பரையாகச் சில கூட்டத்தார்கள் போர்வீரர்களாயிருந்து வந்தார்கள். அவர்களை, அதிகாரவர்க்கத்தினர் தங்கள்

"கைக்குள் போட்டுக்கொண்டு," ஏழைப்பாமர ஜனங்களை வெருட்டியடிக்கின்றார்கள். இயற்கையிலேயே, இந்தியர்கள் இராஜபக்தி கொண்டு, சட்டத்துக்கு அமைதியுடன் கீழ்ப் படிந்து நடக்கும் தன்மை கொண்டவர்கள். மேலும் ஆங்கி லேயர்கள் இந்நாட்டுக்குத் துவக்கத்தில் இந்தியர்களின் நண் பர்களாயும் துணைவர்களாயும் வந்தார்கள். இப்பொழுது ஆங்கில ராஜதந்திரிகள் "சட்டம் பேசுவதுபோல" அக்காலத் தில் அவர்கள், நண்பர்கள், இந்தியர்களுடன் சமத்துவம் கொண்டவர்கள் என்று கருதினார்கள். நம்பிக்கை வைத்த இடத்திலிருந்து அந்த நம்பிக்கையை திடீரென்று எடுத்துக் கொள்ளும் பழக்கமும் இயற்கையும் இந்தியர்களிடம் கிடை யாது. மேலும், இலட்சக்கணக்காண அன்னியர்கள் இந்தி யாவின் செல்வத்தைச் சுரண்டினாலும், அதற்கு பாரதமாதா இடம் கொடுப்பாள் என்ற நல்ல, ஆனால் முட்டாள் தனமான எண்ணத்தைக்கொண்டிருந்தபாமரஇந்தியர்கள் தங்களுடைய சார்புத்தன்மையைவளர்த்துக்கொண்டார்கள். இந்தியர்களின் அடிமை மனப்பான்மைக்கு, மேயோ கூறும் காரணம் தவறு. 67432 ஆங்கிலேயர்கள் இந்தியாவிலே வசிப்பதால், இந்தியர் களின் அடிமை மனப்பான்மை வளராது. இலட்சக்கணக்கான பார்ஸிகள் பாரசீகநாட்டிலிருந்து துரத்தப்பட்டு,இந்தியாவில் குடியேறி வசித்து வரவில்லையா ? அவர்களால் இந்தியர்களின் அடிமைமனப்பான்மை வளர்ந்ததா ? முஸ்லீம்கள் ஏனைய நாடுகளில் சொந்த அரசியல் நடத்திவரவில்லையா ? இந்திய முஸ்லீம்கள் மட்டும் ஏன் அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டும்? காரணம் என்னவெனில் 67432 ஆங்கிலேயர்களிற் பெரும் பான்மையோர் உயர்ந்த பதவி பெற்று, நிர்வாக இடங்களை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த உறுப்பும்

தனது உபயோகத்தையிழந்தால், விரைவில் அழிந்துபோகும். ஒருவனுடைய நிர்வாகத்திறன் அழியப்பெற்ருல், அவன் காலக்கிரமத்தில் அடிமையாய்ப்போய், அடிமைத்தனத்தை வியந்தும், எஜமானர்களைப் புகழ்ந்தும் பேசுவது இயல்பாகும்.

இந்தியாவுக்கு ஆங்கிலேயர்கள் வருமுன்னர், இந்தியாவில் கொள்ளையும் குழப்பமும் நிறைந்திருந்தன என்பதை மறக்கலாகாது என மேயா கூறுகின்ருர். இது உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். அடிமை மனப்பான்மை என்று மேயோ எடுத்துக்கொண்டிருக்கும் விஷயத்திற்கு, இந்தக் கூற்றுப் பொருத்தமுள்ளதல்ல. ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருமுன்னர், இந்தியர்கள்கோழைகளாயில்லை என்பதும் எந்த நாட்டாருக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கவில்லை என்பதும் தெளிவு. வீட்டிற்குள் ஆயிரம்சண்டைகளிருப்பினும், வெளியாரைப் பஞ்சாயத்துக்கு அழைக்கலாகாது என்ற அரசியல் அறிவை மறந்து, பண்டை இந்தியர்கள் வினையாற்றிய படியினுலேதான், மேயோவை யொத்த அன்னியர்கள் இந்தியாவின் பண்டைக் குழப்பத்தையும் கொள்ளையையும் பற்றி பன்னிப்பன்னிப் பேசுகின்ருர்கள்.

எல்லாம் சூன்யம், உலகம் பொய் என்ற ஹிந்து தத்துவமும் ஹிந்துக்களுக்கு மறு பிறப்பிலிருக்கும் நம்பிக்கையும் அவர்களது பலவீனங்களுக்குக் காரணமாகும் என மேயோ கூறுகின்ருர். இந்தத் தத்துவங்களும் மேற்கூறிய நம்பிக்கையும் காரணங்கள் அல்ல. இவைகளுக்குப் பிழையான பொருள் செய்து, தவருன உபயோகத்திற்கு ஆளாக்கினதே காரணமாகும். பெரும்பான்மையோரின் சுகம் நாடப்படுதல்வேண்டும் என்பது மே நாட்டில் வழங்கும் ஜன நாயகக்

கொள்கையின் நோக்கமாகும். பெரும்பான்மையோருக்கு எதிர் நின்று போராடும் சிறுபான்மையோரை அழித்தல் வேண்டும் என்று வல்லான் ஒருவன் வியாக்கியானம் செய்து, மேற்கூறிய ஜனநாயகக் கொள்கை வாழ்க்கையில் அமுலுக்கு கொண்டுவரப்பெற்றால், அதன்பொருட்டு ஜனநாயகக் கொள்கையின் தத்துவத்தைக் குறை கூறுவதா? குறை கூறினால், அது நகைப்புக்கிடமாகாதா? ரொட்டியையும் திராட்சை ரஸத்தையும் ஏசுவின் சதையும் இரத்தமும் என்று கொள்ளும் கிறிஸ்தவக் கூட்டத்தார் இருக்கின்றார்கள். ரோமன் கத்தோலிக் கிருஸ்தவர்கள் ஒரு நாட்டில் அடிமைகளாக வாழ்வதாக வைத்துக்கொள்வோம். அவர்கள் மனித மாமிசம் உண்டமையால்—ஏசுவின் சதையையும் இரத்தத்தையும்—அவர்கள் அடிமைகளாயிருக்கின்றார்கள் என்று கூறுவது உண்மையும் பொருத்தமும் உள்ளவையாகமாட்டா.

இந்தியாவின் துயரங்களுக்கு—வறுமை, நோய், அறியாமை, தான் பலவீனன் என்ற உணர்ச்சி முதலியன—இவைகள் யாவற்றிற்கும் ஒரே ஒரு காரணம்தான் உண்டு என்று மேயோ விஷயத்தை மிகவும் எளிதாக்கிக் கூறுகிறார். இந்தியன் பிறந்து, வளர்ந்து, வாழும் முறைதான் காரணம் என்று கூறி, வளர்ந்து வாழும் முறையில் காம உணர்ச்சி நிறைந்திருக்கிறது, என்று மேயோ தெளிவாக எழுதியிருக்கிறார். சுருங்கச் சொல்ல வேண்டும் என்ற ஆசை மிகுதியால், மேயோ இந்த அவதூறைக் கூறியிருக்க வேண்டும்.

> " இந்தியப் பெண் சாதாரணமாய், பக்குவமடைந்த ஒன்பது மாதத்திற்குள்—அல்லது எட்டிலிருந்து பதினான்கு வயதிற்குள்—தாயாகி விடுகின்றாள் "

இந்தியாவில் இது சாதாரணமாய் நேரும் அற்புதமல்ல. இது மேயோவின் கட்டுக்கடங்காத எழுத்தில் தோன்றி யிருக்கும் அற்புதமாகும். எட்டில் தாயாயிருக்கும் இந்தி யப் பெண்களை மேயோ எங்கு பார்த்தனரோ, நாம் அறி யோம். இது உண்மையல்லவென்று யாவரும் அறிவார்கள் ஆனால் உண்மை என்ன? இந்தியாவின் தென் பகுதியிலி ருக்கும் பார்ப்பனர்கள் தங்கள் பெண்களை பால்யத்தில் விவாகம் செய்து கொடுக்கிறார்கள். விவாகம் என்பது வரித் தலாகும். பால்யத்தில் விவாகம் செய்பம் பெறும் ஆணும் பெண்ணும் புணர்ச்சிக்கு உரியவர்களல்ல என்பதும் அவர் கள் புணருவதுமில்லை என்பதும் எல்லோரும் அறிந்த சங் கதி. பால்ய விவாகம் செய்யும் இந்தியர்கள் நூற்றில் இரண்டு பேர்களாய்த் தானிருத்தல் கூடும். ஏனைய நூற் றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர்களினிடையே, பால்ய விவாகமிருப்பதில்லை. அவர்களையும் மேயோ கூறும் இள மைப்பருவ மணத்தின் கேடுகள் ஏன் சூழ வேண்டும்? புளிய மரத்தைப் பிடித்த சனி, பூசாரியையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதுண்டா? மேயோ கூறுவதுபோல, பால்ய விவாகம் இந்தியாவின் சமுதாயப் பழக்கமல்ல. சமைந்து, இரண்டுமூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் மணமாகும் பெண் கள்தான் இந்தியாவில் பெரும்பான்மையோராவர். எனவே, மேயோ கூறும் நிகழ்ச்சியும் காரணமும் பொய்யும் தவறு மாகும். மேலும் இந்தியனுக்குக் காம உணர்ச்சி அதிகம் என மேயோ கூசாமல் கூறுகின்றார். பலவந்தப் புணர்ச்சி செய்ய முயற்சி செய்ததாக இந்தியாவில் எழுந்த வழக்கு களிலே பெரும்பான்மை வெள்ளையர்களின் சம்பந்தம் கொண் டது என்பதை மேயோ அறிதல் வேண்டும். காம உணர்ச்சி

மிதமிஞ்சியிருக்கும் இந்தியர்கள்தான் ஜிதேந்திரியத்தைப் பற்றி பேச வேண்டும் போலும் ! உலகத்தி லிருக்கும் மனிதர்களுக்குள் கற்பிற் சிறந்தவர்கள் ஹிந்துக்கள் என்ற நற்பெயர் வாங்கியவர்கள் காமக்களஞ்சியங்கள் என்று மேயோவால் கூறப்படுவது வியப்பே யாகும். பால்ய விவாகம் இந்தியாவின் சாதாரண, சமுதாய நிகழ்ச்சியல்ல என்பதை இந்தியர்கள் அனைவரும் அறிவார்கள்; ஆதலின் இந்தியர்களின் பல வீனத்துக்கு மேயோ கூறும் காரணம் தவறாகும். இந்தியர்கள் தங்கள் உடல்களை நன்றாக ஓம்ப வில்லை என்பது உண்மை தான். அதனால், அவர்களைக் காமக் களஞ்சியம் என்று கூறுவது தவறாகும். புணர்ச்சி யையும் காமத்தையும் பற்றிச் சதா பேசும் இயல்பு சிலருக் குண்டு. அந்த சிலரை ஏனோ மேயோ சேர்ந்தார்? நமக்குக்கவலைக் கிடமாயிருக்கிறது. நூறு ஆண்டுகள் வரையில் வாழ்ந்து, சலிப்பும் ஓய்வு மின்றி உழைத்த இந்தியர்கள், சென்ற தலைமுறையில் கூட காணப்பட்டார்கள். இந்தத் தலை முறையிலும் காணலாம். கிராமங்களுக்குச் சென்று பார்த்தால், அறுபது வயதுக் கதிகமான பலரைக் காணலாம். அவர்கள் சலிக்காமல் உழைப் பதையும் காணலாம். காமம் இந்திய வாழ்க்கைக்கு முரண் கொண்ட தாகும்; தத்துவத்துக்கு விரோத மாகும்; இயல்புக்கு ஒத்ததல்ல. ஹிந்துக்களின் பொதுக் குடும்ப வாழ்க்கையை நன் கறிந்தவர்கள், பொதுவாக ஹிந்துக்களுக்கு புணர்ச்சி சந்தர்ப்பங்கள் மிகச் சில வேயாகும் என்பதை நன்கு அறிவார்கள். பொதுக் குடும்ப வாழ்க்கையும் வைதிக மனப்பான்மையும் சேர்ந்து கொண்டால், ஹிந்து ஒருவனுக்கு ஆண்டுக்கு, இரண்டொரு சந்தர்ப்பங்கள் புணர்ச்சிக்காக ஏற்படும். பொதுக் குடும்ப

வாழ்க்கைக் கட்டை மீறி, (வைதீக) சுகாதார விதிகளைப் புறக் கணித்து, தனிக் குடும்பம் நடத்தும் இந்தத் தலை முறை இந்தியர்களிடம் மேயோ கூறிய காம உணர்ச்சி, ஒருக்கால் இருக்கலாமோ, என்னவோ? அதையும் நிச்சய மாய்ச் சொல்ல முடியாது. பொதுக் குடும்ப வாழ்க்கை அழிக்கப்பட்டது ஆங்கில ஆட்சியின், பொருளாதார நிலைமை யின் பயனாகும். எனவே, இந்தியர்களிடம் மேயோ கண்ட காம உணர்ச்சி உண்மை யானால், அதையும் ஆங்கில ஆட்சி யின் பயனாகத் தான் கொள்ள வேண்டும். எனவே, இந்தி யர்களின் அடிமை மனப் பான்மை இதனால் நிகழ்ந்தது எனக் கூறுவது தவறு. அடிமைத் தனத்தி லிருந்து, காமப் பித்து பிறந்தது என்று கூறுவது ஒருவகையில் உண்மையாகும்.

ஐம்பது வயதுள்ள தார மிழந்த ஆண்கள் சிறு பெண் களை மணப்பதைப் பற்றி மேயோ வருந்துகிறார். நாமும் வருந்து கின்றோம். பெண்ணுக்குப் மறுமணம் ஏற் படின், இந்தத் துன்பம் ஒழிந்து போய் விடும். அல்லது மறு முறை, ஆண்களும் விவாகம் செய்துகொள்ளலாகாது என்று விதி செய்யப்படுதல் வேண்டும். காதல் மணங்கள் நிகழு மாயின், மறுமணப் பேச்சு நாட்டில் உலவமாட்டாது. ஆனால் அது நேரும் வரையில் மறுமணத்தை நிறுத்தி வைப்பது தகாது. வைதீகர்கள் இதை ஆட்சேபிக்கலாம். ஆனால் இயற் கைக்கு ஒவ்வாத குருட்டு வைதீகம் அறிவால் ஏற்கப் பட முடியாது. பரம்பரை வைதீகத்தில் நலமிருப்பின் கொள்ள லாம். நல மில்லாவிடின், வைதீகத்தை எற்று, சொந்த அறிவை இந்தியன், சிறப்பாக ஹிந்து, இழப்பது தகுதி யுள்ள தல்ல.

நெஞ்சழுத்தம் இல்லாதவனுக்கு நரம்பு வலிமை இருக்காது. உயர்ந்த கருத்துக்களைத் தழுவிய உணர்ச்சியின் மூலமாய், நரம்பின் உரம் ஏற்படுகின்றது. காம உணர்ச்சி நரம்பை பலவீனப் படுத்துகின்றது என்பதை அனுபவ மூலமாய் யாவரும் கண்டு கொண்டிருப்பார்கள். தான் சாவதற்கு எவனுயினும் வழிதேடிக் கொள்ளுவானு, கொள்ளலாமா? எனவே மேயோ கூறுவது உண்மையாயின் அதை நீக்கிக் கொள்ள, இந்தியர்கள் அனைவரும் ஒருமனப்பட்டு உழைத்தல் வேண்டும். ஆனுல் ஒன்று கூற விரும்புகின்றேம். விகார உணர்ச்சி ததும்பும் ஆங்கில நவீனங்களின் மொழி பெயர்ப்பு மூலமாயும் சினிமாக் காட்சியின் மூலமாயும் தனிக்குடும்ப வாழ்க்கையின் காரணமாயும், இந்தியர்களின் உள்ளம் தற்போது தடுமாற்றம் அடைந்து வருகின்றது.இதை நம்மவர்கள் நன்கு கவனித்தல் வேண்டும். மேயோ கூறும் குறையை நிவர்த்தி செய்வதற்கு அவசரப்பட்டு எவரும் எதுவும் செய்யலாகாது. இளம் பெண் தாய்மார்கள் படும் பிரசவ வேதனையை விபரமாய்க் கூறினுலொழிய, அதை எவரும் ஊகம் செய்து கொள்ள முடியாது, என மேயோ கூறுகின்ருர். விபரமாய்க் கூறினுலும், அனுபவ மில்லாத ஆண்கள் அறிய முடியாது.

இனி சிவ லிங்க அமைப்பையும் வைணவர்களின் நாமத்தையும் முறையே ஆண்குறி, பெண் குறிச்சின்னம் எனக்கூறி மேயோ நகைக்கின்ருர். ஹிந்து பரம்பரையில் பிறந்து வளர்ந்த எத்தனை பேர்களுக்கு, சிவலிங்கத்தாலும் நாமத்தாலும் கேவலமான உணர்ச்சிகள் எழுகின்றன, அல்லது எழுந்திருக்கின்றன? கிருஸ்தவர்கள் தங்கள் கழுத்துக்களில் அணிந்திருக்கும் சிலுவையும் ஏனைய சமயச் சின்னங்களும் புணர்ச்

சிப் பொருள் கொண்டே ஆரம்பம் பெற்றிருக்கின்றன என "சக்கரத்தின் சிலுவையின் மர்மம்" என்று பிரான்ஸிஸ் ஸ்வைனி அவர்கள் எழுதி யிருக்கும் நூலில் எழுதப் பெற்றிருப்பதாகக் கூறப் படுகின்றது. சிலுவையைக் கண்டதும் எவருக்கும் காம உணர்ச்சிகள் தோன்றுவதில்லை. ஏசுவின் தியாகமே கண்களில் படுகின்றது. லிங்கத்தையும் நாமத்தையும் பார்த்துவிட்டு எவரும் மேயோவைத்தவிர கேவலமான உணர்ச்சி கொள்ளவில்லை. மேயோவிற்கு மனோவிகாரம் ஏற்படவே பொருள் விகாரமும் தோன்றி யிருக்கின்றது. சீர்திருத்தக்காரர்கள் கூட பண்டைத் தொடர்பை அறவே ஒழிக்க முடியாது. சுவாமியும் அம்மனும் கூடிக் கலவிசெய்யும் வகைகள் விசித்திரப் பாட்டுக்களில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன வென மேயோ கூறுகின்றார். அத்தகைய பாட்டுக்கள் தமிழ் நாட்டில் இல்லை யெனவே கூறலாம்.

காமத்தை ஒழுங்கு படுத்தத் தோன்றிய ஏற்பாடு கலியாணமாகும். எனவே கலியாணத்தைக் காமத்தின் சின்னமாக எவரும் கருதுவார்களா? கலியாணம் இன்றியமையாதது என்று தான் கூறப்பட்டு வருகின்றது. கலியாணத்தின் சிறப்பான தொழிலான புணர்ச்சி மறைத்துக் கூறப்படுவதன் காரணமென்ன? அதை யறியாமல் புறச்சின்னங்களை ஒரே அடியாக வெறுத்துப் பேசுவது தகாது. விஷத்தையும் மருந்தாக, மாற்றாக உபயோகப்படுத்துவதில்லையா? எந்தப்பொருளையும் நற்பயனைக் கருதி சில குறிப்பிட்ட முறைகளில் உபயோகப் படுத்தலாம் என்று சாக்தர்கள் கூறுகின்றார்கள். சாக்தர்கள் கூறுவதில் உண்மை யுண்டு என பல நூறு பக்கங்கள் கொண்ட, நூலில் சின்னங்களின் தேவைகளையும், சாக்தர்களின் தத்துவங்களையும் ஸர் ஜான் உட்ராப்

என்பவர்—கல்கத்தா ஹைக்கோர்ட்டு நீதிபதிகளில் ஒருவரா யிருந்தவர்—எழுதியிருக்கிறார். எனவே விசாரிக்காமலே சாக் தர்களையும் அவர்கள் கலவி சம்பந்தமாய்க் கூறுபவற்றையும் தீர்ப்புச் சொல்லுவது பிழையாகும்.

இந்திய சட்ட சபையில் பெரும்பான்மையோர் ஹிந் துக்கள் என்பது குறித்து வருந்துவது போலவும் அத ஞலேதான் சீர்திருத்தங்கள் விரைவில் செய்யப்பெறவில்லை என்பது போலவும் மேயோ எழுதியிருக்கிறார். இந்தியாவில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பான்மையோராயிருப்பவர்கள் ஹிந்துக்களாயிருக்கும்பொழுது, சட்டசபைகளில் அவர்கள் தான் பெரும்பான்மை கொண்டு இருத்தல் முடியும். தவிர வும், தனிவாக்காளர்தொகுதி இருக்குமளவும், அந்தந்த வகுப் பைச்சேர்ந்தவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆபா சச் சித்திரங்கள் கோயில் தூண்களில் செதுக்கப்பெற்றிருக் கின்றன என்று மேயோ வருந்துகிறார். நக்ன (ஆடையில்லாத) படங்களை எழுதுவது உயர்வான சித்திரக் கலையாக மேநாட் டில் இப்பொழுது கருதப்பெற்று வருகின்றது. ராயல் அகாட மியார் வெளியிடும் சித்திரப்பட நூலில், பல சித்திரங்கள் (முண்டமாக, ஆடையில்லாமல்) நான் பார்த்திருக்கிறேன். இந்த சபையார் ஆங்கில நாட்டு மன்னர்பிரான் ஆதரவைக் கொண்டதாகக்கூறப் படுகின்றது. ராயல் அகாடமியாரின் கலைச்சுவை நேரியதா அல்லது நோய் கொண்டதா? நோய் கொண்டதாயின், மேயோ தமது இனத்தாரின் சுவையை ஏன் குறை கூறவில்லை? பிற்போக்கும் கேவலமும் தழுவிய கருத்துக்களை ஆதரித்துப் பேசும் நோக்கம் எனதல்ல. அதாவது, இந்தியர்களின், சிறப்பாக ஹிந்துக்களின், பழக் கங்கள் யாவற்றையும் குறை கூறவேண்டும் எனக் கருத்துக்

கொண்டால், அது முடியாத காரியமல்ல. மேநாட்டார்களின் பழக்க வழக்கங்களை என்னுல் மிக நயமாய் அனுதாபம் காண்பிப்பது போல பாவனை காட்டிக் கண்டிக்க முடியும். ஆனுல் அது முறையாகாது.

> "நாட்டின் பல பகுதிகளில்" காம உணர்ச்சியினிடையே வளர்க்கப் பெற்ற பையன் பார்வைக்கு நன்ருயிருந்தால், வயது வந்தவர்களின் திருப்திக்காக உபயோகப்படுத்தப்படுவான். அல்லது விபசாரம் செய்வதற்காக, கோயிலில் சேர்க்கப்படுவான். இதில் பெற்ரேர்கள் தீமையைக்காண்பதில்லை. அது மட்டுமா? தங்களுடைய பையன் பிறர், (நோக்குக்கு) உரிய வனுயிருக்கின்ருனே, எனக்களிப் படைகின்றனர்".

இது அவதூறு. உண்மையா? நாட்டின் பல பகுதிகளில் இந்த வழக்கம் நடைபெற்று வருகின்றதாம்! என்ன பொய்? விபசாரம் செய்வதற்காக, கோயிலில் இணைக்கப்படுகின்ருனும்; பெற்ரேர்களுக்குச் சந்தோஷமாம்! இத்தகைய பழக்கம் தமிழ் நாட்டில் இல்லை. இந்தியாவின் நாகரிகப் பகுதிகளில் இருக்கமுடியாது. மேயோவின் கற்பனை உலகத்தில், இதுவும் இருக்கும், எதுவும் இருக்கும். எவராலும் அதை மறுக்கமுடியாது. மேயோ கேவலமான குறிப்புக்களை எழுத்தில் எழுதுவதால், நாமும் அவைகளைப் பற்றி குறிப்பிட நேருகின்றது. இல்லாவிடின் எனது உள்ளம் கூசும் என்று நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வீட்டைப்பற்றிக் கேவலமாய்ப் பேசிவிட்ட மேயோ, ஹிந்துக்கள் கும்பிடும் கோயிலை மிகுத்து வைக்கமுடியுமா? ஹிந்துக்கள் தங்கள் தத்துவத்தை சமயத்தை, நாகரிகத்தை, பேச்சுதோரணையை, வாழ்க்கைமுறையை, பண்டைத் தொடர்பை, அறவே மாற்றிக் கொண்டாலொழிய, அவர்களுக்கு உய்வு இல்லை என்ற தீர்மா

னத்துடன் இந்தியாவில் காலடி வைத்த மேயோ, ஹிந்துக்களின் எந்த அமைப்பை அல்லது பழக்கத்தைப் புகழ்ந்து பேசமுடியும்?

இளம்பிராயம் தொட்டே, ஆண்குழந்தைகளும் பெண் குழந்தைகளும் சிற்றின்ப நுகர்ச்சிக்கு, இந்தியாவின் பலபகுதிகளில், பெற்றோர்களினலே பயிற்சி செய்விக்கப்படுகின்றார்கள் என்றும், அதற்குரிய அடையாளங்களை அக்குழந்தைகளின் உடல்களிலே தாம் கண்டதாகப்பல டாக்டர்கள் கூறினர் என்றும் மேயோ எழுதியிருக்கிறார். திடீர் திடீரென்று, இந்தியாவில் எவரும் பார்த்திராத, எவரும் நம்பத்தகாத செய்திகளை மேயோ தூக்கிப் போடுகின்றார்கள். எனவே, மேயோ சுற்றிப்பார்த்த நாடு இந்தியாதானே என்று ஐயுற வேண்டியிருக்கிறது. அராபிநாட்டுக் கதைகளிற்கூட, மேயோ கூறும் கற்பனைகளைக் காணமுடியாது. போக்காக்ஷியோ எழுதிய டேகமரான் என்ற நூலிலும் காண்டலரிது. (சிற்றின்ப நுகர்ச்சி சம்பந்தமாக, இந்த இரண்டு நூல்களிலும் கற்பனைகள் நிறைந்திருக்கின்றன). தொடர்ந்து, தொடர்ந்து, மேயோ இவைகளைப் பற்றிப் பேசுவதில், சிறப்பான சில காரணங்களிருக்க வேண்டும். ஒரு வேளைச் சோற்றுக்குத் திண்டாடும் தொழிலாளர்கள், ஏழைக் குடியானவர்கள், மேயோகூறும் காம உணர்ச்சியைக் கனவிலும் கண்டறியார்கள். ஆங்கிலக் கல்விபயிலும் இந்தியர்களின் ஜீவதாது, தாங்கள் பயிலும் கல்வி முறையின் தன்மையினல் ஒடுக்கமடைந்து வருகின்றது. அவர்களுக்கும் மேயோ மொழியும் காமத்துக்கும் வெகுதூரம். பரம்பரைப் பணக்காரர்களிடம் மேற்கூறிய குறை இருக்கமுடியாது. அவர்கள் உடல் அதற்கேற்றதல்ல. யாரை நினைத்து,

மேயோ கொடிய அவதூறு எழுதியிருக்கின்றாரோ, தெரிய வில்லை.

ஹிந்து ஒருவன் புத்திரனை வேண்டுகின்றான். "தகப்பன் இறந்த பிறகு கிரியைகள் செய்வதற்கும், இறந்த தகப்பனுடைய மண்டையோட்டைப் பிளப்பதற்கும் பிள்ளைவேண்டுகின்றான் ஹிந்து" என்று மேயோ எழுதியிருக்கிறார். இறந்தவன் துறவியாயிருந்தாலொழிய, மண்டை யோட்டைப் பிளக்கும் வழக்கம் இந்தியாவில் இல்லை. துறவியாயின், யார் வேண்டுமானாலும் தேங்காயினால் மண்டையைப் பிளக்கலாம். இதுதான் இந்தியாவில் நடைபெற்று வரும் வழக்கம். இதைச் சர்தாரண, தினசரி, இல்லற சம்பந்தமான வழக்கம் போல மேயோ கூறுகின்றார். தாம் எழுதுவதற்குத் தக்க ஆதாரம் வேண்டும் என்ற பொறுப்பை மேயோ உணர்ந்தாலல்லவோ? இந்தப் பொய்யை ஒருவாறு விட்டுவிடுவோம். இதற்கடுத்தாற்போல மேயோ எழுதியிருப்பதை என்னென்று கூறுகிறது?

"(புத்திரன் வேண்டும்) என்றகாரணத்தினாலும் இயல்பாயுள்ள நோக்கத்தினாலும், பையன் தனக்குத்திறன் வருமுன்னரே, புணர்ச்சிக்குத் துவங்கிவிடுகின்றான்; புணர்ச்சி அவனுடைய மனைவி அல்லது மனைவிகளுடன் மட்டுமல்ல. இதைப் பொதுப் பழக்கமும் பொது ஜன அபிப்பிராயமும் தடுப்பதில்லை."

நண்பர்களே! இதைப் படித்துப் பார்த்தீர்களா? உங்களுடைய உள்ளம் எந்த நிலையில் இருக்கிறது என்று மேயோவுக்குத் தெரிவிப்பீர்களா? இந்தக்குறிப்பில் பரந்து கிடப்பனவற்றைப் பாருங்கள். சிறுபையன், தனது இளம்பிராயம் நீங்குமுன்னரே, ஒன்றுக்கதிகமான மனைவிகளை மணக்கின்றான்.

அவர்களைப் புணர்கின்றான்; அதுவும் போதாமல், ஏனையோரையும்நோக்குகின்றான். இந்தப் பழக்கத்தில் யாதொரு குற்றத்தையும் பொது ஜனங்கள் காண்பதில்லை, ஆதரிக்கவும் செய்கின்றார்கள். புணர்ச்சித் திறன் ஏற்படு முன்னரே, கலவிக்குத் துவக்கும் பையனுக்கு ஒரு மனைவி போதவில்லையாம்; பின்னர் மனைவிகள் போதவில்லையாம்! மனைவிகளும் போதாமல்,ஏனைய ஸ்திரீகளும் அந்தக் குழந்தைப் பையனுக்கு வேண்டுமோம்! கவனித்துப் பாருங்கள். காம விகார உணர்ச்சிப் பழக்கத்தில் வளரும் இந்தியன் தனது ஜீவதாதுவை இழக்கப் பெறுகின்கிறான் என்று கூறிய மேயோ, அதே மூச்சில் அவனுக்குப் பல பெண்டிர்கள் தேவை, ஒருபெண்ணுக்குப் பல ஆண்கள் தேவை என மொழிகின்றார். இது அற்புதமா அல்லது அவதூறு? எது என்று நமக்குத் தெரிய வில்லை. மேயோ எழுதியிருப்பது பொய்என்று மட்டும் தெரியும். பண்டைக் காலத்தில், கண்ணன் பிள்ளைப்பருவத்தில் கோபிகாலீலைகள் நிகழ்த்தியாகக் கூறப்பட்டிருக்கும் கதைகளை மனத்தில் சுவைத்துக்கொண்டு, எழுத்தில் அந்த சுவையை சித்தரித்திருக்கின்றார் போலும்! மேயோவின் எழுத்தினின்றும் கொள்ளக்கிடப்பது யாதெனின், இந்தியாவில் கற்பு அறவே இல்லை என்பதாம். காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாய்த் தோன்றுமாம் ! உண்மை மொழிவதும் கற்பு நிலை தவறாததும்-இவை யிரண்டும் இந்தியாவின் அருந்தனங்கள் என மேயோவின் விகாரமனப்பான்மையைப் பெறாத அன்னியர்கள் கூறியிருக்கின்றார்கள். மேநாட்டுத் தத்துவங்களையும் நூல்களையும் படிக்கும் இந்தியர்கள் உரிமை கொண்டாடி, நபர் சுதந்திரம் வேண்டும், கண்டதைச் செய்ய பாத்தியம் உண்டு எனவாதாடுகின்றார்களே,

அவர்களிடம் மேயோ கூறும் குறை இருக்குமாகில், அதன் பொறுப்பு மேயோவின் இனத்தாரைச்சாரும். ஆனால் ஆங்கிலம் படித்த இந்தியர்கள் தங்கள் உடல்களைச் செவ்வனே பேண வேண்டும் என்று ஆவல் படைத்திருப்பதை நாம் அறிவோம். இளம்பிராயத்திலேயே தாம் தமது மனவியுடன் புணர்ச்சியை விரும்பியதாகக் காந்தி எழுதியிருக்கும் எழுத்தை மேயோ தமக்கு ஆதாரமாகக் கூறுகின்றார். காந்தி தமது 32 வது வயதிலிருந்து கலவியை விரும்பினதேயில்லை. காம உணர்ச்சியைத் தமது உடலினின்றும் உள்ளத்தினின்றும் வெருட்டியடித்து விடார். ஓய்வில்லாமல் வேலை செய்யும் ஆற்றலை காந்தி இப்பொழுது படைத்திருக்கிறார். காந்தியின் இளம் பிராயத்தைக் குறிப்பிடும் மேயோ, காந்தியின் முதுமை வாழ்வையும் குறிப்பிட்டிருக்கலாமே! ஆனால் மேயோ, அவ்வாறு செய்வாரா?

புணர்ச்சி சம்பந்தமாக, தன்னடக்கத்தை வலியுறுத்தும் விதிகள் ஹிந்து சாத்திரத்தில் இல்லையென மேயோ கூறுகின்றார். மேயோவுக்கு இது சம்பந்தமாக, இந்தியர்களின் மனப்பான்மை முற்றிலும் தெரியாது எனக்கூறிவிடலாம். மாதவிடாய் நேரும் முன்னரும் பின்னரும் புணர்ச்சி கூடாது; வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் புணர்ச்சி கூடாது. பல திதிகளிற் கூடாது. விழாக் காலங்களில் கூடாது. புருஷனும் மனைவியும் கலப்பது கூட எவருக்கும் தெரியலாகாது. அவர்கள் உடனுறங்கலாகாது. காக்கை புணர்வதைப்போல இருக்க வேண்டும் என்று கூறுவதுண்டு. ஹிந்து சாத்திரத் திட்டங்களுக்குக் கட்டுப் பட்டு நடக்கும் ஒருவன் தனது மனைவியின் முகத்தை ஆண்டில் இரண்டு, மூன்று தடவைகளுக்கதிகம் பார்ப்பானோ என்பது சந்தே

கம். தனது மனைவியைப் பற்றியே இவ்வளவு கடுமை. பிறன் மனை புகுதலாகாது என்பது நிர்த்தாட்சண்யமான கட்டளை யாகும். மேயோவுக்கு இந்தியர்களின் கிராம வாழ்க்கை தெரியாது. மேநாட்டு நாகரிகப் படுகுழியில் ஆழ்ந்து கிடக்கும் இந்திய நகர வாசிகளிற் சிலரிடம் காணப் பெறும் தீய பழக்கங்களை மேயோ கண்டிருக்கலாம். அதைக் கொண்டு பொது விதி. என்ன அபிபாயம்!

"புணர்ச்சி நோய் வராமல் தற்காப்பு செய்து கொள்ளு வதற்கு, இளமையிலேயே எனக்கு என் தகப்பனுர் கற்பித்து கொடுத்தார்" என்று கீர்த்தி பெற்ற ஒரு ஹிந்து பாரிஸ் டர் என்னிடம் சொன்னுர்."

"பிரம்மசரியம் உங்களுக்கு அவர் சொல்லிக் கொடுத் திருந்தால் உயர்வாயிருந்திருக்காதா என அவரைக் கேட் டேன்."

"அப்படியா? பிரம்மசரியம் முடியாது என்பது எங்க ளுக்குத் தெரியும்"

மேற்கூறிய விநோத சம்பாஷணையை, மேயோ தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறுர். "மோசமான" இந்த சம்பாஷணை யைப்பற்றி நாம் குறிப்பிட்டதே அநாகரிகம் என்று நாம் வருந்துகின்ருேம். ஆனல், மேயோவுக்கு அத்தகைய கூச் சமே யில்லை. ஒருவரையொருவர் நீண்டகாலமாக அறியாத இருவர்—ஒருவர் ஆண், மற்றவர் விவாகமாகாத ஸ்திரீ மேற் கூறிய முறையில் பேசிக்கொள்ளுதல் தகுமா? பிரஸ்தாப கனவானே பாரிஸ்டர்; அவர் வைத்தியரல்ல. மேலும் அவர் மேயோவிடம் வயித்தியம்செய்துக் கொள்ள வந்த நோயா ளியுமல்ல. எனவே தமது இளமைப்பருவந் தொட்டு தாம் செய்த பாபங்களை மேயோ உபதேசியாரிடம் (கிருஸ்தவ

ரைப்போல) ஒப்புக்கொண்டு பாவ மன்னிப்புச் சீட்டுப் பெற, ஹிந்து பாரிஸ்டர் விரும்பினரா? இத்தகைய அநாகரிக சம்பாஷணை நிகழ்ந்திருக்கும் என்றே நாம் கருதமுடியவில்லை. ஹிந்து பாரிஸ்டர் அறிவும் நாகரிகமும் அறவே அற்றவர் என்று காண்பிக்கும் பொருட்டு, இந்தசம்பாஷணை எழுதப் பெற்றிருக்கிறதா? அல்லது மேயோவுக்கு சிற்றின்பப் பேச்சு மட்டும்தான் இனிக்கும் என்று உலகத்தாருக்குத் தெரிவிக்கும் பொருட்டா? எழுத்தில் இத்தகைய அநியாயத்தையும் அநாகரிகத்தையும் ஒரு ஸ்திரீயினிட மிருந்து இது வரையிலும் நாம் கண்டதில்லை. விலைமாதருக்கும் காமாதுரனுக்கும் இடையே நடைபெறக்கூடிய சம்பாஷணை மாதிரியல்லவா இது இருக்கின்றது?

"இத்தகைய விஷயங்களில், நல்லது தீது என்பது கிடையாது. (புணர்ச்சி) முடிவு பெற்றதும், நான் அதை மறந்து விடுகின்றேன். என்னைக்காட்டிலும் அறிவிற் சூழ்ந்த என் மனைவி மனம் நோகாம லிருப்பதற்காக, நான் கலவி செய்கின்றேன். செய்தாலும், செய்யாவிட்டாலும்—விஷயத்துக்குப்பொருள் இல்லை. இவைகள் யாவும் மாயாப் பிரபஞ்சத்தைச் சேர்ந்தவையாகும் என்று பெருங்கூட்டங்களுக்கு உபதேசியரான, பிரபல ஹிந்து சாது ஒருவர் என்னிடம் விளக்கிக் கூறினர்."

மேயோவின் இந்த எழுத்தையும் நாம் சிரமப்பட்டுப் பொறுக்கியெடுக்க வில்லை. "இது பாரிஸ்டர் எழுத்துக்கு" அடுத்த எழுத்தாகும். மேயோவின் மனோ விகாரத்தை நொடியில் தெரிந்துகொண்ட சாது, மேற்கூறியவாறு விடையளித்திருப்பின், அதில் வியப்பு ஒன்றுமேயில்லை. எவரிடத்தும் மேயோவுக்குப் புணர்ச்சிப்பேச்சுத்தானு? நாகரிகம்

அடியோடு இல்லாத ஆண்பிள்ளையும் புணர்ச்சிப்பேச்சை ஒரு ஸ்திரீயினிடம் தானே துவக்குவதில்லை. பெண்ணிற்கு மனோ விகாரம் உண்டு என்று தெரிந்துகொண்டால், ஆண் பிறகு "மூட்டை" அளப்பான். இது உலக அனுபவமாகும். எனவே மேயோ, எத்தகைய மனத்தூண்டுதல்களைக்கொண்டு, இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார் என்பதை நண்பர்கள் எளிதிலே தெரிந்து கொள்ளலாம். ஹிந்து சாது, முதலிலேயே, மேயோவிடம், காம விஷயத்தைப்பற்றி பேசியிருக்க முடியுமா என்பதை, ஹிந்துக்கள் மட்டும் அல்ல, உலக ஆண்மக்கள்கள் யோசித்துப் பார்ப்பார்களாக!

அடுத்த இரத்தினத்தைப் பாருங்கள்

"(சுகமனுபவிக்க) ப்பணமிருப்பின் ஒரு ஹிந்து தனது முப்பது வயதிற்குள்ளாகவே கிழவனாகின்றான். இத்தகைய ஆண்களில் பத்தில் எட்டுப் பேர்கள் (இருபத்தைந்திலிருந்து முப்பது வயதிற்குள்) ஆண் தன்மையற்றவர்களாய் இருக்கின்றார்கள்.

மேயோவின் விகாரக் கற்பனைக்கு எல்லையுமில்லை, ஆதாரமும் கிடையாது எனக் கூறிவிடலாம். எத்தகைய சோதனையின் மூலமாக, மேயோ இந்த முடிவுக்கு வந்தார்கள் என்று கேட்க நாம் ஆவலுடனிருக்கின்றோம். "பணமிருப்பின்" என்ற நிபந்தனைக்குட்பட்டு தாம் கூறுவது முற்றிலும் உண்மை என மேயோ மொழிகின்றார். இந்தியாவிலிருக்கும் விலைமாதருக்குக்குக் கூட இத்தகைய விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் அடக்கமும் கூச்சமுமிருக்கும் எனக் கூறிவிடலாம். மேயோ மேநாட்டு நாகரிகத்தில் தோன்றிய முதிர் க(ன்)னியல்லவா?

கிராம விவசாயிகளிடம் மேற்கூறிய குறையில்லை என்கிறார் மேயோ. தாம் எழுதிய தன் உட்பொருளை அறியாமலே மேயோ எழுதியிருக்கவேண்டும். நகரத்தில் வசிப்பவர்களும் தனவந்தர்களும் தான் இந்தியாவில் மேநாட்டு நாகரிகத்தை ஏற்று வாழ்பவராவார். எனவே மேயோ மேலே கூறியிருப்பது உண்மையானால், அது இந்தியாவில் வழங்கும் மேநாட்டு நாகரிகத்தின் போக்கைக் குறை கூறுவதாகும். இந்திய அரசாங்கம் தவறான முறையில் நடைபெறுகின்றது என்பதற்கு மேயோவின் இக் கூற்று போதிய சான்றாகும். உடலுழைப் பற்ற தனவந்தர்களுக்கு வாழ்க்கையில் சிற்றின்பநுகர்ச்சியைத் தவிர வேறு தூண்டுதல் இல்லையாயின் அந்தக் குறை யாரைச் சேர்ந்ததாகும்? ஜனசமூகவாழ்க்கையை அமைத்து ஒழுங்குப் படுத்தி, முன்னேறச் செய்யும் பொறுப்பைக் கொண்ட அரசாங்கத்தின் குறையாகும். ஆசை மனிதர்களின் பிறவிக் குணமாகும். ஆசை நல்ல வழியிலும் செல்லலாம்; தீய பாதையிலும் போகலாம். நேரிய பாதையில் ஆசை செல்லுமாகில், அதற்கு செட்டு, தொண்டு, ஆக்கம் என்று பெயர் வைப்பார்கள். ஏனைய பாதையில் சென்றால் அது தூற்றப்படும். ஆசைக்கு நற்பாதைக் கதவு திறக்கப்படாமல் அடைக்கப்பெறின், அது தீய வழியிலேதான் செல்லும். ஆசை என்பது உயிர்ச்சத்தாகும், உயிரை ஒழுங்கு படுத்தலாம்; அடக்க முடியாது. இந்தியாவின் நகரவாசிகளும் தனவந்தர்களும் தீய வழியில் சென்று தங்கள் உடல்களைக் கெடுத்துக் கொள்ளுவார்களாயின், நவீன நகர வாழ்க்கை முறையை அமைத்த மேநாட்டாரும், பணப் பெருக்குக்கு வழி காட்டாத இந்திய அரசாங்கத்தாருமே இதற்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

குற்றவாளிகளான மேயோவும், அவரைச் சேர்ந்தவர்களும் இந்தியர்களின் பேரில் குற்றப்பத்திரிகை படிப்பது, புண்ணில் கோல் எடுத்துக் குத்துவதை ஒக்கும்.

பிள்ளைப்பேறு ஹிந்துவின் சதாரண ஆசையாகும். மலடு ஆண்களில் இருக்கலாம், பெண்களினு மிருக்கலாம். பெண்கள் தான் மலடாயிருத்தல் கூடும் என்ற தவறான எண்ணத்துடன், இந்தியாவிலிருக்கும் ஆண்கள், முதன் மனைவியிருக்கும் பொழுதே, மறு விவாகங்கள் செய்கின்றனர் என்பதை மேயோ குறிப்பிட்டிருக்கிறார். இந்தத்தீய பழக்கம் இருக்கின்றது என்பதை குனிந்த தலையுடன், நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம். பெண்களுக்கும் மறுமண உரிமை இருக்குமாகில், மலட்டுத் தன்மை யாரிடமிருந்தது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இந்த உரிமையில்லாத வரையிலும், ஆண்கள் ஒரு தலைப்பக்கமாக முடிவைச் செய்து கொள்ளுவது விசனிக்கத்தக்கதாகும்.

பிள்ளைப் பேறுக்காக கோயிலில் ஆண்டவனிடம் வேண்டிக்கொள்ள சதிபதிகள் செல்லுவதுண்டு. இந்தப் பழக்கத்தை, எத்தகைய கேவலமான முறையில், மேயோ எழுதியிருக்கிறார், பாருங்கள்.

> "நீண்டகாலமாக, மனைவி கர்ப்பம் தரிக்காவிடின், கணவன் கடைசியாக, ஒரு உபாயத்தைக் கைக்கொள்ளுகின்றான். தன்னுடைய மனைவியை, நிவேதனங்களுடன், கோயிலுக்கு அனுப்பலாம். காலம் கழிக்காமல், சில ஜாதியார்கள் கலியாணமான முதனாளிரவே, அனுப்புவது வழக்கமாம். கோயிலில், பகலில், பிள்ளைப்பேறுக்காக மனைவிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். இரவில் கோயிலுக்குள்ளாகவே, படுத்துறங்க வேண்டும். விடிந்ததும், இருட்டில் தனக்கு நேர்ந்

தைைப் பூசாரியிடம் சொல்லுகின்றாள். நல்லது, மகளே! அது ஆண்டவனுகும்"

மேயோ மேலே பொறித்திருக்கும் எழுத்தின் பொருளை நேயர்கள் அறிந்திருப்பார்கள் என நினைக்கிறேன். "நீண்ட காலமாக கர்ப்பமாகாத பெண், தனது கணவனுடைய அனுமதி பெற்று கோயிலில் விபசாரம் (தனக்குத் தெரியாமலிருக்கலாம்) செய்கின்றாள்" என்று மேயோ குறிப்பிட்டு, தமது உள்ளத்தில் கொண்டிருக்கும் ஆபாச நோக்கத்தை உணர்த்துகின்றார். நாகரிக விபசாரத்திற்குக் கோயில் மறைவிடமாக, பல நூற்றாண்டுகளாக இருக்கின்றது என்றும் இத்தகைய குற்றத்துக்கு ஜன சமூதாய முழுதும் உடந்தையாயிருக்கின்றது என்றும் மேயோவின் எழுத்து மூலமாய்க் கொள்ளக்கிடக்கின்றது.

> "கோயிலின் நற்பெயரை (பிள்ளைவரன் கொடுக்கும் கீர்த்தியை) க் காப்பாற்றும் பொருட்டு, நல்ல உடல் வலியுள்ள குழாத்திலிருந்து, இத்தகைய பூசாரிகள் ஜாக்கிரதையுடன் பொறுக்கி யெடுக்கப் பெறுகின்றனர். எல்லோருக்கும் இது தெளிவாகத் தெரியும்."

போதுமா? இது சம்பந்தமாக மேயோ எழுதிய அவதூறுகள் இன்னும் வேண்டுமோ? இதற்கு நான் எழுத்து மூலமாய் விடையளிப்பதில் பயனேயில்லை. அன்னியர்கள் கண்டபடியெல்லாம் பேசுவதை நிறுத்தவேண்டுமானுல், இந்தியர்கள் இனிபொரு கணமும் அடிமை வாழ்வு வாழ்தல் கூடாது என்று தீர்மானம் கொள்ளவேண்டும். அலங்கார எழுத்துக்களாலும் அவதூறுக் கூற்றுக்களாலும் எந்த நாட்டின் வாழ்வும் உயர்ந்து விடவும் முடியாது; கெட்டு விடவும் முடியாது. மேயோவின் குறிப்புகள் இந்த நூலில் எடுத்தாளப்பட்டதன்

நோக்கத்தை, நேயர்கள் தெரிந்து கொள்ளுதல் நலமாகும். எல்லாவற்றிற்கும் சமாதானம் எழுத முடியாது; எழுதுவதிலும் பயனில்லை. அன்னியர்கள் இந்தியர்களை எவ்வாறு மதிக்கின்றார்கள் என்பதை எடுத்துக் காண்பிப்பதற்கு, இவைகள் எடுத்தாளப் பெற்றன என்பதை நண்பர்கள் அறிவார்களாக! அவைகளைப் படிப்பதனின்றும் எழும் உணர்ச்சி நாட்டின் முன்னேற்றத்துக்குப் போது மானதாகும்.

"கர்மபயன், கிஸ்மத்து" என்று இந்தியர்கள் ஓலமிடுகிறார்கள், என மேயோ கூறுகின்றார். மேயோ, "இந்தியத் தாய்" என்ற அவதூறுக் களஞ்சியத்தைத் திறந்து விட்டதே இந்தியர்களின் கர்மபயனல்லவா? அன்னிய ராட்சிக்குள் இந்தியர்கள் அடிமைப்பட்டுக் கிடப்பதனாலேதான், மேயோ போன்றார்க்கு அவதூறு எழுத, எளிதாகி விட்டது. எல்லா நாட்டாரும், தத்தம் கர்மத்துக்கு ஏற்ற பயனை அனுபவிக்காமல், தப்பித்துக்கொள்ள முடியாது. இது "ஸயன்ஸ்" காரர்களின் முடிவாகும். இது வீணர்களின் கற்பனையல்ல. கர்ம பயனைப் பற்றி பின்னர் விரிவாகக் கூறப்படும்.

"மிகைபடத் தோன்றியிருக்கும் காம உணர்ச்சியின் மூலமாகத்தான், இந்தியர்கள் அறிவிலும் செல்வத்திலும் ஏழைகளாக இருக்கின்றார்கள் என்பதை எனது நாட்டார் உணர்வதில்லை" என்று பம்பாய்ப் பார்ப்பன டாக்டர் ஒருவர் மேயோவினிடம் கூறினாராம். எல்லா நாடுகளிலும் தொழிலாளர்கள் பெரும்பான்மையோராயுள்ளவர்கள். அவர்கள் ஏழைகள்; படிப்பும் அதிகமாயிருக்கப் பெறாதவர்கள். மே நாட்டிலிருக்கும் ஏழைத் தொழிலாளர்களின் நிலைமைக்கும் இதே சமாதானத்தைப் பார்ப்பன டாக்டர் கூற முடியுமா? ஏனைய நாட்டுத் தொழிலாளர்களின் வறுமைக்

கும் அறிவுக் குறைவுக்கும் எத்தகைய காரணங்கள் கூறப் படுமோ, அதே காரணங்களை இந்தியர்களின் பொதுவான நிலைமையைப் பற்றிக் கூறலாம். பார்ப்பன டாக்டர் வேற்று நாடுகளுக்குச் சென்றதில்லை போலும்! அந்நியர்களுக்குப் பற்களைக் காண்பிக்கும் அடிமை இந்தியர்களைத் தமக்கு ஆதரவாக, மேயோ பொறுக்கி எடுத்திருப்பது கட்சிச்சார்பு கொண்டல்லவா ?

பார்ப்பன டாக்டரின் கூற்றை (நடந்ததோ, என்னவோ யார் கண்டார்கள்) மகிழ்வுடன் ஏற்று, மேயோ ஆனந்தக் கூத்தாடுகின்றார். கோழைத்தனம் மலிந்த நாடு இந்தியாவாயின், 60000 ஆங்கிலச் சிப்பாய்களை நினைத்து பயந்து, அந்நிய நாட்டார்கள் இந்தியாவின்பேரில் படை எடுக்காமல் சும்மா இருக்கமாட்டார்கள். சென்ற ஐரோப்பியப் போரில், இந்தியச் சிப்பாய்கள், தமது வீரத்தனத்தின் பொருட்டு, அன்னியர்களால், பொறுப்புள்ளவர்களால், புகழ்ந்து பேசப்பட்டதை, மேயோ அறியார்போலும்! அறிந்திருந்தாலும், அதை ஏன் அவர் எழுதவேண்டும் ? அவதூறு எழுதத் தீர்மானங் கொண்ட அவர், இந்தியர்களின் உயர் குணங்களை அறிந்து கொள்ள வேண்டுமோ? வக்கீல் ஒருவர், எதிர்க் கட்சியின் உண்மைகளை ஏற்றுக் கொள்ளுவாரா ?

"புல்லடிமைத் தொழில் பேணிப் பண்டு
போயின நாட்களுக்கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத்தூ என்று தள்ளி"

வாழவேண்டும் என்று நம்மில் பெரும்பாலர் விரதம் கொண்டார்களாகில், மேயோவைப் போன்றார்களால் உண்டாகும் தொல்லை யிகழ்ச்சிகள், தாமாகவே மறைந்துபோகும்.

இதை யொன்றையே, நாம் அடிக்கடி இந்த நூலில் குறிப்பிட்டுக்கொண்டு வருவோம்.

அத்தியாயம் 5.

விளையாட்டுச் சாமான்களே.

பால்ய விவாகம் இந்தியாவின் சமுதாய வழக்கமல்ல. இளமையிலேயே, பெண்களுக்கு மணம் நடைபெற்றுவிடவேண்டும் என்ற விதியுமில்லை. பழக்கத்தாலும் காலத்தின் தேவையாலும்—தேவை என்று முற்றிலும் கூற முடியாது—சில தீய வழக்கங்கள் இந்திய ஜன சமுதாயத்தில் தோன்றிவிட்டன. தென்னிந்திய பார்ப்பனர்களுக்குக்குள் தான், இளமை மணம் இருந்து வருகின்றது. எனவே இந்தியர்கள் பொதுவாக இந்த வழக்கத்தினுல், தங்கள் உடல் வல்லமையை இழந்து வருகின்ருர்கள் என்று மேயோ பொதுப்பட எழுதி யிருப்பது தவருகும். ஏதேனும் உண்மையான காரணத்தை விடுத்து—ஒரு காரணம் சொல்ல வேண்டுமல்லவா? அவ்வளவுதான். இளமை மணத்தை ஒழிக்க, சட்ட சபைகளில் முயற்சி நடந்ததாகக்கூறி, சட்ட சபை விவாதங்களைப் பற்றியும் இந்திய அரசாங்கத்தாரின் அரசியல் மனப்பான்மையைப் பற்றியும் சிலவற்றை, மேயோ கூறியிருக்கிருர்.

இந்தியர்களின் மத சம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடுவதில்லை என்று மேயோ கூறுகின்ருர். அமுலுக்குக் கொண்டுவர முடியாத சட்டம் இந்திய அரசாங்கத்தாரால் அனுமதிக்கப் பெறுவதில்லை என்றும் மேயோ

கூறுகின்றார். இவ்விரண்டு கூற்றுகளில், முதலில் கூறப்பட்டது அவ்வளவு உண்மை கொண்டதல்ல. இரண்டாவது கூறப்பட்டதில், நூதனம் ஒன்றுமேயில்லை. மதசம்பந்தமான விஷயங்களில் அரசாங்கத்தார் தலையிடுவதில்லை என்பது தவறு என்பதற்கு ஆதாரம் கொடுக்கின்றேன். இந்தியாவில் ஹிந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் முதலிய கூட்டத்தார் இருக்கின்றார்கள். இவர்களின் வாழ்க்கையில், சமயத்தையும், அரசியலையும் ஆசாரச் சீர் திருத்தத்தையும் பிரித்துச் சொல்ல முடியாது. இந்திய ஜன சமுதாய வாழ்க்கையிலும் அரசியலும் மதமும் வேறுபடுத்திப் பிரிக்கப்படவில்லை. இந்திய ஜன சமுதாய அமைப்பின் சிறப்பும் பலவீனமும் இதிலே புதைந்து கிடக்கின்றன. எனவே இந்திய ஜனசமூகத்தில், அரசியல் சம்பந்தமாக சீர் திருத்தத்தை நாடின், அது இந்தியர்களின் சமய வாழ்க்கையைப் பாதிக்காமல் இருக்க முடியாது. விதவா விவாகம் கூடாது என்று சமய நூல்களில் எழுதப் பெற்றிருப்பதாக வைத்துக் கொள்வோம். விதவா விவாகம் ஆசாரச் சீர்திருத்தம் என்று கூறி, அதற்கான சட்டத்தைச் செய்தாலும், அது மத சம்பந்தமாகத் தலையிடுதலாகத்தான் முடியும். விதவா விவாகச் சட்டமொன்றும் ஏற்பட்டிருக்கிறது. இந்திய அரசாங்கத்தார் இந்தியர்களின் சமய வாழ்க்கையில் நுழைந்து கொள்ளவில்லையா? இந்தியர்களின் வாழ்க்கையை அமைத்து ஒழுங்குபடுத்தி வருவது சமய உணர்ச்சியாகும். எனவே இந்தியர்களின் வாழ்க்கையின் போக்கை மாற்ற எண்ணுபவர்கள் இந்தியர்களின் சமய உணர்ச்சியில் கலந்து கொள்ளாமலிருக்கமுடியவில்லை. ஆனால், மத உணர்ச்சியில் தலையிடுவதில்லை என்று அரசாங்கத்தார் கூறுகின்றார்கள். இதன் முடிவு

என்ன? இந்தியர்களின் வாழ்க்கையில், இந்திய அரசாங்கத்தார் சீர் திருத்தத்தை விரும்பவில்லை என்பதாகும். தலையிடுவதில்லை என்று கூறுவதும் தவறு. தலையிடாமலிருந்தாலும், அது பெரும் பிழையாகும்.

அமுலுக்குக் கொண்டுவர முடியாத சட்டத்தை, இந்திய அரசாங்கத்தார் அனுமதிப்பதில்லை என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு கூறப்பெறுவது, இந்திய அரசாங்கத்தாருக்குமட்டும் சிறப்பான தன்மை யென எவரும் கொள்ள வேண்டாம். ஜனநாயகம் செழிக்கும் நாட்டில், பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெறாத சீர்திருத்தம் சட்ட உருவத்தை ஏற்காது. பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்ற சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது கடினமல்ல. சிறுபான்மையோர் பெரும்பான்மை யோரின் மேல் ஆட்சி செலுத்த நினைத்தால், அப்பொழுது சிறுபான்மை யோர், பலாத்காரத்தைக் கொண்டு தாங்கள் ஆக்கிய சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவார்கள். வங்காளப் பிரிவினைக்கால முதல், பொது ஜனங்களின் விருப்பத்துக்கு மாறாகவே, அச்சுச் சட்டம் முதலிய அடக்குமுறைச் சட்டங்கள் யாவும் இந்திய அரசாங்கத்தாரால் ஆக்கப்படியிருக்கின்றன. இந்தச்சட்டங்கள் யாவும் பலாத்காரத்தைத் துணைக் கொண்டு, அமுலுக்குக்கொண்டு வரப்படவில்லையா? அமுலுக்குக் கொண்டு வரமுடியாத சட்டத்தை இந்திய அரசாங்கத்தார் அனுமதிப்பதில்லை என்று மேயோ கூறியிருப்பதற்குப்பொருள் உண்டா? எத்தகைய சட்டத்தையும் பலாத்கார மூலமாய் அமுலுக்குக் கொண்டு வரும் இயல்பும், கொண்டு வரத்தக்க ஆற்றலும் கொண்ட இந்திய அரசாங்கத்தாருக்கு, அமுலுக்குக்கொண்டு

வரமுடியாதது ஒன்றுண்டா? தங்களுக்குத் தேவையான சட்டங்களைச் செய்துகொள்ளுவதில், இந்திய அரசாங்கத்தார் எவருடைய குறுக்கிடுதலையும் பொருட்படுத்துவதில்லை. பொறுப்பின்றி அரசியல் நிர்வாகம் நடத்துவார்கள்; எந்தக் கொடிய சட்டத்தையும் அவர்களால் அமுலுக்குக்கொண்டுவர முடியும். எனவே, மேயோகூறுவது அறவே உண்மையல்ல.

அரசாங்கத்தார் மத விஷயங்களில் தலையிட்டால், இந்தியன் தனது அறிவை இழந்து, பித்துக்கொண்டு கலகம் செய்து, இரத்தத்தைச் சிந்துகின்றான் என்று கேவலமாக மேயோ எழுதுகிறாள். மதஉணர்ச்சி குறுகிய நோக்கம் கொண்டது எனப்பொருள் கூறினால் அதே இனத்தில் தேசபக்தியையும் வைத்து விடலாம். "ஆங்கில அரசாங்கத்தார் சராசரி ஆங்கிலேயனுடைய தேசபக்தி உணர்ச்சியில் தலையிட்டால், அவன் தனது அறிவை இழந்து, பித்துக்கொண்டு, கலகம் செய்து, இரத்தத்தைச் சிந்துகின்றான்" என்று நம்மில் எவரேனும் கூறினால் அதைக்கண்டு உலக அறிவாளிகள் நகைப்பார்களல்லவா? அதைப்போல மேயோவின் சொற்களைக் கண்டு, நாமும் சிரிக்க வேண்டும். பொது ஜனங்களுக்கு எந்தத் துறைகளில் தீவிரமான உணர்ச்சியிருக்கின்றதோ, அந்த உணர்ச்சியை நலம்தரும் வழிகளில் செலுத்துவது நிர்வாகிகளின் செயலாகும். இந்தியர்களின் சமய உணர்ச்சியைச் சீர்திருத்தத்துறைகளில், அரசாங்கத்தார் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு எப்பொழுது செய்ய முடியும்? பொது ஜனவாழ்வின் நன்மை தீமைகளில் முழுதும் கலந்து கொள்ளும் அரசாங்கத்தார் உபயோகப்படுத்திக் கொள்ளமுடியும். பலவகைச்சாக்குகளின் மூலமாய் ஜன சமுகத்தில் புதிய உணர்ச்சியும் சக்தியும் தோன்றும்.

அந்தப்புதிய உணர்ச்சியை, ஜனசமுக நிர்வாகிகள் பொது நலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆங்கில நாட்டில் ''மெத்தாடிஸ்டு'' என்ற கிருஸ்தவ சமயச் சீர்திருத் தக்காரக்கூட்டம் ஒன்று சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்தது. நாட்டில் புதியதொரு உணர்ச்சி தோன்றிற்று. புதிய உணர்ச்சியின் மூலமாய், சிற்சில விடங்களில் கலகமும் இரத்தப் பெருக்கும் நேர்ந்தன. ஆனால் ஆங்கில அரசாங்கத் தார் இக்கூட்டத்தாரின் உண்மையான முற்போக்கு உணர்ச் சியைச் சீர்திருத்தத்தின் பொருட்டு உபயோகப்படுத்திக் கொண்டார்கள். இன்றைக்கு, ஆங்கிலஏழைகளுக்கும் தொழி லாளர்களுக்கும் வாழ்க்கைவசதிகள் ஏற்பட்டிருக்குமானல் அது, ''மெத்தாடிஸ்டு'' கூட்டத்தாரின் உணர்ச்சியின் பயன் என்று கொள்ளுதல் வேண்டும். எனவே, எத்துறையில் ஜன சமுகத்தின் சக்தி பெருக்கடைந்தாலும், அதை அர சாங்கத்தார் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமே யல் லாமல், தலையிடுவதில்லை என்று இந்திய அரசாங்கத்தார் சாக்குச் சொல்லுவதுபோல் சொல்லுவது தகாது. உண்மையி லேயே தலையிடாமலுமில்லை. ஆனல் அதை மறைக்கின்றார் கள். அவ்வளவுதான். அன்னியர்களாய ஆங்கிலேயர்கள் இந் தியர்களின் மத விஷயங்களில் தலையிடுதல் கூடாது என்று கூறப்படின், இந்தியர்களின் சொந்த அரசியலில், அன்னியர் கள் தலையிடுதலும் ஆட்சிபுரிதலும் கூடுமோ?

சட்டசபைகள் விளையாட்டுக் கருவிகள் என்று இந்திய அங்கத்தினர் ஒருவர் கூறியிருப்பது மேயோவால் குறிப் பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, அவைகள் என்ன? இந்தியாவின் உண்மையான அரசியல் நிர்வாகத் திட்டம் திரை மறைவில் செய்யப் பெறுகின்றது. அரசியல் நிர்வாகம்

செய்யும் கூட்டத்தாரை சட்ட சபையின் தீர்ப்புக்களின் மூலமாய் மாற்ற முடியாது. யோசனை கூறும் சபையாகக் கூட அது மதிக்கப் பெறுவதில்லை. ராணுவச் செலவை சட்ட சபை குறைக்க முடியாது. ஐ. ஸி. எஸ் உத்தியோகஸ்தர்களைப்பற்றி சட்ட சபைகள் வாய் திறக்க முடியாது. அரசாங்கத் திட்டங்கள் எதிர்க்கப்பட்டாலும், அவைகள் கவர்னர்களின் "வீடோ" உரிமையால் மீண்டும் உயிர்த்தெழுகின்றன. சட்ட சபைக்கு எஞ்சியதென்ன? பிரசங்கம். சட்டசபை அங்கத்தினர்களுக்கு மிஞ்சக் கூடியதென்ன? பிரயாணப் படி. நாட்டின் உண்மையான வாழ்வைப்பற்றி அரசாங்கத்தார் கவலை கொள்ளாத வரையிலும், அரசியல் பிரசங்கிகளின் மூச்சுக்காற்று வெளியேறும்மேடையாக, சட்டசபை இருந்து வருகின்றது. இது அனுபவத்தில் யாவரும் கண்ட சங்கதியாகும். இதை விரித்துரைக்க வேண்டிய தேவையில்லை.

இளமைப் பருவத்திலேயே மணம் முடிப்பதன் தேவையைக் குறித்து, சில காரணங்கள் மேயோவால் கூறப்படுகின்றன. மணமாவதற்குள் பெண் சமைந்தால், அது ஹிந்துவால் பாபமாகக் கருதப்படுகின்றதாம். நூற்றில் இரண்டு ஹிந்துக்கள் இவ்வாறு கருதலாம். எனவே முதல் காரணம் முக்காலே அரைக்காலும் பொய்யாகும். பொதுக் குடும்பத்திலே பெண் சமைந்தால் (மணமாவதற்கு முன்,) அக் குடும்பத்தில் வசிக்கும் உறவினர்கள் பெண்ணின் பேரில், "கை" வைத்து விடுவார்களாம். ஹிந்து பொதுக் குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஒன்றுமே தெரியாத மோயோ எழுதியிருப்பது அவதூறாகும், பொய் மூட்டையாகும். சமைந்த பெண்ணை அவளுடைய இச்சையைப் பூர்த்தி செய்யாமல் தடுத்து நீண்ட காலம் வைத்திருத்தல், பெற்றோர்களால்

முடியாது எனமோயோ கூறுகின்றார். இந்தியப் பெண்கள் அமெரிக்கப் பெண்கள் அல்ல. நீதிபதி லிண்ட்ஸே அவர்கள் —அவரும் மோயோவின் நாட்டில் பிறந்தவர்தாம்—அமெரிக்கப் பெண்களைப் பற்றி எழுதியிருப்பதை வேறு இடத்தில் குறிப்பிடுவோம். கலியாண மாகாத பெண்கள் பள்ளியில் படிக்கும் பொழுதே பையன்களைத் "தடவி" விடுகின்றார்கள் என்று நீதிபதி லிண்ட்ஸே கூறியிருக்கிறார் என்பதை மட்டும் இங்கே இப்பொழுது எழுதுவோம்.

பொறுப்பற்ற அன்னிய ஆட்சியால் ஆக்கப்பெறும் சட்டங்கள் "போலீசாரால் துர்விநியோகம்" செய்யப்பெறும் என்று சட்ட சபை அங்கத்தினர் ஒருவர் கூறியதை எடுத்துக் காட்டியிருக்கிறார் மேயோ. அரசியல் நிர்வாகம் சட்ட சபைக்குக் கட்டுப்பட்டு நடைபெறாத வரையிலும், அரசியல் நிர்வாகம் ஒழுங்காக இருக்க முடியாது. நீதியையும் சீர்திருத்தத்தையும் நிலைநாட்டத் தோன்றிய சட்டங்கள் யாவும் பொறுப்பற்ற அரசியல் நிர்வாகிகளுக்கும் அவர்களைச் சார்ந்த சிப்பந்திகளுக்கும் பயமுறுத்துக் கருவிகளாகத் துணை செய்யும். இந்த அனுபவம் இந்தியாவைப் பற்றியது மட்டுமல்ல. எந்த நாட்டில் அரசியல் பொது ஜன விருப்பத்துக்கு மாறாக நடைபெறுகின்றதோ, அந்த நாட்டில் சட்டங்கள் நீதிவழங்கப் பெறுவதற்காக உபயோகமாக மாட்டா. ஜனங்களைப் பயமுறுத்த, அவைகள் பெரிதும் உபயோகப் படும். எனவே, சட்ட சபைகள் விளையாட்டுச் சாமான்கள் என்று கூறப்படுவதுதான் உண்மையாகும்.

"துன்பமே இயற்கை யெனும்
சொல்லை மறந்திடு வோம்
இன்பமே வேண்டி நிற்போம்
யாவு மவள் தருவாள்"

மேயோ அல்ல; பாரத அன்னை தருவாள்.

அத்தியாயம் 6.

"இளமை மணம், இளமை மரணம்."

இளமை மணம் இப்பொழுது மிகுதியாக, நமது நாட்டில் நடைபெறுவதில்லை. மேலும் நமது நாட்டாரைப் பற்றிக்கொண்டிருக்கும் தீமைகள் இளமை மணத்தால் தான் தோன்றியவை என்று கூறுவதற்கில்லை என்று நாம் அடிக்கடி எழுதியிருக்கிறோம். ஆனால் இளமை மணத்தை அதாவது பொம்மைக் கலியாணத்தை நாம் ஆதரிக்கவேயில்லை. இளமை மணத்தைப் பற்றிய ஆராய்ச்சி வேறு; இளமை மணத்தை ஆதரிப்பது வேறாகும். மேநாட்டார் நாகரிகத்துக்கு அடித்தளமாயிருந்த கிரேக்கர்களுக்குள்ளும் பெரும் பரப்பு நிலத்தை ஆண்ட பண்டை ரோமர்களுக்குள்ளும் இளமை மணம் வெகு சாதாரண நிகழ்ச்சியாகும். பண்டைக் காலத்தில் மல் போர் செய்த ரோமனுடைய உருவம் சித்திரத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது. அத்தகைய உடல் வனப்புள்ள ஒருவனை இக்காலத்தில் உலகத்தில் காண்டல் அரிது. இளமை மணத்தின் பயனாக ரோமன் மற்போர் வீரனுக்கு இணை காண முடியாத பொழுது, இளமை மணத்தை மட்டும் குறைகூறுவதில் பயனில்லை. மனிதன் உடல் மட்டுமல்ல; அவன் உயிர் மட்டுமல்ல. உயிருக்கு உயர்வாயுள்ள மனத்தை மனிதன் படைத்திருக்கிறான். கோழை மனத்தனுக்கு உடல் வலி யிருந்து பயன் என்ன? இறுதியில் வேண்டுவது உள்ளத்தின் உறுதியாகும். உடல் மூலமாகத்தான் உள்ளம் உறுதிப்படும் என்பது மேநாட்டார்களின் கோட்பாடு. அது அவ்வளவு உண்மை கொண்டதல்ல.

செழுமைக்கு வழியைப்பற்றி எழுதியிருக்கும் ரால்ப் வால்டோ ட்ரையின் என்ற கீர்த்தி பெற்ற அமெரிக்க நூலாசிரியர் "மனத்தை நோக்கினல், மற்றைய யாவும் நோகிவிடும்" என்று எழுதி, அதற்குப் பல சான்றுகள் காண்பித்திருக்கிருர். "இந்தியர்களைப் பற்றிக் கொண்டிருக்கும் நோய் உள்ளத்தின் நோயாகும், உடல் நோய்களல்ல" என்று லோகமான்ய திலகர் கூறியுள்ளார். இந்தியர்களுக்கு மிகுந்து நிற்பது (அதாவது இந்தியர்கள் தேடவேண்டியது) தைரியம் ஒன்றுதான் என்று ஸ்ரீஅரவிந்த கோஷ் வற்புறுத்தியிருக்கிருர். "நமது ஆன்மா அழுகிப் போகாமல், நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்" என காந்தி அடிக்கடி கூறுவதை நேயர்கள் மறந்திருக்கமுடியாது. ராணுவத்தில் வீரத்தைக் காண்பித்திருப்பவர்கள் ரஜபுத்திரர்கள், ஜாட் ஜாதியார், ஸீக்கியர்கள். இவர்களுக்குள் இளமை மணம் மிகச் சாதாரணமாகும். எனவே, இளமை மணத்தை மட்டும் இலக்கு வைத்து அடிப்பது தகாது.

ஹிந்து நாகரிகம் எந்தத் துறையில் இதுவரையில் இயங்கி வந்திருக்கின்றது? அந்த நாகரிகத்தின் குறியென்ன? எந்த இலட்சியத்தை ஏற்று, வாழ்க்கைச் சாதனங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன? சாதனத்தை இலட்சியமாகக் கொண்டு மயங்கலாமா? இந்தக் கேள்விகளுக்குச் சாமாதானம் தேடப் புறப்படாமல், இவைகளை பற்றிய உண்மையை நாடவேண்டும். புணர்ச்சியாது என்பதை நூல்களின் மூலமாக மனிதவர்க்கம் தெரிந்து கொள்ளவில்லை. நூல்கள் தோன்று முன்னரே, அதாவது படைப்புத் தோன்றியகாலந் தொட்டு, புணர்ச்சி இருந்துதான் வருகின்றது. புண்ர்ச்சி புகட்டப்பட்டது மன்று. மனிதனுக்கு,

இயற்கை, இன்தக் கற்றுக் கொடுக்கின்றது. இயற்கையின் தூண்டுதலுக்குப் பணிந்து, மனிதன் படைப்புத் தொழிலில் புகுகின்றான். ஹிந்து நாகரிகம் யாதென்று எழுத்தில் வருணிக்க முடியாவிட்டாலும், அதை வாழ்வில்காணலாம்; அதை நமது தாழ்விலும் காண்லாம். ஹிந்துநாகரிகத்தை உணர்ந்து தெரிந்து கொள்ளலாம்.

அரசியில் மனிதனுக்குத் தேவை. அரசியலின் முறைகள் காலத்தாலும் நிகழ்ச்சிகளின் சூழ்ச்சியாலும் மாறிக் கொண்டே வருகின்றன. அரசியலின் முறைகளால் நேர்ந்த தீமைகளை, அரசியில் என்ற தத்துவத்தின் தலையின் மேல் வைக்கலாகாது. ஹிந்து நாகரிகத்தின் தேவையையும் பெருமையையும் உலகத்தார் அறிய வேண்டுமானல், தற்போதைய ஹிந்துக்களின் அடிமை வாழ்வினின்றும் அறிதல் முடியாது. அரசியலால்நேர்ந்த தீமைகளுக்கு, ஆசாரத்திருத்த மாற்றுக்கள் பயன்படமாட்டா. கற்றுப் புலமைவாய்ந்த தாய்மார்களின் வழித்தோன்றல்கள் கோழைகளாயிருக்கின்றனர். எழுத்து வாசனையே யில்லாத தாய்மார்களிடம் வீரர்கள் தோன்றியுள்ளார்கள். வீரப்பிள்ளைகள் தோன்றாமையால், தாய்மார்களுக்குக்கல்வி தேவையில்லை என்று கூறுவது பொருத்தமுடைத்தாகுமா? ஆசாரச்சீர் திருத்தத்திற்குத் தலைமை ஆசானாகிய திரு. நடராஜன் அவர்கள் (இந்தியன் ஸோஷல் ரிபார்மர் பத்திரிகையின் ஆசிரியர்) பின்வருமாறு எழுதுகின்றார்:—

"அரசியல் முன்னேற்றம் ஆசாரச் சீர்திருத்தத்திற்கு உதவி செய்கின்றது. இது உண்மை. இதற்கு ஏனைய நாடுகளின் சரித்திரம் போதிய சான்றாகும். இந்தியா சுயராஜ்ய வழியில் விரைவில் சென்றால், ஆசார சீர்திருத்தம் விரைவுபடும் என்றும் அரசியலில் முன்னேற்றமில்லாவிடின் ஆசாரச்-

சீர்திருத்தம் தேக்க முற்றுக் கிடக்கும் என்பதையும் (அனு பவத்தினின்றும்) நாம் நிறுத்துக் கூறுகின்றோம்''. இந்தியா வின் முன்னேற்றத்தின் பொருட்டு துவக்கத்தில் செய்யப் படவேண்டியது ஆசாரச் சீர்திருத்தமேயாகும் என்ற முடிவு டன் தமது பத்திரிகையை ஆரம்பித்த திரு.நடராஜன் அவர் கள் இப்பொழுது கூறுவதை, மேயோவுக்குப் பரிசாக அளிக்கின்றோம்.

இந்தியாவிற்கு நேர்ந்த தீமைகள் யாவற்றிற்கும் உண் மையான காரணத்தை அறிதல்வேண்டும். நல்லவன் ஒரு வன் தனது சக்திக்கு மீறி தருமம் செய்தால், அவன் ஏழை யாகி விடுகிறான். அதாவது அளவுக்கு மிஞ்சி, எந்த நற்குண த்தையும் பயிற்சிசெய்தல் கூடாது. பிறர்க்கு தீமை பயக் காத முறையில் கூறப்படுவதுதான் உண்மை என வள்ளுவ னார் வகுத்திருக்கின்றார். அதாவது நற்குணங்களை, ஒன்றை யொன்றில் இசைத்து எல்லாவற்றையும் இணைத்து, வாழ்க் கையை நடத்துதல்வேண்டும். ஹிந்துக்களின் குறையென்ன? அதுஅவர்கள் கொண்ட தனிக் கருத்துக்களில் பகுத்தறிவில் லாத பக்தியாகும். ஜீவகாருண்யம் என்பதைப் பெரிதாகக் கொண்டு, சுகாதாரத்தைக் கவனிக்காமல், பல் துலக்காம லிருப்பார்கள். எவரிடத்திலும் நம்பிக்கை வேண்டுமெனக் கொண்டு, எதிரியிடமும்நம்பிக்கை வைத்துஏமாந்து போவார் கள். உண்மைபேச வேண்டுமென்று கருதி எதையும் (மேயோ விடம் சொல்லி யிருப்பதுபோல) கூறி விடுவார்கள். விருந் தோம்ப வேண்டுமென, தனது சொத்தை, ஒரு ஹிந்து, அடியோடு விரயம்செய்து விடுவான். தாட்சண்யம் காட்ட வேண்டும் என்று கொண்டு, பிறர் செய்யும் கொடுமைகளை யும் மௌனத்துடன் பொறுத்துக்கொண் டிருப்பான். இன்

னும் பெருக்கிக்கொண்டே போகலாம். ஆனால், அதனால் பயன் என்ன? மேயோவுக்கு உண்மை விளக்கம் ஏற்படா விடினும், நமது நாட்டார் தெரிந்துகொள்ள வேண்டும். அரசியல் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அரசியல் சுதந்திரம் தரக்கூடிய உணர்ச்சிகளையும் தன்மைகளையும் இந்தியர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். தங்கள் வாழ்க்கையின் எல்லைகளாகிய நான்கெல்லைகளை வகுத்து சொத்தை நிலைத்துக் கொண்டு, அதன் பொருட்டு உயிரையும் விடவேண்டு மெனத் தீர்மானம் கொண்டால், ஹிந்துக்களை, இந்தியர்களை உலகத்தில் எவரும் ஏளனம் செய்யமாட்டார்கள். அது வரையிலும் தட்டுத் தட்டாக, கப்பல் மூலமாக, உபதேசங் கள் நமது நாட்டுக்கு வந்து கொண்டு தான் இருக்கும். வாய்க்கு வந்தவை யாவையும் பேசுவார்கள். புதிய வைத் தியன் செய்வதுபோல, தமக்குத் தோன்றிய கருத்துக்கள் யாவையும் நமது பலவீனங்களின் காரணங்களாகக் கூறிப் பிரசங்கம் செய்வார்கள். துருக்கியை இப்பொழுது எவரே னும் பழிக்கின்றார்களா? ஜப்பானியனுக்கு யாராகிலும் புத்தி கூறத் துணிகின்றானா?

> "சமையும் சமயத்தில் அல்லது சமைந்தவுடனே, ஒவ் வொரு பெண்ணும் மணமான நிலையிலிருக்கின்றாள்; எனவே சமைந்தது முதற்கொண்டு புணர்ச்சி துவங்கிவருகின்றது எனக் கொள்ளலாம்."

என இந்தியாவின் கானிஷ்மாரி (ஜனத்தொகை) க்கணக் குக் கூறுகின்றதை, மேயோ எடுத்தாண்டிருக்கிறார். தனது சொந்தக் கத்தி பொன்கத்தி யென்று எவரும் குத்திக் கொள்ளுவதில்லை. இந்திய அரசாங்கத்தார் தயார் செய்யும் கானிஷ்மாரிக் கணக்கில் குறையிராது என்று சொல்லுவதற்

குமில்லை. மேற்கூறிய கூற்று எத்தகைய ஆதாரத்திலிருந்து உதயமாயிற்று என நமக்குத் தெரியவில்லை. ஜனத்தொகைக் கணக்கில் நமக்கும் சிறிது பழக்கமுண்டு. விபரங்கள் சம்பந்தப்பட்ட வரையிலும், அந்தக் கணக்கைப்போல,கற்பனை கொண்டது வேறு எதுவுமே இல்லை யெனச் சொல்லலாம். சமைந்தும் சில ஆண்டுகள் வரையில் மணமாகாத பெண்களை நமது நாட்டில் இலட்சக்கணக்கில் காணலாம். எப்பொழுதும் தென்னிந்தியப் பார்ப்பனர்களை மனத்தில் வைத்துக் கொண்டு, இந்தியாவுக்குப் பொது விதி சமைக்கும் வழக்கத்தை மேயோ வைத்துக்கொண்டிருக்கிறார்.

ஆண்டு தோறும் இந்தியாவில் நேரும் மரண விகிதம் பயங்கரமான தென்றும் இது இளமை மணத்தின் பயன் என்றும் மேயோ கூறுகின்றார். மரணத்திற்கு இளமை மணம் ஒரு காரணமாயிருக்கலாம். ஆனல் வைத்திய நிபுணர்கள் பலர் வேறு விதம் கூறுகின்றார்கள். “பெரும்பான்மை யோரான இந்தியர்கள் ஏழைகள். உயிர்ச்சத்து உள்ள உணவு அவர்களுக்குப் போதிய அளவில் கிடைப்பதில்லை. பலநாட்களில்,அவர்களுக்கு ஒருவேளை உணவுகூட நேரே கிடைப்பதில்லை. எனவே, நோய் காணின், அதை எதிர்த்துப் போராடும் ஜீவசக்தி அவர்களிடம்இருப்பதில்லை. அதனலேதான் மரண விகிதம் இந்தியாவில் மிகுதிப்பட்டிருக்கின்றது” என்பது வைத்திய நிபுணர்களின் கூற்றுகும். இதுதான் ஏற்கத் தக்கது என்பது நமது கருத்து.

இளமை மணத்தைக் கவி ரவீந்திரர் ஆதரித்துப் பேசியிருப்பதாக, மேயோ ஒரு பெருத்த அவதூறை எழுதியிருக்கிறார். இளமை மணத்தை கவி எங்குமே ஆதரிக்கவில்லை. ஒரு நிகழ்ச்சிக்கு எது காரணமாயிருத்தல் கூடும் என்று

ஆராயப்புகுமிடத்து, ஒன்றைக் காரணமாகக் கூறினல், ஆராய்ச்சியாளர் அந்த நிகழ்ச்சியையும் அதன் காரணத்தையும் ஆதரிப்பதாகக்கூறுவது நேர்மையாகாது. இளமை மணம் எவ்வாறு துவங்கி யிருக்கவேண்டும் என்பதை ஆராயப் புகுந்த கவி, அதைப்பற்றிய சில காரணங்களை எடுத்துரைத்திருக்கிறர். அதைக் கவியின் முடிவான கருத்து என்று மேயோ பொய்யாக எழுதியிருக்கிறர்.

மணத்தின் நோக்கம்தான் என்ன? காம உணர்ச்சியை விகார எல்லைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்காமல், கூடுமான வரையில் குறைத்து, ஒழுங்குபடுத்தும் நோக்கங்கொண்டே, பண்டை ஹிந்துக்கள் மண முறைகளை வகுத்திருக்கின்றனர்கள். பிள்ளைப் பேறு என்ற ஆசையையும் தேவையையும் ஊட்டினல், காம விகாரம் குறையும் என்று எண்ணினர்கள். காம விகாரம்கொண்ட ஆணே, பெண்ணே, இல்லறத்தைச் செவ்வனே நடத்துவதில்லை என்பதை யாவரும் அறிந்திருக்கிறர்கள். மேநாட்டில் இப்பொழுது நேர்ந்து வரும் விவாகரத்துக்களைக் காணின், அது பயங்கரமாயிருக்கும். விவாகரத்து மூலமாய் ஜனசமூகத்தின் உணர்ச்சி எத்தகையத் துறையில் செல்லும் என்றும், எத்தகைய குழப்பம் ஜன சமூகத்தினிடையே உண்டாகும் என்றும், ஐரோப்பிய நாடுகளின் சரித்திரத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். 1924-ம் ஆண்டில் அமெரிக்கா ஐக்கிய மகாணங்களில் நடைபெற்ற மணங்கள் ஆயிரம் என்று வைத்துக் கொள்ளுவோமானல் அதே ஆண்டில் விவாகரத்துக்கள் ஐந்நூறு நேர்ந்திருக்கின்றன. இந்த நிகழ்ச்சி பயங்கரமானதல்லவா? பகிரங்கமாகவே கற்பை இழப்பதற்கு அமெரிக்காவில் விவாகரத்து சட்டமூலமாய் இடமிருக்கின்றது என்று கொள்ளச்

இடக்கின்றது. விவாக ரத்துச் சட்டம் சில நெருக்கடி சமயங்களில் உபயோகப் படுத்தப்படவேண்டும். "நெருக்கடிக் கருவியை" சாதாரணக்கருவியாக மாற்றிக் கொள்ளுதல், மாற்றிக் கொள்ளும் மனிதர்களின் ஆசையையும் பலவீனத்தையும் ஒருங்கே காண்பிக்கும். விவாகமாகாத இளைஞர்கள் விவாக ரத்துச் சட்டத்தைப் புகழ்ந்து பேசக் கூடும். ஏனெனின் அவர்களுக்கு இல் வாழ்க்கையின் தன்மை தெரியாது. காமத்தாலும் மோகத்தாலும் அவர்கள் விவாக ரத்துச் சட்டத்தைக் கும்பிடலாம். ஆனால் அவர்கள் மணந்திருக்கும் நங்கை பிரிய வேண்டுமெனக் கூறினால், ஆண்களின் உள்ளம் எவ்வளவு தடுமாற்றத்தை அடையும் என்பதைக் கற்பனையால் காண முடியாது; அனுபவத்தால் மட்டும் காணலாம். இளமைமணம் நரகமல்ல; சமைந்தபின் மணம் சொர்க்கமுமல்ல. எந்த நோக்கம் பூர்த்தியாவதற்கு, எந்த சாதனம் வகுக்கப் பெற்றது என்பதைத் தெரிந்து கொண்டால் நோக்கம் சரியாயின் சாதனத்தை மாற்றிக் கொள்ளலாம். இப்பொழுது ஹிந்து ஜன சமூகத்திலிருக்கும் வாழ்க்கைச் சாதனங்கள் யாவும் கடவுளின் கட்டளைகள் அல்ல. அவை ஒருகாலத்துத் தேவையின் பொருட்டுத் தோன்றி யிருக்கவேண்டும். வேறு தேவையின் பொருட்டு, அவைகளை நாம் இப்பொழுது மாற்றிக்கொள்ளலாம். ஆனால், குறிப்பிட்ட ஒரு சீர்திருத்தத்திற்கு நாட்டாரின் பொதுமனப்பான்மை எவ்வளவு வரையில் செல்லுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். மழை பெய்தால் அதைப் பலர் பலவாறாக உபயோகித்துக் கொள்ளுகிறார் களல்லவா? அது போல நல்ல சம்பவத்தையும் சிலர் தீயவழியில் உபயோகித்துக் கொள்ளலாம். மற்றும் பலர் உபயோகித்துக்கொள்ளத் தெரியாமலே

தவிக்கலாம். எனவே பொது ஜனங்களின் விரோத மனப்பான்மையை சீர்திருத்தக்காரன் தூண்டுதல் கூடாது. பொது ஜன மனப்பான்மை சீர்திருத்தத்திற்குச் சாதகமாயில்லாவிடினும், பாதகமாயிருத்தல் கூடாது. அதாவது மனப்பான்மை எந்த நிலையில் இருக்கப் பெறுகின்றதோ, அதைப் பொறுத்து நன்மையும் தீமையும் நிற்கும்.

கவி ரவீந்திரரின் அழகு வர்ணனைகளை மேனாட்டார் உண்மையெனக் கொள்ளலாகாது எனத் தமது இனத்தாருக்கு மேயோ எச்சரிக்கை செய்கின்றார். கவியின் அழகு வர்ணனையில் கவிதை மணக்கும்; ஆனால் மேயோவின் அவதூறுகளிலே சாக்கடை நாற்றம் வீசுகின்றது. உயர் நோக்கம் கொண்ட பொய், இழிக்கருத்தைத் தாங்கிய உண்மையைக் காட்டிலும் உயர்ந்ததென்று மேயோவின் நாட்டுப் பெரியார் ஒருவர் கூறியிருக்கின்றார். நமக்கு இது மிகுதியும் உடன்பாடு அல்லவாயினும், மேயோவுக்குக் குறிப்பிடுகின்றோம்.

குடும்பத்துக்கு அதிகம் என்று தோன்றினால், அழகுடைய பெண் குழந்தை கோயிலுக்கு அர்ப்பணம் செய்யப்படுகிறதாம்! மேயோவின் விசாரணையைப் பாருங்கள். இங்கு பொட்டுக் கட்டிக் கொள்ளும் வழக்கம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த வழக்கம் சமுதாய வழக்கமல்ல என்பதை இந்தியர்கள் யாவரும் அறிவார்கள். பொட்டுக் கட்டிக்கொள்ளும் வழக்கம் "தேவதாசி" என்ற ஒரு வகுப்பாரிடம் தான் உண்டு. இந்த உண்மையை மேயோ, நாட்டின் பொது வழக்கமெனப் பொய்யாகத் திரித்துக் கூறிவிட்டார். மேலும் இந்த வழக்கம் கூட மிகுதியும் இப்பொழுது நின்று வருகின்றது. மேயோ கூறுவது பண்டைச் சங்கதி, பழைய "கம்பளி" மூட்டை யாகும்.

"ஐந்து வயதானதும் மிகுதியும்விரும்பத்தக்கவள் எனத் தோன்றும் காலத்தில், அவள் பூசாரியின் சொந்த வைப்பாக ஆகி விடுகின்றாள்."

மேயோ எழுதியிருக்கும் இந்த எழுத்துக்கு என்ன பொருள் என்று நமக்கு விளங்கவேயில்லை. மேயோவின் மூளையில் குழப்பம், அலலது குறும்பு அல்லது காமட்பித்து, எது நிறைந்திருக்கிறது என்று நேரே தெரியவில்லை. அறிவு எவ்வாறு இருந்தபோதிலும், அவருடைய உள்ளம் ஒன்றையே பற்றிக்கொண்டு, நாடிச் செல்லுகின்றது. இந்தியர்களைப்பற்றி அவதூறு, அவதூறு, அவதூறு. இதைக் காட்டிலும் கடுமையான சொற்கள் நமக்கு வரவில்லை.

"கடவுளின் நகைகளை அணிந்து, மினுக்கிக்கொண்டு, தரிசனத்தை முன்னிட்டு வரும் பிரயர்ணிகளின் உபயோகத்திற்காக அவள் (பணத்தைப் பெற்று) தயாராகக்காத்துக் கொண்டிருக்கிறாள்."

சுவாமி தரிசனத்தின் பொருட்டு, பக்தர்கள் க்ஷேத்திரங்களுக்குச் செல்லவில்லை என்பது மேயோவால் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ராணுவத்தில் அமர்ந்திருக்கும் யாவரும் வீரர்களாகமாட்டார்கள். அவர்களுக்குள்ளும் கோழைகளிருப்பார்கள். பக்தர்களுக்குள்ளும் சில பதர்கள் இருக்கலாம். தவிர விலைமாதர் இல்லம்புக வந்தவன், சுவாமி தரிசனத்துக்கு வரவில்லை என்பது தெளிவு. மேலும் தேவதாசிகள் சுவாமியின் நகைகளை அணிந்து கொண்டதை எவரும் பார்த்திருக்கமாட்டார்கள். தேவதாசிகள் கற்பிழந்தவர்களாயிருக்கலாம். ஆனால் அவர்களுக்கு அவர்களுடைய பாபச் செயல்களின் மிகுதியால், அளவு கடந்த மூடபக்தி உண்டு.

எனவே சுவாமியின் நகைகளை அவர்கள் ஒரு நாளும் அணிந்து கொள்ளமாட்டார்கள்.

"அவளுடைய பெற்றோர்கள் தனவந்தர்களாயிருக்கலாம்; நற் குலத்திற் பிறந்திருக்கலாம்; நல்லபதவியிலிருக்கலாம். என்றாலும் தங்கள் பெண் தன்னை உபயோகித்துக் கொள்ளும் முறையைக் கண்டு, அவர்கள் தலை குனிவதில்லை. பெண்செய்வது கௌரமான காரியமென அவர்களால் கருதப்படுகின்றது."

நாமும் எத்தனையோ குப்பைகளைத் தள்ளிவிட்டுத்தான் வருகின்றோம்: பொதுவாக நாட்டாரின் மனப்பான்மையை முழு மோசமாக மேயோ கேவலப்படுத்தி எழுதியிருக்கும் இடங்களையும் குறிப்புகளையும் எடுத்துக் குறிப்பிடாமற் போனால், நான் எனது கடமையின்றும் வழுவினவனாவேன். தோற்றத்தில் தீமை கொண்டிருக்கும் நமது பழக்கங்களுக்கு அன்னியர்கள் எவ்வாறு பொருள் செய்து பிரசாரம் செய்யக் கூடும் என்பதை நம்மவர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டே, மேயோவின் புன்மை தழுவிய குறிப்புகள் எடுத்தாளப் பெற்றிருக்கின்றன. மேயோ எழுதினால் குடி முழுகிப் போய் விட்டதா என்று வேதாந்தம் பேசலாகாது. இவ்வாறு விட்டுக் கொண்டே வந்ததனால் தான், இந்தியா அனேகமாய் "குடி முழுகி"ப் போகும் நிலைமைக்கு வந்து விட்டது.

இந்தப் பெண்கள் (தேவதாசிகள்) மணம் செய்து கொண்டு, கணவனை அடைய முடியாதாகையால், அவர்களுடைய தாய்மார்கள் சில ஜமீன்தார்களிடம்—பெரியநிலச்சுவான்தார்களிடம்—தங்கள் பெண்களை ஏற்றுக்கொள்ளும்படியாக, ஏற்பாடு செய்கின்றார்கள்."

மேற்கோளாக, இது மேயோவால் எடுத்தாளப்பெற்றிருக்கின்றது. ஓரளவு, இதில் உண்மை உண்டு. நிலச்

சுவான்தார்களும் ஜமீன்தார்களும் மேயோவின் எடுத்துக் காட்டுகளைக் கவனிக்கும் படியாக வேண்டிக்கொள்ளுகிறோம்.

விவாக வயதை உயர்த்த எண்ணி சட்டசபையில் மசோதா வந்தாலும், அது ஹிந்து வைதீகர்களால் எதிர்க்கப்படுகின்றது என மேயோ கூறி சட்ட சபைக்கும் அதிகார வர்க்கத்தினருக்கும் ஆசி கூறுகின்றார். இந்தியாவில் அரசியல் நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனித்து வருபவர்களுக்கு, சட்டசபைகளின் பயனற்ற தன்மைவிளங்கும். சட்ட சபை அமைப்பின் விநோதத்தைப் பற்றி, தேவையானல், பின்னர் கூறுகின்றோம்.

இந்தியாவில் மேயோ சீர்திருத்த ஆராய்ச்சி மட்டும் செய்ததாகத் தெரியவில்லை. தத்துவஆராய்ச்சியும் செய்திருக்கிறார். வழக்கம்போல, அங்கேயும் தவறுதான்—பொய் என்றும் கூறலாம்—எழுதியிருக்கிறார்.

> "கருமத்தினின்றும் விடுபடுதலே முக்தியின் மகுடமாகும் என்று கூறுகின்றசமயத்தைக்கொண்ட ஜனங்கள், அறிவிற் கண்டதை செயலில் காண்பிக்கவேண்டுமானல், இன்னொருபடி, தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும்."

இதுவரையிலும், ஆதாரமின்றி, ஹிந்துக்களின் இல்வாழ்க்கையைப்பற்றி அவதூறு பேசிய மேயோ, சமயத்தைப் பற்றியும் குறை கூறுகின்றார். கருமத்தினின்றும் விடுபடுதலே முக்தியின் மகுடம் என்று ஹிந்துக்களின் எந்த தத்துவத்தில் காணப்படுகின்றது, கூறப்படுகின்றது? திண்ணை வேதாந்தமும், புடலங்காய்ப் புராணமும் படிப்பவர்களிடமிருந்து இந்தப் போலித் தத்துவத்தை மேயோ கொண்டார் போலும்! அண்டத்தையே அடக்கியாளும் ஆன்ம

சக்தி படைத்த பண்டை ஹிந்துக்களின் உயிர் நாடி துடிக்கும் தத்துவக் களஞ்சிய மாகிய "பகவத் கீதை" என்ற நூல் இருப்பதாக, மேயோவுக்குத் தெரியாது போலும்! சோம்பலும் சோர்வும் பலவீனமும், ஆதி முதல் அந்தம் வரையிலும் பகவத்கீதையில் கண்டிக்கப் பெற்றிருக்கின்றன. "மனிதன் (பாப புண்ணிய முதலிய இரட்டைகளினின்றும்) விடுபட்டு முக்தனானாலும் (இவனுக்குத்தான் முக்தன் என்று பெயர்) கருமம் அவனை விடுவதில்லை. அவனும் வினையாற்ற வேண்டும், வினையாற்றாவிடின் உலகம் ஸ்தம்பித்து நின்று விடும். முக்தனாகிய நானும் கருமம் செய்கின்றேன் அர்ச்சுனா, பார்த்தாயா" என்று கண்ணன் கீதையில் மொழிந்திருக்கிறார். அதை ஏன் மேயோ அறிந்து கொள்ளவேண்டும்? மேயோவுக்கு—இந்தியர்களைப் பழித்துக்கூற—கோபிகைக் கிருஷ்ணன்தேவையே யொழிய, கீதைக் கண்ணன் தேவையில்லை.

"வில்லினை யெடடா—கையில்
வில்லினை யெடடா—அந்தப்
புல்லியர்கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா
வாடி நில்லாதே—மனம்
வாடி நில்லாதே—வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே
செய்தல் உன் கடனே— அறம்
செய்தல் உன்கடனே—அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே."

இந்தியர்களின் தத்துவத்தின் முடிவு என்று மேலே மேயோ குறிப்பிட்டிருக்கும் "பேடியர் ஞானப் பிதற்றலை" கீதையில் கண்ணன் கண்டித்திருப்பதையும், செயலைப் போற்றி, அதன் விளைவைக் கவனிக்கா திருத்தல் வேண்டும்

என்று வற்புறுத்திக் கூறப்பட்டியிருப்பதையும் நண்பர்கள் நோக்குவார்களாக! மேயோ நோக்கவேண்டும் என்பது எமது கருத்தல்ல. லோகமான்ய திலகர், கீதையைக் கரும யோக சாத்திரம் என அழைக்கின்றார். கீதை செயல் முறை நூலாகும். செயல் முறைநூல் என்று ஒரு நூல் எந்த நாட்டில்—இந்தியாவைத்தவிர—எழுதப் பெற்றிருக்கிறது? வாழ்வின் அடித்தளம், வாழ்வின் உயிர், செயலாகும்என்பதை யாவரேமுதலிற் கண்டார்கள்? தலைப்பிரசவக்காரி, பலகுழந் தைகளைப்பெற்ற தாய் ஒருத்திக்கு மருத்துவம் கூற முன் வந்தால், எவ்வாறிருக்கும்? மேயோ கருமத்தின் தேவை யைப்பற்றி ஹிந்துக்களுக்கு உபதேசம் செய்ய முன்வந் துள்ளார். வேடிக்கைதான்.

“நொந்தது சாகும்” இதை மறவாமலிருப்போமாக!

“வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலம் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
சஞ்சல நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணையளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத்தொளிரும் விளக்கே சக்தி”

அத்தியாயம் 7.

உண்மை உண்மைதான்.

இந்த அத்தியாயத்தை, "மண் வெட்டிகள் மண் வெட்டிகளே" என்று பெயரிட்டு மேயோ அழைத்திருக்கிறார். மேயோ கொடுத்திருக்கும் தலைப்பெயரின் பொருள் "உண்மை உண்மைதான்" என்பதாகும். இளமை மணத்தின் தீய பயன்கள், இந்த அத்தியாயத்தில் கூறப்படுகின்றன.

"இளமை மணத்தின் பயன்களை உருவப்படுத்திக் கொள்ள வேண்டுமானால், பெண்ஆஸ்பத்திரியைப் பார்ப்பது தான் அன்னியர்களுக்குக் கிடைத்திருக்கும் நேர் வசதியாகும். பஞ்சாபிலிருந்து பம்பாய் வரைக்கும், சென்னையிலிருந்து ஐக்கிய மாகாணங்கள் வரைக்கும் (அதாவது இந்தியா முழுதும் என மேயோ குறிப்பிடுகின்றார்) உள்ள ஆஸ்பத்திரிகளை நான் பார்த்திருக்கிறேன். இது ஒரு ஆண் பிள்ளை செய்ய முடியாது. அவன் டாக்டரா யிருந்தாலும், ஸ்திரீ நோயாளியைப் பார்வையிட, அவன் அனுமதி தரப் பெறமாட்டான்."

இளமை மணத்தின் பயன்கள் என்று பீடிகை போட்டுக்கொண்டு, மேயோ எழுதுகின்றார். மேயோ கூறப்போவது இளமை மணத்தின் பயனு என்பதைப் பின்னர் ஆராய்வோம். ஏன் பெண் ஆஸ்பத்திரிக்கு ஆடவர்கள் செல்ல முடியாது என்று மேயோ கூறுகின்றார். ஆடவர்களுக்குக் கிடைக்கக்கூடாத ஆராய்ச்சி வசதிகள் தமக்கு இருந்ததாக மேயோ கூறிக் கொள்ளுகிறார். அவருடைய தற் புகழ்ச்சியைப்பற்றி நாம் கவலை கொள்ளவில்லை. அவருடைய சிறப்பான ஆராய்

ச்சி வசதியைப்பற்றி, இரண்டொரு சொற்களை கூறுவது மிகையாகாது. மேயோ கூறும் நிகழ்ச்சிகளை மறுத்துக் கூறும் அல்லது மெய்ப்பிக்கும் வசதி ஆடவர்களுக்கு இல்லை யானதால், மேயோவின் கூற்றை, பொது ஜனங்கள் எவ் வாறு ஏற்கமுடியும்?

புணர்ச்சி நோய்கள் பெரும்பாலும் இளமை மணத்தின் பயன்கள் என்று பொருள் பட, மேயோ எழுதியிருக்கின் றார். புணர்ச்சி நோய்களில் கொடுமை கொண்டது எனக் கூறப்பெறுவது நீர்த்தாரைப் புண்ணாகும். திருநெல்வேலி, மலையாளம் முதலிய பிராந்தியங்களில், இதற்குப் 'பரங்கிப் புண்' என்று பெயர். இந்தியாவில் முதன் முதல் வந்திறங் கிய வெள்ளையர்களை, இந்தியர்கள் 'பரங்கிகள்' என்று கூப்பிட் டார்கள். எனவே, பரங்கிப்புண் என்ற நோய், வெள்ளையர்கள் நாட்டிற்கு வந்த பின்னரே, தோன்றி யிருக்கிறது என்று கொள்ளக் கிடக்கின்றது. இந்த நோய் பண்டைக்காலந் தொட்டு, இந்தியாவில் இருந்து வந்திருந்தால், வேறு பெயரிட்டு அழைக்கப் பெற்றிருக்கும். புணர்ச்சி நோய்க ளில் சாதாரணமாய் இந்தியாவில் இப்பொழுது காணப்பெறு வது "பரங்கிப்புண்" தான் என்று மேயோ பின்னர் கூறு கின்றார். எனவே, மேயோ கூறும் புணர்ச்சி நோய் இளமை மணத்தின் பயனா அல்லது மேநாட்டாரின் இறக்குமதிச் சரக்கா என்பதை நண்பர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

"கோழைத்தன முள்ள ஜந்துக்கள் (ஸ்திரீ நோயாளி கள்) தங்கள் வீடுகளைவிட்டு வெளியே (படுதா ஏற்பாட்டை மீறி) வந்திருப்பது இதுதான் முதல் தடவையாக விருக்க லாம். அவர்களை வீட்டைவிட்டு வெளியேற்றி, ஆஸ்பத்திரிக்

குக் கொண்டு சேர்த்தது அவர்கள் படும் பொறுக்கொணுத் துன்பமாகும்.''

"அவர்கள் இப்பொழுதும் வந்திருக்க மாட்டார்கள். ஆனுல் அவர்களால் துன்பம் பொறுக்க முடியவில்லை'' என்று மேயோ கூறுகின்ருர். நாம் மேலே குறிப்பிட்ட முடிவுக்குத் தம்மை யறியாமலே, மேயோ, அத்தாட்சி தருகின்ருர். இப்பொழுது துன்பத்தால் தவித்து, ஆஸ்பத்திரிக்குச் செல்லும் பெண்களுக்கு, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், துன்பமில்லை என்பது கொள்ளக் கிடக்கின்றது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியர்களின் வாழ்க்கையில் புணர்ச்சி நோய்கள் சாதாரண நிகழ்ச்சிகள் அல்ல என்பது தெளிவு. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், புணர்ச்சி நோய்கள் தாக்க முடியாத உடல் வலிமையை இந்தியர்கள் பெற்றிருக்க வேண்டும். அல்லது அக்காலத்து இந்தியர்களினிடையே, இப்பொழுதைக்காட்டிலும் மிக உயர்வான கற்பு நிலை இருந்திருக்கவேண்டும். இவை யிரண்டும் இந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் சீர் குலையப் பெற்றிருக்குமாஞல், அவைகள் இளமை மணத்தின் பயன்களா, அல்லது இந்தியர்கள் பகுத்தறிவில்லாமல் ஏற்றுக்கொண்டு வரும் மேநாட்டு வாழ்க்கை முறையின் பயன்களா? மேயோ விடையளிக்கலாம். கற்பு நிலை அடிமை நிலை போலவும் விவாகரத்து சுதந்திரத்தின் நாண் மலர் போலவும் உடலின்பம் மெய்யான இன்பம் என்றும் இந்தியன் இப்பொழுது கருதுவாஞகில் அது மேநாட்டாரின் தத்துவப் பயிற்சியின் விளைவாகும். கற்பு நிலை பெருமையுடன் நோக்கப்பட்டுவரும் வரையிலும், இந்தியன் எவனும் காம விகாரம் கொண்டு வாழவில்லை என்பது தெளிவு. புணர்ச்சி நோய்கள் இளமை மணத்தின்

பயன்களாயின், சந்தேக மொன்றை, மேயோ நமக்கு விளக்கிக்காண்பிக்கவேண்டும். "புணர்ச்சி நோய் ஆராய்ச்சி கமிட்டி" யொன்று சிறிது காலத்திற்கு முன்னர், ஆங்கில நாட்டில் துரைத்தனத்தாரால் நியமிக்கப் பெற்றது. கமிட்டியும் ஆராய்ச்சி, விசாரணை செய்து, முடிவு கூறிவிட்டது. ஆங்கில நாட்டில் இளமை மணம் கிடையாதே! எனவே, மேயோ குறிப்பிடுமாறு, புணர்ச்சி நோய்கள் ஆங்கில நாட்டில் இருக்கக் கூடாதல்லவா?

> "துவக்கத்தில் பெண்களை (ஆஸ்பத்திரிக்கு)க் கொண்டு சேர்ப்பது மெதுவான காரியமாயிருந்தது. முதல் பருவத்தில் ஒன்பது பிரஸவ கேசுகள் தானிருந்தன. இப்பொழுதோ கூட்டத்திற்குக் குறைவில்லை............."

இது மேயோவின் முடிவிற்கு ஆதாரமா அல்லது மறுப்பா என்பதை அவருடைய எழுத்தினின்றே, நண்பர்கள் தெரிந்து கொள்ளுவார்களாக!

இளமையிலேயே புணர்ச்சி நேருவதால், பெண்களுக்குப் பித்துப்பிடிப்பது சாதாரண நிகழ்ச்சிகளாகும் என்று மேயோ கூறுகின்றார். மேயோ கூறும் நிகழ்ச்சி, இந்தியாவில் சாதாரணமாய்க் காணப்பெறும் சம்பவமல்ல. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பைபித்தியம் பிடித்தவர்களை நமது நாட்டில் காண்பதரிது என்று வயது முதிர்ந்த பெரியார் ஒருவர் நம்மிடம் கூறியிருக்கின்றார். மேயோ கூறியிருப்பது இப்பொழுது உண்மையாயின், அதன் காரணம் இளமை மணம் அல்ல. அதன் உண்மையான காரணத்தை நாம் கண்டு கொள்ளுதல் வேண்டும். நாம் இவ்வாறு கூறிவருவதால், நாம் இளமை மணத்தை ஆதரிப்பதாக எவரும் கொள்ளலாகாது. பண்டைக்கால இந்தியாவில், ருதுமதி விவா

கம் (சமைந்தபின்னர் மணம்) தான் நடைபெற்றது என்பது நமது ஆராய்ச்சியின் பயனாகும். ஆண் 25 வயதிலும் பெண் சுமார் 18 வயதிலும் பண்டைக்காலத்தில் மணந்தார்கள் என்பது நமது துணிபு. இளமை மணம் நமக்கு அறவே உடன்பாடு அல்ல. ஆனால் மேயோ "மொட்டைத்தலையையும் முழந்தாளையையும் பிணைக்கும்" முயற்சியைக்கொண்டு, இந்தியாவின் பலவீன நிலையின் உண்மைக்காரணங்களை மறைப்பதனாலேதான், நாம் இவ்வாறு எழுத நேருகின்றது.

"இடைவிடாது நேரும் புணர்ச்சியின் அதிர்ச்சியால், அவளுடைய மூளை கலக்கமுறுகின்றது."

மேயோவின் இலக்கியச் சுவையையும் உண்மை கூறும் தன்மையையும் மேற்கூறியதினின்றும் நண்பர்கள் சோதித்துப்பார்த்தல்வேண்டும். புணர்ச்சிக்குத் தேவையான ஆண்தன்மை வெளித்தோன்று முன்னரே, இந்தியன் "இல்வாழ்க்கைக்குத்" துவக்கிவிடுகின்றான் என்றும் பெரும்பான்மையோர் தங்கள் முப்பது வயதிற்குள்ளாகவே கிழத்தனம் அடைந்துவிடுகிறார்கள் என்றும் "தொண்டு" கிழவர்கள் மணம்புரிந்து கொள்ளுகிறார்கள் என்றும் ஏற்கனவே எழுதியிருக்கும் மேயோ, இப்பொழுது வேறு விதமாக எழுதியிருக்கிறார். மிக இளம்பிராயத்திலேயே, இல்வாழ்க்கையில் புகும் இந்தியனுக்கு—இது மேயோவின் கூற்று; நாம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை—மேற்கூறியவாறு, உடல் ஆற்றல் இருக்கமுடியுமா? எனவே, மேயோவின் முந்தைய கூற்று பொய்யாகவிருக்கவேண்டும், அல்லது அவருடைய தற்போதையக் கூற்று பொய்யாக விருக்கவேண்டும். என் இரண்டும் பொய்யாக விருக்கலாகாது என்று நண்பர்கள்

வினவலாம். ஆம் என்று ஒப்புக்கொள்ளவும் நாம் தயாரா யிருக்கிறோம். உள்ளத்தின் நிறைவினின்றும், வாய் பேசு கின்றது என்று கிருஸ்தவ வேதத்தில் கூறப்பட்டிருக்கின் றது. அதாவது, மனிதன் எதைப்பற்றி தனது மனத்தில் சதா சிந்தனை செய்து கொண்டிருக்கின்றானே, அதைப்பற் றித்தான் அவன் எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பான். இது ஆணைப்பற்றிமட்டும் சிறப்பாகக்கூறப்படும் விதியல்ல. எனவே, மேயோ எழுத்தினின்றும், அவருடைய உள்ளத் தில், எத்தகைய உணர்ச்சி நிறைவுகொண்டு, அவரை ஆட் படுத்தியிருக்கின்றது என்பதை நேயர்கள் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். தருமபுத்திரன் கண்களுக்கு, எவனும் அயோக்கியனாகக் காணப்படவில்லையாம்; துரியோதனன் பார்வையில் யோக்கியன் எவனும் தட்டுப்படவில்லையாம். தன்னுடைய மனப்பான்மைக்கு ஏற்றவாறுதான், மனிதன் வெளி நிகழ்ச்சிகளை அளப்பான், அளக்கமுடியும். இந்தியர் களுக்கு உபதேச வைத்தியம் செய்யப்புறப்பட்ட மேயோ வுக்கு, நற்குணமுள்ளவர் எவரேனும் வைத்தியம் செய்வது நலமாகும்.

இளப்பிராய மனைவி ஒருத்தி தனது கணவனுக்குப் பயன்படாமற்போகவே, அவளை அவன் காட்டிற்குத் தூக் கிக்கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்துவிட்டான் என மேயோ கூறுகின்றார். உபயோகமுள்ளவரையிலும் ஒரு பொருளைப் போஷணைசெய்து வளர்ப்பதும் உபயோகமற்ற நிலையில் அதை அழிப்பதும் இந்தியர்களின் தன்மையல்ல. வயதுசென்ற, கண்ணிழந்த பெற்றோர்களைக் காப்பாற்றிவந்த இளைஞன் சரிதத்தை இந்தியாவில் காணலாம். ஹிந்து நாக ரிகநுகர்ச்சியும் ஹிந்து சமய உணர்ச்சியும் சிறிதளவிலேனும்

கொண்டிருக்கும் இந்தியன் எவனும் மேயோ கூறியிருக்குமாறு செய்திருக்கமாட்டான். "பலவீனர்கள் இந்த உலகத்தில் உயிர்வாழலாகாது; அவர்களை அழிப்பது பலவான்களுடைய ஒப்பற்ற கடமையாகும்" என்ற போலி ஞானத்தைக்கொண்டவர்கள் இந்தியர்கள் அல்ல. இந்த மண்ணில் இனிது வாழ, எந்த உயிருக்கும் உரிமை உண்டு என்ற மிகச் சிறந்த, தாராள நோக்கம் படைத்தவர்கள் ஹிந்துக்கள். இந்தத் தத்துவத்தின் பிரகாரம், ஹிந்துக்கள் வாழ்க்கை நடத்தி வந்தமையினுலேதான், அவர்கள் அன்னியர்களுக்கு அடிமைப்பட்டு, அவர்களுடைய புன் சொற்களுக்கும் இலக்காக நிற்கின்றுர்கள். மேயோ கூறியிருக்குமாறு இந்தியர்கள் செய்திருந்தாலும் சரியே, செய்யத்துவக்கினுலும் சரியே, அவர் அரசியல் உலகில் அடிமைகளாக வாழமாட்டார்கள். உலகமே இலாபமாகக் கிடைப்பதானுலும், ஆன்மாவை இழக்கலாகாது என்பார்கள். பலவீனர்களைக் காப்பாற்றுவதைக் கடமையாகக் கொண்டிருக்கும் ஹிந்துக்கள் தங்கள் உயர்ந்த கொள்கையை அரசியல் விடுதலைக்காகவும் கூட மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை. மனிதன் பலவீனனுய் இருப்பது இழிவு என்பதை வற்புறுத்தவேண்டுமே யொழிய, பலவீனர்களை அழிக்க வேண்டும் என்று கூறினுல், அது கோழைத்தனமாகும். பொறுப்பை எடுத்துக்கொள்ள மறுப்பவர் யாவரும் கோழைகள் என்பதில் சந்தேகமில்லை. பலவீனர்களை ஆதரிக்க முயலாமல் அழிக்க முற்படும் மனிதர்கள் கோழைகள்தான். அத்தகைய கோழைகள் இந்தியாவில் இருக்கமாட்டார்கள். குண்டை நேரே மார்பில் வாங்கிக்கொள்ளும் பழக்கமும் துணிவும் இந்தியர்களிடம் இல்லாம லிருக்கலாம். ஆனுல்,

ஆயுள் முழுதும் "ஒண்டி" யாக உழைத்து, வலரைக் காப்பாற்றும் பொறுப்பும் பெருந்தன்மையும் இந்தியர்களை விட்டு, என்றும் அகலமாட்டா. மேம்பாடு அடைந்து விளங்கிய பல நாகரிகங்கள் சீர் குலைந்து அழிந்துபோயினும், ஹிந்து நாகரிகம் அழியாமல் இருப்பதற்கு காரணம் ஹிந்துக்களின் சகிப் புத்தன்மையும் தியாக உணர்வும் மௌனத் தொண்டுமே யாகும்.

சில ஆண்டுகளுக்குமுன், இந்தியாவில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. வெள்ளைக்கார டாக்டர் ஒருவர், வெள்ளைக்கார ஸ்திரீ ஒருத்தியின் பேரில் |மையல் கொண்டார். டாக்டருக்கு மனைவி இருந்தாள்; அந்த ஸ்திரீக்கு குழந்தைகளும் கணவனும் இருந்தார்கள். தங்கள் மையலுக்குக் குறுக்கேவந்த தமது மனைவியை டாக்டர் கொன்ருர்; தனது கணவனைக்கொல்ல "மையல்" ஸ்திரீ முயற்சி செய்தாள். இந்த நிகழ்ச்சி கண்டு பிடிக்கப்பெற்று, நீதிஸ் தலத்திற்கு—அலகபாத் நீதிஸ்தலம் என்பது நமது ஞாபகம்—வந்தது. டாக்டருக்கு மரணத் தீர்ப்பும், ஸ்திரீக்குக் கடுங்காவலும் விதிக்கப்பெற்றன. இந்த நிகழ்ச்சி பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பெற்றது. வழக்கு நீண்டகாலம் நிகழ்ந்தது. இந்தியர்கள்—இதைக் கேட்டவர்கள்—வெள்ளையர்களின் இக்கொடியகாம உணர்ச்சியால் நேர்ந்த கொலையைப்பற்றிக் கேட்டபொழுது, திடுக்கிட்டுப் போனுர்கள். இத்தகைய நிகழ்ச்சிகளைப் பெருக்கிக்கொண்டே போகமுடியும். பத்திரிகை உலகத்தில் பழகியவர்களுக்கு, மேநாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகள் பல அடிக்கடி நேருகின்றன என்று தெரியும். உபயோக மற்ற வினவியைக் கணவன் காட்டிற்குத் தூக்கிச் சென்று, அங்கு விட்டதை மேயோ மெய்ப்பிக்க முடியுமா

என்பது நமது சந்தேகம். ஆனால் நாம்கூறியதை நம்மால் மெய்ப்பிக்க முடியும். நேயர்கள், மேயோவின் கூற்றுக்குத் தீர்ப்புச் சொல்லுவார்களாக! "மண் வெட்டிகள் மண் வெட்டிகள்தான்." அதை மறுக்கமுடியுமா?

> "நான் இங்கு வைத்தியம் செய்யும் நோயாளிகளிற் பெரும் பான்மையோர் கல்லூரி மாணவர்களின் மனைவிகளாகும். அவர்களில் யாவருக்கும் அனேகமாய்ப் புணர்ச்சி நோய் இருந்தது"

என்று ஆஸ்பத்திரி யொன்றில் நிர்வாகம் செய்த ஸ்திரீ டாக்டர் தம்மிடம் கூறியதாக மேயோ எழுதி யிருக்கிறார். இது உண்மையென்றே வைத்துக் கொள்ளுவோம். உண்மையென வைத்துக்கொள்ள, நமக்கு விருப்பமில்லை. உண்மையென வைத்துக்கொண்டால், இதிலடங்கிய நிந்தனை யாரைச்சாரும்? மேயோவின் எழுத்து இந்திய அரசாங்கத்தார் இந்திய மாணவர்களுக்குக் கொடுக்கும் கல்லூரிப் படிப்பின் தன்மையை ஒரு சிறிது விளக்கிக் காண்பிக்கின்றது. மேலும் இந்தியக் கல்லூரி மாணவர்களைக் கண்டால், இந்திய அதிகார வர்க்கத்தினருக்கு இளிப்பதில்லை. விஷமப் பிரசாரத்துக்கு அவர்களுக்குப் பேராதரவு காட்டி உடந்தையாயிருக்கும் மேயோவுக்கு, இந்திய மாணவர்களிடம் எத்தகைய மனப் பான்மை இருக்கும்? ருஷியப் புரட்சித் துண்டுப் பிரசுரங்களைக் கடைத் தெருக்களில் இந்தியமாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வேறு இடத்தில் மேயோ இந்திய மாணவர்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய அரசியலின் உண்மையான தன்மையைச் செவ்வனே அறிந்து கொண்டிருக்கும் இந்தியமாணவர்களின் பேரில், மேயோ குறை கூறாமலிருக்க முடியுமா? தமது

போஷகரும் கார்டியனுமான இந்திய அரசாங்கத்தாரின் செயல்களுக்கு ஆசி கூறி, தேசபக்தர்களை மேயோ குறை கூறுமலிருப்பின், அது அவர் எடுத்துக்கொண்டிருக்கும் வேலைக்குக் குறைவை உண்டாக்காதா? இந்தியக் கல்லூரி மாணவர்கள் நடை நேர்மை யற்றவர்கள் என்று கூறும் மேயோவுக்கு அமெரிக்கா நிகழ்ச்சிகளிற் பலவற்றைப் பரிசாகக் கொடுக்கக் கருதியிருக்கின்றோம். சென்னை கிருஸ்தவன் கல்லூரியில் பல ஆண்டுகள் தலைமைவகித்து நடத்திய டாக்டர் மில்லர் அவர்கள் இந்திய மாணவர்களின் நடை நேர்மையையும் மற்றும் அவர்களது அரிய குணங்களையும் பற்றிப் பல தடவைகளில் புகழ்ந்து கூறியிருக்கிறார். பல ஆண்டுகள் நெருங்கிப் பழகிய ஒருவரின் கூற்றை, மேயோ ஒரு நொடியில் மறுக்கின்றார். இதைத்தான் இவர் மறுக்கின்றார். ஆனால் அமெரிக்கா நீதிபதி லிண்ட்ஸே அவர்கள் அமெரிக்கா மாணவர்களையும் மாணவிகளையும் பற்றி நீண்டதொரு நூல் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய சில வற்றை ஈண்டு தருகின்றோம். மேயோ மறுக்க முடியுமா, பார்ப்போம். நீதிபதி லிண்ட்ஸே கூறுகின்றார்.

> (அமெரிக்காவில்—அதாவது மேயோவின் நாட்டில்) உயர்தரப்பள்ளி மாணவிகள் மாணவர்களைக் காட்டிலும் (காம) விஷயத்தில் துடி துடித்து நிற்கின்றார்கள். (பெண்கள்) மாணவிகள் இழுக்கும் இழுப்புக்கு மாணவர்கள் (பையன்கள்) கட்டுப்படுகிறார்கள்.''

வாசக நேயர்கள் வியப்படையவேண்டாம். மீண்டும் நீதிபதி கூறுகின்றார்:—

> தங்கள் உயர்தரப் படிப்பை முடித்துக் கொள்ளுவதற்குள் மாணவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் புணர்ச்சி அனுபவம் பெற்றுவிடுகிறார்கள் ''

இளம் பிராயத்தில் இந்தியாவில் மணம் நேரும் வழக்கத்தைக் கண்டிக்கும் மேயோ மேலே கூறப்பட்டிருப்பதற்கு என்ன விடையளிப் பாரோ, யார்கண்டார்? அமெரிக்கா வாழ்க்கை முறைக்கும் அமெரிக்காவின் சீதோஷ்ண நிலைக்கும் ஏற்றவாறு அவர்கள் செய்கின்றார்கள் போலும்!

அமெரிக்காவில் விலைமாதர்கள் இல்லையா? நீதிபதி கூறட்டும்.

> "இப்பொழுதிருப்பதைப் போலவே முந்தைய ஆண்டுகளிலும் பையன்கள் நிலை தடுமாறித்தான் போயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்பொழுது விலைமாதர்களின் இல்லங்களுக்குச் சென்று வந்ததால், அது அதிகமாக வெளிக்கு வரவில்லை. விலை மாதர்களின் கூட்டம் கலைக்கப் பெற்றதும் பையன்கள் தங்கள் இனத்துப் பெண்களை நாட ஆரம்பித்தார்கள்''.

நீதிபதி எழுதியிருப்பதை மேயோ படிக்காமலிருக்கலாம். ஆனால் நம்மவர்கள் படித்தல் வேண்டும். சுதந்திர அமெரிககாவுக்கும் அடிமை இந்தியாவுக்கும் புணர்ச்சி விஷயம் சம்பந்தப்பட்ட வரையிலும் ஒற்றுமை இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். ஒற்றுமை இருந்தும் அமெரிக்கா சுதந்திரத்துடன் இருப்பான் ஏன்? இந்தியா அடிமையாக ஏன் இருக்கவேண்டும்? இளம்பிராய மணத்தையும் புணர்ச்சியையும் தவிர, வேறு உண்மையான காரணமிருக்க வேண்டும். அதை ஆராய்தல் நலம்.

அமெரிக்காவில் மட்டும் மேற் கூறிய வழக்கம் இருக்கின்றதா அல்லது ஐரோப்பாவிலும் உண்டா என்பதைப்பார்ப்போம். நீதிபதி லிண்ட்ஸே கூறுகின்றார்:—

"இந்தப் பழக்கம் (பையன்கள் தங்களை யொத்தமாணவிகளை நாடும் பழக்கம்) (ஐரோப்பியப் போருக்குப் பின்னர்) ஐரேப்பாவினின்றும் வந்த நமது இளைஞர்களின் மூலமாய் ஊக்கம் பெற்றது."

ஐரோப்பாவிலிருந்து, இந்தப் பழக்கத்தை, அமெரிக்க இளைஞர்கள் தங்கள் நாட்டுக்கு, எடுத்துச் சென்றார்கள் என்று கூறப்படுவதால், நண்பர்கள் விவரங்களை நன்கு உணர்ந்து கொள்ளுவார்களாக !

இந்தியக் குழந்தைகளைப் பெற்றோர்கள் நன்கு வளர்ப்பதில்லை என்று குறை கூறும் மேயோவுக்கு, நீதிபதி லிண்ட்ஸே பதில் சொல்லட்டும்.

"பள்ளி நிர்வாகி யொருவரின் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றிருந்தேன். நான் குறிப்பிடும் பையன்களில் ஒருவனுக்கு நிர்வாகி தகப்பனர். குழந்தைகளைச் செவ்வனே வளர்ப்பதில்லை என்று நிர்வாகியும் அவரது மனைவியும் என்னிடம் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். தங்கள் பையன்—உயர்தரப் பள்ளி மாணவன்—கொடிய புணர்ச்சி நோயால் வருந்திக்கொண்டிருக்கிறான் என்பது அவர்களுக்குத் தெரியாது. நோயின் கடுமையால், நடக்கும்பொழுது பையன் குனிந்து கொள்ளுவான். இதற்குக் காரணம் வினவிய பெற்றோர்களிடம், குதிரை உதைத்துவிட்டது என்று பையன் கூறியிருக்கிறான். இந்தக் கதையைப் பெற்றோர்கள், சந்தேகங் கொள்ளாமல் நம்பினார்கள்."

போதுமா? ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிடுகின்றோம். அமெரிக்கா மாணவன் ஒருவன் தான், பதினைந்து மாணவிகளுடன் புணர்ச்சி வைத்துக்கொண்டிருப்பதாக நீதிபதி லிண்ட்ஸே அவர்களிடம், ஒப்புக்கொண்டா

ளும். இளம்பிராயத்தில் தனது "மனைவி அல்லது மனைவிகளுடனும் மற்றவர்களுடனும்" புணர்ச்சி வைத்துக்கொள்ளும் இந்தியனைப்பற்றிப் பேச வந்த மேயோ அமெரிக்காவைக் கவனித்தாரா அல்லது இயற்கையை ஆராய்ந்து பார்த்தாரா? இரண்டு அவதூறுகள் சேர்ந்து, ஒரு உண்மையாகாது. மேயோவின் அவதூறைப் பொறுக்கமாட்டாமல், நாம் அமெரிக்கா மாணவர்களையும் மாணவிகளையும் தூற்ற முற்படவில்லை. எல்லோருடைய சம்மதத்தையும் கொண்ட சட்டத்தின் நான் கெல்லைக்குள் விருப்புடன் நடப்பதே சுதந்திரமாகும் என்று டென்னிஸன் என்ற ஆங்கிலக் கவி கூறுகின்றார். இதுதான் உண்மை என்பதை அனுபவ மூலமாய் யாரும் கண்டுகொள்ளலாம். சுதந்திரம் என்றும் இயற்கை யென்றும் சாக்குக் கூறி, விகார மனப்பான்மையையும் "மூளி" உணர்ச்சிகளையும் வளர்த்துக்கொண்டு வரும் அமெரிக்க மாணவர், மாணவிகளைக் காட்டிலும் கேவலமான வாழ்வு, நமது சிறுர்கள் வாழவில்லை என்பது தெளிவு. 'தொட்டிற் பழக்கம் சுடு காடுமட்டும்' என்பதை வேத வாக்கியமாகக்கொண்டிருக்கும் இந்தியர்களுக்குக் குழந்தை வளர்க்குமுறை தெரியவில்லை யென்றும் தவருன முறைகளில் குழந்தைகள் வளர்க்கப் பெறுகின்றன என்றும் மேயோ கூறியிருப்பது எதைக் கருதி? மேநாட்டு நாகரிகத்தின் உயர்வையும் ஹிந்து நாகரிகத்தின் இழிவையும் ஒருங்கே விளக்கிக் காண்பிக்கும் பொருட்டேயாகும். தன்மருந்து நிகாற்றது என்று கூறும் வைத்தியன், ஏனைய வைத்தியனுடைய ஔஷதத்தைக் குறை கூறுமலிருப்பானு? நண்பர்கள் இன்னொரு விநோதத்தைக் கவனித்திருக்கலாம். மேயோ இதுவரையிலும் ஹிந்து நாகரிகத்தைத்தான் குறை கூறிவந்திருக்கிருர். இந்திய முஸ்லீம்களைக்

கண்டிக்கவேயில்லை. இதனின்றுமே, உண்மையை அன்பர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளக்கூடும். "சூப்கரோ" (சும்மாயிரு) என்று அடித்துப் பேசுபவனை தற்போதைய உலகம் மதிக்குமா? "தயை செய்து பேசாமலிருங்களேன்" என்று மனுப் பண்ணிக்கொள்ளுபவனுடைய மரியாதை கோழைத் தனமாகத்தான் பாவிக்கப்படுகின்றது. "இல்லானை இல்லாள் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்" என்பது ஹிந்துக்கள் சம்பந்தப்பட்டவரையிலும் உண்மைபோலும்! சும்மாயிரு என்று சொல்லாமலே, விழித்துப்பார்த்து, மேயோவை அடக்கும் திறன் ஹிந்துக்களுக்கு இருக்குமாயின், குழந்தை மணம் முதலிய எல்லாத் தீபபழக்கங்களையும் உலகத்தார் (மேயோ உள்பட) ஆதரித்து, ஆகாயம் முட்டும் வரையில் புகழ்ந்து பேசுவார்கள். கண்ணிழந்த குருட்டுக் கோடிசுரனைச் செந்தாமரைக் கண்ணன் என்று அழைப்பது உலக இயல்பல்லவா? மே நாடுகளில், தீய பழக்கங்களே இல்லையா? எழுத்திலும், சொல்லிலும் குறிப்பிடக் கூடாத தீய பழக்கங்கள் மே நாடுகளில் உலவி வருகின்றன என்பது நமக்குத் தெரியும். நாட்டின் செல்வச் செழுமையைப் பற்றித்தான் மேநாட்டு அரசியல் வாதிகள் பேசுவார்கள். நடை நேர்மையைப் பற்றிக்கூற மாட்டார்கள். ஒரு நாட்டிற்கு செல்வச் செழுமை இருந்தால், தீய பழக்கங்கள் யாவும் மறைபட்டுப் போகும் என்பது அவர்களுடைய முடிவுபோலும்!

உலகத்தாரின் வாழ்க்கைகளில், ஒவ்வொரு நாட்டிலும் பலபல சோதனைகள் நடைபெற்று வருகின்றன. புதிய சோதனைகளைக் கைக்கொள்ள விருப்பமில்லாத நாடுகள் முற்போக்கில் ஆவல் படைக்காதவைகள என்று சொல்லலாமா?

ஏழை ஒருவன், செல்வத்தில் நாட்டங்கொண்டு, புதிய புதிய துறைகளில், திரவியம் தேட முயற்சி செய்வான். ஆனால் அதே மனிதன் ஓரளவு செல்வத்தைப் படைத்து விட்டானாகில், தான் திரட்டிய செல்வத்தை இழக்க நினைக்கமாட்டான்; அதைக் காப்பாற்றத்தான் முனைவான். மேநாடுகளில், நிலைத்த வாழ்க்கை முறை இன்னும் ஏற்படவில்லை என்பது எனது முடிவு. ஐரோப்பியர்களின் ஊக்கத்தையும் உழைப்பையும் நான் குறைத்துப் பேசுவதாக எவரும் கருத வேண்டாம். குறிப்பிட்ட சில பழக்கங்களால், முன்னொரு காலத்தில், நற்பயன் ஏற்பட்டிருக்குமாகில், அந்தப் பழக்கங்களை ஜன சமூகம் எளிதிலே விட்டு விட மனம் இசையாது. ஏனெனின் 'நாளை வரும் பலாக்காயைவிட, இன்றைக்கு நம்மிடம் இருக்கும் களாக்காய் உயர்ந்தது' என்று கொள்ளும் இயல்பு சராசரி மனிதனுடைய தன்மையாகும். மொட்டை அறிவைக்கொண்டு பல திட்டங்களை அமைக்கலாம்; ஆனால் அவைகளை அனுபவ மூலமாய்ச் சோதித்துப் பார்த்தாலொழிய, அறிவு கோலிய திட்டங்களை ஜனசமூகம் சமுதாயமாய் ஏற்றுக் கொள்ளாது. அதனாலேதான், புதியதொரு சீர்திருத்தம் வேரூன்றி நிலைக்கப் பல ஆண்டுகள் ஆகின்றன. சீர்திருத்தத்தில் ஆவல் காண்பிக்கலாம்; ஆனால் அவசரப்பட்டுத் தவறான பாதையில் செல்ல நேர்ந்தால், சுடக்குடித்தவன் கதையாக முடியும். ஆண்களோடு பெண்களும் சமமாய்ப் பாவிக்கப்படல் வேண்டும் என்று சலிப்பில்லாமல் மேநாட்டில் கூவி வருகின்றார்கள். இது போற்றத் தக்கதே. ஆனால் முடிவு என்ன? ஆண்களை யொத்த அரசியல் வாக்குரிமை பெண்களுக்கும் கொடுபடல் வேண்டும் எனக் கூறினால், அது எளிதிலே நடக்கிற சங்கதியா? பெண்

களுக்கும் வாக்குரிமை கொடுத்தால் என்ன என்று சீர்திருத்தக்காரன் உள்ளம் பதறுகின்றான். ஆனால் ஜனசமூகமோ, சீர் திருத்தக்காரனைப்போல உள்ளம் குமுறுவதில்லை. ஜன சமூகத்துக்கு சீர்திருத்தக்காரனுடைய ஆவல் தேவையில்லை. சீர்திருத்தத்தினாலாய அனுபவத்தை ஜனசமூகம் வேண்டுகின்றது. எனவே, ஆங்கில நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள். வாக்குரிமை பெண்களுக்குமுண்டு என்ற பாத்தியம் சட்ட மூலமாய் ஒப்புக்கொள்ளப் பெற்றுவிட்டது. ஆனால் எத்தனை ஆயிரம் பெண்கள் வாக்குரிமையை அனுபவிக்கின்றார்கள்? சிறுபான்மையோர்தான். சிறுபான்மையோர் பெற்ற உரிமை மூலமாய் நலம் ஏற்படுமாயின், அனுபவத்தைக்கொண்டு, ஜனசமூகத்திலிருக்கும் பெண்களனைவரும் வாக்குரிமை பெறுகின்றார்கள். சீர்திருத்தம் ஒரு நாட்டில் நிலைபெறும் முறை இதுவேயாகும். எனவே, காந்தி அவசரப்பட்டால் என்ன, மேயோ அவதூறு எழுதினாலென்ன, ஏனைய சீர்திருத்தக்காரர்கள் உள்ளம் பதறினால் என்ன, முற்போக்குக்கான சீர்திருத்தத்தை இந்திய ஜனசமூகம் எளிதிலே, விரைவிலே ஏற்றுக்கொள்ளாது. தீவிர உணர்ச்சி கொண்ட ஒரு கூட்டத்தார், குறிப்பிட்ட பல கிராமங்களில் சாசுவத வாழ்க்கை நடத்தி, அந்தக் கிராமங்களின் வாழ்க்கைப் போக்கை மாற்றினாலொழிய, நமது நாடு முன்னேற்றம் அடையப் போவதில்லை. வாழ்க்கையில் அபரிமிதமான உருசி யிருத்தல் வேண்டும். இத்தகைய மனிதர்கள் ஆயிரம் பேர்கள் மட்டும் இருந்தாற் போதுமானது. நிற்க,

"தங்கள் பெண்களுக்கு மண முடிக்கு முன்னரே, அவர்களுடைய (பெண்களுடைய) கணவன்மார்களுக்கு (ப்புணர்ச்சி) நோய் இருக்கிறது என்று தெரிந்தும், அதிலே,

பெற்றோர்கள் அவமானத்தையும் தீமையையும் காணவில்லை என்று நான் தெரிந்துகொண்ட பின்னர்..............''

மாப்பிள்ளைகளிடம் நோய் இருப்பதைக் கண்டும், மாமன்மார்கள் தங்கள் பெண்களைக் கூசாமல் அவர்களுக்கு மண முடிக்கின்றார்கள் என்று மேயோ கூறியிருக்கும் பொய் பொறுக்கற்பாலதல்ல. கேவலம், மிருக உணர்ச்சி கொண்ட மனிதன்கூட, மேயோ குறிப்பிட்டிருக்கும் இழிச் செயலைச் செய்யமாட்டான். அதுவும், பிள்ளைப்பேறு ஒன்றே பெரும் பேறு என்று கொண்டு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இல்வாழ்க்கை நடத்திவரும் இந்தியத் தாய்மார்களும் தகப்பன்மார்களும், மேயோ குறிப்பிடுமாறு, தங்கள் பெண்களைக் "கடலில்" கொண்டுபோய்த் தள்ள மாட்டார்கள். இந்தியர்களை—சிறப்பாக ஹிந்துக்களை—எத்தகைய புன்மொழிகளால் திட்டினாலும் பாதகமில்லை என்ற தீர்க்க வைராக்கியம் படைத்திருக்கும் மேயோ, எந்தப் பொய்யைத் தான், "அளக்கமாட்டார்?"

சென்னை இராஜதானியிலும், புணர்ச்சி நோய் சம்பந்தமாக இதே நிலைமைதான் என்று மேயோ, ஸர்ஜன் ஒருவரை "சாட்சி விட்டிருக்கிறார்." இனம் இனத்தோடு சேருவது அருமையா? சென்னை இராஜதானியில், ஆஸ்பத்திரிக்குச் செல்லும் பெண் பிள்ளைகள் எத்தனை பேர்கள் என்ற கணக்கை மேயோ கொடுக்க முடியுமா? அல்லது அவரது நண்பர் ஸர்ஜன் அவர்கள் கூற முடியுமா? மனத்தில் தோன்றியதெல்லாம் எழுத சட்டம் இடம் கொடுக்குமாகில், மேயோ, இந்தியர்களைப்பற்றி, இன்னும் எத்தனையோ அவதூறுகளை எழுதியிருப்பார் என்று எண்ண இடமிருக்கிறது. ஆனால் இந்தியாவின் துணைவி என்ற பாவனையைக் கொண்டு எவ்வளவு

ஆபாஸம் எழுதலாமோ, அவ்வளவையும் அவர் எழுதி விட்டார். நண்பர்கள் அவசரப்படவேண்டாம். இன்னும் எவ்வளவோ இருக்கின்றது. இந்தியர்களின் குடும்பங்களில் புணர்ச்சி, தினசரி எத்தனை தடவைகள் நடைபெறுகின்றது என்று வைத்திய நண்பர் ஒருவர் தம்மிடம் குறிப்பிட்டதாக, மேயோ கூறியிருக்கிறார். இரண்டு மூன்று தடவைகளாம்! மேயோவை, இந்த ஜன்மத்தில் இல்லாவிடினும், அடுத்த ஜன்மத்திலேனும் கடவுள் காப்பாற்றுவாராக!

மேயோவைச் சபிப்பதிலும் பயனில்லை. எல்லோரும் பழிக்கும், இழித்துக் கூறும், இடித்துக் கூறும் நிலையில், நம்மவர்கள் இருக்கின்றார்கள் என்று உலகத்தார் கண்டு கொண்டால், அவர்கள் ஏன் ஏளனம் செய்யமாட்டார்கள்? உலகத்தில் ஏனைய நாடுகளில் விபசாரித்தனம் இல்லையா? புணர்ச்சி நோய்கள் மலிந்து கிடக்க வில்லையா? பொய்யும் சூதும் பரந்து நிற்கவில்லையா? கட்சிச் சண்டைகள் எப்பொழுதேனும் ஓய்ந்த துண்டா? வறுமை இல்லையா? அகால மரணமில்லையா? ஏராளமான விவாக ரத்துக்கள் இல்லையா? காமத்தாலும் குரோதத்தாலும் பேராசையாலும் கொலைகள் நேரவில்லையா? ஒரு கூட்டத்தார் ஏனையோரைச் சலிக்காமல் திட்டவில்லையா? கற்பழிக்கும் மாந்தர்களும் கற்பழிந்து, மெலிவுற்று வாடும் பேதைப் பெண்களும் சுமைகளுக்குச் சமமான தமது குழந்தைகளைத் திக்கற்ற நிலையில் விட்டுவிட வில்லையா? சென்ற இருபது ஆண்டுகளாக, ஐரோப்பிய நாடுகளில், நீதி ஸ்தலங்களில் பொய்ச் சாட்சியம் மலிந்து வருகின்றது என்று நீதிபதிகள் குறிப்பிடவில்லையா? தங்கள் நாடுகளுக்கு வந்த பேதை இந்தியர்களின் செல்வத்தைச் சூழ்ச்சியால் பறிமுதல் செய்துவரும் கூட்டத்தார்

(ஆண்களும் பெண்களும்) ஐரோப்பிய நாடுகளில் இல்லையா? கள்ளப் புணர்ச்சியால் நேரும் கர்ப்பத்தைத் தடுக்க, கேவலமான முறைகளும் கருவிகளும், மேநாடுகளில் காணப்படவில்லையா? விகாரப் புணர்ச்சிகளின் வகைகள் இவ்வளவுதான் என்று முடிவு கட்டிக் கூறமுடியாது என்று யோக்கியப் பொறுப்பு வாய்ந்த ஐரோப்பிய வைத்திய நிபுணர்கள் தங்கள் நாட்டார்களைப் பற்றிக் கூறியிருக்கும் விவரங்களை எழுதினால், எத்தனை அத்தியாயங்களாகும், தெரியுமா? பிரான்சு நாட்டில், சென்ற நூறு ஆண்டுகளாக, ஜனத்தொகை அபிவிருத்தியடையவில்லை. நபோலியன் சக்கரவர்த்தி ஆண்ட காலத்தில் இருந்த ஜனத்தொகையே, இப்பொழுதும் (நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும்) இருந்து வருகின்றது. பிரான்ஸ் நாட்டில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் மணத்தில் அவ்வளவாக இப்பொழுது உருசியில்லை. எனவே, கலியாணமாகாத ஆடவர்களும் பெண்களும் கற்பைத் தாங்கியவர்கள் என்று பொருளா? கருத்தரிக்காத முறைகளையும் கருவிகளையும் அவர்கள் கையாளுகின்றனர் என்று கூறப்படுகின்றது. மணமின்றிப் புணர்ச்சி நேரலாமா? நேர்ந்தால் அது கற்பழிதல் அல்லவா? இந்த நாடுகளைப் பற்றி, எவரும் அவதூறு எழுதத் துணியவில்லை. இந்தியர்களைப் பற்றியோ, எவரும் தாராளமாக, கேவலமான துறைகளில், முறைகளில் எதையும் எழுதுகின்றார்கள். காரணம் என்ன? இந்தியர்களுக்கு சுயராஜ்ய வாழ்வு இல்லை. சிறிய பெல்ஜியத்துக்கும் சுதந்திர வாழ்வு இருக்கின்றது. இந்த வேற்றுமையால், எத்தகைய தீமைகள் நிகழ்கின்றன என்பதை நம்மவர்கள் உணர வேண்டும். பிறர் அவதூறு பேசுவதால், நமது நாட்டையும் நம்மவரையும் சிறுமைப்படுத்த முடியாது. வெறும் ஆகாயப் பந்தலால், நம்மவர்கள் முன்னேறவும் முடியாது.

" மண்ணி லின்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுல்
கைகொட்டிச் சிரியாரோ."

அத்தியாயம் 8.

பாரதமாதா.

"அந்திப் பொழுதில், தெருப்புழுதியைக் களைந்துகொண்டு, கூக்குரலிட்டுக் களியிலாழ்ந்து விளையாடும் இந்தியக் குழந்தைகளையும் அவர் தம் அருமை அன்னைகளையும் நினைந்து, மகிழ்ச்சி கொண்டு, கர்வப் படுகின்றேன்" என்று ஒருசமயம் விவேகானந்தர் கர்ச்சித்திருக்கிறுர். "அழகிய நிலவையும், அருமைத் தென்றலையும் அணியணியாக நிற்கும் நட்சத்திரக் கூட்டங்களையும்—இந்த கவர்ச்சி தரத்தக்க நிலைமையில் தாய் தகப்பன்மார்கள் தங்கள் குழந்தைகளின் மழலைகளைக் கேட்டு, ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து மகிழும் இன்பக் காட்சியை, நான் இந்தியாவிலேதான் கண்டேன்" என்று ஸ்ரீமதி நிவேதிதாதேவி (மார்கரட் நோபிள் என்ற ஆங்கிலமாது) எழுதியிருக்கிறுர். அந்திப் பொழுதிலே, ஆலயம் சென்று திரும்பும் இந்தியத் தாய்மார்களைக் கண்டு இன்புற்றுர்கள் ஏனைய அன்னியர்கள். ஆனுல் மேயோ கண்டதென்ன? கைபர்க் கணவாய்க்குச் சென்றிருந்தனராம். கைபர் கணவாய் வழிபாகத்தான் இந்தியாவிலிருந்து, ஆப்கானி ஸ்தானத்துக்குச் செல்ல முடியும். கைபர் கணவாயில் மேயோ கண்ட காட்சி யென்ன? எல்லைப்புறத்துக் கொள்ளைக்காரனை அந்திப் பொழுதில் மேயோ

கண்டனராம். "எந்த நோக்கத்தோடு என்னை நீ வழிபடு கின்றாயோ, அந்த நோக்கம் உனக்குப் பூர்த்தியாகும்" என்று பகவான் கண்ணன் கீதையில் அர்ச்சுனனுக்கு உபதேசித் துள்ளார். அந்திப் பொழுதில், நிவேதிதா தேவி, பக்தி நிறைந்த தாய்மார்களைக் கண்டார். ஆனால் மேயோவோ, கொள்ளைக்காரனைக் காணுகின்றார். "மனம்போல் வாழ்வு" என்று ஆங்கிலப் பேரறிஞர் ஆலன் அவர்கள் எழுதவில்லை யா? குபேர பட்டினம் கொள்ளை போயிற்றாம்; அற்பன் ஒருவனுக்கு அகப்பட்டது இரும்புத் துண்டாம். அதைப் போல, நமது மேயோவுக்குக் காட்சி கிடைத்திருக்கின்றது.

எல்லைப் புறத்தானைக் கண்ட மேயோ, அவனுடைய தொழிலை விசாரிக்கின்றார். "என்னுடைய ஜனங்களின் தொழிலைத் தவிர, வேறு என்ன? நாங்கள் கொள்ளைக்காரர் கள்" என்று அவன் பதில் கூறினானாம். ஆனால் மன்னர் பிரான் ரஸ்தாவில் அவர்கள் கொள்ளை யடிப்பதில்லையாம்! ரஸ்தாவின் இரண்டு கங்குகளிலும் கொள்ளைக்காரர்களின் அரசு செல்லுகின்றதாம்! மேயோ இவ்வாறு களிப்புடன் கூறுகின்றார். கொள்ளைக்கார எல்லைப்புறத்தானுக்கு மேயோ தர்மோபதேசம் செய்யவில்லை, செய்யத் துணியவுமில்லை. மன்னர்பிரான் ரஸ்தாவை ஒதுக்கி வைத்துவிட்டு, அதன் இரு கங்குகளிலும் கொள்ளையடிக்கும் நீதிவானல்லவா அவன்? மேலும், "சுப்கரோ" (சும்மா இரு) என்று அவன் வாயைஅடக்கிவிட மாட்டானா? விநோத ராஜபக்தி கொண்ட எல்லைப் புறத்தானிடம் அதிகமாகச் சொற்கள் நடவா என்று தெரிந்துகொண்ட மேயோ, இந்தியாவின் கிராமங்க ளைப்பற்றி புகழ்ந்து கூறுகின்றார். "கிராமங்களில் வசிக்கும் இந்தியர்கள்—ஹிந்துக்களாயினும் சரி, முஸ்லீம்களாயினும்

சரி—மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துப் பயிர்செய்கின்றார்கள். அவர்கள் சாதுக்கள், கபடமற்றவர்கள். படிப்பில்லாதவர்கள். அமைதியுடன் வாழ்பவர்கள்; கருணையுள்ளவர்கள்'' என்று இந்தியக் கிராமவாசிகளைப்பற்றி புகழ்ந்து கூறிய மேயோ, இறுதியில் கொடுக்கில் விஷத்தை வைத்துவிட்டார். அவர்கள் மத்தியில் தீவர்த்திக்கொள்ளைக்காரர்கள் வரும்பொழுதுமட்டும், இவைகள் (இந்த நற்குணங்கள்) இருப்பதில்லை எனக் கூறுகின்றார் மேயோ. இது போகட்டும்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருமுன்னர் அதாவது ஆங்கில அரசியல் இந்தியாவில் நிலைநிறுத்தப்பெறு முன்னர், கைபர் கணவாய் வழியாக, எந்த ஹிந்துவும் போனதில்லை, போகமுடியாது. வாகனத்தி லேறிக்கொண்டு ஸ்திரீகளைப்போல உடை தரித்துக்கொண்டு போனாலொழிய, ஹிந்து எவனும் போகமுடியாதாம்! கிராமத்தார்கள் சொல்லுவதுபோல, "பழி பாவத்துக்கு'' அஞ்சி எழுத வேண்டும் என்ற பொறுப்பு மேயோவுக்கு உண்டா? ஹிந்துக்கள் கோழைகள் என்று மேயோ சொல்ல வேண்டும். முஸ்லீம்கள் ஹிந்துக்களைக்காட்டிலும் வீரர்கள் என்றும் ஹிந்துக்களிடம் முஸ்லீம்களுக்கு பகைமை உண்டென்றும் மேயோ உலகத்தாருக்குத் தெரிவிக்கவேண்டும். இவர்கள் இருவரும் அடித்துக்கொள்ளாமற் பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பு ஆங்கிலேயர்களைச் சார்ந்ததாகும் என்று நாகரிக உலகத்தாருக்கு அறிவிப்புச் செய்யவேண்டும். இவை மூன்றையும் "ஓரடியில்'' செய்து முடித்திருக்கிறார் மேயோ. மேயோவின் கூற்றைப்பெருமையாகக்கொள்ளும் இந்திய முஸ்லீம்களும் இருப்பார்களா?

இழிவாகப் பேசப்பெறும் ஹிந்துக்கள் எளிதிலே அழி படவில்லையே! ஆயிரம் ஆண்டுகளாக, ஹிந்துக்கள் அன்னியர்களுக்கு அடிமைகளாக வாழ்கின்றார்களெனினும், அவர்கள் அழிபட்டுப்போகாமையின் மர்மத்தை மேயோவை யொத்த அன்னியர்கள் தெரிந்துகொள்ளவில்லை. அதைப் பற்றித்தான், நாம் பெரிதும் வருந்துகின்றோம். பண்டைக் காலத்தில் உலக ஆதிக்கம் செலுத்திய நாடுகள் இருந்த இடம் தெரியாமல், புகழ் மங்கிக் கிடக்கின்றன. சில ஆண்டுகளாக, பிரான்சு நாடு ஜர்மனியின் நிலக்கரிச் சுரங்கங்களையும் இரும்புக் கழனிகளையும் அனுபவித்து வருகின்றது. இந்த பணச் சுரண்டலை, ஜர்மனியால் தாங்கமுடியவில்லை. சர்வ தேசசங்கத்திற்கும் ஏனைய அமைப்புகளுக்கும் மனுப் பண்ணிக்கொண்டு வருகின்றது. எத்தனையோ நூற்றாண்டுகளாக, இந்தியாவினின்றும் செல்வம் அன்னியர்களால் சுரண்டப்பெற்று வருகின்றது. இந்தியர் களைத்துப் போகவில்லை. காரணம் என்ன? இந்தியாவின் செழுமை காரணமா? இல்லை. ஹிந்துக்களின் வாழ்க்கை முறையும் சமயக் கோட்பாடுகளும் அவர்களது நாகரிகமுமே, இந்தியர்கள் களைத்துப் போகாமைக்குக் காரணமாகும். ஹிந்துக்களின் நாகரிகம் கட்டுவிட்டுப்போகக்கூடிய நாகரிகமல்ல. ஹிந்துக்களின் வாழ்க்கை முறை ஆடம்பரத்தைத் தழுவியதல்ல. ஹிந்துக்களின் தைரியம் தாக்கும்தன்மை கொண்டதல்ல; அது சகிக்கும் தன்மை கொண்டதாகும். ஹிந்துக்களின் ஊக்கம் பிறரை அழிப்பதற்காக செலவிடப்பட்டதில்லை. ஹிந்துக்களின் ஊக்கம் பிறரை ஆதரிக்க ஏற்பட்டதாகும். சீனுவுக்குச் சென்ற இந்திய புத்தத் துறவிகள்—அவர்களும் ஹிந்துக்கள்தான்—அந்த நாட்டை அழிக்கவோ, இந்தியாவுக்கு

வசப்படுத்தவோ எண்ணங்கொள்ளாமல், சீனர்களின் நாகரிகத்தை உயர்த்த சங்கற்பம் செய்துகொண்டு உழைத்தார்கள். அடைக்கலம் என்று வந்து அண்டினவர்களை ஹிந்துக்கள் எப்பொழுதும் சலிக்காமல் ஆதரித்து வந்திருக்கிறார்கள். பெரிய மனிதன் வாயில் புன்மொழி வராது. 'அழிந்துபோ' என்ற சொற்கள் ஹிந்துக்களின் வாய்மொழிகள் அல்ல. "உலகெலாம் வாழ்க" என்ற உணர்ச்சியும் சங்கற்பமும் கொண்ட ஹிந்துக்கள் ஒருநாளும் அழிந்துபோகமாட்டார்கள்.

ஹிந்துக்களுக்கு அழிவு ஏற்படுமானால், நல்ல தன்மைகளும் உயரிய இலட்சியங்களும் உலகத்தைவிட்டுப் பறந்துபோய், மனிதர்கள் விலங்குகளாகவோ அல்லது அரக்கர்களாகவோ மாறிவிட்டார்கள் என்று தயங்காமல் கூறிவிடலாம். ஹிந்துக்கள் பண்டைக்காலந் தொட்டு, சில இலட்சியங்களுக்காக உயிரை விட்டிருக்கிறார்கள்; உயிர்வாழ்ந்திருக்கிறார்கள். ஹிந்துக்கள் அழிந்துபோனால், அந்த இலட்சியங்களும் அழிந்துபோகும். ஐரோப்பிய நாகரிகம் போய்விடுமானால், தேசபக்தி என்ற உணர்ச்சி உலகத்தில் இல்லாமல் போய்விடும்; கலைகளின் சிறப்பு அழிந்துவிடும். உழைப்பின் பெருமை போய்விடும். செல்வப் பெருக்கு செத்துவிடும், ஜன நாயக அரசியல் தத்துவம் அழிந்துபோகும். ஆராய்ச்சி அறிவு அறவே ஒழிந்து போகும். எனவே, பாரத மாதாவை வணங்கவந்த அன்னியர்கள் அவளுடைய தொன்மையைக் கொண்டு அஞ்சி அடிபணிதல் வேண்டும். அவளுடைய நீடித்த ஆயுளைக்கண்டு வியப்படைய வேண்டும். ஹிந்துக்களின் நாகரிகத்தைச் சலிப்பின்றிப் புகழ வேண்டும்: பாரதமாதாவின் தன்மையும் ஹிந்துக்களின்

பெருமையும், விளங்காத மேயோவை யொத்தவர்களுக்கு, பாரதியார் கூறுவதென்ன ?

"பூமியினும் பொறை மிக்குடையாள் பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப்பார் முன நின்றிடுங்காற் கொடுந்
துர்க்கை யனையவள் தாய்."

"இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க; நன்மை வந்தெய்துக, தீதெலாம் நலிக" என்று இந்தியர்கள் சங்கற்பம் செய்து கொள்ளுவார்களாக !

அத்தியாயம் 9.

மண்ணில் தேய்வம்.

நமது நாட்டில் காதல் மணங்களே நிகழ்ந்ததில்லை என்று அபே துபாய்ஸ் என்ற பிரஞ்சுப் பாதிரியார் ஒருவர் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிவைத்துப் போய் விட்டார். துபாய்ஸ் அவர்கள் பெரிய "ஆஷாடபூதிச்' சாமியார் என்று அவர் எழுதிய ஏனைய எழுத்துக்களினின்றும் தெரியவருகின்றது: இந்தச்சாமியார் தானே, மேயோவுக்கு மேற்கோளாக அகப்படமுடியும்? மேலும் காதல் மணத்தின் அடையாளங்கள் என்னவென்று வினவுகின்றோம். மரத்தின் தன்மையைப் பழத்தினுல் தெரிந்து கொள்ளவேண்டும் என்பார்கள். காதல் மணம் இன்னதென்று தெரிந்து கொள்ளுவதற்கு, மணத்தினின்றும் பொதுவாகத் தோன்றும் விளைவுகளையல்லவா கவனிக்க வேண்டும்? மேநாட்டு நிகழ்ச்சிகளைச் சற்றுக்கவனிப்போம்.

அங்கு, காதல் மணங்கள் நிகழ்வதாகக் கூறப்படுகின்றது. அது உண்மையாயின், விவாக ரத்துக்கள் ஏற்பட்டிருக்க மாட்டாவல்லவா? அமெரிக்காவில் நடைபெறும் மணங்களில் நூற்றுக்கு ஐம்பதுவரையிலும் விவாக ரத்தாகி விடுகின்றன வாம். ஐரோப்பிய நாடுகளிலும் விவாக ரத்துக்கள் "அபாய மான தொகை"க்கு வந்து கொண்டிருக்கின்றன என்று ஜன சமூக நிர்வாகிகள் வருந்துகின்றூர்கள். எனவே, இந்தியா வில் காதல் மணம் இல்லையாயின், உலகத்தில் எங்கணுமே காதல் மணம் இல்லை என்று கூறிவிடலாம். இந்தியாவில் சுயம்வரம் (மண மகள் மண மகனைத்தானேதேடிக்கொள்ளு தல்) இல்லை எனக் கூறலாம். இப்பொழுது இல்லை என்பது உண்மை. மேலும் இளமைப் பருவம் துடிதுடித்துக் கொண் டிருக்கும் ஆணும் பெண்ணும் தங்களுக்கேற்ற ஜோடிகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளுவது அனேகமாய் முடியாத காரியம். பருவத்தின் துடிதுடிப்புக் கேற்றவாறு, சில தீய சம்பவங்கள் நேரலாமே யொழிய, அழியாக் காதல் ஏற்படும் என்று சொல்லுவதற்கில்லை. இளைஞர்கள் முகத்தைக்காண ஆவல்கொள்ளுவார்களல்லாது, அகத்தைக்காணமுயலார்கள். விரைவு, விரைவு, விரைவு என்பது தான் இளைஞர்களின் பல்லவியாகும். தன் மனம் இன்னதென்று அறிந்து கொள்ளாத இளைஞன், ஒரு கன்னியின் மனத்தை அறியக் கவலைப்படமாட்டான். அவன் வேண்டுவதெல்லாம் சில இன்பக்குறிகள் தான், களிப்புத் தோற்றம் தான். இவைகள் மாறிப்போயின், இவர்களுடைய காதலும் மாறிப்போகும். கட்சிக்காரர்கள் தங்கள் கட்சிகள் சம்பந்தப்பட்டவரையிலும் நீதிபதிகளா யிருக்கமுடியாது. மணவிஷயத்தில், பெற்றோர் கள் கவலை எடுத்துக் கொள்ளுவதுதான் உசிதமான

வேலையாகும்.' பெற்றோர்கள் உயர் நோக்கும் பகுத்தறிவும் இல்லாதவர்களாயின், அவர்களுடைய "மணவேலை" அறவே பயன்படாது என்பதும் உண்மை. மனைவியைக் கணவன் தாயாகப் பாவித்தல் வேண்டுமென்றும் கணவனை மனைவி தெய்வமாகப் பாவித்தல் வேண்டும் என்றும் ஹிந்துக்கள் தங்கள் இளம்பிராய முதற்கொண்டே போதிக்கப்பெற்று வருகின்றார்கள். கணவன் "மண்ணில் தெய்வம்" என்று கருதப் பெறுவதை மேயோ கேவி செய்கின்றார். இதை ஆராய்வோம்.

பண்டைக் காலத்து ஹிந்துக்கள் நிர்வாகத்தில்கைதேர்ந்தவர்கள். அவர்கள் பொய்யான தத்துவத்தைப் பேசினதில்லை, உபதேசித்ததுமில்லை; ஆடம்பரப் பேச்சுக்களுக்கும் அவர்களுக்கும்வெகுதூரம். எனவே, எந்தமுறையில்ஜனங்ங்களின், தனி நபர்களின் மனப்பான்மையை வளர்த்தால் குடும்பமும் ஜன சமூகமும் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் இயங்கிவரும் என்பதைச் சோதித்துப்பார்த்தார்கள். மணம் சம்பந்தப்பட்ட வரையிலும், மேற்கூறிய மனப்பான்மை உயர்வானது எனக் கண்டார்கள். அதை அமுலுக்குக் கொணர்ந்தார்கள். "காதல், காதல்" என்றுகூச்சலிடுவதில் பயனில்லை. "காதல், காதல், காதல், காதல்போயின் சாதல், சாதல், சாதல்" என்று பாரதியார் கூறுகின்றார். இருக்கப் பெறும் காதல் போயின், மறுமணத்துக்குத் தயாராயிருக்கும் ஜோடிகளுக்குள் காதல் இருந்ததாகக் கொள்ள முடியுமா? "எந்த ஸ்திரீயைத் தாங்கள் உயர்வாகக் கொள்ளுகின்றீர்கள்" என மிகப் புத்திசாலியான பெண் ஒருத்தி நபோலியன் சக்கரவர்த்தியைக் கேட்டாளாம். "வெறும் பேச்சுப் பேசும் வம்புக்காரி புத்திசாலியாயிருப்பினும் எனக்

குப் பிடிக்காது. எவள் ஒருவள் அதிகமாகக் குழந்தைகளைப் பெறுகின்றுளோ, அவளை நான் கும்பிடுவேன்" என்று நபோலியன் கூறினராம். கருத்தரித்தலையே அழிக்க முயன்றுவரும் மேநாட்டு ஆடவர்களும் பெண்களும் காதல் மணம் செய்து கொள்ளுகிருர்கள் எனக் கூறுவது இரவைப் பகல் என்று சொல்லுவதற்குச் சமமாகும். கவி தாகூர் கூறுவதைப் பார்ப்போம்.

"மணத்தின் பொருட்டு, தானே எழும் காதல் நம்பத் தக்கதல்ல. காதலை செவ்வனே வளர்ப்பதுதான் நல்ல விளைவைத்தரும். வளர்ப்பது என்பது மணத்திற்கு முன்னரே துவங்கப் பெறல்வேண்டும். எனவே கணவன் என்பவனை ஒரு கொள்கையாக, ஒரு இலட்சியமாகப் பெண்கள் கருதும்படி செய்வது நலம் எனப் பண்டை ஹிந்துக்கள் கொண்டார்கள். தேசபக்தி என்ற உணர்ச்சி மனிதர்களின் உள்ளத்தில் எவ்வாறு வேலை செய்கின்றதோ, அது போல கணவன் என்ற உணர்ச்சி, பெண்களின் உள்ளத்தில் ஒரு உயிருள்ள கொள்கையாக இலங்கிவருதல் வேண்டும்."

இதைமேயோ பெரிதும் கண்டிக்கின்றுர். கணவன் மனைவிக்கு, "மண்ணில்" தெய்வமாவது மேயோவுக்குப் பிடிக்கவில்லை. "மண்ணில்" தெய்வம் என்ற கருத்தால் ஏற்படும் தீமைகளை நாம் உணராமல் இல்லை. ஆனல் தீமை கலவாத நன்மையும் உலகத்தில் உண்டா? எந்தக் கருத்தையும் தர்க்க முறைப்படி முடிவுக்குக் கொண்டுபோனல், ஜன சமூகம் நடைபெருது. சமத்துவம் என்பது உயர்ந்த கருத்தும் கொள்கையும் இலட்சியமும் ஆகும். சமத்துவத்தை எழுத்தில் காணலாம்; ஆனல் அதை வாழ்க்கையில், அநுபவத்தில் காணமுடியாது. சமையற்காரன் சமத்துவம்

பாராட்டி, சிமையல் வேலையை நிறுத்திவிட்டு, குருச்சியில் உட்கார்ந்து பத்திரிகை படிக்கத் துவக்கினல், எஜமானன் குடும்பம் என்னவாகும்? போரில், சிப்பாய் தளகர்த்தனுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல், சமத்துவம் கொண்டாடி, சேனதிபதியுடன் வாதாடினல், போரின்முடிவு என்னகும்? சமத்துவத்திற்காகப் போராடும் மாந்தர்கள் தங்களுக்கு ஓரளவு உயர் பதவி கிடைத்தவுடன், சமத்துவத்தைப் பற்றி வாய் திறக்க மாட்டார்கள். ஏன்? அவர்கள் சுபநலக்காரர்களாக ஆகிவிட்டார்களா? இல்லை. சமத்துவத்தைப் பற்றிய உண்மையான அநுபவம் தாங்கள் முன்னேறிய பின்னர் தான் அவர்களுக்கு உதயமாகின்றது. அனுபவத்தில் நற்பயனைக் கொடுக்காத, காணுத கொள்கையை, மலட்டுக் கொள்கை, பூசல் விளக்கும் கருத்து என்று தள்ளிவிட வேண்டும். ஆனல் காதல் இந்த இனத்தைச் சேர்ந்த தல்ல என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ரவீந்திரர் கூறுவதைப்போல, நாம் காதலை வளர்க்கவேண்டும்.

காதல் மணம் இந்தியாவில் இருந்ததில்லை என்று அபே துபாய்ஸ் சாமியார் கூறியிருப்பதற்கு மறுப்புப் போல நமது நாட்டில் பல மணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஸாவித்திரி ஸத்தியவான் இணையற்ற சதிபதிகள்; நள தமயந்தியைப் பற்றிக் கேள்விப்படாத இந்தியனுமிருக்கமாட்டான். தில்லி அரசன் பிருதிவிராஜனும் அவரது மனைவி ராணி சம்யுக்தையும் ஒப்பற்ற காதலர்கள் என்பது சரித்திரமூலமாய் விளங்கும். ஆங்காங்கே நாடு முழுதும் எத்தனையோ காதல் மணங்கள் நடை பெற்றிருக்கின்றன. அவைகளை விரித்துரைக்க வேண்டிய தேவையில்லை. கணவன் இறந்தபின் உயிர்வாழாத பல பெண் பிள்ளைகளை நாம் பார்த்திருக்கிறோம். மனைவி

இறந்த பின்னர் பித்துக் கொண்ட கணவன் மார்கள் எத்தனைபேர்களோ? முதல் மனைவி இறந்த பின்னர் சித்தப்பிரமை வந்து பாபுவிபின சந்திர பாலர் இந்தியா முழுதும் சுற்றித் திரிந்தார். இதைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பேசத் தேவையில்லை. காதலறிந்தவர்கள் மேநாட்டார்கள் என்றும் காதல் தெரியாதவர்கள் கீழ் நாட்டார்கள் என்றும் வகுத்துக் கூறுவதற்கில்லை. எல்லா நாடுகளிலும் எல்லாவகை நிகழ்ச்சிகளும் நேருகின்றன என்று பொதுப்படக் கூறுவதுதான் பொருத்த முள்ளதாகும். என்றாலும், காதற் சுவையை உணராவிடினும் காதற் கனியை அருந்துபவர்கள் ஹிந்துக்கள் என்று உறுதியாகக் கூறலாம். நான் எழுதுவதற்கும் மேயோ பொருள் விகாரம் செய்வாரோ என்ற அச்சம் எனக்குண்டு, ஆனால் மேயோவுக்குத் தமிழ்த் தெரியுமா? சொல்லடுக்கிலும் தேன்மாரிப் பிரசங்கத்திலும் மலட்டுத் தத்துவத்திலும் மனிதவர்க்கம் உய்வுகாண்பதில்லை. சராசரி ஐரோப்பியக் குடும்பத்தையும் சராசரி இந்தியக்குடும்பத்தையும் நடுநிலையில் நின்று நோக்கினால், நான் கூறியதன் உண்மை விளங்கும். பூசலையும்விவாகரத்தையும் கள்ளச்சேர்க்கையையும்சாதாரண நிகழ்ச்சிகளாகக் கொண்டிருக்கும் ஐரோப்பியக் குடும்ப வாழ்க்கை மேன்மை கொண்டது என்றுகூற எவராலாகும்? ஹிந்துக்குடும்பவாழ்க்கையிலும் பல சீர் திருத்தங்கள் ஏற்படுதல் வேண்டும். அதை நாம் தவக்கமன்னியில் ஏற்றுக் கொள்ளுகிறோம். மனித உணர்ச்சியும் நிர்வாகத்திறனும் அனுபவமும் நிறைந்த பண்டைக்கால ஹிந்துக்கள் வகுத்த வாழ்க்கைத்திட்டத்தை காலத்தை முன்னிட்டு சிற்சில பகுதிகளில் மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். இவையாவை என்று பின்னர் கூறப்படும். அவைகளில் ஒன்று மேயோ குறிப்பிட்டிருக்

கும் காதல்" மணம் அல்ல என்று மட்டும் கூறி அப்பால் செல்லுவோம்.

பெண் பிறந்து விட்டதே என்று ஹிந்துக்கள் வருந்துவார்கள் என மேயோ கூறுகின்றார். மேயோவின் அனுபவம் நமதல்ல. பெண்தான் பிரபஞ்சம் என்று அறிந்து கொண்டிருக்கும், புகட்டப் பட்டிருக்கும் ஹிந்து பெண் பிறந்ததைக் குறித்து வருந்துகிறான் என்று கூறுவது எவ்வாறு உண்மையாகும்? எந்த ஆபாச ஹிந்துக் குடும்பத்தைக் கண்டு மேயோ மேற் கூறிய முடிவுக்கு வந்தாரோ, நாம் அறியோம். மாப்பிள்ளைக்குப் பரிசாகப் பணமும் கொடுத்து பெண்ணையும் தானமாக அளிப்பது தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்குள்ளிருக்கும் வழக்கமாகும். பிராமணன் சம்பந்தப்பட்ட வரையிலும் பிள்ளையின் படிப்புச் செலவும் பெண்ணின் விவாகச் செலவும் அனேகமாய் ஒன்றுதான்; எனவே அவன் கூட வருந்தக் காரணமில்லை. ஹிந்துக்களின் சமுதாய வழக்கம் பார்ப்பனர்களின் வழக்கத்தினின்றும் எடுத்துக் கொள்ளப் பெறவில்லை. எனவே ஒரு பகுதியாரின் வழக்கத்தை சமுதாயத்தின் வழக்கமாக மேயோ கூறியிருப்பது பொய்யாகும், புதுமையாகும். ஒரு சமஸ்தானத்தில் பதினேறு தலை முறைகளாகப் பெண் இல்லாததற்குக் காரணத்தை மேயோ கூறுகின்றார். சமஸ்தான நிர்வாக சபை உறுப்பினர் கூறினாராம்:— "துரைகளே! எங்களுடைய வழக்கங்கள் தங்களுக்குத்தெரியும். நிச்சயமாய் அதன் காரணத்தையும் தாங்கள் அறிவீர்கள். பெண் குழந்தைகள் பிறந்தன. ஆனால் இந்தத்தலை முறை வரையில் அவைகள் வளர விடப்பட்டதில்லை." பெண் குழந்தைகளைக் கொன்று விடுவது அந்த அரண்மனையின் வழக்கமென்று குறிப்பிடப்படுகின்றது. இதைக் காட்டிலும்

அடாத பொய் கூட இருக்கமுடியா? பெண்களைக் கொல்லும் வழக்கம் அரண்மனையில் தலை முறை தலை முறையாக இருந்து வருகின்றது என்று எவனாவது இந்திய அரசாங்கத்தைச் சார்ந்த நிர்வாகி ஒருவரிடம் ஒப்புக்கொள்ளுவானா? ஒப்புக் கொண்டாலும் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் அந்த நிர்வாகி உத்தியோகஸ்தர் வாளாவிருந்திருப்பாராகில், அவர் எத்தகைய தன்மை படைத்தவர் என்பது சொல்லாமலே விளங்கும். அத்தகைய நிர்வாகியை மேயோ மேற்கோளாகக் காண்பித்திருக்கிறார். அந்த நிர்வாகி யார் தெரியுமா? பஞ்சாப் படுகொலைக் காலத்தில் கவர்னராயிருந்த ஸர் மைகல் ஓட்வயர் அவர்கள்தான். அவர் கூற்றுக்கு எவ்வளவு வரையில் மதிப்பு வைக்கலாம் என்று இந்தியர்களுக்குத் தெரியும்.

"சாம்ராஜ்யச் சட்டத்தால், இந்தியாவின், தடுக்கப் பெற்ற, இந்தப் புராதனப் பழக்கம் (குழந்தைக் கொலை) எளிதிலே, இரகசியமாக அனுஷ்டிக்கப் பெற்று, நாட்டின் பல பகுதிகளில் இன்னும் இருந்து வருவதாகத் தெரிகிறது."

"தேர்ந்த கை" யாயிருந்தாலொழிய, இத்தகைப பச்சைப் பொய்யை எழுத்தில் எழுத முடியாது. பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் பரம்பரையாக இந்த நாட்டில் இருந்து வருகின்றது என்று மேயோ குறிப்பிட்டிருக்கும் பொய்யைப் பற்றி நினைத்து, இந்தியத் தாய்மார்கள் மனம் கசிந்து போகார்களா? கங்கையில் குழந்தைகளைத் தூக்கிப் போடுகிறார்கள் ஹிந்துக்கள் என்று முன்னர் மேநாட்டுப் பாதிரிமார்கள் தங்கள் நாடுகளில் பிரசங்கம் செய்து, பத்திரிகைகளிலும் எழுதுவதுண்டு என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்தப் பொய் மேயோவின் பொய்க்கு "உரை

போட''க் காணுது. இந்த அடாத பொய்யை எழுதிய மேயோ, " இந்த சம்பவங்களுக்குப் புள்ளி விபரம் கொடுக்க முடியாது" என்று சாமர்த்தியமாய்த் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிருர். மேயோ பழி சுமத்தவும் வேண்டாம்; ஓட்டமும் எடுக்க வேண்டாம்.

"பெற்ருேர்கள் (ஆண்) பிள்ளையைக் கவனித்துக் கொள்ளுகிருர்கள், ஆனுல் பெண் குழந்தையைக் கடவுள்தான் கவனிக்கின்ருர்."

என்று ஜனத் தொகைக் கணக்கு இலாகா அதிபர் ஒருவர் மேயோவினிடம் கூறினுர். உருசுக் காண்பிக்க முடியாத இந்த வாக்கு மூலத்தைக் கடவுள்தான் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பது நமது கோரிக்கை.

குழந்தையொன்று சிகிச்சையின் பொருட்டு, ஆஸ்பத்திரிக்குத் தாயால் கொண்டுவரப் பெற்றதாம். சில நாட்கள் தாய் தனது குழந்தையுடன் ஆஸ்பத்திரியிலேயே இருந்தாள். பின்னர் கணவன் வந்தானும். "எனது இல்வாழ்க்கையின் உபயோகத்தின் பொருட்டு, எனது மனைவியை அழைத்து கொண்டு செல்ல, நான் வந்திருக்கிறேன்" என்று வைத்தியரிடம் அவன் சொன்னுனும். இந்த சம்பவம் நம்பத்தக்கதா என்று யோசித்துப் பாருங்கள். நிலைமை ஒருக்கால் கீழ்க் காணுமாறு இருந்திருக்கலாம். மனைவியிடமோ அல்லது ஆஸ்பத்திரி வைத்தியரிடமோ, அவனுக்கு நம்பிக்கை யில்லாமலிருக்கலாம். எனவே, அவன் தடித்தனமாய் மேற் கூறியவாறு கேட்டிருக்கலாம். இந்தச் தனிச்சம்பவம் உண்மை யென்று கொண்டாலும், தனிமரம் தோப்பாகாது என்று கூறுவோம். மனிதனுடைய கடுமையான உத்தரவுக்கு மீறி

நடக்க அஞ்சிப் அந்த ஸ்திரீ தன் கணவனைப் பின்பற்றி ஓட்டமெடுத்தாளாம். என்ன கற்பனை !

"கணவன்தான் மனைவிக்கு மண்ணில் தெய்வமாவான்" என்று பத்ம புராணம் கூறுவதை மேயோ கேலிசெய்கின்றார். கேலி செய்வதில் என்ன இலாபம்? கற்பிற் சிறந்தவர்கள் ஹிந்துப் பெண்மணிகள் என்று உலகம் ஆதிகாலம் தொட்டுப்போற்றி வருகின்றது. உலகத்தாரின் நன் மதிப்பு ஹிந்துப் பெண்மணிகளுக்கு இருக்குமளவும், மேயோவின் கேலி குத்திப்பாயாது. ஆனால் ஒரு எச்சரிக்கைமட்டும் ஹிந்து ஆண்களுக்குச் செய்கின்றோம். குருவும் சீடனும் வழிப் பிரயாணம் செய்தார்கள். நடுவே, வெள்ளப்பெருக்குக் கொண்ட ஆறு குறுக்கிட்டது. ஆற்றைக் கடக்கவேண்டும். தோணியில்லை. "குருபாதமே துணை" என்று உறுதி கொண்டு, சீடன் ஆற்றில் இறங்கி, வெள்ளத்தைக் கடந்து விட்டான். தன் பாதத்துக்கு மகிமை இருக்கிறது என்று மயக்கம் கொண்ட குரு, "என்பாதமே துணை" என்று வெள்ளத்தில் இறங்கி, இறந்துபோனாராம்! ஹிந்து மனைவி தனது கணவனைத் தெய்வமாகப் பாவிப்பதில் தவறு இல்லை. ஆனால் கணவன் தன்னைத் தெய்வமாகக் கருதிக்கொண்டு, கேவலமாக நடந்து கொள்ளுவது தவறு என்று எச்சரிக்கை செய்தல் நலமாகும்.

பெண்கள் இந்தியாவில் ஆண்களுக்குப் பணிந்து நடப்பது பல நூற்றாண்டுகளாக என்று மேயோ கூறுகின்றார். மேயோ கூறுவது இடைக்காலத்தில் தோன்றிய தீமையாகும். பெண் சுதந்திரம், "பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச் சதுமறைப்படி மாந்தர் இருந்த நாள், தன்னிலே பொதுவான வழக்கமாம்" என்று பாரதியார் கூறுகின்றார்.

மாதவப் பெரியோருடன் ஒப்புற்றே வாழ்ந்தனர் பெண்மணிகள் என்று கூறப்படுகின்றது. கால மாறுபாட்டால், வழக்கங்கள் மாறுவது இயல்பு. முன்னோர்களிடம் அளவுகடந்த பக்திகொண்ட ஹிந்துக்கள் சிற்சில துறைகளிற்கூட தங்கள் பழக்கங்களை மாற்றிக்கொள்ள அஞ்சி நிற்பது விசனிக்கத் தக்கதாகும். ஆனால் மேயோ கூறுமளவு, தீமை பெருகிவிடவில்லை என்று நாம் துணிந்து கூறுவோம்.

"தனது உணர்ச்சியை, மோகத்தை, தாபத்தை அடக்கிக் கொள்ளுமாறு தாய் தனது புதல்வனுக்குக் கற்றுக் கொடுப்பதில்லை. அவனுக்கு ஆகாரம் கொடுக்கவோ, அல்லது அவனை வளர்க்கவோ, அவள் முறையறியாள். குழந்தையின் வயிற்றில் அரைஞாள் கொடியொன்றைக் கட்டி, வயிறு அந்தக் கயிற்றை முட்டும் வரையில், அவள் குழந்தைக்கு அன்னம் ஊட்டுவாள்"

மேயோ எழுதும் ரத்தினங்களை நண்பர்கள் ஊன்றிக் கவனித்து வருகின்றார்கள் என நம்புகின்றோம். குழந்தை வளர்க்கும் முறை இந்தியத் தாய்க்குத் தெரியாது என்று மேயோ கூறும் கூற்றை யார் நம்புவார்கள்? ஆங்கில ஆட்சிக்கு முன்னர், இந்தியாவில் வீரர்கள் தோன்றினதுண்டா, இல்லையா? உண்டானால், அந்த வீரர்களை வளர்த்தது தாய்மார்களா, அல்லவா? பிரதாப சிம்மன் முதல் மகாத்மா காந்தி வரையில் இந்தியாவில் தோன்றி யிருக்கும் வீரர்களை நற்பழக்கத்தில் வளர்த்தது அவர்களின் தாய்மார்கள் என்று வற்புறுத்திக் கூறவும் வேண்டுமோ? காந்தி தமது தாய்க்கு சத்தியம் செய்து கொடுத்திராவிடின், எக்கதிக்கு ஆளாகியிருப்பார்? அது நண்பர்களுக்குத் தெரியும். இதை மேயோ தெரிந்து கொள்ளவும் வேண்டுமோ?

"என்றாலும் பையன் மணந்துகொண்ட பின்னர், தனது தாயைத் தனது மனைவியைக் காட்டிலும் உயர்வாகக் கொண்டு, அடிக்கடி அவளிடம் உண்மையான அன்பு செலுத்தி, மரியாதை காண்பிப்பான்."

இதையேனும் மேயோ தெரிந்துகொண்டிருக்கின்றமை கண்டு, நாம் மகிழ்வடைகின்றோம். மேநாட்டில், "காதல் மனையாளும் காதலனும்" தங்கள் பெற்றோர்களை அவர்களின் முதுமைப் பருவத்தில் பேணுவதில்லை என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. தனிக்குடும்ப வாழ்க்கையின் பயன் யாதெனின், வயது முதிர்ந்த பெற்றோர்கள் இன்னலுக்குள்ளாகி வாழ வேண்டியதைத் தவிர, வேறு நற்கதி அவர்களுக்குக் கிடையாது. ஹிந்து நாகரிகத்தின் சிறப்பு, பொதுக்குடும்ப வாழ்க்கையாகும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதை உலக மக்கள் அனைவரும் நன்றாக உணர்தல் வேண்டும். தன்னை தான் தோன்றியாக எவரும் எண்ணிக் கொள்ளுதல் கூடாது. இந்தியாவில் பெண் மதிக்கப்படுவதில்லை என்று முன்னர் எழுதிய மேயோ "தாய் மதிக்கப்படுகின்றாள்" என்று எழுதியிருக்கிறார். தாய் என்பாள் பெண் இனத்தைச் சேர்ந்தவளல்லள் போலும்! காதலுக்குச் சிறப்பான தூண்டுகோல் காமமாதலின், பெண்ணைக் கும்பிடுவதைக் காட்டிலும் தாயை (தாய்த் தன்மையை)க் கும்பிடவேண்டும் என நமது மூத்தோர்கள் வகுத்திருக்கிறார்கள். இல்லறத்தில் பழகாத இளைஞனுடைய காம உணர்ச்சிக்கும் தகப்பனான மனிதனுடைய காம உணர்ச்சிக்கும் வேற்றுமை இல்லையா?

"போற்றிதாய் என்று தாளங்கள் கொட்டடா!
போற்றிதாய் என்று பொற்குழ லூதடா
காற்றி லேறியவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே"

அத்தியாயம் 10.

"பாபத்தின் கூலி"

பாபத்தின் கூலி மரணமாகும் என்று கிருஸ்தவ வேதமாகிய பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த அத்தியாயத்துக்கு மேயோ "பாபத்தின் கூலி" என்று தலைப்பெயர் கொடுத்திருக்கிறார். பாபத்தின் கூலி என்ன? பாபத்தின் விளைவு வைதவ்யம் (கைம்பெண் நிலை) என்று மேயோ குறிப்பிட்டிருக்கிறார். இந்த அத்தியாயத்தைப் படித்ததும் நமது கண்களில் நீர்பெருக்கு எடுத்தது. இந்தியாவில் தற்போது கைம்பெண்களின் நிலைமை பொறுக்கக் கூடியதல்ல. மேலும் பல வாண்டுகளாக, கைம்பெண்களின் நிலையைக் குறித்துப் பரிந்து பேசியும் எழுதியும் வந்திருக்கும் எனக்கு, மேயோவின் இந்த அத்தியாயத்தைப் படித்தவுடன், கண்ணீர் பெருகாமலிருக்க முடியுமா? ஆனாலும், உண்மையை உள்ளபடி எடுத்துரைக்க, மேயோ சக்தியும் மனப்பான்மையும் அற்றவர். எனவே, நிகழ்ச்சிகளுக்குத் தலை, கால்வைத்து ஜோடித்து, மேயோ, உண்மையை ஆபாசப்படுத்தி யிருக்கிறார். ஹிந்து விதவைகளுடைய தற்கால நிலைமை பொறுக்கக் கூடியதல்லவாயினும், மேயோ இவர்களைப்பற்றித் தவறாகவும் வேண்டுமென்றும் எழுதியிருக்கும் எழுத்தை அறவே பொறுக்க முடியவில்லை. பொய்யைச்சொல்லிச் சீர்திருத்தம் செய்யமுடியாது. ஆனால் மேயோவின் நோக்கம் இந்தியர்கள் சீர்திருத்தம் அடையவேண்டுமென்பதல்லவே? "இந்தியர்கள் அயோக்கியர்கள், ஆண்மையற்றவர்கள், அசடர்கள் ; எனவே, அவர்களை முன்

னேறச் செய்யும் பொறுப்பை ஏற்று நடத்திவரும் ஆங்கிலேயர்கள் உலகத்தில் சிரஞ்சிவிகளாக வாழவேண்டும்'' என்பது மேயோவின் பல்லவியாகும். இந்தப் பல்லவிக்கு இணங்கித் தான், அவரால் சுரம் பாடமுடியும்.

"கைம்பெண் நிலை ஒரு பெண்ணுக்கு நேரவேண்டுமானல், அது அவள் பூர்வ ஜன்மத்தில் செய்திருக்கும் பாபத்தின் பயனேயாகும்.''

இவ்வாறு இந்தியாவில் பொதுவாக ஒரு எண்ணம் இருக்கிறது. இதை மேயோ குறிப்பிட்டிருக்கிருர். கருமபலன் என்ற உயர்ந்த தத்துவத்துக்கு விகாரப் பொருள் தோன்றிய காலமுதல், ஹிந்து ஜனசமூகம் சீர் குலைந்து வருகின்றது என்று சொல்லலாம். பொதுவாகத் தலைவிதி என்று பலர் கூறுகின்றுர்கள். ஆனல் விதியை ஒப்புக்கொள்ளமனமில்லாத கூட்டத்தார், தலைவிதிக்குப் பதிலாக, கருமபலன் என்ற சொற்களை உபயோகித்து வருகின்றுர்கள். சொற்கள் மாற்றமேயொழிய, பொருள் மாற்றமேயில்லை. விதியும் கருமபலனும் ஒன்ருமா? ஆகாது. விதியை நம்புகிறவர்கள் முஸ்லீம்கள். அவர்களுக்கு ஆங்கிலத்தில் பேடலிஸ்ட்ஸ் (fatalists) என்று பெயர். விதி என்பது ஆண்டவன் கட்டளையாகும். எல்லாம் ஆண்டவன் கட்டளை என்ற துணிவு கொண்டு, முஸ்லீம்கள் உலகத்தில் பல நாடுகளைக் கட்டியாண்டார்கள். ஆனல், விதியையும் மதியால் வெல்லலாம், அதாவது கருமத்தால் விதியை வெல்லமுடியும் என்று ஆதிகாலந் தொட்டு ஹிந்துக்கள் பிடிவாதமாக நம்பியும் பிறர்க்கு உபதேசம் செய்தும் வந்தார்கள். அவர்களுடைய புகழும் உலகத்தில் ஓங்கி எழுந்தது. ஆனல் கருமபலன் என்பதற்குத் தவருன பொருள் செய்து, சோம்பலுடன் வாழத் துவக்கிய

காலமுதல், ஹிந்துஜனசமூகம் ஜீவ சத்துக்குன்றி, சிதறிப் போகத் தலைப்பட்டது. அன்று முதல் ஹிந்துஜன சமுகத்தைச் சார்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் கெட்டகாலம் வந்ததாகக் கொள்ளவேண்டும். எனவே, கைம்பெண் நிலை பூர்வ ஜன்மத்தின் கருமத்தின் பயன் என்று ஹிந்துக்கள் தவருகக் கொண்டால், அது இயல்புதான்; ஆனல் அறிவில்லாத்தனமாகும்.

கருமபலன் என்பது இயற்கையின் போக்காகும்; ஏக்கத்தைப் போக்கி மனிதனுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கும் ஜீவதாது நிறைந்துள்ள தத்துவம் கரும பலனுகும். கரும பலனுக்கும் சோம்பலுக்கும் வெகுதூரம். கருமபலன் தோல்வியைக் கண்டு அஞ்சாது. வெற்றியைக் கண்டு, கருமபலன் ஆரவாரம் செய்யாது. கருமபலன் மனிதனுடைய ஆணவத்தைக் குறைத்து, அவனுடைய அடக்கத்தையும் அன்பையும் விருத்தி செய்யக் கூடியதாகும். எல்லோரும், எப்பொழுதும், விதிவிலக்கின்றி, கருமத்தின் மூலமாய் ஈடேற முடியும் என்று சதா காலத்திலும் அறிவிக்கும் தீபஸ்தம்பம் கருமபலன் என்ற தத்துவம். இத்தகைய தத்துவத்துக்கு போலி வியாக்கியானம் தோன்றிய விந்தைதான் எனக்குப் புலனுகவில்லை.

கருமபலன் என்ற தத்துவத்துக்கு விகாரப் பொருள் தோன்றவே, விதவைகளின் பாடும் திண்டாட்டமாய்ப் போயிருத்தல் வேண்டும். ஹிந்து விதவைகளின் நிலைமை, ஒரே ஒரு பகுதியில் கேவலமாக விருக்கின்றது. மறுமணம் என்ற சுதந்திரம் ஹிந்து ஆணைப் போல, பெண்ணுக்கு இல்லை என்பது உண்மை. ஆணுக்கு இருக்க முடியாத தன்னடக்கம் பெண்ணுக்கு இருக்கும் என்று எண்ணி, வித

ஸவயின் வாழ்க்கைத் திட்டத்தை வகுப்பது தவறுதும். ஒரு சங்கிலியின் சக்தி எங்கேயிருக்கிறது? அதனுடைய பலமான கரணையில் யில்லை. பலவீனமான கரணையின் சக்திதான் சங்கிலியின் சக்தியாகும்: மனிதர்களுடைய பலவீனங்களைக் குறிக்கொள்ளாமல் வாழ்க்கை முறையை அமைப்பது முட்டாள் தனமாகும். விதவைகள் என்ற கூட்டத்தார் இந்தியாவில் தோன்றியதற்குத்தக்க காரணம் நமக்குத் தெரியவில்லை. ஆணுக்குச் சன்னியாசமும் பெண்ணுக்கு வைதவ்யமும் சமமாக ஏற்பட்டிருக்கக் கூடுமோ என்பது நமது சந்தேகம். மனிதவருக்கத்திலிருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உலகத்தில் ஒரு காலத்தில் பற்று விட்டுப் போகவேண்டும் என்ற எண்ணத்தால் மேற் கூறிய இருவகை வாழ்க்கை முறைகளும் ஏற்பட்டிருக்கலாம். அல்லது ஆணைக் காட்டிலும் பெண் அதிகமான ஜனத் தொகை கொண்டு, விதவைகளுக்கு மறுமண உரிமையும் ஏற்பட்டிருந்தால், பல்லாயிரக் கணக்கான பெண்கள் மணமின்றித் தவிப்பார்களே யென்ற நல்லெண்ணம் கொண்டு, வைதவ்யம் வற்புறுத்தப்பட்டிருக்கலாம். மேலும் சில நிகழ்ச்சிகளில் அரசியல் நோக்கம் கலந்திருக்கும். பிரான்சு நாட்டில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மணத்தில், அதாவது பிராஜ உற்பத்தியில், விருப்பமில்லை என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். ஜனத் தொகை குறைந்து போகுமாயின் அரசாங்கத்தின் வலுக் குறைந்து போகும். சேனை முதலிய சாதனங்களுக்கு ஆள் வசதி ஏற்படாது. எனவே, பிரஞ்சு அரசியலார் என்ன செய்தார்கள்? ஆண் குழந்தை பிறந்தால் இவ்வளவு பரிசு தாய்மார்களுக்குக் கொடுப்பதென்றும், பெண் குழந்தைக்கு இவ்வளவு என்றும் அரசாங்கத்தார் அறிவிப்புச் செய்திருந்தார்கள்.

கலியாணமாகாத ஸ்திரீயும் குழந்தை பெறலாம். அதை பிரஞ்சு அரசாங்கமும் ஜன சமூகமும் வெறுப்பதில்லை. இந்த ஏற்பாட்டைக் கண்டவர், கற்பிழத்தலுக்கு இது தூண்டுதலாயிருக்கும் என்ற மலட்டுத் தத்துவம் பேசலாமா? இது அரசியல் தேவை என்று அனுபவமுள்ளவர்கள் கூறுவார்கள். இதைப் போலவே, வைதவ்யம் இந்தியாவில் பண்டைக் காலத்தில் அரசியலாரால் வற்புறுத்தப் பெற்றிருக்கலாம்.

கட்டாய வைதவ்யம் பெண்ணிற்கு மட்டும் ஒதுக்கி வைக்கப் பெற்றிருப்பதைப் பற்றி நமக்கு வருத்தந் தான். ஆணுக்கும் மறுமண உரிமை இருந்திராமலிருக்குமாகில், விதவைகளுக்கு வெகு காலத்திற்கு முன்னரே கதி மோட்சம் ஏற்பட்டிருக்கும். அது போகட்டும், தற்போதைய நிலைமையைக் கவனித்துச் சீர்திருத்தம் செய்ய, ஹிந்து சமூகம் முயற்சி செய்யுமா? ஆனால் மேயோவின் பொய்யைப் பாருங்கள்.

> "தனது காலஞ் சென்ற கணவன் வீட்டிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் விதவை வேலையாளாகின்றாள். எல்லாக் கடின வேலைகளும் அவளைச் சேர்ந்தது. அவளுக்குச் சுகமொன்றுங் கிடையாது; அவள் பட்டினி கிடக்கவேண்டும்"

வைதவ்யம் என்பதே கொடுமையாகக் கொள்ளப்படுவது பார்ப்பனர்களின் வீடுகளிலேதான். பார்ப்பனர் வழக்கத்தை ஹிந்து, இந்திய ஜனசமூகத்தின் பொதுவான வழக்கமாகக் கொண்டு, மேயோ மபங்கிப் பிறரை மயக்குகின்றார். இதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். மேயோ கூறியிருக்குமாறு, பார்ப்பனர் இல்லங்களிலும் விதவை எல்லோருக்கும் வேலையாள் அல்ல. கடினமான் வேலைகள் யாவும் அவளைமட்டும் சேர்ந்ததல்ல.

மேலும் அவள் பட்டினியும் கிடப்பதில்லே. விதவைகள் அடிக்கடி விரதம் பிடிப்பார்கள். ஆண்கள் கூட விரதம் இருக்குங் காலத்தில் பட்டினிகிடப்பார்கள். விதவைகள் சம்பந்தப்பட்ட வரையிலும், அவர்களுக்கு மறுமண உரிமை யில்லாத அநீதிதான் பொறுக்கத் தக்கதல்ல. அதற்காக வேறு வகைகளிலும் அவர்கள் வருந்துகின்றூர்கள் என்று கூறுவதும் பெரும் பொய்யாகும்.

> "மனேவிகளே எளிதிலே அடக்கி, நோய்க் காலத்தில் (பெண்கள் ஆண்களுக்கு) உதவிசெய்யும் பொருட்டும் கணவன் மார்களுக்கு விஷம் கொடுக்காமல் தடுப்பதற்கும், வைதவ்யம் வற்புறுத்தப் பெற்றது என்று பெர்னியர் என்ற பிரஞ்சுப் பிரயாணி கூறுகின்றூர்"

வைத்யம் ஏற்பட்டதற்கு மேயோ கூறும் காரணம் ஹிந்து நாகரிகத்துக்கும் இயற்கைக்கும் ஏற்றதே யில்லே. பலாத்காரத்தின் பயனற்ற தன்மையை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக, ஹிந்துக்கள் உணர்ந்து வந்திருக்கின்றூர்கள். மேலும் அக்காலத்துப் பெண் மக்கள் கோழைகளுமல்ல. எனவே, சூழ்ச்சியைக் கொண்டோ அல்லது பலாத்காரத்தை நாடியோ, பண்டைக் காலத்து ஹிந்து சட்ட வல்லுனர்களும் ஜனசமூக நிர்வாகிகளும் வைதவ்யத்தை வற்புறுத்தி யிருக்க முடியாது. மேலும் விஷமிட்டு கணவன்களேக் கொல்லவேண்டுமென்ற மனப்பான்மை ஹிந்துப் பெண்களுக்கு எக்காலத்திலும் இருந்திருக்க முடியாது. நம்பிக்கைத் துரோகம் முதலிய துர்க் குணங்கள் ஹிந்து நாகரிகத்தின் போக்குக்குப் புறம்பே யுள்ளதாகும். வைதவ்யத்தின் கொடுமையைக் கண்டு அஞ்சி, பெண்கள் விஷம் கொடுக்கமாட்டார்கள் போலும்! மேயோ கூறியிருப்

பது குழந்தை வாதமாகும். கொலை செய்பவனுக்கு, தலைக்கு மிஞ்சிய ஆக்கினை இல்லை என்று தெரியும். விஷம் கொடுக்கத் தீர்மானம் கொள்ளுபவள், வைதவ்யத்தின் கொடுமையைக் கண்டு ஒருபொழுதும் அஞ்சமாட்டாள். பெண் சமூக முழுதும் வைதவ்யத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், அது அச்சத்தால் இருந்திருக்க முடியாது. வேறு தூண்டுதலும் காரணமும் இருந்திருக்க வேண்டும். தூய வாழ்விலும் தொண்டு வாழ்விலும் கருத்துக்கொண்டு, பெண்மணிகள் வைதவ்யத்தை விருப்புடன் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், அந்தக் காரணத்தை இப்பொழுதும் கூற முடியாது என்பதைமட்டும் நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்.

விதவை தன்னைப் பொசுக்கிக் கொள்ளுவதும் தனது உயிரை மாய்த்துக்கொள்ளுவதும் கைம் பெண் நிலைக்குப் பயப்பட்டு என்று மேயோ கருத்துக் கொண்டிருக்கிறார். இந்திய ஸ்திரீகளின் மனப் பான்மையை மேயோ ஒரு பொழுதும் அறிய மாட்டார். வானம் இடிந்து விழுந்தாலும் வாய் திறவாமல் சகித்துக் கொண்டிருக்கும் ஆற்றல் ஹிந்துப் பெண்மணிகளுக் குண்டு. இதனாலேதான், ஹிந்து ஜன சமூகம் கட்டுக் குலையாமல் வந்திருக்கிறது. மேலும், இந்த காரணத்தினாலேதான், அவ்வப்போது தேவையான சீர்திருத்தங்களும் காலத்துக் கேற்றவாறு நடைபெறவுமில்லை. சகிப்புத் தன்மை ஹிந்துக்களுக்கே பொதுவான தன்மையென்று கொள்ளவேண்டும். இல்லாவிடின் அன்னியர்களின் ஆட்சியையும் அவதூறுகளையும் அவர்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்களா? எவராலும் தங்கள் சிறப்பான வாழ்வைக் கெடுக்கமுடியாது என்பது ஹிந்துக்களின் திமிர் கொண்ட தீர்மானமாகும்.

விதவைக்கு ஜீவனாம்ச பாத்தியம் கிடையாது என்று மேயோ கூறியிருக்கிறார். இது மோயோவின் புதிய சட்டம் போலும்! இறந்த கணவனுக்குப் பொருளிருப்பின், அதில் ஒரு பகுதி அவனுடைய விதவையைச் சேரும் என்பது இந்தியர்கள் யாவரும் அறிந்த விஷயம். ஆனால், உலகத்தார் ஹிந்துக்களைப்பற்றி கேவலமாக நினைக்கவேண்டாமா? எனவே, ஹிந்து விதவைக்கு ஜீவனாம்ச பாத்தியம் கிடையாது என்று மேயோ கூறுவார். மேயோவுக்கு உள்ளபடியே சீர்திருத்த நோக்கமிருப்பின், அவர் இந்தப் பொய்யை எழுத்தில் பொறித்திருக்க வேண்டியதில்லை. ஆனால் மேயோவின் எழுத்து, மேநாட்டுச் சந்தை விற்பனைப் பொருள் அல்லவா? சந்தைக்கு ஏற்ற சரக்கை ஏற்றுமதி செய்யாவிடின், மேயோவின் வியாபாரம் நடக்குமா? ஜீவனாம்ச பாத்திய மில்லாத விதவைக்கு பிழைப்பு எப்படி நடக்கும்? மேயோ சும்மா யிருப்பாரா? அவர் கூறுகின்றார்:—

"பிறகு அவள் (விதவை) தருமத்தால் பிழைக்கவேண்டும்; அல்லது உடலை விற்றுப் பிழைக்கவேண்டும். (பின் கூறியவாறு) அடிக்கடி நேருகின்றது."

"ஹிந்துக்களில் ஆண்கள் கற்பை யறியாதவர்கள்; பெண்கள் எளிதிலே கற்பை இழந்து விடுகிறார்கள். கைம்பெண் நிலையிலும், பெண்கள் கற்பழிந்து போகின்றனர்." இது மேயோவின் கருத்து. ஹிந்து சமுதாயம் எதிர்காலததில் எத்தகைய விடையளிக்குமோ, அதை நாம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றோம். ஆனால் மேநாட்டைப்பற்றி சிறிது யோசித்துப் பார்ப்போம். அங்கே மறுமண உரிமை இருக்கின்றது. ஆனால் திக்கற்ற, கற்பிழந்த பெண்கள் தெருக்களில் பிச்சை எடுத்தும், ஏழை விடுதிகளில் வசித்தும்

மடிகின்றார்கள். வேலைக்காரப் பெண்ணைத் தொட்ட தனவந்தன் அவளை மணப்பதில்லை. அவள் தன் மானம் இழந்து வேலையையும் இழந்து, கருப்பமும் தரித்து, தெருக்களில் பிச்சை எடுத்து ஜீவனம் செய்யவோ, அல்லது உயிரை விடவோ, நேருகின்றது. மேநாட்டு ஜனசமூகப் போக்கை என்னென்று கூறுவது? சென்ற போர்க்காலத்தில், "போர்க் குழந்தைகள்" என்ற நூதன ஜந்துக்கள் தோன்றின. எங்கே? ஐரோப்பிய நாடுகளில். போர்க்குழந்தைகள் என்றால் என்ன? போருக்குச் சென்று திரும்பி வந்த சிப்பாய், சாதாரணமாக, எந்தக் கன்னியுடனும், எளிதிலே கலந்து விடக் கூடிய வசதி இருந்தது. மணமின்றிப் பிறந்த குழந்தைகளை யார் வளர்ப்பது? அரசாங்கத்தார் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளாவிடின், இந்தக் குழந்தைகளின் கதிஎன்னுயிருக்கும்? காதல் மணம் நிறைந்திருக்கின்றது என்று கூறப் பெறும் ஐரோப்பிய நாடுகளில் நேர்ந்திருப்பவற்றை, இந்தியர்கள் கவனிப்பார்களாக! ஹிந்து விதவைகளைப் பற்றிப் பேசத்துணிந்த மேயோ "போர்க் குழந்தை"களுக்காகப் பாடு பட்டிருக்கலாம். சென்ற போர்க்காலத்தில், ஐரோப்பிய நாடுகளில், எந்த ஆணும் எந்த பெண்ணும் எந்த விடத்திலும் முத்தமிடலாமாம்! அதை ஜனசமூகம் குற்றமாகக் கருதவில்லையாம்! கற்பை எளிதாகக்கொண்டு வாழ்க்கை நடத்திய நாட்டார் ஏனையோருக்கு உபதேசம் செய்து அனுதாபம் காண்பிக்க முன் வந்து விடுகிறார்கள்! அது இந்தியா செய்த பாபம் போலும்!

"அவள் (விதவை) தனது சகோதரனைப் போலவே, குழந்தைப் பிராயத்தில் காமத் தூண்டுதலின் மத்தியில் வளர்

ந்து வந்தாள். இந்த எண்ணத்தில் வளர்ந்து, இந்த விருப்பத்தில் தூண்டப் பெற்றிருக்கும் பெண் நியாயமான முறையில், தனது இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளாமல் தடுக்கப்பெற்றால், கட்டுப்பாட்டை மீறி அவளது விருப்பம் சென்றால், அது விநோதமாகுமா''

என்று மேயோ வினவுகின்றார். ஜீவனோபாயமில்லாத ஹிந்து விதவைகள், பிழைப்புக்காகத்தங்கள் உடலை விற்கின்றார்கள் என்று குறிப்பிட்ட மேயோ, அத்துடன் நிறுத்துவாரா? காமத் தூண்டுதல்களினிடையே வளரும் ஹிந்துப் பெண்கள், விதவையான பின்னர் சும்மாயிருக்கமுடியுமா என்று மேயோ வினவுகின்றார். ஹிந்து விதவை சும்மாயிருந்திருக்கிறாள்; சும்மா யிருக்க முடியும். சும்மா யிருக்க முடியாது என்று குறிப்பிடாமல், மேயோவால் இருக்கமுடியாது. ஹிந்து விதவை கற்பிழப்பது விநோதமல்ல. மேயோ அதைக் குறிப்பிடாமலிருந்தால், அது தான் விநோதமாயிருக்கும். இதற்குமுன் நிகழ்ச்சிகள் என்பன போன்றவைகளைத் தமக்குச் சாட்சியமாகக் கூறிய மேயோ, ஊகமும் செய்யத் துவக்கிவிட்டார். போலி நிகழ்ச்சியும் பொய் அனுதாபமும் சேர்ந்து கொண்டால், கோய் கொண்ட கற்பனைக்கு எல்லையுமிருக்குமா? பைத்தியம் கொண்டது நாய் என்று கூறிவிட்டால், எந்தக் கருவியைக் கொண்டு அதைக் கொன்றால் என்ன? அது பாதகமாகுமா? தீமை பயக்கும் ஹிந்து நாகரிகம் என்று கூறும் மேயோ, அதைப்பற்றி எதைத்தான் கூறாமல் விடுத்துவிடுவார்? ஆண் ஆயிற்று, பெண் ஆயிற்று, குழந்தைகளைப் பற்றிப் பேசியாகி விட்டது. விதவைகளைப் பற்றிப் பேசவேண்டாமா? சித்திரத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமேல்லவா?

ஹிந்துவிதவைகளைப்பற்றி மேயோ கேவலமாக எழுதி யிருக்கிறார் என்று ஹிந்துக்கள் ஆத்திரப்படுவதில் பிரயோசனமில்லை. மேயோ விதவைகளைப் பற்றி பொய் எழுதியிருக்கிறார் என்று கொண்டு ஹிந்து சீர்திருத்தக்காரர்கள் மனம் நோக வேண்டாம். ஹிந்து விதவைகளின் பண்டை இலட்சியம் எப்பொழுது அழிந்து போயிற்றோ, அதன் பின்னர் அவர்களுடைய திக்கற்ற நிலைமை மட்டும் மிகுதியாக நிற்பது அநியாயமாகும். ஹிந்து ஜனசமூகமே, தற்போது தனது கட்டுக் குலைந்து, தனது பண்டைத் தன்னடக்க இலட்சியங்களை உதறித் தள்ளிவரும் பொழுது, ஹிந்து ஆண் மக்கள் தங்கள் விதவைகளின் பரிதாப நிலையைக்கண்டும் அவர்களுடைய நிலைமையின் சீர்திருத்தத்தில் நாட்டம் கொள்ளாமலிருந்தால்—மேயோ சொல்ல வேண்டியதில்லை, அது எல்லோருக்கும் எளிதிலே தெரிந்துவிடும்—ஹிந்து ஜனசமூகத்தின் உயிர்ச் சத்து விரைவில் அழிந்துபோகும். ஒழுங்கற்ற முறைகளில் நபர்கள் தங்கள் விருப்பங்களைக் கட்டுப்பாடின்றிப் பூர்த்தி செய்துகொள்ளும் நிலைக்கு வந்துவிட்டால், அந்த ஜன சமூகம் பாழ் பட்டுப் போய்விடும். பண்டை நாகரிகங்கள் உலகத்தில் அழிந்து போனவகை இதுதான். ஹிந்துக்கள் விழித்துக்கொள்ளுவார்களாக!

விடுதலை! விடுதலை! விடுதலை!

“ மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே,
தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரி, நிகர், சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே.”

அத்தியாயம் 11

குழந்தையின் பிறப்பு

பெண் குழந்தைகள் தேவிக்கு முன்னர் உட்கார்ந்து கொண்டு, பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனராம். அவர்கள் எதற்காகப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பெண்களின் குரு கேட்கப்பட்டனராம்.

"எதற்காக ஒரு பெண் பிரார்த்தனை செய்யவேண்டும்? கலியாணமாகாவிட்டால், நல்ல கணவன் கிடைப்பதற்காக; மணம் முடிந்திருந்தால், அவளுடைய அடுத்த ஜன்மத்தில் இன்னும் உயர்வான கணவன் கிடைக்க".

என்று குரு விடையளித்தனராம். இதை மேயோ குறிப்பிட்டிருக்கின்றார். மேயாவுக்கு ஐரோப்பிய நாடுகளின் தற்கால இலக்கியப் போக்குத் தெரியாதுபோலிருக்கிறது. மேநாடுகளில் இப்பொழுது இருவித இபக்கங்கள் வலுத்து வருகின்றன. தொழிலாளர்களும் பெண்களும் தத்தம் விடுதலைக்காகப் போராடிவருகின்றார்கள். முதலாளிகளை நம்பலாகாது என்று தொழிலாளர்கள் கூறுகின்றார்கள். ஆண்கள் மோசக்காரர்கள் என்று "விடுதலைப்" பெண்கள் கூவுகின்றனர். அதுமட்டுமா? தங்களுக்கு மணமும் சேர்க்கையும் வேண்டாம் என்கின்றனர் பெண்கள். இந்த நிலைமை நேருமாகில், பிரபஞ்ச விருத்தி எவ்வாறு நடைபெறும்? மோசக்கார ஆண்பிள்ளைகளை நம்பி, பெண்கள் தாய்மார்களாக ஆக விருப்பங் கொள்ளவில்லையானல், பிரஜா உற்பத்தி தடைபட்டுப் போனல், மேயோவை யொத்தவர்கள் பிறந்திருக்க முடியுமா? சீர்திருத்தப்

பேச்சோ, அவதூறு எழுத்தோ எவ்விடத்தில் நிகழும்? எனவே, அறிஞர்களும் ஆசிரியர்களும் பிள்ளைப் பேற்றின் மேன்மையையும் அழகையும் தேவையையும் பெண்களுக்கு எடுத்துக் காண்பிக்கும் பொருட்டு, நூல்கள் எழுதுகின்றார்கள். பெண்ணைத் தாய் என்று துவக்க முதல் ஹிந்துக்கள் அழைப்பதன் இரகசியத்தை நண்பர்கள் தெரிந்துகொள்ளுவார்களாக! முதலில்லாமல், தொழில் நடக்காது. பிள்ளைப்பேறு என்ற இயற்கைத் தூண்டுதலை வெட்டி யெறிய முயன்றால், பிரபஞ்சம் நிலைக்காது. பெண் கணவனைத் தேடி குழந்தையைப் பெறவேண்டும் என்று கூறினால், இளைஞர்களுக்கும் பொறுப்பில்லாதவர்களுக்கும் ஆகாயத் தத்துவம் பேசுபவர்களுக்கும் நகைப்பு உண்டாகலாம். பிரபஞ்சம் இருந்தாலல்லவோ, நகைப்பும் ஏனைய நிகழ்ச்சிகளும் தோன்றும்?

பண்டை ஹிந்துக்கள் அனுபவ சாலிகள். இல்லறத்தின் தேவையையும் பெருமையையும் ஒருங்கே உணர்ந்து அதற்கென தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார்கள். பிள்ளைகளுக்கு சிறு பிராயந் தொட்டு தேசபக்தி புகட்டப்பட வேண்டுமானால், உபாத்திமார்கள் அவர்களுக்கு நாட்டுப் பற்றை ஊட்டும் கதைகளையும் பாட்டுக்களையும் கற்பிக்கின்றார்கள். இள மூங்கிலைத் திருத்தாமல் விட்டுவிட்டால், அது ஒழுங்காக வளர்ந்து, குறவன் கைக் கருவியாகவும், அழகுடன் வளைந்தால், மூங்கில் பல்லக்குக்கு உபயோகமாகி, அரசன் தலைக்கு மேலே யிருக்கும் என்று ஒரு பாட்டுண்டு. கணவன் என்றால் காம உணர்ச்சி தோன்றும் என்று எவரும் ஐயுற வேண்டியதில்லை. கவி ரவீந்திரர் கூறுவதுபோல, கணவன் என்பது ஒரு கொள்கையாக, தத்துவ

மாக, கருத்தாக, இலட்சியமாகப் பாவிக்கப்பட்டுப் போதிக்கப்படல் வேண்டும். கணவன் என்ற சொல்லில், ஆபாசச் சேஷ்டைகள் குறிப்பிடலாகாது. தேச பக்தி என்றால் அன்னியனைக் கொல்லுவது என்று பொருள் செய்யலாமா? தேசபக்தி என்றால் போர் என்று பொருளா? தேச பக்தியைக் குழந்தைகளுக்குப் போதிக்கும் உபாத்திமார்கள் குழந்தைகளின் கைகளில் கத்திகளைக் கொடுக்கவேண்டாம். அதுபோலவே, புணர்ச்சியைக் கூறாமல், பிள்ளைப் பேற்றைப் பற்றி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் எடுத்துரைக்க முடியும். ஹிந்துப் பெண்கள் தக்க கணவன்மார்களை வேண்டித் துதிப்பதில் பாதகமில்லை. ஹிந்துப் பெண்களின் இந்த நிலைக்கு ஐரோப்பியப் பெண்கள் இன்னும் நூறு ஆண்டுகளுக்குள் வருவார்கள் என்பது எனது துணிபு. அதற்கான குறிகள் வாழ்க்கையிலும் இலக்கியங்களிலும் ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளில் தோன்றி விட்டன.

இனி, ஹிந்துக் குடும்பங்களில் குழந்தை பிறக்கும் வகையைப்பற்றி மேயோ கேலி செய்கிறார். ஹிந்து நாகரிகத்தை ஏற்காத மேயோ, ஹிந்து மருத்துவ முறையை ஏற்றுக் கொள்ளுவாரா? ஹிந்து மருத்துவச்சிமார்களின் பேரில் மேயோவுக்குக் கோபம். மேயோ, ஐரோப்பிய மருத்துவச்சிமார்களின் தொழிலபிவிருத்தியின் பொருட்டு, ஹிந்துக் குழந்தைகள் பிறக்கும் வகையைக் கேலி செய்திருக்கிறாரோ என்று சந்தேகம் கொள்ளவேண்டி யிருக்கிறது.

> "பிள்ளை சாகாத, குறை மாதத்தில் பிரசவிக்காத ஒருத்தி மருத்துவச்சியாக விருக்க வேண்டும்"

என்பதை மேயோ கேலி செய்கின்றார். மருத்துவ குலம் என்று தனிக்குலம் ஒன்று இருக்கவேண்டாம் என்

பது மேயோவின் கருத்து. என்ன செய்வது? ஹிந்து ஜன சமூகம் தொழில் பற்றிப் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வகுப்புக்கள், உயர்வு தாழ்வு உணர்ச்சியின்றி, உழைத்துவந்த வரையிலும், ஜன சமூகத்தின் சமுதாய வேலை செவ்வனே நடைபெற்று வந்தது. எனவே, பரம்பரைத் தொழிலில் ஒருவன் எளிதிலே நிபுணனாதல் கூடும். இள நிலவில் காதல் பெருகுகின்றது; தென்றற் காற்றில் உற்சாகம் தோன்றுகின்றது. வெற்றியினால், சக்தி விருத்தியடைகின்றது. இவ்வாறு நேருவது இயல்பு. ஊமைகளுக்கு நடுவேயிருக்கும் குழந்தைக்குப் பேச்சு எளிதிலே வருமா? பரம்பரைத் தொழில் எவருக்கும் எளிது. இதை அனுபவத்தால் எவரும் காணலாம். மனிதனுக்குள்ள குறைவுள்ள சக்தியைச் செட்டுடனும் சாமர்த்தியத்துடனும் கலகமின்றியும் ஜனசமூகம் உபயோகித்துக் கொண்டு, நற்பயன் அடையும்பொருட்டு, ஹிந்துக்கள் தொழில் பற்றி பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். இந்த ஏற்பாடு இக்காலத்திற்கு ஏற்காமலிருக்கலாம். ஆனால் அது வேறு சங்கதியாகும்.

ஹிந்துக்களின் வீட்டில், பிரஸவ காலங்களில் மருத்துவம் செய்யும் மருத்துவ குலத்து ஸ்திரீகளை மேயோ வருணித்திருக்கும் வகை நாகரிகமாயில்லை. குருடும், நோயும், முடமும், முதுமையும், வறுமையும் கொண்ட ஸ்திரீகள் தான் மருத்துவத்துக்கு வருவார்களாம்! மேயோ கற்பனைக்கு எல்லையை யாரால் வகுக்கமுடியும்? பிரசவ சம்பந்தமாக மேயோ கூறுவது முழுப் பொய்யாகும். பின்னர் மேயோ பிரசவ அறையை வருணிக்கின்றார். அழுக்குத் துணிகள்தான் அங்கிருக்குமாம்! அந்த அறையில் குப்பை

நிறைந்திருக்குமாம்! ஒடிந்த கட்டில் கிடக்குமாம்! பிரசவிப்பவளுக்கு தலையணை யெது தெரியுமா? பசுவின் சாணியாம் அல்லது கற்களாம்! அறை மெழுகப்பெற்றிருக்காதாம்! கூட்டவும் பெற்றிருக்காதாம்! பிரசவ வேதனை துவக்கியபின் மருத்துவச்சி கூப்பிட்டனுப்பப் பெறுவாளாம்! அந்த சமயம் அவள் நல்ல உடையிலிருந்தால், அதைக் களைந்தெரிந்து விட்டு, கந்தைகளை உடுத்திக் கொள்ளுவாளாம்! அந்தக் கந்தைகளில் தொத்து நோய்கள் நிறைந்திருக்குமாம்! இத்தனை வைபவங்களுடன், அவள் பிரசவ அறைக்குள் நுழைந்து, கதவை மூடிக்கொள்ளுகின்றாளாம்! சுவரில் ஏதேனும் ஓட்டை இருந்தால், அதை அவள் மூடி விடுவாளாம்! பிரசவ காலத்தில் காற்று கெடுதல் என்பது அவள் கருத்தாம்.

சுகப் பிரசவம் நேராவிட்டால், கழுவாத, அழுக்கடைந்த மோதிரங்களைக் கொண்ட, தனது கைகளைவிட்டு, குழந்தையை வெளியே எடுப்பாளாம்! குழந்தையின் கை, கால், எது அகப்பட்டாலும், அதைப் பிய்த்து வெளியே கொண்டு வருவாளாம்! இதைத் தவிர, வேறு பல முயற்சிகளும் மருத்துவச்சி செய்வாளாம்! கர்ப்பிணியை சுவரோரத்தில் நிறுத்தி முட்டுவாளாம்! கர்ப்பிணியின் தொடைகளைக் கைகளால் இடிப்பாளாம். நகங்களால், தொடைச் சதைப் பிய்ந்து போகுமாம்! கர்ப்பிணியைப் படுக்கப் போட்டு, அவள் பேரில் நடப்பாளாம். விரைவில் பிரசவம் நேருவதற்கு, நரம்புத்தூண்டுதல் ஏற்படுவதற்காக, மருத்துவச்சி சில உபாயங்களை நாடுவாள் என்று மேயோ கூறியிருக்கிறாள். நாணத்தினால் அவைகளை நான் இங்கு கூறவில்லை. பிறந்த குழந்தையின் தொப்பிள் கொடியை அறுப்பதற்கு, மூங்கில் பிளாச்சு, தகரம், துருப் பிடித்த ஆணி, உடைந்த கண்ணாடி

—இவைகளில் ஏதேனு மொன்று உபயோகப்படுத்தப்படு மாம். இவைகளைப்பற்றி நாம் அதிகமாக ஒன்றும் சொல்லு வதற்கில்லை. மே நாட்டார்கள் ஹிந்துக்களைப் பற்றி எவ் வளவு கேவலமாக எண்ணிக்கொள்ள வேண்டுமோ, அதற் கேற்ற முறையில், இது எழுதப்பெற்றிருக்கிறது. அவ்வள வோடு நிறுத்திக் கொள்ளுவோம்.

"பிறந்தது பெண்ணுயிருந்தால், வேண்டாத அந்த உயிரை, அப்பொழுதே, அங்கேயே போக்குவதற்கு, பரம் பரையாகப் பல எளிய உபாயங்கள் கற்றுக் கொடுக்கப்பெற் றிருக்கின்றன."

மேயோவின் பிரசவ வருணனையை இலக்கிய விநோதம் அல்லது இழிவு என்று பொறுத்துக் கொண்டு போய்விட லாம். பிரசவ அறையில் பெண் குழந்தைகள் கொல்லப் படுகின்றன என்று அடாத பொய்யை அச்சில் பொறித் திருக்கும் மேயோவுக்கு பெண் தன்மையும் மனச் சான்றும் உண்டா என்பது எனது சந்தேகம். அவர் நாகரிகக் கூட் டத்தைச் சேர்ந்தவரல்லர் என்பதை வாசக நண்பர்கள் எவ் வளவு காலத்துக்கு முன்னரேயே கண்டு கொண்டிருப்பார் கள். கலப்பில்லாத பொய் மூட்டையை, மேயோவைப் போல அவிழ்க்க யாராலும் முடியாது என்பது நமது துணிபு.

பிரசவித்தவர்களுக்குப் பத்தியம் போடு முன்னர், அவர்கள் இரண்டொரு நாட்கள் பட்டினி கிடக்கின்றார்கள். இது நமது நாட்டில் பரம்பரையாக இருந்துவரும் வழக்கமா கும். உடலிற் காணப் பெறும் பலவகை நோய்களை பட்டினி கிடந்து தீர்த்து விடலாம் என்பது இந்தியர்களின் அனுபவ சித்தாந்தம். பிரசவ காலத்தில், நரம்பு நிலை சரியா

யிருக்காது. நரம்புகளின் நிலைமையைச் சரிப்படுத்துதல் வேண்டும். இதற்கென, பிரசவித்தவர்களுக்கு ஆகாரத்தினின்றும் ஓய்வு கொடுக்கப்பெறுகின்றது. ஆகாரம் கொடுக்காமைக்கு, மேயோ தமது வழக்கம்போல, விநோதக் காரணம் கூறுகின்றார்.

" நோக்கம் செட்டு சம்பந்தம் கொண்டது எனத் தோன்றுகின்றது; அதாவது குடும்பப் பாத்திரங்களை தீட்டுப் படாமல் பார்த்துக்கொள்ளும் பொருட்டு. மேலும் அதற்குப் பழைய கொள்கை என்ற கீர்த்தியு மிருக்கின்றது. அதற்கு குடும்ப செட்டு போராதரவு அளிக்கின்றது."

குடும்பப் பாத்திரங்கள் தீட்டுப் படாமலிருப்பதற்காக, இரண்டொரு நாட்கள்கழித்து பத்தியம் போடப்பெறுகின்றது என்று மேயோகூறும் சமாதானம் அனுபவத்திற்கு ஒத்ததல்ல. ஏனெனில் "வந்த தீட்டு," இரண்டொரு நாட்களுக்குள் " ஓடிப்"போவதில்லை. கஷ்டங்களை அனுபவிக்கும் சந்தர்ப்பங்களில் கூட ஹிந்துக்களை மேயோ கேலி செய்யவேண்டும். வாதத்திற்கு மருந்து கொடுக்கலாம்; பிடிவாதத்திற்கு யார் வைத்தியம் செய்ய முடியும்?

" இன்னும் சில வகுப்புகளில், பிரசவித்த தாய், தனது புதிதாய்ப் பிறந்த குழந்தைக்கு மட்டுமல்ல, தனது மூத்த குழந்தைகளுக்கும் (முலைப்பால்) கொடுக்க வேண்டும். பிரசவ வேதனைப்படுங் காலத்திலும்—இது அடிக்கடி நேருகின்றது—மூன்று வயதுக் குழந்தை தாயின் மார்பிலிருந்து பால் உண்ணும். "அது கத்திற்று; அதற்குப் பசி. வேறு ஆகாரம் அதற்குப் பிடிக்கவில்லை" என்று வெளியிலிருக்கும் ஸ்திரீகள் சமாதானம் கூறுவார்கள்."

மேயோவின் " குறும்புத் தனத்தை" இவ்வளவுதான் என்று முடித்துக் கூற முடியாது என்று நண்பர்கள் இதற்

குள் தெரிந்து கொண்டிருப்பார்கள். மேயோ எழுதியிருக்கும் இந்த அவதூறிலும், இந்தியத் தாய்மார்களின் பெருங்குணத்தைக் காணலாம். புதிய குழந்தையைத் தவிர, மூத்த குழந்தைக்குமட்டுமல்ல, குழந்தைகளுக்கும் (ஒருமையல்ல, பன்மை) தாய் பால் கொடுக்கின்றாள் என்று மேயோ அவதூறாக எழுதியிருப்பினும், அதை நாம் அவதூறாகக் கொள்ளவில்லை. ஹிந்துத் தாய் என்பதற்கே தியாகம் என்று பொருள் கொடுக்கலாம் என்று இதனினும் தெளிவு படுகின்றதல்லவா? ஒரு நாளும் தன்னலமே யறியாத ஹிந்து தாய்மார்களைக் கும்பிட வேண்டுமென்ற எண்ணம் கொள்ளாமல், மேயோ கேலி செய்கின்றாரே! தாய்மாரின் தியாக உணர்ச்சி அவருக்குண்டா? அவருக்கு விளங்குமா? மறந்து விட்டோமே! மேயோ தான் மணமாகாத கன்னியாயிற்றே! அவருக்கு தாயின் உணர்ச்சி எவ்வாறு விளங்கும்? அகம் பாவம் கொண்டவர்களுக்கு மனித உணர்ச்சி இருக்காது, விளங்கவும் விளங்காது.

"பலவீன, நோய் கொண்ட பரம்பரையினாலும், அற்ப உணவினாலும் இளமை மணத்தாலும் அகாலப் புணர்ச்சியினாலும் தொத்து நோயாலும், இந்திய ஸ்திரீகளிற் பெரும்பாலோர் விலாப் பழுப்பதில்லை. உள்ளே உடற் கூறு சரியாக இவர்களுக்கு அமையப் பெறுவதில்லை. எனவே, சுகப் பிரசவமாவது அருமை. ஆங்கில, அமெரிக்க ஸ்திரீ டாக்டரோ அல்லது ஆங்கில முறையில் பயிற்சி பெற்ற இந்திய ஸ்திரீயோ, இவர்களிடம் கருணை கொண்டு கவனித்துப் பாரத்தாலொழிய, சித்திர வதையை யொத்த துன்பத்துக்காளாகி, இவர்கள் மரிக்கின்றார்கள். இந்த உதவி மிகச் சமீபத்திலிருப்பினும், அது நோயாளிக்குக் கிட்டாமல், கணவனோ அல்லது குடும்பத்தின் "பெரிய மனிதியோ"—பரம்பரைக்

கொள்கைகளிடம் தமக்கு இருக்கும் பக்தியின் காரணமாக —தடுத்து விடுகின்றார்.''

மே நாட்டு வைத்திய முறைக்கு மேயோ "வக்காலத்து" எடுத்துக்கொண்டு, ஐரோப்பிய டாக்டர்களின் தொழிலபிவிருத்தியின் பொருட்டு, அவர் பரிந்து பேசுகிறாரோ என்ற சந்தேகம் நமக்குண்டு என்று நாம் எழுதியிருந்தோம். மேலே மேயோ எழுதியிருப்பதை, நாம் கூறியதற்கு ஏன் ஆதாரமாகக் கொள்ளலாகாது என்று நமது வாசக நேயர்களைப் பணிவுடன் வினவுகின்றோம். மே நாட்டார்களின் ரண வைத்தியச் சிகிச்சைத் திறனில் நமக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டு. நமக்கு மேநாட்டு வைத்தியர்களிடம் பொறாமை இருக்கக் காரணமுமில்லை. ஆனால் மேநாட்டு ரண சிகிச்சைக்கு யாதொரு தேவையுமில்லாமலே, இந்தியர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். திடீரென்று சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குள், இந்தத் தேவை ஏற்பட்டதற்குக் காரணத்தைக் கூறாமல், குற்றப் பத்திரிகைமட்டும் படிக்கும் மேயோவை நம்ப முடியாது. மேயோ கூறும் காரணங்கள் உண்மையாயிருப்பின், இந்தியர்கள் இரண்டொரு தலைமுறைகளிலேயே அழிந்துபோயிருப்பார்கள். சுமார் பலநூறு வருஷங்களாக சுகப்பிரசவமே மலிந்திருந்த இந்த நாட்டில், பெண்கள் வைத்தியர்களின் உதவியை, பிரசவத்திற்காகத் தேடவேண்டிய தேவை ஏற்பட்டதேன்? அதற்குக் காரணத்தைக் கூறாமல், எவரும் மழுப்புவதில் பயனேயில்லை. சுகப் பிரவசமில்லா திருப்பின் ஹிந்துக்களின் வாழ்க்கையின் சீரும் ஒழுங்கும் குலைந்து போய் இருக்கவேண்டும். போதிய உணவு இந்தியர்களுக்குக் கிடைப்பதில்லை என்பது யாவரும் அறிந்த விஷயம்.

இந்தியர்கள் ஏழைகள்; எனவே பணச்செலவு பிடிக்கும் ஐரோப்பிய டாக்டர்களிடம் அவர்கள் எவ்வாறு செல்ல முடியும் ? ஏழைக் குடித்தனத்துக்கும்ராஜ வைத்தியத்திற்கும் ஒவ்வுமா ? மேயோ கூறும் காரணங்கள் சரியானதல்ல.

மேயோவினிடம் வைத்தியர் ஒருவர் பின்வருமாறு கூறினாராம் :—

"ஏழைகள் மட்டும்தான் இதைப்போல கஷ்டப்படுகிறார்கள் என்று நீங்கள் நினைக்காதீர்கள். வழக்கம் என்ற காரணத்தைக்கொண்டு, அறிவில்லாத மருத்துவச்சிகளை உபயோகப்படுத்தி, மனைவிமார்களை அழுக்குக் கந்தைகளின் பேரில், (பிரசவகாலத்தில்) படுக்கவைக்கும் கலாசாலைப் பட்டதாரி இந்தியர்களிற் பலரின் வீடுகளை உங்களுக்கு நான் காண்பிக்கமுடியும். பீ.ஏ. பட்டப் பரீட்சை முறையில் அறிவுப் பயிற்சி கலக்கப்பட வில்லை."

மேயோவைக் காட்டிலும் மேயோவின் வைத்திய நண்பரின் கூற்று பாதகமில்லை. "பீ.ஏ. படிப்புக்கு அறிவு தேவையில்லை. பீ.ஏ. பட்டதாரிகளிடம் அறிவுக் கலப்பில்லை" என்று அவர் கூறியிருக்கும் சொற்களை, வேறு காரணங் கொண்டு, நாம் முழுமனத்துடன் ஆமோதிக்கின்றோம். ஆங்கில ஆட்சியில், இந்தியர்கள் கல்வியின் மூலமாய் நாகரிகப்படுத்தப் பெற்று வருகின்றார்கள் என்று கூறப்படுவது பொய் என்று மேற்கூறப்பட்டதிலிருந்து தெளிவாகின்றதல்லவா ? அறிவு கலப்பில்லாத கல்வி இந்தியர்களுக்கு ஏன் கொடுபடல் வேண்டும் ? வைத்திய நண்பர் கேலிக்காக சொல்லியிருப்பினும், அதில் உண்மையிருக்கிறது. பயனற்ற கல்வியாயின், அதனால் இந்தியர்களுக்கு இலாபமில்லை. நல்ல கல்வி கொடுக்கப் பெறினும் இந்தியர்களின் பண்டைப்

பழக்க வழக்கங்களை மாற்ற முடியாமற் போயின், மேநாட்டார் இனியும், இந்தியர்களை நாகரிகப்படுத்தும் முயற்சியில் தலையிட்டுச் சிரமப்படவும் வேண்டாம். தன்னல மற்ற முயற்சி செய்து வருவதாகக் கருதிவரும் மேநாட்டார் நமது சொற்களுக்குச் செவிசாய்க்கப் போகின்றனரா? அன்னியர்களின் உதவியும் உபதேசமுமின்றித் தங்களால் உயர்வாழ்வு வாழ முடியும் என்று இந்தியர்கள், அன்னியர்களின் கண்களுக்குத் தெளிவாகத் தோன்றுமாறு காண்பித்தாலொழிய நாம் சமாதானம் கூறுவதற்குப் பொருள் இல்லை.

> "சில நிலமைகளிலே தான், சில வகுப்பார்களிடமே தான், இந்திய ஜனங்களுக்குள் மூட பக்தி இருக்கின்றது என்று சொல்லமுடியாது. நோய் கடவுளின் வருகைக்கு அடையாளம் என்று ஸ்திரீகள் சாதாரணமாய் நம்புகின்றார்கள். மருந்தும் ரண சிகிச்சையும், கடவுளைத் துரத்தி விடுவதால், ஆண்டவனுக்குக் கோபம் வந்து விடும். தெய்வங்களுக்குக் கோபம் உண்டாக்குவது கெட்டகாரியமாகும்"

இந்த எழுத்தைப் படிக்கும் அன்னியர்கள் என்ன எண்ணிக் கொள்ளுவார்கள்? இந்தியர்களைக் காட்டிலும் மூடர்கள் உலகத்திலேயே யில்லை என்ற முடிவுக்குவரு வார்களல்லவா? உண்மையிலேயே, நோயைக் கடவுளின் வருகை என்று இந்திய ஸ்திரீகள் நம்புகிறார்களா? எதற்காக மேயோ இவ்வாறு வீண் புரளி செய்யவேண்டும்? சாவைக்கூட எதிர்த்துப் போராடிய ஹிந்து ஸ்திரீயின் கதையை நண்பர்கள் படித்திருக்கிறார்கள். ஸாவித்திரி இயமனோடு போராடியதாகக் கூறப்படுவதில்லையா? எவ்வாறு போராடினாள் என்பது கேள்வியல்ல. சாவுடனும் எதிர்த்துப் போராடும் ஆற்றலும் மனப்பான்மையும் இந்தியப் பெண்மணிகளுக்கு உண்டு என்ப

தற்கு அதுவு ஒரு குறிப்பாகும். திக்கற்ற நிலைமையில், நிகழ்ந்த சம்பவங்களினுல் துன்பமும் துயரமும் அடைந்த ஏழை மக்கள் தங்கள் மனத்தில் அமைதியைத் தேடிக் கொள்ளுவதற்காக, பல பொருளற்ற சமாதானங்களை ஏற்பது ஒரு வகை மனித இயல்பு. துயரத்திலாழ்ந்த ஒருவன் அதை விட்டு எவ்வாறு எழுவது? செய்த பிழைக்குச் சமாதானம் தேடிக் கொள்ளாமற் போயின், மனிதன் அந்த நிமிஷமே செத்துப் போவான். மேநாடுகளில் கிருஸ்தவக் குடும்பங்களில் குழந்தைகள் இறந்துபோனுல், "கடவுள் கொடுத்தார், கடவுள் எடுத்துக்கொண்டு போனுர்" என்று பெற்ருேர்கள் துக்கம் கேட்கவந்தவர்களிடம் கூறுவார்களாம். நோய் என்பது மரணத்துக்கு முன்னேடும் பிள்ளை. சாவு கடவுளாயின், நோய் கடவுளின் வருகையைக் குறிப்பிடுகின்றது என்று மேநாட்டுப் பெற்ருேர்களின் வாய் மொழியினின்றும் கொள்ளக் கிடக்கின்றது. மேநாட்டுப் பெற்ருேர்கள் கூறும் சமாதானத்தில் "மூடபக்தி" இல்லையா! அவர்களைக்குறை கூற நாம் விரும்பவில்லை. தான் அடக்கியாள முடியாத ஒரு நிகழ்ச்சிக்கு, தனக்கு மீறிய சக்தியின் பேரில் பொறுப்பை போட்டு, மனத்தைத் தேற்றிக்கொள்ளுவது மனித இயல்பு. நிகழ்ச்சிக்குப் பின் நேரும் சமாதானத்தை நிகழ்ச்சிக்கு முன்னிருக்கும் நம்பிக்கையாக மேயோ கூறி யிருப்பது உண்மையல்ல.

பிரசவிக்க மாட்டாமல் தவித்து, இறக்கும் நிலைமைக்கு வந்து விடும் இந்திய ஸ்திரீக்கு மருத்துவச்சி பின்வருமாறு சில காரியங்கள் செய்கின்ருள் என மேயோ எழுதியிருக்கிருர்:

"முதலிலே அவள் (மருத்துவச்சி) மிளகைக்கொண்டு வந்து, சாகும் ஸ்திரீயின் கண்களில் வைத்துத் தேய்க்கின்

ருள். (எதற்காக?) ஆன்மா குருடு அடைந்து வெளியே போகாமலிருப்பதற்காக. பிறகு, அவள் இரண்டு நீண்ட ஆணிகளை எடுத்து கர்ப்பிணியின் எதிர்ப்பற்ற கைகளை விரித்து, உள்ளங்கை ஒவ்வொன்றிலும், தரையில் நன்ருகப் பதியும்படியாக, ஆணியை வைத்து அடிக்கின்ருள். ஆன்மா தரையில் பிடிபட்டுப்போய், விரைவில் போகாமலிருப்பதற்கும், எழுந்து உயிருடனிருப்பவர்களைப் பயமுறுத்தாமலிருப்பதற்கும் இது செய்யப் பெறுகிறது.''

இவ்வாறு எந்த நாட்டில் நிகழப்பெறுகின்றதோ, அதை நாம் அறியோம். இந்தியாவில் நடைபெற்றதாக, நடைபெறுவதாக நமக்குத் தெரியவில்லை; நாம் கேள்விப்பட்டதுமில்லை. தமது கற்பனைகளை நிகழ்ச்சிகளாகக் கொண்டு, அவைகளை இந்தியா தேசத்துடன் பிணைத்து, மேயோ எழுதியிருக்க வேண்டும். ஏசு நாதர் சிலுவையில் அறைபட்டதை யாவரும் படித்திருக்கிருர்கள். ரோமன் கத்தோலிக் கிருஸ்தவர்களல்லாதார் மரத்தில் அறைபட்டு ஸ்பெயின் நாட்டில் பொசுக்கப்பெற்றதை நாம் படித்திருக்கிருேம். அமெரிக்க வெள்ளையர்கள் கறுப்பு நீகிரோவர்களை நடுத்தெருவில் கல்லெரிந்து கொன்ற கதைகளை உலகத்தார் அறிவார்கள். ஆனுல் மேயோ எழுதியிருக்கும் அபத்தத்தை எவருமே இதுவரையிலும் கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். தாம் எழுதியதற்குச் சாட்சியம் வேண்டும். உலகத்தாருக்கு, மேயோ சமாதானத்தைத் தயாராய் வைத்துக்கொண்டிருக்கிருர்.

“இந்தச் செய்தி கொடுமையாயிருக்கலாம்இந்தியாவின் பல பகுதிகளிலிருக்கும் நம்பிக்கையுள்ள பல வைத்தியச் சாட்சிகள் இவ்வாறு கூறியிருக்கிருர்கள். இந்த அத்தியாயத்தில் கூறப்பெற்றிருக்கும் வாக்குமூலங்கள். இந்த சாட்சியங்

களையும் எனது சொந்த ஆராய்ச்சி நோக்கையும் பொறுத்து நிற்கின்றன.''

மேயோ முட்டாளா? அல்ல, தாம் எழுதிய எழுத்தால் எதிரியின் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சி உண்டாகும் என்பது அவருக்குத் தெரியும். எனவே, ''நான் கண்டேன்; அல்லது வைத்திய நண்பர்கள் என்னிடம் கூறினர்கள்; அவர்கள் நம்பத்தகுந்தவர்கள்'' என்று சமாதானம் கூற, மேயோ முந்திக் கொள்கின்றார். சாட்சியத்தையும் சமாதானத்தையும் பிறர் வேண்டுவார்கள் என்று தெரிந்து கொண்டிருக்கும் மேயோ, நம்பத் தக்க சமாதானத்தையும் சாட்சியத்தையும் விடவேண்டும் என்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டாரா? ''தென்னைமரத்தில்ஏன் ஏறினுய்'' என்றுகேட்டதற்கு ''பூனைக்குப் புல் பிடுங்க'' என்று சமாதானம் கூறியவனைப் போல மேயோ எழுதியிருக்கிறார். உண்மைக்கும் தங்களுக்கும் தொடர்பு உண்டு, தொடர்பு இருக்கவேண்டும் என்று கொண்டவர்களுக்குத்தான் சொல்லிலும் எழுத்திலும் சிரமம் ஏற்படும். ஏனையோருக்கு இந்தத் தொல்லை கிடையாது. மேயோவுக்கு இந்தத் தொல்லை அறவே கிடையாது.

மருத்துவச்சிக்குக் கூலி கொடுப்பதையும் பற்றி மேயோ எழுதுகிறார். அந்த விபரங்கள் நமக்கு வேண்டாம்; நண்பர்களுக்கும் தேவையில்லை. ஆனல் ஒரே ஒரு விநோதம் மட்டும் நண்பர்களுக்குத் தெரிந்திருத்தல் வேண்டும். ஆண் குழந்தைக்கு ஒரு ரூபாயும் பெண்குழந்தைக்கு எட்டு அணவும் மருத்துவச்சிக்குக் கொடுக்கப் பெறுகின்றதாம். எத்தனை ரூபாய் என்பதைப்பற்றிக் கவலையில்லை. குழந்தைப் பிறப்புக்கூலியிலும், வேற்றுமை பாராட்டப்படுகின்றதாம்; மேயோவின் ஆன்மா அமைதி பெறுவதாக! அதிருஷ்ட

மான இடங்களிலும் பிரவேசித்து உள்ளதைத் தெரிந்து கொள்ளும் ஆற்றல் விக்கிரமாதித்த அரசனுக்குப் பணி செய்த வேதாளத்துக்கு இருந்தது என்று கதை சொல்லுவதுண்டு. அது வெறுங்கதை யென்று நாம் இதுவரையில் ஒதுக்கிவைத்திருந்தோம். ஆனால், மேயோவின் விசித்திர எழுத்தை நேரே கண்டபின்னர், கதை வேதாளம் சிறிய "உருப்படி" யாகப் போய்விட்டது. இதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். வேதாளம் விளக்கிலும், திரையிலும், சேலையிலும் துணியிலும் புகுந்து பார்த்து விஷயங்களைத் தெரிந்து கொள்ளுமாம்! மேயோவின் சக்தியைப்பற்றி அற்ப அடிமைக் கறுப்பு இந்தியனான நான் என்ன சொல்ல முடியும் ?

> "கல்வி கற்ற இந்தியன் பிரசவ காலத்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவச்சியை வேண்டுகின்றான். ஆனால் வீட்டின் உண்மையான அரசிகளான பெரிய மனிதிகளுக்கு முன்னே, அவன் ஜபம் செல்லாது"

இந்தியாவில் பெண்கள் அடிமைகளாகப் பாவிக்கப் பெற்று நடத்தப்படுகின்றார்கள் என்று கூறியிருக்கும் மேயோவுக்கும் ஏனையோருக்கும் டாக்டர் ஆக்னில் ஸ்காட் அவர்கள் மேலே குறிப்பிட்டிருக்கும் குறிப்பு தக்க விடையளிக்கும் என்று நினைக்கின்றேன். இந்தக் குறிப்பு எனது சரக்கல்ல. மருத்துவச்சிகளின் கேவலமான நிலைமையையும் குழந்தைகளின் பிறப்பையும் கேலி செய்து மேயோ எழுதியிருக்கும் அத்தியாயத்திலேயே, மேயோ அவர்களே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்குறிப்பிட்டதற்கு நோக்கம் வேறு. ஆனால் அந்தக் குறிப்பு நாம் முன்னே சொன்னதையேதாக்கும் என்பதை மேயோ அவர்கள் கவனிக்கவில்லை போலும்.

“ இளமைப்பருவமுதல் மரணம்வரையில், கருணையற்ற கட்டுப்பாட்டின்கீழ், அவள் (ஹிந்துமனைவி) கணவனுக்கு கீழ்ப்படிந்து நடந்துவருகின்ருள். அவனுக்கோ (கணவனுக்கோ) கட்டுப்பாடும் தன்னடக்கமும் கொண்ட வாழ்க்கை கிடையாது. இவையிரண்டும் சேர்ந்து விளைந்த விளைவு முதிர்ந்துவிட்டது. எந்த சீர்திருத்தத்திற்கும் தான் ஆதாரமாயிருக்கமுடியாதபடி, அவள் கனமான சுமையாகிவிட்டாள். கணவனே உள்ளத்திலும் நரம்பிலும் சோர்வையடைந்து, குறியும் சங்கற்பமுமின்றி, தனது சொந்தவீட்டிலேயே, தனது அடிமை மனைவியால் தேற்கடிக்கப் படுகின்ருன்.”

மேயோவின் இந்த எழுத்தில் மெய்யும் பொய்யும் கலந்து நிற்கின்றன. பல நாட்டார்கள் இந்தியாவில் வந்தும் வசித்தும் ஹிந்து நாகரிகத்தை முட்டி வரும்பொழுது, பழைய இலட்சியங்களும் சாதனங்களும் தங்கள் புதிய வாழ்விற்குப்போதமாட்டா, போதவில்லை என்பதை ஹிந்துக்கள் தற்பொழுது செவ்வனே அறிந்துகொள்ளவில்லை என்று நாம் ஒப்புக்கொள்ளுகின்ருேம். ஹிந்துக்குடும்பத்தில் மனைவி கணவன் சொற்படி நடக்கின்ருள். ஆனல் பிள்ளை தாயின் பேச்சுக்குமீறி நடக்கமாட்டான். எனவே, ஹிந்துக்குடும்பத்தில் ஆண்பிள்ளை உயர்ந்தவனு? பெண் உயர்ந்தவளா? மேயோ இதை அறியத் தேவையில்லை. நண்பர்கள் இதைத் தெரிந்துகொள்ளவேண்டும். வெறும் பேச்சுக்காரனுக்கு உலகத்தில் மதிப்புக் கிடையாது. ஏதேனும் ஒன்றைச் செய்து முடித்தவனைத்தான் உலகம் மதிக்கும். எனவே, இயந்திரம்போல வாழ்க்கைநடத்தும் மனிதர்களுக்கு உய்வும் மதிப்பும் இல்லை என்று மேயோ கூறினுலும் சரி,

வேறு எவர் கூறினாலும் சரி, அது உண்மைதான். அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் ஹிந்துக் குடும்பத்தின் அமைப்பில், அதிகாரம் செய்ய எவருக்கும் உரிமை இல்லை. எவரும் கருத்துக் கொள்ளுவதுமில்லை. குடும்பத்தைச்சேர்ந்த அனைவரும் ஒன்றுகூடி, குடும்பத்தை நடத்துகின்றார்கள். ஆணுக்கு மதிப்பு என்றும் பெண்ணுக்குத்தாழ்வு என்றும் கூறமுடி யாது. எட்டத்திலிருக்கும் உறவினர்கள்கூட, சில குடும் பத்தில் சாசுவத உறுப்பினர்களா யிருக்கின்றார்கள். இவர் கள் மத்தியிலே உலவுவது அன்பு ஒன்றேயாகும். இந்தப் பொதுக் குடும்ப வாழ்க்கையினாலேதான், எத்தனையோ பஞ் சங்கள் நேரினும், நாட்டில் பொறுக்கொணாத வறுமை இருப்பினும், அவைகளின் கொடுமை அதிகமாகத் தோன்ற வில்லை. இந்த வறுமையும் இத்தனை பஞ்சங்களும் பொதுக் குடும்பவாழ்க்கை இருக்கப்பெறாத நாட்டில் இருக்குமானால், அந்த நாடு பல அரசியல் புரட்சிகளுக்குள்ளாயிருந்திருக் கும். திருப்தியும் பொதுக் குடும்ப வாழ்க்கையும் சேர்ந்து கொண்டு, இந்தியனுடைய கருத்தையும் ஊக்கத்தையும் நூதன முயற்சிகளில் செல்லவிடவில்லை. இந்தியனுக்கு நோக்க முண்டு, குறியுண்டு, திடச்சித்தமுண்டு, சக்தி உண்டு. அவன் இவைகளைக்கொண்டு, இகலோக எதிரிக ளுடன் போராடுவதில்லை. தனது மோட்சத்துக்கு (முக் திக்கு) க் குறுக்கே நிற்கின்றன என்று தோன்றும் நிகழ்ச் சிகளுடனும் சக்திகளுடனும் ஹிந்து போராடுகின்றான். பிரபஞ்ச வாழ்க்கையில் இல்வாழ்க்கை முறைதான் உயர்ந்த தானபடியால், அதற்கெனத் தன்னைப் பயிற்சிசெய்து கொள்ளுகிறாள் ஹிந்துப்பெண். இவர்கள் செய்வதில்

தவறு இல்லை, தங்களுடைய நோக்கத்திற்குத் தக்க வசதிகளைக் காணவேண்டும் என்ற ஆவலும் உணர்ச்சியும்கொண்டு, ஹிந்து ஆணும் பெண்ணும் வாழ்க்கை நடத்த முற்படவேண்டும். அடிமைக்கு முத்தி இல்லை என்பதை ஹிந்து ஆண் உணரவேண்டும். அவன் சுய ஆட்சிக்குப் பாடு படவேண்டும். இல்வாழ்க்கைக்கேற்ற உடல் வலியை ஹிந்துப் பெண் சேகரித்துக்கொள்ளவேண்டும்.

இந்தியாவின் ஜனத்தொகைக் கணக்கை நம்பமுடியாது என்று மேயோ கூறுகின்றார். உண்மை. இந்த ஆட்சேபத்தை நாம் ஏற்கனவே செய்திருக்கிறோம். என்றாலும், இந்தக் கணக்கைக் கொண்டுதான் மேயோ, இந்தியர்களின் வாழ்க்கையைப்பற்றித் தீர்ப்புச்சொல்லுகின்றார். கல்வி பயிலாத கிராமவாசிகள் ஜனத்தொகைக் கணக்கைத் தயார் செய்ததால் நம்பத் தக்கதில்லை என்று எழுதியிருக்கும் மேயோ அடுத்தபடியாக எழுதியிருப்பதை நோக்குவோமாக!

> "ஒரு குழந்தை இறந்தால், தாயின் அழுகைக் குரல் இரண்டொரு நாள் இரவைப் பிளந்து தள்ளுகின்றது; ஆனால் கிராமம் ஒரு ஆற்றின் கரையிலிருந்தால், மூடுவதற்கு ஒரு கந்தைத் துணியும் செலவில்லாமல், அந்தச் சிறிய உடல் (குழந்தை) ஆற்றில் எறியப்படும். பருந்துகளும் மற்றவைகளும் குழந்தையின் சுருக்க வரலாற்றை முடித்து விடுகின்றன."

மோயோவுக்கு மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் "பரதேசித் தபாலை" எந்த இந்தியன் கொண்டுபோனானோ தெரியவில்லை. எந்த இந்தியனாவது கூறியிருப்பின், அவனுடைய நோக்கம் வெளிப்படையானது. மேயோவை ஏமாற்ற வேண்டுமென்றே அவன் இவ்வாறு கூறியிருத்தல் வேண்

டும். இல்லாவிடின், நடக்காததைக்கூற, அவளுக்கு ஆவல் இருக்காது. ஆற்றில் தூக்கி யெறியும் வழக்கம் இந்தியா வில் இல்லை. மலையாளத்தில் வீட்டுத் தோட்டத்திலேயே இடு காடு. மற்றும் இந்தியாவில் பல பிராந்தியங்களில், குழந் தைகளை இடு காட்டுக்கு எடுத்துச் செல்லுவதே யில்லை. அவைகள் புறக்கடையிலேயே புதைக்கப்படுகின்றன. ஓடும் நீரை, பல் துலக்கிக் கூடக் கெடுக்கலாகாது என்ற எண்ணத் தைக் கொண்டிருக்கும் ஹிந்து, குழந்தயைப் போட்டு, ஆற்று நீரைக் கெடுக்கத் துணியமாட்டான். மேலும் ஹிந்துக்க ளுக்கு குழந்தைகளின் பேரில் இருக்கும் அபிமானத்தினல்' செத்த குழந்தையையும் ஆற்றில் தூக்கிப்போட, அவர்கள் ஒரு நாளும் மனம் ஒருப்படார்கள். 'மனம் போன போக் கெல்லாம் போகேவண்டாம்' என்று இந்தியர்க ளல்லவா போதிக்கப் பட்டிருக்கின்றனர்! மேயோவுக்கு என்ன கவலை? மனம் போன படியெல்லாம் அவர் எழுதுவார், எழுதலாம்.

> "குழந்தை (மலரை யொத்த) மிருதுவான ஜந்து வென்று நான் எண்ணி யிருப்பது வழக்கம். ஆனல் இங்கு (இந்தியாவில்) எனது அனுபவம் வேருகி வருகின்றது. குழந்தை கெட்டியான பிராணியெனத் தோன்றுகின்றது. (ஹிந்துக்களின் கைகளில் சிக்கிக்கொண்டும்) அதுபிழைத்துப் போகின்றதே"

என்று அமெரிக்க ஸ்திரீ டாக்டர் ஒருவர் மேயோவினி டம் கூறினராம். கேலிக்காகச் சொல்லப் பெற்றதை, உண் மையாகவே நாம் கொள்ளுவோமாக! உலகத்தாரின் நம் பிக்கை மோசத்தையும் பணச்சுரண்டலையும் ஏளனத்தையும் அவதூறையும் எத்தனையோ நூற்றுண்டுகளாகச் சகித்து வரும் ஹித்துக்களுக்கும் அவர் தம் குழந்தகளுக்கும்

நரம்பு வலிமை இல்லாம லிருக்குமா? இந்தியர்கள் "சீமை" வைத்தியம் செய்துகொள்ள உடன்படா விட்டால், அதற்காக நாட்டு வைத்தியர்களும் ஹிந்துக்களும் மேயோவினிடம் இவ்வளவு திட்டு வாங்கவேண்டும் என்பதுண்டா? தன்னை உயர்த்திக்கொள்ள, எதிரியை இகழ்ந்து பேசுவது மிகவும் கேவலமான குறையாகும். மேயோவுக்கு—ஆமாம் அது தெரியுமா?

"ஒற்றைக் குடும்பந்தனிலே—பொருள்
ஓங்கவளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை"

"ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவரும் ஓர் குலமன்றோ?
மேவி அனைவரும் ஒன்ருய்—நல்ல
வீடு நடத்துதல் வேண்டும்"

அத்தியாயம் 12.

"படுதோவுக்குப் பின்னே"

இது வரையிலும் இடைவிடாது ஹிந்துக்களைத் தாக்கி எழுதி வந்த மேயோ, தமது கடைக்கண் பார்வையை இந்திய முஸ்லீம்களின் பேரில், இந்த அத்தியாயத்தில் செலுத்தி யிருக்கிருர். இஸ்லாம் என்பதற்கு அமைதி என்று அர்த்தம். அமைதியை அப்படியாகக் கொண்ட ஒரு சமயத்தைப் பின் பற்றுபவர்கள், வெளி யுலகத்தாரால் அதுவும் ஹிந்துக்களால், முரடர்கள் என்று கருதப் பெறுவது தகாது. மேலும் இந்தியா விலிருக்கும் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்

களுக்கும் அதிக வேற்றுமை கிடையாது. இரு வகுப்பார்களும் மூன்றும் ஒரு கூட்டத்தாருக்கு நிரந்தர அடிமைகளாக இருக்கச் சம்மதித்து முறிச் சீட்டு எழுதிக் கொடுத்திருப்பதைப் போல வாழ்ந்து வருகின்றார்கள். இந்தியாவின் முக்கால் பங்கு ஜனங்கள் ஹிந்துக்கள்; பாக்கி யிருக்கும் கால் பங்கு முஸ்லீம்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். இந்திய முஸ்லீம்களிற் சிறுபான்மையோர்தாம் அன்னிய நாடுகளினின்றும் வந்து இந்தியாவில் வசிப்பவர்கள். மற்றவர்கள் யாவரும் ஹிந்துக்களாயிருந்தவர்கள்.

"தென்னாட்டிலே இருக்கும் முஸ்லீம்கள், மதமாறிய ஹிந்துக்களின் வழித் தோன்றல்கள். ஹிந்துக்களின் குணங்களிற் பெரும் பான்மை இவர்களிடம் இருக்கின்றன".

மேயோவின் இக்கூற்றை, நாம் தவக்கமன்னியில் ஏற்றுக் கொள்ளுகிறோம். இந்த உண்மையை நம்பித்தான், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை சாசுவதமும் சாத்தியமும் கொண்ட சங்கதி என நாம் பிடிவாதமாகக் கொண்டிருக்கிறோம். ஹிந்து முஸ்லீம் வேற்றுமை என்பது விஷமக்காரர்களின் வீண் புரளியாகும். கரையின் பேரில் நின்று, கல்லை விட்டு எரிந்தால், அலைகள் தோன்றுகின்றன. ஆனால் அவைகள் சிறிது நேரத்திற் கெல்லாம் மறைந்து போகின்றன. அது போலவே, ஹிந்து முஸ்லீம் வேற்றுமை அலைகளை நம்பி, எவரும் பகற்கனவுகண்டு, மணற் கோட்டை கட்ட வேண்டாம்.

முஸ்லீம் களுக்குள் இளமை மணம் இல்லை யென்றும் கட்டாய வைதவ்யம் இல்லை யென்றும் அவர்களுடைய உணவு உயர்ந்தது என்றும் எனவே அவர்கள் உடல் வலியுள்ளவர்கள் என்று மேயோ கூறுகின்றார். முஸ்லீம்களுக்குள்

இளமை மணம் அறவே இல்லை யென்று கூற முடியாது. கட்டாய வைதவ்யம் இல்லை. முஸ்லீம்கள் புலால் உணவு உட் கொள்ளுகின்றார்கள். புலால் உணவு உயர்ந்ததா அல்லது சைவச் சாப்பாடு உயர்ந்ததா என்பதைப்பற்றி வாதம் செய்ய நாம் தயாராயில்லை. நாகரிகப் படிக்கட்டில் ஏற முயலுபவன், வரவர, கூடுமான அளவு, புலால் உணவை மறுப்பது தான் உயர்வாகும், இது நமது தீர்மானமான கருத்தாகும். மாமிசம் உண்ணு விடால், உடல் வலிமை அதிக மிருக்காது என்று சாதாரணமாய் உலகத்தில் நடமாடி வரும் கூற்றை நாம் ஏற்றுக் கொள்ளுவதில்லை. கடின வேலைக்கு மாமிச ஆகாரம் ஏற்ற தென்றும் உடம்பு வலியை கள்ளு, சாராயம் போக்கி விடும் என்றும் கூறுபவர்களை நாம் பார்த்திருக்கிறோம். அவ்வாறு கூறுபவர்களின் உடம்பை நாம் சோதித்துப் பார்த்திருக்கிறோம். அவர்கள் கூற்றில் உண்மையில்லை என்று நமக்குத் தெரிய வந்தது. தேகத்தின் சதை சக்திக்கும் நரம்பு வலிமைக்கும் வேற்றுமை யிருக்கிறது. எவன் தன்னடக்கத்தை பயிற்சி செய்கின்றானோ, அவனுக்கு உடம்பில் அதிகமான சதையிருப்பதில்லை. ஆனால் அவனுடைய நரம்பு வலிமை போற்றுதற் குரியதாகும். கொடிய நிகழ்ச்சியைக்கண்டும் அவன் நெஞ்சம் பதறமாட்டான். நரம்பு வலிமை யில்லாதவனுடைய தசைச்சக்தி பனிக்கட்டியைப்போல உருகிப்போய் விடும். மாமிச உணவினால், நரம்பு பலம் அதிகரிக்கின்றது என்று வைத்தியர்கள் சொல்ல நாம் கேட்டதில்லை.

போரில் பெண்களை, பண்டைக் காலத்தில், பலவந்தமாகத்தூக்கிச் செல்லும் வழக்கத்திலிருந்து, முஸ்லீம் ஸ்திரிகளை படுதாவுக்குள் வைக்கும் ஏற்பாடு துவங்கி யிருக்க

லாம் என்று மேயோ கருதுகின்றார். எதனுல் ஏற்பட்டது என்பது நமக்குத் தெரியாது.

படுதா வழக்கமில்லாத இந்தியாவின் ஒரு பகுதியில், களியாட்ட விடுதியொன்று ஆங்கில, இந்திய ஸ்திரீகளுக்காக ஏற்படுத்தப்பட்டதாம். பதினேரு, பன்னிரண்டு வயதுள்ள சிறுமிகளையும் இந்தக் கிளப்பில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று பல ஹிந்து ஸ்திரீகள் சேர்ந்து மனுப்பண்ணிக்கொண்டார்களாம். மேயோ இதற்குக்காரணம் கூறுகின்றார்.

"எங்கள் பார்வையிலில்லாமல், குடும்பத்தின் ஆண்பிள்ளைகள் நெருங்கக்கூடிய நிலைமையில், ஒரு பிற்பகல்கூட, மேற்கூறிய வயதுள்ள பெண்களை வீட்டில் வைத்துவிட்டு வர எங்களுக்கு அச்சமாயிருக்கின்றது என்று கபடமில்லாமல் அந்தத் தாய்மார்கள் என்னிடம் சொன்னார்கள்"

மேயோவின் காரணம் எவ்வாறு இருக்கிறது? படுதாவின் தீமைகள் இவைகள் என்று மேயோ குறிப்பால் உணர்த்துகின்றார். இது பொய் என்று நாம் உறுதியாகக் கூறுவோம். இந்தியக்குடும்ப அமைப்பை அறியாத மேயோவுக்கும் அவரை ஒத்தவர்களுக்கும் சமாதானம் கூறுவதால், நல்லபயன் ஏற்படாது. தன் மனைவிகெட்டவள் எனத்தீர்மானம் கொண்டவனுக்கு, அவள் செய்யும் காரியங்களிலெல்லாம் சந்தேகம் உண்டாவதில் தடை என்னவிருக்கின்றது?

"ஹிந்து விவசாயியின் மனைவி தனது பெண்ணை ஒரு மணி நேரத்துக்குக்கூட வீட்டில் தனித்துவிட்டு வைக்க மாட்டாள். அவள் அவ்வாறு செய்தால், அவளுடைய

பெண் கெடுக்கப்படுவாள் என்று நிச்சயமாய் அவளுக்குத் தெரியும். இந்த நிலைமை எங்கு மிருக்கிறது என்று நான் துணிந்து சொல்லமாட்டேன். ஆனால் இது சில பிராந்தி யங்களில் தினசரிச் சம்பவம் என்று இந்தியர்களிடமிருந்தும் மேனாட்டார்களிடமிருந்தும் நான் கேள்விப்பட்டிருக்கி றேன்.''

மேயோ இவ்வாறு எழுதிக்கொண்டே போவார். ஆனல் அவரைப்பின் தொடர்ந்து, அவரை மறுத்துக்கொ ண்டேசெல்ல நம்மால்முடியுமா என்று நான் சந்தேகப்படு கின்றேன். எத்தகைய அடாத பொய்களை மேயோ கூசா மல் எழுத்தில் எழுதி விடுகிறார், பார்த்தீர்களா? இத்தகைய மனப்பான்மை இருப்பின், தொழிலாளர்களும் விவசாயி களும் பயிர் செய்ய முடியாது. இந்தியா பாலை வனமாகக் கிடக்க வேண்டுமேயொழிய, உலகமக்களுக்குச் சோறு போடும் தானியக்களஞ்சியமாக இருக்கமுடியாது.

"உண்மையான முஸ்லீம் ஒருவன் வேறு எந்த மனி தனையும் தனது கோஷாவில் நம்பிவைக்கமாட்டான்; ஏ னெனில் இந்த சுதந்திரத்தை மற்றவன் (தக்க) சந்தர்ப்ப மாய்க் கொள்ளுவான் என்று அவனுக்கு (முஸ்லீமுக்கு)த் தெரியும். அப்படி நம்பிக்கையுடன் அழைத்துச் செல்லும் ஒரு சில ஹிந்துக்கள் இருப்பார்களாகில், அது மேனாட்டு வாழ்க்கை முறையில் கலந்து கொண்டதன் பயனாகும். அப்பொழுதும் அவ நம்பிக்கை போவதில்லை.''

மேயோவின் மனப்பான்மை ஒரு நாளும் திருத்த மடையப் போவதில்லை. அதன் பொருட்டு, நாமும் சிரமம் மேற்கொள்ளவில்லை. சந்தர்ப்பம் வாய்த்தால், அன்னியர் கள் இந்தியர்களைப்பற்றி எவ்வாறு, எவ்வளவு வரையில்,

அவதூறு பேசமுடியும் என்பதற்கு மாதிரிகளாக, வாசக நண்பர்களுக்கு மேயோவின் ஆபாச எழுத்துக்களை எடுத்துக் காண்பிக்கின்றோம். விருந்தோம்பலில் தலை சிறந்து விளங்குபவர்கள் இந்தியர்கள். தங்கள் கணவன்மார்களுக்கு இத்துறையில், இந்திய ஸ்திரீகள் பெரிதும் துணைவிகளாக நிற்கின்றார்கள். ஹிந்துக்களுக்கு நட்பு என்பதே கிடையாதா? நம்பினவர்களை நட்டாற்றில் விட்டு, துரோகம் செய்யும் வழக்கம் ஹிந்துக்களிடமும் இல்லை, முஸ்லீம்களிடமும் கிடையாது. மேயோவின் பிதற்றலுக்கு எல்லையும் கிடையாது.

„ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே சரஸமும் ஆனால் கற்பும் நிறைந்த உறவு சாத்தியமானதுதான் என்பது இந்தியமனத்துக்கு நம்பிக்கையான சங்கதியல்ல.''

இந்தியர்களுக்கு அறவே அறிவும் நாகரிகமும் இல்லாததுபோல, மேயோ எழுதிக்கொண்டேபோகின்றார். ஆனால், சென்னை மாகாணத்திற்குக் கவர்னராயிருந்த ஸர். தாமஸ் மன்றோ என்பவர் ஹிந்துக்களின் நாகரிகத்தைப்பற்றி எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. பொருத்தமுள்ள பகுதியைமட்டும், இங்கு குறிப்பிடுவோம்.

"கருணையிலும் உபசாரத்திலும் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளுவதிலும், சிறப்பாக அவர்கள் பெண்களுடன் நம்பிக்கையுடனும் மரியாதையுடனும் நயமாயும் பழகுவதிலும், நாகரிகக்குறிகள் காணப்பெறுமானால், ஐரோப்பிய நாட்டார்களைவிட ஹிந்துக்கள் தாழ்ந்தவர்களல்ல. நாகரிகம் என்பது ஐரோப்பாவுக்கும் இந்தியாவிற்கும் இடையே ஒரு ஏற்றுமதிச்சரக்காகக் கருதப்பெறுமாகில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பெறும் நாகரிகத்தினால் இந்த

நாடு (ஆங்கில நாடு) இலாபம் அடையும் என்பது எனது நம்பிக்கையாகும்.''

மேற்கூறியவாறு, மன்ரோ அவர்கள் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஹிந்துக்களைப்பற்றி எழுதியிருக்கிறார். அவர் எழுதியதன் பின்னர், மேயோ கூறியிருக்கும் தீமைகள் உண்மையாயிருப்பின், அவைகளை ஆங்கில ஆட்சியின் பயன்களாகத்தான் கருதமுடியும், கொள்ளமுடியும். பொதுக் குடும்பவாழ்க்கையில் கற்பு தரித்திருக்க முடியாது என்று கூறும் மேயோவுக்கு ஸர். ரெஜினல்ட் கிராடாக் என்பவர் பதில்சொல்லட்டும். ஸர். கிராடாக் அவர்கள் யார் என்பது நன்பர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். வங்காளப் பிரிவினைக்குப்பிறகு, இந்தியா சட்டசபையில் அடக்குமுறைச்சட்டங்கள் பலவற்றை ஆக்கியவர் கிராடாக் அவர்கள். எனவே, அவருக்கு இந்தியர்களின் வாழ்க்கையில் மிக்க அனுதாபம் இருக்கக் காரணமில்லை. மேயோ கூறுமாறு,

''ஹிந்துக்களின் வாழ்க்கையில் கேவலமான பகுதிகள் பலவிருப்பின், அந்த வாழ்க்கைமுறை அமைக்கப்பெற்று இத்தனை நூற்றாண்டுகள் கழிவதற்குள்ளாக, அவர்கள் அழிந்துபோயிருப்பதை எதுவுமே தடுத்திருக்கமுடியாது. ஹிந்து ஜன சமூகசமய வாழ்க்கைமுறை, புத்தர்கள், முஸ்லீம்கள், கிருஸ்தவர்களுடைய மதமாற்றும் முயற்சியை இதுவரையிலும தடுத்துவந்திருக்கின்றது. இந்த உறுதிகொண்ட பிடிவாதத்துக்குக்காரணம் ஹிந்து பொதுக்குடும்ப வாழ்க்கை முறையாகும். அதனால், குடும்பப்பற்றும், உண்மையான கடவுள் பக்தியும், மகா உயர்வுகொண்ட தியாகஉணர்வும் உண்டாகப்பெறுகின்றன. இவைகள் உண்மையென்று, இந்

தியர்களின் வாழ்க்கையை நன்கறிந்தவர்கள் சாட்சியம் கூற முடியும்.''

மேயோ எழுதியிருப்பது ஹிந்து நாகரிகத்துக்கு இழிவாகாதென்றும் லேடி எமிலி லூடன்ஸ் அவர்கள் எழுதுகின்ருர். டாக்டர் அன்னி பெஸண்டு அவர்கள் கூறுவதையும் கவனிப்போம்.

“போகப்போக நூல் அவதூறுக் களஞ்சியமாக விருக்கின்றது. (ஆசிரியர் மேயோ) குப்பையையு மட்டும் கிளறியதாகத் தெரிகிறது.அவர் எழுதியிருப்பது ஹிந்து நாகரிகத்தின் உண்மையான சித்திரமாயிருப்பின், கிருஸ்துபிறப்பதற்கு 9000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் ஹிந்து சமயம் ஒருநாகரிகத்தை உண்டாக்கியிருக்கமுடியும் என்று அவர் எண்ணுகின்ருரா? அது அழுகி மடிந்து போயிராதா''

ஹிந்து நாகரிகத்தின் ஜீவ சக்தியாது என்றும் அதன் தன்மை என்னவென்றும் அறியமனமில்லாமல், அவதூறு பிதற்றத்தொடங்குபவர்களுக்கு என்ன சமாதானம் கூறமுடியும்? ஆங்கிலநாடு சொர்க்கமென்று படுதாவில் மடியும் இந்திய ஸ்திரீ ஒருவர் மேயோவிடம் கூறினராம். அவ்வாறு அவர் கூறியிருப்பது இயல்புதான். ஆனல் ஆங்கில நாடு சொர்க்கமல்லவென்றும் இந்தியா பாழான நரகமல்லவென்றும் நாளாக நாளாக உலகத்தார் (மேயோ உள்பட) தெரிந்து கொள்ளுவார்கள். சொர்க்கத்திலே சிற்றின்பச்சுதந்திரம் உண்டு என்பார்கள். நாம் கருத்தில் கொண்டிருக்கும் சுதந்திர பூமியான ஆங்கிலநாட்டில் இத்தகைய இழுக்கு இருக்கும் என்று நாம் எண்ணவில்லை. ஆனல் போய்ப் பார்த்தவர்கள் பலவகையாகக் கூறுகின்ருர்கள். மேயோ இந்தியர்களைப்பற்றி எழுதியிருப்பதைப் போல, அவர்கள் ஆங்கில நாட்டைப் பற்றிக்

கூறியிருக்கலாம். என்ன நேர்ந்தாலும், சுதந்திரப் பிரியர்களான ஆங்கிலேயர்களிடம் எனக்கு பக்தி அதிகம்தான். அதைமறைத்துப் பயன் இல்லை. ஆனல் ஆங்கிலேயர்கள் சுதந்திரத்தைத் தங்களுடைய தனித்த பொக்கிஷமாகக் கருதுகிருர்கள். அது எனக்கு இனிப்பதில்லை.

படுதாவிற்குள் வாழ்வதால், இந்தியஸ்திரீகளுக்கு க்ஷயரோகம் வலுத்து வருகின்றது என்று டாக்டர் ஆர்தர் ல்ங்காஸ்டர் மெய்ப்பித்து விட்டதாகமேயோ கூறுகின்ருர். நாம் ஒன்று தெரிவித்துக்கொள்ளுகிரேும். நமக்கு படுதாவிலும் கோஷாவிலும அறவே நம்பிக்கையில்லை. கோஷாவை ஒழிக்கவேண்டும் என்பது தான் நமது பேரவா; ஆனல் அதைப்பற்றிப் பொய் பேசலாகாது. க்ஷயரோகம் சென்ற சில ஆண்டுகளாகத்தான் இந்தியாவில் ஓங்கி நிற்கின்றது. படுதாவழக்கமோ பல நூற்ருண்டுகளாக இந்தியாவிலிருந்து வந்திருக்கின்றது. க்ஷயத்துக்கும் படுதாவுக்கும் தொடர்பு இருக்குமாகில், படுதாவிற்குள் வாழ்ந்த பெண் பிள்ளைகள் யாவரும் இதற்குள்செத்து மடிந்து போயிருக்கவேண்டும். க்ஷயரோகக்காரர்கள் வெட்டவெளியில் படுத்துறங்கவேண்டும்; நல்ல புதிய காற்றை உட்கொள்ளவேண்டும் என்பதை நாம் அறிவோம். படுதாவில் கெடுதல் இருக்குமாகில், எற்கனவே படுதாஸ்திரீகள் மாண்டு போயிருக்கவேண்டும் என்று நாம் குறிப்பிட்டிருப்பதை மனத்தில் இருத்திக் கொண்டு, ஆராய்ச்சி செய்தல் வேண்டும். தற்போது இந்தியாவிலிருக்கும் நகரங்களின் காற்றும் நீரும் கெட்டுக்கிடக்கின்றன என்றல்லவா தெளிவாகின்றது? கிராமங்களில் இந்த நோய் இன்னும் பரவவில்லை. நகரக்காற்று ஏன் கெடவேண்டும்? அதை ஆராயவேண்டும். சாக்கடைமுதலிய வசதிகள்

நல்ல நிலைமையில் இல்லாமலிருக்கலாம். உணவுப் பொருள்கள் கேட்டை யடைந்திருக்கலாம்; ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் பலகாரங்கள் இந்திய உடல்களுக்கு ஒத்துக் கொள்ளாமலிருக்கலாம்; நகரங்களில், தெருக்களில் தார் ஊற்றுவதனால், க்ஷயம் ஏற்படலாம். நகரங்களிலும் ரஸ்தாக்களிலும் எழும் தூசியினால் க்ஷய வியாதி உண்டாகின்றது என்று பல வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். இது உண்மையாயின், நமது ஸ்திரீகள் வெளியே வராமல் படுதாவுக்குள்ளாகவே யிருக்கலாம் போலிருக்கிறது!

ஆண்டு தோறும் இந்தியாவில் சுமார் பத்து இலட்சம் பேர்கள் க்ஷய நோயால் இறக்கின்றார்கள் என்று தெரிகிறது. மரணக்கணக்கு எடுக்கத்தயாராயிருக்கும் அரசாங்கத்தார், மரணத்தைத் தடுக்க என்ன முயற்சி செய்திருக்கிறார்கள் என்று மேயோ கணப்பொழுதேனும் யோசித்துப் பார்த்ததுண்டோ? இந்த சந்தர்ப்பத்தில் வேறு ஒன்றைக் கவனிப்போம். இந்தியா எத்தகைய மண்வளம் கொண்டது என்பதை நண்பர்கள் அறிவார்கள். பொன் விதைத்தால் தங்கத்தை இந்தியாவில் அறுவிடை செய்யலாம் என்று கூறலாம். அத்தகைய இந்தியாதேசத்தில் பஞ்சங்கள் இருக்கமுடியுமா? இருக்கலாமா? ஆனால் நிலைமை என்ன? "செழிப்புள்ள பிரிட்டிஷ் இந்தியா" என்ற நூலை திரு. வில்லியம் எவரார்டு டிக்பி எழுதியிருக்கிறார். நூலின் பெயரில் முதற் கொண்டு அவர் இந்தியாவிலிருக்கும் ஆங்கில ஆட்சியைக் கேலி செய்திருக்கிறார். ஆங்கில ஆட்சியின் பின்னர் நேர்ந்த பஞ்சங்களில் மாத்திரம் இறந்தவர்களின் தொகையை அவர் கொடுத்திருக்கிறார். மேயோ நூலில் காணப்பெறும் க்ஷய ரோக மரணப்புள்ளி டிக்பி கொடுத்திருக்கும் புள்ளி

குப் பத்துளமல் பக்கத்தில் கூடநிற்க முடியாது. க்ஷய ரோக மரணத்திற்குத்தான் இந்தியர்களின் வாழ்வு காரணம் என்று கூறப்படுகின்றது. பஞ்சத்துக்கு யார் காரணமோ? மழையின்மை அல்லது அதிக மழை, காரணம் என்று அரசாங்க அறிக்கை பிறக்கும். அதைக்கண்டு மேயோவின் உள்ளம் குளிர்ந்து போய் விடும்; இந்தியர்களும் திருப்தியடைய வேண்டும் போலும்! பஞ்சநிவர்த்திக்கான உபாயங்கள் யாவை யென அரசாங்கத்தாரைக் கேட்பின், கஞ்சித்தொட்டிகள் என்று கூறி, அவைகளுக்குத் தங்களிடம் வேண்டிய பணமும் ஆளுமில்லை என்று கையை விரிப்பார்கள். பஞ்சத்தில் கஞ்சி ஊற்றுவதும் பஞ்சத்தைத் தடுக்க முயலுவதும் ஒன்ருமா? சமீபகாலத்திற்கு முன், பிளேக்கினுல் சிலமரணங்கள் ஆங்கில நாட்டில் நேர்ந்தன. உடனே நாடுமுழுவதும் பரபரப்பேற்பட்டுவிட்டது. அதன் தோற்றத்தைப்பற்றி, டாக்டர்கள் விசாரிக்கமுற்பட்டார்கள். நாட்டிலுண்டானதா அல்லது நாட்டிற்கு வந்ததா என்பதைக் கண்டு பிடித்தார்கள். பிளேக் தலையெடுக்காமல் தடுக்கப்பெற்றது. அது ஆங்கில நாட்டிலிருக்கும் அரசியல் நிர்வாகிகளின் பொறுப்பையும் முன் எச்சரிக்கையையும் காண்பிக்கின்றது. சுமார் முப்பது ஆண்டுகளாக இந்தியாவில் பிளேக் பரவி, செய்துவரும் அட்டூழியத்தைச் சொல்லி முடியாது. இதைப்பற்றி இந்திய அரசாங்கத்தார் என்ன முயற்சி எடுத்துக் கொண்டார்கள் என்று வினவினுல் மேயோவுக்குக் கோபம் வரினும் வரக்கூடும். க்ஷய நோய்க்கு இந்திய வாழ்க்கை பெரிதும் ஆதரவாயிருக்கிறது என்று டாக்டர் ஆண்ட்ரூ பால்பர் கூறியிருப்பதை ஆமோதிக்கும் மேயோ, பிளேக்கின் காரணத்தைக் கூறமுடியுமா?

ஆகா,மறந்துவிட்டோமே! பிளேக்குக்கு எலிகாரணம்என்று மேயோ விரைவில் பதில்சொல்லமாட்டாரா ? எலிக்கு ஏன் பிளேக்கு நோய் காணவேண்டுமோ ? விதி யென்று மேயோ உளறவும் கூடும்.

இந்தியாவில் க்ஷயரோகம் வலுத்து வருவதைக்காண, நமக்குப் பயமாகத்தானிருக்கிறது. "பொதுக் குடும்ப வாழ்க்கை, படுதா வாழ்வு, இளமை மணம், கண்ட இடத்தில் எச்சில் துப்புதல், கெட்ட சுகாதார முறை, தூசி, நற்காற்றும் தேகப்பயிற்சியும் இல்லாமை, பிரசவிக்கும் முறை" முதலியன க்ஷய ரோக விருத்திக்குக்காரணங்கள் என மேயோவால் கூறபட்டிருக்கின்றன. இந்தக் காரணங்களில் தூசியும், கெட்ட சுகாதார முறையும், நற்காற்று இல்லாமையும் தவிர, மற்றைய பழக்கங்கள்—அவைகள் தீயவை என்று வைத்துக் கொள்ளுவோம்—யாவும் பல நூற்றுண்டுகளாக இந்தியாவிலிருந்து வருகின்றன. அந்தக்காலங்களில் க்ஷய ரோகம் இருந்ததாகவே தெரியவில்லை. நோயின் பெயரைத் தெரிந்து கொள்ளாமலே, இறந்தார்கள் என்று கூறுவதற்குமில்லை. எனவே, நாம் விலக்கிக்கூறிய மூன்றும் வேறு சிலவும் தான் க்ஷய ரோகத்துக்குக் காரணங்களாயிருத்தல் வேண்டும். தூசி, கெட்ட சுகாதார முறை, நற் காற்று இல்லாமை—இவைகள் ஆங்கில ஆட்சியில் தோன்றியிருக்கும் நகரங்களில் அபரிமிதமாய்க் காணப்படுவனவாகும். நவீன நகரங்கள் மேநாட்டு நாகரிகத்தின் விளைபொருள்களாகும். நகரங்களிலேதான், க்ஷய ரோகம், தற்போது வலுத்து வருகின்றது. இது எல்லோருக்கும்தெரியும்.

இந்தியர்களின் நகரவாழ்க்கையின் தேவை ஏற்பட்டது ஆங்கில ஆட்சியின் மூலமாயும் மேநாட்டுநாகரிகத்தின் மூல

மாயுமே. எனவே, க்ஷயரோக சம்பந்தமான பொறுப்பு யாரைச் சேர்ந்தது என்று இனியும் நண்பர்களுக்கு விளக்கி கூறவேண்டுமோ? இந்திய அரசாங்கத்தாரிடம் இந்தப் பொறுப்பைக் கட்டிவிடுவதால், இந்தியாவில் பரவிவரும் க்ஷயரோகத்தைக் குறைத்து விடலாம் என்ற கருத்துக் கொண்டு, நாம் மேற்கூறியதை எழுதவில்லை. தங்களுக்கு ஒவ்வாத, தீமைபயக்கும்நகரவாழ்க்கையை இந்தியர்கள்மேற் கொள்ள வேண்டாம் என்று சொல்லுவதற்குமில்லை. நகரத் தினுல், ஏழை இந்தியர்களுக்குப் பிழைப்பு ஏற்பட்டு வருகின்றது. நகரவாழ்க்கையால் நேரும் கொடிய தீமைகளில் ஒன்று க்ஷய ரோகம் என்று மட்டும் நாம் இப்பொழுது எடுத்துக் காட்டுவோம். பின்னர் ஜனசமூக நிர்மாணம் என்ற தலைப்பின்கீழ் சில யோசனைகள் கூறுவோம்.

இந்தியப் பெண்களுக்கு தேகப்பயிற்சி இல்லை என்று மேயோ வருந்துகின்முர். இது பேதமையென்றே நாம் கூறுவோம். நாம் முதலிலேயே குறிப்பிட்டதுபோல, மேயோவுக்கு இந்தியக்குடும்ப அமைப்புத் தெரியவில்லை என்பது தெளிவு. இந்தியஸ்திரீகளுக்குத் தேகப்பயிற்சி எதற்காக? அவர்களுக்கு ஓய்வு அல்லவாவேண்டும்? சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், ஏழை தனவந்தர்கள் என்ற வேற்றுமை இல்லாமல், இந்தியாவிலிருக்கும் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகள் தங்கள் குடும்பக்காரியங்களைத்தாமே செய்து வந்தார்கள். சமையற்காரன், வேலைக்காரி என்ற ஏற்பாடு நவீனத்திட்டமாகும். அந்தக்காலத்தில், பெண்களுக்கு வேலையதிகமும் ஓய்வு குறைவுமாயிருந்தன. ஆனுல் அதன் பின்னர், இந்தியக்குடும்ப வாழ்க்கைமாறி, பெண்கள் படிப்பதென்று ஏற்பட்டுவருவதாலும் அவர்கள் வீட்டுச் சமையல்

முதலிய காரியங்களைச் செய்யாததாலும், அவர்களுக்குத் தனியாகத் தேகப்பயிற்சி வேண்டும் எனநாமும் கூறுவோம். தற்போது இந்தியாவில் கொடுக்கப்பெற்று வரும் படிப்பு முறையில் நமக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை யாயினும், எல்லோருக்கும் எழுத்து வாசனை இருத்தல் வேண்டும் என்பது நமது பேரவா. புதுமாதிரியான இந்தியக் குடும்ப வாழ்க்கைமுறையைப்பற்றித் தெளிவான அபிப்பிராயங்களும் முடிவுகளும் தோன்றும் வரையில், பள்ளியில் படிக்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும்தேகப்பயிற்சி இன்றியமையாதது என்று நாம் வலியுறுத்துவோம்.

> இந்தப் பெண் பகிரங்கமாகத்தனது கால்களை உதைக்கக் கற்பிக்கப்படுகின்றாள். இந்த வெட்கம் கெட்டதை நம் வீட்டில் கொண்டு வரக்கூடாது''

எனத் தேகப்பயிற்சி செய்யும் பெண்களைப்பற்றிகிழவி அவதூறு பேசுவாளாம். தனித்தேகப்பயிற்சி குடும்பப் பெண்களுக்குத் தேவையில்லை என்பது மேற்கூறியதற்குப் பொருளே யொழிய, வேறு எந்தப் பொருளும் செய்யலாகாது. மேலும் அடக்கத்தைப் பெரிதாக மதிக்கும்ஹிந்துப் பெண்மணிகள், பகிரங்க தேகப்பயிற்சியைக் கேவலமாகக் கொண்டால், அவர்களுடைய மனத்தை நல்ல முறையில் திருப்பவேண்டும். அவர்களைக்கேலி செய்தல் தகாது. ஒருதலை முறை ஜனங்கள் தங்கள் முன்னோர்களையும் முதியோர்களையும் வெறுப்பதும் இகழ்வதும் ஏளனம் செய்வதும் தவறாகும். அவர்களுக்குத் தெரிந்த முறைகளில், அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தினார்கள். அவர்கள்மூலமாய்த் தான் நாம் இந்த உலகத்தில் தோன்றியிருக்கிறோம். நமது வாழ்வு நமது முன்னோர்களின் அறிவின்மையால் பெருஞ்

சுமையாகி விட்டதே என்று அவர்களின் பேரில் கோபம் கொள்ளாமல், பெரிய பொறுப்பும் சிறந்த சந்தர்ப்பமும் நமக்குக்கிடைத் திருக்கின்றனவே என்று நாம் மனமகிழ வேண்டும். முன்னோர்களை வெறுக்கும் மனப்பான்மை மிகவும் கேவலமான மனப்பான்மை. முன்னோர்களின்றி, நாம் தோன்றியிருக்கமுடியாது. மண்ணைத்திருத்தி, வீட்டையும் அமைத்து, வாழ்க்கையைத் தங்களுக்கு நல்லதென்று தோன்றிய முறையில் நடத்தி, நம்மையும் படைத்து, வளர்த்து விட்ட பின்னர், நாம் அவர்களுக்கு என்ன ஃகம் மாறு உதவுகின்றோம்? ஏளனம். இது நல்லதல்ல. நாம் முட்டாள் தனமாய் ஒரு காரியம் செய்தால், நமது பின் சந்ததியார்கள் முன்பின் யோசிக்காமல், நம்மை அயோக்கியர்கள் என்றும் அழைப்பார்கள். எனவே, சீர்திருத்தக்காரன் திருத்தத்தின் தேவையைத் தெளிவுற எடுத்துக்காண்பித்து, முதியோர் மனம் புண்படாவழியில், முறையில் கேலி, செய்தாலும், அதையும் ஒருவாறு ஏற்றுக் கொள்ளலாம்.

படுதா வாழ்க்கை கேவலமானது தான். அது கேவலமானது என்று கூறுவதில், மேயோவின் காரணங்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஸ்திரீகள் ஏன் படுதாவிற்குள் வாழ வேண்டும்? படுதாவிற்குள் வாழும் ஸ்திரீகளுக்கு அந்த வாழ்க்கை கேவலமாகாது. படுதாவாழ்க்கையை அவர்கள் தவவாழ்க்கையாகக் கருதிக்கொள்ளவும் செய்யலாம். அடியெடுத்து வைத்து, கால் கொப்பளித்துக்கூலி வேலை செய்து பிழைக்கும் நிர்ப்பந்தமில்லாமல் தங்களை வீட்டுராணிகளாக வைத்திருக்கின்றார்களே ஆண்பிள்ளைகள் என்று "படுதாப் பெண்கள்" தங்கள்மனத்தைத்தேற்றிக்கொள்ளலாம். ஆனால் படுதாப்பழக்கம் இந்திய ஆண்மக்களின் மனப்பான்மைக்கு

இழுக்குக் கற்பிப்பிப்பதாகும். படுதா பெண்களுக்கு இழுக் கல்ல. அது ஆண்களுக்கு இழுக்காகும். அடிமைத்தனம் யாருக்கு அதிகமான அவமானத்தை அளிக்கும்? அடிமைக் கா அல்லது அவனை வைத்திருக்கும் எஜமானனுக்கா? 'குட்டி குலேத்து நாயின் தலையில் வைத்தல்போல' என்று ஒரு பழ மொழியுண்டு. குழந்தைகளின் குறைகளுக்குப் பெற்றோர் கள் காரணம் எனக்கூறுவதுதான் சரி. புத்தியும் பொறுப் பும் யாருக்கு அதிகமோ, அவன் ஒருகுற்றம் செய்தால், அதற்குத்தண்டனையதிகமாயிருத்தல் வேண்டும்; அல்லது மிகக் குறைவாக விருக்கவேண்டும். இதற்குக் காரணத்தை நாம் விரித்துக்கூற விரும்ப வில்லையாயினும், விளக்கிக்காண் பிப்போம். புத்தியும் பொறுப்பு முள்ளவன் வேண்டு மென்று தீமைசெய்திருக்க மாட்டான் எனக்கொண்டு, அவ னுக்குத் தண்டனையை எளிதாக்கலாம். வேண்டு மென்றே செய்தான் என்று கொண்டால், அதன் தீமை அதிகமாத லால், தக்க தண்டனை கொடுத்தல் வேண்டும். இருவகை முறைகளும் உலகத்தில் நடைபெற்று வருகின்றன. படுதா ஸ்திரீகள் இந்திய ஆண்மக்களுக்கு அதிகமான தண்டனை கொடுக்கலாகாது. ஆனால் ஆண்மக்கள்கள், "சௌரி சௌரா சம்பவத்திற்கும் பம்பாய், சென்னைக் கலவரங்களுக்கும் நானே காரணம்" என்று காந்தி ஒப்புக் கொண்டது போல், —அவர் ஒப்புக்கொள்ளத் தேவையில்லை—தங்கள் தவறை ஒப்புக் கொண்டு, தங்களுக்குத் தாமே மிகுந்த தண்டனை கொடுத்துக் கொள்ளுவதுபோல விரைவிலே படுதாவழக்கத் தை ஒழிப்பார்களாகில், அது எதிர்பாராத நற்பயன்களை அளிக்கும் என்று நாம் உறுதி கூறுவோம்.

ஆனல் மேயோ இந்த அத்தியாயத்தின் இறுதியில், வெடிகுண்டுகளைப்போல சிலவற்றைக் கூறியிருக்கின்ருர். அவைகளை அப்படியே மொழி பெயர்த்துத்தருகின்ரும்.

"வங்காளம் அரசியல் கலக்கத்தின் அடித்தளமாகும். பெரும்பகுதி இந்திய அராசகர்கள், வெடிகுண்டு போடுபவர் கள், கொலைபாதகர்கள் (இந்த மாகாணத்தில்) உற்பத்தியா கின்றனர். இந்தியாவில், வங்காளம் தான் மிதமிஞ்சிய கா மப்பித்துக்கொண்டது. மிதமிஞ்சிய காமத்துக்கும் வினைதக் குற்றம் செய்யும் மனப்பான்மைக்கும் தொடர்பு உண்டு என் று எந்நாட்டு போலீஸ் அதிகாரிகளும் வைத்திய நிபுணர் களும் கூறுகின்ருர்கள். இயல்பாயுள்ள இன்பநுகர்ச்சி வழிகள் ஒழிந்து போகவே, மனம் தனது திருப்திக்கு அசா தாரணமான வழிகளைத் தேடத்தாபம் கொள்ளுகின்றது. ஆனல் வங்காளம் படுதாவாழ்க்கைக்கும் அரண் போன்ற தாகும். இந்தப்படுதா வாழ்க்கையின் உயிரற்ற தன்மை யால், குற்றஞ்செய்ய இளைஞர்கள் தூண்டப் பெறும் வகை யைப்பற்றி விசாரிக்காமலிருக்கமுடியாது."

இந்தியாவைப்பற்றி இதுவரையிலும் பொதுப்பட அவ தூறு எழுதிய மேயோ, இப்பொழுது வங்காளத்தைத் தனி த்துத்தாக்கியிருக்கிருர். 'ஒருஸ்திரீ எழுதும் எழுத்தில் முக் கிய அம்சத்தைத் தேடவேண்டுமானல், இறுதியை நோக்கு வாயாக' என்றுமெக்காலே என்ற ஆங்கில ஆசிரியர்கூறியிருக் கிருர். மேயோவின் மேலே குறிப்பிடப் பெற்ற எழுத்தி னின்றும் அவரது அடிப்படை நோக்கம் இனிது புலனு கும். மேயோ வங்காளத்தைத் தனித்து ஏன் தாக்கவேண் டும்? மேயோவின் உண்மையான நோக்கம் யாது என்று நாம் துவக்கத்திலேயே தெளிவாகக் கூறியிருக்கிருேம்.

"இந்திய அரசாங்கத்தார் அதாவது ஆங்கிலேயர்கள் தங்களாலியன்ற அளவும் அதற்கு மீறியும், எல்லையற்ற இன்னல்களுக்கிடையே, இந்தியர்களுக்கு நன்மையைச்செய்து, அவர்களை முன்னேற்றி வருகின்றார்கள். ஆங்கிலேயர்களின் துணையில்லாமல், இந்தியர்கள் ஒருநாளும் முன்னேற்றமடைய முடியாது. இந்திய அதிகார வர்க்கத்தினரைத் தூற்றும் இந்தியர்களின் கூற்றுபொய்" என்று உலகத்தாருக்கு அறிவிக்கும் கடமையை மேற்கொண்டிருக்கும் மேயோ வங்காளத்தைத் தனித்துத் தாக்கத்தான் செய்வார்.

வங்காளம் 1905-ம் வருஷம் முதல் இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருந்து வருகின்றது; ராஜாராம் மோகனராய் காலம் தொட்டு, தலைமுறை தலைமுறையாக, மேநாட்டு நாகரிகக்கனியை அருந்திவந்த வங்காளம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கண்விழித்துக்கொண்டது. 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்பதை அறிந்தவுடனே, வங்காளம் தனது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளத் துணிந்தது. வந்தேமாதரம் எனக் கூச்சலிடத்துவக்கியது. சுயராஜ்யப் போராட்டத்தின் முன்னணியில் நின்று இணையற்ற துன்பங்களுக்கு ஆளாயிற்று. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் விசாரணையின்றிக்காவலில் வைக்கப்பெற்ற பாக்கியம் சிறப்பாக வங்காளத்துக்குத்தான் உண்டு. உலகக்கீர்த்தி பெற்ற கவிர வீந்திரர் தோன்றியநாடு. ராமகிருஷ்ண தேவரும் விவேகானந்தரும் அவதரித்த பொன்னாடு. ஜகதீச சந்திர போஸும் பிரிதிவிஸ்சந்திர ரேயும் சோர்வில்லாமல் பௌதிக ஆராய்ச்சி செய்யும் நாடு வங்கநாடு. சுயராஜ்ய கோஷம் முதலிலே தோன்றியது வங்கநாட்டில். ஆசார சீர்திருத்தத்தின் அருமையை அறிந்து அதற்கென உழை

த்த வீரர்கள் வங்கத்திலேதான் முதன் முதலில் தோன்றினார்கள். ஆங்கில மொழியில்லாமலே, எத்தகைய கல்வியையும் வங்க மொழியின் மூலமாயே வங்க இளைஞர்களுக்குப் போதிக்க முடியும் என விருது கூறி, அதை மெய்ப்பிக்க முயன்றது வங்கநாடுதான். சுதந்திரத்தின் பெருமையை இலக்கியத்தின் மூலமாயும் வீரச்செயல்களின் மூலமாயும் நவீன இந்தியாவுக்கு எடுத்துக் காட்டியது வங்கம்தான். தைரியத்தைத் தவிர ஏனைய யாவும் நமது நாட்டாரிட மிருந்து பறிமுதல் செய்யப்பட்டு விட்டன என்று சுட்டிக் காட்டிய அரவிந்தர் திருவாய் மலர்ந்தது வங்கநாட்டிலே. தற்கால இந்தியாவுக்கு எல்லாத் துறைகளிலும் வழிகாட்டியாயிருந்தது, இருப்பது வங்கநாடே. இந்திய அதிகார வர்க்கத்தினருக்கு அனவரதமும் கங்கில் தைக்கும் முள்ளைப் போல விளங்குவது வங்காளம். எனவே இந்திய அதிகார வர்க்கத்தினரை ஆதரித்து, "வக்கீல்" வேலைசெய்ய முன் வந்திருக்கும் மேயோ, எதிர்க் கட்சியில் முதல் பிரதி வாதியான வங்காளத்தைத் தாக்காம லிருப்பின், அவருடைய கட்சி வெற்றிபெறுமா? ஆனால் "வாதியின் தாவா மோசடி" என்று மெய்ப்பிப்பது கடினமான வேலையல்ல.

மித மிஞ்சிய காம நுகர்ச்சியால், வங்காள இளைஞர்கள் வெடிகுண்டுப் பாதையில் செல்லுகின்றார்கள் என மேயோ கூறியிருப்பது எத்தகைய பொய் என்று பார்ப்போம். வெடிகுண்டு போடுவதற்கும், துப்பாக்கியால் சுடுவதற்கும் உடல் வலியும் உள்ளத் துணிவும் வேண்டும். இது வரையிலும் மேயோ இந்தியர்களின் பிறப்பு வளர்ப்பைப்பற்றி வருணித்திருக்கும் வகைகளை நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள். பத்து வயதிலே தாயாகும் பெண்களுக்கு வீரக்குழந்தை

பிறக்கமுடியுமா ? பத்து வயதிலே தாயாகும் பெண்ணின் புருஷனுக்கு எத்தனை வயது என்று மேயோ கூறியிருக்கிறார்? பெண்ணுக்கு அதிகமான வயது அவனுக்கு இராது; அல்லது ஐம்பது வருஷக்கிழவனாய் இருப்பான். இது நான் எழுதியதல்ல; மேயோ கூறியிருப்பது. பிரவசத்தின் கொடுமையைச் சொல்லி முடியாது எனக் கூறியிருக்கிறார். சாகாமல் தப்பிப் பிழைக்கும் குழந்தையைப் பற்றி, ' எலும்புக்கனம் கொண்டதல்ல; ஜீவ சக்தியதிகமாயிராது; புணர்ச்சி நோய் கர்ப்பத்திலிருந்தே இருந்து வருகின்றது " என்று மேயோ எழுதியிருக்கிறார். இவ்வாறு வருணிக்கப் பெற்றிருக்கும் குழந்தைகள் இளைஞர்களாகும் பொழுது, துப்பாக்கிப் பிரயோகத்துக்கும் வெடி குண்டு எறிவதற்கும் தேவையான உடல் வலிமையும் உள்ளத்துணிவும் அவர்களுக்கு எங்கிருந்து தோன்றுகின்றன? இந்தியர்களைப் பற்றிச் சமுதாயமாய் மேயோ கூறியிருப்பது உண்மையானால், வங்காளிகள் வெடி குண்டு எறிந்தார்கள் என்று கூறுவதைக் கற்பனையாகக் கொள்ளவேண்டும். ஆனால் வங்காள இளைஞர்கள் வெடி குண்டு எரிந்தது உண்மையிலும் உண்மை. எனவே, மிதமிஞ்சிய காமத்தூண்டுதல் இந்தியர்களுக்குமில்லை; வங்காளிகளுக்கும் கிடையாது. இதுதான் கொள்ளத் தக்க முடிவாகும். தள்ளப்பட வேண்டியவை மேயோவின் சொற்களாகும்.

மேலும் மேயோ கூறுகிறபடி வங்காளிகள் தங்கள் முழுக்கவனத்தையும் காமத்துறைகளில் மட்டும் செலுத்தி வந்திருந்தால், மேயோ முதல் எந்த அன்னியரும் வங்காளத்தைப் பற்றிப் பேசியிருக்க வேண்டியதில்லை, பேசியிருக்கமாட்டார்கள். காமக்களஞ்சியங்களாயிருக்கும் விலங்குகளி

டம் பொறாமையும் பகைமையும் கொண்டு பேசும் மனிதனை எங்கேனும் நாம் கண்டிருப்போமா? தன்னோடு போட்டி போடும் மனிதனைப் பற்றிதான் சகோதரமனிதன் தன்னுடைய மனப்பான்மைக்கு, ஏற்ற வாறு உயர்வாகவோ, தாழ்த்தியோ பேசுவான். சென்ற ஐம்பது ஆண்டுகளுக்குள் உலகப்புகழ் பெற்ற வங்காளிகள் தோன்றி, உலகத்தின் கவனத்தை வங்காளத்தின் பேரில் ஈர்த்து விட்டார்கள். உலகமதிப்புக்குத் தாங்கள் தான் உரிமையாளர்கள் என்று இறுமாந்து கிடந்த ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் வங்காளத்தின் துணிவையும் வங்காளிகளின் உயர்வையும் கண்டு பொறாமை கொள்ளாமலிருப்பார்களா? எந்தத்துறையிலும் "வெள்ளையர்களை" தங்களுக்குக் குலாமாக விருக்கும்படி செய்து விட்ட வங்காளிகளின் மேதாவித்தனத்தை விருப்புடன் வெள்ளையர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களா? நாலடி என்று கேலி செய்யப்பெற்ற ஜப்பானியன் ஆறடிக் கதிகமான ருஷியனைப் போர்க்களத்தில் பந்தாடிய பின்னரே, உலகமதிப்புக்கும் பொறாமைக்கும் பாத்திரனானான். ஜப்பானியன் அரசியலில் சுதந்திரம் பெற்று வாழ்ந்தமையால், அவன் ருஷிய ஜப்பானியப் போரில் வெற்றி பெற்றவுடனே உலக மதிப்புக்குப் பாத்திரனாகிவிட்டான். ஆனால் உலகத்தார் ஏற்கக் கூடிய கவிகளும், கலைஞர்களும், ஆராய்ச்சியாளர்களும், ஆசிரியர்களும், போர் வீரர்களும் அந்த நாட்டில் இன்னும் தோன்றவில்லை. ஆனால் இந்தியாவோ, வங்கமோ, அடிமைப்பட்டுக் கிடந்தும், வாழ்க்கைத் துறைகள் யாவற்றிலும் உலகமதிப்பைக் கவர்ந்து கொண்டமைபற்றி, மேயோவைப் போன்றவர்கள் பொறாமை கொண்டு, ஆனால் தங்கள் பொறாமையை மறைத்துக் கொண்டே ஏளனம், செய்வதுபோலப் பாசாங்கு

செய்கின்றூர்கள். மருமகள் நற்குணங்களை மாமி நான்குபேர் காதுகளில் விழும்படியாக உரக்கச் சொல்லுவாளா? அவளு கௌரவம் போய் விடாதா? மேயோ இந்தியாவுக்கு மாமி போலும்!

வெடி குண்டுபோடும் வங்க இளைஞர்கள் காமாதுரர்கள் என்று மேயோ கூறியிருப்பது பொய் என்பதற்கு உருசுக் கொடுப்போம்.

> "அராசகச் செயல்களில் கலந்து கொண்டதாகக் கூறப் பெற்று, காவலில் வைக்கப்பெற்ற இளைஞர்களை—பெரும் பாலும் அவர்கள் மாணவர்கள்—விசாரிக்கும் பொருட்டு காலஞ்சென்ற ஸர். நாராயண சந்தாவர்க்காரும், நீதிபதி பீச் சுகிராப்டும் இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப் பெற்ற னர். இந்த இளைஞர்களிற் சிலரை, கமிட்டியார் நேரே சோதனை செய்தார்கள். நடவடிக்கைகள் இரகசியம். இந்த இளைஞர்கள் (உடலிலும் மனப்பான்மையிலும்) சீர் கெட்டுப் போயிருக்கிறூர்கள் என்று கூறுவது முழுப் பொய்யாகும் என்று இதை எழுதுபவரிடம் ஸர். நாராயண சந்தாவர்க்கார் சொல்லியிருக்கிறூர். உடற்பயிற்சியை, அவர்கள் கொள்கை யாக் கொண்டிருக்கின்றூர்கள். நடைத்தைக்கும், பக்திக்கும் அவர்கள் கீதையைப் பின்பற்றுகிறூர்கள். அவர்களது தின சரி வாழ்க்கையில் தேகப் பயிற்சிமுக்கியமான பகுதியாகும்."

என்று தாம் ஸர். நாராயண சந்தாவர்க்கரிடமிருந்து கேள்விப்பட்டதாக, "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" பத்திரி கையின் ஆசிரியர் திரு. நடராஜன் அவர்கள் எழுதியிருக்கி றூர். ஸர். நாராயண சந்தாவர்க்கர்தான், பம்பாய் ஹைக் கோர்ட்டு நீதிபதியாயிருக்கையில், லோகமான்ய திலகருக்கு ஆறு வருஷக்காவல் விதித்தவர். அவருக்கு மேநாட்டு நாக

ரிகத்தில் அளவு கடந்தபற்றுண்டு. ஆங்கில ஆட்சியில் அவருக்கிருந்த மோகத்தைப்போல, வேறு எவருக்கும் இருந்ததில்லையெனச்சொல்லலாம். வங்காளப்புரட்சிக்காரர்களை விசாரிக்க அவரை அனுப்பலாம் என்று இந்திய அதிகார வருக்கத்தினர் கொண்டிருந்த நம்பிக்கையிலிருந்தே, சந்தாவர்க்கர் அவர்களின் தன்மையை நண்பர்கள் அறிந்துகொள்ளலாம். அத்தகைய மனிதர், வங்கத்துப்புரட்சிக்காரர்களைப்பற்றி வியந்து கூறுவதென்றால், அர்களிடம் அபரிமிதமானதற்குணங்கள் இருந்தனவென்று கொள்ளுவதுதான் சட்டமுறைப்படிக்கும் தர்க்கமுறைப்படிக்கும் நேர்மையுள்ளதாகும். அவர்களை உயர்வாகப்பேசவேண்டாம். ஆனால் மேயோகூறுமாறு அவர்கள் சிறிய மனிதர்கள் அல்ல என்பது தெளிவு. மேயோ ஏன் வங்காள இளைஞர்களைப்பற்றி இவ்வாறு கேவலமாக எழுதவேண்டுமென்பதற்கு, திரு. நடராஜன் அவர்கள் கீழ்க்காணுமாறு எழுதுகின்றார்:—

"ஆங்கில சாக்ஸனுக்குப் பல உத்தம குணங்கள் உண்டு; ஆனால் அவனிடம் விநோதமான, வெறுக்கத்தக்க தீயகுணம் ஒன்று இருக்கின்றது. அவனுக்கு எதிரியாகவுள்ள ஆளையோ, நாட்டாரையோ, மகாக்கேவலமான நடத்தையுள்ள, அயோக்கியர்கள் என எளிதிலே கூறிவிடுவான். ஒரு மனிதனோ, ஒரு நாடோ அவனுடைய பாதையில் குறுக்கிடாதவரையில், அவன் மற்றவனுடைய களியாட்டங்களைக் கவனிக்கமாட்டான் அல்லது அவைகளிற் கலந்துகொள்ளுவான். ஆனால், "எதிரியால்" தனதுநலன்களுக்கு ஆபத்து நேர்ந்துவிட்டதுஎன்று எண்ணிக்கொண்ட நிமிஷத்திலேயே, அவன் "பதிவிரதை" க்கோலம்கொண்டு, சமீபகாலத்திற்கு முன் தனக்கு உயிர்நண்பர்களாயிருந்தவர்களுடைய நடத்தையைக் கண்டிக்கத் துவக்கிவிடுவான்."

இந்தத் தன்மையைக் கொண்டுபோர்ப்பதனாலேதான், வங்காளப் பிரிவினைக்காலமுதல், வங்காளி காமாதுரன் என்று வருணிக்கப்படுகின்றான் என்று திரு. நடராஜன் திருத்தமாக எழுதியிருக்கிறார். ஆங்கிலேயர்களும் அமெரிக்கரில் பெரும் பகுதியாரும், "ஆங்கிலசாக்ஸன்" கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

அசுரர் :—"வலியிலாதார் மாந்தரென்று
மகிழ்ந்து வாழ்ந்தோமே—ஐயோ! நாம்
கலியை வென்றோர் வேத வுண்மை
கண்டு கொண்டாரே—அம்மாவோ!"

ரிஷி :— "அமரர் தூதன் சமர நாதன்
ஆர்த் தெழுந்தானே—இந்நேரம்
குமரி மைந்தன் எமது வாழ்விற்
கோயில் கொண்டானே—இந்நேரம்."

அத்தியாயம் 13.

பெண் கல்வி.

பிரிட்டிஷ் இந்தியாவில் கல்விகற்றிருக்கும் பெண்கள் நூற்றுக்கு இரண்டு பேர்களுக்கு குறைவாயிருக்கின்றனர் என்று கணக்கு எடுக்கப் பெற்றிருக்கின்றது. இந்தப் புள்ளி உண்மையாகத்தானிருக்கவேண்டும். கற்றறிந்த பெண்கள் நாட்டில் குறைவுதான். அதைப்பற்றி நாம் வருந்து கின்றோம் என்று சொல்லவும் வேண்டுமோ? ஆனால் நல்ல கட்சியையும் பொய்கலந்து கூறுவதால் அந்தக் கட்சியின் பெருமை குறைந்து போய் விடும். பெண்கல்வி யபிவிருத்தி

யடையாததற்குக் காரண மென்ன? பெண்கள் கல்வி கற்பதனுல் பயன் என்ன என்பதை விளக்கிக்காண்பிக்காத வரையிலுப், இந்தியாவில் பெண் கல்வியபிவிருத்தி யடையவில்லையே என்று ஏங்குவதும் பொருளற்ற சங்கதியாகும். ஆங்கில நாட்டை எடுத்துக்கொள்ளுவோம். பெண் கல்விக்குச் சமயத்தடையும் சமூகத்தடையுமில்லை. என்றுலும் பெண் கல்வி எவ்வளவு தூரம் ஆங்கில நாட்டில் பரவி நிற்கின்றது என்பதை நண்பர்கள் அறிவார்களா? பெண் கல்வி எவ்வளவு காலமாக ஆங்கில நாட்டில் அபிவிருத்தி யடைந்து வருகின்றது என்பதையும் நண்பர்கள் அறிதல் வேண்டும். உலகத்தில், கல்வியைக் கல்வியின் பொருட்டு மட்டும் கற்பவர்களின் தொகையை விரல் வைத்து எண்ணி விடலாம். எந்த முயற்சிக்கும் பயன் வேண்டும் என்று கூறும் மேநாட்டார்கள் தொழில் கல்விபைவேண்டி நிற்கின்றுர்கள். தொழில் கல்விக்கு எழுத்துவாசனை தேவையில்லை எனறு உறுதியாகக் கூறலாம். பெரும் பட்டதாரிகளாக விருக்க ஆங்கிலேயர்கள் விருப்பங் கொள்ளுவதில்லை. பயனுடைத் தொழிற் கல்வி வேண்டும் ஐரோப்பியநாட்டில் எத்தனைபேர்கள் உயிர்தாக் கல்வியை விரும்பித்தேடுவார்கள் என்பதை நம்மவர் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம். ஐரோப்பிய நாடுகளில் ஆராய்ச்சி செய் கின்றுர்களே, அது எதற்காக? தங்கள் பிழைப்புக்கு வழியில்லாமல் அடித்துக்கொள்ளுவதற்கா? இல்லை. தாங்களும் பிழைத்துப் பிறர்க்கும் பிழைப்புத் தேடிக்கொடுக்கும் பொருட்டாக. பெண்கல்வி மனிதவருக்கத்திற்கு இன்றியமையாதது என்பதை நாம் வாத மில்லாமல் ஒப்புக் கொள்ளுகின்றேம். ஆனல் பெண்கல்வியை வாழ்க்கைக் கொள்கையாகக் கொண்டிருக்கும் ஆங்கில நாட்டில், பெண்கள் பாரிஸ்

டர்களாயிருத்தல் கூடாது என்ற தடை சமீபகாலம் வரையி லிருந்தது. இதன் காரணத்தை மேயோவை யொத்த நண் பர்கள் இந்தியர்களுக்கு விளக்கிக்காண்பித்தால் நலமாயிருக் கும். கொள்கைகள் பல உத்தமமாயிருக்கலாம். ஆனால் அவைகளைச் சந்தர்ப்பத்தையும் தேவையையும் நோக்கியே, அமுலுக்குக் கொண்டு வரமுடியும். ஆங்கில ஸ்திரீகள் ஏன் இது வரையில் ஆண்களைப்போல, பாரிஸ்டர்களாய் ஆக முடிய வில்லை என்று கேட்டால், கேட்பதற்குநமக்கு உரிமை இல்லை என்று பட் என்று ஆங்கிலேயன் நமது வாயை மூடி விடுவான். அல்லது, நொண்டிச் சமாதான மொன்றை வெளியேவிடுவான். அவ்வளவுதான்அவனால் செய்ய முடியும். இந்தியாவில் கல்விகற்கும் ஆண்பிள்ளைகளின் கல்விமுறையே நன்றாயில்லை. மேலும் அவர்களுடைய படிப்பு, நடைமுதல் வாழ்க்கைத்துறையின்எந்தப்பகுதிக்கும் உபயோகப்படுவது மில்லை. பரீட்சையில் தேறாமலும் பட்டம் பெற்றவர்கள் வேலையின்றித் தவிக்கையிலும் இறுதியில் இவைகளின் பொருட்டுத் தற்கொலைசெய்து கொள்ளத்துணியும் நிலைக்கு வரும் ஆண்பிள்ளைகளின் கல்வி, இந்தியப் பெண்களுக்கும் வேண்டுமா எனக்கேட்டால், மேயோ என்ன பதில் கூறு வாரோ, அது நமக்குத் தெரியாது.

அற்பப்படிப்பு ஆபத்தை உண்டாக்கும் என்பார்கள். அத்தகைய அற்பப் படிப்பைப் பெண்களுக்கும் ஆண்களுக் கும் கொடுப்பதை விடக் கொடுக்காம விருப்பதே மேல் என் பது நமது கருத்தாகும். ஹிந்துஜன சமூக அமைப்பி லேயே, தொழிற் கல்விதான் சிறப்பித்துக் கூறப்பட் டிருக் கின்றது. ஆண்டுக்கு ஒருநாளை, ஆயுதபூசை நாள் என்று ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். எழுத்தைக் கும்பிட்டு எக்க

மடைவதைக் காட்டிலும், ஆயுதத்தைத் தொழுது வயிருற, முடையாற உண்பவன்தான் உயர்ந்தவனுவான். "கல்வியதிக மென்று கற்று" வறுமையில் ஆழ்ந்த புலவனுடைய புலம் பலே நண்பர்கள் படித்ததில்லேயா? ஒய்வு இருக்கும்பொழுது, பெண்கள் நூல்களேப் படிக்கலாம். ஆனல், இந்தியாவில் பெண்களுக்கு ஒய்வேது? இந்திய ஜன சமூகத்தின் அமைப் மையும் இலட்சியத்தையும் அடியோடு மாற்றினுலன்றி, தற் போது கிடைக்கப் பெறும் கல்வியினுல், நமது நாட்டுக்கு நன்மை கிடையாது என்பது நமது உறுதியான அபிப்பிராய மாகும்.

எல்லாவற்றிலும் நன்மை உண்டு என்ற போலி ஞானம் நமக்கு இனிப்பதில்லே. குறியைத் தெளிந்துகொண்டு, அதற்கான சாதனங்களேக்கண்டு, சாதனங்களே உபயோகிக் கும் முறைகளே விரிவாக வகுத்து, இடைவிடாமல் நம்மவர் கள் முயற்சி செய்வார்களானுல், அதில் நமக்கு நம்பிக்கை உண்டு. வெறும் சீர்திருத்தக்கூச்சலே நாம் வெறுக்கின் ருேம். பிழைப்பில்லாமல் தவித்து உளம்வாடும் ஆண்பிள் ளேகளின் கதி பெண்களுக்கும் நேரவேண்டும் என்று நாம் விரும்பவில்லே. பெண் விடுதலேக்குவிரோதி என்ற பட்டம் நமக்குக் கிடைத்தாலும், அதற்காக அஞ்சி, நமது அறிவை யும் அனுபவத்தையும் பறிகொடுக்க, நாம் இசையப்போவ தில்லே. "இது காக்கையா? ஆமாம் காக்காதான்; இல்லே, கொக்கைப்போல இருக்கின்றதே; ஆமாம் கொக்குதான், அதன் வெண் கறுப்பைப் பார்த்தீர்களா! ஆமாம் பார்த் தேன்; எவ்வளவு அழகாயிருக்கின்றது" என்று தலேயசைக் கும் கூட்டத்தைச்சேர நாம் விரும்பவில்லே. பக்கத்துவீட் டில் பட்டினிகிடப்பவர்களுக்கு ஒருவேளே அன்னம் கூடப்

போடாத பாபிகள் சீர்திருத்தக்காரர்களாக வேடம் போட்டுக்கொள்ளுகின்றனர். என்னகேவலம்?

அன்னியர்கள் கூறும் சங்கதிகளுக்கு ஆமாம் என்று தலையசைத்து, ஆரவாரம் செய்வதில் என்னபயன்? நமக்குச் சொந்த அறிவு வேண்டும். அதைக்கொண்டு பிறர் கூற்றையும் உலகநிகழ்ச்சிகளையும் அளக்கவேண்டும். அளந்தபின் ஆய்ந்து தக்கன செய்யத் தலைப்படுதல் வேண்டும். இது சம்பந்தமாக லோகமான்யர் கூறியது நமக்கு நினைவுக்கு வருகின்றது. நோயாளி ஒருவனுக்கு தலைவலித்ததாம்; உடனே தலைவலிக்கு மருந்தை வைத்தியர் கொடுத்தாராம். பின்னர் அவனுக்கு உடம்பிலே வலியுண்டாயிற்றாம். உடம்பிலே தடவத்தைலம் கொடுத்தாராம். வாந்தி எடுத்தானாம். வாந்தியைத் தடுக்க மாத்திரைகொடுத்தாராம். இலேசாகக் காய்ச்சல் உண்டாயிற்றாம். வைத்தியர் நோயாளிக்கு ஏதோபஸ்பம் கொடுத்தாராம். இதுவைத்தியம் செய்யும் முறையாமா? வைத்தியனுடைய அறிவையும் நோயாளியின் ஆவலையும் புகழ முடியுமா? நோயாளியின் துன்பங்கள் யாவும் மலச்சிக்கலால் எழுந்தவை என்று அறிந்து பேதிக்கு மருந்துகொடுத்திருந்தால், நோயாளி குணமடைந்திருப்பான். இந்தியாவின் முன்னேற்றத்துக்கு கதை வைத்தியம் போலச்செய்யப் பெறுகின்றது என்று லோகமான்யர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். மற்றுமொருநிகழ்ச்சியைக் கூறுவோம். பர்மிங்காம்என்று ஆங்கிலநாட்டில் ஒருநகரம் இருக்கின்றது. அந்த நகரப்பல்கலைக் கழகநிர்வாகிகள் சபைகூடி, சர்வகலாசாலையின் தேவைகளைப்பற்றி யோசித்தார்கள். தத்தம் அறிவிக்குப் பட்டதை ஒவ்வொருவரும் கூறினார்கள். அவையாவும் ஒப்பேறவில்லை. கடைசியாக ஜோஸப் சேம்பர்லேன் என்ற

வல்லார் "பல்கலைக் கழகத்துக்குத் தற்போது தேவையானது ஒரு ஸீனுகோபுரம்" என்று அடித்துப்பேசி, அதற்கான செலவுத் திட்டம் தம்மிடம் தயாராயிருப்பதாகக்கூறி, தமது யோசனையைச்சபையில் நிறைவேற்றி விட்டார். கோபுரம் தேவையாஇல்லையா என்றேஅவர்கள்யோசிக்கவேயில்லை. சேம்பர்லேனை அவர்கள் பெரியாராகக் கொண்டதனுல், அவர் கூற்றைஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் தங்களை வைத்துக்கொண்டு விட்டார்கள். அதுபோல, அன்னியர்களை நமது ஆசான்களாகக் கொண்டு, அவர்கூறுவதை யெல்லாம், நாம் சுவைக்காமலே விழுங்கிவிடவேண்டு மென்பதுண்டா? குழந்தைகளுக்கும் பெரியார்களுக்கும் அம்மை வைப்பதால் ஏதேனும் நற்பயன் உண்டா என்பதை விசாரிக்காமலே, இந்தியாவில் அம்மை குத்த ஏராளமாக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அம்மை குத்துவதால் தீமைதான் அதிகம் என்று ஆங்கில நாட்டில் அறிஞர்களும் ஆராயச்சியாளர்களும் இப்பொழுது பெருங்கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். கோடிக் கணக்கில் அம்மை வைத்துக் கொண்ட இந்தியர்களின் இரத்தத்தில் விஷப்பால் ஏறிவிட்டது என்பது ஆங்கில ஆராய்ச்சியாளர்களின் தீர்ப்பாகும். இதனின்றும் இந்தியர்கள் எவ்வாறு தப்பித்துக் கொள்ளப்போகின்றனரோ? நமது நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும் பாரம்பரை வர்சனைக்கும் ஒவ்வாத பல பழக்கங்கள் நமது வாழ்வில் ஏறி வருகின்றன. அவைகளினுல் நமது சிக்கன வாழ்க்கையும் குலைந்து, வருமான வாழ்க்கையும் குலைந்து வருமான மதிகமில்லாத நமக்குக்கடன் மிகுதியும் ஏற்பட்டு விடுகின்றது. எதையும் நாம் யோசித்துச் செய்வதில்லை. எவர் சொன்னுலும் அதை விரைவில் நம்பிவிடுகின்றேம்.

பெண் கல்விவேண்டு மென்கிறோம். பெண்கல்விக்கு நான் விரோதியல்ல. ஆனால் சில விஷயங்கள் நமக்குத் தெளிவாக வேண்டும். நமது யோசனை, குருடன் குருடனுக்கு வழி காட்டியதாக இருக்கலாகாது. பெண்கல்வி எத்தன்மைத்தாயிருக்க வேண்டும்? அந்தக் கல்வி எத்தத் துறையில் பயனளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும்? எவ்வளவு வரையிலும் அவர்கள் கல்விகற்க வேண்டும்? எவ்வளவு வரையில் அவர்களால் கல்வி கற்கமுடியும்? இவைகளுக்கு நேரே "பெண் கல்வி"க்காரர்கள் விடையளிக்கவேண்டும். பெண் கல்விக்காகப்பாடுபட முன்வந்திருக்கும் அன்பர்களுக்கு ஒரு யோசனை கூறுகின்றோம். அதைச் செய்து முடித்தால், வேறு யாவும் தாமாகவே கைகூடும். ஹிந்து சட்டப் பிரகாரம், பெண்ணுக்குக்குடும்பச் சொத்தில் பாத்தியம் கிடையாது. (பிள்ளையில்லாமல் விதவையாகப்போகும் பெண்ணுக்கு ஜீவனுமிசம் உண்டு; அவ்வளவுதான்). தகப்பன்தேடும் சொத்து, இயல்பாக, அவனது ஆண்குழந்தைகளைத்தான் சேரும். பெண்கல்வியையும் பெண்களின் முன்னேற்றத்தை நாடும் அன்பர்கள், குடும்பச்சொத்து எல்லாக்குழந்தை களுக்கும்—ஆணுக்கும்பெண்ணுக்கும்—சமமாகப் பாகம் செய்யப்படல் வேண்டும் என்று சட்டத்தில் திருத்தம் செய்து விட்டால், அவர்கள் கோரும் சீர்திருத்தங்கள் யாவும் எளிதிலே கைகூடிவிடும். இந்தியாவில் இப்பொழுது பெண்களின் சார்பாகச் செய்ய வேண்டிய சீர்திருத்தம் இதுவேயாகும். மற்றையயாவையும் போகப் போகச் செய்து கொள்ளலாம். சொத்துரிமையுள்ள பெண் இளமை மணத்துக்கு உடன்படாள். கல்விக்குப் பொருள் இல்லையே, வசதி இல்லையே, என்று அவள் மனமேங்க மாட்டாள். பெண்ணை, ஆண்

வினேத விளையாட்டுக்குக் கருவியாகக் கருதமாட்டான். இந்த சீர்திருத்தத்தைச் செய்ய மாட்டார்கள்; பயன் பெறக் கூடாத வேறு கூச்சல்களைப் போட்டுக் கொண்டிருப்பார்கள். மேலும் இந்தச் சீர்திருத்தத்திற்கு ஆண்கள் யாரையுமே கலந்து யோசிக்க வேண்டிய தேவையுமில்லை. இந்த சீர் திருத்த முயற்சியைக் கொண்டு பெண்விடுதலைக் காரர் களின் மனப்பான்மையை அளந்து விடலாம்.

சிறிதுகாலம் மேயோவின் நூலையே மறந்து விட்டோம், பாதகமில்லை. லோகமான்யர் கூறிய வைத்தியத்தைப் போலச் செய்ய வேண்டுமேயல்லாமல் சில்லறை யுக்திகளால் யாதொரு பயனும் ஏற்படாது. இந்தியர்கள் தங்கள் முன் னேற்றத்தின் பொருட்டு, யோசிக்காமல் எதையும் செய்ய லாகாது என்ற நோக்கங்கொண்டு, மேயோவை அடியோடு மறந்து, சிலவற்றை கூறினேம். எது அடிப்படை, எது மேற் பூச்சு என்பதை அறியவேண்டும். பெண்கல்வி யபிவிருத்தி யடையின், அலங்காரமாகச் சில பெண்களுக்கு உத்தியோ கம் கிடைக்கலாம். பலருக்குக்கிடைப்பதாகவைத்துக் கொள் ளுவோம். அவையாவும் ஆண்பிள்ளைகளுக்குகிடைக்க வேண் டிய அலுவல்களாகும். எனவே அந்த ஏற்பாட்டில் இலாப மில்லை. இலாபமும் செட்டும் இல்லாத முயற்சியைக் கொள் ளுவது அறிவின்மையாகும்.

தௌலத்புரி, ஹிந்து அகாடமியின் அமைச்சரான திரு பிரஜலால் சக்கரவர்த்தியென்பவர் கல்கத்தா பல்கலைக் கழக கமிஷன் முன், கீழ்க்கண்டவாறு சாட்சியம் கொடுத்தாராம்:

"பெண்களுக்குப் போதிய அளவு அற நூல் போதனை யும் குடும்பத்தை நடத்த அனுபவமுறையும் கிடைக்கப்பெறு

கின்றன. பள்ளிகளிலே கொடுக்கப்பெறும் கல்வியின் மாதிரியைக்காட்டிலும், இது உயர்ந்ததாகும்.''

இது மேயோவுக்கு இனிக்கவில்லை. இந்தியாவின் தற்போதைய நிலையைக்கருதி, சக்கரவர்த்தியவர்கள் சாட்சியம் கூறியிருக்கிறார். இந்தியருக்குப் பொதுவாழ்வினால் எழும் இன்பந்தான் இல்லை; சுதந்திரம்தான் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது. குடும்பவாழ்வும் தொலைந்துபோக வேண்டுமோ? நாடும், வீடும் இந்தியனுக்குச் சொந்தமில்லை என்ற நிலைக்குவந்துவிடவேண்டும் போலிருக்கிறது! பிற்போக்குக்கான கற்பனையை நாம் கூறவில்லை. ஆங்கில நாட்டின் நிலையைச் சற்றுகவனிப்போம். அங்கு சமுதாயப் பொருளாதார நிலைமை நேர்மையுடனும் ஒழுங்காகவும் அமைக்கப்பெறவில்லை. நாட்டிலே பொருள் ஏராளமாய் இருக்கிறது. ஆனால் அதை அனுபவிக்கக்கூடிய நிலையில், சிறுபான்மையோர்தானிருக்கின்றார்கள். ஏனையோரின் கதியென்ன? இந்தப் பொருளாதார நிலைமையின்காரணமாக, வாழ்க்கை நடத்துவதற்கு ஏராளமாகப் பொருள்வேண்டியிருக்கிறது. கல்விபயிலும் ஆணும் பெண்ணும் சிறிய ஆசையையும் சிக்கனமான வாழ்வையும்பற்றி பள்ளிகளில் போதிக்கப்பெறுவதில்லை. தனவந்தர்களின் உருசி அவர்களுக்கு உண்டாகிவிடுகின்றது. அந்த உருசிக்கேற்ற வாழ்க்கை வசதிகள் அவர்களுக்குக் கிடையாது. எனவே, குடும்ப வாழ்க்கையின் அபாரச்செலவைக்கண்டு, அவர்கள் நடுநடுங்கி, ஆயுள் முழுதும் மணமின்றியிருக்க முயலுகின்றார்கள். இது முடிவதில்லை. ஒன்று, மணம் செய்துகொண்டு, துயரக்கடலில் ஆழ்கின்றார்கள். அல்லது மணம்செய்துகொள்ளாமல், பாபம் செய்யத் தலைப்படுகின்றனர். குடும்ப வாழ்க்கைக்

கேற்ற பழக்கங்கள்தான் வேண்டும் பெண்களுக்கு என்று கூறினுல், போலி நாகரிக உலகம் நம்மைப்பார்த்து நகைக்கவும் கூடும். அவர்களின் நகைப்புக்காக, நாம் நமது அறிவையும் அனுபவத்தையும் அனுதாபத்தையும் அன்பு நோக்கையும் இழக்கவேண்டு மென்பதுண்டா? நமது நாட்டின் பொருளாதார நிலைமை பல காரணங்களால் சீர் கெட்டுக் கிடக்கின்றது. பொருளாதார வசதிகள் தோன்றும் வரையில் பெண்கள் ஓரளவுவரையில் கல்வி கற்பது தான் சாத்தியமும் பொருத்த முள்ளதும் ஆகும். நாம் கூறியிருப்பதையே, அஸன்ஸால் உயர்தரப்பள்ளியின் தலைமை உபாத்தியாயர் திரு. ஹரிதாஸ் கோஸ்வாமி அவர்கள் அழகாகக் கூறியிருக்கின்றுர்கள்.

> "தங்கள் எதிர்கால வாழ்க்கையில் பூர்த்தி செய்து கொள்ள முடியாத உருசிகளைக் கல்வியின் மூலமாகப் பெண்களின் உள்ளத்தில் பயிர்செய்து, அதன் காரணமாக, எதிர்காலக் கலக்கத்திற்கும் சச்சரவிற்கும் விதைகளைத் தூவுவது அறிவுடைமை யாகாது."

கோஸ்வாமி அவர்கள் பெண்கல்விக்கு விரோதியா? இல்லை. அவர் ஜனசமூகத்தை முழுநோக்குடன், முன்னும பின்னும், நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்க்கின்றுர். "வெட்டி"ப் பேச்சுப் பேசுவதாயிருந்தால், அத்தியாயம் அத்தியாயமாக எழுதலாமே? அதனுல் என்ன இலாபம்? நிர்வாகம் செய்ய முடியாத கருவியும் கருத்தும் கொள்கையும் ஜன சமூகத்துக்குத் தீமைகளைத்தான் உண்டு பண்ணும். இவைகள் அழகிய கவிதை உருவம் படைத்தால், படிக்கலாம். அதற்குமேல் அவைகள் ஒன்றுக்கும் உதவமாட்டா.

இந்தியாவின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் அன்பர்கள் பெண் விடுதலைக்காகப் பாடுபடவேண்டும். இதைத் தாராளமாக நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இந்த வேலையை மூன்றுபேர்கள் இப்பொழுது செய்து வருகின்றார்கள் என்று மேயோ கூறுகின்றார். (1) இந்திய அரசாங்கத்தார் (2) ஆங்கில, அமெரிக்க நாட்டுப் பாதிரிமார்கள் (3) தாராள நோக்குக்கொண்ட இந்தியர்கள். உண்மை. ஆனால் முதல் இரண்டு கூட்டத்தார்களின் முயற்சி பயனற்றதாகும். ஏன்? ஒரு கதை சொல்லுகிறோம். முரடன் ஒருவனிருந்தான்; அவன் யாரைக் கண்டாலும், அடித்துத் தொந்திரை செய்தான் இவனுடைய அறிவின்மையைக் கண்டவர் ஒருவர் அவனுக்குப் பணம்கொடுத்து, "என்னிடம் இவ்வளவுதான் இருந்தது; உன்னுடைய நிகரற்ற வேலைக்கு எவ்வளவோ கொடுக்க வேண்டும். அதோ யிருக்கிறாரோ, அவரைப் போய் அடித்தால், அவர் நான் கொடுத்ததைக் காட்டிலும் அதிகமாகப் பணம் கொடுப்பார்" என்று கூறினர். அந்த அறிவிலி மற்றவனைப்போய் அடிக்க, தக்க தண்டனை பெற்றான். இந்திய ஜனசமூகம் விருப்புடனும் சக்தியுடனும் ஏற்க முடியாத தீமைகளைப் பெண் கல்வி மூலமாக, முதலில் கூறிய இரு கூட்டத்தாரும் உண்டாக்கி விட்டால், என்ன செய்கிறது? பெண் கல்வியின் தேவை யாவருக்கும் தெரியும். ஆனால் அடிமை இந்தியாவில், கல்விகற்ற ஆண்மகனின் ஆசையும் சுயமரியாதையும் சுதந்திரமும் பாழ்பட்டுக் கிடக்கும்பொழுது, பெண் கல்வியைப் பற்றி என்ன சொல்லுவது? வீட்டிலே கௌரவத்துடன் "அடிமை" யாயிருந்த இந்திய ஸ்திரீ, பகிரங்கமாக, நாட்டிலும் "அரசியல் அடிமை" யாக மாற வேண்டும் போலும்!

"மிகுதியாகப் பணச் செலவு செய்யாமல் அவன் (ஹிந்து) தனது பெண்ணுக்கு மணம் முடிக்க முடியாது. தன்னை ஏழையாக்கும் அளவு வரையில், அவன் ஸ்ரீ தனம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்குமேல் கலி யாணச் செலவு. எனவே, அவன் பெருத்த கடனாளியாகின் ருன்."

மேயோ, இந்த உண்மையை, வேறு காரணத்தின் பொருட்டுக் கூறுகின்ருர். பெண் கல்வி விஷயத்தில் தகப் பனுக்கு சிரத்தைக் குறைவு ஏற்படுவதற்கு, இதைக் காரண மாகக் குறிப்பிட்டிருக்கிருர். மேயோ நினைக்குமாறு, செல வைக் கவனித்துக் குடும்பத்தை நடத்தும் உத்தம வழக்கம் சென்ற ஐம்பது ஆண்டுகளாக ஹிந்துக்களை விட்டு நீங்கி வருகின்றது. யோசனையின்றிக் குடும்பமும் வாழ்க்கையும் நடத்தும் ஹிந்துக்கள், மேயோவுக்குத் தங்கள் முட்டாள் தனம் தெரிந்த பின்னரும், அதை மாற்றிக் கொள்ளமாட் டார்களா? ஸ்ரீ தனமும் கலியாணச் செலவும் ஏராளமாய்ச் செய்யும் ஆடம்பர மனப்பான்மை கொண்ட தற்கால ஹிந்து க்கள், இந்தியர்கள், பெண்களுக்கும் சொத்து உரிமை உண்டு என்று சட்டம் செய்யலாகாதா? அதனல் ஏற்படக்கூடிய நன்மைகளில் நூறில் ஒன்றுகூட ஏனைய திருத்தங்களால் ஏற்படமாட்டாது? பெண்ணை விற்பதுஎன்றும்வாங்குவதென் றும் பின்னர் பேச்சு நடை பெறுமா? ஹிந்து ஜனசமூகம், இந்தத் துறையில் தனது கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

"பெண் கல்விக்குத் தடை ஏற்பட்டிருப்பதால், பெண் உபாத்திமார்கள் தயாராவது அருமையாயிருக்கிறது"

என்று மேயோ இப்பொழுது கூறுகின்றார். இது உண்மை. ஆனால் அவர் முன்னே, பெண் உபாத்திமார்களைப் பற்றியெழுதி யிருந்தது, நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். தங்கள் கற்பு போய்விடும் என்ற அச்சத்தினால், பெண்கள் உபாத்திமார்களாகச் சம்மதிப்பதில்லை என்று முன்னர் எழுதியிருந்தார். அது அப்பொழுது; இது இப்பொழுது போலும்! முன்னுக்குப்பின் ஏன் முரணுபிருத்தல்வேண்டும் என மேயோவை யார் வினவமுடியும்? டிலேன் அவர்கள் கூறியதுபோலக் கூறிவிட்டால்? டிலேன் கூறியதைச்சொல்லுகிறேன். ஜான் டிலேன் என்பவர் "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையின் கீர்த்திபெற்ற ஆசிரியராக நீண்டகாலம் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்துவந்தார். அவர் எழுதியுள்ளவைகளில் முரண்கொண்டவைகள் சில, அவரிடம் ஒரு நண்பரால் எடுத்துக்காண்பிக்கப்பெற்றன. "முந்தாநாள், 'டைம்ஸ்' இல் இப்படி எழுதியிருக்கிறீர்களே; நேற்றைய "டைம்ஸ்" இல் வேறுவிதமாக எழுதியது முரணாகாதா" என்று நண்பர் டிலேனைக்கேட்டார். "நான் நேற்றைய "டைம்ஸ்" க்கும் நாளை "டைம்ஸ்" க்கும் பொறுப்பாளியல்ல. இன்றைபதற்குமட்டுமே பொறுப்பாளி என்று டிலேன் பதில் அளித்தாராம். அதாவது அன்றைய" வேலைகையைவிட்டுப்போகவேண்டும் என்பது டிலேன் கூறியதன் பொருளாகும். அதுபோலவே, ஒவ்வொரு அத்தியாயத்தையும் எழுதிவிட்டு, அதை மேயோ திரும்பக்கூடப்பார்த்திருக்கமாட்டார்போல் தோன்றுகின்றது.

"பள்ளி, ஆஸ்பத்திரி கட்டிடம் கட்டித் தன் பெயர் வெளிவருமானால் அதற்குப்பணமுதல் அளிக்க இந்திய சுதேசமன்னர் தயாராயிருக்கின்றனர். ஆனால் அத்தகைய

அமைப்புகளை நடத்திவரப் பணப்பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை"

அந்நிய நாட்டார்களின் தருமத்தால்தான், இந்தியர்கள் பிழைத்து முன்னேற்றம் அடைந்து வருகின்றார்களோ? இந்தியாவிலிருக்கும் சுதேசமன்னர்கள் வைஸிராய்களின் தயவைச் சம்பாதித்துக்கொள்ளும் பொருட்டு, அரசன் குடும்பத்தார் எவரேனும் வந்தகாலத்தில், நன்கொடையளித்து, தங்கள் பெயர்கள் பத்திரிகைகளில் வருமாறு செய்துகொள்ளுவார்கள். இந்திய அரசாங்கத்தார் குடிகளிலிருந்து வாங்கும் வரி எங்கு செல்லுகின்றதென்பதைச் சாதாரணக் குடியானவன் அறிவானா? அரசியல் நிர்வாகிகள் நன்கொடைக்காக எவரையும் தூண்டவேண்டியதில்லை. மேலும், எந்த அமைப்பையும் தனிமனிதன் நடத்துவது என்பது தற்போது இந்தியாவில் இயலாதகாரியம். அமைப்பின் செலவுக்கு ஈடுகொடுக்கும் வருமானம் நல்லெண்ணம் கொண்ட பொருளாளியிடமில்லை. தவிர, இத்தகைய அமைப்புகளிலும் பணச்செலவுபிடிக்கும் பழக்கங்கள் தான் போதிக்கப்பட்டு வருகின்றன. போதிக்கும் ஐரோப்பியர்கள் தங்கள் நிலையை நினைத்துக்கொள்ளுகின்றார்களே யல்லாமல், ஏழை இந்தியனுடைய பொருளாதார நிலைமையைத் தெரிந்து போதிப்பதில்லை. தனது இரண்டு பெண்களைப் பள்ளிக்கு அனுப்பிய கனவான், அங்கு தன் பெண்கள் செலவுசெய்திருக்கும் வகையை ஆட்சேபித்து எழுதியிருப்பதைக்குறிப்பிட்டு, அவர் இவ்வாறு செய்யலாமா என்று வினவுவதுபோல, மேயோ எழுதியிருக்கிறார். இந்தியனுடைய சராசரி வருஷ வருமானம் ரூபாய் முப்பதுமட்டும் தான் என்பதை மேயோ உணர்ந்திருந்தால், அவர் இவ்வாறு எழுதி யிருக்கமாட்டார்.

மேரி ராணி வருகையை முன்னிட்டு, நாடெங்கும் பெண்களுக்காக மேரிக்கல்லூரிகள் காணப்பெற்றன. அவைகளில் தலைமைவகித்து நடத்துபவர்கள் பெரும்பாலும் "வெள்ளை" ஸ்திரீகள். சென்னையிலிருக்கும் மேரிக்கல்லூரியின் தலைமை அதிகாரியின் நடத்தையைப்பற்றி சென்னைச்சட்டசபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டதை நண்பர்கள் நினைவில் வைத்துக் கொண்டிருக்கலாம். மேரிக்கல்லூரியில் படிப்பவர்கள் யாவரும் வயதுவந்த பெண்கள். தமது கல்லூரிப்பெண்களின் மணமுடிப்பில் அக்கரைசெலுத்திச் சிலகாரியங்கள் அவர் செய்தது ஒழுங்கற்றவை என்று கூறப்பெற்றது. இவ்வாறு நடைபெறும் கல்லூரிகளில், மாணவிகளுக்கேற்ற படிப்புமுறை வகுக்கப்பெற்றிருக்கிறது என்று மேயோ கூறியிருப்பது, நகைப்புக்கு இடமாயிருக்கிறது.

> "சுத்தமாயிருக்க, இடைவிடாது, இந்தப்பள்ளிகளில் கற்றுக்கொடுக்கப்படுகின்றது. கல்விக்காக மார்க்குகள் கொடுக்கப்படுவதன்றி, உபகாரம்செய்யும் தன்மையையும் உண்மைகூறும் குணத்தையும் விளையாட்டுதன்மையையும் தூண்ட, பள்ளியில் மாணவிகளுக்கு மார்க்குகள் கொடுக்கப்படுகின்றன."

மேயோ மேலேபொறித்திருக்கும் எழுத்தின்குறிப்பை நண்பர்கள் அறிந்திருப்பார்கள் என நினைக்கிறேன். அதாவது, இந்தியக்குடும்பங்களிலில்லாத பழக்கங்களைச் சிறுமிகளிடம் தூண்ட, பள்ளிகளில் மிகுந்த சிரமம் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றதாம்! மேயோவின் பொய்புகலும் நாவைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும். பல்துலக்காதவெள்ளையர்கள், தினமும் குளித்து முழுகாத ஐரோப்பியர்கள், சம

யத்துக்கேற்றவாறு திரித்துப்பேசும்மேநாட்டுராஜதந்திரிகள், அறிமுகமில்லாமல் பிறனுக்கு உதவி செய்ய முடியாதுஎன்று கருதும் முறுக்குக்கழுத்தர்கள்—இவர்கள் யாவரும் இந்தியாவையும் இந்தியர்களையும் பலதுறைகளிலும் இகழ்ந்து கூறும் நிலைமை ஏற்பட்டது விந்தையல்லவா? அதை நினைந்து நோவது நன்மை பயக்காது. அதை நீக்குவதே நமது கடமையாகும். இந்தியர்கள் உண்மை பேசுவதில்லை என்று குறிப்பால் உணர்த்தியிருக்கும் மேயோ செய்திருக்கும் விநோதத்தை நண்பர்களுக்குக் காண்பிக்கின்றேன். பாஞ்சால மாகாணத்தின் தலைநகரான லாகூர் நகரத்தில் "விக்டோரியா பள்ளி" என்று ஒருபள்ளியிருக்கிறது. அந்தப்பள்ளிக்குத் தலைமையாக விருந்து நடத்துபவர் போஸ் மாது. (போஸ் என்பது வங்காளப்பெயர்) இவர் கிருஸ்தவர். "கிருஸ்தவ மதத்தைத்தழுவிய குடும்பத்தின் மூன்றும் தலைமுறையைச் சேர்ந்தவர் இவர்" என்று மேயோ எழுதி, இவரை மிகத்திறமை வாய்ந்தவர் என்றும் புகழ்ந்திருக்கிறார். போஸ் மாது கூறியதாகச் சிலவற்றை மேயோ கூறுகின்றார்.

"விக்டோரியாப்பள்ளியில் 500 பெண்பிள்ளைகளிருக்கிறார்கள். சிலர் தனவந்தர்கள்; மற்றும் சிலர் ஏழைகள்; ஆனால் எல்லோரும் நல்ல குடும்பத்தை சேர்ந்தவர்கள். கீழ்ச்சாதிக் குழந்தைகளை நாங்கள் எடுத்துக் கொண்டால், சாத்தியமில்லாத அளவுசெலவு அதிகரித்துவிடும். (மேலும்) மற்றவர்கள் அவர்களுடன்கூட உட்காரவு மாட்டார்கள், உண்ணவுமாட்டார்கள், தனிவகுப்புகள் காணவேண்டியிருக்கும்"

"பண்டிதர் எவரையேனும் நியமிக்க நேர்ந்தால், அவரை அவர்கற்றுக்கொடுக்கும் வகுப்பிலிருந்து, திரைபோட்டு மறைத்த பின்னர், அவர் கற்றுக்கொடுப்பார். தேர்ந்தெடுக்

கப்பெறும் பண்டிதர் திறமையுள்ளவராயிருக்கவேண்டுமென் பதுமல்லாமல், அவர்தொண்டு கிழவராயும் இருத்தல் வேண்டும்.''

" (மாணவிகள்) தங்கள் பிற்கால வாழ்வில் தங்கள் உணவைத் தாங்களே சமைத்துக் கொள்ளுவதில்லை. அந்த வேலையை அவர்கள் அழுக்குப்பிடித்த வேலைக்காரர்களிடம் முழுதும் ஒப்படைத்து விடுகின்றார்கள். அதனாலே தான் நோய்மிகுந்து, மரணம் அதிகரிக்கின்றது.''

விக்டோரியாப்பள்ளித்தலைமை உபாத்தியாயர் போஸ் மாது மேற் கூறிய வாறு, தம்மிடம் சொன்ன தாக மேயோ தமது நூலில் 132, 133, 134 பக்கங்களில் எழுதியிருக்கிறார். நடக்காததை மேயோ—இந்தியர்கள் பொய் சொல்லும் வழக்க முடையவர்கள் என்று குறிப்பிட்டிருக்கும் மேயோ—எழுதியிருப்பாரா என்று நண்பர்கள் கேட்கலாம். அதற்கு நாம் விடையளிக்க வில்லை. திருக்குறளில் வல்லுனரான பாப்ளி பாதிரியார் மேயோ எழுதியிருப்பது பொய் என்று "இண்டியன் விட்னெஸ்'' என்ற லக்னௌப் பத்திரிகையில் தெளிவாக எழுதியிருக்கிறார். பாப்ளி பாதிரியார் எழுதியிருப்பதை இங்கு தருகின்றோம்.

" (மேயோ தமது நூலில்) 132, 133 பக்கங்களில், விக்டோரியாப் பள்ளியைப்பற்றிய வரலாறு கொடுத்து, போஸ் மாதுதம்மிடம் கூறியதாக சிலவற்றிற்கு நேர்மொழி அடையாளங்கள் கொடுத்திருக்கிறார். நான் இந்த சீமாட்டியை (போஸ் மாதை) க் கேட்டேன். நேர்மொழிக் குறிப்புகள் பெற்றவையிற் பெரும்பான்மை நடை பெறவில்லை என்று அறிகிறேன். மேலும் போஸ்மாது மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவரல்லர். கீழ்ஜாதுப்புக் குழந்தை

களைப்பற்றிக் கூறப்பட்டதாக 132—ம் பக்கத்தில் 3 வது பாராவில் கண்டிருப்பது உண்மையுமல்ல; அது பேசப்படவு மில்லை. பண்டிதர்கள் திரை மறைவிலிருந்து சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று 134ம் பக்கத்தின் உச்சியில் அவர் எழுதி யிருக்கிறார். (ஆண்) பண்டிதர்களால் ஹிந்துப் பெண்கள் சம்ஸ்கிருதம் எப்பொழுதும் படுதாவின்றிக் கற் றுக்கொடுக்கப் பெற்று வந்திருக்கின்றனர் என்று போஸ் மாது என்னிடம் தெரிவிக்கின்றார். பண்டிதர்கள் தொண்டு கிழமையாய் இருத்தல் வேண்டுமென்பது நாற்பது ஆண்டு களுக்கு முன்னிருந்த வழக்கமாகும். இந்திய ஸ்திரீகளுக்கு தைக்கத் தெரியாது என்று மேயோ எழுதி யிருப்பதை மறு த்து, "பண்டைக்காலந் தொட்டு தைத்தலை ஒரு கலையாக இந்திய ஸ்திரீகள் பாவித்து வருகின்றார்கள்" என போஸ் மாது கூறுகின்றார். 134—ம் பக்கத்தில் உச்சியில் சமைய லைப்பற்றி மேயோ எழுதியிருப்பது அவருடைய கற்பனையா கும். இதைப்பற்றி போஸ்மாது கூறுவதாவது:—"வேலைக் காரர்கள் இருப்பினும்கூட, எல்லா வகுப்பு ஸ்திரீகளும் சமை யல் செய்வார்கள். நல்ல வீடுகளில், வேலைக்காரர்கள் அழுக் குப் பிடித்தவர்களல்ல. அதுவும் ஹிந்துக் குடும்பங்களி லிருக்கும் வேலைக்காரர்களிடம் அசுத்தத்தைக் காணவே முடி யாது."

"இதை விரிவாக எழுதவேண்டும் என்று எனக்குத் தோன் றிற்று. ஏனெனின் இதை என்னால் விசாரிக்க முடிந்தது. இதில் உண்மை கூறப்படவே யில்லை என்று நமக்குத் தெரி கிறது. பலர் சொல்லி யிருப்பதாகப் பெயரில்லாமல் (மேயோவால்) பொறிக்கப் பெற்றிருக்கும் மேற் கோள்கள் பொய்யாகவே யிருக்கலாம் என்பது எனது தோற்றம்."

போஸுக்கும் மேயோவிற்கும் நடந்ததாகக் கூறப் பெறும் சம்பாஷணையில் "தலைபோகிற சங்கதி" யொன்றுமே

யில்லை. இதைப்பற்றி விரிவாக எழுத வேண்டுமென்ற தேவையுமில்லை. பாப்ளி பாதிரியார்எழுதி யிருப்பதுபோல், தமது சொந்தக் கற்பனைகளை பிறர் வாய் மொழிகளாக எழுத்தில் பொறிக்கும் கெட்ட வழக்கம் மேயோவிடம் இருக்கிறது என்பதை நண்பர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? மேலும் இந்தியர்களைப் பல துறைகளிலும் அவதூறு பேசும் மேயோவுக்கு உண்மையைப்பற்றிச் சிறிது கூட சிந்தனையும் இலட்சியமும் கிடையாது என்று மெய்ப்பிக்க வேண்டாமா? ஹிந்துக் குழந்தைகள் வீட்டில் வளரும் பொழுது, பொய்பேசக் கற்றுக் கொள்ளுவதில்லை; கற்றுக்கொடுக்கப்படுவதுமில்லை. "இந்தக் காலத்தில் பொய்சொன்னால் தான் பிழைக்கலாம்போ லிருக்கிறது" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு, சொல்லும் இந்தியர்களை நாம் பார்த்திருக்கிறோம். இவர்கள் ஏன் இவ்வாறு கூறவேண்டும்? உபசாரத்திற்கா அல்லது உபாயத்தைக் கருதியா? இரண்டும் இல்லை. காலத்தின் நிலைமையை அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது நாட்டில் பொய் பரவி வருகின்றது என்பதை வருத்தத்துடன் அவர் வெளியுலகத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றார்கள். மேயோவைப் போல கூசாமல் பொய் சொல்லும் வழக்கம் இந்தியர்களிடம் இருக்குமாகில், அவர்கள் மேநாட்டார் அனுபவித்து வரும் இன்பங்களைத் தாராளமாக அனுபவிக்க முடியும். உண்மைக்கும் கடவுளுக்கும் பக்தி செலுத்தி வாழ்ந்துவந்த ஹிந்துக்கள் நாஸ்திகர்களாகவும் பொய்யர்களாகவும் பழக்கப்பட்டு வருகின்றனர். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பொய்ச் "சத்தியம்" செய்ய அஞ்சிய இந்தியன் இப்பொழுது தாராளமாய்ச் சத்தியம் செய்கின்றானே! இது எதனுடைய விளைவு? இந்திய ஆட்சி

யையும் மேநாட்டு நாகரிகத்தையும் இதற்குப் பொறுப்பு ஏற்கச் சொன்னால், மோயோ வுக்குக் கோபம்வரும்.

"கூடும் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளும் கோடி வகைத் தொழில்கள்—இவை
நாடும்படிக்கு வினைசெய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக்—கலி
சாடும் திறன் எனக்குத் தருவாய்—அடி
தாயே உனக் கரியதுண்டோ ? மதி
மூடும் பொய்மை இருளெல்லாம்—எனை
முற்றும் விட்டகல வேண்டும்."

* * * *

" பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"

அத்தியாயம் 14.

பிராமணன்

சிறிது காலத்திற்கு முன், அன்பே உரு எடுத்தது போலத் தோன்றும் நண்பர் ஒருவர் என்னிடம் வந்து, நாட்டின் நிலைமையைப் பற்றிப் பேசத்துவக்கினர். அவர் பேசிக் கொண்டே போனர். நான் மௌனம் சாதித்துக் கொண்டிருந்தேன். "ஏன் பேசமாட்டேன் என்கிறீர்? உமது வாயில் குழக்கட்டை வைத்து அடைத்திருக்கிறதா" என வினவினர். " குழக்கட்டை இல்லை ; உமது பேச்சுத்தான் என்

வாயை அடைத்துவிட்டது" என்றேன். நல்லது, நாடு முழுதும் ஏன் இவ்வாறு பிராமணர்களை எல்லோரும் இப்பொழுது திட்டிக் கொண்டிருக்கிறார்கள் என நண்பர் கேட்டார். "நமது நாட்டில் முதன் முதல் நூல்கள் அச்சுப் போடப் பெற்ற பொழுது, பொருளடக்கத்திற்கு முன்னே, பின்னே பிழைத் திருத்தம் என்ற பகுதியை, எல்லா நூல்களிலும் காணலாம். அதை நீங்கள் கவனித்திருக்கின்றீர்களா" என்றேன். "கவனித்திருக்கிறேன். ஆனால் அதற்கும் நான் உங்களைக் கேட்டதற்கும் என்ன சம்பந்தம்" என்றார் நண்பர். நான்கூறியதாவது:—" சம்பந்தமா? சொல்லுகிறேன், கேளுங்கள். அச்சுத் தொழில் நாட்டிற்குப் புதிதாயிருந்த காலத்தில், செவ்வனே அச்சுக்கோக்கத் தெரியாமையால் பிழைகள் மலிந்திருக்கும். பிழைகள் மிகவும் அதிகமாகப் போய் விட்டால், நூலில் கூறப்பட்டவைக்கு, வாசகர்கள் பொருள் செய்ய முடியாது. எனவே, பிழைத்திருத்தம் தேவை. இல்லாவிடின், வாசகர்கள் நூல் வெளியிட்டவர்களின் அஜாக்கிரதையையும் அகம்பாவத்தையும் பற்றித் தாறு மாறுமாகப் பேசத்துணிவார்கள். இந்தியாவில், தற்போது சமுதாயமாய் ஜன சமூகவிழிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, பிராமணத்திட்டு, பிழைத்திருத்தம் போல் விளங்குகின்றது. பிராமணர்கள்இப்பொழுது குறை கூறப் பெற்று, திட்டப்படுவது இயல்புதான்." "உங்களுடைய விகடமும், வேதாந்தமும் எனக்குப் பிடிக்கவில்லை" என்றார். "உங்கள் ஆத்திரத்துக்குப் பொருளும் தேவையுமில்லை" என்றேன். பிராமணர்கள் என்ன அக்கிரமங்கள் செய்துவிட்டார்கள், இவவளவு திட்டு "வாங்க"என்று மனக் கசப்புடன் கேட்டார் நண்பர்.

"பிராமணர் இந்த நாட்டில் அக்கிரமங்கள் செய திருந்தால், அவர்களைத் திட்டுவது நியாயம். அவர்கள் அக்கிரமங்கள் செய்யாவிடினும் அவர்கள் இப்பொழுது திட்டப்பெறுவது இயல்பு" என்றேன். நண்பருடையகோபத்தை அளந்து சொல்ல முடியாது. "உங்களுடையவிகடப்புதிரைக் கேட்க நான் உங்களிடம் விரவில்லை. நம்மவர்களும் திட்டு கின்றார்கள், மேயோவை யொத்த அன்னியர்களும் வாய்சலிக்காமல் ஏசுகின்றார்கள். இவ்வாறு செய்வது தருமா என்று உங்களைக் கேட்டால், நீங்கள் விடுகதை போடுகின்றீர்களே" என்றார் நண்பர். "தருமா என்ற கேள்வியை, என்னிடம் கேட்பதில் பயனில்லை. அந்தக்கேள்வியை, ஏசுபவர்களிடம் கேட்டு, முடிவு தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு ஏன் நடக்க வேண்டும் என்பதற்கு மட்டும் என்னால் காரணம் கூற முடியும்" என்றேன். "சரி சொல்லுங்கள்" என்றார் நண்பர். "பிராமணர்கள் அக்கிரமங்களைச் செய்திருந்தால், ஏனையோர் அவர்களைத் திட்டுவது நியாயம்; அக்கிரமங்களைச் செய்யாவிடினும் அவர்கள் இப்பொழுது தூற்றப்படுவது இயல்பு" என்று மீண்டும் சொன்னேன்.

"மீண்டும் விடுகதைதானா" என நண்பர் சிறிதுசினங் கொண்டார். "நான் காரணத்தை விளக்கிக் காண்பிக்கும் பொழுதே, நீங்கள் விடுகதை யென்று கோபம் கொள்ளுகிறீர்கள். உங்களுடைய கேள்விக்குச் சமாதானம் சொல்லாமலிருந்தால், என்னை அடித்தும் தொந்திரை செய்திருப்பீர்கள் போலத் தோன்றுகின்றதே! பிராமணனுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமை எனக்கும் ஏற்பட்டு விடும் போலிருக்கிறதே" என்று கூறிச்சிறித்தேன். "உம்முடைய குழந்தைத்தனம் உம்மை விடாது" என்றார்.

"யாருடைய குழந்தைத்தனம்" என்றேன். நண்பருடைய கண்களில் தீப்பொறி பறக்கத் துவக்கிவிட்டன. அவருடைய உதடுகள் துடித்தன. காட்டாற்று வெள்ளத்தைப் போல, சொற்கள் அவரிட மிருந்து வெளித்தோன்றும் என்று எனக்குத் தெரியும். நான் சிரித்தேன். "உம்மிடம் மனிதன் வந்து பேசுவானு" என்று கூறி, எழுந்து செல்லப்போனுர். பொறுங்கள் என்று அவருடைய வழியைமறித்துக் கொண்டு, உட்காரச் சொன்னேன். உட்கார்ந்தார். "பிராமணர்கள் ஏன் திட்டப்பட வேண்டும் என்பதை மெய்ப்பித்து விட்டேன், பார்த்தீர்களா" என்றேன். அவருடைய கோபம் தணிந்து விட்டது. "நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. விளக்கிக் கூறுங்கள்" என்றுர்.

நான்பின் வருமாறு கூறினேன்:-"உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு காலமாய் நட்புஇருந்து வருகின்றது? மேலும், எவரிடமாவது உங்களுக்குக் கெட்ட எண்ணம் இருந்ததுண்டா? எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்பது உங்கள் வாழ்க்கையின் குறியல்லவா? உங்களுடையஅன்பு தற்சமயம் எவ்வாறு மாறிற்று, பார்த்தீர்களா? கோபமாகமாறிவிட்டது. என்னை அடிப்பதுதான் பாக்கி. மற்றைய யாவும் நடந்து விட்டன. நீங்கள் உயிரைப்போல எண்ணிக்கொண்டிருக்கும் ஒரு சங்கதியில், கவலையற்ற மனப்பான்மை கொண்டு விகடமோ, வேதாந்தமோ பேசி உங்களை நான் ஏய்த்து, உங்கள் சுயமரியாதையை கேவலப்படுத்த நான் துணிந்தேனென்று நீங்கள் நினைத்துக் கொண்டல்லவா, இவ்வளவு கோபம் கொண்டீர்கள்? நான் உண்மையிலேயே உங்களை அவமதித்து ஏய்த்திருந்தால் நீங்கள் செய்தது சரிதான். நான் ஏய்ப்பதாக நீங்கள் எண்ணிக் கொண்டாலும், நீங்கள் கோபம் கொண்டது

இயல்புதான். அதாவது நீங்கள் இருந்த நிலைமையில், உங்கள் நரம்புகள் ஏற்கனவே துடிதுடித்துக் கொண்டிருந்தன. உங்களுடைய அன்புதம்பும் உணர்ச்சியால், உங்களுடைய நரம்புகள் (இந்தத்திட்டுதல்கண்டு) ஏற்கனவே ஆட்டம் கொடுத்து விட்டன. உங்கள் துடிதுடிப்பில்லாமல், நிதானமாய் யோசனை செய்த என்னிடம், உங்கள் அன்பு மாறி, கோபமாக உருஎடுத்து எழுந்து விட்டது. இது மனித இயல்பு. ஹிந்து ஜனசமூகத்தில், இதுவரையிலும் பிராமணன் எல்லோரைக் காட்டிலும் உயர்ந்த பதவியிலிருந் தான். இந்தியநாடு அடிமைத்தனத்தில் இருக்கின்றது என்ற உணர்ச்சி சமுதாயமாய் ஜனசமூக முழுதும் பரவி விட்டது. "பிராமண ரல்லாதர்கள்" நீண்டகாலமாக பிரா மணனிடத்தில் பக்தியும் அன்பும் செலுத்தி வந்தார்கள். புத்துணர்ச்சி பெற்ற "பிராமணரல் லாதர்கள்" (நீங்கள் என்னிடம் வந்ததுபோல,) நாட்டின் முன்னேற்றத்தையும் அடிமைத் தனத்தையும் நினைந்துருகி, பிராமணனுடன் கலந்து யோசித்தார்கள். நான் உங்களுக்கு விடை யளித் ததை யொத்தமனப் பான்மையை பிராமணன் ஏனையோ ருக்குக் காண்பித்தான். பிராமண ரல்லாதாரின் மனத் துடிப்பில், பிராமணன் கலந்து கொள்ளாமையால், பிராமண ரல்லாதார், (நீங்கள் என்னிடம் கோபம் கொண்டது போல) தங்கள் பரம்பரை அன்பு நிறைந்த உள்ளத்தில் கோபத்தை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். கோபம் கொண்டவர்கள்—யாராயினும் சரியே—நிதானம் தவறிச் சொற்களைப் பிரயோ கம் செய்வது இயல்புதானே."

உங்கள் வேதாந்தம் எனக்குப் பிடிப்பதில்லை என்றார் நண்பர். திரும்பத்திரும்ப, நான் கூறுவது வேதாந்தம்

என்றும் விசடம் என்றும் நண்பர் கொண்டார். அவருடைய உள்ளத்தின் நிலைமையைக் கண்டநான், "நண்பரே! ஆத்திரப்படவேண்டாம்; ஒருகதை சொல்லுகிறேன், கேளுங்கள்" என்றேன். "விகடமாயிற்று; 'வேதாந்தம் முடிந்தது கதை துவங்கப்போகிறதோ" என்று நண்பர் கடுகடுத்து கூறினர். உண்மையிலேயே, அன்பு ததும்பும் இயற்கையைக்கொண்ட, அதுவும் என்னிடம் அளவுகடந்த பிரியத்தையும் பக்தியையும் கொண்ட அன்பர், என்னிடமே இவ்வாறு கோபங் கொண்டதற்காக, நான் வருத்தப்பட்டேன்; ஆனல் கோபம் கொள்ளவில்லை. எதற்காக கோபம் கொள்ளுவது? ஒருவன் மற்றொருவனல் அடிக்கப்பெற்று, கைமுறிந்து போய்விட்டது என்று வைத்துக்கொள்ளுவோம். கைமுறிபட்டதைப்பார்த்து, அவனைச்சேர்ந்த சிலர் புலம்புகின்றார்கள். மற்றும் சிலர் திகைத்துப்போகின்றனர். வேறு சிலர் உள்ளம் பதறிச்சினம் கொள்ளுகிறார்கள்; எஞ்சிய சிலர் செய்யும் காரியம் தெரியாமல், அங்குமிங்கும் ஓடித்திரிந்து ஓலமிடுகின்றனர். அடி பட்டவனே, மூர்ச்சை போட்டுக்கிடக்கின்றான். இவர்கள்யாவருக்கும் இலட்சியம் ஒன்றேயாகும். இவர்கள் யாவரும் அடிபட்டவனிடம் அன்பு செலுத்துபவர்கள்தாம். ஆனல் அந்த அன்பு, அவரவர் சக்திக்கும் மனப்பான்மைக்கும் ஏற்றவாறு உணர்ச்சியைப்பெற்று வெளித்தோன்றியிருக்கிறது. இந்தசமயத்தில் உறவினர் வைத்தியர் ஒருவர் வருகிறார். அவருடைய இலட்சியமும் ஏனையோரின் இலட்சியமும் ஒன்றுதான். அதாவது அடிபட்டவனுடைய கை விரைவில் குணமாக வேண்டுமென்பது தான். அடி பட்டவனுடைய அன்பர்களின் இலட்சியத்தில் கலந்து கொண்டவைத்தியர்—அவருக்கும் அங்கிருப்பவர்களுக்கும்

இரத்தக் கலப்பு உறவு இருந்தும்—அவர்களுடைய பலவகை உணர்ச்சிகளிலே கலந்துகொள்ள முடியுமா? முடியாது. அவர் வெளித்தோற்றத்தில் யாதொரு உணர்ச்சியையும் காண்பிக்காமல், செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும். எனவே தங்களைப்போல வைத்திய ரும் உணர்ச்சியைக் காண்பிக்கவில்லையென ஏனையோர் உள் ளம் பதறலாமா?

"கதை சொல்லட்டுமா" என்று மீண்டும் நண்பரிடம் வினவினேன். "இந்தத் தொல்லைதான் எப்பொழுதும் உம் மிடத்தில்; கதையைச் சொல்லித் தொலையுங்கள்" என்றார். மனோதத்துவ சாத்திர மர்மங்களில் அனுபவம் கொண்ட அன்பர்கள் இங்கு சற்று ஊன்றிக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். சூடு கொண்டு, கொதிப்படைந்த நண்ப ரின் நரம்புகள் மீண்டும் நிதான நிலைமைக்கு வந்து கொண் டிருந்தபோதிலும், தன் மதிப்பாலும் நரம்புத்துடிப்பாலும் எழுந்த சினம் தொலைந்து விட்டது என்று அறிவால் ஒப்புக் கொள்ள மனமில்லாமல், கதையைச் சொல்லித்தொலையுங்கள் என்று கடுமொழிகூறி, தமது பழபநிலைமையைக்காப்பாற்ற முயலுகின்றார் நண்பர். இதை வாசகநேயர்கள் உணர்தல் வேண்டும். மனோ தத்துவமர்மங்களை அனுபவ மூலமாய் அறிந்து, அன்பைக்கொண்டு நிலைத்துக்கொண்டால், எத் தகைய சிக்கலையும் தீர்த்துவிடலாம் என்பது எனது உறுதி. கதையைச் சொல்லித்தொலையுங்கள் என்று கூறிய நண்பர் தமது சொற்களால் தமது உண்மையான மனப்பான்மையை மீண்டும் காண்பித்துவிட்டார். அவருடைய உள்ளத்தில் அன்புதானிருந்தது. நரம்புத்துடிப்பினால் அவருக்குக் கோபம் உண்டாயிற்று. கோபம் வந்ததும், ஒருவகைப்

பொய்க்கௌரவமும் கூடத்தோன்றிற்று. கோபம் தணிந்தது. ஆனால் பொய்க்கௌரவம் தொலையவில்லை. அதனாலேதான் அவர், "கதையைச் சொல்லித்தொலையுங்கள்" என்றார். ஹிந்து முஸ்லீம் வேற்றுமை, பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு, இந்திய ஆங்கிலப்பகைமை—இவைகள் யாவற்றிலுமுள்ள மர்மங்களை மேலே கூறப்பட்ட "கதையைச் சொல்லித்தொலையுங்கள்" என்ற குறிப்பிலே காணலாம். ஆங்கிலேயனை வெறுக்கும் இந்தியன், ஆங்கிலேயனுடைய அன்பைக்கண்டதும் தனது வெறுப்பை மறந்துவிடுகின்றான். தோற்றத்தில் காணப்பெறும் ஹிந்து முஸ்லீம் வேற்றுமையும் பிராமணர், அல்லாதார் பிணக்கும், உண்மையான மனித இயல்பு வெளித்தோன்றியதும், மறைந்துபோகின்றன. பொய்க்கௌரவத்துக்கு ஒருவிதப் போக்கும் இல்லாமல், அதற்கு ஒருவகை மரியாதையும் காண்பிக்கப்பெறாமல் போனால், அதனால் சாசுவதத்துன்பம் நேராமற்போனாலும், அடிக்கடித் துன்பம்தோன்றும்.

நண்பரும் கதையும் காத்துக்கொண்டிருக்கின்றார்களல்லவா? மேலும் நண்பருக்கும் எனக்கும் இடையே நிகழ்ந்த நிகழ்ச்சியின்முடிவு என்னவாயிற்று என்று அறிய, வாசக நண்பர்கள் ஆவலுடன் இருக்கின்றார்கள் என்பதையும் நான் அறிவேன். "அவசரமில்லையே" என்று நண்பரை நான் வினவினேன். நண்பர் ஒன்றும் கூறாமல், மௌனமாய் இருந்தார். எந்த விஷயத்தையும் விளக்கமுறக்கேட்டறிந்து கொள்ளும் உள்ளத்தின் பான்மையும் அறிவு நிலையும் அவருக்கு வந்து விட்டன என்று தெரிந்துகொண்டேன். கதையைச்சொல்ல ஆரம்பித்தேன். கதையை நண்பர் கவனித்துக் கேட்டார். கதை பின்வருமாறு:—

"நாம் பிறந்த நாடு இந்தியா. இந்தியாவை ஆளும் நாடு ஆங்கில நாடு. ஆங்கில நாடு ஐரோப்பியாவி லிருக்கிறது. ஆங்கில நாட்டுக்கு அடுத்தாற்போல பிரான்சு நாடு இருக்கின் றது. இவ்விரண்டு நாடுகளும் டோவர் ஜல சந்தியால் பிரிக் கப்பட்டிருக்கின்றன. சாத்திரத்தேர்ச்சியிலும் நூதனக் கருத்துக்களைக்கண்டு, அவைகளை உலகத்துக்கு எடுத்துப தேசிப்பதிலும் பிரஞ்சுக்காரர்கள் நற்பெயர் வாங்கியவர்கள். புத்தி மட்டமான நாட்டார் பிரஞ்சுக்காரர்கள் அல்ல. அத் தகைய நாட்டாரும் கொடுங் கோன்மைக்கு ஆட்பட்டு வாழ் ந்தார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில், பிரான்சு நாட்டில் அடுத்து அடுத்து பஞ்சங்கள் ஏற்பட்டன. கஜானி காலி. அரசன் தன் அரண்மனையில் களியாட்டத்தி லாழ்ந்து வாழ்ந்தான். அவனுடைய களியாட்ட வாழ்விற்குத் துணை போல நின்றவர்கள் புரோகிதர்கள்-அதாவதுகத்தோ லிக் பாதிரிமார்கள். கஜானாகாலியானதும், அரசனுக்குப்பண முடை ஏற்பட்டது. எவ்வாறு பணம் எழுப்புவது என்று அரசனுக்குத் தெரியவில்லை. எவரிடத்தும் கடன் கேட்க அவன் விரும்பவில்லை. கடன் கேட்டாலும், எவரும் கொடு ப்பதாகக் காணப்படவில்லை. நாட்டின் பாராளும் மன்றத் தைக் கூட்டினான். தனக்குப்பணம் தேவையென மன்றத் தாரிடம் மன்னன் கூறினான். வரிவிதிக்கும் உரிமையைத் தங்களிடம் அரசன் விட்டுவிட்டால், தாங்கள் அவனுடைய தேவைக்குப்பணம் தருவதாகச்சொன்னார்கள். சரி யென்று தற்போது சொல்லிப்பின்னர் ஏமாற்றி விடலாம் என்று அரசன் தீர்மானம் கொண்டான். அவ்வாறே செய்தான். மன்றத்தாருக்கும் பொது ஜனங்களுக்கும் ஆத்திரம் உண் டாயிற்று. கொடுங்கோல் அரசியலையும் அதைத் தாங்கி நிற்

கும் அரசனையும் பாதிரிக் குழாத்தையும் வேருடன் அறுக்க வேண்டும் என்று ஜனங்கள் எண்ணங்கொண்டார்கள்.''

''கதையைக் கேட்டுவருகின்றீர்களா '' என்றுநண்பரை இடையே கேட்டேன். ''நல்லது; மேலே'' என்றார். கதை கேட்பவர்களிடம் சிரத்தையைக் கண்டாலொழிய, கதை சொல்லுபவன் மேலே தன் கதையைச் சொல்லமுடியாது. நண்பரின் சிரத்தையைக்கண்ட நான் மேலே சென்றேன்.

''பிரஞ்சு நாட்டார் புரட்சிக்கு ஆயத்தமானார்கள். புரச்சிக்காரர்கள் அரசனைத்திட்டாத நாட்கள் இல்லை; பாதிரிமார்களைத்தூற்றாத தினமேயில்லை. அரசனைத் தொலைத்து விட்டு, குடியரசை நிலைநாட்டவேண்டும் என்று பொது ஜனங்களும் அவர்களது தலைவர்களும் நோக்கங் கொண்டார்கள். தங்கள் நோக்கத்திற்கு ஏற்றவாறு 1784-ம் ஆண்டில் புரட்சிக்கலகத்தைத் துவக்கினார்கள். விசாரணை யில்லாமற் காவலில் வைக்கப் பெற்றிருக்கும் தேசபக்தர்களை ''பாஸ்தில்'' என்ற சிறையினின்றும் புரட்சிக்காரர்கள் விடுவித்தார்கள். கண்டவிடமெல்லாம் பாதிரிமார்களைக்கொன்று தீர்த்தார்கள். அரசனுடைய ஆவியைப் போக்கினார்கள். அரசனுடைய மனைவியும் மக்களும் உயிர் நீத்தார்கள். மாதா கோயில்களில் சமய சம்பந்தமான பிரார்த்தனைகளும், பிரசங்கங்களும் நடைபெறலாகாது என்றுபுரட்சிக்கால அரசியலை நிர்வாகம் செய்து நடத்தியவர்கள் உத்தரவு பிறப்பித்தனர். இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பிரபுக் கூட்டத்தார்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள, அன்னிய நாடுகளுக்கு ஓட்ட மெடுத்தார்கள். ''அரசன் மாண்டு போனான், பாதிரிமார்கள் மடிந்து போனார்கள். பிரபுக்கள் கோழை முயல்களைப் போல ஓட்டமெடுத்து விட்டார்

கள். அவர்களுடைய நிலங்கள் பொது ஜனங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் பெற்று விட்டன. இனி நமக்கென்ன குறை? குடியரசு வாழ்க'' என்று பொது ஜனங்கள் குதூகுலத்துடன் ஆரவாரம் செய்தார்கள். இதற் கிடையே, அன்னிய நாடுகள் பிரான்சு நாட்டின் பேரில் படையெடுத்து வந்தன. புரட்சிக்காலமல்லவா ? குடியரசு அரசாட்சி நாடு முழுதும் ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை. எனவே, கஜானுவில் பணம் இல்லை. வரியும் சரியாக வசூலிக்க முடியவில்லை. சேனைக்குப் போதிய ஆட்கள் இல்லை. இருந்த ஆட்களைத் திறமையுடன் நடத்த தளகர்த்தர்களில்லை. இரண்டுமிருந்த விடத்து, போதியபோர்த்தளவாடங்கள் இல்லை. குடியரசை நிர்வாகம் செய்து நடத்தியவர்களோ வீண் பேச்சுக்காரர்கள் ; வெறும் கொள்கைக்காரர்கள். அவர்களுக்கு நிர்வாகத்திறனில்லை. செயல் திறனற்ற நிர்வாகிகள் ஒவ்வோருவராகப் போது ஜனங்களின் சினத்துக்கு இலக்காகி மடிந்தார்கள். புரட்சி வெற்றிக்காலத்தில் ஜனங்கள் மகிழ்ச்சியுற்று, சகோதரத்துவமும் சமத்துவமும் பாராட்டி, ஒருவரை யொருவர் கட்டித்தழுவிக் கொண்டார்கள். "கடவுள் கிடையாது; அவ்வாறு இருந்தாலும், அந்தக் கடவுள் கத்தரிக்காயை விட உயர்ந்தது மல்ல; உபயோக முள்ளது மல்ல'' என்று பிரசங்கிகள் விகடம் பேசினுர்கள்.''

இவ்வாறு சொல்லிக் கொண்டு வருகையிலேயே, நண்பர் பெரு மூச்சு விட்டார். "பிறகு என்ன நடந்தது'' என்றூர். "சொல்லுகிறேன்'' என்றேன்.

புரட்சி வெறியால் சகோதரத்துவம் பாராட்டிய பாரிஸ் நகரப்பொது ஜனங்கள் இரவில் கூட மூன்று நாட்களுக்குத் தங்கள் வீட்டுக் கதவுகளை மூடிவைக்கவில்லை; எல்லோரும்

பிரான்சு நாட்டு மன்னர்களல்லவா? எல்லோரும் ஓரின மல்லவா? ஆனல் நாளுக்கு நாள் அன்னியர்களின் சூழ்ச்சி வலுவடைந்து கொண்டே வந்தது. பிரான்சு நாடு நீரிலும் நிலத்திலும் எங்கணும் அன்னியர்களால் தாக்கப் பெற்றது. அக் காலத்தில் பிரான்சு நாட்டுக்கு நேர் எதிரியாகவும் முதல் பிரிதி வாதியாகவும் விளங்கியது ஆங்கில நாடு. பிரான்சைப் பகைத்த ஐரோப்பிய நாடுகள் யாவும் ஆங்கில நாட்டின் பண உதவி பெற்றன. பண உதவி பெற்று, அவைகள் பிரான்சு நாட்டின் எல்லைப் புறத்தில் தமது சேனைகளைத் திரட்டிக் கொண்டு, வந்து விட்டன. தனது கப்பற்படையைக் கொண்டு, ஆங்கிலநாடு, பிரான்சு நாட்டின் "கடற் கோட்டை" நகரமாகிய டுலூன் நகரத்தைத் தாக்கிற்று. இதனிடையே, பொது ஜனங்களின் மனப்பான்மை எவ்வாறு ஊசலாடிக் கொண்டிருந்தது என்பது தெரியவேண்டு மல்லவா? தேசபக்தர்களைப் போற்ற வேண்டுமென்று கூறிய புரட்சிக்கார தேசபக்த நிர்வாகிகளே, சந்தேகங்கொண்டு சகோதர தேசபக்தர்களை அப்பீலின்றி, தூக்கிவிட்டுக்கொலை செய்தார்கள். தினந்தோறும் புதியதொரு அரசியல் முறை வகுக்கப்பெற்றது. ஒருவன் தேசத் துரோகி என்று மாரா என்ற ஜனத் தலைவனல் குறிப்பிடப்பெற்ருல் போதும், அந்த மனிதன் மறைவில் தாக்கப்பெற்று கொல்லப்படுவான். தன்னைப் பொதுஜனக் கோபத்துக்குஆளாக்கிக் கொள்ளாமல் சாமர்த்தியமாய்த் தப்பித்துக்கொள்ள, புதிய அரசியலையும் மாரா தாக்கித் தனது பத்திரிகையில் எழுதினன். தேசத் துரோகிகளின் ஜாப்தாவைப் பெருக்கிக் கொண்டே போனன். இவனுடைய தூர்ப்போதனையால், நாட்டில் ஜனங்கள் இரத்த வெறி கொண்டார்கள். இறுதியில் மாரா தான்

தீட்டிய கருவிக்கே இரையானன். ஆனல் பொது ஜனங்களின் இரத்த வெறி அவர்களுக்குத் துணிவைக் கொடுக்குமா? அல்லது அன்னியப்படை யெடுப்பைத் தாக்கி, அதைக் குலேக்கவல்ல செயல் திறன் அவர்களுக்கு ஏற்பட்டு விடுமா? எல்லைப்புறத்தில் பிரெஞ்சுச் சேனை முறியடக்கப் பெற்றுவரும் தோல்விச் சேதியைக் கேட்டபோது ஜனங்களின்மனத்தை எவ்வாறு சமாதானப் படுத்துவது? அரசியல் நிர்வாகிகளுக்கு வழி தோன்றவில்லை. "கடவுள் இல்லை; பிரார்த்தனை பொய்; பாதிரிமார்களை உயிருடன் கொளுத்த வேண்டும்" என்று பறைசாற்றிய புரட்சித் தலைவர்களுக்குத் தலைவராகிய ரோபஸ்பீயர் என்பவர் என்ன செய்தார்? பொது ஜனங்கள் மாதா கோயில்களில் சென்று பிரார்த்தனை செய்யலாம் என்றுஉத்தரவு பிறப்பித்து, தானும் கோயிலுக்கு சென்றார். கோயில்களை இடித்து ப்பாதிரி மார்களை கொலைசெய்த ஜனங்களே இப்பொழுது கோயில்களுக்குள் சென்றுபாதிரி மார்களின் பிரார்த்தனைக் கிணங்கத் தொழுதார்கள்."

"அப்படியா" என்ருர் நண்பர். "இது எனது கற்பனையல்ல. இது நடந்த சரித்திரம். இது பிரெஞ்சுப் புரட்சி என்ற பிரபல நிகழ்ச்சியாகும். அதை உங்களுக்குக் கதையைப்போல சொல்லுகின்றேன்" என்றேன். "பிறகு என்ன நடந்தது" என நண்பர் வினவினர். மேலே சொல்லத் துவக்கினேன்.

பிரஞ்சுப் பொது ஜனங்களின் மனப் பான்மையோ, புதிதாய்ப் பிறந்த சகோதரத்துவத்தை மறந்து, சந்தேகத்தில் ஆழ்ந்துவிட்டது. ஒவ்வொரு பிரஞ்சுக் காரனும் தான் தேசபக்தன் என்றும் ஏனைய பிரஞ்சுக்காரர்கள் யாவரும்

தேசத் துரோகிகள் என்றும் எண்ணத் தலைப்பட்டான். இவ்வாறு நிலை தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருக்கும் பிரஞ்சுக்காரர்களிடம் அன்னியர்களுக்குக் கருணை பூத்ததா? அன்பு மிளர்ந்ததா அல்லது அனுதாபம் பெருகிற்று? பிரஞ்சு உள் நாட்டுக் கலவரத்தையும் உட் பகையையும் தங்களுக்குத் துணைக் கருவிகளாகக் கொண்டு, அவர்களை அடியோடு அழிக்க, அன்னியர்கள் சூழ்ச்சியும் முயற்சியும் செய்தார்கள். இந்த சூழ்ச்சிக்கும் முயற்சிக்கும் தலைமை வகித்து நடத்தியவர் பிட் என்ற ஆங்கில முதல் மந்திரி யாவார். இந்த நிலைமையில், குடியரசைக் கண்ட புரட்சிக் காரர்களும் பொது ஜனங்களும் என்ன செய்தார்கள்? அரசியல் நிர்வாக மனைத்தையும் மூன்று பேர்களடங்கிய கமிட்டியின் எதேச்சாதிகாரத்துக்கு விட்டு விட்டார்கள். அவர்களில் ஒருவன் நபோலியன் என்ற போர் வீரன். இவன் ஆங்கிலக் கடற் படையை டுலூன் துறை முகத்தினின்றும் ஓட்ட மெடுக்கச் செய்தான். சிறிது சிறிதாக, பிரஞ்சு நாட்டுச் சேனைகளனைத்திற்கும் அதிபதியானான். மூன்று நிர்வாகி களுக்குள் இவன் தலைமை நிர்வாகியானான். ஏனைய இரண்டு பேர்களும் வெறும் பொம்மைகளானார்கள். பின்னர், இவனே, நாட்டின் தனித் தலைவனானான். பிரெஞ்சு நாட்டின் பேரில் படை யெடுக்கத் துணிந்த அன்னியர்களின் செருக்கைப் போர்க் களத்தில் குலைத்தான். பிரஞ்சுக்காரர்களின் போர்த்திறனும் கீர்த்தியும் உலக முழுதும் பரவின. அன்னியர்களின் கப்பப்பணத்தின் மூலமாய், பிரஞ்சுகஜானா நிரம்பிற்று. பொருளுக்குக் குறைவில்லை. கீர்த்திக்கோ அளவில்லை. அன்னியர்களின் சூழ்ச்சியோ, நபோலியனுடைய துணிவாலும் திறனும் .மேதாவித் தனத்தாலும் தலை

யெடுக்க முடியாமல் மாய்ந்து வந்தது. "நாட்டைக் காக்கும் நல்லான் தோன்றினன்; விண்ணையதிர்க்கும் திறலோன் வந்தான். மன்னுயிர் ஓம்பும் மன்னன் உதித்தான். விண்ணவர் போற்றும் வீரன் வாழ்க" வென்று வெறி கொண்டவர்களைப் போல, பிரஞ்சுக்காரர்கள் நபோலியனுக்கு வாழ்த்துக் கூறினார்கள். வாழ்த்துடன் நின்றதா? பிரஞ்சுப் பொது ஜனங்கள் நபோலியனை அரசனாக்கி. அவனுக்கு "பிரஞ்சுக்காரர்களின் சக்ரவர்த்தி" யென்ற பட்டமும் அளித்தார்கள். "அரசன் வேண்டாம்; குடியரசு அரசியல்முறை வேண்டும்" என்று கருத்துக்கொண்டு, அரசனைத் தொலைத்த பிரஞ்சுப் பொதுமக்கள் புதிதாய் சக்கரவர்த்தியை ஆக்கிக் கொண்டார்கள்."

"இருப்பு விலங்கு வேண்டாம்; பொன்விலங்கு வேண்டும் என்ற எண்ணங் கொண்டு அவர்கள் செய்தார்களா? முன்னோர்கள் ஒப்புக் கொண்ட அரசனுக்கும் தாங்கள் ஏற்றுக்கொண்ட சக்கரவர்த்திக்கும் அவர்கள் எத்தகைய வேற்றுமையைக் கண்டார்கள்" என்று என்னைக்கேட்டார் நண்பர். "நான் இப்பொழுது கதை சொல்லிக்கொண்டு வருகின்றேன். வாதம் செய்துகொண்டு வரவில்லை" என்றேன். "சரி; பிறகு" என்று எனக்கு எச்சரிக்கை கொடுத்தார். நானும் என் கதையை மீண்டும் துவக்கினேன்.

"சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே, பிரஞ்சுப் பொதுமக்களின் மனம் பெருத்த மாறுதல்களை அடைந்தது. அரசன் வேண்டாம் எனக்கொண்டு, முதலில் பழைய அரசனைக் கொன்றார்கள். பின்னர், நாட்டுக்குத் தேவையென்று குடியரசைமாற்றி முடியரசாகச் செய்து, நபோலியனைத் தங்கள் சக்கரவர்த்தியாக ஆக்கிக்கொண்

டார்கள். மன்னன் வாழ்க, சக்கரவர்த்தி வாழ்க, நபோலி யன் கீர்த்தி நாடெங்கணும் ஓங்குக என்று ஆரவாரம் செய்தார்கள். "சமயம் வேண்டாம், பாதிரிகளைத் தொலைக்க வேண்டும், கோயில்களை இடிக்கவேண்டும்" என்று வெறி பிடித்து அலைந்து, பிரஞ்சுப் பொது மக்கள் ஆரம்பத்தில் மாதா கோயில்களை இடித்தார்கள், பாதிரிமார்களைக் கொன்றார்கள். பின்னர் அதே ஜனங்கள் சுதந்திரத்தின் பொருட்டு, கோயில் சமைத்து, சுதந்திரதேவியைத் தெரிந்தெடுத்து, விழாக் கொண்டாடினார்கள். பின்னர் மாதா கோயில்களில் சென்று, பாதிரிமார்களிடம் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டு (இது ரோமன் கத்தோலிக் கிருஸ்தவர்களிடம் உள்ள வழக்கமாகும்) கடவுளைப் புகழ்ந்து பிரார்த்தனை செய்தார்கள்."

"பொறுப்பில்லார் மக்கள்? முன் பின் யோசனை யில்லாமல் காரியங்களைச் செய்கின்றார்களே? என்ன சஞ்சல புத்தி இவர்களுக்கு" என்று நண்பர் தமது வாய்க்குள்ளாகவே முணுமுணுத்துக் கொண்டார். அதைக் கவனிக்காதது போல, நான் கதையைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு போனேன்.

"தங்கள் சேனைகளைப் போர்க்களத்தில் சின்னபின்னப் படுத்தி முறியடித்த நபோலியனைச் சக்கரவர்த்தியாக்கிய பிரஞ்சுக்காரர்களின் புரட்சி மனப்பான்மை மாறியதைக் கண்ட பின்னரும், அன்னிய நாட்டார்கள் தங்கள் சூழ்ச்சியை நிறுத்திக் கொள்ளவில்லை. முன்னர் புரட்சியைத் தொலைப்பதற்காகப் போர் தொடுத்ததாகப் பாசாங்கு பேசிய அன்னிய நாட்டார்கள் நபோலியனிடம் தாங்கள் தோற்ற தோல்வி யவமானத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காகப்

போரை நீடிக்கச் செய்தார்கள். நபோலியன் போரைத் திரனுடன் நடத்தினன். போருக்காக அவன் வேண்டிய பொருளையும் ஆட்களையும் சலிப்பின்றி, பிரஞ்சுக்காரர்கள் நபோலியனுக்குக் கொடுத்து வந்தார்கள். போர்க்களங்களில் வெற்றி பெற்ற நபோலியன், உள் நாட்டு அரசியல் நிர்வாகத்தில் சிரத்தை செலுத்தாமலிருந்தானு? இல்லை. அரசியலைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு இலாகாவிற்கும் நிர்வாகத் திறனுள்ளவர்களைத் தலைவர்களாக அமைத்தான். ரஸ்தாக்களைச் செப்பனிட்டான். தேவையான பாலங்களைச் சமைத்தான். விவசாயத்தின் பொருட்டுப் பாசன வசதிகளை ஏராளமாய் ஏற்படுத்திக் கொடுத்தான். நாட்டின் சட்டத்தை நேர்படுத்தி, அதற்கு "கோட் நபோலியன்"(நபோலியன் சட்டத்தொகுதி) என்று பெயரிட்டான். நபோலியனுடைய தளர்விலா ஊக்கத்தினுலும் கண் கொட்டாத மேற்பார்வையினுலும் பிரஞ்சு நாடெங்கணும் செழுமைக் குறிகள் தோன்றின. ஒரு சமயம் அவனுடைய உயிருக்கு ஆபத்து நேரும்போலிருந்தது. இந்தச் செய்தியைக் கேட்ட பிரஞ்சுக்காரர்கள் திடுக்கிட்டுப் போயினர். ஆபத்து விளைக்க வெண்ணிய அயோக்கியர்களைக் கழுவிலேற்றி கழுகுக்கு உணவாக்க வேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். அன்னியர்களால் தூண்டப்பெற்று சில்லறையாக சிற்சில சூழ்ச்சிகள் நேர்ந்தனவே யன்றி, நாடு முழுதும் அமைதி நிலவிற்று. ஆனல் அன்னிய நாட்டுடன் போர்கள் மட்டும் நிற்கவில்லை. தோல்விக்கு மேல் தோல்வி சேர, எதிரிகளின் சூழ்ச்சியும் பழிவாங்கும் உணர்ச்சியும் வலுவடைந்து வந்தன. 1813-ம் ஆண்டில் அதாவது தான் சக்கிரவர்த்தியாகி பதின்மூன்ருவது வருஷத்தில், நபோலியன்

அன்னியர்களால் முதன் முதல் தோற்கடிக்கப்பெற்ருன். கொடுங்கோல் அதிகாரமனைத்தையும் மகிழ்வுடன் நபோலியன் கையில் கொடுத்துவிட்டு வாழ்ந்துவந்த பொது ஜனங்களும் அவரது தலைவர்களும் முதன் முதலாக முணுமுணுத்தார்கள். 1815-ம் ஆண்டில் இறுதியாக நபோலியன் தனது எதிரிகளால் நன்ருக முறியடிக்கப் பெற்ருன். "நபோலியன் நாட்டைக் கெடுத்த பாவி" என்று பிரஞ்சுக்காரர்கள் தூற்றினுர்கள். நபோலியனை எதிரிகள் கைதியாக்கினுர்கள். ஸெண்டு ஹெலினுத் தீவுக்கு அவனை ஆங்கிலேயர்கள் கொண்டு போனுர்கள். பிரஞ்சுக்காரர்கள் வாய்திறக்கவில்லை. சனியன் ஒழிந்தது என்றிருந்தார்கள். நபோலியன் என்று ஒருவன் ஏன் பிறக்கவேண்டும் என்று கூட, அவர்கள் எண்ணத் துணிந்தார்கள். தான் தனித்துக் கைதியாக வாழ்ந்த தீவிலேயே, நபோலியன் இறந்தான். இறந்து பல ஆண்டுகளுக்குப் பின்னர், அவனது "சாம்பல்" மிக்க ஆடம்பரத்துடன் ஸெண்டு ஹெலினுத் தீவினின்றும் போர்க்கப்பல்கள் புடைசூழ, வீரர்கள் அணிவகுத்து நிற்க, பிரான்சு நாட்டிற்குக் கொண்டுவரப் பெற்றது."

"கதை முடிந்துவிட்டது; நண்பரே! இதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டுவந்தீர்களா" என்றேன். ஆம் என்ருர். "இந்தக்கதை போதுமா, இன்னும் சில்லறைக் கதைகள்வேண்டுமா" என்றேன். "நீங்கள் சளைத்துப் போகிறவரையில் சொல்லுங்கள்; நான் களைப்பில்லாமல் கேட்டுக்கொண்டுவருகிறேன்" என்ருர் நண்பர். "நான் இப்பொழுது சொல்லப்போகும் கதைகள் நீண்டவையல்ல. ஓரிரண்டு குறிப்புகளைமட்டும் எடுத்து காண்பிக்கப் போகின்றேன்" என்றேன். "நல்லது" என்ருர் நண்பர். நானும் ஆரம்பித்தேன்.

"1914-ம் வருஷத்தில் ஆகஸ்டுமீ 3உ யன்று ஐரோப்பியப்போர் ஆரம்பமாயிற்று. பெல்ஜியத்தையொத்த சிறிய நாடுகளின் சுதந்திரத்தைப் பறிமுதல்செய்து அவைகளைத் தரையில் தள்ளி மிதிக்க எண்ணிய ஜர்மனியின் திமிர் குலைக்கப்படுதல்வேண்டும் என்பது நேசக்கட்சியினரின் தீர்மானமாகும். ஜர்மனியின் கட்டாய ராணுவப்பயிற்சியை ஏளனம்செய்த நேசக்கட்சியினர் அதை ஏற்றுச் சேனையைத் தயார்செய்ய நேர்ந்தது. ஆகாயப்படையின் தேவையை ஜர்மனியிடமிருந்து, நேசக்கட்சியினர் தெரிந்துகொண்டார்கள். பெரிய பீரங்கிகளையும் குண்டுகளையும் நேசக்கட்சியினர் ஜர்மனியைப்போலசெய்து, ஜர்மனியர்களின்மீது வெற்றி பெற்றார்கள். ஜனநாயக அரசியல் கொள்கையைச் சிரமீது கொண்டு வாழும் ஆங்கிலேயநாடு, கொடுங்கோல் ருஷியாவைத்தனக்குத் துணையாகக்கொண்டது. 1815-ம் வருஷத்தில் தனக்கு பரம விரோதியாயிருந்த பிரான்சுநாட்டிற்குச்சாதகமாக 1915-ம் வருஷத்தில் ஆங்கிலநாடு ஜர்மனியோடு போர்புரிந்தது. 1815-ம் வருஷத்தில் ஜர்மனியும் ஆங்கிலநாடும் நட்புடன் இருந்தன. 1915-ம் ஆண்டில் அவ்விரண்டுநாடுகளும் பகைமைகொண்டு, போர்செய்தன. 1905-ம் வருஷத்தில் லிபரல்கட்சியார் (தாராளக்கட்சியார்) என்ற கூட்டத்தார் ஆங்கில நாட்டின் அரசியல் உரிமையைப் பெற்றார்கள். லிபரல் கட்சியார் தங்கள் மந்திரி சபையை அமைத்துக்கொண்டார்கள். மந்திரிகளில் ஒருவர் லாய்ட் ஜியார்ஜ் என்பவர். முதலாளிமார்களான எதிர்க்கட்சியாருக்கும் பிரபுக்களுக்கும் லாய்டு ஜியார்ஜைக்கண்டால் பிடிப்பதில்லை. 'லாய்டு ஜியார்ஜை உயிர்க்கொலைசெய்தாலும் தகும்' என்று பலர் அக்காலத்தில் பேசிக்கொண்டார்கள். ஆனால்

போர்க்காலத்தில் அவருடைய உழைப்பையும் அறிவையும் நன்கு தெரிந்துகொண்ட எதிர்க்கட்சியார், அவரைப் போற்றி, அவருக்குத் தலைமை மந்திரிப்பதவி கிடைப்பதில், அவருக்குப்போராதரவு அளித்தார்கள். சென்ற போரில் ஆங்கிலநாடு வெற்றிக்கீர்த்தியுடன் வெளிவருவதற்கு மூல காரணமாயிருந்த லாய்டு ஜியார்ஜ் நாடுமுழுதும் பொருத்தமுடன் கொண்டாடப்பெற்ருர். அதே லாய்டு ஜியார்ஜ் தமது பெருமதிப்பை இழந்து, அயோக்கியன் என்று பல்லோராலும் இகழ்ந்துரைக்கப்படும் நிலைக்குச் சில ஆண்டுகளாக வந்திருக்கிருர். மீண்டும் அவர் ஆங்கிலநாட்டின் தலைமை மந்திரியானுல், அது உலகத்தாருக்கு வியப்பாகாது என்று நான் முடிப்பதற்குள், நண்பர் தமது கண்களை உள்ளே செருகிக்கொண்டார்.

அவ்வாறு நண்பர் செய்வதற்குப்பொருள் என்ன என்று அவரைக்கேட்டேன். "என்ன உலகம்" என்ருர் நண்பர். "இன்னும் ஒரு கதையைச் சொல்லிவிடுகிறேன்; பிறகு மேயோவையும் பிராமணர்களையும் நினைத்துக்கொள்ளலாம்" என்றேன். தேள் கொட்டினதுபோல நண்பர் துடித்தார்.

"காந்தியை உங்களுக்குத்தெரியுமல்லவா" என்றேன். மகாத்மா என்று கூறினுல், உங்களுக்கு வாய்நோகுமோ என்று என்னை நண்பர் சொற்களால்மோதினுர். "மகாத்மா என்று கூச்சல்போட்டு அவர் சொல்லுவதைக்கேட்காமல், அவரை எதிரிகளின் வயம் ஒப்புவித்த மனிதப்பதர்களின் கூட்டத்தை நான் சேரவிரும்பவில்லை. மேலும் மகாத்மாவென்று காந்திக்கு மகுடம்சூட்டி, அவரிடமிருந்து அற்புதங்களையும் நான் எதிர்ப்பார்க்கவில்லை. காந்தி என்ற அருமைத்

திருநாமத்தாலேதான் நான் அவரை அழைப்பேன்" என்றேன். எனக்கு இலேசாகக் கோபம் வந்ததைக்கண்ட நண்பர் மூச்சுவிடவில்லை. "மகாத்மாவை எனக்குத்தெரியும். அவரைப்பற்றி என்ன" என்றார் நண்பர். "சொல்லுகிறேன். கவனமாய்க்கேட்டுவாருங்கள். நான் சொல்லிவருவனயாவும் வெறும் கதைகள் அல்ல. அவைகளின் பொருத்தத்தைத் தெரிந்துகொண்டே, கதையைக் கேட்டுக்கொண்டு வரவேண்டும்" என்றேன். கபடமற்ற, நேர்மையுள்ள உள்ளங்கொண்டவர் எனது நண்பர். விஷயத்தைத் தெரிந்துகொள்ள ஆவல்படைத்தவராகையால், விதண்டாவாதம் செய்யாமல், சரியென்று ஒப்புக்கொண்டார். நானும் எனது வழக்கமாயுள்ள கதையைத் துவக்கினேன்.

"காந்தி தமது சரிதத்தை எழுதிவருகிறார், பார்த்தீர்களா ? பாரிஸ்டர் தொழில் முறையில் பொருள்தேட, காந்தி தென்னாப் பிரிக்காவுக்குச் சென்றார். ஏழைஇந்தியக் கூலிகளும் தன்மதிப் பிழந்த இந்திய வியாபாரிகளும் ஏனையோர்களும் தென்னாப் பிரிக்காவில் வெள்ளையர்களால் நடத்தப் பெற்ற முறையைக்கண்டு, காந்திமனம் கசிந்தார். தமது பொருள் அவாவை நிறுத்திக் கொண்டார். தென்னாப் பிரிக்காவில் குடிபுகுந்திருக்கும் இந்தியர்களை முன்னேற்றும் துறைகளில் உழைக்கத் தமது வாழ்வை அர்ப்பணம் செய்யத் தீர்மானம் செய்து கொண்டார். சிறிய சிறிய நிகழ்ச்சிகளில் போராடி, இந்தியர்களின் தன்மதிப்பை விருத்தி செய்து, அவர்களுடைய வல்லமையை வளர்த்து வந்தார். பின்னர் அவர்களை ஒரு அமைப்பில் சேர்த்து, அவர்களுடைய "கூட்டவல்லமையை" க்கூட்டிக் காண்பித்தார். சிறிய சிறிய சங்கதிகளில் போராடி வெற்றியைக்

கண்ட இந்தியர்கள் தங்கள் ஏக்க மனப்பான்மையை யொழித்துச் சிறிது விழித்துக் கொண்டார்கள். சிறிதளவு முன்னேற்ற மடைந்த இந்தியர்களுக்கு வெல்லும் வகை தெரியவில்லை. சத்தியாக்கிரகம் அல்லது சாத்வீக எதிர்ப்பு என்ற இணையற்ற கருவியை காந்தி கண்டார். அந்தக் கருவி ஒருவாறு உலகத்திற்குப் புதிதானதால், அதைப் பிர யோகம் செய்யும் முறைகளை ஒவ்வொன்றாக அனுபவத்தால் காந்தி தேர்ந்தார். ஒருதவறைக்கண்டு, காந்தி ஏங்கிப் போய் நின்று விடவில்லை. தவறைக்கொண்டு, நேரிய முறையை நிலைத்துக்கொண்டார். சுமார் பதினாயிரம்தொண் டர்களைக்கொண்டு, காந்தி சாத்வீக எதிர்ப்புப்போரை நடத் தினார். தென்னாப்பிரிக்கா அரசியலாரின் மூளைபோல விளங் குஞ்சேனாபதி ஸ்மட்ஸ் அவர்கள் காந்தியை ராஜிக்கு அழைத் தார். ராஜிபேசி முடிந்தது. சாத்வீக எதிர்ப்பும் நிறுத் தப் பெற்றது. ராஜிஇன்ன தென்று தெரிந்து கொள்ளாத பட்டாணி ஒருவன் காந்தியை அடித்துக்கொன்று விடத்தீர் மானித்தான். காந்தி இந்தியர்களைக் காட்டிக் கொடுத்து விட் டார் என்பது பட்டாணியின் நினைப்பு. காந்தி பட்டாணி யால் தாக்கப் பெற்றார். தமது சத்தியாக் கிரகக் கொள் கைக் கேற்பவாறு, காந்தி பட்டாணியை மன்னித்து விட் டார். நீதிஸ்தலத்தில் பட்டாணியின் பேரில் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப் பெறவில்லை. இந்தியர் களும் தள்ளத்தக்க கூட்டத்தார் அல்ல என்று தென்னாப் பிரிக்கா அரசாங்கத்தார் உணர்ந்து கொள்ள வேண்டிய நிலைக்கு இந்தியர்களைக் கொண்டுவந்த காந்தி தமது உழைப் புக்காக என்னபரிசு பெற்றார்? பட்டாணியால் தாக்கப் பெற்றார்.”

இவ்வாறு கூறிக்கொண்டே வருகையில் நண்பர் முத்து முத்தாகக் கண்ணீர் சொரிவதைக் கண்டேன். காரணம் வினவ வேண்டுமா ? தேவையில்லை. எனவே, கதையைத் தொடர்ந்து சென்றேன்.

"தென்னுப் பிரிக்காவில் காந்தி பெற்ற வெற்றியில் குற்றமாவது, இரத்தமாவது கலந்ததுண்டா ? உலகசரித்திரத்தில், இத்தகைய வெற்றிகாணப் பெற்றது முண்டா ? நபோலியன் கொண்ட வெற்றிகளில் இலட்சக் கணக்கானவர்கள் உயிர்துறந்தார்கள்; ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு ஆதாரவாயிருந்த ஆடவர்கள் மாண்டுபோயினர். ஆனால் காந்தியின் வெற்றியோ, இத்தகைய மருவே கலக்காத வெற்றியாகும். நிற்க, காந்தி இந்தியாவிற்கு வந்தார். இந்தியாவிலிருக்கும் அரசியல் கட்சிகள் ஒன்றிலும் சேரவில்லை. காலஞ்சென்ற கோகலே அவர்கள் தமது குரு என்று மட்டும் சொல்லிக் கொண்டார். ஆனால் கோகலேகண்ட "இந்தியாவின் ஊழியர்கள்" என்ற சங்கத்திலும் காந்திசேர வில்லை. எங்கெந்தக் கூட்டத்தார் தமது உதவியை நாடினார்களோ, அவர்களுக்குத் தன்னாலியன்ற அளவு உதவி செய்துவந்தார். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் சிறப்பாக காந்தியின் உதவியை நாடியவர்கள் இந்தியத் தொழிலாளர்கள். இடையே, இந்திய அரசாங்கத்தாருக்கு, சேனைக்கு ஆட்கள் சேர்த்துக் கொடுத்தார் காந்தி. இதற்காக, காந்தி காங்கிரசைச்சார்ந்த தீவிர இந்திய அரசியல் வாதிகளின் கோபத்துக்கு இலக்கானார்."

"மகாத்மா என்றுஅழைக்கப்பெற்ற காந்தியைக்குறை கூற காங்கிரஸ்வாதிகள் துணியவில்லை. இந்திய அரசாங்கத்தார் பொதுஜன விருப்பத்திற்கு மாறாகவும் சட்ட சபை

யைச் சேர்ந்த இந்திய அங்கத்தினர்களின் வாதத்தைக் கவனிக்காமலும் ரௌலட் சட்டத்தை ஆக்கினார்கள். சபர்மதி முனியாய் விளங்கும் காந்தியை காங்கிரஸ் தலைவர்கள் அணுகினார்கள். இந்த சட்டத்தை ஒழிப்பதற்குத் தாம் சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தத் தயார் என்று காந்தி காங்கிரஸ் தலைவர்களிடம் வாக்குறுதி செய்தார். இதற்காக, காந்தி நாடு முழுதும் கொண்டாடப் பெற்றார். மகாத்மா, மகாத்மா என்று காந்தியின் காலில் விழாத ஹிந்து இருந்திருக்க முடியாது. கிலாபத்து இயக்கத்துக்கும் பேராதரவு அளித்த காந்தியைத் தங்கள் ஸர்தார் (தலைவன்) என்று முஸ்லீம்கள் கொண்டாடிப் பேசினார்கள். தீண்டாமை விலக்கைக்கருதி, தீண்டாதார்கள் யாவரும் காந்தியை தெய்வமாகத் தொழுதார்கள். தங்கள் விடுதலையின் பொருட்டு வெளித் தோன்றிய பேரருள் சோதி என்று தேவ தாசிகள் கானம் செய்தார்கள். பெண் விடுதலைக்காகப் பிறந்த பித்தன் என்று முஸ்லீம் ஸ்திரீகளும் ஹிந்துப் பெண்மணிகளும் களிக்கூத்தாடி, காந்தியை வாழ்த்தினார்கள். ஏழை பங்காளன் என்று ராட்டையைச் சுற்றும் கூனிக் கிழவி காந்திக்கு ஆசிகூறினாள். ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தைக் கொணரப் போகும் அற்புதத்தைப் பார்த்துவிட்டு இறப்போமே என்று வீணர்களும் வைதீகர்களும் ஆசை கொண்டு, காந்தியின் பேரில் அன்பு சொரிந்தார்கள். ‘சமராதிபன்’ என்றால் இவருக்கே பொருந்தும் என்று பலாத்காரப் புரட்சிக்காரனும் காந்தியைப் போற்றினான். சுயராஜ்யப் போராட்டத்தை நடத்தும் ஆற்றல்கொண்ட காந்திக்கு ஏதேச் சாதிபத்யம் கொடுக்கப்படவேண்டும் என்று காங்கிரசில் தீர்மானிக்கப் பெற்றது. “காந்தி சாதுவல்ல; அவர்

துறவியுமல்ல, காந்தி கைதேர்ந்த ராஜ தந்திரி" என்று எண்ணி, ஏமாந்து, களிப்படைந்த இந்தியர்களை அக்காலத்தில் எண்ணத் தொலையாது."

"சௌரி சௌரா சம்பவம் நேர்ந்தது. காந்தி தமது பர்டோலித் தீர்மானத்தை உலகத்தாருக்கு அறிவித்தார். அரசியல் சம்பந்தமாக, அழித்தல் வேலையை நிறுத்திவைத்து, ஜன நிர்மாண ஆக்க வேலையான கதர், தீண்டாமை விலக்கு, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை—இவை மூன்றிலும் தான், தாம் இனி முனைந்து வேலைசெய்யப் போவதாகத் தெரிவித்துவிட்டார் காந்தி. நாட்டிலே முணு முணுப்பு ஏற்பட்டு விட்டது. இரகசியமாக வேனும் காந்தியைக் குறை கூறத் துணியாத, எண்ணாத மனிதர்களும் பகிரங்கமாக காந்தியைத் திட்டத்துவக்கி விட்டார்கள். ஒவ்வொரு கூட்டத்தாரும் காந்தியைத் தாக்கத் துவக்கினார்கள். ஒவ்வொரு கூட்டத்தின் நோக்கமும் வெவ்வேறு ஆகும். நாள் முழுதும் சலிக்காமல் மகாத்மா என்று வாழ்த்துக்கூறிய நாடு காந்தியிடம் தான் காண்பித்த மதிப்பையும் அன்பையும் குறைத்துக் கொண்டதற்குக் காரணங்கள் என்ன? குழப்பமின்றி, தெளிவுகொண்ட வாழ்க்கையைப் பின்பற்றி நடத்தி வரும் காந்தி, தமது வாழ்க்கை முறையில் ஏதேனும் மாறுதலைச்செய்து கொண்டாரா?

இவ்வாறு சொல்லிக்கொண்டு வந்ததைக் கேட்டுவந்த நண்பர், "காந்தி மாறவில்லை" என்றார். "ஒரு காலத்தில் காந்தி மிதமிஞ்சி புகழப்படுவானேன்? மற்றொரு காலத்தில்' அவரை ஜனங்கள் விரைவில் மறந்துபோக உளம் கொள்ளுவானேன்" என்று நண்பரை வினவி, "நான் சொன்ன கதைகளினின்றும் பிராமணன் திட்டப்படும் காரணத்தையும் பிரா

மணனுக்கு நேரக்கூடிய ஆபத்தையும் பிராமணன் செய்ய வேண்டிய வேலைகளையும் அவன் செய்யத்தவறிய வேலைகளை யும் மனித இயற்கையையும் ஒருவாறு தாங்கள் தெளிந்து கொண்டிருப்பீர்கள்'' என்றேன். ''தெரிந்தது; ஆனல் விபரமாய்ப் பேசவேண்டும்'' என்ருர் நண்பர். சரியென் றேன்.

''நீங்கள் சொல்லிவந்த கதைகளிலிருந்து பிராமணர்கள் திட்டப்படுவது இயல்புதான் என்று தெரிந்து கொண்டேன். தற்காலத்திலும் அதாவது வருணாச்சிரமம் என்பது பழங் கதையாகப் போய் விட்ட பின்னரும், பிராமணர்கள் அதை ஏன் தொங்கிக் கொண்டு நிற்கவேண்டும்? ஏனையோர்களைப் போலவே வாழ்க்கை நடத்தும் பார்ப்பனர்கள் தங்களை ஏன் வேறு இனத்தவராகக் கருதிக் கொள்ள வேண்டும்? நீங்கள், நபோலியன், லாய்டுஜியார்ஜ், காந்தி—இவர்கள் மூவரையும் மட்டும் ஏன் தனித்துக் குறிப்பிட்டுக் கூறினீர்கள்? இவை களைப்பற்றி விளக்கமாகக் கூறுங்கள்'' என்று நண்பர் மிக்க ஆவலுடன் கேட்டார். ''இறுதியிலிருந்து, உங்கள் கேள்வி களுக்கு நான் விடையளிக்கின்றேன்'' என்று சொல்லி, நான் பின் வருமாறு கூறினேன்:—

'' ஆபத்து அதிகமாயிருக்கிற விஷய சம்பந்தமாகத் தான் கீர்த்தி யதிகமாயிருக்கும். ஏராளமாக நஷ்டம் ஏற் படக்கூடிய வியாபாரத்திலே தான் ஏராளமாக இலாபம் உண் டாகும். பெருத்த இலாபத்தையோ பெருத்த நஷ்டத்தை யோ அடைபவனைத்தான் உலகம் நோக்கும். சித்திரக்குள் ளன் அல்லது மிக உயர்ந்தவன், இவர்களைப் பார்க்கத்தான் உலகம் ஆவலுடன் செல்லும். சராசரி மனிதனைக் காட்டிலும் அதிகமான செயல் திறனைக் கொண்டவர்களை உலகம் கும்

பிடுவது வழக்கம். மொட்டை வேதாந்திகளையும் மலட்டுத் தத்துவ சாஸ்த்திரிகளையும் திண்ணைவம்பர்களையும் உலகம் பொருட்படுத்துவதில்லை. அவர்களைக் கண்டு, உலகம் நகைக்கும். சாதுக்களாலும் செயல்திறனுள்ளவர்களாலும் தவத்திலாழ்ந்திருக்கும் முனிவர்களாலும் பக்தர்களாலும் தான் உலக நாகரிகம் விருத்தியடைந்து வந்திருக்கிறது. செயல் திறன் கொண்டவர்களைக் கருமவீரர்கள் என்று அழைப்போம். நூல் எழுதி உலகத்தை சீர் திருந்தச்செய்பவன் கருமவீரன்; நூதன கருத்துக்களை அமைப்புகளில் நுழைத்தும் புதியஅமைப்புகளை அமைத்தும் மனிதவாழ்க்கையைத் திருத்தி உயர்த்தப் பாடு படுபவனும் கருமவீரன். ஏராளமாகப் பொருள் திரட்டி, அதை ஜன சமூக முன்னேற்றத்தின் பொருட்டு செலவு செய்பவனும் கருமவீரன்தான். போர்க்களத்தில் வெற்றிபெறும் வீரனையும் கர்மவீரன் என்று அழைப்போம். அரசியல் நிர்வாகம் திறம்பட நடத்துபவன் கருமவீரன்தான். கருமவீரர்களைத்தான் உலகம் போற்றும். அதிலும் அரசியல் சம்பந்தமான கருமவீரர்கள் அவதார புருஷர்கள் என்று மதிக்கப்படுகின்றனர். மனித உயிர்களின் பேரில் ஆட்சி செய்யும் வல்லமையுடைய கருமவீரர்களைத் தான் உலகம் பெரிதும் போற்றுகின்றது; அல்லது பெரிதும் தூற்றுகின்றது. அதனாலே தான், ஏனைய கருமவீரர்களை ஒதுக்கி, மேற் கூறிய மூன்று மாதிரிகளையும் பொறுக்கி எடுத்தேன். நபோலியன் போர்த் தொழிலில் நிபுணன். வெற்றியைத் தவிர (இறுதியில் இரண்டு சண்டைகள் தவிர) தோல்வியைக் கண்டறியா வீரன். சிறந்த படைத்தலைவனாயிருந்தும், திறம்பட அரசு செலுத்தியவன். லாய்டு ஜியார்ஜுக்குப் போர்ப்பழக்கம் கிடையாது. காரிய நிர்வாகத்தில் கை

தேர்ந்தவர், அரசியல் நிபுணர். போர்ப்பழக்க மில்லாவிடினும் போரைத்திறம்பட நடத்தி, வெற்றி வருவதற்கு ஏற்ற வசதிகளைக் கண்டவர். காந்தியைப் பற்றிச் சொல்லவும் தேவையா? காந்தி போரை வெறுப்பவர். அரசியல் பழக்கமும் இல்லாதவர். காந்தி சாது; காந்தி தவமுனி; இந்தியர்களுக்கு உயிர்ப் பெருக்கு அளித்து, ஊக்கம் தந்து, அவர்களை வீரர்களாக்கிய "வித்தகன்". சத்தியாக்கிரகம் என்ற இணையற்ற சாதனத்தை உலகத்தாருக்கு உவந்து அளித்த உத்தமர்; இவர்கள் மூவரும் தத்தம் நாட்டிற்குத் தொண்டு செய்த வகையும் அளவையும் பார்த்தீர்களா?"

"ஒருவாறு தெரிந்து கொண்டேன்" என்றார் நண்பர். பின்னும் சொல்லுவதைக் கவனித்துக் கேளுங்கள்" என்றேன்." "சரி" யென்றார்.

"செயல்திறன் கொண்ட இம் மூன்று கருமவீரர்களையும் விண் முட்டும் படியாக, மக்கள் புகழ்ந்தார்கள். அவர்களுடைய செயல் திறன் தேவையாயும் சுவையாயும் இருக்கும் சந்தர்ப்ப வசதிகள் இருக்குமளவும், அவர்கள் போற்றப் பட்டனர்; பின் பற்றப் பட்டனர்; அதன் பின்னர் தூற்றப் பட்டனர். கருமவீரர்களுடைய வெற்றியைத் தன்னுடையதாக ஜனசமூகம் பாவிக்கும். கரும வீரர்களுடைய தோல்வியை அவர்களுடையதாகப் பழிசுமத்தி ஜன சமூகம் கருமவீரர்களைக் கழுவிலேற்றப் பார்க்கும், துணியும். அன்னியர்களை வெருட்டி யடித்தவரையில், நபோலியன் போற்றப்பட்டான். தோல்வி பெற்றவுடன், தேசத்துரோகி என்ற பட்டம் பெற்று, கண்ணற்ற தீவாகிய ஸெண்டு ஹெலினவில் மாள நேர்ந்தது. சிறந்த தேச பக்தன் என்று எல்லோராலும் போற்றப் பெற்ற லாய்டுஜியார்ஜ்

தேசபக்தி மனப்பான்மையைக் கொண்டு, வார்ஸேயிஸ் உடன்படிக்கையைச் செய்து, ஜர்மனியர்களைச் சிறுமைப் படுத்தி, ஜர்மன் கைத்தொழில்கள் சின்னபின்னமாகும் முறைகளைக் கோலினர். உலகநாடுகள் தொழில்களின் மூல மாயும் வியாபாரத்தின் மூலமாயும் ஒன்றை யொன்று எவ் வளவு வரையிலும் சார்ந்திருக்கின்றன வென்றும், போர் வெற்றியுடன் முடிவு பெறுவதற்கு மூலகருவிளாயிருந்த ஆங் கிலப் பொதுஜனங்களின் மனப்பான்மை போரின் கொடிய நிகழ்ச்சிகளால் எவ்வாறு மாறி விட்டது என்பதையும் அறி யாமல், மொட்டை தேசபக்தி உணர்ச்சியைக் கொண்டு, உடன்படிக்கையைச் செய்த லாய்ட் ஜியார்ஜ் அயோக்கியன் என்று மகுடம் சூட்டப்பெற்று, முதல் மந்திரிப் பதவியி னின்றும் தள்ளப்பெற்றது மல்லாமல், லாய்டு ஜியார்ஜ் என் ருல் பொய் என்று பொருள் படுமாறு நடத்தப் பெற்ருர். லாய்டு ஜியார்ஜ், சூழ்ச்சிக்காரர் என்று மதிக்கப்பெற்ருர். எதற்காக? ஏனையோரைக் காட்டிலும் அதிகமான செயல் திற னும் தேசபக்தி உணர்ச்சியும் கொண்டு பொது ஜனங்களுக் குத் தொண்டுசெய்ய முன் வந்து, இறுதியில் அறியாமை இருள் அவரைச் சூழ்ந்து கொள்ள, அவரைக் கும்பிட்ட ஜனங்களுக்கு அவருடைய அறிவின்மையில் சந்தேகம் வர வில்லை. அவருடைய நடை நேர்மையில் ஐயம் உண்டா யிற்று. அறிவிலியைக்கும்பிட்டார்கள் என்ற இழுக்கு ஜன சமூகத்துக்கு உண்டாகாதா? "குணம் இடையில் கெட்டுப் போகும்; அறிவு கெட்டுப்போகாது" என்பது பாமர ஜனங் களின் கருத்தாகும். இடையில் அறிவு சுருக்க மடைந்து வற்றிப்போகும் என்பது மக்களுக்குத்தெரிவதில்லை. தென் னுப்பிரிக்காவிலிருந்து காந்தியைக் கவனித்து வந்த இந்தியர்

களுக்கு, அவர் சாது என்று நன்ருகத்தெரியும். அவர் சாது வாயிருந்தாலும், போர்த்திறன் கொண்ட மாபெரும்வீரன் என்று மதித்தார்கள். மதித்ததில் யாதொரு தவறுமில்லை. அவரை மகாத்மா என்று அழைத்தார்கள். அவருடைய ஆணைக்குக் கட்டுப்படுவதாகக் கூறினர்கள். விடுதலையைப் பற்றிக்கனவிலும் நினைக்காத மனிதர்களும் காந்தியின் "ஒரு ஆண்டிற்குள் சுயராஜ்யம்" என்பதை தூரதிருஷ்டிக்கண்ணாடி கொண்டு, எதிர்பார்த்து வந்தார்கள். தாம் சொல்லியபடி நடக்காத ஜனங்களை நடத்த முயன்ருல், அவர்களுக்குத் தான் பொறுக்கொணுத துன்பங்களும் இன்னல்களும் நேரும் என்பதை நன்கு உணர்ந்த காந்தி அறிவு தெளிவுடன் பர்டோலித்தீர்மானத்தைச்செய்தார். "நம்பிக்கெட்டேன்" என்று சொல்லுவதற்கு பதிலாக நான் தவறைச் செய்தேன் என்ருர் சாது காந்தி. காந்தி வெறும் சாதுதான் என்றும் அவர் பித்தர் என்றும் கொண்டு தனது அறிவின்மையையும் பலவீனத்தையும் இந்திய ஜன சமூகம் மூடிக்கொண்டது".

காந்தி பெயரைச் சொன்னல், நண்பரின் நிலைமையே மாறிவிடுகின்றது. "செயல் திறன் கொண்ட கூட்டத்தார் பொது ஜனப் போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் ஆளா வார்கள். அவ்வாறு தூற்றுதலுக்கு ஆளாவது பெருமை என்பது உங்களுடைய கருத்தா" என்று நண்பர் என்னைக் கேட்டார். "ஆம்" என்றுகூறி, மேலே சொன்னேன்.

"ஜன சமூகம் ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு கூட்டத் தாருக்கு அதிகாரப் பத்திரம் கொடுக்கின்றது. ஒரு கூட் டத்தாரின் செயல் திறன் அழிந்துபோனல், வேறு கூட்டத் தார் நிர்வாகம் செய்யத் தோன்றிவிடுவார்கள். முன்னொரு காலத்தில், ஹிந்து ஜனசமூகம் ஒருகூட்டத்தாருக்கு அதி

காரப்பத்திரம் கொடுக்க, அவர்கள் பொறுப்பை ஏற்று, தங்கள் ஆற்றலுக்குத்தக்கபடி, நிர்வாகம் செய்து வந்தார்கள். அவர்கள் நிர்வாகத்தைப் பண்டைக் காலத்தில் நன்ருகத் தான் நடத்தியிருக்கவேண்டும். மந்திரத்தாலும் மாயத்தாலும் அவர்கள் ஏனையோரை ஏமாற்றி வந்தார்கள் என்று கூறினல், பார்ப்பனரல்லாத ஏனையோரின் அறிவையும் ஆற்றலையும் குறைகூறி அவமானப்படுத்துவதாகும். அதை நான் ஏற்றுக்கொள்ளுவதில்லை. ஜனசமூக நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பார்ப்பனர்கள் அந்தக்காலத்தில் நல்ல தன்மையையும் கூரிய அறிவையும் அடக்கத்தையும் கொண்டு, வறுமையை அணிகலனுகக் கொண்டு வாழ்ந்து, மாமிசத்தைத்தள்ளி, போதைச் சாமான்களைக் கிட்டக்கொண்டு வராமல், எல்லா உயிர்களையும் சமமாகப்பாவித்து, நடுநிலைதவருமல் நடந்து கொண்டிருக்க வேண்டும். அதனுலேதான், தனிவகுப்பாக வாழ, ஏனையோர் அவர்களை விட்டிருப்பார்கள். காமம், குரோதம், மதம், மோகம், மாச்சரியம் என்ற குணங்கள் இப்பொழுது மட்டும் தோன்றியவையல்ல. அவை மனிதனுடன் கூடப்பிறந்தவைகளாகும். எனவே, மேற்கூறிய தன்மைகள் தாக்கமுடியாத வாழ்க்கையை ஒருகூட்டத்தார் கொண்டிருந்தால், அதுஇயல்புதான். ஒத்துழையாமைக்காலத்தில் கதர் உடுத்திய சத்தியாக்கிரகிகளை, இந்திய ஜனசமூகம்போற்றிக்கும்பிட வில்லையா? சத்தியாக்கிரகிகள் ஏனையோரை ஏமாற்றி, மரியாதையைப் பெற்ருர்களா? சந்தர்ப்பங்களின் சூழ்ச்சியால், சத்தியாக்கிரகிகள் அனைவரும் ஒரே கூட்டமாக, வகுப்பாக, இப்பொழுது இதாலியாவிலிருக்கும் "பஸிஸ்டு" கூட்டத்தாரைப் போல, பிரிந்து கொண்டிருந்தால், தற்போதைய இந்தியர்

களின் பின்சந்ததியார்கள், சத்தியாக்கிரகிகளின் வழித் தோன்றல்களை அவர்களுடைய பிறப்பின்காரணமாயும் பரம் பரையின் காரணமாயும் மரியாதையுடன் தான் நடத்தியிருப் பார்கள்.

"வீரர் வழிபாடு என்பது மனித இயற்கையின் மகத் தான ஒருபகுதியாகும். மின்னொளிபோலமறைந்துபோன வருணாச்சிரமம் என்ற எலும்புக்கூட்டைப் பற்றிக்கொண்டு, தற்காலத்திய பார்ப்பனர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்து வது தவறாகும். பார்ப்பனர்கள் அதிகாரவர்க்கத்தினர்களை நம்பிக்கெட்டதும் பார்ப்பனர்களை நம்பி ஹிந்துக்கள் சீரழிந்த தும் ஜாதி ஹிந்துக்களின் பலவீனத்தாலும் கவலையற்ற தன்மையாலும், "தீண்டப்படாதார்" என்போர் மனித நிலை தவறி வாழ்வதும், கண்கூடு. அதிகாரவர்க்கத்தினரைப் பார்ப்பனர்தூற்றுவதும் பார்ப்பனர்களை ஏனையோர்பகைப் பதும் இயல்பு. பண்டைக்காலந்தொட்டு ஹிந்துஜனசமூக நிர்வாக அதிகாரப்பத்திரம் பெற்ற பார்ப்பனர்கள் தூற்றப் படுவது இயல்புதான். ஹிந்துஜன சமூகத்துக்கு நிர்வாகத் திறன் மீண்டும் அபரிமிதமாய் வரப்போகின்றது என்பதற்கு இது அறிகுறியாகும். மேலும் திட்டுதல் என்ற சொல் எனக்குப் பிடிக்கவில்லை. ஜன சமூக சூழல்களையும் அவை களைத்திருத்தித்திறம்பட நிர்வாகம் செய்யும் முறைகளையும் பற்றிச் சற்றுக்கடுமையான சொற்களைக்கொண்டு, நம்மவர்கள் பகிரங்கமாக யோசித்து வருகின்றார்கள். இதைத் திட்டுதல் என்று நாம் தவறாகக் கூறிவருகின்றோம். ஹிந்து ஜனசமூகம் தன்னையே ஆத்ம சோதனை செய்து கொண்டு வருகின்றது."

"குடும்பத்தில் பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தங்கள் இச்சையைப் பூர்த்திசெய்துகொள்ள, உறுப்பினர்கள்

யாவரும் ஒரே முறையை அனுஷ்டிப்பதில்லை. தகப்பன் அதிகாரம் செய்கின்றான்; தாய் பட்டினிகிடக்கின்றாள். பையன் வீட்டை விட்டு ஓட்டமெடுக்கின்றான். பெண், பெற்றோர்களின் முகத்தைப்பார்த்து அழுகின்றாள். குழந்தை தாயைப்பார்த்து, தகப்பனை நோக்கிச் சிரிக்கின்றது. வேலைக்காரன் பாசாங்கு செய்கின்றான் அல்லது தனதுஉடல் தேய உழைக்கின்றான். பக்கத்து வீட்டுக்காரன் உதவிக்காக ஓடிவருகின்றான்; அல்லது தெருவில்நின்று தூற்றுகின்றான். இவர்கள் யாவரும் ஒரே இலட்சியத்தைக் கொண்டிருந்தும், பலமுறைகளைக் கையாளுகின்றனர். மகத்தான ஜீவசக்தி தோன்றப்போகின்றமையால், ஹிந்துஜன சமூகத்தில் இப்பொழுது பகிரங்கமாக ஆன்ம விசாரம் நடைபெற்று வருகின்றது. சந்தர்ப்பத்துக்கேற்ற செயலைச்செய்தபின், காந்தி இப்பொழுது எவ்வாறு மறைவில் நிற்கின்றாரோ, அதேபோல, இந்த மகத்தான ஆன்ம சோதனையிலீடுபட்டிருப்பவர்கள் தத்தம் வேலையைச் செய்துவிட்டு மறைந்துபோவார்கள். நிர்வாகத்துக்காக ஏற்பட்ட பழைய திட்டத்தைச் சோதனை செய்து பார்த்தாலன்றி, புதிய திட்டம் ஏற்பட முடியாது. எனவே, வருணாச்சிரம தர்மம் பகிரங்கமாகச் சோதிக்கப்பெற்று, அந்தத்திட்டத்தை ஒரளவில் நிர்வகித்து நடத்திய பார்ப்பனர்கள் பலவழிகளிலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டால், அதைப்பற்றி பார்ப்பனர்கள் வருந்துவார்களாகில், அவர்கள் ஜனசமூகத்தின் நன்மையைக் கருத்துக் கொள்ளவில்லை என்று தவக்கமன்னியில் கூறிவிடலாம்.''

"மேலும் வருணாச்சிரம தர்மம் என்பது இப்பொழுது அமுலில் இருந்து வரும் உயிருள்ள அமைப்பல்ல. வருணாச்சிரம தர்மத்தைப்பற்றி, நூல்களில் படிக்கலாம்

மேடைகளில் பிரசங்கம் செய்யலாம்; ஆனால், அதை இப்பொழுது அனுபவத்தில் வாழ்க்கையில் பார்க்க முடியாது. வருணாச்சிரமம் இயற்கை விதி என்றுகூறும் காந்தியை யொத்தசில மனிதர்களைத்தவிர, வேறுஎவருக்கும்—பார்ப்பனர்கள் உள்பட—அதில் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையை நாடல் என்பதுதனித்த எந்த மனிதனுக்கும் கூட்டத்தாருக்கும் சிறப்பானஉரிமையல்ல. வருணாச்சிரமம் உலகத்துக்குத் தேவையாயின், அதை உலகம் காப்பாற்றிக் கொள்ளும். தேவையில்லையாயின், அதற்காகப் பார்ப்பனர்களும் ஏனையோரும் எவ்வளவு பாடுபட்ட போதிலும் பயன்படப் போவதில்லை. வருணாச்சிரமதர்மத்தை வாழ்க்கையில் மேற்கொள்ளாத பார்ப்பனர்கள் வெறுங்கூச்சல்போடுவதுதகாது. மதத்தில்மூன்று பகுதிகள் உண்டு. பக்தி, நீதி, அற்புதம். கர்மவீரர்களுக்கு மூன்று தன்மைகள் வேண்டும். தன்நம்பிக்கை, நடைநேர்மை செயல்திறன். பக்தியைக் காண்பித்து, நீதியைப் போதித்த ஏசு நாதரிடமிருந்துஜனங்கள் அற்புதங்களை வேண்டி நின்றார்கள். இது பாமர ஜனங்களின் இயல்பு. அற்புதமாவது அரியசெயலாகும். சாதாரண மனித இயல்பை உபயோகித்துக் கொள்ளாமல், அதைத்தூற்றினாலும் வெறுத்தாலும் சரி, அதைச் சீர்திருத்த முடியாது. அற்புதம் தோன்றும் பொழுது, உண்மையான சமய உணர்ச்சி அழிந்துபோகும். சமயத்தின் இரண்டு அம்சங்களானபக்தியும் நீதியும் குன்றி அற்புதங்கள் தலைதூக்குமாகில், அந்த மதம் தனது தன்மையில் தாழ்வையடைந்து, மக்களின் சீரையும் குலைத்துவிடும். ஹிந்து நாகரிகம் சீர் குலைந்து வருவதற்கு இதுதான் காரணமாகும். எனவே ஹிந்துகள் மேன்மையுற்று முன்னேற

வேண்டுமானல், தங்கள் அற்புத ஆவலேக்குறைத்துக் கொண்டு பக்தியையும் (ஆத்திக உணர்ச்சியையும் நம்பிக்கையையும்) நீதியையும் (அறத்தையும்) வளர்த்துக்கொள்ள முற்படுதல் வேண்டும். அற்புதம் என்பதை அரிய செயலாய்க் கொள்ளவேண்டும்; இதற்கு ஆடம்பரச் செயல் என்று பொருள் கொள்ளவும் கூடாது, கொடுக்கவும் கூடாது.''

"தாங்கள் கொண்ட சந்தேகங்களுக்கு எனக்குத் தெரிந்த வரையில் விடையளித்து விட்டேன். ஒன்றன்பின் ஒன்றை நேராகக்கூறி, உண்மைகளைத் தொகுத்து, ஒருக்கால் சொல்லியிருக்க மாட்டேன். நான் கூறியவற்றை நிதானமாய் யோசித்துப் பாருங்கள். தவளைகளின் பேரில் கற்களைவிட்டு எறிந்தபையன்களின் மனப்பான்மையைக்கொண்டு, சிக்கலான பிரச்னைகளை நோக்குதல் கூடாது. தொழிலாளி முதலாளி யாவதும் முதலாளி கூலிக்காரனுவதும் சாதாரண நிகழ்ச்சிகள் தான். எனவே தொழிலாளி முதலாளியை வெறுப்பதும் முதலாளி தொழிலாளியை ஏளனம் செய்வதும் தவருகும். நிர்வாகத்தை ஏற்காதவர்களும் நிர்வாகம் செய்ய செயலற்றவர்களும், நிர்வாக முறைகளின் இழுக்குகளைப்பற்றிக் குறை கூறலாம். ஆனல் அதே நிர்வாகம் தூற்றும் கூட்டத்தாரின கைகளில் வரப்பெறுமானல், பழைய நிர்வாக முறைகளின் தேவையை உணருவார்கள். மார்பைப்பார்த்து மனிதன் என்றும், முதுகைப்பார்த்து மனிதன் என்றும், முகத்தைப் பார்த்து மனிதன் என்றும் தனித்தனியே நோக்குதல் பயனற்றவேலை. மனிதனை முழுதும்பார்க்கவேண்டும். அதுபோல, சனசமூகத்தின் எல்லாப்பகுதிகளேயும் உற்று நோக்

குதல் வேண்டும்; மனிதர்களின் எல்லாத் தன்மைகளும் உணர்ந்து கொள்ளப்படல் வேண்டும். அதாவது மனிதனுக்கு முழுப்பார்வை வேண்டும். அழகு இருந்தால் ஆபத்து நேரும் என்று அழகைக்கெடுக்கலாமா? மனிதனுடைய எல்லாத் தன்மைகளையும் பிணைத்து, இணைத்து, நன்றாக வேலை செய்யக் கூடிய வாழ்க்கைத்திட்டத்தை, ஹிந்து ஜனசமூகம் தற்போது காணுதல்வேண்டும். அதுபழைய திட்டமாயிருக்கலாம்; அது புத்தப் புதிய திட்டமாயிருக்கலாம். அல்லது பழையதிட்டத்தின் திருத்தமாயிருக்கலாம். இதை அமைப்பது எல்லோருடைய கடமையாகும். உரிமையையும் அதிகாரத்தையும் மட்டும் நாடி, கடமையை மறப்பவர்களால் ஜன சமூகம் நன்மை அடையாது. இத்தகைய மனிதர்கள் பார்ப்பானுயினும்சரி, ஏனையோராயினும்சரி, ஜனசமூகத்தை முன்னேறச் செய்யமுடியாது" என்று நான் முடித்ததும், நண்பர் பெருமூச்சு விட்டுக்கொண்டு "கதைநீண்டுபோயிற்று ஆயினும் பாதகமில்லை" என்றார். நானும் மேயோ எழுதியிருக்கும் "பிராமணன்" என்ற அத்தியாயத்தை நினைத்துக் கொண்டேன்.

சென்னைமாகாணத்தில், செல்வமும் அரசியல் செல்வாக்கும் பெற்ற "கீழ்ச்சாதியார்" ஒருவரிடம் மேயோபேசிக் கொண்டிருந்தாராம்.

"பார்ப்பான் இயற்கையிலேயே புத்திகூர்மையுள்ளவன். ஏனையோர் கல்வியை மதிக்காதகாலத்தில், அவன் கல்வியில் சிரத்தை கொண்டான். புனிதநூல்களைத் தன் வயமாக்கிக் கொண்டு, அவைகளில் திருட்டுச் சூத்திரங்களைப் புகுத்தி, படைப்பில் தானே உயர்ந்தவன் என்று செய்து கொண்டான். ஜனங்களும் அவனைச் "சாமி" யாகக்கொண்

டார்கள். அவன் ஹிந்து ஜனசமூகத்தை ஆண்டுவந்தான். சென்னைமாகாணத்தில், நாங்கள் அவனுடன் போராடி வருகின்றோம்; என்றாலும் ஆயிரமாண்டுகளாக வேரூன்றி யிருக்கும் அவனது வலிமை மெது வாகத்தான் உடையும்போலிருக்கிறது. உத்தியோகங்களில் பெரும்பான்மை அவன் வயமிருக்கின்றது. அவன் ஆங்கிலேயர்களை வெறுக்கின்றான். ஆங்கிலேயர்கள் இந்தநாட்டைவிட்டு இப்பொழுது போய் விட்டால், மீண்டும் பார்ப்பான் எங்களைக் கழுத்தைப் பிடித்து முறித்துவிடுவான். நாங்கள் சர்க்காருக்குக் கொடுப்பதைக்காட்டிலும் பார்ப்பானுக்கு அதிகமாகப்பணம் (மதசம்பந்தமாக) கொடுத்து வருகின்றோம. திதிமுதலியவை நடக்கையில், நாங்கள் பார்ப்பான்காலைக்கழுவி, அந்த நீரைக்குடிக்கவேண்டும். பார்ப்பான் சோம்பேறி. அவனால் ஜனசமூகத்துக்கு இலாபமில்லை. அவன் வக்கீலாகின்றான் அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தனாகின்றான். நாங்கள் தலைதூக்கும் வரையில், எங்களுக்கு தூரத்திலிருக்கும் மன்னன் (தான்) தேவை. அந்தமன்னனால், எங்களுக்கு அமைதியும் நீதியும் நலமும் கிடைக்கப் பெறுகின்றன. அந்த மன்னனால், எங்களுக்கு விடுதலை கிடைக்கவும் கூடும். எங்களைத்தின்று பிழைத்து, "என்றாலும் தீட்டு ஒட்டிக்கொள்ளும், கிட்டவாராதே" என்று கூறும் பத்துஇலட்சம் எஜமானர்கள் (பார்ப்பனர்கள்) எங்களுக்குவேண்டாம்."

மேற்கூறிய யாவும் இந்த அத்தியாயத்தில் பல பகுதிகளினின்றும் தொகுத்துக்கூறப் பெற்றிருக்கின்றன. இவை யாவும் சென்னைக்கனவானால் தமக்குக் கூறப்பட்டதாக மேயோ எழுதியிருக்கிறார். கூறியிராவிடினும் பாதகமில்லை. இது, சீர்திருத்தத்தை நாடும் பார்ப்பனரல்லாதாரின் தற்

போதைய மனப்பான்மையாகும். இதை பார்ப்பனர்கள் நன்ருகத்தெரிந்து கொள்ளவேண்டும். சீர் திருத்தத்தை நாடும் புதிய கூட்டார் பழைய நிர்வாகிகளைக் குறைகூருமல் இருக்கமுடியாது. மேலே கூறப்பட்டவைகளில் பெரும் பான்மை உண்மை; சில திரித்துக் கூறப்பெற்றிருக்கின்றன. பார்ப்பனர்யாவரும் புரோகிதர்களல்ல. புரோகிதப் பார்ப் பான் வேறு ; பார்ப்பன வகுப்பு வேறு. பார்ப்பனர்களும் தங்கள் புரோகிதர்களின், குருமார்களின் கால்களைக்கழுவி, திதிகாலங்களில் நீரைக்குடிக்கவேண்டும். இதைப்பார்ப் பனரல்லாத ஏனையோர் அறியவேண்டும். ஆங்கில ஆட் சிக்குமுன்னர் பார்ப்பானுக்கு அதிகமாகச் சொத்து இருந்த தில்லை. அவனுக்குத் தொழில் பழக்கமும் கிடையாது. எனவே, தனதுகல்விப்பயிற்சியின் மூலமாய் பார்ப்பான் ஸர்க்காரில் "குமாஸ்தா" ஆனதில் வியப்பு ஒன்றுமேயில்லை. தொழில்களின் மூலமாயும் நிலத்தின் மூலமாயும் பொருளை யும் செல்வாக்கையும் பெற்று அனுபவித்து வந்த ஏனையோர் பார்ப்பானுக்கு அனுதாபம் காண்பிக்கவேண்டும். ஹிந்து ஜனசமூகத்தால், "சாமி" யாகக் கருதப்பெற்ற பார்ப்பான் தன்னை குமாஸ்தாவாகச் செய்துகொண்டு, அதிகாரவர்க்கத் தினருக்கு "கும்பிடுதண்டம்" போடக்கருதியது அவனுக் கும் அவனது மூதாதைகளின் நற்பெயருக்கும் சாசுவத இழுக்காகும். தமதுகடமையை மறந்து, உரிமையை மட்டும் வேண்டும் பார்ப்பனர்களுக்கு ஏனையோர் அறிவு கொளுத்து வது அவசியமாகும். இந்த முயற்சியில், பழைய பார்ப்ப னர்கள் அழிந்து போகலாம். ஆனால் "புதிய பார்ப்பனர் கள்" தோன்றப்போவது உறுதி. அதாவது ஹிந்து நாக ரிகத்தின் அடித்தளத்தின் மேற் கட்டப் பெற்ற வாழ்க்கை,

சீர்திருத்தம் பெறுமேயொழிய, அது அடியோடு அழிக்கப் பெறமாட்டாது. புனிதநூற்களில் திருட்டுச் சூத்திரங்களைப்பார்ப்பான் புகுத்திவிட்டான் என்று கூறுவதற்கு ஆதாரவுகிடையாது, அத்தாட்சி கிடைக்காது. ஏனையோரைப் போலவே, சாத்திரங்களின் உட்பொருளேயும் உண்மையான கருத்துக்களையும் உணராமல், அவைகளை எழுத்தளவிலே கண்டுஅஞ்சி, பார்ப்பானும் தவிக்கின்றான். பார்ப்பானும் மனிதன் தான்.

"முன்பு இருந்ததோர் காரணத்தாலே
மூடரே, பொய்யை மெய்யெனலாமோ ?
முன்புஎனச்சொலும் காலம் அதற்கு
மூடரே, வரையறையுண்டோ ?
முன்பெனச் சொலில்நேற்று முன்பேயாம்
மூன்றுகொடி வருடமும் முன்பே
முன்புஇருந்து எண்ணிலாது புவிமேல்
மொய்த் தழிக்களெலாம் முனிவோரோ ?"

அத்தியாயம் 15.

"மனிதர்களுக்குக் குறைவாக."

"கொடுமை கொடுமை இளமையில் வறுமை ; அதனினும் கொடுமை ஆற்றொணுக் கொடுநோய்..........."

என்று அடுக்கிக்கொண்டு போனபுலவர், "தீண்டாமை" க்கொடுமையை உணர்ந்திருப்பாரானல், கொடுமைகள் யாவற்றிலும் தீயகொடுமை, அதுதான்என்று அதைக் குறிப்பிட்டிருப்பார். தீண்டாமையைப்பற்றி நினைக்குந்தோறும், நம

துள்ளம் பதறுகின்றது. தீண்டாமை கண்ணிற்படாத, நெஞ்சத்தில் புகாத நேரமும் உண்டா? தீண்டாமை என்பது கடவுளைப்போல, இந்தியாவெங்கணும் பரவிநிற்கின்றது. தீண்டாமை காணப்பெற்ற நேரமே, ஹிந்து நாகரிகம்தனது சிறப்பையும் மேன்மையையும் இழக்கநேர்ந்த காலயாகும். எந்தத் துர்ப்பழக்கத்தையும் ஆதரித்து பேசலாம். தீண்டாமையை முதன் முதல்கண்ட முன்னோர்களையும் புகழ்ந்து பேசலாம். பண்டைக் காலத்தில் ஆரியர்கள் திராவிடர்களை ஜயித்தார்கள் என்றும் ஜயிக்கப்பட்ட வர்களுக்குள் ஆதியான திராவிடர்கள் தீண்டப்படாதார் என்று கருதப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதிலே ஒரு விநோதத்தைப் பாருங்கள். ஆரியர்கள் எவரை ஜயித்தார்கள்? திராவிடர்களை. திராவிடர்களுக்கு முன் இந்த நாட்டில் ஜனங்கள் இருந்தார்களா? இருந்தார்களாயின் அவர்களுக்கு என்னபெயர்? ஆதித்திராவிடர்கள் என்று அழைப்போம். ஆரியர்கள் திராவிடர்களை ஜயித்தபொழுது, ஜன சமூகத்தில் ஆதித்திராவிடர்களுக்கு இருந்தபதவி என்ன? அதை ஒருவராலும் சொல்ல முடியாது. ஆதித்திராவிடர்களைத் தீண்டாதார்களாகச் செய்த பழிமட்டும் ஆரியர்களின் பேரில் சுமத்தப் படுகின்றது. இதில் எவ்வளவு வரையில் உண்மை இருக்கின்றது என்று எவரும் துணிந்து கூறமுடியாது. திருட்டுச்சூத்திரங்களை எழுப்பினாலொழிய, தீண்டப்படாதார் என்ற கூட்டம் யாரால் வகுக்கப் பட்டனர் என்று எந்த கட்சியாராலும் மெய்ப்பிக்க முடியாது. இப்பொழுது நாணயமாக வழங்கிவரும் வரலாறு உண்மை என வைத்துக் கொள்ளுவோம். அதாவது வெற்றி பெற்ற ஆரியர்கள் ஆதித்திராவிடர்களைத் தீண்டாதார்களாக ஒதுக்கி

வைத்தார்கள் என்று கருதுவோம். இப்பொழுது தென்னுப்பிரிக்கா வெள்ளையர்கள் இந்தியர்களை ஒதுக்கி வைத்திருப்பதுபோல, வைத்திருந்தார்கள் ஆரியர்கள் ஆதித் திராவிடர்களை. இவ்வாறு செய்வது மனித இயல்பு போலும்! இவ்வாறு செய்ததற்காக ஆரியர்களைப் போற்றவும் செய்யலாம் எனத்தோற்று கின்றது. நாகரிகத்தில் பழுத்து நிற்கும் ஐரோப்பியர்கள்—சிறப்பாக ஆங்கிலேயர்கள்—நியூஸீலந்து, ஆஸ்திரேலியாவிலிருந்த புராதனக்குடிமக்களை கொன்று வேருடன் களைந்து, அந்தநாடுகளில் குடியேறி, அவைகளைத்தமதாக்கிக் கொண்டது உலகமறிந்த சங்கதி. வெற்றி பெற்ற ஐரோப்பியர்கள் கையாண்ட இந்த முறையை காட்டிலும் பண்டைக்கால ஆரியர்கள் கையாண்ட முறை உயர்ந்தது, கருணை கொண்டது எனவும் கூறலாமோ! ஆனால் தீண்டாமைச் சங்கதியில் விகட வாதம் செய்யக்கூட நாம் விருப்பங்கொள்ளவில்லை. நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றம் தான்.

ஆனால் அன்னியர்கள் இந்தியர்களைக் குறை கூறும் பொழுதும் தங்கள் சுயநல நோக்கத்தையும் குறும்பு மனப்பான்மையையும் மறைத்துக் கொண்டு, இந்தியர்களுக்கு அவர்கள் இதம் கூறுவதைப் போல பாவனைத்திரைபோடுகையிலே, அந்தத்திரையைத்துளைத்து, உள்ளத்தைக் காண்பிக்கவேண்டும் என்ற ஆத்திரம் நமக்கு உண்டாகின்றது. சிறப்பான நிகழ்ச்சிகளைக்கொண்டு பொது விதிசமைப்பதும் சாதாரண இயல்புக் கேற்ற செயல்களை அனுதாபக்கண்களுடன் நோக்காமல் ஏளனம் செய்வதும் எவருக்கும், எந்த நாட்டாருக்கும் தகாது. பிரஞ்சு நாட்டுப்புரட்சிக்கு முன்னர், எந்த நாட்டில் ஜன நாயக தத்துவ முறைப்படி அரசு

நடைபெற்றது? எனவே, பண்டைக்காலத்தில் அரசு செலுத்தியயாவரையும் அயோக்கியர்கள், அறிவிலிகள், கொடுங்கோலர்கள் என்று திட்டுவதா? தொழிலாளர்கள் ருஷிய நாட்டில் அடைந்திருக்கும் சுதந்திரமும் வாழ்க்கை வசதிகளும் ஏனைய நாடுகளில் உண்டா? ஜர்மனி, பிராஞ்சு, ஆங்கிலம், அமெரிக்கா—இவைகள் யாவும் பொல்லாத நாடுகள் என்று கூறலாமா? முதலாளிகளும் தொழிலாளிகளும் இரட்டைப்பிறவிகளைபோல இணைபிரியாமல் இனிதுவாழ்ந்து வரும் இதாலியா தேசம் முதலாளிகளை அழித்த ருஷியாவைக் குறைகூறலாமா? ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைத் தேவைக்கும் தக்கவாறு, அமைப்புகளும் அனுஷ்டானங்களும் அமையமுடியும். "ஆயிரம்இங்குண்டு ஜாதி; எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி" என்று நம்மவர்கள் கேட்க உரிமை படைத்திருக்கிறார்கள். அதே மூச்சில், "பார்ப்பானை ஐயன் என்ற காலமும் போச்சே; வெள்ளைப்பரங்கியைத் துரை யென்ற காலமும் போச்சே. எய்ப்பார்க்கு ஏவல் செய்யும் காலமும் போச்சே" என்று பாடி, ஆனந்தக்கூத்தும் நம்மவர் ஆடலாம். ஒருவன் குடும்பத்திலிருக்கும் குறையை ஏனைய ஒருவன்எடுத்துக் காண்பிக்கையில், அவனுடைய சொற்கள் இனிமையாய்ச் சுவைக்க வேண்டும்; சொற்களில் அன்புஒழுக வேண்டும். சொற்களில் வினயம் தழுவி நிற்றல் வேண்டும். மேயோவின் எழுத்தில் மேற்கூறிய தன்மைகள் காணப்பெறுகின்றனவா? இந்தியர்களைக் குறைகூறி, அதிகாரவர்க்கத்தினருக்கு நற்சாட்சிப் பத்திரம் அளிக்கவந்த மேயோவுக்கு அனுதாபம் கூடவா?

இந்தியாவில் ஆறுகோடிக்கு அதிக மாயுள்ளவர்கள் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தனர்.

தீண்டாமை ஒழிபடல் வேண்டும் என்று இந்திய ஜன சமூகத்துக்குச் சொல்லத்துணிந்த அதிகாரவர்க்கத்தினர் எவரும் இருந்ததில்லை. தீண்டாமையை ஹிந்து ஜன சமூகம் அடியோடு தொலைக்க வேண்டும் என்று காந்தி தீர்ப்புஎழுதி விட்டார். இனியும் தீண்டாமை நாட்டில் செழிக்குமா? ஒரு நாளும் செழிக்கப்போவதில்லை. அன்னியர்கள் மட்டும் "தீண்டாமைப் பூச்சி காண்பித்துக்கொண் டிருப்பார்கள்." அவ்வாறு செய்வது அவர்களுக்கு இலாபமல்லவா? இணைபிரியாத் தோழர்கள் சிலர் ஒரு பணமுடிப்பைக்கண்டெடுத்தார்கள். அவர்கள் இந்தப் பொக்கிஷத்தைக்கண்டதும், தங்களுக்குள் அடித்துக் கொண்டார்கள். பணத்தை முறையாகப்பாகம் செய்து கொள்ளாமல், அதை ஒரு வியாபாரியிடம் தூக்கிக்கொண்டு போய்க்கொடுத்து, "நாங்கள் யாவரும் ஒன்றாக வந்து கேட்டால், இந்தப் பணமுடிப்பைக் கொடுக்கலாம்" என்று சொல்லிவிட்டுத்திரும்பி வந்து விட்டார்கள். பின்னர் நண்பர்களில்யாவர் போய்க்கேட்டாலும், வியாபாரி பணமுடிப்பைத்திரும்பக் கொடுக்க மறுத்து விட்டான். "அவர் வந்தாரா, இவர் வந்தாரா? இன்னும் எல்லோரும் வரவில்லை போலிருக்கிறதே" என்று போக்குச் சொல்லிவந்தான். பின்னர், அந்த பணமுடிப்பைத் தந்திரமாக, நண்பர்கள் வியாபாரியிடமிருந்து அடைந்ததாகக்கதை சொல்லுவதுண்டு. அன்னியர் களிடமிருந்து இந்தியர்கள் நாகரிக நற்சாட்சிப் பத்திரம் வேண்டி நிற்கும் வரையில், அவர்கள், தீண்டாமை ஒழிந்ததா, ஹிந்து முஸ்லீம் சச்சரவு தொலைந்ததா? நீங்கள் யாவரும் "கிராப்" செய்து கொண்டு விட்டீர்களா? உடை அணிந்துகொள்ளும் வகையை மாற்றிக்கொண்டீர்களா? சிறிது காலம் வரையில், வயிற்றி

னுல் ஊர்ந்து செல்லுங்கள். கனடாவுக்குப்பேய்த் திரும்பி வாருங்கள்'' என்று கேள்விகளும் உத்தரவுகளும் போட்டுக்கொண்டேயிருப்பார்கள். வேற்றுநாடுகளில்சீர்திருத்தங்கள் யாவும் செய்யப்பெற்று, அங்கு மனிதர்கள் தேவதைகளாக வாழ்கின்ருர்களா? இல்லை. அவர்கள் ஏனையோருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கவுமில்லை. "சமூகத் திருத்தம் முற்றுப்பெற்று முடியும்வரையில், நாங்கள் அடிமைகளாக வாழத் தயாராயிருக்கின்ேரும்'' என்றுமுறிச்சீட்டில், உயிர் போனுலும் எழுதிக்கொடுக்கமாட்டார்கள்.

முற்காலத்தில் பார்ப்பனர்களைக் கொன்ற குற்றத்திற்காக தீண்டப்படாதார் எத்தகைய தண்டனை அடைந்தார்கள், எத்தகைய தண்டனை அவர்களுக்கு விதிக்கப்பெற்றது என்பதற்கு ஆதாரமாக, "பதினெண் புராணங்களில் தலைமையான பகவத்கீதையிலிருந்து,'' மேயோ ஒரு சுலோகத்தைக் குறிப்பிடுகின்ருர். பதினெண் புராணங்களில் கீதையொன்று என்ற செய்தியை மேயோ சொல்லத்தான் நாம் கேட்கின்ேரும். பகவத்கீதை புராணமாம்! நல்லது! "நாற்பதினுயிரம் பார்ப்பனர்களுக்கு அன்னமிட்டால்'' கொன்ற குற்றத்திற்குப் பிராயச்சித்தம் கிடைக்கும் என்று மேற்கூறிய நூலில் கூறப்பட்டிருக்கிறதாம்! வெற்றி பெற்றவர்கள் தங்களை உயர்ச்சாதி மக்களாகக் கருதிக்கொள்ளும் இயல்புடைய ஐரோப்பியர்கள், மேற்கூறியதைக்குறை கூறுகின்ருர்கள். தாங்கள் செய்த குற்றங்களுக்காக சிறைக்காவல் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த பல இந்தியர்கள், சென்ற ஐரோப்பிய யுத்தக்காலத்தில், போர்முனைக்குச் சென்று, தங்கள் குற்றத்திற்காக "பிராயச்சித்தம் செய்தார்கள்'' என்று கூறப்பட்டது. இது உண்மையானுல், இது

எந்தமுறையைச் சேர்ந்தது? மேற்கூறிய சூத்திரத்தை நான் வெறுக்கின்றேன். அது எனக்கு அறவே உடன்பாடல்ல. ஆனால் உலகத்தில் நடப்பதைக் கூறுகின்றேன். மேலும் இந்தியக் கூலிகளை அடித்தும் உதைத்தும் கொல்லும் வெள்ளையர்கள் பெரும்பாலும் தண்டனை பெறுமல் விடுதலை பெற்றிருக்கின்றனர். இந்தியக்கூலிகள் ஈரல் வீங்கிச் செத்தார்கள் என்றும் உதையால்சாகவில்லை யென்றும்நீதிஸ்தலத்தில் தீர்ப்புச்சொல்லப் பெற்ற விந்தைத்தீர்ப்புகளை இந்தியர்கள் அறிவார்கள். தவிர, பெரிய இடத்துக் குற்றங்கள் வெளிக்குவந்தாலும், எவ்வாறே மறைபட்டுப் போகின்றன. இதையும் இந்தியர்கள் நன்ருக அறிவார்கள்

தீண்டாதார்களுக்கு இந்த நாட்டில் நேர்ந்திருக்கும் இன்னல்கள் யாவற்றையும் மேயோ அவர்கள் அடுக்கு அடுக்காக எழுதியிருக்கிருர். அவைகள் யாவையும் எழுத்தில் காணும்பொழுது, உண்மையிலேயே நமது உள்ளத்தின் அமைதி குலேந்துபோய்விட்டது.

> "தீண்டாதார்கள் ஹிந்துக்களின் புனித நூல்களை வைத்திருக்கவும் கூடாது, வாசிக்கவும் கூடாது. அவர்கள் சிற்சில சமயங்களிற்தவிர, பிரார்த்தனைக்காக கோவிலுக்கு வரலாகாது. அவர்களுடைய குழந்தைகள் ஸர்க்கார் பள்ளிகளில் வந்து படிக்கமுடியாது. பொதுக் கிணறுகளினின்றும் அவர்கள் நீர் எடுக்கக்கூடாது. அவர்கள் நீதி ஸ்தலங்களில் நுழையலாகாது. தங்கள் நோயாளிகளுக்கு உதவியை நாடும்பொருட்டு, அவர்கள் ஸர்க்கார் வைத்தியசாலைகளில் நுழையக்கூடாது. அவர்கள் சத்திரமெதிலும் தங்கமுடியாது. சில மகாணங்களில், பொதுஜன ரஸ்தாக்களிற் சிலவற்றில் அவர்கள் நடக்கலாகாது. கடைத்தெருவிற்கு

வந்து, நேரே பேரம் பண்ணமுடியாமல், "தீண்டாத" விவசாயிகள் தங்கள் சரக்குகளுக்கு, நேரான இலாபத்தை அடைவதில்லை. சில இடங்களில், இவர்கள் பிச்சைக்காரர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு நேரே பிச்சைபோடுவதில்லை. நிலத்தில் விட்டு எறிவார்கள்."

தீண்டாதார்களுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பங்களின் ஜாப்தா வைக்கண்டு இந்தியர்கள் உளம்குழைதல்வேண்டும். இந்தக்கொடுமைகளிற் சில ஒழிந்துவிட்டன. மற்றும்பல தங்கள் கொடுமையில் குறைந்துகொண்டுவருகின்றன என்பது உண்மை. மேற்கூறிய ஜாப்தாவில் கண்டபடி இப்பொழுது அவ்வளவாக நடப்பதில்லையாயினும், அந்த ஜாப்தாவைக் கண்டு, சுயமரியாதையுள்ள ஹிந்துக்கள் நாணமடைந்து, தலைகுனிந்து கொள்ளவேண்டியதுதான். தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள். இத்தனை அவமானங்களும்—எல்லாம் ஒரு தீமையின் விளைவுகள் தான்—தங்கள் தங்கள் வகுப்பார்களுக்கு நேர்ந்தால் எவ்வாறிருக்கும் என்பதை ஹிந்து ஜனசமூக ஜாதி ஹிந்துக்கள் அனைவரும் கற்பனைசெய்தேனும் உணர்ந்து கொள்ளுதல்வேண்டும். காந்தியின் நற்போதனையாலும் காங்கிரசின் தூண்டுதலாலும் காலத்தின்தேவையைத் துணைக்கொண்டும், இந்தியர்கள் தீண்டாமையை ஒழித்துவருவதைக்காண நமது உள்ளம் குளிர்கின்றது.

மேற்கூறிய இன்னல்களுக்கு ஆளாகியும், தீண்டாதார்கள் சிறந்த உழைப்பாளிகளாகவும் யோக்கியர்களாகவும் ஹிந்துமதப்பற்றுக் கொண்டவர்களாயும் இருக்கின்றார்கள். இது யாவருக்கும்தெரியும். ஜாதிமத நிறவேற்றுமையின்றி, இவைகளைப்பற்றி சாட்சியம்கூற எல்லோரும் தயாராயிருப்

பார்கள். ஆனால் எவரிடத்தும் குற்றம் காணும் நோய் கொண்ட மேயோ எழுதுவதைப்பாருங்கள்.

"துன்பம் விதிக்கப்பெற்ற, இத்தகைய நிர்ப்பந்தங்களின்கீழ், தீண்டாதார்களுக்குள் சில கூட்டத்தார்கள் குற்றம்செய்வதைத் தங்கள் தொழிலாகக்கொண்டு, அதை அபிவிருத்திசெய்திருக்கிறார்கள். சில கூட்டத்தார் முடிச்சுமாறித்தொழிலிலும், சிலகூட்டத்தார் கொள்ளையிலும், சிலர் கள்ளக்கையெழுத்திடுதலிலும், சிலர் கன்னத்தொழிலிலும் மற்றும் பலர் கொலைத்தொழிலிலும் தங்களைப் பழக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் தங்கள் சிறப்பான தொழிலுக்கு, விபசாரத்தைத் துணைத்தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்தியா முழுதும் பரவி வசிக்கின்றார்கள். இவர்களுக்குக்குற்ற வகுப்பார் என்று பெயர். இவர்கள் நாற்பத்தைந்து இலட்சம் பேர்கள் இருக்கின்றார்கள்."

மேயோ குறிப்பிடும் குற்றவகுப்பார் தீண்டாதார்களைச் சேர்ந்தவர்களல்ல. ஆனால், தீண்டாதார்களோ, மேயோ கூறியிருக்கும் குற்றங்களையும் செய்வதில்லை. மேயோவின் மனத்தில் குழப்பமும் குறைகூறும் நோக்கமும் இருப்பதால், இவ்வாறு எழுதியிருக்கிறார் என்று கொள்ளவேண்டும். குற்றவகுப்பார் என்று கூறப்பெறும் குறவர்கள் வேறு; தீண்டாதார்கள் வேறு. ஜாதிகள் மலிந்து நிற்கும் இந்தநாட்டில், ஆங்கிலேயர்கள் குற்றவகுப்பார் என்ற புதிய தனிச்சாதியை அமைத்திருக்கின்றனர். குறவர்கள் தீண்டாதார்கள் அல்ல. அவர்கள் எங்கும் போகலாம். ஸர்க்காரின் தடையைத்தவிர, அவர்களுக்கு ஜனசமுகத் தடைகிடையாது. என்றாலும் மேயோ மேற்கூறியவாறு எழுதியிருக்கிறார். ஏதாவது எழுதவேண்டும்.

அவ்வளவுதான். தீண்டாதார்களுக்குள் இருக்கும் நாணயமும் யோக்கியப்பொறுப்பும் உழைப்பும் பிறர்க்கு உதவி புரியும் தன்மையும் போற்றுதற்குரியனவாகும்.

தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசாங்கத்தார் செய்திருக்கும் வேலைகளை மேயோ குறிப்பிடுகிறார். அவர் கூறுவதாவது:—

"இன்றைக்கு, சட்டமூலமாய்ச் செய்யக்கூடிய யாவும் தீண்டாதார்களுக்குச் செய்யப் பெற்றுவிட்டன. ஸர்க்கார் தாமே தீர்மானம் செய்யக்கூடிய அளவில், கல்வியின் அபிவிருத்திக்கும் உயர்ந்த உத்தியோகங்களுக்கும் ரஸ்தாக்களைத் திறந்து விட்டார்கள். பல நில அபிவிருத்தி, கூட்டுறவுத்திட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளைக் கொண்டு விரைவில் தீண்டாதார்கள் முன்னேறி வருகின்றார்கள்."

இவைகளிற் பெரும்பான்மை உண்மைதான். ஆனால் மேயோ இவைகளைக் குறிப்பிட்டிருப்பதன்நோக்கம் என்ன? தீண்டாதார்களுக்கு நன்மைகள் யாவும் அரசாங்கத்தாரின் மூலமாய்த்தான் ஏற்பட்டுள்ளன என்று மேயோ எழுதினால் தான், அவருக்கு உள்ளப் பூரிப்பு உண்டாகும். "அரசாங்கத்தார் இவ்வளவு செய்து விட்டார்களே, பொது ஜனங்கள் தீண்டாதார்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள்" என்று மேயோ கேட்காமலிருப்பாரா? அந்தக் கேள்வியையும் அடுத்தபடியாகக் கேட்டுமிருக்கிறார். தீண்டாதார்களின்பேரில் கருணைகொண்டிருக்கும் அதிகார வர்க்கத்தினர், ஹிந்துஜன சமூகத்தின் விருப்பத்துக்கு மாறாக, ஹிந்துஜன சமூகத்தின் நன்மையைக் கருதி சதியை ஒழித்தது போல, தீண்டாமையையும் ஒழித்திருக்கலாம். சதி என்பது உடன்கட்டை யேறுதலாகும். இந்த வழக்கத்தைத் துணிவு

கொண்டு நிறுத்தியவர்கள் தீண்டாமையையும் ஒழித்திருக்க லாம். அதிகார வர்க்கத்தினர் ஏன் செய்யவில்லை? அவர் கள் பொதுஜன அபிப்பிராயம், தீண்டாமை விலக்கைப்பற்றி வளர்வதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். தீண்டா தார்களைப்பற்றி ஜாதி ஹிந்துக்கள் நன்னோக்கம் கொண்டிரு க்கிறார்கள் என்பதை அறிந்து கொண்ட அரசாங்கத்தார், தீண்டாதார்களுக்குச் சில நன்மைகளைச் செய்திருக்கிறார் கள். எனவே, இந்த நன்மைகள் அரசாங்கத்தாரின் தனி முயற்சியின் விளைவுகளா? அல்லது ஹிந்துஜன சமூகத்தின் வளர்ச்சிபெற்ற நன்னோக்கின் விளைவுகளா? வாசக நண்பர் கள்தான் தீர்ப்புச் சொல்லவேண்டும்.

குழந்தைவாரமொன்றில் நடந்த சம்பவத்தை மேயோ குறிப்பிட்டிருக்கிறார். மேயோவும் சகோதரியும் (வைத்தி யர்) உட்கார்ந்து கொண்டிருந்தனராம். தாய்மார்கள் தாங் கள் கொணர்ந்த குழந்தைகளைக் காண்பித்துவிட்டுப் போயி னராம். அவர்களைப்பற்றி, சகோதரி பேசிக்கொண்டிருக் கையில்,

"திறந்த கதவின் முன்னே ஒரு உருவம் வந்தது. உட னே கண்ணைக் கவரும் முகமும் நேர்த்தியான தோற்ற முமுள்ள ஒரு இள மாது வந்தாள். குணமில்லாத குழந் தையை அவள் தூக்கி வந்திருந்தாள்; வாயிற்படியண்டை யே தங்கிவிட்டாள். அதற்கப்பால், உள்ளே நுழையவில்லை; புன்னகையுடன் அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். சகோ தரி மேலே நோக்கி, தாமும் புன்னகை புரிந்தாள். அவள் ஏன் உள்ளே வரவில்லை என்று நான் கேட்டேன். "அவள் வரமாட்டாள், அவள் வந்தால், ஏனையோர் வெளியே போய் விடுவார்கள்; அவள் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த

வள். உள்ளே வருவது பாபம் என்று அவளே எண்ணிக் கொள்ளுவாள்'' என்றாள் சகோதரி. "அவர்களைப்போல இவளும் நாகரிகமாகத்தானே இருக்கிறாள்'' என்றேன். "தீண்டாதார்கள் ஏனையோரைப் போல புத்திசாலிகளா யிருக்கலாம். ஆனால் இந்தியாவின் வழக்கமிதுதான். நாம் அதை மாற்ற முடியாததனால், அவர்களுக்கு உதவி செய்ய நம்மாலானவரையிலும் நாம் முயன்று, உழைக்க வேண்டும்'' என்று சகோதரி கூறினாள்.''

மேயோவின் இந்த எழுத்து, ஹிந்துக்களை உருக்கும் என எண்ணுகிறேன்.

" எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வேம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வேம்''

அத்தியாயம் 16.

'' ஒளியைப்பாருங்கள் ''

ஒளியைப்பாருங்கள் என்று தீண்டாதார்கள் கூறினார்களாம். எப்பொழுது என்றும் அந்த ஒளி யார் என்றும் நண்பர்களுக்குத் தெரியுமா? இந்தியாவினின்றும் தீண்டாமையை வெருட்டியடித்துவரும் காந்தியைத் தீண்டாதார்கள் மேற்கூறியவாறு வாழ்த்தியிருக்கலாம் என்று வாசக நண்பர்கள் மனக்கோட்டை கட்டியிருக்கலாம். வேல்ஸ் இளவரசன் இந்தியாவுக்கு வந்திருக்கையில், அவரைப்பார்த்துத் தீண்டாதார்கள் இவ்வாறு கூறினார்களாம். இளவரசன் பேரில், தீண்டாதார்களுக்கு அவ்வளவு அன்பு என்று உல

கம் கருதவேண்டுமாம்! நன்ருகக்கருதட்டும். அதில் நமக்கு யாதொரு ஆட்சேபமும் இல்லை. இளவரசர் இந்தியாவுக்கு வரவழைக்கப்பெற்ற காரணத்தையும், அவர் இந்தியாவில் வரவேற்கப்பெற்ற வகையையும் இளவரசனுடைய இந்திய சுற்றுப்பிரயாணத்தை எளிதும் இனிதும் ஆக்குவதற்காக, ஒத்துழையாமைக்காலத்தில் ரீடிங் பிரபு காந்தியினிடம் ராஜி பேசியதையும் இந்தியர்கள் இதற்குள் மறந்திருக்கமுடியாது. சம்பவம் நடந்து சுமார் எட்டு ஆண்டுகள்தானே ஆகின்றன? அவ்வளவு விரைவிலே, ஜனங்களுக்கு மறதி வந்திருக்கக் கூடுமா? இந்தியாவில் எதுவும் சாத்தியம் என்று மேயோ எண்ணிக்கொண் டிருக்கவேண்டும். இல்லாவிடின், இந்த நூலை, இந்த முறையில் அவர் எழுதத்துணிந்திருப்பாரா?

"இப்பொழுது 50 இலட்சம் கிருஸ்தவர்கள் (தீண் டப்படாத வகுப்பிலிருந்து சமய மாறியவர் உள்பட) இந்தியாவில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தத்தொகையைப்பற்றி அபிப்பிராயபேதம் இருக்கிறது. ஆனல் இவர்கள் மதமாறியவுடன், ஜாதிவிலங்குகளினின்றும் விடுபட்டு, சுதந்திரர்களாகின்றனர். இவர்களைக்கண்டு ஹிந்துக்கள் தங்கள் முகங்களை சுளித்துக்கொள்ளுகிருர்கள். சமயம் மாறி, மூன்ருவது தலைமுறை வந்தால், அவர்கள் போற்றப்படுகின்றனர். அவர்களால் தான் இந்தியா முன்னேறும் என்று கூறும் ஜனங்களிற் பலரை நான் பார்த்திருக்கிறேன்."

இந்த எழுத்திலேயிருக்கும் குறும்புத்தனத்தை நேயர்கள் உணர்ந்து கொள்ளாமலிருக்கமுடியாது. ஹிந்துக்கள் இந்தியக்கிருஸ்தவர்களை வெறுக்கின்ருர்களாம்! எதற்காக

வெறுக்கவேண்டும்? சீனாவில் இப்பொழுது நாட்டின் விடுதலைக்காகப் புரட்சியில் பெரும்பாலும் ஈடுபட்டிருப்பவர்கள் சீனக்கிருஸ்தவர்கள். அவர்களைக்கண்டு ஏனைய சீனர்கள்—அவர்களுடைய மதம் எதுவாயினும் சரியே—பொறாமையும் வெறுப்பும் கொள்ளுகின்றார்களா? தாங்கள் உண்ண நினைத்த இரை தங்கள் கைதப்பிப்போய்விட்டதே என்று ஹிந்துக்கள் வருந்துகின்றார்களா? கிருஸ்தவர்களைக்கண்டு, ஹிந்துக்கள் வெறுப்புடன் நோக்கவில்லை என்பதற்கு அத்தாட்சியும் வேண்டுமா? காங்கிரசைக் கண்டவர்களில் ஒருவரான W. C. பானர்ஜி அவர்களை காங்கிரசின் தலைவராக, எத்தனை தரம் இந்தியர்கள் ஏற்றார்கள் என்பது நண்பர்களுக்குத் தெரிந்திருத்தல்வேண்டும். பானர்ஜி அவர்கள் இந்தியக் கிருஸ்தவர். கிருஸ்தவர் என்ற காரணத்தினால் மட்டும், இந்தியக் கிருஸ்தவர்களிடம் ஹிந்துக்களுக்கு வெறுப்பு இருக்கமுடியாது. வெறுப்பு இருப்பின், அதற்கு வேறு காரணம் இருத்தல் வேண்டும். ஜாதிக்கு அடிமையாயிருப்பதை ஒழித்துக்கொண்ட கிருஸ்தவர்கள் ஏனையோருக்குப் புதிதாய் அடிமைப் படுவார்களானால், அதனால், ஹிந்துக்கள் மனம் வருந்தாமலிருக்க முடியுமா? மனவருத்தம் வேறு; மனவெறுப்பு வேறு. பொதுக்குடும்பத்திலிருந்து பிரிந்துகொண்டு வாழும் மைந்தனுடைய புதிய பரிதாப நிலையைக்கண்டு, பெற்றோர்கள் வருத்தமடைவது இயல்பு தான்.

"இந்தியாவின்பேரில் சுமத்தப் பெற்றிருக்கும் பிரிட்டிஷ் முறைகள் தீயவை என்று எவ்வளவு பலமாகக்கண்டிக்கின்றேனோ, அவ்வளவும் அதைக் காட்டிலும் அதிகமாகவும் நான் தீண்டாமையைக் கண்டிக்கின்றேன். ஆங்கில ஆட்சி

யை நான் சகித்துக் கொண்டிருந்தாலுமிருப்பேன் ; ஆனால் தீண்டாமையை என்னால் சகித்திருக்கவே முடியாது. ஹிந்துமதம் தீண்டாமையை அணைத்துக் கொண்டிருந்தால், ஹிந்துமதம் இறந்து பட்டுப்போய் விடும்",

என்று காந்தி கூறியிருப்பதை, மேயோ எடுத்துக் காண்பித்திருக்கிறார். இந்தப்பகுதிக்காக, மேயோவுக்கு ஹிந்துக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். தமது உயிரைக் கொடுத்தும் தீண்டாமையை நீக்க அரும்பாடுபட்டு வரும் காந்தியை இது சம்பந்தமாகவேனும் மேயோ போற்றக் கூடாதா ? தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று அதிகாரத்துடன் அப்பொழுது கூறிய செல்வாக்கு,இப்பொழுது காந்திக்குக்கிடையாது என்றுமட்டும்மேயோ, குத்துதலாகக்கூறுகின்றார். மாண்டேகு சீர்திருத்தத்திற்குப்பின்னர், இந்தியாவில் உத்தியோகங்கள் இந்தியமயமாகி வருவதால், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பொறாமையதிகமாகி, அவ்விருகூட்டத்தாரும் தீண்டாதார்களைத் தத்தம் இனத்தில் சேர்த்துக்கொள்ள முயன்றுவருகிறார்கள் எனக் கூறுகின்றார் மேயோ. போட்டியோ பொறாமையோ, எதுவாயினும் சரியே, தீண்டாதார்கள் இந்திய உணர்ச்சியுடன் பழக்கவழக்கங்களை மேற் கொண்டுவாழும்வரையில், அவர்கள் எந்தசமயத்தைத் தழுவிவாழ்ந்தாலும் பாதகப்படாது. ஆனால் வயிற்றுக் கஞ்சியின் பொருட்டு ஆன்மாவை மறக்கும், விற்கும் இந்தியன் எவனாயினும் சரியே, அவன் துரோகியாவான்.

மேனாட்டு நாகரிகத்தைக் கொண்ட அந்நியர்கள் தீண்டாதார்களுக்கு செய்த நன்மைகளின் விளைவுயாதெனில், அதை நண்பர்கள் மேயோவின்வாய மொழியால் தெரிந்து கொள்ளட்டும்.

"வினோதமான, புதிய, அன்னிய அனுதாபத்தால் தூண்டப் பெற்ற தீண்டாதான், தன்னுடைய சமயப்பதவியை, நிதானமாய் ஜாதி ஹிந்து நிதானிக்கிறவரையில் இனிக் காத்துக்கொண்டிருப்பான் எனத் தோன்ற வில்லை. சகோதர தத்துவத்தைக் கொண்ட இஸ்லாம், பூரண உரிமைகளையும் கொடுத்து அவனைத் தன்னகத்தே சேர்த்துக் கொள்ளத் தயாராயிருக்கின்றது. கிருஸ்தவ சமயம் அவனைக் கூவியழைப்பது மல்லாமல், அவனுக்குக் கல்விபோதித்து, உதவியும் செய்யும். எந்த நேரத்தில் அவன் (தீண்டாதான்) இஸ்லாத்தையோ அல்லது கிருஸ்தவ மதத்தையோ சேருகின்றானோ, அந்த நிமிஷமே, அவன் தனது அவமானத்திலிருந்தும் விடு படுகின்றான். பலநூறு ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு வந்த ஒருவனுக்கு, தூசியைத் துடைத்து விட்டு, நிமிர்ந்து நிற்கப் போதியதுணிவும் ஊக்கமும்வர எவ்வளவு காலமாகும் என்பதுதான் கேள்வியாகும்."

மேயோகூறியிருப்பது உண்மையிலும் உண்மையாகும். இந்த உண்மையில் ஹிந்துக்களுக்கு பயமுறுத்துதலும் ஏனையோர்களுக்கு முன்னெச்சரிச்கையும் அடங்கியுள்ளன. "ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இந்தியாவில் வலுத்து நிற்கும் இரண்டு கூட்டத்தார்கள். எந்தப்பக்கம் தீண்டாதார்கள் சேருகின்றார்களோ, அந்தக்கட்சி மிகுந்தசக்தியை அடைந்து வரும்" என்று டாக்டர் மூஞ்சே அவர்கள் கூறியிருப்பதை இங்கு குறிப்பிடுகின்றோம். ஆள் பலமில்லாத கூட்டத்தாரை, உலகத்தில் எவரும் மதிக்கமாட்டார்கள். கடவுள் இருக்கிறார் என்று தொந்தியைத்தடவி ஏப்பம் விடும் வைதிக ஹிந்துக்களுக்கு, மேற்கூறியதைப் பற்றிக் கவலையில்லாமலிருக்கலாம். ஆனால் தேசபக்த ஹிந்துக்கள் விழித்துக்கொண்டு,

தக்கன செய்தல் வேண்டும். நடந்த நிகழ்ச்சியொன்றை, அவர்களுக்கு எடுத்துக் கூறுவோம். பின்னால் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சி நேர்ந்து சுமார் எட்டு ஆண்டுகளிருக்கும். நிகழ்ச்சி வருணித்து எழுதப் பெற்றிருக்கிறது. அதிலே பல உண்மைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகள் யாவையும் தேசபக்தியும் சமயப்பற்றும் ததும்பும் ஹிந்து இளைஞர்கள் ஊன்றிக் கவனிப்பார்களாக!

"நாங்கள் ஒரு ஊருக்குப் புறப்பட்டோம். ரயிலடி வந்து சேர்ந்தோம். டிக்கெட்டு கொடுத்தார்கள். வாங்கிக் கொண்டோம். ஆனால் காசு கொடுத்தோம். டிக்கெட்டின் காதும் கிள்ளப்பெற்றது. ரயில் வண்டி வந்து நிற்கிற இடத்துக்குச் சென்று, சற்றும்மட்டு மரியாதை யில்லாமல் போகிற வருகிற பாதையிலே, இடத்தை யடைத்துக்கொண்டு. தாராளமாக உட்கார்ந்து கொண்டோம். "கதர் கட்டிக் கொண்டவர்களுக்கு சற்றும் கௌரவம் கிடையாது" என்று ஒருவர் முணு முணுத்துக் கொண்டுபோனார். எங்களில் ஒரு வருக்குப் பாம்புச்செவி. இடி யொலியைப்போல அவர் நகைப்பை வெளியே விட்டார். கதர்ப்பேர்வழிகளுக்கு அடக்கமும் இல்லை யென்று எவரேனும் சொல்லுவார்களோ என்ற அச்சம் எனக்கு உண்டாயிற்று.

"எங்களுக்கு மூட்டை தொந்திரை இல்லை. ஆள்கனம் அவனவனோடு. நாளைய உடை இடுப்பிலே; நாளைப்பணம் மடியிலே, நாளைய நடை காலிலும் மனத்திலும். பிரயாணிகளுக்குப் பொதுவாகப் பெருமை கொடுப்பதான மூட்டையில்லையே யென்று நாங்கள் வருந்தவுமில்லை. அடிமை மூட்டைதான் இந்தியன் தலையில் சுமையாக நிற்கின்றதே!

"ரயில் வண்டி மகாத்மா காந்திதான். அது வரும் வழியை எவ்வளவு காலம் ஜனங்கள் பார்த்துக் கண் பூத்துப் போகின்றது! பக்கத்திலே ஒரு எஞ்சின் திருட்டு ஒலி செய்தது. பிரயாணிகள் திடுக்கிட்டு எழுந்தார்கள். பேரறிவாளியான ரெயில் போர்ட்டர், "என்ன அவசரமோ" என்று கண்டித்தான். போர்ட்டரைத் திமிர்ப்பார்வை பார்த்தார்கள் சிலர். சிறிது நேரத்திற் கெல்லாம், நாகரிப் புகையை வெளியே கக்கிக்கொண்டு, ரயில் வண்டிவந்து சேர்ந்தது. மரணகாலத்தில், இவ்வாறு தானே, மனிதர்கள் மூச்சை வெளியே கக்குகின்றார்கள்? புகைவண்டி நிலயத்தைக் கண்டதும், எஞ்சினுக்கு உயிர் அடங்கிப்போகுமல்லவா? "உட்காரும் இடத்தை முதலிலே சம்பாதித்துக் கொள்ளுவோம்; பின்னர் மற்றைய பேச்சுக்கள்" என்று எங்களில் ஒருவர் சொன்னார். "நம்மை ஏற்றிக்கொள்ளாமல், வண்டி நகராது" என்று வெகு அமரிக்கையுடன் பாம்புக்காதர் விடைபகர்ந்தார்.

"இடத்துக்கு நாங்கள் தொல்லைப்படவில்லை. பதினாறு பேர்கள் உட்காரக்கூடிய அறைகளில் இரண்டு, காலியாக எங்கள் முன்னே சாந்தமாக வந்துநின்று, எங்களைக் கண்ணைக் காட்டி அழைத்தன. "கண்ணொடு கண் நோக்கின்," முடிவுதான் உங்களுக்குத் தெரியுமே! அறைக்குள் நாங்கள் நுழைந்தோம். எங்களுடன் வேறு இருவரும் நுழைந்தார்கள். ஒருவருக்குக் காதிலே வைரக்கடுக்கன், விரலிலே பச்சைக்கல் மோதிரம், கையில் வெள்ளிக் குமிழ்வைத்த பிரம்பு, மேலே விலையுயர்ந்த அல்பாக்கா சட்டை, அதற்கு மேலே விலைபெற்ற அங்கவஸ்திரம், இடுப்பிலே 9000 கிளாஸ்கோ மல். நாகரிகமான தோல்பை ஒன்றையும்

கொண்டு வந்திருந்தார். இவர் முகத்தில் விபூதி அலங்காரம் செய்திருந்தது. வந்த மற்றவர் பட்டை நாமத்துடன் உள்ளே நுழைந்தார்.

“பக்கத்து அறைகாலி; சந்தடியும் அதிகமாயில்லே, அந்த அறையாருக்குப் போட்டிருக்கிறதோ” என்று நாமக்காரர் தத்துவம் திருவாய் மலர்ந்தருளினர். “இங்குமா, இதிலுமா விதிவரவேண்டும்” என்ருர், பாம்புச் செவித்தோழர். “அவனன்றி ஓரணுவும் அசையாது” என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு நாமதாரி தமது தத்துவத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார்.

“இதற்குள் சிறிய கூட்டமொன்று பக்கத்து அறைக்கு வந்து சேர்ந்தது. தம்பூர், மிருதங்கம் முதலிய இசைக்கருவிகளைத் தூக்கிக்கொண்டு, மஸ்லின் ஜிப்பா அணிந்திருந்த ஒருவன், வண்டியிலேறினன். அவன் பின்னே சிறு கூட்டம். கூட்டம் கச்சேரிக்கு—நீதிஸ் தலத்துக்கல்ல—சங்கீதக் கச்சேரிக்குப்போய்த் திரும்பி வருகின்ற கூட்டமென்று சொல்லவும் வேண்டுமோ? மஸ்லின் ஜிப்பா மனிதன் நீங்கலாக, கூட்டத்திலிருந்தவர்களின் தொகை நான்கு. அவர்களில் ஒருவர் ஆண்பிள்ளை. மற்றைய மூன்று பேர்களும் பெண்பிள்ளைகள். மூன்று பேர்களிலும், ஒருவர் வயது சென்றவர். மற்றைய இருவரும், வயது வந்து சில ஆண்டுகளேயானவர்கள். இளமாதர்களில் ஒருவள் எலுமிச்சம்பழம்; மற்றவள் கசப்பு நார்த்தை. கிழவிக்குக் கன்னம் சுருங்கிப் போய்விட்டது. நார்த்தையும் எலுமிச்சையும் எவ்வாறு இருக்கின்றனர்? காதிலேகல், மூக்கிலேகல், விரல்களிலே கல்—எல்லாம் வைரக் கல்; இவர்களின் உறவைகாடுபவர்களின் தலையில் பாறைக்கல் என்று சொல்லவும் வேண்டுமோ!

கைகளிலே பம்பாய், குஜராத்தி, கல்கத்தா, சென்னை—இன்னும் பெயர் தெரியாத ஊர் வளையல்கள். கோணல் வளையல், நேர் வளையல், சக்கர வளையல், விதவிதமான வளையல்கள். மார்பிலே எத்தனை நகைகள்? கம்பன் வருணிக்கலாம்; அல்லது பாரதியார் வருணிக்கக்கூடும். இவ்வளவோடு ஒரே இடத்தில் தரிக்காத பார்வை.

"இவர்கள் யாவரும் தங்கள் இருப்பிடங்களில்அமர்ந்து கொண்டதும், அந்த விபூதிமனிதன் தனது தொண்டையின் சோழையை அறுத்தெறிய, சிறிது இருமினர். நாமதாரி அடுத்த அறையைப்பார்த்த வண்ணமாய், "கோவிந்தா, வாசுதேவா" என்று புலம்பிக் கொண்டிருந்தார். தோழர் பாம்புச் செவியர் எனது தொடையில் தாளம் போட்டுக் கொண்டு, பாடத்துவக்கி விட்டார். மற்றைய தோழர், இப்படி அப்படிப் பார்ப்பதும், பார்த்த பின்னர் தலை குனிந்து கண்களைக்கீழேபோட்டுக் கொண்டு மிருந்தார். கிழவியோ, அணிவகுத்து நிற்கும் சிப்பாய்களுக்குக் கட்டளையிடுவது போலப்பார்த்துக் கொண்டிருந்தாள். கச்சேரிக் கூட்டத்தாரின் தொழிலைக் கூறவும் வேண்டுமா?

"தாசிக்கிழவி சொல்லுகிறாள்:—"நடேசா என்பூசைப் பெட்டி எங்கே? மறந்து விட்டாயோ? அது உனக்குத் தேளைப்போல. உனக்குக் கடவுள் என்ற நினைவு இருந்தாலல்லவோ?" இவ்வாறு பேசிய கிழவி, கடவுள் என்ற சொல்லைச்சற்று அழுத்தமாகச்சொல்லி, எங்கள் பக்கமாகத் திரும்பிப்பார்த்தாள். "தாசிக்குக்கடவுள் கூடவா" என்று பாம்புக்காதர் முணுமுணுத்தார். "நீங்கள் எல்லோரும் மகாத்மா காந்தி வழி போலிருக்கிறது" என்று எங்களைப் பார்த்துத்தாய்க்கிழவி உபசாரக்கேள்வி கேட்ட பின்னர்,

"எங்கள் வீட்டிலும் ராட்டையிருக்கின்றது. அதைத் தினசரி அரை நாழிகையேனும் சுற்றுமல், பங்க ஜாட்சி (எலுமிச்சையின் பெயர்) போஜனம் சாப்பிடுவதில்லை. என்னமோ அதை அவள் நியமமாக வைத்துக் கொண்டிருக்கிறாள்" என்று வெற்றிக்குரலுடன் பேச்சைமுடித்தாள்.

"தங்கள் தொழிலை விட்டுவிடும்படி எத்தனை தாசிகளை மகாத்மா தூண்டி விட்டார்" என்றார் நாமதாரி. குமிழ்த் தடிப்பேராள் தனது சட்டையை கணுக்கையினின்றும் ஒதுக்கி, ஒதுக்கி இமைப்பொழுதிற் கொருதரம் மணிபார்த்துக்கொண்டிருந்தார். "காந்திமகாத்மா; அவரால்எதைத் தான் செய்யமுடியாது" என்று கிழவி வாழ்த்துக் கூறினாள். "அவ்வாறானால், உங்களைச் சேர்ந்தவர்களனைவரும் தாசித் தொழிலை விட்டுவிடலாமே" என்று கடிந்து கூறுவதைப் போல பாவனை மட்டும் காட்டி "பாம்பர்" கேட்டார். "பரம்பரைத்தொழில்; அதை எவ்வாறு விடுகிறது" என்றாள் கிழவி. கோதைகளிருவரும் "கொலை" ப்பார்வை பார்த்தனர்.

"காந்தி தீண்டாமையை ஒழிக்கச் சொன்ன மதியீனத்தைப்பற்றி, நாமதாரி பிரசங்கமழை பொழிய ஆரம்பித்தார். கொடுமை கொண்ட சொற்களை வெளியேகக்கினார். ஒவ்வொரு வாக்கியம் முடிந்ததும், ஆதரவுக்காகக் கச்சேரிக் கூட்டத்தாரையும் கைக்கடியார நண்பரையும் நாமதாரி பார்த்த வண்ணமாயிருந்தார். "அவனவன் இருக்க வேண்டிய நிலையில் அவனவன் இருக்கவேண்டும்" என்றார் குமிழ்த்தடி நண்பர்.

"இதற்குள் வண்டி நின்றுவிட்டது. சில தீண்டாதார்கள் உள்ளே நுழைய வந்தார்கள். உடனே, பட்டை

நாமமும், கட்டு விபூதியும் மினுக்குதாசிகளும் ஒரு அறையில் கூடிக்கொண்டார்கள். ஏழைப்பஞ்சமர்களை, காந்தி வழிநின்ற இளைஞர்கள் ஆவலுடன் ஏற்றுக் கொண்டார்கள். கதர்த் தொண்டர்களும், குழந்தையைக்கட்டி யணைத்து உயிர்ப்பாலூட்டும் ஏழைப்பஞ்சம சகோதரியும் சகோதரர்களும்கூடிக் கலந்து கொண்டார்கள். மணியும் அடித்தது; ரயிலும் புறப்பட்டது. இடியும் விழவில்லை. பிரளயமும் தோன்றவில்லை.''

மேற் கூறியது நடந்த சம்பவம். பழைய ஹிந்துஸ்தானத்திலிருந்து, புதிய இந்தியாவைக் காந்தியின் தத்துவ தரிசனம் எவ்வாறு படைத்து வருகின்றது என்பதை நண்பர்கள் உணர்வார்களாக! மேயோவின் எழுத்தைக்கண்டு, ஹிந்துஜனசமூகமே அழிந்துபோகுமோ என்று எவரும் உளம் குழையவேண்டிய தில்லை. சிரத்தானந்தர் வீழ்ந்த பின்னர், காந்தியின் அன்பொழுகு தத்துவம் ஹிந்துக்களின் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டபின்னர், இந்தியாவின் தேசபக்த இளஞ்சிங்கங்கள் விழிப்புப்பெற்று, தக்கன செய்யத்தயாராயிருக்கையில், ஹிந்து ஜனசமூகம் அழிந்துபோய் விடமுடியாது. அடிமைச் சமூகத்துக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள்யாவும் ஹிந்து சமாஜத்துக்கு நேர்ந்தபின்னர், ஹிந்து நாகரிகம் அழிந்துபோகமுடியாது. அழிந்துபோகும் என்று அன்னியர்கள் சாபம் கொடுப்பதை விருப்புடன் ஏற்காதவரையில், ஹிந்து சமூகம் அழிந்துபோகும்படி இளைஞர்கள் விடமாட்டார்கள் என்பது நமது உறுதியாகும். நாம் குறிப்பிட்டிருக்கும் நிகழ்ச்சியிலல்லவா, "ஒளியைப் பாருங்கள்'' என்று மேயோ கூறியிருத்தல் வேண்டும்?

சென்னை பஞ்சமக்கல்வி அபிவிருத்தி சங்கத்தார் கீழ்க் கண்டவாறு இந்திய மந்திரி மாண்டேகுவிடம் மனுப் பண்

ணிக்கொண்டார்களாம். ஹிந்து சமூகத்தார் தலைகுனிந்து கொண்டு, கேட்கவேண்டிய பகுதியை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம்.

"நாங்கள் (தீண்டாதார்கள்) சுயராஜ்யப் பிரசாரத்தைப பலமாகக் கண்டிக்கின்றோம், எதிர்த்துநிற்கின்றோம் என்று நாங்கள் சொல்லத்தேவையில்லை. ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து, எங்களைப்பண்டைக்காலத்தில் மிகுதியும் துன்புறுத்திய, (ஆங்கிலச் சட்டங்கள் இல்லாமற் போயின், மீண்டும் எங்களுக்குக் கொடுமை இழைக்கப்போகும்) ஜாதி ஹிந்துக்களிடம் இந்த நாட்டின் அரசியலை மாற்றிக்கொடுக்கும் முயற்சியை எங்கள் இரத்தத்தின் கடைசித்துளிவரைக்கும் எதிர்த்துப் போராடுவோம். ஆங்கிலேயர்கள் இருக்கையிலேயே, எங்களுடைய உரிமைகள் ஹிந்துக்களால் மதிக்கப் பெறுவதில்லை. நாட்டின் அரசியல் நிர்வாகம் ஹிந்துக்களின் வயம் வந்துவிட்டால், அவர்கள் எங்கள் நலன்களை எவ்வாறு அபிவிருத்தி செய்வார்கள்?"

இத்தகைய சந்தேகம் ஜாதி ஹிந்துக்களின் பேரில், தீண்டாதார்கள் கொள்ளுவதற்கான நிலைமை ஏற்பட்டது வருந்துவதற் குரியதாகும். சென்றதைக்குறித்து வருந்துதல் கூடாது. இனி நிலைமையைச்சீர்செய்து கொள்ள, இந்தியர்கள் அனைவரும் வேண்டுவன செய்தல்வேண்டும். தாங்கள் சுயராஜ்யப் பிரசாரத்தை எதிர்த்துநிற்கின்றோம் என்று ஆதித்திராவிடர்கள் மேலே குறிப்பிட்டிருப்பதற்கு, அவர்களுக்குப் பொருள் விளங்கவில்லைபோலும்! தங்களுக்கு சுயராஜ்யத்தில் விருப்பமில்லை என்று கூறும் ஆதித்திராவிடர்கள் தங்கள் "ஹிந்து எஜமானர்களை" மட்டும் மாற்றிக்கொண்டு, மற்றைய எல்லா அம்சங்களிலும் அடிமைகளா

17

கத்தான் வாழ உளங் கொண்டார்கள் போலும்! இந்தக் கருத்துக்காக, அவர்களை அவர்களுடைய பின் சந்ததியார்கள் வாழ்த்தமாட்டார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"சமூக, பொருளாதாரத் துறைகளில் எங்கள் நிலைமை அபிவிருத்தியடையப் பெற்றுவருவது ஆங்கில ஆட்சிக்குப் பின்னர்தான். அதற்கு ஆங்கில ஆட்சிதான் காரணமாகும். இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷார்கள்——அரசாங்க உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், இறுதியாகக் கிருஸ்தவப் பாதரிமார்கள்————எங்களிடம் அன்பு கொண்டிருக்கின்றார்கள். நாங்களும் அவர்களிடம் அன்புகொண்டிருக்கின்றோம்."

இது மனுவில் காணப்பெறும் மற்றுமொரு பகுதியாகும். இதையும் ஜாதி ஹிந்துக்கள் கருத்துடன் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். ஆனால் இது சம்பந்தமாக, மனோ தத்துவ மர்மம் ஒன்றை நண்பர்கள் அறிந்து கொள்ளுதல் நலமாகும். இளவயதுள்ள, நேர்த்தியான கட்டழகி ஒருத்தி இருக்கின்றாள். அவளுடைய கணவன் குடிகாரன் என்று வைத்துக் கொள்ளுவோம். குடிகாரனானதால், அவன் தனது மனைவியைத் துன்புறுத்தி, அடிக்கக்கூடும். அவன் மூலமாய், அந்தப் பெண் யாதொரு நலனும் இன்பமும் பெறுவதற்கு வழி இருக்க முடியாது. இந்த நிலையில் இதை அறிந்த பெற்றோர்கள், "அம்மா! அந்தக் கொலை பாதகன் உன்னை அடித்துத் தொந்திரை செய்கின்றானமே! அந்தப் பாவி எங்கே? நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை, கவலைப்படவேண்டியதில்லை. மிஞ்சிப் போனால், உன்னை வீட்டிற்கு நாங்கள் அழைத்துக்கொண்டுபோய் சில

காலம் வைத்திருந்து, அவனுக்கு புத்தி புகட்டுவோம்" என்று சொல்லக்கூடும். ஆனால் கட்டழகியின் மூலமாய் "இன்பசாகர லீலை"களை அனுபவிக்க எண்ணிய இளைஞன் குடிகாரக் கணவன் வீட்டிலில்லாத சமயம்பார்த்து, உள்ளே நுழைந்து, கணவனுடைய நண்பனைப்போல பாவனை செய்து "ஆகா! என்ன கொடுமை! எனக்கு இதுவரையிலும் இந்த சங்கதி தெரியாது. ஏதோ குடிக்கிறான் என்று மட்டும் நான் எண்ணியிருந்தேன். மிருகத்தைப்போல அவன் உன்னிடம் நடந்து கொள்கிறான் என்ற சங்கதி நேற்றுத்தான் எனக்குத் தெரியும். உன்னை "அடியோ தண்டமாய்" அவன் அடித்துத் தொந்திரை செய்வதை, பக்கத்து வீட்டுக்காரர்கள் சொன்னார்கள். இன்று நானும் என் கண்களால் சில சங்கதிகளைக் கண்டுகொண்டேன். இல்வாழ்க்கை இன்னதென்று அறியாதவனுக்கு மனைவி எதற்காக? முல்லை மலரின் அருமை மங்கைக்குத் தெரியுமா, மடையனுக்குத் தெரியுமா? அப்ஸர கன்னியை அசடன் அறிவானா? கண்ணில் ஒற்றிக்கொள்ள வேண்டியதைக் கசக்கி நுகர்ந்து பார்க்கலாமா? பஞ்சத்தில் விலைக்கு வாங்கின பெண்ணைப் போல இருக்கிறாயே? உனக்கு நகையே இல்லை போலிருக்கிறதே! ஆகா! என்ன பாபம்! உன்னுடைய ஆடையும் கிழிந்து கந்தலாய்ப்போக வேண்டுமா? உனது இளமை இப்படி வீணாகவும் போகவேண்டியதில்லை" என்று அடுக்கிக்கொண்டு போனால், அந்தச் சொற்களை அனுதாப இனத்தில் சேர்ப்பதா? அல்லது அக்கிரமக் குப்பையில் தள்ளுவதா?

"இந்தக் கேவலமான தீண்டாதார்களின் துயரத்தைக் கண்டும் இத்தனை நூற்றாண்டுகளாக, எவரும் அவர்களைப் பற்றி எண்ணினதே யில்லை; உதவியும் செய்ததில்லை"

என்று மேயோ கூறியிருக்கிறார். இந்தியன் எவனும் தீண்டாதார் கலியை நீக்க முன்வந்ததில்லை எனச் சரித்திரம் கூறுவதாக மேயோ குறிப்பிட்டிருக்கிறார். அவதூறு எழுதப் புறப்பட்டிருக்கும் மேயோ, சரித்திரத்தைப் பற்றிப் பேசவும் வேண்டுமா? இந்துதேச சரித்திரத்தை அவர் நேரே படிக்கவில்லை என்று நாம் உருசுப்படுத்துவோம். அன்னியர்களுக்குத் தீண்டாதார்களிடம் எந்தத் துறைகளில் அனுதாபம் சென்றிருக்கிறது? அன்னியர்கள் தீண்டாதார் களைக் குசினிக்காரர்களாக, வேலைக்காரர்களாக வைத்துக் கொள்ளுகிறார்கள். தீண்டாதாரர்களின் குணவிசேஷங் களில் அவர்களுக்கு நம்பிக்கை உண்டா? தீண்டாதார்களை முன்னேற்ற வந்த புண்ணிய சீலர்கள் என்று தங்களை அன் னியர்கள் அகம்பாவத்துடன் நோக்கி வருகின்றார்கள். ஆனால் பரம்பரையாக ஒடுக்கி வருகின்றார்கள் என்ற பழிப் பெயர் எடுத்த ஜாதி ஹிந்துக்கள் தீண்டப்படாத நந்தனாரை அறுபத்து மூவர்களில் ஒருவராக மதித்து, கோயிலில் வைத்துக் கும்பிடுகின்றார்கள். திருப்பாணர் வைணவர்களால் ஆழ்வாராகக் கருதப்பெற்று, அர்ச்சனை செய்யப் பெறுகின்றார். "கொடுங் கோலர்களான" ஹிந்துக்களின் மனப்பான்மையையும், பரிந்து பேசும் அன்னியர்களின் மனப்பான்மையையும் பற்றி, இதை விட விரிவாகக் கூறுதலும் வேண்டுமோ? தீண்டாதார்களுக்கு உதவி செய்ய—அன்னியர்களைத்தவிர இந்தியாவில் எவரும் இதுவரையில் முன் வந்ததில்லை என்று மேயோ கூறும் பொய்யைக்கிழித்து உலகத்தாருக்குக் காண்பிக்கவல்ல வாழ்வை ஸ்ரீ ராமானுஜர் வாழ்ந்திருக்கிறார். தீண்டாதார் என்ற பெயரை மாற்றி, அவர்களைத் "திருக் குலத்தார்" என்று அழைத்த பெருமையும் பெயரும் புண்

ணியமும் ஸ்ரீ ராமானுஜனைச் சேர்ந்ததல்லவா? இந்நாளில் தீண்டாதார்களுக்கு ஆலயப் பிரவேசத்தின் பொருட்டுப் போராடி வரும் சீர்திருத்தக்காரர்களுக்கு, ஸ்ரீ ராமானுஜன் வழி காட்டியாயிருக்க வில்லையா? சரித்திரத்தை நேரே தெரிந்துகொள்ளாமல், இதை எழுதினுமோஎன்று மேயோ வருந்துவாரா? "வித்தகமாய்க் காதி விளையாடி இருகை வீசி வந்தாலும், தாதி மனம் நீர்க்குடத்தேதான்" என்பது போல, எந்த நிகழ்ச்சியை எடுத்துக் கூறினாலும், அதனிறுதியில்மேயோ ஹிந்துக்களைக்குறை கூறி முடித்து விடவேண்டும். பணத்துக் கேற்ற பாட்டும் பாடமும் படிக்கவேண்டாமா மேயோ? இந்தியா ஆபீசின் ஆசீர்வாதத்தைப்பெற்ற மேயோ, அதை இழக்காத முறையிலேதானே, எழுத்தை எழுதுவார், எழுத முடியும். வேல்ஸ் இளவரசன் இந்தியாவுக்கு வந்தபின்னர்தான், "ஒளி" எழுந்தது என இனியும் எவரும் கொள்ளுதல் கூடுமா?

வேல்ஸ் இளவரசனைத் தீண்டாதார் உபசரித்த முறையை, மேயோ பெருமகிழ்ச்சியுடன் வருணித்திருக்கிறார். இளவரசன் சென்ற விடங்களிலெல்லாம் தீண்டாதார்கள் பெருங் கூட்டமாகக் குழுமிக் கொண்டார்களாம். தீண்டாதார்களைத்தவிர, ஏனைய இந்தியர்கள் இளவரசனை வரவேற்கவில்லை என்பது தெளிவு. மேயோவும் இதை ஒருவாறு ஏற்றுக் கொண்டிருக்கிறார். இளவரசனுடைய முகத்தைக்காண ஆவலுடன் பல இடங்களிலிருந்து தீண்டாதார்கள் குழுமிக் கொண்டார்களாம்! இது மனித இயல்பு. தனவந்தன், இளவரசன், கவர்னர், வைஸிராய், புலவன், மகாத்மா, மன்னன், சித்திரக்குள்ளன், மூக்கை படைத்தோன், கொம்பு முளைத்தவன், பித்துக் கொண்டவன், நாடகக்காரி—இவர்களில்

எவர் வருவதாய்க் கேள்விப்பட்டாலும் ஜனங்கள் கூடிக்கொள்ளுவார்கள். இவர்களுடைய "முகதரிசனம்" கிடைப்பதற்கு, வெயிலில் ஜனங்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். இது யாவரும் அறிந்த விஷயம். முதலாவது, சார்லஸ் என்ற மன்னனை ஆங்கிலேயர்கள் கொன்றுவிட்டார்கள். சில ஆண்டுகள் மன்னனில்லாமல், ஆங்கில நாட்டில் ஆட்சி நடை பெற்றது. புதியஆட்சி முறை நன்மை பயப்பதாயினும், ஜனங்களுக்கு மன்னன் மோகம் விடவில்லை. முதலாவது சார்லஸ் மன்னனுடைய திருக்குமாரன் இரண்டாவது சார்லஸ் என்பவர் அந்நிய நாட்டினின்றும் ஆங்கிலேயர்களால் அழைக்கப் பெற்றார். ஆங்கிலக்கரையை அடைந்த இரண்டாவது சார்லஸ் அவர்களுக்கு அளிக்கப் பெற்ற உபசாரத்தையும் அப்பொழுது ஜனங்களுக்கிருந்த மனவெழுச்சியையும் சரித்திரக்காரர்கள் வருணித்திருக்கிறார்கள். கொடுங்கோலன் மைந்தன் என்று ஆங்கில ஜனங்கள் கருதினார்களா? இல்லை; மன்னன் மைந்தன் மன்னன் என சார்லஸ் மதிக்கப் பெற்றார். மன்னனைப் போற்றுவது மாந்தரின் இயல்பு. கணக்கற்ற பெண்களைக் கற்பழித்து, தமது தகப்பனைக் கொன்ற கூட்டத்தாரை "நாய்களை" ப்போல மதித்து நடத்தி வந்த இரண்டாவது சார்லஸ் மன்னனை ஆங்கிலேயர்கள் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் தங்கள் அருமை மன்னனாக எண்ணிக் கொள்ளவில்லையா? பெரிய விடத்து பாபங்கள் பெருமை கொண்ட செயல்களாக மதிக்கப் பெறுவது சாதாரண நிகழ்ச்சியாகும். தனவந்தனுடைய உபசாரச் சொல்லையும் சாதாரண மனிதனுடைய உபகாரச் செயலையும் பகுத்தறிவின்றிச் சமமாக பாவிக்கும் இயல்பைக் கொண்டவர்கள் தான் இவ்வுலகத்தில் பெரும் பான்மையாக வாழ்கின்

ளுர்கள். தில்லியில் கூடிய 25000 தீண்டாதார்களுக்கு இள வரசன் செய்ததென்ன? மேயோவே கூறட்டும்.

"அவர் எழுந்து நின்ருர். "நாய்களுக்கும் கேவல மான" அவர்களுக்காக எழுந்து நின்ருர். கருணை பூத்த சில சொற்களைக் கூறினர்; மெதுவாக அவர்கள் யாவரையும் சுற்றிப் பார்த்தார். ஒளி தவழும் புன்னகையுடன் அவர் தமது வணக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்தார்."

இதை யெழுதிய மேயோவின் உள்ளப்பூரிப்பு இத் துடன் நிற்கவில்லை. "இந்தியாவில் உதித்த சூரியன் இத் தகைய காட்சியைக் கண்டதேயில்லை" என்று மேயோ— துடி துடித்து உளறுகிருர். நற்பழக்க முள்ளவனெவனும் இளவரசனைப் போல நடந்து கொண்டிருக்க முடியும். சூதுக் காரர்களுக்கு இதைச் சொல்லிக்கொடுக்கத் தேவையில்லை. "ஏமாந்த சோணகிரி" களுக்கு இது போதும். ஆனல் "தீண்டாதர்களும்" ஏனையோரும் எந்த நிலைக்கு வந்து விட் டார்கள் என்பது கீழ்க்காணும் அரிய பாட்டினல் இனிது விளங்கும். ஆனல் மேயோவுக்கு தமிழும் நல்ல இலக்கிய மும் உண்மையில் நாட்டமும் பழக்கமில்லையே! அவருக்காக கீழ்க்காணும் பாடல் எடுத்தாளப் பெறவில்லை; நண்பர்களுக் காக. அதை அவர்கள் கவனிப்பார்களாக!

"நாமிருக்கு நாடு நமது
என்பதறிந்தோம்—இது
நமக்கே யுரிமை யாம்
என்பதறிந்தோம்—இந்தப்
பூமி யிலெவர்க்கும் இனி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை
செய்து வாழ்வோம்."

அத்தியாயம் 17.

"உத்தியோகம் கொடு அல்லது உயிரை மாய்த்து விடு"

இந்தியாவில் உத்தியோக வேட்கை அதிக மிருக்கின்றது என்பதை மேயோ இந்த அத்திபாயத்தில் குறிப்பிடு கின்றார். இந்த அத்தியாயத்தின் மகுடத்தைப் பார்த் தாலே, அது இனிது புலனாகும். உத்தியோகத்தை எதிர் பார்த்துத்தான், இந்தியாவில் மாணவர்கள் கல்வி பயிலுகின் றார்களென்றும் சர்வ கலாசாலைப் பட்டத்தைத் தாங்கி நிற் கும் இந்திய இளைஞர்களுக்கு உத்தியோகத்தைத் தவிர வேறு ஆசை கிடையாது என்றும் மேயோ குறிப்பிட்டிருக் கிறார். உத்தியோகம் கிடைக்காத பட்டதாரிகள் இந்திய அரசாங்கத்தாருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து கல கம் உண்டாக்கி வருகிறார்கள் என்று மேயோ வரைந்திருக் கும் வகையை நண்பர்கள் நோக்குவார்களாக !

> "ஏல், ஹார்வார்ட்டு, லெலாந்து ஸ்டான் போர்டு, சர்வ கலாசாலைகளிளின்றும் பட்டம் பெற்று வெளிவரும் அமெரிக்க இளைஞன் தனது பட்டத்தை (நற்சாட்சிப் பத்தி ரத்தை)க் காண்பித்து, அரசாங்கத்தில் உத்தியோகம் வேண்டி, அது அவனுக்கு மறுக்கப்பெற்றால், வேறு தொழி லைப் பார்க்காமல் ஸர்க்காருக்கு விரோதமான பிரசார வேலை யை மட்டும் செய்வானாகில், அதைக்கண்டு அமெரிக்கப் பொது ஜன அபிப்பிராயம் நகைக்கும். அத்தகைய பொது ஜன அபிப்பிராயம் இந்தியாவின் எந்தப் பகுதியிலுமில்லை."

மேயோ எழுதியிருக்கும் எழுத்தைப் பார்த்ததும், நமக்கு நகைப்பு உண்டாகின்றது. விகடன் கூற்றுக்கு விலை

யுண்டா? மூட்டாளின் மொழி முது மொழியாகக் கொள்ளப் பெறுமா? தனது மூக்கை "மூக்கறையன்" அழகுப் பொருளாக எண்ணிக் கொள்ளலாம்; ஏனையோர் எண்ணிக் கொள்ளுவார்களா? ஆயிரம் நாசிகளுக்கு இரண்டு கைகள் போதும் என்று காளி எண்ணிக் கொண்டிருந்தாள். "ஜல தோஷ காலத்தில், போத மாட்டாவே" என்று நினைத்துத் தென்னுலிராமன் நகைத்தான். மேயோவின் மூதுரை, நமது கண்களில் நகையுரையாகப் படுகின்றது. அமெரிக்காவின் நிலைமையையும் இந்தியாவின் நிலைமையையும் ஓர்ந்து பார்க்காமல், பாவனை நகைப்பை மேற்போட்டுக்கொண்டு எழுதும் மேயோவைக்கண்டு, நம்மிற் சிலர் பரிதபிப்பார்கள்; மற்றும் சிலர் வயிறு வெடிக்கச் சிரிப்பார்கள். ஆனால் உண்மையைக் கவனிப்போம். உண்மையைக் கூறினுல், நகைப்பு பின்னர் தானுகவரும்.

இந்திய மாணவர்களுக்குக் கொடுக்கப் பெறும் கல்வியைப்பற்றி ஆங்கில நாட்டின் மாஜி கல்வி மந்திரி பிஷர்முதல் இந்தியாவில் மத்திய மாகாணத்தில் கல்வி இலாகாவில் தலைமைவகித்த ஆர்தர் மேஹியோவரையிலுமுள்ள—ஆராய்ச்சியும் அனுபவமும் நிறைந்த—ஆங்கிலேயர்கள் குறை கூறியிருக்கிறார்கள். இந்தியர்கள் குறைகூறுவது சகஜம் என்று சொல்லிவிடலாம். ஆனால் மேலே கூறப்பட்ட கூட்டத்தார் என் குறை கூறவேண்டும்? அவர்களும் இந்தியாவிலிருக்கும் ஆட்சி முறையின் விரோதிகளா? இல்லையென்று இந்திய அரசாங்கத்தாரே ஒப்புக் கொள்ளுவார்கள். இந்தியாவில் இப்பொழுது இரண்டு தொழில்கள் தான் சிறப்பாகப் பெரும்பான்மையோருக்கு ஜீவனம் கொடுக்கக் கூடியவை. விவசாயமும் அரசாங்க உத்தியோகமும். ஏனைய தொழில்கள் யாவும்

இறந்துபடும்படி செய்யப்பெற்றன. படித்தவர்கள் அரசாங் கத்தையும் படிக்காதவர்கள் பூமியையும் நம்பினார்கள். இரு வர் வாயிலும் மண்விழுந்து வருகின்றது. விவசாயம், உத் தியோகம் (அதாவது அரசாங்கத்தைச் சார்ந்து பிழைத்தல் இவைகளைதவிர, இந்தியர்களுக்கு மற்று மொருதொழில் இருக்கிறது எனச் சிலர் கூறலாம். அன்னியநாட்டுச் சாமா ன்களை இந்தியாவில் விற்பனை செய்யும் தரகுத் தொழில் இந் தியர்களுக்கு இருக்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை. சோப்புமுதல் ஆகாயவிமானம் வரையில் செய்யும் தொழில் கள் அன்னிய நாடுகளில் செழித்து நிற்கின்றன. இந்தியா விலும் ஏன் அவ்வாறு இருத்தல் கூடாது? இதே கேள்வியை நம்மிடம், இந்தியாவின் விரோதிகள் கேட்பார்கள் என்பதை நாம் அறிவோம்.

இந்தியாவில் வியாபாரம் செய்வதற்காக, கிழக்கு இந் தியக் கம்பெனி என்று ஒரு அமைப்பு, எலிஜபத் ராணிகாலத் தில், ஆங்கில நாட்டில் காணப்பெற்றது. அதற்கு அரசாங்க ஆதரவு இருந்தது. வியாபாரத்தைத் தவிர, வேறு எத் தனையோ சில்லறைத் தொழில்களையும் கைக்கொண்டு இயங் கிய கிழக்கு இந்திய கம்பெனிக்கு ஆங்கில அரசாங்கத்தார் பேராதரவு காண்பித்தார்கள். மேற்கூறிய கம்பெனியார் தெருவில் மூட்டைதூக்கி—இந்தியாவில் வியாபாரம் செய் தார்கள். நாளாக நாளாக, இந்தியத் தொழில்களின் இரகசி யம் அவர்களால் கற்றுக்கொள்ளப் பெற்றது. இந்தியாவி லிருந்து துணிவாங்கிய ஆங்கிலேயர்கள் அதை நிறுத்திவிட் டார்கள். இந்தியாவிலிருந்து துணி வரவழைத்து உடுத்து வது இழிவு, தேசத்துரோகம் என்ற பிரசாரம் ஆங்கில நாட் (இருநூறு ஆண்டுகளுக்கு முன் செய்யப்பெற்றது. இந்

தியத் துணிகளை ஏற்றிச்சென்ற இந்தியக்கப்பல்கள் சில தேம்ஸ் நதிக்கரையில் அழிக்கப் பெற்றன என்று சரித்திராசிரியர் ரோமேஷ் சந்திர தத்தர் தாம் எழுதியநூலில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவின் நெசவுத்தொழில் அழிக்கப் பெற்ற வகையை, நண்பர்கள் மேடைப் பிரசங்கங்களிலிருந்தும் துண்டுப் பிரசுரங்களிலிருந்தும் அறிந்துகொண்டிருப்பார்கள். அதை விரித்து இங்கு கூறவேண்டாம். நெசவுத்தொழில் அழிபட்டுப்போனதும், அதில் அமர்ந்திருந்த பெரும்பான்மையோர் கூலிவேலைசெய்து பிழைக்கநேர்ந்தது. நெசவுசெய்தவர்களிற் பலர் ரயில் கூலிப்போர்ட்டர்களாயிருப்பதை வெரும் காணலாம். இந்தியாவின் கைத்தொழில்கள் யாவும் ஒவ்வொன்றாய் அழிந்துபோயின. அழியும்தொழிலை அல்லது அபிவிருத்தி யடையக்கூடிய தொழிலை ஆதரிப்பது யாருடைய பொறுப்பு? அரசாங்கத்தாருடையது என்று கூறத் தேவையில்லை. குடி மக்களின் நன்மையை நாடும், நன்மையின்பொருட்டு இயங்கும், குடிமக்களின் நலனைத் தனதாகக்கொள்ளும், அரசாங்கம் தொழில் சம்பந்தமாக என்னசெய்யலாம் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் தருகிறேன்.

பீட்ரூட் சர்க்கரையை நண்பர்கள் பார்த்திருக்கலாம். இந்தியாவில் கரும்பிலிருந்து சர்க்கரை செய்கின்றார்கள். ஆனல் ஜர்மனியார் வேறுமுறையைக் கண்டார்கள். ஜர்மனியில் "பீட்" என்னும் கிழங்கு அபரிமிதமாய்க்கிடைக்கப் பெறுகின்றது. பீட் கிழங்கிலிருந்து சர்க்கரை செய்தார்கள் ஜர்மானியர்கள். இதற்கென கம்பெனி யொன்றை அமைத்தார்கள். இவர்களுக்கு நஷ்டம் வந்தால், தாங்கள் ஈடுகொடுப்பதாக, ஜர்மனிய அரசியலார் ஏற்றுக் கொண்டார்

கள். இது ஐரோப்பியப் போர் நிகழ்வதற்குமுன்னர். பின்னர் நடக்கும் சங்கதியைப்பற்றிச் சொல்லவேண்டாம். "ஜர்மன் தொழில்களை அழித்துவிட்டோம்; உலகசந்தையினின்றும் ஜர்மன் சாமான்கள் வெருட்டியோட்டப்பட்டுவிட்டன" என்று நேசக்கட்சியினர் இறுமாந்துகிடந்தனர். ஆனால் இப்பொழுது உலகம் காண்பதென்ன? ஜர்மன் சாமான்கள் மற்றைய நாட்டுச்சாமான்களை உலகச்சந்தைகளினின்றும் துரத்தியடிக்கும் நிலைமைக்கு வந்துவிட்டன. ஒரு நாட்டின் தொழிலபிவிருத்திக்கு, பொறுப்புள்ள அரசாங்கம் செய்யக்கூடாத ஒன்று முண்டா? ஜப்பானை எடுத்துக் கொள்ளுவோம். சீனா, இந்தியா தேசங்களின் கடற்கரையோர வியாபாரம் தனது கப்பல்களின் மூலமாய் நடக்க வேண்டும் என்று ஜப்பான் தீர்மானம்கொண்டது. இதற்கென ஒரு கம்பெனியும் அமைக்கப்பெற்றது. அது ஜப்பானிய அரசாங்கத்தால் காணப்பெற்ற கம்பெனி அல்ல. ஆனால் ஜப்பானிய அரசாங்கத்தார் என்னசெய்தார்கள்? கம்பெனிக்கு நஷ்டம் ஏற்படுமானல், அதைத்தாங்கள் ஈடு செய்து கொடுப்பதாக ஜப்பானிய அரசாங்கத்தார் வாக்குறுதி செய்தார்கள். நமது தமிழ்நாட்டிலும் சுதேசி கப்பல் கம்பெனியொன்று தூத்துக்குடியில் காணப்பெற்றது. அது ஆங்கிலக்கம்பெனியொன்ருேடு போட்டிபோட நேர்ந்தது. சுதேசிக்கம்பெனிக்கு இந்திய அரசாங்கத்தார் என்ன உதவி செய்தார்கள் என்பதை நம்மால் கூறமுடியாது. ஆனால் கம்பெனி என்னவாயிற்று என்று நம்மால் கூறமுடியும். கம்பெனி இறந்துபோயிற்று. சுதேசிக்கப்பல் தனது கப்பலை (கோயாலண்டோ என்ற கப்பல்) தனக்குப்போட்டியாயிருந்து, தன்னை அழித்த ஆங்கிலக் கம்பெனிக்கு

அற்பவிலைக்கு விற்றது. சுதேசிக்கப்பல் கம்பெனியை நிர்வகித்து நடத்திய திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் ராஜ நிந்தனைக் குற்றம் சாட்டப்பெற்று, சிறைவாசம் சென்றார். மேற்கூறியயாவும் சரித்திரக் குறிப்புகள். அவைகளில் யாதொன்றும் கற்பனையல்ல. மேயோவின் கற்பனை நமக்குவருமா? நமக்கு அத்தகைய கற்பனையும் தேவையில்லை. சுதேசத் தொழிலபிவிருத்தியைப் பற்றிக் கவலைகொள்ளாமல் "குமாஸ்தா" ப்படிப்புக்கொடுக்கும் இந்திய அரசாங்கத்தார் இந்தியர்களின் முன்னேற்றத்திற்காக எந்தத் துறைகளில் உழைத்துவருகின்றார்கள் என்பதை மேயோ விளக்கியிருத்தல்வேண்டும்.

வண்டியிலுள்ள இடமுழுதையும் அடைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் கனத்த ஆள், "சௌகரியமாய் இரு. அவஸ்தைப்படாதே. கையையும் கால்களையும் நீட்டிக் கொண்டு உட்காருகிறதுதானே" என்று உபசாரச்சொற்கள் சொல்லுவதனாலே, மற்றவனுக்கு ஏதேனும் இலாபமுண்டா? கனத்த ஆளுடன் வண்டியில் தான் உட்கார முடியாது என்பதைமற்றவன் அறிய வேண்டும். இந்தியாவின் தேவைகளுக்கு வேண்டிய பொருள்கள் பெரும்பான்மை ஆங்கில நாட்டிலும் அதைச் சார்ந்திருக்கும் குடியேற்ற நாடுகளிலும் உற்பத்திசெய்யப் பெறும் வரையில், இந்தியாவில் சுதேசக் கைத்தொழில்கள் அபிவிருத்தியடைய முடியும் என்று சொல்லுவதற்கில்லை. இரண்டு பொருள்கள் ஒரு சமயத்தில் ஒரே யிடத்தில் இருக்கமுடியாது. ஐரோப்பிய நாகரிகத்தால் எழுந்திருக்கும் பண ஆவல் ஒழிந்தா லொழிய, ஆலைகளில் பரபரப்பாய் தொழில் நடப்பது ஐரோப்பிய நாடுகளில் நிற்காது. ஐரோப்பியர்களுக்கு இருக்கும் பணஆவ

லைக் குறை கூற முடியாது. வாழ்க்கைக்கு அவர்களுக்கு ஏராளமாய்ப் பணம் வேண்டியிருக்கிறது. அவர்களுடைய பணத்தேவை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் நாகரிக முறையின் பயனாகும். அந்த வாழ்க்கை முறையை அவர்கள் ஏற்றுக்கொண்டு வாழும் வரையில், அவர்களுடைய பணத்தேவை குறையப் போவதில்லை. எனவே, இந்தியர்களும் ஏனையோரும், ஐரோப்பியசாமான்களுக்கு நஷ்டம் நேரும் முறைகளில் தங்கள் தொழில்களை அபிவிருத்தி செய்யமுடியாது. ஐரோப்பியர்களுக்குள்ளாகவே, இதைப் பற்றி வேற்றுமை ஏற்பட்டுவிடும். ஜர்மனியின் வியாபாரச் செழிப்பைக் கொல்லும் பொருட்டே, சென்ற ஐரோப்பியப் போர்துவக்கப் பெற்றது என்றும் ஏனையோரின் வியாபாரத்தைச்சீர் குலையச்செய்யத்தான், ஜர்மனி நேசக்கட்சியாருடன் போர்தொடுத்தது என்றும் பலவாறாகக்கூறப்படுகின்றது. அதாவது இந்தியா அரசியலில் ஆங்கிலத்துககு ஆட்பட்டும் வாழ்க்கையில் ஐரோப்பிய நாகரிகத்துக்கு அடிமைப்பட்டும் இருக்குமளவு, தனது தொழில்களை ஏற்ற முறைகளில் அபிவிருத்தி செய்யமுடியாது. குதிரை கீழேயும் தள்ளிவிட்டு, குழியையும் பறித்த கதையைப் போல மேயோ கூறுகின்றார்.

“உத்தியோகம் கொடு அல்லது உயிரை மாய்த்துவிடு” என்று கூறுமாப்போல, கேவலமான நிலைக்கு இந்தியன், வந்து விட்டது விசனிக்கத்தக்கது தான். ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சந்தர்ப்பத்தை யொட்டி ஆராய்ந்து அளக்க வேண்டும். கப்பல் உடைந்து நடுக்கடலில் மூழ்கிப் போகிறது. சிலமனிதர்களும் நாய்களும் சில உணவுப்பொருள்களும் சில படகுகளில் மிச்சப்படுகின்றன. மனிதர்கள்

முதலிலே உணவுப்பொருள்களைத்தாங்களும் உண்டு, நாய்களுக்கும் கொடுக்கின்றனர். உணவுப்பொருள் போகவே, நாய்களை அடித்துத்தின்கிறார்கள். பின்னர் செருப்புத் தோல்களை சூட்டில் வேகவைத்தும்பதம்படுத்தித்தின்ன முயற்சி செய்து பயன் படாமற் போனது கண்டு, சீட்டுப்போட்டு நாளொன்றுக்கு ஒரு மனிதனை அடித்துத் தின்பதாகத் திட்டம் ஏற்பட்டது. இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறகாலத்தில் ஒரு கப்பல் வந்து, படகில் எஞ்சியவர்களைக் காப்பாற்றிற்று என்று கதையில் படித்தது எனது நினைவுக்கு வருகின்றது. சாதாரணகாலத்தில் மனிதன் நாயைத்தின்பானா, செருப்பைச்சாப்பிடப்பார்ப்பானா அல்லதுசகோதரமனிதனை உணவாக்க மனம் சம்மதிப்பானா? உயிர் பிழைப்பதற்கான கௌரவ வசதிகள் யாவும் அழிக்கப்பெற்றால், ஆயிரத்தில் ஒருவன் உயிரைவிட்டு விடச் சம்மதிப்பான். ஏனையோர் எதைச் செய்தாவது உயிர் பிழைக்கப் பார்ப்பார்கள். அந்தக் கேவலமான நிலைமைக்கு வந்த பின்னர்தான், அவர்களுக்கு உணர்ச்சியும் உய்வும் ஏற்படுகின்றன. ஏட்டுச்சுரை கறிக்கு உதவாதது போல, இந்தியாவில் கொடுக்கப்பெறும் படிப்பினால், இந்தியனுக்கு தலை நிமிர்ந்து வாழ வசதி ஏற்படவில்லை. அவன் "முதலாளிகளை" ச்சார்ந்துதான் வயிறு பிழைக்க முடிகின்றது. இதை ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. கோழைகள் என்று வங்காளிகளை மெக்காலே தூற்றினதால் அவர்கள் வெடிகுண்டுப் புரட்சிக்காரர்களானார்கள் என்று கூறப்படுவதுண்டு. அரசாங்கத்தில் உத்தியோகம் கிடையாது என்று இடித்துக் கூறப்பட்டாலன்றி இந்தியர்களும் இந்த உபயோகமற்ற கல்விக்கு ஆவல் கொள்ளாமலிருக்க மாட்டார்கள். உத்தியோகத்திற்காக, அரசாங்கத்தை மனு

ங்களால் முற்றுகை போடுவது பயனற்றது, கௌரவமில்லாத சங்கதி. இறுதியில் இலாபமில்லாத விஷயம் என்பதை நம்மவர்கள் நன்ருக உணர்ந்தால், அவர்கள், தங்கள் தன் மதிப்பு அழியச் சம்மதிக்கார்கள்.

உத்தியோகங்கள் சார மற்றவைபோல இந்தியர்களுக்கு உபதேசிக்க முன் வந்திருக்கும் மேயோ அவர்கள், இந்தியா ஆபீசு ஐ. ஸி. எஸ். உத்தியோகங்களுக்காக, இனி ஆங்கில நாட்டில் ஆள் சேர்க்கவேண்டாம் என்று ஆங்கில அரசியல் நிர்வாகிகளிடம் கூறத்துணிவாரா? சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆற்காடு என்ற கோட்டை பிரஞ்சுக்காரர்களால் முற்றுகைபோடப்பட்டது. கோட்டைக்குள்ளிருந்தவர்கள் ஆங்கிலேயர்களும் இந்தியச் சிப்பாய்களும். உணவுக்குப் பஞ்சம் வந்துவிட்டது. ஆங்கிலேயர்களும் அரிசிச் சோறு உண்ணத் துவக்கினர். "கஞ்சி எங்களுக்குப் போதும்; நீங்கள் சாதத்தைச் சாப்பிடுங்கள்" என்று இந்தியச் சிப்பாய்கள் தங்களைப் போரில் நடத்திய ஆங்கிலேயர்களிடம் சொன்னுர்கள் எனச் சரித்திரம் கூறுகின்றது. உத்தியோகங்களைக் கஞ்சி உத்தியோகம், சாத உத்தியோகம் என்று இருகூறுகளாகப் பிரிப்போமானுல், ஆற்காடு முற்றுகைக்கால முதல், கஞ்சி உத்தியோகங்கள் இந்தியர்களுக்கும், சாத உத்தியோகங்கள் ஐரோப்பியர்களுக்கும் இந்நாட்டில் இந்நாள் வரையில் கொடுக்கப்பெற்று வருகின்றன. இதை எடுத்துக் கூறினுல், "உத்தியோகம் எதற்கு, தொழில் அபிவிருத்தியை நாடுங்கள்" என்று இந்தியர்கள் உபதேசிக்கப் பெற்று, உயர்தர உத்தியோகங்கள் பல புதிதாய்ச் சிருஷ்டிக்கப்பெற்று, அவைகளின் நிர்வாகம் இந்தியர்களல்லாத ஏனையோர்களுக்கு மகிழ்வுடன் அளிக்கப்

பெறும். மேயோவுக்கு இது தெரியாதோ, என்னவோ? தெரிந்திருந்தாலு மென்ன? இந்தியர்களின் முன்னேற்றத் தின் பொருட்டு கவலையுடன் செய்யப் பெற்ற ஏற்பாடுகளில் இதுவுமொன்று என்று அவர் சத்தியம் செய்யவும் கூடும்.

"கற்றறிந்த இந்தியர்கள் கிராம நிர்மாண வேலையில் ஏன் ஈடுபடலாகாது? வேண்டப்படாத இடங்களில் வந்து எங்களை ஏன் தொந்திரை செய்கின்றீர்கள்" என்று இந்தியப் பட்டதாரி ஒருவனைப் பார்த்து அமெரிக்கா வியாபாரி ஒருவர் சொன்னாராம். இவ்வாறு மேயோ எழுதியிருக்கிறார். அமெரிக்க வியாபாரி ஜீவனம் செய்து பொருள்தேட, இந்தியாவுக்கு வந்திருக்கிறார். அவரும் ஏழை இந்தியப் பட்டதாரியின் மீது பாய்கின்றார். நமக்கு இது வியப்பில்லை. இந்தியர்கள் இந்த நிகழ்ச்சியைத் தங்கள் மனத்திற்கொண்டால் அது நமக்குப் போதுமானது.

"பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறு இனியார்க்கோ?
தஞ்சமென்றடைந்தபின் கைவிடலாமோ,
தாயும் தன்குழந்தையைத் தள்ளிடப்போமோ?
அஞ்சல் என்று அருள் செயும் கடமை இல்லாயோ,
ஆரிய! நீயும் நின் அறம் மறந்தாயோ?"

* * * *

"ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா

அத்தியாயம் 18.

ஆரம்பக்கல்வி.

ஆரம்பக்கல்வி வேண்டும். எந்த நிலைமையிலிருக்கும் ஜனங்களுக்கு வேண்டும்? மருந்து நோயைப் போக்கும். ஆனால் திடசரீர முள்ளவனுடைய தேக சுகத்தை அது விருத்தி செய்யாது. ஆகாரம் கிடைக்கக் கூடாத நோயாளிக்கு "மருந்தும் மாயமும்" என்ன செய்யும்? இந்திய அரசாங்கத்தார் உயர்தரக்கல்வி கொடுப்பார்கள்; ஆரம்பக் கல்வி கொடுப்பார்கள்; ஆனால் தொழில் கல்வி கொடுக்க மாட்டார்கள். "இந்தியாவை, ஏழு இலட்சம் கிராமங்களிலே, காணலாம்; இந்தியாவை "நாய்க்கொடை" போல முளைத்திருக்கும் நகரங்களில் காணமுடியாது" என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். மேநாட்டுச் சாமான்களை வாங்கி விற்குமிடங்கள் நகரங்கள். சாமான்களை வாங்கவேண்டியவர்கள் கிராமவாசிகள். நகரங்கள் விரிவடைந்தால், மேநாட்டுச் சாமான்கள் நமதுநாட்டில் அதிகமாக வியாபாரமாகி வருகின்றது என்று கொள்ளவேண்டும். நகரங்களின் விரிவு, இந்தியக் கைத் தொழிலபிவிருத்தியைக் காண்பிக்காது. ஆரம்பக்கல்வி பெற்ற கிராமவாசிகள், அன்னிய நாட்டுச் சாமான்கள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டிருப்பதைப் படித்து, தங்கள் பணத்தைப் பாழாக்கலாம். தற்போது ஆரம்பக்கல்வி இந்தத்துறையில்தான் பயன்பட்டு வருகின்றது; ஆரம்பக் கல்வியைப் பற்றி காந்தி சொல்லு வதைக் கவனிப்போம்.

"கல்வியின் சாதாரணப் பொருள் எழுத்து அறிவாகும். பையன்களுக்குப் படிக்க, எழுத, கணக்குப் போடக் கற்றுக் கொடுப்பது ஆரம்பக் கல்வி என அழைக்கப் பெறுகின்றது. விவசாயி யோக்கியமாய் (உழைத்து) தனது ஜீவனத்தைப் பெறுகின்றான். அவனுக்கு சாதாரணமான உலக அறிவு இருக்கிறது. தனது பெற்றோர்கள், தனது மனைவி, குழந்தைகள், தனது ஊரார்—இவர்களிடம் பழக அவனுக்குத் தெரிகின்றது. அவன் நீதி முறைகளை அறிந்து கொள்ளுகின்றான்; அனுஷ்டிக்கின்றான். ஆனால் அவனுக்குத் தன் பெயரை எழுதத் தெரியாது. அவனுக்கு எழுத்தறிவு கொடுத்து, என்ன செய்வதாய் உத்தேசித்திருக்கிறீர்கள்? அவனுடைய சந்தோஷத்தை, இதனால், தினையளவு உங்களால் வளர்க்க முடியுமா?"

காந்தி கேட்டிருக்கும் கேள்விகளுக்கு விடையளிக்க முயலும் அன்பர்கள் அளவுக்கண்களைக் கொண்டு, எல்லாச் சங்கதிகளையும் நோக்கி, பதில் சொல்ல வேண்டும். கல்வி வேண்டாம் என்று கூறும் பாதகன் ஒருவன் இந்த உலகில் இருப்பானா என்று கூச்சல் பிரசங்கம் செய்வதால், தொண்டை நீர்தான் வற்றிப் போகும். எழுத்தறிவில்லாத ரஞ்சித சிங் அவர்கள் சீக்கிய ராஜ்பத்தை அமைத்து, வளர்த்து, அமைதியுடனும் பெருமையுடனும் ஆண்டு வந்தார். ஸிவாஜிக்கு அற்பப்படிப்பு உண்டென்றும், படிப்பே இல்லையென்றும் கூறப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் காந்தி கூறியிருக்கும் கட்சிக்குத்தான் ஆதரவு அதிகமாகக் கிடைக்கும். ராம கிருஷ்ண தேவர் அறவே எழுத்து வாசனையில்லாதவர் என்று கூறுகிறார்கள். "இயற்கை வாசனை" வீசிய ராம கிருஷ்ணர் எழுத்து வாசனைக்காரர்களை தமது "இயற்

கை'' மணத்தைக் கொண்டு ஈடேற்றி வந்தார். நடைநேர்மைக்கு நற்பழக்கங்கள் தேவை; நடை நேர்மைக்கு எழுத்து வாசனை மிகை. ஆரம்பக்கல்விக்கு ஆத்திரப்படும் அன்பர்களுக்கு "அளவுக்கண்" சரியாயில்லை என்பது தெளிவு. இந்தியாவுக்கு இப்பொழுது தேவையாகயிருப்பது தொழிற் கல்வி ; ஆரம்பக் கல்வியல்ல. ஆரம்பக் கல்வியின் மூலமாக நாட்டில் நாகரிக, அதாவது பணச்செலவு பிடிக்கும் பழக்கங்கள் பரவுமேயல்லாமல், நாட்டின் வறுமை யொழிந்து, வருமான வழிகள் வளரமாட்டா. தொழிற் கல்விபுடன் ஆரம் பக்கல்வியும் போதிக்கப்பெறுமாகில். அந்த ஏற்பாட்டினுல் தீமையதிகம் உண்டாகாது. நன்மை ஏற்பட வசதி இருக்கிறது. விவசாயத்தின் மூலமாய் அதிகமாக வருமானம் வரும் முறைகளைக் கண்டு, அவைகளைக்கிராமத்தார்களுக்கு அனுபவ வழிகளைக் கொண்டு போதிக்கவேண்டும். வெறும் பள்ளி உபதேசம் பயன்படாது. உணவைக் கொடுக்கும் வழியைக் கண்ட பின்னர், உடையைப்பற்றி கவனம் செலுத்தப் பெறல்வேண்டும். பிறகு வாழ்க்கையின் ஏனையத்தேவைகளை எளிதிலே எவ்வாறு பெறலாம், எவ்வாறு செய்யலாம் என்பதை கிராமத்தார்கள் அறியவேண்டும். அதாவது வாழ்க்கைக்குத் தேவை யான பொருள்களை உண்டாக்கும் தொழில்களை எளிதிலே செய்ய கிராமத்தார் கற்றுக்கொடுக்கப்படல் வேண்டும். கிராமத்தார்கள் மோட்டார்கள் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எவரும் கூற முன்வரவில்லை. ஹிந்துக்களின் சிக்கன வாழ்க்கைக்குத் தேவையான தொழில்கள் கற்பிக்கப்படுதல் வேண்டும். வருமான மில்லாமல் செலவு மட்டும் செய்யும் மைனர்களின் நாகரிக மனப்பான்மையைக் கொடுக்கும் படிப்பு—

அது ஆரம்பமாயினும், அது முடிவுப் படிப்பாயினும் சரியே—இந்தியர்களுக்குத் தேவையில்லை. அளவுக் கண்களைக் கொண்டு எதையும் நோக்கவேண்டும் என்று நாம் கூறியதன் பொருளை விகார மனப்பான்மை யின்றி நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களாக! "அளவுக் கண்" படைத்த நண்பர்கள், இந்தியாவின் கிராமவாசிகளின் இதத்தை மனத்தில் உன்னிய அன்பர்கள், "ஆரம்பக்கல்வி" யைப்பற்றி ஆனந்தக்களிப்புக் கொள்ளவேண்டாம். தொழிற் கல்வி பெற்ற நாட்டில், வறுமை அதிகமிராது. அப்பொழுது, எத்தகைய கல்வியையும் எளிதிலே பரப்பி விடலாம்.

> "இரட்டையாட்சி வந்தது. அரசாங்கம் இந்திய மயமாகும் தன்மையும் அத்துடன் கூடவந்தது. கல்வி, மாற்றப்பட்ட இலாகாவாகி, மாகாண மந்திரிமார்களிடம் சென்றது. மந்திரிமார்கள் சட்டசபைக்குப் பொறுப்பாளிகள். பொது ஜன அபிப்பிராயத்துக்கு இணங்காத திட்டங்களை வற்புறுத்தும் பொறுப்பு இப்பொழுது கைமாறிவிட்டது. எனவே ஜனங்களின் அதிருப்தியும் இனி வேற்றிடம் பாயும்."

இந்தியாவில் எத்தகைய கல்விபரவவேண்டும் என்பதைப் பற்றி மேயோ கவலை கொள்ளவில்லை என்பது தெளிவு. மேயோவின் எழுத்துக்குப் பொருள் என்ன? இந்திய அரசாங்கத்தார் தாக்கப் பெறுதலை வேறு ஒரு கூட்டத்தார்—புதிதாய்த் தோன்றியவர்கள்—ஏற்றுக் கொள்ள நேர்ந்தது நல்லது என்பது மேயோவின் கருத்தாகும். ஏனையோர் ஜனங்களின் அதிருப்தியை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நோக்குடனேதான், இரட்டையாட்சி முறை வகுக்கப்பட்டது என்பதற்கு இந்திய அரசியல் அறிஞர்கள் அத்தாட்சி கூறுகின்றார்கள். சேனை, போலீஸ்

இவையிரண்டும் செலவு இனங்களாயிருந்த போதிலும், நிர்வாகத்துக்கு தேவைபான கருவிகளான படியால், இவையிரண்டும் இரட்டையாட்சி மந்திரிமார்களிடம் ஒப்புவிக்கப் பெறவில்லை. ஏனைய பணச் செலவு பிடிக்கும் இலாக்காக்கள் யாவும் மந்திரிமார்களிடம் ஒப்படைக்கப்பட்டன. விவசாய இலாகா மந்திரிமார்களிடம் ஒப்புவிக்கவிற்று, நிலவருமானம் அவர்களிடம் ஒப்படைக்கப் படாவிடின், மந்திரிமார்கள் என்ன செய்ய முடியும்? ஏற்கனவே ஜனங்கள் ஏழைகள்; வரிப்பளுவை அவர்களால் தாங்கமுடியவில்லை. விளைவோ குறைந்து வருகின்றது. மந்திரிமார்கள் பணச் செலவு பிடிக்கும் புதிய திட்டங்களைக்கண்டால், அவைகளுக்கான பொருள் எங்கிருந்து பெறுகின்றது? சேனைமுதலிய நிர்வாகக் கருவிகளுக்குத் தேவையான பணத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டபின்னர், மந்திரி மார்களின் திட்டத்துக்கு அரசாங்கத்தார் பொருள் உதவுவதாயிருந்தால், மந்திரிமார்கள் பொது ஜனங்களுக்கு என்ன நன்மை செய்யமுடியும்? நன்மையைக் கருதி, புதிய வரியைப்போட்டால், அதை ஜனங்கள் தாங்க முடியாது. ஜனங்களின் அதிருப்தி, மேயோ கூறுவது போல, மந்திரிமார்களின் பேரில் பாய்ந்தால், இந்திய அரசாங்கத்தார் தப்பித்துக்கொள்ளலா மல்லவா? இந்த விளைவைக்கருதியே இரட்டை யாட்சிமுறை வகுக்கப்பட்டது என்று கூறப் பெறுவதை, மேயோவே ஓரளவில் ஒப்புக் கொண்டு விட்டார். பொதுஜன அதிருப்தி தங்களுக்கு வேண்டாம் என்று தள்ளும் தன்மையை (பொறுப்பற்ற தன்மையை) க்கொண்ட கூட்டத்தார் ஜன சமுதாயத்தின் நலன்களை நாடுகின்றார்கள், நாடுவார்கள் என்று கூறமுடியுமா?

"கட்டாயக்கல்வி, மேலும், சம்பள மில்லாக்கல்வியாக இருத்தல் வேண்டும். சம்பளமின்றி, நாட்டி லிருக்கும்

பையன்கள் அனைவரையும் கவனிப்பதற்குப் போதுமான பள்ளிகளை அமைத்து, உபாத்திமார்களை அமர்த்துவது, ஏராளமாகப் பணச்செலவு பிடிக்கும் (வேலையாகும்). அதற்காக, ஜனங்களின்பேரில் (புதிய) வரி விதிக்கவேண்டும்.''

மேயோ கூறியிருப்பதில், முதற்பகுதி ஏற்றுக்கொள்ள வேண்டியது. போதுமான வரையில் பள்ளிகளை அமைத்து, உபாத்திமார்களை நியமனம் செய்யாவிடின், கல்வியை நாட்டில், பரப்பமுடியாது. கட்டாயக் கல்வி இலவசமாகக் கொடுக்கப் பெற்றாலன்றி, ஜனங்களிடையே அதிருப்தி அதிகமாகும். இலவசக் கல்விக்குபணம் ஏராளமாகவேண்டும். இது வரையிலும், மேயோவின் கூற்று ஏற்கப்பட வேண்டியதுதான். இதற்காகப் புதிய வரி போடவேண்டுமென்பது ஆட்சேபத்துக்குரிய தாகும். வரி என்பது வருமானத்தைப் பொறுத்து விதிக்கப் பெறவேண்டிய சங்கதியாகும். சக்திக்குத் தக்கபடிதான் எவனும் சௌகரியங்களைத் தேடிக்கொள்ள முடியும். மோட்டார்க்கார் மனிதனுக்கு மிகவும் சௌகரியமா யிருக்கிறது என்று தனது நிலத்தைவிற்று, எவனாவது மோட்டார் வாங்குவானா? வாங்கிய மோட்டாரினால் வருமானம் வருமாகில், அதை வாங்கப் பின் வாங்கமாட்டான். தொழிற் கல்வியின்பொருட்டு வரி விதிக்கப்பெற்றாலும், அதை ஏழை இந்தியர்கள் ஒருவாறு ஏற்றுக் கொள்ளவும் கூடும். ஆரம்பக்கல்வியினால் மனிதனுக்கு எழுத்துவாசனை ஏற்படலாம். ஆனால் ஏழை இந்தியனுடைய வயிறை நிரப்பத்தக்க வருமானம் அதனால் ஏற்படாது. எனவே, இந்த நிலைமையில், பொதுஜனங்கள் புதிய வரியை ஆட்சேபித்தால், அது மிகவும் பொருத்தமுள்ளதாகும். ஆனால் அரசாங்கத்தின் வருமானம் (கட்டாயக்

கல்விக்குப்) போதாமல், புதிய வரி போடவேண்டிய தேவை யுண்டா? தேவையில்லை என்று கூறினால், நமக்கு அரசியல் நிர்வாகப் பழக்கமும் அறிவும் இல்லை என மேயோ சொல்லக்கூடும். இந்தியாவின் அரசியல் நிர்வாகச்செலவை (இப்பொழுது நடக்கும் செலவை) ப்பாதி குறைத்து, நிர்வாகம் திறமையிலும் தன்மையிலும் குறையாமல், ஜனங்களும் திருப்தியுடன் வாழும்படியாக இந்திய அரசியலை நடத்தி, என்னாலும் என்போன்ற ஆயிரக்கணக்கான இந்தியர்களாலும், காண்பிக்க முடியும். நமது பந்தயத்தை மேயோவும் இந்திய அதிகார வர்க்கத்தினரும் ஏற்றுக்கொள்ளுவார்களா?

காரணம் காரியமாகவும் காரியம் காரணமாகவும் மாறுவது இயற்கை முறை. அதுபோல செலவு முதலாவதும் முதல் செலவாவதும் இயல்பு. எனவே, செலவை இரண்டு கூறுகளாகப் பிரிக்கலாம். அழிசெலவு என்றும் ஆக்கச் செலவு என்றும் பிரிக்கலாம். அழிசெலவு செலவினத்தில் எழுதப்பட வேண்டியதாகும். அந்தச் செலவினால், கண்ணுறப்பார்க்கக் கூடிய வருமானம் ஏற்படாது. இந்தச் செலவு சௌகரியங்களுக்காக ஏற்பட்ட செலவாகும். இதை விரயம் என்று எழுதிவிடவேண்டும். ஆக்கச்செலவு ஆதாயச்செலவாகும். ஒரு ஆற்றை வெட்டுவதில் நேரும் செலவு அழிவு செலவல்ல; அது ஆக்கச்செலவாகும், ஆதாயச் செலவாகும்; அதாவது முதலாகும். எனவே, ஆதாயச்செலவு முறைகளைக் கைக்கொள்ளுவது தான் முறையாகும். ஏதேனுமொரு அமைப்பில் ஆக்கச் செலவு குறைந்து, அழிவு செலவு அதிகமானால், அது விரைவில் இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குப் போக வேண்டிவரும். இது யாவரும் அனுபவத்தில் கண்டதாகும். இதிலே செப்

பிடிவித்தை யொன்றும் கிடையாது. இந்திய அரசியலில் அழிவு செலவு ரொம்ப அதிகமாயும் ஆக்கச் செலவு மிகக் குறைவாயும் நடந்து வருகின்றது என்று பொருளாதார சாத்திர நிபுணர்களான கோபாலகிருஷ்ணகோகலேயும் தாதாபாய் நாரோஜியும் இந்தியர்களுக்கும் இந்திய அரசாங்கத்தாருக்கும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். "சட்டத்தையும் அமைதியையும்" நிலைநாட்டுவது ஒன்றை மட்டும் குறிக்கொண்டு செலவழித்தல் இந்திய அரசாங்கத்தாருக்குத் தகாது என்று கூறிய பெரியார்களின் சொற்களை இந்திய அதிகாரவர்க்கத்தினர் ஏற்றுக் கொண்டால், ஆரம்பக்கல்வி முதல் புதிதாய்த்தோன்றக் கூடிய எத்தகைய சீர்திருத்தத்திற்கும், இனி ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு, இந்திய அரசாங்கத்தார் புதிய வரி விதிக்கவேண்டிய தேவையில்லை.

தொழில்கள் செழித்து, வாணிபம் கொழுத்து நிற்கும் வேற்றுநாடுகளில், வரிச்சுமை பெரிதாகக் கருதப்படமாட்டாது. ஆனால் இந்தியாவின் நிலை என்ன? புதிய வரி விதிக்கப்பெற்றாலும், பழையவரி உயர்த்தப்பட்டாலும், அதைச் செலுத்த வேண்டியவர்கள் இறுதியில் பூமியாளர்களும் விவசாயிகளும்தான். ஒரு கூட்டத்தார் மட்டும் குறிப்பிட்ட ஒரு சுமையைத்தாங்கி நிற்றல் முடியுமா? அவர்களுக்குச் சிறப்பான உரிமைகள் ஏதேனு முண்டா? இந்தியப் பொது ஜனங்கள் புதிய வரியை விருப்புடன் ஏற்பதில்லை என்று வெகுவாக அவர்கள் குற்றம் சாட்டப் பெறுகின்றனர். வேற்று நாடுகளில், ஜனங்கள் வரியை விருப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்றார்களா? ஜனசபைக்குக்கட்டுப்பட்டு அரசியல் நடக்கும் பிரான்சு நாட்டில் (பிரான்சுமிகுதியும்செல்வப்பெருக்குக்கொண்ட நாடு

எனக் கருதப்படுகின்றது) புதிய வரியை விருப்புடன் ஜனங்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை என்பது உலக மறிந்தவிஷயம். தாங்கள்கொடுக்கும்வரிப்பணத்தின் வினியோகத்தின்பேரில் யாதொருஅதிகாரமும்படைக்காத இந்தியப்பொதுஜனங்கள் புதிய வரியை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அரசியல் நிர்வாகம் மட்டும் பெரிது என்கிறார்கள் அதிகார வர்க்கத்தினர். பொது ஜனமுற்போக்குக்கான வசதிகளைக்காணும் அரசியல் நிர்வாகம் தான் உயர்ந்தது என்று பொது ஜனத் தலைவர்கள் கூறுகின்றார்கள். அரசியல் நிர்வாகிகளும்பொது ஜனங்களும் ஒரே இலட்சியத்தைக்கைக் கொண்டிருந்தால் முரணான நோக்குகள் அவர்களுக்கு இருக்கமாட்டா. ஆனால் எருது ஒருபக்கமும் எருமை வேறு பக்கத்திலும் இழுத்துக் கொண்டு போனால், உழவு நடப்பது எப்பொழுது? இதைத் தெரிந்து கொள்ளாமல் "உழவை"ப்பற்றிப் பேசுகின்றார்கள் அன்னியர்கள். தெரிந்து கொள்ளாமல் என்று கூறினேனே, அது தவறாகும். இந்திய அதிகாரவர்க்கத்தினரின் நோக்குக்குப்பொருத்தமில்லாத இலட்சியங்களையும் ஆசைகளையும் இந்தியப்பொது ஜனங்கள் வைத்துக் கொண்டிருக்கலாமா என்று கோபத்துடன் மேயோவையொத்தவர்கள் கேட்கின்றார்கள். குடிமக்களின் விருப்பத்திற்கேற்க அரசியல் நடைபெறுவதுதான் நீதியாகும் என்று அருமையான அரசியல் தத்துவத்தை இந்தியர்களுக்குப் போதித்த மேநாட்டார்கள், இந்தியர்களின் ஆசையை இகழ்ந்து கூறுதல் தகாது, முறையாகாது.

இந்தியாவில் பல மொழிகளிருப்பதால், கல்வி யபிவிருத்தி யடையவில்லை என்று மேயோ கூறுகின்றார். இந்தியாவில் எத்தனை பாஷைகளிருந்தால் என்ன? ஒவ்வொரு

பாஷையையும் பேசும் மக்கள்கோடிக்கணக்கில் இருக்கின்றார்கள். ஐரோப்பிய நாடுகளில் பலமொழிகள் இருப்பதால், கல்வியபிவிருத்தி இல்லை என்று கூறினால், அது பொருத்தமுள்ளதாகுமா? அந்தந்த மொழியில் அந்தந்த ஜனங்கள் கல்வி போதிக்கப்படுதல் வேண்டும். தமிழ்மொழியைப் பேசுபவர்கள் இரண்டு கோடிக்கதிகமிருக்கிறார்கள். தமிழர்களுக்குத் தமிழில் கல்விபோதிக்க முடியாதா? ஐரோப்பாவில் ஸ்பானிஷ் பாஷை பேசுபவர்கள் எத்தனை பேர்கள்? புல்கேரிய மொழி பேசுபவர்கள் எத்தனை பேர்கள்? கிரேக்க பாஷை பேசுபவர்கள் எத்தனை பேர்கள்? தமிழர்களின் தொகையைக் காட்டிலும் குறைந்தவர்கள். அவர்கள் தத்தம் மொழிகளில் கல்வி போதிக்கப் படவில்லையா? ஆங்கில மொழியின் மூலமாயல்லாமல், தாய்மொழிகளின் மூலமாய் கல்வி போதிப்பதை அதிகாரவர்க்கத்தினர் விருப்புடன் நோக்குவதில்லை. இதன்காரணத்தைக் கூறத்தேவையில்லை. தாய்மொழிகளில் கல்வி (உயர்தரக்கல்வி) போதிக்கமுடியாது என்று விதண்டா வாதம் செய்யப்படுகின்றது. இலக்கியப் பெருமையை அனுபவிக்காத மொழிகளிற் கூட ஐரோப்பாவில் கல்வி போதிக்கப் பெறுகின்றது. மனமில்லாச் சங்கதிகளுக்குக் காரணங்களைக் காணுவதும் கூறுவதும் கடினமல்ல. பல மொழிகளிருக்கின்றன என்று கூறுபவர்கள் பல வகை மனத்தர்களை ஒன்று சேர்த்து, ஒரே இலட்சியத்துக்கு உழைக்கும்படி செய்யமுடியுமா?

> "பிலிபைன் தீவுகளிலும் சரி, இந்தியாவிலும் சரி, பள்ளிகளில் கிடைக்கப்பெறும் வேர் தரிக்காத படிப்பு இல் வாழ்க்கையில் உபயோகமாகாததால், அந்தப் படிப்பினால் முயற்சியும் பொருளும் வீணுகின்றன."

இதை முழுமனத்துடன் ஆமோதிக்கின்ரேம். நாம் ஆமோதிப்போம் என்று அறிந்து கொண்டு, மேயோ இதை எழுதிவிட வில்லை. மேயோ எழுதியிருக்கும் பொருளில் இந்த எழுத்தை நாம் கொள்ளவில்லை. மேயோ கூறுவதென்ன? பள்ளிக் கூடத்தில் கொடுக்கப் பெறும் படிப்பை இந்தியர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் உப யோகப்படுத்திக் கொள்ளுவதில்லை என்று மேயோ இந்தியர் களின் பேரில் குற்றம் சாட்டிப்பழி சுமத்துகிரூர். தங்கள் குடும்ப வாழ்வுக்கு உபயோகமாகக் கூடிய படிப்பு தங்களுக் குக் கொடுக்கப்படுகிறதில்லை என்று இந்தியர்கள் முறையிடு கின்ருர்கள். இரண்டு வாதங்களின் வேற்றுமையை நண்பர் கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். மேயோவுக் கும் நமக்கும் இடையேயுள்ள வேற்றுமையிதுதான். ஆனல், "இந்தியர்களுக்குக் கொடுக்கப் பெறும் கல்வி உபயோகப் படுத்தப் படுகிறதில்லை" என்பதை மட்டும், நாங்களிருவ ரும் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளுகிரேம். ஆனல் எங்கள் நோக்கமும் காரணங்களும் வெவ்வேறு என்பதை நேயர்கள் அறிவார்கள். இரு கட்சிகளையும் சுருக்கிக் கூறிவருவோம். "ஐரோப்பிய முறையில் ஜனங்களைப் பழக்கினலன்றி, இந் தியர்கள் முன்னேறமுடியாது. எனவே, அதிகார வர்க்கத் தினர் செய்வதை, இந்தியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்பது மேயோவின் கட்சி. "இந்தியர்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு இந்தியர்கள்பழக்கப்படுதல் வேண்டும்: எனவே, இந்தியப் பொது ஜனங்களின் விருப்பத்துக்கிசைந் தவாறு அதிகாரவர்க்கத்தினர்நடந்து கொள்ளல் வேண்டும்" என்பது இந்தியர்கள் கட்சி. இரண்டு கட்சிகளும் எளிதிலே ஒத்துப் போகக்கூடியதாகக் காணப்படவில்லை. ஒத்துப்

போவது எளிதாயின், மேயோ தமது நூலை எழுதியிருக்க மாட்டார். இந்தியர்களும் அவருக்கு மறுப்புக்களும் எழுதியிருக்க மாட்டார்கள்.

> " இந்தியாவில் கல்வி கற்றவர்கள், கிராமங்களில் வசித்துத் தொண்டு செய்ய விரும்புவதில்லை. எனவே, உபாத்திமார்களின் குறைவால், கிராமங்கள் வருந்துகின்றன."

மேயோவின் இக் கூற்றை எதிர்பார்த்தே, இதற்கு வெகுகால முன்னரே நாம் பதில் சொல்லியிருக்கிறோம். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர், கற்றறிந்த இந்திய இளைஞர்கள் கிராமங்களில் போய் வேலை செய்தால், சந்தேகக் கண்களுடன் அவர்கள் போலீசாரால் நோக்கப்பட்டனர். வெள்ளக்கஷ்ட நிவாரணத்திற்காகவும் பஞ்ச நிவாரணத்தின் பொருட்டும் உழைக்கக் கிராமங்களுக்குச் சென்ற தேச பக்தர்கள் போலீசாரின் "கடைக்கண் பார்வைக்கு" இலக்காயிருந்தனர். அரசியல் போராட்டத்தில் காந்தி தோன்றியதன் பின்னர், மேலே குறிப்பிடப்பட்ட கொடுமை அவ்வளவாக இல்லை. மேலும் போலீஸ் இலாகா, தபால் இலாகா முதலியவை சென்ற இருபது ஆண்டுகளுக்குள் மிகுந்த சீர்திருத்தம் அடைந்துவிட்டன. போலீசார் இப்பொழுது பொது ஜனங்களை அவமதிப்பதில்லை. தாங்களும் இந்நாட்டில் பிறந்தவர்கள்தாம் என்ற உணர்ச்சியும் தேச பக்தியும் அவர்களுக்கும் உண்டாகி வருகின்றன. எனவே முன்புபோல, கிராமத்தொண்டு அவ்வளவு கஷ்டமல்ல இப்பொழுது.

பழைய தொல்லை ஒருவாறு தீர்ந்ததே யொழிய, புதிய தொல்லை யொன்று வந்துவிட்டது. முன்பு, அதாவது இருபது ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு புள்ளி (ஒரு

ஆணும் ஒரு பெண்ணும்) ஒரு கிராமத்தில் ரூ. 10-ல் ஜீவனம் செய்ய முடியும் என்று வைத்துக் கொண்டால், இப்பொழுது அந்தத் தொகையை இரட்டித்தாலும் போதாது. எனவே குறைந்த சம்பளத்தைக் கொண்டு நேரிய வழியில் வயிறு வளர்க்க முடியாத ஆசிரியர்கள் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்காமலிருந்த நிலைமேலாகும். ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுத்துவிட்டு, அவர்கள் வேலைக்கு வருவதில்லையே என்று குறை கூறுவது தகுமா? இந்திய அரசியலை தலைக்கனம் கொண்ட அரசியல் என்பார்கள். அது உண்மை; மேலே போகப் போக சம்பளம் அதிகம்; கீழே வர வர சம்பளம் மிக அற்பம். பெரிய சம்பளக்காரரின் வாழ்க்கை மட்டும்தான் இல்லற வாழ்க்கையோ? ஏனையோரின் இல்வாழ்வு என்னகும் என்று நிர்வாகிகள் யோசித்துப் பார்த்தார்களா? ஆரம்பக் கல்விக்கு ஆசிரியர்கள் அகப்படுவதில்லை என்று கூறினால், காரியம் நடக்குமா?

இந்தியர்களை நாகரிகப்படுத்தி, மேம்பாடு அடையச் செய்யும் உத்தமத் தொண்டில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்பெறும் ஐ. ஸி. எஸ். உத்தியோகக் குழுவினர்,—மாஜி இந்திய மந்திரி மாண்டேகு இரட்டையாட்சிச் சீர்திருத்தத்தை இந்தியாவுக்கு அளிக்கு முன்னர்—மாண்டேகுவை "வளைத்துக்கொண்டு," தங்கள் சம்பளத்தை அரைப்பங்கு அதிகமாக உயர்த்திக்கொண்டார்கள். கற்றறிந்த இந்தியர்களுக்கு தேசபக்தி அனுபவத்தில் இல்லை என்று குறை கூறும் மேயோ, ஐ. ஸி. எஸ். குழுவினரின் மேற்கூறிய செயலைப் பற்றி யோசித்ததுண்டா? ஐ. ஸி. எஸ். கூட்டத்தார் இந்தியாவுக்குச் செய்திருக்கும் நற்றொண்டுகள் சில. அவை

களை நாம் மனதார ஒப்புக்கொள்ளுகின்றோம். அதைப் போலவே, மேயோவும் கற்றறிந்த இந்தியர்களின் இன்னல் களையும் நிலைமையையும் உள்ளவாறு உணர்ந்து, தீர்ப்புச் சொல்லியிருப்பின்,—இந்தியாவுக்கு சுயராஜ்யம் நூறு ஆண்டு களுக்குள் வராவிடினும் பாதகமில்லை—நாம் எவ்வளவோ மகிழ்ச்சி யடைந்திருப்போம்! இந்தியர்கள் "அற்ப சந்தோஷிகள்" என்பதை அன்னியர்கள் உணர்ந்திருந்தால்—? அதைப்பற்றி நினைத்துநாம் ஏன் மனத்தைப் புண்ணாக்கிக் கொள்ளவேண்டும்?

> "கல்வி சம்பந்தமாகக் கையாளப் பெற்ற முறைகளில், இந்திய ஆட்சியை நடத்தி, நிர்வாகம் செய்துவரும் ஆங்கிலேயர்கள் சில பெரும் பிழைகளைச் செய்திருக்கிறார்கள்."

இவ்வாறு மேயோவும் எழுதியிருக்கக்கூடுமா என்று நண்பர்கள் வியப்படையலாம். மேற்கூறியது மேயோவின் எழுத்தே. ஆனால், அதை மேயோ மெழுகிவிடுகிறார். இத்தகைய தவறுகள் நேருவது இயல்புதான் என்று சமாதானம் கூறியிருக்கிறார். மேயோவின் இந்த விடத்து எழுத்து முழுமையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். நண்பர்கள் ஏற்கமாட்டார்கள் என்பது எனக்குத்தெரியும். அவர்களுக்கும் மேயோவுக்கும் ராஜி செய்வது எனது நோக்கமல்ல. எந்த முறையில் நான் மேயோவின் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பது நேயர்களுக்குத் தெரிய வேண்டுமல்லவா? பிறப்புமுதல் ஒருவனுக்கு மாமிசத்தில் வெறுப்பு இருக்கிறது. மாமிசம் என்று சொன்னாலேபோதும், அவனுக்கு வாந்திவரும் என்று வைத்துக் கொள்ளுவோம். அவனுக்கு நோய்வந்தது என்றும் வைத்துக்கொள்ளுவோம். அவனுடைய நோய்க்கு புலால் புசித்தால்

உடனே குணம் ஏற்படும் என்று வைத்தியர் கூறி, மாமிசத்தையும் அவனுக்குத் தருவாராகில், அவன் நோயினால் மரிப்பதற்குமுன், மாமிசத்தைக்கண்டு மனத்துன்பமடைந்து இளைத்து இறந்துபோவான். வைத்தியரின் நல்ல எண்ணத்துக்கு யாதொரு குறையுமில்லை. ஆனால் அந்த வைத்தியருக்கு நோயாளியின் மனப்பான்மையையும் உடல் பான்மையையும் அறிந்து வைத்தியம் செய்யத் தெரியவில்லை. வைத்தியர் செய்ததைதவறு என்ற இனத்திலே தான் சேர்க்கமுடியும். ஆனால் அந்தத்தவறு எத்தன்மைத்து, பார்த்தீர்களா? இந்தியர்களின் நாகரிகத்தையும் மனப்பான்மையையும் வாழ்க்கை முறையையும் அறிந்து, அவைகளுக்கேற்ற கல்விமுறைகளை துரைத்தனத்தார் வகுத்திருந்தால், இதற்குள் இந்தியா எவ்வளவோ முன்னேறியிருக்கும்! ஆனால் துரைத்தனத்தாரோ, மேலே கூறியிருக்கும் வைத்தியரைப் போல, தவறான முறையை க்கையாளுகின்றார்கள். இந்த முறையில் மேயோ குறிப்பிட்டிருக்கும் "சில பெரும்பிழைகளை" நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். நண்பர்கள் இனி மனம் நோகமாட்டார்கள் என்று எண்ணுகின்றோம்.

> "சுய ஆட்சி என்பது எந்த ஜனங்களுக்கும் கொடுக்கக் கூடிய ஒருபொருள் அல்ல.........பக்குவத்தினால் ஏற்படும் தன்னடக்கம் எந்த ஜனங்களுக்கும் (யாராலும்) கொடுக்கமுடியாது என்று பிரெஸிடெண்டு வில்ஸன் கூறியிருக்கிறார். அனுபவமில்லாதவர்கள் இந்த சொற்களின் கருத்தை உணரமுடியாது. ஒரு நாட்டாரின் வாழ்க்கைச் சரிதத்தினின்றும் தான் சொற்கள் அமைக்கப் பெறுகின்றன."

குமாஸ்தாப்படிப்பினாலும் கூச்சலினாலும் அன்னியரின் கருணையினாலும் சுய ஆட்சி வர முடியாது என்பதை இந்தி

யர்கள்—அதாவது சுயராஜ்ய ஆவல் பெற்ற இந்தியர்கள்—அறிவார்கள். சுயராஜ்யம் கொடுக்கப் பெறவேண்டும் என்றும் அல்லது எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் என்று கூறப்பெறும் மேடைப்பிரசங்கச் சூத்திரங்களை நாம் ஒப்புக் கொள்ளவில்லை. சுயராஜ்யம் என்பது உணர்ச்சியிலே அனுபவிக்கப்பட வேண்டிய பொருளாகும். சுயராஜ்யத்தை அறிவிலே, ஆற்றலிலே, கருமங்களிலே, தினசரி வாழ்க்கை நிகழ்ச்சிகளில் காணவேண்டும். பணந்தேடிய பின்னர் கடவுளைக்காணலாம் என்று சொல்லுபவன் ஒருக்கால் பணத்தைமட்டும் காணலாம்; பின்னர் அவன் கடவுளைக் காணமுடியாது. சுய ஆட்சி என்பதற்கு இந்தியர்களுக்குப் பொருள் விளங்காமலிருக்கலாம். ஆனல் ஆன்மமலர்ச்சியைப்பற்றி ஐரோப்பியர்களுக்கு அதிகம் தெரிய வில்லை என்பது தெளிவு. கீழ்க்காணும் குறிப்பு நேயர்களுக்குப் பரிசாக அளிக்கப் பெற்றிருக்கிறது.

இளநங்கை ஒருவள். அவளுடைய கணவன் எங்கோ சென்று விட்டான். நெடுங்காலம் சென்றது. திரும்பி வரவில்லை. அவனைப்பற்றி யாதொரு செய்தியையையும் காணேம். மங்கையோ தனது கணவனை கருத்திற்கொண்டு உருகி உருகி, வாட்டமுற்றுவருகின்ருள். அவளுடைய வறுமையோ சொல்லும் வகையன்று. மனக்கலக்கமுற்று வாடிநிற்கும் காலத்தில், அதிரூபலாவண்யமுள்ள, ஜவானன இளைஞன் குதிரைமீதேறிவந்து, தனது சுந்தர ரூபத்தை நினைத்து அகமகிழ்ந்து, இளங்கோதைக் கெதிரே வந்து, “நங்காய்! போனவன் திரும்பமாட்டான். திரும்பும் யோசனை அவனுக்கிருப்பின், அவன் உன்னிடம் சொல்லிக் கொண்டு சென்றிருப்பான்; அவன்பேடி; அவனைப்பற்றி நினைத்

துக்கொண்டு, உனதுஇளமைப்பருவத்தை, கடவுள்கொடுத்த பொக்கிஷத்தை, வீணுக்காதே. அழகை அழிப்பது இளமை யல்ல; அழகை அனுபவிப்பது இளமைப்பருவமாகும். ஆற்றலும் ஆஸ்தியும் (சொத்தும்) உள்ள மங்கை ஒருத்தி எனது இல்லத்தில் இருக்கிருள். ஆனல் அழகும் அமைதி யும் கொண்ட நீ, எனது வாழ்விற்கு அணிகலனுப் விளங்கு வாய் என்பது திண்ணம். எனது சுந்திரத் தோளுக்கும் உனது சுந்திர வதனத்துக்கும் பொருத்தமுண்டு. நான் சோரன் அல்ல. நான் நேர்முகமாகப்பேசும் சுத்த வீரன். என்னுடன் வா" என்ருன். மங்கை, முகத்தை மூடிக் கொண்டு, அப்புறம் திரும்பி, மௌனத்தில் ஆழ்ந்தாள். சுத்த வீரன் திகைத்துப் போனுன். இந்த மர்மத்தை யறியப்பக்கத்தில் மறைந்து நின்ருன்.

சிறிது காலத்திற்கெல்லாம், இலட்சுமியின் கடைக்கண் பார்வைப்பாக்கியம் பெற்ற கோடீசுரன் அந்த மங்கையின் முன்னேதோன்றினுன். அவனும் இளவயதுள்ளவன். அவன் அவளிடம் உரைத்ததாவது:— " மாதே! உன்னுடைய வறுமை நிலை மிகக் கொடியதாகும். வறுமையிலிருப்பதைக் காட்டிலும் என்ன குற்றம் வேண்டுமானுலும் செய்துவிட லாம். சுகத்தையனுபவிக்காத வாழ்க்கை பயனற்றது. உனது வாழ்க்கைச் சுகத்துக்காக கணவனே ஒழிய, கண வனுக்காக உனது வாழ்க்கை ஏற்பட்டதல்ல. வீட்டையும் செல்வத்தையும் ஆடை ஆபரணங்களையும் உனக்குத்தேடிக் கொடுக்காமல் ஓடிவிட்ட ஒருவனை நினைத்துக் கொண்டு, நீ வாளாயிருப்பது அறிவுக்கு பொருத்தமுள்ள விஷயமல்ல. இன்பமும் செல்வமும் செழிப்பும் சிறப்பும் வாழ்க்கையின் தேவைகள். சென்றவனைப் பற்றித்தூறு சொல்லுவது எனது

இயற்கையல்ல. சென்றவனை நினைந்து இருப்பவர் வருந்தி வாளாயிருப்பது இயற்கையை அவமதிப்பதாகும். உனக்கு வேண்டிய யாவும் இதோ இருக்கின்றன." மங்கை சொல்லுகிறாள்:—" உமக்கு வந்தனம்; எனக்கு ஆடையாபரணம் வேண்டாம், எனக்கு உண்ணஉணவும் வேண்டாம்; எனக்கு என் கணவன் வேண்டும். எனக்கு எனது கற்புப் போதும்." கோடீசுரன் திகைத்துப்போனான். " கற்பு என்று சொன்னாயா? அது என்ன? கணவன் போன பிறகு கற்பு ஏது" என்றான். "உம்முடைய இன்பமும் செல்வமும் சிறப்பும் செழிப்பும் எனக்குத் தேவையில்லை; நான் கூறும் கற்பு உமக்கு விளங்கவில்லை; என்ன செய்வது" என்றாள் மாது. கோடீசுரன், "கற்பு, கற்பு" என்று தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு, அப்புறம் நகர்ந்தான்.

மேற்கூறியது ஒருகற்பனை. நண்பர்கள் பொருள் செய்து கொள்ளவேண்டும். அவரவர் வாழ்க்கைக்கேற்றவாறுதான் சொற்கள் அமையும்; சொற்கள் விளங்கும்; சொற்கள் பொருள் கொள்ளும்; சொற்கள் பொருள் கொள்ளப்பெறும். உண்மை என்ற சொல்லுக்கு காந்தி கொள்ளும், கொடுக்கும் பொருள் ஒன்று; மற்றவர், உண்மையை காந்தி கொடுக்கும் பொருளில் கொள்ளமுடியுமா? 'சுய ஆட்சி என்ற சொல்லை இந்தியர்கள் அறியமுடியாது' என்று மேயோ கூறுகின்றார். ஒருக்கால் அறிய முடியாது என்று ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்தியர்கள் கூறும் " முக்தி" என்ற சொல்லின் மகிமையை மேனாட்டார்கள் உணர்வார்களா? " முக்தி வெறும்பொய், கனவு" என்பார்கள் மேனாட்டார்கள். கற்பு என்ற சொல்லை ஹிந்துப் பெண்மணிகள் கொண்டிருக்கும் பொருளில், மேனாட்டார்கள் கொள்ளமுடியுமா? முடியாது

என்று முரட்டுத் தனமாய்க்கூற நான் முன் வரவில்லை. சிரத்தையுள்ள மனிதர்களுக்கு எதையும் உணரும் சக்தி யுண்டு. அது மேயோவுக்குத் தெரியாது.

" நாகரிகமுள்ள நாடுகளின் நிலைக்கு, கல்விவிஷயமாக, 22½ கோடி இந்தியக் கிராமவாசிகளை யார் முன்னுக்குக் கொண்டு வரப்போகின்றார்கள்" என்று மேயோ கேட்கின்றார். 'தன்கையே தனக்கு உதவி' என்ற மகத்தான உண்மையை வாழ்க்கையில் ஏற்று வினையாற்றும் வெள்ளையர்களின் சந்ததியில் பிறந்த மேயோவுக்கு இத்தகைய சந்தேகம் எழலாமா? இந்தியர்கள் இதை விரைவில் செய்து முடித்தசெய்தி உலகத்தாருக்கு எட்டும் என்று நாம் உறுதி கூறுகின்றோம். ஜயபாரத !

" நூறுகோடி நூல்கள் செய்து
நூறு தேயவாணர்கள்
தேறும் உண்மைகொள்ள இங்கு
தேடிவந்த நாளிலும்
மாறு கொண்டு கல்விதேய
வண்மை தீர்ந்த நாளினும்
ஈறுநிற்கும் உண்மை யொன்
றிறைஞ்சி நிற்பள் வாழ்கவே. "

அத்தியாயம் 19.

"ஒளி மறுக்கப்பட்டதேன் ?"

இந்தியர்களுக்கு அதிகமாகக் கல்விப் பயிற்சி இல்லாமைக்குக் காரணங்கள் கூறி, அதற்கு இந்தியர்களைப் பொறுப்பாளிகளாக்கிய மேயோ, மீண்டும் அதே விஷயத்தில் தமதுகவனத்தைச் செலுத்துகின்றார். அவருடைய நெஞ்சம் குற்றமுள்ள நெஞ்சம் போலும்! அடிக்கும் பாத்தியத்தை வேண்டுபவன் அணைக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ரூபாய் நாணயத்தில் தலையும் பூவும் இருக்கிறதல்லவா? அதைப் போல பொறுப்பும் பாத்தியமும் ஒருங்கே செல்லவேண்டும். இதன் உண்மையை இந்தியர்கள் சுட்டிக்காட்ட லாகாதா? ஆளும் பாத்தியத்தைக் கொண்டிருக்கும் அரசாங்கத்தாரை, "இந்தியர்களுக்குக் கல்வியொளி ஏன் மறுக்கப்பட வேண்டும்" என்று ஜனுப் மகம்மது அலி ஜின்னு கேட்கலாகாதா? "உபாத்திமார்கள் ஏராளமாகக் கிடைக்காவிட்டால், இந்தியாவில் கல்வியைப் பரப்ப முடியாது. இந்தியர்களுக்கு இதைப்பற்றி அக்கரை கிடையாது. தமது கற்பை இழக்காமல், இந்திய ஸ்திரீகள் உபாத்திமை தொழில் பார்க்கமுடியாது" என்று மேயோ பன்னிப் பன்னிப் பேசுகின்றார். இவைகளைப்பற்றி நாம் ஏற்கனவே எழுதிவிட்டோம். மேயோவைப்போல நாமும் பன்னிப் பன்னிப் பேசப்போவதில்லை. ஆனல் மேயாவின் குறிப்புகளிற் சிலவற்றை மட்டும் எடுத்துக்காண்பிப்போம்.

"படுதாவிற்குள் வாழும் ஸ்திரீகளிடத்தில் மரியாதையுடனும், கௌரவத்துடனும் நடந்துகொள்ள வங்காளிகள்

கற்றுக்கொள்ளும் வரையில், பெண் உபாத்திமார்களின் தொண்டுசோத்தியப்பட்ட சங்கதியல்ல என்பது கல்கத்தா சர்வகலாசாலே கமிஷன் வந்தமுடிவாகும். வங்காளி என்ற சொல்லே நீக்கி, அதை இந்தியா முழுதுக்கும் உபயோகப் படுத்திக்கொள்ளலாம்.''

இந்தியர்களுக்குத் தங்கள் ஸ்திரீகளிடம் கௌரவமாய் நடந்து கொள்ளத் தெரியவில்லை என்று குறைகூறப் படுகின்றது. தமது அவதூறுகளுக் கெல்லாம் ஏற்ற சாட்சியாக மேயோ விட்ட அபே துபாய் சாமியார் எழுதியிருப்பதைக் கீழே தருகின்றோம்.

"வீட்டில் ஹிந்து ஸ்திரீகள் இழிவுபடுத்தப் படுகிறார்களென்றாலும், வெளியே அவர்களுக்கு உயர்ந்த மரியாதை கிடைக்கப் பெறுகின்றது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். நாம்(ஐரோப்பியர்கள்) கொடுக்கும் குழந்தைத்தனமான, சாரமற்ற மரியாதைகளை ஹிந்துக்கள் தங்கள் ஸ்திரீகளிடம் காண்பிப்பதில்லை. ஆனால் ஏதேனும் அவமானம் நேருமோ என்று ஹிந்து ஸ்திரீ அச்சங்கொள்ளவேண்டியதில்லை. தான் நினைத்த இடத்திற்கு ஒரு ஸ்திரீ போகலாம். எல்லாப் பொது இடங்களிலும் (ஐரோப்பியர்கள் அதிகமாயிருக்கும் இடங்கள் நீங்கலாக) அவள் செல்லலாம்; "காவாலிகள்'' அந்த நாட்டில் நிறைந்திருந்தும், அவளுக்கு யாதொரு அச்சமும்கிடையாது. தெருவிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ ஸ்திரீயை வெறித்துப் பார்ப்பவனைக்கண்டு சத்தம் போட்டுக் கேலிசெய்வார்கள். நாகரிகமற்ற கீழ்ச்சாதி மனிதன் என்று அவன் கருதப்படுவான்.''

ஹிந்துக்களைப் பற்றி நல்ல வார்த்தை சொல்லக்கூடாத சாமியார் எழுதியிருப்பதை நோக்குவார்களாக! இந்த நிலை இருந்த காலத்திற்குப் பின்னர் இப்பொழுது சற்றேறக்குறைய

நூற்றைம்பது ஆண்டுகள் ஆகின்றன. மேயோ கூறியிருப்பது உண்மையாயின், அந்த நிலைமை ஏற்பட்டதன் காரணத்தை விரித்துக் கூறத்தேவையில்லை. சாமியார் எழுதியிருக்கும் எழுத்திலிருந்தே காரணத்தைத் தெரிந்து கொள்ளலாம். சாமியார் மீண்டும் எழுதுகிறார்:—

"நான் அடிக்கடி சத்திரஞ் சாவடிகளில் இரவைப் போக்குவதுண்டு. அங்கு ஆண்களும் பெண்களும் "ஒண்ணடி மண்ணடியாக" படுத்துறங்குவார்கள். ஆனால் எவரும் தகாத சொற்களைக்கூறி அல்லது தகாத செயல்களைச் செய்து இரவின் அமைதியைப்போக்கினதில்லை. மேற்கூறிய வாறு செய்யுமாறு எவனுடைய புத்தியாவது கெட்டுப் போகுமாயின், அவனை எல்லோரும் வளைத்துக் கொண்டு, விரைவான தண்டனையை அளித்து விடுவார்கள்."

சாமியாரின் இந்த வாக்கியங்களை நாம் எத்தனையோ தடவைகள் படித்துப்படித்துப் பார்த்தோம். நமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. "பாரத அன்னையே! மேயோ அவதூறு கூறும் பரிதாப நிலைக்கு நீ எவ்வாறு வந்தாய்" என்று மனங்கசிந்தோம். சத்திரஞ் சாவடிகளில் இரவில் படுத்துறங்கும் வழிப்போக்கர்கள் பெரும்பாலும் "வீடு வாச" லற்றவர்கள். வறுமையிலாழ்ந்துகிடக்கும் அவர்களிடையேகூட மேற்கூறிய நடை நேர்மை இருந்திருக்குமாகில், பண்டை இந்தியர்களின் கற்பை வருணிக்க வேண்டும்; வாயால் புகழவேண்டும். அதைப்பற்றி வாதம் பேச இடம் ஏது? சுமார் நூற்றைம்பது ஆண்டுகளாகத்தான் இந்தியாவில் மேநாட்டு நாகரிகம் வேரூன்றத் தலைப்பட்டுவருகின்றது. என்னே, தற்போதைய இந்தியாவின் நிலைமை! மேநாட்டு நாகரிகத்தின் விளைவு என்று கொள்ளலா

மல்லவா? நாம் அவ்வாறுகூறத் தயாராயில்லை. பழைய வாழ்க்கைமுறை முறிந்துபோய், நிலைத்த புதிய வாழ்க்கை முறை ஏற்படும் வரையில், எழுந்திருக்கும் குழப்ப வாழ்க்கையால் நேர்ந்துள்ள தீமைகள் மேயோ குறிப்பிட்டிருப்பவை என்றும் கொள்ளலாம். உலகத்திலே கீர்த்தி பெற்று வாழும் வெள்ளையர்களுக்கு இல்வாழ்க்கையில் ஒழுக்கக்குறைவு உண்டென்று கூறும் மதியீனத்தை நாம் ஒருபொழுதும் ஆதரித்ததில்லை, ஆதரிக்கப்போவதுமில்லை. கற்பு இல்லாத ஜனசமூகத்தின் கட்டுவிட்டுப்போகும். கட்டுத்தளர்ந்துபோன ஜனசமூதத்தார் உலகத்தின் பெரும் பகுதியைக்கட்டி யாளமுடியுமா?

"கிராமத்தார்களைக் கவனிப்போம். பொதுவாக, அவன் கிராமப்பள்ளியைப் பற்றிகவலை எடுத்துக் கொள்ளுவதில்லை. தனது பையன் தனக்கு உபயோகப்படக்கூடிய சமயத்திலெல்லாம்—மாடுகன்றுகளைப்பார்க்க, சில்லறை வேலைகளைச் செய்ய—அவனைப் பள்ளியிலிருந்து அழைத்துக் கொண்டு போய்விடுகிறான். குழந்தைகள் வேலை செய்து, கூலி சம்பாதிக்காமற் போயின், தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு, விவசாயம் செய்பவன் கஷ்டப்பட்டுப்போய் விடுகிறான். நோய்களின் காரணமாயும்,' குழந்தைகள் பள்ளிகளுக்கு வாமுடிவதில்லை.........இந்திய விவசாயிக்குப்புதிய மாறுதல்கள் பிடிப்பதில்லை. அவனுடைய தகப்பனுருக்கு எழுத்துப் பழக்கம் கிடையாது. அவனுக்கும் கிடையாது. எனவே, எழுத்துப்பழக்கம் நல்லதென்று அவனிடம் யார் சொல்லுவது? எழுத்துப் பழக்கம் ஏற்பட்டால், பையன் நல்ல வியாபாரியாக முடியுமா! நன்றாக உழுது, பயிர்ச் செலவு செய்யத் தெரிந்து விடுமோ?"

இந்திய விவசாயிகளின் நிலைமையை அனேகமாக உண்மையாய் மேயோ எழுதிவிட்டார். ஆனால் கொடுக்கிலே தான் விஷம் இருக்கிறது. கிராமத்தானுக்குக் கல்வியின் பெருமை தெரியும். ஆனால் ஒரு குடும்பத்தில் கிழப்பாட்டி முதல் சிறு பையன் வரையில் சேர்ந்து வேலை செய்தால் தானே, குடும்பம் நடக்க முடிகிறது? ஏழை இந்திய விவசாயியின் வறுமைதான் நாட்டில் கல்விபரவாததற்கு மூல காரணமாகும். "கல்வித்திட்டம் அனுபவத்திட்டமாயில்லை" என்று பலபிரிட்டிஷார்கள் கூறுகின்றனர் என்று மேயோவே எழுதியிருக்கிறார். "பொருளாதாரக்கல்வி, கவர்ச்சிதரக்கூடிய வகையில் அமைக்கப் பெறாததற்குக் காரணம், இந்தியாவை அடிமைத்தனத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கந் தான்" என்று மாஜி மைசூர் திவான் ஸர். விசுவேசுரய்யா கூறுகின்றார். மேனாட்டு நாகரிகத்தை உயர்வாகக் கொள்ளும் இந்தியர்கள் அவரைப்போல யாருமே இருந்ததில்லை எனக்கூறலாம். மைசூர் சமஸ்தானத்தின் தற்போதைய செல்வச் செழிப்புக்கு திவான் விசுவேசுரய்யாதான் காரணர் என்பதை நண்பர்கள் அறிந்திருப்பார்கள். வறுமையிலாழ்ந்து கிடக்கும் இந்தியனை எதற்கும் பழிகூறுதல் தகாது. அவனைக் கரையேற்றப் பார்ப்பவர்கள் அவனைத் தூற்ற மாட்டார்கள். திட்டித் தங்கள் பொறுப்பைக் கழித்துக் கொள்ள எண்ணும் பெரியோர்களுக்கு, எத்தனை சமாதானங்களைக் கூறினாலும், போதமாட்டா. 'அப்பொழுதே சொன்னேனே' என்று தங்கள் சாமர்த்தியத்தையும் போலி அனுதாபத்தையும் காண்பிப்பது யார்க்கும் எளிது. 'நடக்கும் என்று சொன்னேனே' என்று ஐரோப்பாவில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவற்றையும் பற்றி நாற்காலி வேதாந்தமும் சாமர்த்தியமும்

பேசுவது நம்மில் யார்க்கும் அருமையான காரியமல்ல. நெருப்பு என்றால் வாய் வெந்துபோகாது; சாப்பாடு என்று கூறினால் மட்டும், வயிறு நிறைந்து போகாது.

ஒரு சமூகத்தில் உயர்பதவி யிலிருப்பவர்கள் தான் தங்களுக்குக் கீழிருப்பவர்களை உயர்த்தும் பொறுப்பைக் கொள்ளவேண்டும். கீழிருப்பவர்களைக் குறைகூறினால்மட்டும் அவர்கள் உயர்ந்து விடுவார்களா ? ஜப்பான் நாடு உலகத்தாரால் மதிக்கப் பெற வேண்டும் என்று மிக்காடோ (ஜப்பான் மன்னன்) தீர்மானங் கொண்டார். தீர்மானங்கொண்ட மன்னன் "சமுராை" என்ற உயர் வகுப்பாரின் ஒத்துழைப்பைப் பெற்றார். அரசனுடைய நன்னோக்கைக் கண்ட "சமுரை" ஒத்துழைக்கவும் மறுப்பார்களா? முப்பது ஆண்டுகளுக்குள் உலகிலுள்ள நாடுகள் மதிக்கும் நந்நிலைக்கு ஜப்பான் வந்து சேர்ந்து விட்டது. ஜப்பான் பழைய சங்கதி என்று சிலர் சொல்லக்கூடும். நமது கண்களுக்கு முன்னே, இதாலியா தேசத்தில் நடப்பதைப் பாருங்கள். ஆஸ்திரியாவின் பிடிப்பினின்றும் இதாலியா விடுபட்டு, இன்றைக்குச் சுமார் அறுபது வருஷங்களாகின்றன. மேநாட்டு நாகரிகத்துக்குத் தாய் நாகரிகமாகிய ரோம நாகரிகம் பிறந்த இதாலியா நாடு அடிமைப்பட்டுக் கிடந்ததா என்று எவரும் வியப்படைய வேண்டியதில்லை. இதாலியா விடுதலை பெற்றது; ஆனால் உலக மதிப்புக்கு அதுபாத்திரமாயிற்றா ? விடுதலையடைந்த இதாலியா உலகத்தாரின் அனுதாபத்திற்கும், நகைப்புக்கும் இலக்காயிருந்து வந்தது. சென்ற ஐரோப்பியப் போருக்குப் பின்னர், இதாலியாவில் "பஸிஸ்டு" கட்சியார் என ஒரு கூட்டத்தார் தோன்றினார்கள். கூட்டத்துக்குத் தலைவர் முஸோலினி அவர்கள். பஸிஸ்டு கட்சியார் சென்ற ஆறு

ஆண்டுகளாக இதாலியாவின் ஜனசமூக நிர்மாணப் பொறுப்பை ஏற்று உழைத்து வருகின்றார்கள். இந்த ஆறு ஆண்டுகளுக்குள் அந்த நாட்டில் தோன்றிய அற்புதம் தான் என்ன? ஆங்கில சாம்ராஜ்யம், பிரான்சு, ஜர்மனி, அமெரிக்கா—உலக நாடுகள் முஸோலினியின் சொற்களை எதிர் நோக்கி நின்ற வண்ணமாயிருக்கின்றன. செல்வச் செழிப்பும், ஊக்கமும், உள்வலியும், துணிவும், தியாக உணர்ச்சியும் கொண்ட இதாலியாவை உலகத்தார் மதிக்காமலிருக்க முடியுமா? இது ஆறு ஆண்டுகளுக்குள் நேர்ந்த அற்புதமாகும். "கோழைகள், பலவீனர்கள், பயனற்றவர்கள், ஒன்றுக்கும் உதவாதவர்கள்" என்று முஸோலினியும் அவரைச்சேர்ந்தாரும் இதாலியர்களைத் தூற்றவில்லை. செய்யவேண்டிய காரியங்களைச் செய்தார்கள். ஒரு நாட்டையோ அல்லது ஒரு மனிதனையோ முன்னுக்குக் கொண்டுவரும் வழி இதுதான். அதை விடுத்து, தூற்றவோ அல்லது இகழ்ந்து கூறவோ எவனுவது துணிந்தானுகில், அவன் தனது பொறுப்பினின்றும் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிருன் என்று முடித்து விடலாம். "சௌரி சௌராவின் கொடிய சம்பவங்களுக்கு நான்தான் காரணம்" என்று காந்தி கூறினுர். அவர் கூறியது அகம் பாவத்தாலல்ல. பொறுப்பை ஏற்றுக் கருமம் செய்யும் வீரர்களின் மனப்பான்மையாகும் காந்தியின் மனப்பான்மை. மிகாடோவின் ஆசையும், முஸோலினியின் துணிவும், காந்தியின் பொறுப்பும் இந்திய அதிகாரவர்க்கத்தாருக்கு இருக்குமாகில், இந்தியா,—ஆறு ஆண்டுகளில் அல்ல—ஆறுமாதங்களுக்குள் உலகத்தின் நன்மதிப்புக்குப் பாத்திரமாகக்கூடிய நன்னிலைக்கு வந்துவிடும். இந்திய ஜனசமூக நிர்மாண வேலையை ஏற்பவர்கள் மேயோவின் குற்றங்காணும் மனப்பான்

மையைக் கொண்டால், ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும், இந்தியா முன்னேற முடியாது. மேயோவின் சொற்களால், இந்திய தேசபக்தர்களுக்குப் பொறுப்பு ஏற்படும் என்று நம்புகிறேன். ஜன சமூகத்தை நடத்தும் பொறுப்புள்ளவர்கள்—அரசியலாரும் ஏனையோரும்—தங்கள் பொறுப்பை உணரா விட்டால் அல்லது கழித்துக் கொண்டால், "ஒளி மறுக்கப் பட்டதேன்" என்பதற்கு வேறு காரணமும் வேண்டுமா?

"ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்லபாரத நாட்டிடை வந்தீர்!
ஊனமின்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்குகல்வி யுழைப்பை மறந்தீர்
மானமற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வெனலாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா
புன்மைதீர்ப்ப முயலுவம் வாரீர்."

அத்தியாயம் 20.

ஏன் செய்யவில்லை?

இந்தியாவின் நிலப்பரப்பு முழுதும் இந்திய அரசாங்கத்தாருக்குச் சொந்தமாகும். எனவே, நிலத்தைப் பயிர்செய்து, அனுபவிக்கும் இந்திய மிராசுதாரர்கள் நிலச்சுவான்தாரர்கள் அல்ல; அவர்கள் குத்தகைக்காரர்கள். இந்திய அரசாங்கத்தார் சாசுவத சொந்தக்காரர்கள்; இந்திய மிராசுதார்கள் சாசுவத குத்தகைதாரர்கள். எனவே, மிராசுதாரர்கள் கொடுப்பது நிலவரியல்ல; அது நில வாடகையா

கும். இவ்வாறு இந்தியாவின் சட்டம் கூறுகிறது. நான் எனது கற்பனையால் கூறவில்லை. இந்தியாவைத் தமது உடமையாகப் பாவிக்கும் அதிகார வர்க்கத்தினர் அதைச் செழிப்படையுமாறு செய்ய என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று வினவுதல் கூட கூடாது என மேயோ கூறுகின்றார். பண்டைக்காலத்தில் நீகிரோவர்களை அடிமைகளாக வைத்துக் கொண்டுத் தாங்கள் செல்வத்தைச் செழிக்கச் செய்துகொண்ட "வெள்ளை" முதலாளிகளின் மனப்பான்மை உலகத்தை விட்டு அகன்று விட்டதா ? அத்தகைய மனப்பான்மை மேநாட்டாரை விட்டுப்போய் விட்டது என்று மேயோ கூறமுடியுமா ?

> "என்னுடைய கிராமம் (இத்தகைய கேவல) நிலைக்கு வரும்படியாக, சென்ற நூறு ஆண்டுகளாகப் பிரிட்டிஷார் என்ன செய்து கொண்டிருந்தார்கள் ?"

இவ்வாறு, வக்கீல் தொழிலில் அமர்ந்திருக்கும் பெரிய மிராசுதாரர் ஒருவர் மேயோவைக் கேட்டாராம். தம்முடைய பணத்தை வைத்துக்கொண்டு, இவர் தமது கிராமத்துக்கு என்ன செய்தார் என்று மேயோ நம்மைக் கேட்கின்றார். சக்கரத்தை முடிப்பதற்கு, நாம் வேறு யாரையேனும் கேட்கவேண்டியதுதான். 500000 கிராமங்களை மேற்பார்க்கவேண்டிய மகத்தான பொறுப்பு வகிக்கும் அரசாங்கத்தின் மீது இந்த கனவான் (ஒருமை) பழிசுமத்தத்துணிந்தாரே என்று மேயோ சீறுகின்றார். இவர் தான் ஒரு கனவான்; அரசாங்கமும் ஒரு கனவான்தானே? அரசியல் என்பதை அறவே அறியாத ஜனங்களுக்கு எழுதுவது போல் மேயோ எழுதுகின்றார். இந்த சமாதானத்தைக் கொண்டு, ஒவ்வொரு கிராமத்தைப் பற்றிய பொறுப்பையும் அரசாங்

கத்தார் தங்களிட மிருந்துகழித்துக் கொண்டுவிடலாமே! மேலும் பெரிய பொறுப்பாகிய, இந்தியர்களை அன்னியப் படை யெடுப்பினின்றும் காக்கும் பொறுப்பை, இந்திய அரசாங் கத்தார்மேற் கொண்டிருக்கும் பொழுது, கிராம சுகாதாரம் முதலிய சில்லறை வேலைகளை அவர்கள் கவனிக்க முடியுமா? வாயாடி இந்தியர்களுக்கு இத்தகையசமாதானத்தைமேயோ கூறவும் கூடும். சமாதானங்களுக்காக்குறைவு?

"இந்தியன் துயர நோக்குடன் பிறப்பதில்லை. இளைஞர்களிடமும் முதியவர்களிடமும் மகிழ்ச்சியின் வேர்கள் காணப்படுகின்றன. ஏனையோர் சிரித்தால், இந்தியனும் விரைவிலே சிரிக்கின்றான்; கேலிசெய்தால் திரும்பவும் கேலிசெய்கின்றான். புதிதாய் ஒரு பொருள் வந்தால், அதை எல்லோரும் உற்று, ஊன்றிப் பர்க்கின்றார்கள். கூட்டங்களில் தத்துவம் பேசப்படுகின்றது. சொற் பொழிவும் நன்றாயிருக்கிறது. மேலும் புதிய புதிய கருத்துக்களும் தோன்றுகின்றன. கிராமத்தார்கள் கௌரவமுள்ளவர்கள்; விநோத முள்ளவர்கள். பிரியத்துக்கு பாத்திரமாயிருப்பவர்கள்; மரியாதைக்குரியவர்கள். சென்ற அறுபது ஆண்டுகளாக, நல்லமனிதர்கள் செய்து வரும் நற்றெண்டுக்கான நன்முயற்சிகளுக்கு உரித்தானவர்கள்."

"பொடி" வைக்காமல், மேயோவால் எழுதமுடியாது. மேலே கூறப்பட்டிருப்பது இந்தியர்களைப் புகழ்ந்து மேயோ கூறும் எழுத்து என்று கொள்ளக்கூடுமா? மூடனும் மனிதனுயிருக்கிறானே என்று ஒருவன் ஆச்சரிய மடைந்தானும்! இந்தியன் சிரிக்கிறானும்! கேலி செய்கிறானும். புதிய சங்கதியை ஊக்கத்துடன் கவனிக்கிறானும்! மேயோவுக்கு இது அற்புதமாகத் தோன்றுகின்றது. இந்தியனும் மனிதன்

தான் என்று மேயோ கண்டு பிடித்து விட்டார்! மனிதனுக்குரிய தன்மைகள் யாவும் இந்தியக் கிராமவாசிகளிடம் காணப் பெறுகின்றனவாம்! மனித சுபாவங்கொண்ட இந்தியனைக் கெடுப்பது எது? அவன் தழுவியிருக்கும்—அவனைக் கட்டி வளைத்துத் தழுவி நிற்கும் என்று மேயோ றவும் கூடும்—சமயம் (மதம்) அவனைக் கெடுத்து வருகின்றதாம். அந்தக் கேட்டை, அறுபது ஆண்டுகளாக நல்ல மனிதர்கள் (இந்திய அதிகாரவர்க்கத்தினர் நல்ல மனிதர்கள் என்று மேயோ குறிப்பிடுகின்றார்) முயற்சி எடுத்துக்கொண்டு, நிவர்த்திசெய்து வருகின்றார்களாம்! இந்த உண்மையை சிரமப்பட்டு கண்ட மேயோவுக்கு வாழ்த்துக் கூறி, இந்தியர்கள் ஆங்காங்கே வரவேற்புத்தான் படித்திருக்கவேண்டும். நன்றிகெட்ட இந்தியர்கள் தானே என்று எண்ணிக்கொண்டு, தமது நன்றியறிதலைக் காண்பிக்கும் பொருட்டு, மேயோ இந்த நூலை எழுதி வெளியிட்டார் போலும்!

"நான் போன கிராமங்கள் ஒவ்வொன்றிலும், என்னை ஜனங்கள் மகிழ்வுடன் ஏற்றார்கள்; என்னுடன் நட்புக் கொண்டார்கள். தயங்காமல் என்னிடம் நம்பிக்கை வைத்தார்கள்...............பல தலமுறைகளாக (ஆங்கிலேயர்கள்) உழைத்ததன் விளைவு இது எனக் கொள்ளுகின்றேன்"

மேயோவுக்கு கிராமங்களில் வரவேற்புக் கிடைத்தது எதனாலே? பல தலைமுறைகளாக ஆங்கிலேயர்கள் இந்தியாவில் உழைத்தன்பயனாக என்று மேயோ கூறுகின்றார். இந்தியர்கள் கொடுத்த வரவேற்புக்குப் பயன், மேற்கூறிய எழுத்தாகும். இந்தியாவுக்கு வந்த, வரும் அன்னியர்கள் யாவரும் வேற்றுமை பாராட்டப்படாமல் இந்தியர்களால்

உபசரிக்கப்பட்டனர், உபசரிக்கப்படுகின்றனர் • என்பதை மேயோ அறியார்போலும்! முதன் முதல் இந்தியாவுக்கு வந்த போர்த்துகீஸ், டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் இந்தியர்களால் விருப்புடன் வரவேற்கப் பட்டார்களே, அது எதன் பயனோ? வெள்ளையர்கள் இந்த நாட்டிற்கு நலன் விளைக்கப்போகின்றார்கள் எதிர்காலத்தில் என்ற எண்ணங்கொண்டு, அக்காலத்து இந்தியர்கள் அவர் களை வரவேற்றார்களோ? இந்தியர்கள் பட்டினி கிடக்கலாம்; ஆனால் இந்தியாவுக்கு வந்த அன்னியன் எவனும் சோற்றுக் குக் கஷ்டப்பட்டதில்லை. எல்லா உதவிகளையும் உபசாரங் களையும் பெற்றுக்கொண்டு, இந்தியர்களை மேயோவைப் போல தூற்றியவர்கள்தான் அதிகமாயுள்ளவர்கள்; இந்தியர் களின் தன்மையை மேயோ வால் புகழ்ந்து எழுதமுடியாது; எழுதினாலும், எழுத்தின்கொடுக்கில் விஷம் கலந்திருக்கும். மேயோ இந்தியாவுக்குவந்த நோக்கத்தையும் வகையையும் கவனிக்கவேண்டாமா! மேயோவைக் குறைகூறிப் பயன் என்ன?

"படித்த இந்தியர்கள் கிராமங்களுக்குச் சென்று ஜனங்களுக்குத் தொண்டு செய்யலாகாதா? அவர்கள் ஏன் அரசியலுரிமைகளுக்காக அடித்துக் கொள்ளவேண்டும்" என்று காந்தியை மேயோ கேட்டாராம். "நீங்கள் கூறுவது தத்துவ உபதேசம்" என்று காந்தி பதிற் கூறினாராம். காந்தி இவ்வாறு கூறினாரோ என்னவோ, அதுநமக்குத் தெரி யாது. ஆனால் கிராமத்தில் எத்தகைய வேலைகளை ஒரு தேசபக்தன் செய்ய முடியும்? சுமார் பதினைந்து ஆண்டு, களுக்கு முன், இந்தியப் போலிஸ் செய்து கொண்டிருந்த வேலையை மேயோ அறியார்போலும்! மக்களின் உயிரையும்

உடமையையும் காப்பாற்றுவது போலீசின் முதற் கடமையாகும். சுயராஜ்ப எழுச்சி தோன்றி, இந்திய இளைஞர்கள் "வந்தேமாதரம்" என்று இந்தியத் தாய்க்கு வாழ்த்துக் கூறினார்கள். வங்காளத்தில் வெடி குண்டு உதயமாயிற்று. உடனே "உயிரையும் உடமையும்" காக்கும் போலீசார் "வந்தே மாதரக்காரர்களை" கண்காணிக்கத் தலைப்பட்டனர். காலஞ்சென்ற கோகலே அவர்களே—அவர்பழுத்த மிதவாதி—இந்தியப் போலீசாரின் நடத்தையைப்பற்றி அக்காலத்தில் குறை கூறியிருக்கிறார். கிராமத்தில் தொண்டு செய்யத்துணியும் இளைஞர்களுடைய நிலைமையை விவரமாகக் கூறமுடியுமா ? தொண்டர்களின் செல்வாக்குப் பரவாமலிருக்குமாறு கிராம உத்தியோகஸ்தர்கள் போலீசாரின் உதவியைக்கொண்டு பார்த்துக் கொள்வார்கள். "தலையைக் குனிந்து கொள்ளாமல், நிமிர்ந்து, பரந்தமார்பைக் காட்டிக் கொண்டு சென்றால், போலீசுக்குக் கோபம் வரும்" என்று தமிழ்நாட்டுப்பிரசங்கி யொருவர் கேலிசெய்வதுண்டு. அரண் மனைக்கு எதிர்மனை இருக்க முடியுமா ? அதிகார மூலமாய்ச் செல்வாக்கைப் பெறும் மனிதர்கள் தொண்டர்களைத் தமக்குப் போட்டியாகக் கொள்வது இயல்பு. காகிதத்திலே "கிராம வேலை" என்று மேயோ நயமாய் எழுதிவிடமுடியும். ஆனால் கிராமங்களில் வேலை செய்யும் தொண்டர்களின் நிலைமையை அவர் அறிய மாட்டார். மது விலக்குப் பிரசாரம் செய்தால் ஸர்க்கார் வரியைக் கெடுக்கப்பார்க்கிறான் என்று தொண்டன் ரிப்போர்ட்டு செய்யப்படுவான். அம்மை குத்துதல் வீண் என்றால் அவன்,அதிகப்பிரசங்கத்துக்காக துன்புறுத்தப் படுவான். ஏழை இந்தியர்கள் அந்நிய நாட்டுத் துணிகளையும் சாமான்களையும் வாங்குவது அவர்களுடைய வறு

மையை வளர்க்கும் என்று காண்பித்து, கதர்ச் சாலையைத் தொண்டன் திறக்க முயன்றால், போலிசாரின் டைரியிலும் அவனுக்காக ஒரு ஏடு திறக்கப்பெறும். ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகூடாது என்று அவன் பேசினால், வேற்றுமையை வளர்க்க முயலுகின்றான் என்று கொள்ளப்படும். இவ்வளவிலும், அவன் சோற்றுக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டு, வேலை செய்ய வேண்டும். மேலும், எல்லோரும் புலவர்களல்ல. சில சமயங்களில், தொண்டன் சில தவறான சொற்களைப் பிரசங்கத்தில் பிரயோகம் செய்தால், அது ராஜ நிந்தனையாகி விடுகின்றது. மௌனமாய்த் தொண்டு செய்தாலோ, அவன் புரட்சிக்காரன் என்று மதிக்கப்படுகின்றான். அதிகாரவர்க்கத்தினர் கோலும் முற்போக்குத் திட்டத்தை ஏற்காத தொண்டன் கிராமத்தில் வேலைசெய்ய முடியாது. இதை நினைத்துத்தான், "உங்களுடையது தத்துவ உபதேசம்" என்று காந்தி கூறியிருக்கவேண்டும். வெறும் பேச்சுக்கும் அனுபவத்துக்கும் வேற்றுமையில்லையா?

> "நான் இந்தியாவை ஆண்டால், நாளைக்கே எல்லா சர்வகலாசாலைகளையும் மூடி விடுவேன். (இந்தியர்களை) க்குமாஸ்தாக் களாகவும் வக்கீல்களாகவும் அரசியல் வாதிகளாகவும் பழக்குவது பெருங் குற்றமாகும். (வாழ்க்கைக்குத் தேவையான) உணவுப் பொருளை உண்டாக்குவதற்குத் தான் அவர்களுக்கு முதலில் கற்றுக் கொடுக்கப் படல் வேண்டும்."

இந்தியாவில் நீண்டகாலமாக வியாபாரம் செய்துவரும் அமெரிக்கக்கம்பெனியை நிர்வாகம் செய்பவரான அமெரிக்கரொருவர் மேற்! கூறியவாறு மேயோவிடம் சொன்னாராம். அதன் பொருள் என்ன? இந்தியாவில் கொடுக்கப் பெறும்

கல்வி முறை தவறு என்று அவர் தெளிவாகக் கூறுகின்றார். தொழிற் கல்விவேண்டும் என்று முன்னொரு அத்தியாயத் தில் நாம் வற்புறுத்தியதும் இதே கருத்துக் கொண்டுதான். தொழில் பழக்கமில்லாத தொண்டன்—பணம் எவ்வாறோ வந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம்—கிரா மங்களிற் போய் என்ன செய்ய முடியும் ? மேநாட்டுச் சரக்கு களும் கருவிகளும் வாழ்க்கைக்கும் விவசாயத்துக்கும் தேவை என்று பிரசங்கம் செய்து, மேநாட்டு வியாபாரிகளுக் குத் தரகுத்தொழில் செய்யலாம். இந்த வேலையைத்தான் இந்திய இளைஞர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று மேயோ அடுத்து அடுத்துக் குறிப்பால் உணர்த்து கின்றார். காந் திக்கும் ஏனையோருக்கும் புத்தி ஏற்பட வில்லையே !

இந்தியாவில் எனக்கு இருபது வருஷ அனுபவமுண்டு. கல்விமுறைமுழுதும் தவறு என்ற முடிவுக்கு நான் வந்து விட்டேன் ''

என்று அமெரிக்க ஆசிரியரொருவர் மேயோவிடம் கூறினாராம். இதையேனும் மேயோ கவனித்தாரா ? ஏன் செய்யவில்லை என்றால் மேயோவின் மனப்பான்மையைக் கொண்டவர்கள் அனைவருக்கும் சீற்றம் வரலாம். அவர்கள் இந்தியாவினிடம் கொண்டிருக்கும் அனுதாபத்தின் எல்லை யென்ன ? சந்தேகங்கொண்டு எவரேனும் எதிர்த்து உரை யாடினாலும், அவர்களுக்கு கடுங் கோபம் உண்டாகும்.

'' வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழு மனித ரெல்லோர்க்கும்
பயிற்றி யுழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

"உடன்பிறந்தார் களைப்போலே—இவ்
வுலகில் மனித ரெல்லோரும்
திடங் கொண்டவர் மெலிந்தோரை—இங்கு
தின்று பிழைத்திடலாமோ?

அத்தியாயம் 21.

காந்தி

"வாழ்க நீ! எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாந்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்ம! நீ வாழ்க"

உலகத்தின் நாகரிகம் கிருஸ்து பிறந்தபின்னர்தான் வளர்ச்சி பெற்றது என்பதல்ல. உலகத்தில் மனிதன் எந்தக் காலத்தில் தோன்றினானோ, அந்தக்காலமுதல், அவன் தனது வாழ்க்கைமுறையில் நாகரிகத்தை விரும்பி, அதற்காக அரும்பாடுபட்டு உழைத்து வந்திருக்கின்றான். கூடி வாழும் இயல்பு மனிதனுக்குண்டு. கூட்ட வாழ்வில் குழப்பம் வந்து புகுந்து கொள்ளாமலிருக்கும்பொருட்டு, கட்டுப்பாட்டை நாடினான். கட்டுப்பாடு கொடுங்கோல் தன்மை பெறாமலிருப்பதற்காக, திட்டம் கோலப்பெற்றது. திட்டத்தைத்தியாகத்தின் மூலமாகத் தெளிவும் திடமும் படுத்திக் கொண்டான். தெளிவு அடைந்த வாழ்க்கையைத் தூய்மை

கொண்டதாய் ஆக்கிக்கொள்ள, அவனுக்கு ஆவலுண்டாயிற்று. தெளிவுக்காக, மனிதன் புறத்தோடு அதாவது வெளி இயற்கையோடு போராடினன். தூய்மையின் பொருட்டு, மனிதன் தன்னோடு போர் துவக்கினன். மனிதனுடைய கருத்துக்களும் உயர்ந்தன; கவலைகளும் அதிகரித்தன. மனிதன் தன் உணர்ச்சியை வளர்த்துப் பயிர் செய்தான். உண்மையும் சிறிது சிறிதாக அவனுக்குப் புலனாயிற்று. அரசியலில், ஆகாரத்தில், மற்றுமுள்ள வாழ்க்கைத்தேவைகளில் மாறுதல்களைச் செய்துகொண்டு வந்தான். கூடி வாழத்துவக்கிய மனிதர்கள் மண்ணைப் பண்படுத்தி, வீட்டைக்கட்டி, வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள். தன்னுடைய ஒவ்வொரு உணர்ச்சியையும் எந்தத் துறையில் உயர்த்தினல் உயரும் என்று உன்னிப்பார்த்தான்.

மனிதனுக்கு இரண்டு வகை ஆசைகள் தானுண்டு. சுகமும் சுதந்திரமும் மனிதனுக்கு இயற்கையாயுள்ள ஆசைகள். சுகத்துக்கான உணர்ச்சிகளும் கருவிகளும் சுதந்திர உணர்ச்சிகளும் கருவிகளும் வெவ்வேறாக முதலில் தோற்றினும், அவைகள் இறுதியில் ஒன்றேயாம். துணிவு சுதந்திரத்திற்குத் தேவையான உணர்ச்சியாகும். ஆனல் அதே துணிவு இல்லாமற் போயின், சுகமும் மனிதனுக்கு ஏற்படாது. சுகத்துக்குத் தேவையானது இல்வாழ்க்கை. அதே இல்வாழ்க்கை சுதந்திரத்திற்கும் இன்றியமையாதது. சுதந்திரத்துக்கு மிகத் தேவையானவை அரசியலும் சட்டமும். இவை யிரண்டும் இல்லாமற் போயின், மனிதர்களுக்கு சுகத்துக்கான வசதிகள் உண்டாகமாட்டா. சுகத்தையளிப்பது "ஒட்டிக்கொள்ளும் தன்மை"யாகும். அதே தன்மை சுதந்திரத்தை வளர்க்கும். தேசபக்தி உணர்ச்சி

யால், சுதந்திரம் பெறலாம; சுகவாழ்வையும் பெறலாம். சுகத்தின் அடித்தளம்சுதந்திரம். சுதந்திரத்தின் முடிவு சுகம்.

மேற் கூறிய இருவகை ஆசைகளையும் பூர்த்தி செய்து கொள்ள மனிதன் பலவழிகளிலும் முயன்று வருகின்றான். ஏனையோரை அடக்கியாளுவதனால், தனக்குச்சுகமும் சுதந்திரமும் உண்டாகும் என்று மனிதன் மதிமயங்கிய காலமுண்டு. காட்டில் வேட்டையாடி, கொன்ற மிருகங்களைத் தின்று களிப்பது சுதந்திரம் கொண்ட சுகவாழ் வென்று மனிதன் எண்ணியகாலமுமுண்டு. சுகத்திற்கும் சுதந்திரத்திற்கும் தேவை, பொருள் என்று கொண்டு, அதைத்தேட முயன்றான் மனிதன். பொறுப்பின்றி வாழ்வது சுகம், சுதந்திரம் என்று நினைத்தான். பொறுப்பை ஏற்றால்தான் சுகம் பெறலாம், சுதந்திர மடையலாம் என்று இப்பொழுது நினைக்கின்றான். கல்லைக் கடவுளாகக் கும்பிட்டான்; அதே கல்லை காலால் உதைத்தான். அகத்தில் கடவுளைத் துதித்தான் ; அகம்பாவத்தால் கடவுளை மறந்தான். பக்தியால் அமைதி பெற லாம் என்று கண்டான். பக்தியுடன் மடமையும் சேர்ந்து கூட வருவதையும் கவனித்தான். அறிவு தெளிவு வேண்டுமென்றான். அறிவு தெளிவு பட்டு வந்தது; ஆனல் மனத்திலிருந்த அமைதி ஓட்டம் பிடித்தது. இயற்கையுடன் போராட நினைத்து, புறச்சுகத்தைப் பெருக்கிக் கொண்ட மனிதன், தனது உள்ளத்தைத் தடுமாற்ற நிலைக்குக் கொண்டுவந்து விட்டான். மாயையினின்றும் விடுபட்டுச் சுதந்திர வாழ்வை வேண்டிநின்ற மனிதன் சுகத்தையும் இழந்து, சுதந்திரத்தையும் மறந்து உயிர் வாழ்கின்றான். அதாவது மனிதர்களுடைய வாழ்வு சக்கரம் சுற்றிக்

கொண்டே வருகின்றது. தர்க்க முறைப்படி தெளிந்த வாழ்வையும் தரும முறைப்படி இயற்கை வாழ்வையும் காண மனிதன் முயன்று வருகின்றான்.

மனிதவருக்கம் தேக்கமுற்று, உளையில் மாட்டிக் கொள்ளும். வல்லான் ஒருவன் ஒரு உணர்ச்சியை வற்புறுத்தி வாழ்க்கை முறையை வகுப்பான். அந்த முறையில்சென்ற கூட்டம் சிறிதுகாலத்திற்குப் பின்னர் தனது பலாபலத்தைத் தெரிந்து கொள்ளுகின்றது. பின்னர் ஒருவன் வருகின்றான். அவன் வேறொரு உணர்ச்சியைவற்புறுத்தி தான் கண்டதை முன்னிருப்பதுடன் இணைத்து விட்டுச்செல்லுகின்றான். பிறகு அதன் தீமைகள் வெளிப்படவே, வேறு வாழ்க்கை முறை தோன்றுகின்றது. இதைஒரு உதாரணத்தின் மூலமாய்க்காண்பிக்கின்றேன். கிருஸ்து பிறப்பதற்கு முன்னர் இருந்த ஆங்கில நாட்டிலிருந்து கவனித்துவருவோம். கூட்டமாக வாழ்ந்து வந்த ஆங்கிலேயர்களிடம் துவக்கத்தில் கட்டுப்பாடு இல்லை. கட்டுப்பாடு வற்புறுத்த வேண்டியதற்காக அரசியல் உண்டாயிற்று. அரசியல் வந்ததும் கொடுங்கோன்மையும் அதிகார ஆசையும் தோன்றின. கொடுங்கோன்மையை ஒழிக்கச் சிலர் சேர வேண்டி வந்தது. ஒருவனிட மிருந்து சிலருக்கு அதிகாரம் வரவே, ஏனையோரும் தலை தூக்க ஆரம்பித்தனர். இந்த நிலையில் அன்னியர்கள் ஆங்கில நாட்டில் கண் வைத்தார்கள். அரசியல் பொறுப்பு வகித்த சிலர், பொது ஜனங்களின் தேசபக்தி உணர்ச்சியைத் தூண்டி, அதற்கு மனுப்பண்ணிக் கொள்ள வேண்டியிருந்தது. தேசபக்தியால் தன்மதிப்பு எழுந்தது. தன் மதிப்பு, வாழ்க்கையில் சுகத்தைதூண்டிற்று. சுகத்துக்குப்பொருள் தேவை. பொருளுக்குத்தொழிலும்

வியாபாரமும் வேண்டும். தொழிலுக்கு சரக்குகளும் வியா பாரத்திற்குக் கப்பல் முதலிய கருவிகளும் தேவையல்லவா? இவைகள் கிடைத்தன. பொருளும் சேர்ந்தது. பொருள் சேர்த்த முதலாளிகள் அரசியலில் பங்கும் வேண்டினார்கள். அரசியலை நடத்திய முதலாளிகள் உலக நாடுகளை, தங்கள் வியாபாரத்தின் பொருட்டு, ஆங்கில நாட்டின் ஆளுகையின் கீழ்கொண்டு வரநேர்ந்தது. எனவே, ஏனைய நாடுகளுடன் போர்புரிய நேர்ந்தது. போரில் புகழும் பொருளும் கிடைக் கும் என்ற உணர்ச்சி ஆங்கிலேயர்களுக்குச் சிறிது காலந் தானிருந்தது. வியாபார வேட்கை கொண்ட ஏனைய நாடு கள் ஆங்கிலத்தைப் போருக்கு இழுத்தன. போரின் கொடுமைகளைக் கண்ட ஆங்கிலத்தொழிலாளர்கள் " போர் என்பது விலங்குத்தன்மை கொண்டது. அது உலக முத லாளிமார்களின் சூழ்ச்சியாகும்" என்ற முடிவுக்கு வந்து, அரசியல் முறையைமாற்றி போரைத் தொலைக்க வழி தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுருக்கத்திலிருந்து, ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு உணர்ச்சி ஓங்கி நின் றிருப்பதைக் காணலாம். இதைப்போலவே, ஹிந்துக்க ளும் தங்கள் உணர்ச்சிகளில் மாறி மாறி வந்திருக்கிறார் கள். இந்த இரண்டு கூட்டத்தார்களும் வாழ்க்கைமுறையை அறியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். இந்த சமயத் தில் காந்தி தோன்றினார்.

தோற்றத்தில் முரண் கொண்ட சக்திகளையும் உணர்ச்சி களையும் இணைத்துக் கருமம் செய்வதில் காந்திக்கு இணை யாக எவரையும் கூறமுடியாது. காந்தி போரை வெறுக் கின்றார்; ஆனால் போராட்டத்தை வெறுப்பதில்லை. பலாத் காரதைக்கண்டிப்பார்; பேடித்தனத்தையும்கூடக் கண்டிப்

பார். அறிவைப்புகழ்வார்; ஆனல் அன்பை மறக்கமாட்டார். கடமையைச்செய்வார்; ஆனல் உரிமையையும் விடமாட்டார். தத்துவம் பேசுவார்; ஆனல் காரியத்திலே கண்ணுள்ளவர். காந்தி சாது; ஆனல் மனிதனுடைய பலவீனங்கள் யாவையும் ஊடுருவிக்கண்டவர். காந்தி தேசபக்தன். ஆனல் உலகத்தார்யாவரும் அவருடைய உற்ருர்தாம். காந்தி ஏழைகளின் அன்பர்; ஆனல் தனவந்தர்களுக்கும் நண்பர். காந்தி ஆணுக்குத் தோழன்; பெண்ணுக்கு மந்திரி. சட்டத்தின் தேவையை உணர்ந்தவர் காந்தி; சட்டத்தை மீறவேண்டிய தேவையையும் அவர் உணர்ந்திருக்கிருர். காந்தி வினயமுள்ளவர்; ஆனல் தந்திரியல்ல. காந்தி அடக்கங் கொண்டவர்; ஆனல் வீரன். அமைதியை வேண்டுபவர் காந்தி; ஆனல் அமைதிக்காக, போராட்டத்திலிருந்து புறங்கொடுத்து ஓடுபவரல்ல. காந்தி பிடிவாதக்காரர்; ஆனல் பஞ்சாயத்துக்குக்கட்டுபடுபவர். காந்திக்கு அதிகாரத்தில் பிரியம் கிடையாது; ஆனல் மனிதர்களின் உள்ளத்தில் ஆட்சி செலுத்தி வருகின்ருர். காந்தி உழைப்பில் மகிழ்பவர்; உற்சாகம் கொண்டவர். கருமத்தை நம்பினவர்; ஆனல் கடவுளை மறவாதவர். மனித வருக்கம் இது வரையில் செய்த முயற்சியின், தவத்தின் முடிவு காந்தியாகும். மனித வருக்கத்தின் நாகரிகத்தின் மலர்ச்சி காந்தி. உலகில் தோன்றிய உத்தமர்களில் உத்தமர் காந்தி. தர்க்கமுறையையும் தருமத்தின் தேவையையும் சத்தியதரிசனத்தையும் இணைத்து வாழ்க்கையை நடத்துபவர் காந்தி. இத்தகைய காந்தியின் உயிரையும் உள்ளத்தையும் உறவையும் நாடாமல், மேயோ அடிகளின் உருவத்தை நாடிப் பின் வருமாறு கூறுகின்ருர்:—

"அவருடைய தலை மழுங்கச் சரைக்கப் பெற்றிருக்கிறது; (பாக்கியாக) அவர் தலையிலிருக்கும் மயிர் நரைத்து வருகின்றது. அவருடைய கண்கள் சிறுத்துக் கறுத்திருக்கின்றன. வீணாகமுயன்று தனது முயற்சி பயனற்றது என்று கண்டு கொள்ளா விடினும், அதினின்றும் விலகிக் கொள்ளும், ஒருவனுடையகண்களில் காணப் பெறும் துறவும் சோர்வும் அவர்கண்களில் காணப் பெறுகின்றன. என்றாலும், அவர் பேசுகையில், சிலசமயங்களில் அவரதுகண்களில் ஜோதி வீசுகின்றது. அவர்காதுகள் நீண்டுவெளியே தொங்கித்தோன்றுகின்றன. தொடை வரையில் மட்டும் அவர் உடுத்திக் கொண்டிருப்பதால், அவருடைய மயிர்நிறைந்த உடம்பும், மெலிந்த குச்சி போன்ற கைகளும் ஆடையில்லாத அவரது நுண்ணிய கால்களும் நன்றாகத்தெரிகின்றன. கால் மேல் கால் போட்டுக்கொண்டு புத்தனைப்போல அவர் வீற்றிருக்கிறார். அவருடைய கைகள் சதா ராட்டையைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

காந்தியின் ஸ்தூலத்தைக் கண்ட மேயோ, சூட்சுமத்தைக் காணாமல் தவிப்பதோடும் கூட, காந்தியின் தத்துவத்தையும் வாழ்வையும் உபதேசத்தையும் ஒத்துழையாமையையும் கேலி செய்கின்றார். காந்தியின் தன்மையைக் கணத்தில் கண்ட பாரதியார் என்ன கூறுகின்றார்?

"பெருங்கொலை வழியாம் போர் வழி யிகழ்ந்தாய்;
அதனிலும் திறன் பெரிதுடைத்தாம்
அருங்கலை வாணர்மெய்த் தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ யறிந்தாய்;
நெருங்கிய பயன் சேர் "ஒத்துழையாமை"
நெறியினால் இந்தியாவிற்கு
வருங்கதிகண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்க நல்லறத்தே"

அதியாயம் 22.

கோமாதா

உழவுத்தொழில் தான் இதியாவின் முக்கியத் தொழிலாகும். ஏனைய நாடுகளில், உழவுக்காக குதிரைகள் உபயோகப்படுத்தப் படுகின்றன. அந்த வழக்கம் இந்தியாவில் இல்லை. குதிரைகள் மலிவாக விற்பதில்லை என்ற காரணத்தால், குதிரையை விலக்கி யிருக்கலாம். மேலும் இந்தியாவில் உபயோகத்திலிருக்கும் கலப்பைகள் கனமானவையல்ல; எனவே, குதிரைகள் தேவையில்லை; பெரும்பான்மையான இந்தியர்கள் கிராமவாசிகள்; அவர்கள் விவசாயிகள். எனவே, பயிர்ச்செலவு செய்யும் இந்தியர்கள் பசுக்களைப்போற்றுவதற்குப் பொருள் உண்டு. ஆனால், ஹிந்துக்களின் வாழ்க்கை சீர் குலைந்து போகவே, இந்த கோபக்தி, கோஹத்தியாக (பசுக்கொலையாக) மாறிவிட்டது போலும்! "ஐரோப்பாவில் நூதன கருத்துக்களையும் கொள்கைகளையும் கருவிகளையும் காணும் பொறுப்பும் பாக்கியமும் பிரஞ்சுக்காரர்களையும் இதாலியர்களையும் சேர்ந்தவை. ஆனல் அவைகளை அமுலுக்குக்கொண்டுவரும் பாக்கியம் ஆங்கிலேயர்களைச் சேர்ந்தது" என்று யோகி அரவிந்தர் ஒருசமயம் கூறினர். நூதனச் "சரக்குகளை" க்காணும் பிரஞ்சுச் காரர்களுக்கும் இதாவியர்களுக்கும் உலகத்தில் தலைமைப்பதவி கிடைக்கவில்லை. ஆனால் ஆங்கிலேயர்களுக்குத் தலைமைப்பதவி கிடைத்திருக்கிறது. பிரஞ்சுக்காரர்கள் சிற்றின்பப் பிரியர்கள், இதாலியர்கள் சோம்பேறிகள் என்று பெயர் வாங்கியது தான் மீதமாகும்.

பண்டைக்காலத்து ஹிந்துக்கள் வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் அரிய ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்திருக்கின்

ளுர்கள். வெறும் "மொட்டை" த்தத்துவம் பேசுவதும் பகற் கனவு காண்பதும் அவர்கள் வழக்கமல்ல. துணிவு என்ற உணர்ச்சியை எடுத்துக் கொண்டால், அது எந்தந்த வகை களில் மனிதனுல் உபயோகிக்கப் பெறும், விலங்குகளால் காண்பிக்கப் பெறும் என்று அவர்கள் ஆய்வார்கள். ஒவ் வொரு நிகழ்ச்சிக்கும் மூலகாரண மாயுள்ள உணர்ச்சியையும் அதை ஒழுங்கு படுத்தி உபயோகிக்கக்கூடிய சந்தர்ப்பங்களே யும் சாதனங்களேயும் கண்டார்கள். கற்புக்குப் பதிபக்தி வேண்டும் என்று தெரிந்து கொண்டார்கள். அதைப்புகட் டினர்கள். ஜனசமூகப் குழப்பமின்றி வாழக்கற்பு இன்றிய மையாதது என்று கீதை கூறுகின்றது. இவ்வாறே, தன்மை களின் தன்மையை ஒவ்வொன்ருக ஆராய்ச்சி செய்துதக்க முடிவுக்கு வந்துள்ளார்கள். உழவுக்கு வேண்டியவை மாடுகள் என்று கண்டஹிந்துக்கள் கோபக்தியை வற்புறுத்தினர்கள். ஆனல் சுதந்திர மிழந்த ஹிந்துக்கள் தங்கள் "உயிர்" உணர்ச்சிகளே வளர்த்துக்கொள்ளாமல் "பாவனே" க்கருமங் கள் செய்து, "போலி" வேதாந்தம் பேசுகின்றுர்கள். இது வலியிழந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் எந்த நாட்டிற்கும் இயல் பாகும்.

திடீரென்று ஆங்கிலநாடு வேற்றுநாடு ஒன்றுக்கு அடி மைப் பட்டுப்போய் விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். நெருப்பு என்றுல்வாய் வெந்துபோகாது. எனவே, அவ்வாறு நேருவதாக வைத்துக் கொள்ளுவோம். உலகச் சந்தைகளில் ராணிபோன்று அரசு செலுத்திய பதவி ஆங்கில நாட்டிற்கு இருக்காது. தங்களுக்கு இலாபமில்லாத தொழில்களேச் செய்ய, ஆங்கிலேயர்கள் சம்மதிக்க மாட்டார்கள். தாங்கள் தேடும்பொருள் தங்கள் அனுபவத்திற்கும் இன்பநுகர்ச்சிக்

கும் தங்காமல் போய்விடின், அவர்களுக்குப் பொருள் தேடுவதில் ஊக்கமிருக்காது. பிரபுக்கள் என்ற கூட்டத்தார் ஏன் இருத்தல் வேண்டும் என்று சாமான்ய ஜனங்கள் கூப்பாடு போடுவார்கள். மூத்த மகனுக்குத்தான் சொத்தும் பட்டமும் நிலமும் சேரவேண்டும் என்றிருக்கும் சட்டம் அக்கிரமம் என்றும் அதை ஆக்கிய முன்னோர்கள் அயோக்கியர்கள் என்றும் சொத்தில் பங்கில்லாத ஏனையோர்கள் ஆங்கில நாட்டில் பிரசாரம் செய்வார்கள். பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம் முதலியன தீமை பயப்பவை என்ற கூக்குரல் எழும். இல்வாழ்க்கை நடத்த முடியாத ஆங்கிலேயர்கள் மணக்கமாட்டார்கள். சுதந்திரம் கொண்ட ஆங்கிலப் பெண்கள் வேற்று நாட்டு தளவந்த இளைஞர்களை மணக்க விருப்பம் கொள்ளலாம். ஏழை ஆங்கிலேயர்கள் ஜீவனத்துக்காக வேற்று நாடுகளுக்குச் செல்லலாம். அங்கு அவர்கள் இழிவுடன் கருதப்படலாம். மணமுமின்றி ஜீவனோபாயமுமின்றித் தவிக்கும் ஆங்கிலேயர்கள் பெண் விடுதலையைக்கண்டித்தும் பேசுவார்கள். பலவகைக் கருத்துக்களை வெளியிடும் நூல்களினாலேதான் நாட்டில் குழப்பமும் நாட்டுக்குக்கேடும் ஏற்பட்டுள்ளன என்று வாதம் செய்யும் "வீரர்கள்" தோன்றலாம். போரை புகழ்ந்து பேசமாட்டார்கள். வாழ்க்கைச்சிக்கனம் உபதேசம் செய்யப்படும். அதாவது இந்தியாவிலிருக்கும்தீமைகள் யாவும் ஆங்கிலநாட்டிலும் உண்டாகும். தெளிவு கொண்ட வாழ்க்கை நடத்தினால், எந்த நாடும் அடிமைப் பட்டுப்போக வேண்டியதில்லை என்று சொல்லுவதில் பயனில்லை. சில சமயங்களில் எதிர்பாராத அவகேடுகள் தொடர்ந்து நேரலாம். அப்பொழுது மனிதன்மாறுவதைப் பார்க்கவேண்டும்.

ஜாக்கிரதையுடன் ஒருவன் வாழ்கின்றான்: அவன் ஆயிரம் ரூபாயை இழந்து விடுகின்றான் என்று வைத்துக் கொள்ளுவோம். மிகுதியும் நல்ல, அறிவாளியான, ஜாக்கிரதை கொண்ட அந்த மனிதனுடைய மனப்பான்மை விநோதமாயிருக்கும். தனது நெருங்கிய நண்பர்களிடத்தும் கூட, அவன் சந்தேகம் கொள்ளுவான். தன்னைப்பற்றிக்குறை கூறிக் கொள்வான்.

நிகழ்ச்சி இவ்வாறு நடந்திருக்குமோ என்று விநோதம் கற்பனைகளை மனத்தில் எழுப்பிக் கொள்ளுவான். சட்டை முதல் சாக்கடை வரையில் தேடுவான். சிறுதுளைகளையும்—பணம்நுழையுமா என்றுகூட யோசிக்க மாட்டான்—தோண்டிப்பார்ப்பான். உட்காருவான், எழுந்திருப்பான், ஓடுவான், ஓலமிடுவான். தான் வெளியே சென்றது தவறு, உள்ளே பேசினது தவறு, தோட்டத்தில் காற்றுவாங்கியது தவறு என்று இன்னும் என்ன வெல்லாமோ யோசிப்பான். இவை யாவும் செய்தது தவறல்ல. தனது சட்டைப்பையின் ஓட்டையை அடைக்காமல் விட்டதுதான் தவறு என்பதை ஓட்டையில் மாட்டிக்கொண்டிருக்கிற நோட்டைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுவான். சட்டைப் பையைத்தைக்க மறந்தவனுடைய சந்தேகங்களைப் பார்த்தீர்களா? பணம் அகப்படவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். அவன் ருசியின்றி உண்பான்; களிப்பின்றிப் பேசுவான். உற்சாகமின்றி உழைப்பான்; ஏக்கமுடன் திகைப்பான். சிறிது காலம் வரையில், அவன் எந்த வேலையையும் மாமூலாகச் செய்வான். நஷ்டம் பெரிதாயின், வாழ்க்கையின் தூண்டுதல் அறவே ஒழிந்துபோய், எல்லாம் அவனுக்கு மாமூலமாகவே போய் விடும். நீண்டகாலத்திற்குக் குளிரிலிருந்

தால், உடல் மரத்து போகிறதல்லவா? நிரம்ப இரத்தமுள்ளவனுடைய உடலும் மரத்துப்போகும். மரத்துப்போன உடலைபெற்ற பயில்வானும் "பித்தபாண்டு" வும் ஒன்றுதான் என்று கூறமுடியுமா? பக்தியில் கரை கண்ட ஹிந்துக்கள் பாவனை பக்தி செய்வது அவர்களுடைய தற்போதைய வீழ்ச்சியைக் காண்பிப்பதாயினும், அதுவே அவர்களது பண்டைப் பெருமையையும் விளக்கும். தோல்வியுற்றுத் துன்பக்கடலில் ஆழ்ந்திருப்பவன் உயர்ந்தவனு அல்லது சோம்பிக்கிடந்து தத்துவம்பேசும் பேதை உயர்ந்தவனு? பெரிய நிகழ்ச்சிகளினிடையே நின்று பலவகை உணர்ச்சிகளை நரம்பில் ஏற்றிக்கொண்டவன் உயர்ந்தவன். ஒன்றும் செய்யாமல் தனக்கு மன அமைதி இருப்பதகாகக் கூறுபவன் மூடன் அல்லது பொய்யன். தன்னைப் பாதிக்கும் சம்பவம் நேர்ந்தால், அவனுடைய மன அமைதி, உத்தரவு பெற்றுக் கொள்ளாமலே ஓட்டமெடுக்கும்.

பசுக்களுக்குப் பாவனைப் பூசைசெய்து, உண்மையிலேயே அவைகளைப்பலியிடுகிருர்கள் ஹிந்துக்கள் என்று மேயோ கூறுகின்ருர். போதிய உணவு கொடுக்காமையிஞலே, இந்தியாவிலே பசுக்கள் மரித்துப்போகின்றன என்பதுமேயோவின் கட்சி. மேலும், கோபக்தி தங்களிடம் நிறைந்திருப்பதாகக் கூறும் ஹிந்துக்கள் இவ்வாறு செய்யலாமா என்று மேயோ கேட்கின்ருர். பொறுப்பைஏற்காதவனைக்காட்டிலும் பொறுப்புஏற்று நிர்வாகம்செய்தவன் தான் அதிகமாகத் தூற்றப்படுவோன். இது இயல்பு. பசுக்களுக்குப் பூசைசெய்யும் ஹிந்துக்கள், பசுக்களைப் போஷிக்கும் விஷயத்தில் குறை கூறப்படுவோர்களாகில், அது இயல்புதான். வெள்ளையர்கள் பசுக்களைக் கொன்ருலும், அதைப்பற்றி "கேள்வி

முறை" கிடையாது. ஏனையவரின் பசுவைக் கும்பிடுவதாக அவர்கள் யாரிடத்தும், எங்கேனும் கூறினதேயில்லை. எந்தக் கருத்தை ஒரு மனிதன் கொள்கையாகக் கொண்டு, அதனின்றும் வழுவி நடக்கின்றானோ, அந்த மனிதன் ஏனையோரால் குறை கூறப்பட்டுக் கண்டிக்கப்படுவது இயல்பு. தங்கள் கடமையை ஏனையோர் அறிவுறுத்தியதற்காக அவர்களிடம் கோபங்கொள்ளுவது தவறாகும். அவர்களுக்கு நன்றி செலுத்தலே பொருத்த முள்ளதும் நாகரிகம் கொண்டது மாகும். கோசம்ரட்சணை சம்பந்தமாக மேயோ கூறியிருப்பதில் சிறிது உண்மையில்லாமற் போகவில்லை.

ஆனால் இந்தியர்களின் உண்மையான நிலைமை அவருக்கு தெரியவில்லையாதலின், அதை எடுத்துக்கூற நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஹிந்துக்கள் உயர்ந்த இலட்சியங்களினின்றும் தவறி விழுந்ததற்காக அவர்கள் இகழ்ச்சிக்குரியவர்களல்ல ; உயர்ந்த இலட்சியங்களைக் கண்ட பெருமையும் பாக்கியமும் ஹிந்துக்களைத்தான் சேரும். துருவங்களைக் காண, கப்பல் பிரயாணம் செய்த மாலுமிகள் எத்தனை பேர்களோ ? அவர்கள் யாவரும் தங்கள் முயற்சியில் வெற்றி பெற்று விட்டார்களா ? வழியில் நேர்ந்த இடுக்கண்களின் மூலமாய் கப்பல் உடைந்துபோய், தங்களுக்கு வழித் துணைகளாகச் சென்ற நாய்களை மாலுமிகள் அடித்துத் தின்றார்களாகில், அந்த மாலுமிகளை இகழ்ந்து கூறமுடியுமா ? துருவம் சம்பந்தப் பட்டவரையில், நாயைத்தின்ற மாலுமியை உலகத்தார் தங்களுக்கு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். அவனை இகழ்ந்து பேசினால், உலகத்தார் ஒரு நாளும் துருவத்தைக் காண முடியாது. முதன் முதல் ஆகாய விமானத்தை நடத்தியவர்கள் வகையறியாமல்,

விழுந்து மாண்டுபோனார்கள். அவர்கள் உலகத்தாரால் (உற்சாகம் கொடுக்கப்படாமல்) ஏளனம் செய்யப்பெற்றால், ஆகாய விமானம் அப்பொழுதே அழிந்து போயிருக்கும். நூதனமாகக் கருத்தைக் கண்டவன் தோல்வியுற்றாலும், அவன் போற்றுதற்குரியன் ; அவன் உயர்ந்தவன். தோல்வியின் அனுபவத்தைக் கொண்டு வெற்றி பெற்றவனைத்தான் உலகம் மதிக்கின்றது. உயிர்ப்பிராணிகளிடம் அன்பு காட்டல் வேண்டும் என்ற உண்மையைக்கண்டு, அதை அனுபவத்தில் கொண்டு, பசுக்களை வணங்கிய ஹிந்து, உலகத்தாரின் நன் மதிப்புக்கு உரியவன்தான். ஜனநாயகதத்துவத்தை முதலில் கண்டவர்கள் பிரஞ்சுக்காரர்கள். ஆனால் அந்த தத்துவத்தை ஒழுங்குற வாழ்க்கையில் காண்பிக்கத்தவறிய பிரஞ்சுக்காரர்களை உலகத்தார் தூற்றலாமா? ஏளனம் செய்யலாமா ? செய்த நற்காரியத்துக்கு ஒருவனைப் போற்றவேண்டும் ; செய்யத்தவறியதைக் கண்டு கொள்ள வேண்டும். அதைப்பற்றித் தூற்றுவதால், ஜனசமூகத்தின் ஆக்க வல்லமை ஒருநாளும் வளராது.

"முதலியார் சோற்றுக்கு அழுகின்றார் லிங்கம் பஞ்சாமிருதத்திற்கு அழுகிறது" என்று ஒரு பழமொழியுண்டு. அதுபோல, நிரந்தரப் பஞ்சத்துக்குள் அகப்பட்டுழலும் இந்தியன் தனது கால்நடைகளை—சிறப்பாகத்தனது பசுக்களை—செவ்வனே நடத்த வில்லை என்று குற்றம் சாட்டப் பெறுவது விந்தையே. "தாடி யெரிகிற சமயம் பார்த்து, சுருட்டுக்கு நெருப்பு" கேட்ட கதையாக விருக்கிறது இது. என்றாலும் மேயோவின் வாதங்களை ஊன்றிக் கவனிப்போம். அழ அழக்கூறுபவர்கள் மூலமாய், நாம் நமது நன்மைகளைத் தேடிக் கொள்ளுவோமாக ! இந்தியாவில் காட்டி

விகா நிர்வாகம் செய்யப் பெறுவது மேயோவுக்குத் தெரியாது போலிருக்கிறது. மேலும் "மேச்சல் தரைகளை"ப் பற்றி மேயோவுக்குத் தெரியுமா? பசுக்களுக்கு ஆகாரம் ஆகாயத்திலிருந்து விழுந்துவிட முடியாது. நாடு முழுதும் தானியக் கழனிகளா யிருக்கின்றன. என்றாலும், இரண்டு வேளை அன்னம் வயிறு நிறைய உண்ணுவதற்கு முடிவதில்லை. ஒருவேளைச் சோற்றுடன் உறங்கப்போகும் இந்தியர்கள் இலட்சக்கணக்கில் இருக்கின்றார்கள். நாடு முழுதும் சாகுபடிக்கு வந்தாலும், போதியஉணவு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இது ஜாலவித்தையாக முடிகிறது. "மேச்சல் தரை" யில்லாமல் மாடுகள் கொழிக்கமுடியும் போலும்! "மேச்சல் தரை" களாயிருந்த காலியிடங்களையும் காடுகளையும் அரசாங்கத்தார் எவ்வாறு வினியோகம்செய்து வருகிறார்கள் என்பதைப்பற்றி, கோசம்ரட்சணை சம்பந்தமாக "இளமை இந்தியா"ப் பத்திரிகையில் காந்தியின் அனுமதி பெற்று எழுதி வரும் திரு. வி. ஜி. தேசாய் அவர்கள் பின் வருமாறு கூறுகிறார்:—

"பண்டைக் காலங்களிலும் முஸ்லீம் ஆட்சிக் காலத்திலும், கால்நடைகளுக்குப் பொது "மேச்சல் தரைகள்" இருந்தன. காடுகளிலும் போய் மேய்ந்து வந்தன. அப்பொழுது, கால்நடைகளை வைத்துக் கொள்ளுவதால், சொந்தக்காரர்களுக்குச் செலவேயில்லை எனலாம். ஆனால், தாங்களே பேசமுடியாத, தங்களுக்காகப் பரிந்துபேச எவருமில்லாத கால்நடைகளின் இந்தப் பாம்பரைச் சொத்தின்பேரில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆவல் கண் சென்றது. எனவே, நிலம் பறிமுதல் செய்யப்பெற்றது. இரண்டு நோக்கங்களைக்கொண்டு. நிலவரியை அதிகப்

படுத்தும்பொருட்டும், வேறு சில சமயங்களில் பாதிரிமார்களுக்குக்கொடுத்து உதவும்பொருட்டும். இவ்வாறு செய்ததின் விளைவு என்ன? இந்தியாவின் நிலப்பரப்புக்கேற்ற "மேச்சல் தரை" கிடையாது. இது சம்பந்தமாக, உலக நாடுகளனைத்திற்கும் கடைசியில் இந்தியா நிற்கின்றது...... எனவே, ஆங்கில ஆட்சியின் கீழ், நமது கால்நடைகள் குறைந்துவருவது வியப்பிற்குரிய விஷயமல்ல."

தேசாய் அவர்களின் எழுத்தை மேயோ எடுத்தாண்டிருக்கிறார். ஆனால் நேரே விடையளிக்காமல் மழுப்பிக் கொண்டுபோய் விட்டார். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் பயிர்ச்செலவாகும் நிலங்களில் நான்கில் ஒருபங்கில் மனிதர்களுக்கு உணவு சாகுபடியும், நான்கில் மூன்றுபங்கில் கால்நடைகளுக்குத் தீனி சாகுபடியும் நடைபெறுகின்றன என்று மேயோ நொண்டிச் சாமாதானம் கூறுகின்றார். அறிவில்லாத மனிதர்கள் இந்த சமாதானத்தை ஏற்றுக்கொள்ளுவார்கள். மேயோ கொடுத்திருக்கும் புள்ளி தவறல்ல; அவர் கூறியிருக்கும் சமாதானம் நேரியதல்ல. அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள் இந்தியாவைக்காட்டிலும் அரைப் பங்கு அதிகமான நிலப்பரப்பைக் கொண்டதாகும். அந்த பிரம்மாண்டமான நிலப்பரப்பில் பாலைவனங்கிடையாது. பூமி மிகவும் செழிப்பான பூமி. சென்ற முன்னூறு ஆண்டுகளாகத்தான், அந்த மண் மனிதர்களால் கைவைக்கப்பெற்றிருக்கிறது. மிக நேர்த்தியான நீர்வளத்தைக்கொண்ட பூமி. இந்த நிலப்பரப்பில் இருக்கும் ஜனத்தொகை என்ன? இந்தியாவிலிருக்கும் ஜனங்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறைந்தவர்கள் ஐக்கிய மாகாணங்களில் வசிக்கின்றார்கள்; அதாவது இந்தியாவின் ஜனத்தொகை

33 கோடியும் சொச்சமும்; அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் ஜனத்தொகை சுமார் பத்துக்கோடி. அதனாலேதான் அந்த நாட்டில் மேய்ச்சல் தரை யதிகமாகவும் பயிர்ச்செலவு நிலம் குறைவாகவுமிருக்கிறது. இன்னும் இருபது ஆண்டுகள் கழித்துப்பார்த்தால், சங்கதி வேறாகி விடும். பத்துக் கோடி ஜனங்கள் இருபது கோடியாகி விடுவார்கள். மேச்சல் தரைகளும் சாகுபடி நிலங்களும் பாதி பாதியாகிவிடும். சுமார் ஐம்பது ஆண்டுகளும் சென்று, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் அன்னியராட்சிப் பாக்கியமும் பெற்றால், அந்த நாட்டிலும் கால் நடைகள் எலும்புக்கூடுகளாகத் திரிவதைக் கண்ணுற் பார்க்கலாம்.

"குறிப்பிட்ட ஒரு சொல்லாலும், ஒரு கருத்தாலும் ஒரே விதமான மனவெழுச்சி தான் நமக்கும் இந்தியனுக்கும் ஏற்படுகின்றது என்று மேநாட்டிலிருக்கும் நம்மவர்கள் ஏமாந்து போகக்கூடும். இந்தியன் செவ்வனே ஆங்கிலம் பேசுவதால், அத்தகைய தவறுக்கு நாம் ஆட்படுகின்றோம். அவனுடைய சொல்லைப்போலவே அவனுடைய கருத்தும் இருக்கும் என்று தீர்மானித்துக் கொள்ளுகிறோம். உதாரணமாக, உயிர்களிடத்தில் அவனுக்கு பக்தி யுண்டென்றும், எல்லா ஜீவராசிகளிடமும் அவனுக்கு அன்புநிறைந்திருக்கிறதென்றும் அவன் கூறுகின்றான். இந்தத்துறையில் ஹிந்துவின் உள்ளம் இளகியதென்றும், நம்முடைய உள்ளம் கடினமானதென்றும், எல்லாஉயிர்களிலும் கடவுள்இருக்கும் தன்மையை நம்மால் காணமுடியவில்லை என்றும் அவன் அமெரிக்காவில் வந்து பிரசங்கம் செய்கிறான். தோற்றத்தில் கபடமில்லாத இந்தசொற்களினின்றும் ஹிந்துவுக்கு ஜீவராசிகளிடம் பச்சாத்தாப மதிகம் என்று கொள்ளுவோமானால், நாம் பெரும் தவறு செய்தவர்களாவோம்."

மேற் கூறியவாறு மேயோ தமது இனத்தோராகிய மேநாட்டார்களுக்கு எச்சரிக்கை செய்கின்றார். அவருடைய கோபமும்ஏளனமும் எந்த வழிகளில் சென்றிருக்கின்றன என்பதை நண்பர்கள் கவனித்தல் வேண்டும். ஹிந்து அமெரிக்காவுக்குப் போய், ஹிந்து நாகரிகத்தின் தன்மையை எடுத்துரைப்பது மேயோவுக்கு இனிக்கவில்லை. ஆனால், 390 பக்கங்கள் கொண்ட நூலில் இந்தியர்களைத் தூற்றவும், ஏளனம் செய்யவும், இறுமாப்புடன் அவர்களுக்கு உபதேசம் செய்யவும், உபதேசத்தை ஏற்க மறுத்தால் இந்தியர்களுக்குச் சாபம் கொடுக்கவும் மேயோவுக்கு உரிமை வேண்டும். தம்மைப் போலவே பிறரையும் கொள்ள வேண்டும் என்ற கடமை மேயோவுக்குப் பள்ளியில் கூட போதிக்கப்படவில்லை போலும்! ஜீவகாருண்ய மற்ற ஹிந்துக்களாம்! சிவன் தலையிலிருக்கிற பாம்பு விஷ்ணுவின் பாதத்திலிருக்கும் கருடனைக்கண்டு, "ஏன், கருடா சுகமா" என்று கேட்டதாம். "இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லோரும் சுகமாகத்தானிருப்பார்கள்" என்று கருடன் பதில் சொன்னதாகக் கதையுண்டு. மேயோ எழுதியிருக்குமாறு, அமெரிக்கர்களைத் தூற்றி ஒருநூல் எழுதப் பெறின், அதன் ஆசிரியர் அமெரிக்காவில் நடுவீதியில் கல்லடி உண்டு இறந்து போயிருப்பார்; ஆங்கிலேயர்களைப் பற்றி ஆங்கில நாட்டில் எழுதப் பெற்றால், மானநஷ்டதாவா தொடரப்பட்டு, ஆசிரியர் சிறையில் வைக்கப் பெற்றிருப்பார்; அல்லது தாங்க முடியாத அபராதம் விதிக்கப் பெற்ற ஆசிரியன் தற்கொலை செய்து கொள்ளுவான். இதாலியாலியில் எழுதப்பெற்றால், ஆசிரியர் பேதிக்கு விளக்கெண்ணெய் கொடுக்கப்பட்டு, மூட்டுகள் பதப்பட்டிருக்கும். பிரான்சிலோ, ஆசிரியர் இரகசிய

மாகச் சுடப்பட்டிருப்பார்; ஜர்மனியில் எழுதப் பெற்றிருந்தால், நாடுகடத்தபட்டிருப்பார். ருஷியாவில் ஆள் இருந்த விடம் தெரியாது. ஆனால் இந்தியாவிலோ, என்ன அவதூறு எழுதினாலும், விருந்தினர்களை வீடு தோறும் உபசரிப்பார்கள். இந்தியர்களின் இந்தத் தன்மையைக் கண்டு கொண்ட மேயோ, எதைத்தான் பாக்கி வைக்கப் போகின்றார்?

ஹிந்து ஆங்கில மொழியைச் செவ்வனே பேசுகின்றான் என்று மேயோ உள்ளம் பதறுகின்றார். புதிய பாஷையைக் கற்றுக்கொள்ளுவதில் ஹிந்துவை எவனும் தோற்கடிக்க முடியாது. இதனுடைய இரகசியம் என்ன? மேயோவுக்கு இந்த இரகசியத்தை தெரிந்து கொள்ள சக்தி கிடையாது. அதனாலேதான் உள்ளம் பதைக்கின்றார். எத்தனை சொற்களைச், சொல்லிக் கொடுக்கின்றோமோ, அவைகளைத் திரும்பச் சொல்லும் கிளிப்பிள்ளைகள். குழந்தைகள் சில சொற்களின் பொருளைத்தான் அறிவார்கள். பருவம் முதிர முதிர, குழந்தைகளுக்கு அதிகமான சொற்கள் பழக்கப்படுகின்றன. இதன்காரணம் என்ன? சொற்களைத் தெரிந்துகொண்டதால், அவைகளைத் தக்க இடங்களில் அழகும் அர்த்தமும் குறையாமல் பிரயோகம் செய்யமுடியாது. மனிதனுக்குப் பல வேறு நிலைகள் அர்த்தமாகவேண்டும்; அவைகளை அவன் உணருதல் வேண்டும்; பின்னர் அவைகளைப்பற்றிய அனுபவங்களை அவன் அறிவிலும் நரம்பிலும் ஏற்றிக்கொள்ளவேண்டும். பின்னர் இலக்கியம் தானாகவரும். "உள்ளத்தின் நிறைவினின்றும் வார்த்தை வெளிவருகின்றது" என்ற உண்மையை கிருஸ்தவ வேதம் தெளிவாகக் கூறுகின்றது. இதுவும் மேயோவுக்குத் தெரியாதுபோலிருக்கிறது. ஒரேசொல்லைப் பல இடங்களில்

பல பொருள்களில் உபயோகப்படுத்த யாரால் முடியும்? அனுபவக் களஞ்சியம் போன்றார்களால் முடியும். மனோ தத்துவ சாத்திரத்தில் நிபுணர்களான முன்னோர்களின் பரம்பரையில் தோன்றிய தற்கால ஹிந்து எந்த பாஷையை யும் எளிதிலே கற்றுக்கொள்ளமுடியும். எவருடைய வாழ்க் கையிலும் எளிதிலே கலந்துகொள்ளமுடியும். அதனாலே தான் அவன் எவரையும் வாய் கூசாமல் கண்டிக்க மனம் கொள்ளுவதில்லை. பிறருடைய நிலைமையின் கஷ்டத்தை யும் அவன் உணருகின்றான். எவரிடமும் ஒட்டிக்கொள் ளும் தன்மையில் ஹிந்து பழக்கப்பட்டிருக்கிறான். 'உப் பிட்டவரை உள்ளவரையிலும் நினை' என்று கொண்டு, ஹிந்து வாழ்க்கை நடத்துவதால், பல சந்தர்ப்பங்களில் அவன் கோழையைப்போல வெளியுலகத்திற் காணப்படுகின்றான். நன்றி செலுத்துதலுக்கும் கோழைத்தனத்துக்கும் வேற்று மையுண்டு என்பதை மேயோ தெரிந்து கொள்ளவில்லை. போலி உதவியைச் செய்து ஏமாற்றும் மக்களுக்கு நன்றி செலுத்தத் தேவையில்லை என்று ஹிந்துக்கள் இனியேனும் உணர்வார்களா? மனத்தின் கண் புதைந்து கிடக்கும் நுட் பங்களையும் உணர்ச்சிகளையும் அளவிட்டு நிறுக்கக் கூடிய ஆற்றல் மனிதனுக்குண்டு என்பதைக் கண்ட ஹிந்துக்கள் தற்போது பேதைகளாக வாழ்கின்றார்கள். பிறர் மனத்தி லிருப்பதை உள்ளபடியே சொல்லும் ஆற்றலை ஹிந்துக்கள் பயிற்சி செய்து வைத்திருந்தார்கள். ஹிந்துக்களின் அறிவுச் செழுமையையும் உணர்ச்சி வளத்தையும் திருவள்ளுவ நாய னார் இயற்றிய திருக்குறளைக் கண்டு யாரும் தெளிந்து கொ ள்ளலாம். இராமாயணத்தை, மகாபாரதத்தை, படித்துத் தெளிந்து கொள்ளலாம். எனவே, தற்கால ஹிந்துவுக்கு மொழிப்பயிற்சி கூடவா இருக்க முடியாது?

இந்த நிலைமையில் மேயோவின் உள்ளத்தின் நிலையை அடி முதல் ஆராய்வோமா? இறுமாப்புடன் இந்தியாவுக்கு வந்தார். பாவனை அடக்கத்தை வெளியே காண்பித்தார். பசுவின் தோலைப் போர்த்துக் கொண்டிருக்கும் புலியாகிய மேயோவின் தன்மையை மெள்ள மெள்ள இந்தியர்கள் தெரிந்து கொண்டார்கள். "கருத்துப் பண்டமாற்றுதல்" செய்தார்கள். இந்தவாணிபத்தில் ஏமாந்து போன மேயோவுக்குக் கோபம் எழுந்து விட்டது. இந்தியர்கள் பலவீனர்கள் என்று இறுமாந்திருந்த மேயோ இந்தியர்கள் அயோக்கியர்கள் என்று தூற்ற ஆரம்பித்து விட்டார். மேயோவின் நூலில் இந்தப் பகுதிதான் மிகுதியும் இனிப்புள்ள பகுதியாகும். வெற்றி விருதுடன் இது வரையிலும் எழுதி வந்த மேயோவின் பேனு தளர்ந்து போய் விட்டதை மேற் கூறிய கோபக் குறிப்பினின்றும் காணலாம். யாருக்கு வெற்றி வரும்? "தாக்குப் பிடிப்பவர்களுக்கு" அதாவது சகிப்பவர்களுக்கு.

ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள். சார்லெஸ் பிராட்லா என்ற உத்தமர் ஒருவர் ஆங்கில நாட்டிலிருந்தார். அவரை "நாகரிகமாயை" பிடித்த ஏனையோர் பகைத்தார்கள். அவருடைய இளம்பிராயத்தில் நேர்ந்த சம்பவம் நினைவுக்கு வருகின்றது. பிராட்லா தம்மைச் சேனையில் சிப்பாயாகப் பதிவுசெய்து கொண்டார். அந்தப் பட்டாளத்தில் முரடன் ஒருவன் இருந்தான். பட்டாளத்திலிருப்பவர் யாவரையும் வம்புக் கிழுப்பதுதான் அவனுக்கு வேலை. எல்லோரும் அவனைக்கண்டு அஞ்சினர்கள். அவன் பிரட்லாவையும் வம்புக்கிழுத்தான். பிரட்லா சாது, என்றாலும் பின்வாங்க அவருக்கு இஷ்டமில்லை. குத்துச் சண்டைக்குச் சம்

M. Muthuraman

மதித்தார்; சண்டை துவங்கிற்று. இரண்டு பேர்களின் உடம்புகளிலும் குத்துகள் சொரிந்தன. முரடன் ஆர்ப்பாட்டம் செய்தான். "மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ஓடிப்போ" என்று உறுமினன். பிரட்லாவின் நெஞ்சம் சிறிது தளர்ந்தது. ஆனால் அவருடைய குத்துத் தளரவில்லை. சிறிது நேரம் பார்ப்போம் என்று எண்ணினர். இவ்வாறு இரண்டு மூன்று தடவைகளில் எண்ணினர்; கடைசியாகத் 'தோற்றேன்' என்றுசொல்லலாமா என யோசித்தார். அந்த சமயத்தில் "நான் தோற்றேன், என்னை விட்டுவிடு" என்றான் முரடன். பிரட்லாவை எதிர்த்த முரடனுடைய மனப்பான்மை மேயோவுடையது என்று கூறினலும் பொருந்தும். ஒரே சொல்லுக்கு மேநாட்டார் கொள்ளும் பொருளும் இந்தியன் கொள்ளும் பொருளும் வெவ்வேருனவை என்று மேயோ சொல்லும் பொழுதே, அவர் தோற்றுப் போனர் என்பது தெளிவு. நிகழ்ச்சிகளுக்கு உண்மையான காரணங்களை மறைத்து, நொண்டிச் சமாதானங்களை எவராலுமே நீண்ட காலம் எழுதமுடியாது. எனவே, மேயோவுக்குக் கோபம் வந்தது வியப்பல்ல.

அன்னியர்கள் அவதூறு எழுதுவது ஒருபுறமிருக்க; காந்தி சொல்லுவதைக் கவனிப்போம்.

> "பசுபூசை செய்யப் பெறும் ஒரு நாட்டில், பசுவைப் பற்றிய பிரச்னை யாதொன்றுமே எழக்கூடாது. ஆனல் நமது கோபூசை வெறும் மூடபக்தியாகி விட்டது. நாம் ஆதரித்துப் போஷிக்கக் கூடியதைக் காட்டிலும் அதிகமான பசுக்களை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். கோசம் ரட்சணை சபையார் இந்தப்பிரச்னையைக் கவனித்தல்வேண்டும் என்று ஏற்கனவேயோசனை கூறியிருக்கிறேன்."

இந்தியாவில் பசுக்கள் மெலிந்து போயிருப்பதன் உண்மையான காரணத்தை காந்தி கூறியிருக்கிறார். கால் நடைகளுக்குத்தீனி போடுவதில் இந்தியன் கருமி என்று மேயோ கூறியிருக்கிறார். நாம் போஷித்து வளர்க்கக்கூடிய சக்திக்கு மீறி நாம் பசுக்களை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று காந்தி கூறுகிறார். இது பேராசையாலா அல்லது ஜீவகாருண்ய மேலீட்டாலா? பித்துக்கொண்ட நாயையும் கொல்லக் கூடாதுஎன்று காந்தியுடன் வாதம் செய்த ஜீவகாருண்ய ஜயினர்கள் இந்த நாட்டிலில்லையா? ஒரு மனிதன் உழைத்து, "ஊர்ப்பட்ட" பேர்களுக்கு அன்னம் அளிக்கும் ஜீவகாருண்யம் இந்தியாவிலே தான் உண்டு. இருக்கிற கூழைக்கலந்து குடிப்போம் என்ற சொற்களை இந்தியாவிலே தான் கேட்க முடியும். வந்த விருந்தினருக்கு சாதம் போட்டு, பட்டினியுடன் படுத்துறங்கி, மறுநாட்காலையில் வெறும் வயிற்றுடன் வேலைக்குச் செல்லும் விந்தைக்கிராமவாசியை இந்தியாவிலேதான் காணலாம். தனக்குப் பக்கத்தில் கன்றையும் பசுவையும் படுக்கப்போட்டு, தனது தாய்கொடுத்த பலகாரத்தைப் பசுவிற்கும் கன்றிற்கும் பங்கிட்டுக் கொடுக்கும் ஹிந்து உலகத்தாரால் வியப்புடன்நோக்கப்படலாம்; விலங்குடன்பழகும் விலங்கு என்றுஏளனம்செய்யப்படலாம். இவையாவும் ஹிந்துவின் ஜீவகாருண்யத்தையும் எப்பொருளுடனும் அவன் ஒட்டிக் கொள்ளக்கூடிய தன்மையையும் காண்பிக்கின்றன. ஆனால் தவறான வழிகளில் ஜீவகாருண்யம் காண்பிப்பதில் பிரயோசனமில்லை. ஐந்தடி உயரமுள்ள சுவரில் ஏறுவதற்கு வேண்டிய அளவு மூச்சுப் பிடித்து குதித்து ஏறினால், சுவரில் ஏறலாம். தேவைக்கு மிஞ்சினால், அவன் சுவரின் மறுபக்கத்தில் விழவேண்டும். அளவுக்கு மிஞ்சி

ஞல் அமுதமும் விஷம். இதைத்தான் ஹிந்துக்கள் நன்ருய்த் தெரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு அளவிலே, எல்லா நல்ல தன்மைகளையும் இணைத்து ஒற்றுமைப் படுத்தி, ஒன்றுபடுத்தி, அதைக்கொண்டு, ஹிந்து தனது வாழ்க்கையை நடத்துதல் வேண்டும். இல்லாவிடின் "எல்லாம் கெட்டானுய்" அவன் வாழநேரிடும். பசுவைக்கொன்று, சுவையுடன் உண்ணும் மனிதர்கள், பசுவைக்கும்பிடும் மனிதர்களுக்கு ஜீவகாருண்யப் பிரசங்கம்செய்ய நேர்ந்த காலத்தையும் சந்தர்ப்பத்தையும் நிலைமையையும் ஹிந்துக்கள் நன்ருய் ஆராய்தல் வேண்டும்.

"பழமை பழமை யென்று
பாவனை பேசலன்றி
பழமை இருந்த நிலை—கிளியே
பாமரர் ஏதறிவார்?"

அத்தியாயம் 23.

தரித்திரத்தின் தாயகம்

சரித்திரத்தின் பார்வைக்குத் தென்பட்டவரையிலும், இந்தியா தரித்திரத்தின் தாயகமாகத்தான் இருந்துவருகின்றது என்று மேயோ தீர்ப்புச் சொல்லிவிட்டார். மனிதனுக்கு உடல், பொருள், ஆவி மூன்று உண்டு. சிற்றின்ப நுகர்ச்சி இலட்சியத்தால், ஹிந்துக்களின் உடம்பு கெட்டுப் போய்விட்டது என மேயோ முன் அத்தியாயங்களிற் கூறிவிட்டார். ஹிந்துக்களின் தத்துவங்களின்மூலமாக, அவர்களுடைய ஆன்மா அழிந்துவிட்டதெனவும் அவர் குறிப்பிட்டு

விட்டார். மிகுந்தது பொருள். அதைப்பற்றி மேயோ தமது கருத்தைத் தெரிவிக்கவேண்டாமா? பண்டைக்கால முதற்கொண்டே, ஹிந்துக்கள் வறுமையில் ஆழ்ந்து நிற்கின்றார்கள் என்று முடித்துவிட்டால், ஹிந்துக்களின் உடல், பொருள், ஆவி மூன்றும் மேநாட்டு நாகரிக வாழ்க்கை முறையின் மூலமாயும் ஆங்கில ஆட்சியின் கருணையினாலும், செம்மைப்பட்டு, சீர் அடைந்துவருகின்றன என்று மேயோ கூறி, "முற்றிற்று, திருச்சிற்றம்பலம்" என்று ஆனந்தமடையலாமல்லவா?

"வராகன் விளையும் மரங்கள்" (pagoda trees) இந்தியாவில் இருக்கின்றன என்று ஐரோப்பியர்கள் ஒருகாலத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பதைச் சரித்திர மூலமாய் மேயோ படித்ததுண்டா என நாம் அவரைக் கேட்கின்றோம். இந்தியாவுக்கு வந்து, 'வராகன் மரங்களை' க்குலுக்கி, செல்வப்பழங்களைச் சேகரித்து மூட்டை கட்டிக்கொண்டு போகலாம் என்ற பேராசையுடன் ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வரவில்லையா? வாஸ் கோடி காமா எதற்காக இந்தியாவுக்கு வந்தார்? டச்சுக்காரர்களும் பிரஞ்சுக்காரர்களும் இந்தியாவுக்கு எதற்காக வந்தார்கள்? கிழக்கு இந்தியக் கம்பெனி ஆங்கில நாட்டில் அமைக்கப்பெற்றதன் காரணம் என்ன? இந்தியா என்ற தேசம் மண்ணில் இருப்பதாக, பண்டைக்காலத்து ஐரோப்பியர்கள் எதன் மூலமாகத் தெரிந்துகொண்டார்கள்? ஐரோப்பாக் கண்டத்து விபாபாரம் முழுமையையும் ஜினேவா, வெனிஸ் என்ற இரண்டு இதாலிய நகரங்கள் அடக்கியாண்டன என்பது மேயோவுக்குத் தெரியுமா? அந்த நகரங்களுக்கு வியாபாரச் சரக்குகளைத் தயார்செய்து அனுப்பிவது எந்த தேசம்? இந்தியா என்று மேயோ அறி

வா? இந்தியத் துணிகளைத்தவிர வேறு எந்தத் துணிகளை யும் அணிந்துகொள்ள மாட்டோம் என்று ஐரோப்பியச் சீமாட்டிகள் கூறினார்கள் என்பது சரித்திரத்தில் காணப்படு கின்றதா, அல்லவா? இந்தியாவைக் கொள்ளையடிக்க, அன்னி யர்கள் வடமேற்குத் திக்கிலிருந்து வந்தார்கள் என்று ஐரோப்பியச் சரித்திரக்காரர்கள் கூறுகின்றார்களே, அது மெய்யா, பொய்யா? மெய்யாயின், அவர்கள் இந்தியாவின் "மண்ணை"க் கொள்ளையடிக்கவா வந்தார்கள்? நாகரிகமற்ற ஜனங்களுக்குப் பொருளைத் திரட்டும் வழிகள் தெரியுமா? இந்தியாவில் நிலைத்த அரசியலும் நாகரிகமும் இருந்த காலத் தில், ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் ஜனங்கள் நாடோடி களாகத்திரிந்து, வாழ்ந்தார்கள் என்பதற்குச் சரித்திரத்தில் ஆதாரம் காண்பிக்கமுடியுமா, முடியாதா? இந்தியாவிலிருந்த பருத்திச் செடிகளின் தன்மையை] உணராமலும் அறியாம லும் ஐரோப்பியர்கள் மதிமயங்கிய காலமுண்டா, இல்லையா? உலகத்தில் வீடுகட்டி வாழத்தெரியாத காலத்தில், இந்தியா வில் மச்சு வீடுகள் இருந்தனவா, அல்லவா?

கேள்விகளைப் பெருக்கிக் கொண்டே போகமுடியும். மேயோ கூற்றுபொய் என்பதற்கு உருசுக் கொடுக்கக் கூடிய கேள்விகளை மட்டும்கேட்டு, ஏனையவற்றை விடுத்து விட் டோம். வறுமையும் கொடுமையும் நிறைந்திருக்கும் கணவன் வீட்டைக் காட்டிலும் தரித்திரம் நிறைந்த தாயகம் உயர்ந்த தெனக்கொள்ளும் பெண் பேதையாவாளா? அன்னியர்கள் யாவரும் இந்தியாவின் பேரில்விடாது "கண்போட்டதற்கு" க்காரணத்தை வேண்டுமென்றே மறைத்தும், மறந்தும் எழுதும் மேயோவின் நோக்கம் வெளிப்படை. ஆப்பிரிக்கா வில் வாழும் நீக்கிரோவர்களை ஐரோப்பியர்கள் அடிமைகளாக

வாங்கினார்கள், விற்றார்கள். ஆஸ்திரேலியாவிலிருந்த பண்டைக்குடிமக்களான "புஷ்மென்" என்ற கூட்டத்தார், அந்நாட்டில் குடியேறிய ஆங்கிலேயர்களால் அறவே அழிக்கப்பெற்றனர். நீக்கிரோவர்களை முஸ்லீம்களும் அடிமைகளாகக் கொண்டார்கள், விற்றார்கள், வாங்கினார்கள். அன்னியர்கள் படையெடுத்து, இந்தியாவின் பேரில் பாய்ந்த காலத்தில், ஹிந்துக்கள் நாகரிகமற்றவர் களாயிருப்பின், அவர்கள் உலக சந்தைகளில் அடிமைகளாக விலை பேசப்பட்டிருப் பார்கள். அவர்கள் பேடிகளாவும் பேதைகளாயு மிருந்திருப்பின், அழிந்து போயிருப்பார்கள். ஹிந்துக்களின் "பூண்டை" எவரும் பார்த்திருக்க முடியாது. இந்தியாவில் கல்விப் பயிற்சி இருந்திராவிடின், உலகமக்கள் கல்விகற்க இந்தியாவுக்கு வந்திருக்க மாட்டார்கள். புத்த பகவான் தோன்றிச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளாகின்றன. புத்தர் உபதேசித்த அறம் இன்றைக்கும் போற்றப்பட்டு வருகிறது. அறிவில்லாத, நாகரிகமற்ற, கோழைகள் மலிந்த கூட்டத்தாரின் மத்தியில் புத்தர் தோன்றியிருக்க முடியாது. கம்பியில்லாத் தந்தியைக்கண்ட மார்க்கோனி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவில் தோன்றி யிருக்க முடியுமா? தந்திக்குப்பின்னர் தானே, கம்பியில்லாத் தந்தி தோன்ற முடியும்? உலகத்தார் வியந்து பேசும் இந்திய நூல்கள், நாகரிகமற்றவர்களால் எழுதப்பெற்றிருக்க முடியாது. ஐரோப்பியர்கள் கட்டுமரங்களிற் சென்று, கப்பலை யறியாத காலத்தில், ஹிந்துக்கள் பாய் விரித்தோடும் கப்பல்களில் சென்று, வியாபாரம் செய்தார்கள் என்று சரித்திரம் கூறுகின்றது. அதை மறைக்க முடியுமா, மறுக்க முடியுமா?

"மனிதன் வறுமையைக்கொள்ளவேண்டும்; பொருளினால் விளையும் தீமைகள் பல" என்று ஹிந்துதத்துவம் கூறுகிறது. இந்த தத்துவத்தை யாரால் உபதேசிக்க முடியும்? ஏராளமான பொருளைத்தேடி, அதை வாழ்க்கையில் உபயோகித்துப் பார்த்துப்பயனைத் தெரிந்து கொண்டவர்கள் தான் கூறமுடியும். ஒரு நிகழ்ச்சியைப் பற்றி அனுபவமுள்ளவன்தான் அதைப்பற்றிப்பேச உரிமையுள்ளவன்; அவன் தான் பேசுவான். ஜனநாயகத்தை ஐரோப்பியர்கள் ஏன் வேண்டுகின்றார்கள்? கருணையற்ற கொடுமையின் கீழ் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கு ஜனநாயகத்தின் தேவையும் உயர்வும் நன்றாகத் தெரியும். வாழ்க்கைத் தத்துவம் மாறுவதும் நிலைப்பதும் மனிதர்களின் அனுபவத்தால் தான். அனுபவமில்லாமல், கற்பனையைக் கொண்டு மட்டும் நிகழ்ச்சிகளை நோக்கினால், தவறுகள் நேரும். கற்பனையோடு, அகம்பாவம் சேர்ந்து கொண்டால், மேயோவின் எழுத்தைப் போலத்தான் எழுத முடியும். ஹிந்துக்கள் அனுபவமில்லாமல் எதையும் சாதித்தவர்களல்ல. சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்று கருவிகளிலே, எந்த நிகழ்ச்சியையும் உறைத்துத் தீட்டிப் பார்க்கும் வழக்கம் பண்டைஹிந்துக்களுடையதாகும். எனவே, இந்தியா எப்பொழுதும் தரித்திரத்தின் தாயகமாயிருந்தது என்று மேயோ கூறுவது நகைப்புக் கிடமானதாகும்.

கிரேக்கர்கள் இந்தியாவில் படையெடுத்த நாள் முதல், இந்தியா அன்னியர்களின் தாக்குதல்களுக்கு ஆட்பட்டுவருகின்றது. இது உண்மை. இந்த உண்மையைக் கொண்டு, பலர் பலவாறாக முடிவு கட்டுகின்றார்கள். பண்டை ஹிந்துக்களை ஆகாயத்தில் தூக்கிவைத்துப் பேசுவது எனது நோ

க்கமல்ல; அவர்கள் பேடிகள் என்று வாய் கூசாமல் நான் சொல்லவும் மாட்டேன். எத்தனையோ தாக்குதல்களைச் சலிப்பின்றி தாங்கிக் கொண்டு, கட்டுவிட்டுப் போகாமல் இருந்து வந்த ஹிந்து ஜன சமூகத்தின் உண்மையான சக்தி எங்கிருக்கிறது என்பதைச் சிரத்தையுடன், இந்தத்தலை முறை ஹிந்துக்கள் ஆராய்தல் வேண்டும். அது, பாரத பூமியின் மஹிமையா? ஹிந்துவின் இயற்கையா? ஹிந்துவின் வாழ்க்கை முறையா? அன்னியர்களின் கருணையா? நாட்டின் வாழ்க்கையைத் திருத்தியும் நடத்தியும், நாட்டின் அரசியலிலும் ஜனசமூகத்திலும் நிர்வாகம்செய்ய ஆவல் படைத்த அனைவர்களும் இதைப்பற்றித் தீர்க்கமாக யோசித்தல் வேண்டும். சுழற் காற்றிலும் இடிந்து விழாத வீட்டின் அமைப்பைத்தான் கவனிக்கவேண்டும். எந்த வெயிலிலும் வாடாத செடியின் தன்மை ஆராய்தற்குரியது. எவ்வளவு காலம் நீரிற்கிடந்தாலும் அழுகிப் போகாத பொருளின் உறுதியைத் தள்ளி விடலாமா? கிரேக்கர்கள், பட்டாணிகள், மொகலாயர்கள், போர்த்துகீஸ், டச்சுக்கார்ரர்கள், பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள்—இவர்கள் யாவரும் இந்தியாவை தத்தம் இயல்புக் கேற்றவாறு தாக்கியிருக்கின்றார்கள். ஹிந்து ஜனசமுகம் சிதறிப் போகவில்லையே! அசையாப் பிள்ளையாராக ஹிந்து ஜனசமூகம் இருந்துவருகின்றதா? அல்லது அன்னியர்களின் சக்தியைக்கிராஹ்யம் செய்து கொண்டு விடுகிறதா? அல்லது அன்னியர்கள் பொறுமை யிழந்து போய்விடுகின்றார்களா? இவைகளுக்கு முடிவான அபிப்பிராயம் நாம் இப்பொழுது கொடுக்கப் போவதில்லை. அவைகள் வேறு ஒரு நூலில் தனியாக ஆராயப்படவேண்டியவையாகும். தனிநூலாக அமையக்கூடிய ஒன்றைத் தனி அத்

தியாயத்தில் அடக்கிவிட முடியாது. வாசக நண்பர்கள் கவலையுடனும் சிரத்தையுடனும் அன்பு கொண்டு ஆராய வேண்டிய சில கேள்விகளை இங்குகுறிப்பிட்டோம். அவைகளைக்கவனிப்பார்களாக !

> "1659-ம் ஆண்டில் பாதுஷா அவுரங்கசீப் அவர்கள் ஹிந்துக்களின் விக்கிரக ஆராதனையைச் சகிக்காத "இஸ்லாம்" உணர்ச்சியுடன், சிங்காதன மேறினர். அவரால் கோயில்களும் விக்கிரகங்களும் உடைக்கப் பெற்றன. அவர் ராஜ புத்திரர்களின் விசுவாசத்தை இழந்தார். தட்சிணத்துக் கீழ்ச்சாதிக் குடியானவர்களான மராட்டியர்களின் கோபத்தையும் கிளப்பிவிட்டார்."

மேயோ எழுதியிருப்பது ஓரளவில் உண்மை கொண்டது. இந்தியாவின் இக்காலத்தைப்பற்றி வருணத்திருக்கும் மேயோ, இதே சமயத்திலும் சற்று முன்னும், அதாவது பதினாறும் நூற்றாண்டில், ஆங்கிலநாடு எந்தநிலையில் இருந்தது என்பதைக் கூறியிருந்தால், அது இந்தியர்களுக்கு ஒருவாறு மன அமைதி அளித்திருக்கும். ஆங்கில நாட்டில் மேரி என்ற ராணி—ஐந்தாம் ஜியார்ஜ் சக்காவர்த்தியின் மனைவியான மேரிராணியல்ல—பதினாறும் நூற்றாண்டின் மத்தியில் அரசு புரிந்தார். அந்தக் காலத்தில் கிருஸ்தவர்கள் சிறப்பாக இரண்டு கூறுகளாகப் பிரிந்திருந்தார்கள். அவர்களுக்கு பிராடஸ்டண்டு, ரோமன் கத்தோலிக் என்று பெயர். மேரிராணி எட்டாவது ஹென்றியின் புதல்வி. எட்டாம் ஹென்றி, கத்தோலிக் கிருஸ்தவர்களுக்கு உலக குருவான "போப்" அவர்களைத் தமக்குக் குருவாகக் கொள்ள மறுத்துவிட்டார். ஆனல்அவரது புதல்வி மேரியோ போப்பை ஆதரித்து, ஆங்கிலநாட்டிலுள்ள பிராடஸ்ண்டு

கிருஸ்தவர்களைத் தீக்கிறையாக்கும்படி உத்தரவு கொடுத்து விட்டார். பலர் தீக்கிறையானார்கள். அவுரங்கசீப் கோயில் களையும், விக்கிரகங்களையும் உடைத்தார் என்று எழுதியிருக் கும் மேயோ, மேரியின் ஆளுகையையும் சிறிது கூறியிருக்க லாம். மேரி காலத்தில் துன்புறுத்தப் பெற்றவர்களில் ஒரு பகுதியார் "பில்கிரீம் பாதர்ஸ்" (pilgrim fathers—யாத் திரைத்தகப்பன்மார்கள்)என்றபெயர்கொண்டு,புதிய"க்ஷேத் திரம்" (நாடு) தேடிச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்கள் தாம் தற்போது அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் வசிப்ப வர்களின் முன்னோர்கள், அதாவது மேயோவின் முன்னோர் கள். அவுரங்கசிப் அவர்களைப் பற்றி எழுதியபொழுது, இந்த சங்கதியை மேயோ ஞாபகத்தில் கொண்டிருந்தாரா? மேயோவின் மேற்கூறிய முன்னோர்கள் ஆங்கில நாட்டுடன் போர்புரிந்து, அவர்களுடைய ஆளுகையை விலக்கித் தள்ளி விட்டு, விடுதலை பெற்றார்கள் என்பது மேயோவுக்குத் தெரி யுமா? ஆங்கிலேயர்கள் மேயோவின் அமெரிக்க முன்னோர் களை முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்றிருந்தால், அவர்கள் என் ஆங்கில நாட்டிலிருந்து முறித்துக் கொண்டு போயிருக்கவேண்டும்? எனவே, மராட்டியர்கள் அவுரங்க சிப் அவர்களுடன் சண்டை செய்ததை மேயோ மகிழ்வுடன் குறிப்பிட்டிருக்கவேண்டியதில்லை.

"அந்தக் காலத்துச் சரித்திரங்கள் சாதாரண ஜனங்க ளைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை. அக்காலத்து சரித்திரங் கள், சிறு மன்னர்களையும் பாளையக்காரர்களையும் அவர்களு டைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களது ஆசைகளையும் செல்வங்களையும், சூழ்ச்சிகளையும் போராட்டங்களையும் வீழ்ச் சிகளையும் பற்றியவையாகும். பொது ஜனங்கள் தங்கள்

எஜமானப் பிரபுக்களுக்கு அடிமைகளாக வறுமையில் ஆழ்ந்து வாழ்ந்ததாக, சரித்திரத்தின் இடை யொளிகளினின்றும் தெரியக் கிடக்கின்றது.''

மேயோவின் இந்த எழுத்தைக்கண்டு, இந்தியர்கள் மனங் கலங்கவேண்டாம். இதுவரையிலும் வந்திருக்கும் உலக சரித்திரம் எத்தன்மைத்து? "சரித்திரம் மன்னர்கள் நடத்திய போர்களின் சரித்திரமாகும்'' என்று காந்தி கூறியிருக்கிறார். அரசியல் ஜனங்களின் விருப்பத்துக்கு இணங்க நடைபெறல் வேண்டும் என்ற ஜனநாயகக்கொள்கை உலகத்தில் தோன்றுமுன்னர், ஒவ்வொரு நாட்டின் சரித்திரமும் அதன் மன்னர்களையும் பிரபுக்களையும் போர்வீரர்களையும் சுற்றிக்கொண்டு சென்றிருந்தது. ஆங்கில நாட்டின் சரித்திரத்தை எடுத்துக்கொள்ளுவோம். அந்த நாட்டில் "ரோஜாமலர்ப்போர்'' என்று பெரும் போர்நடந்தது. ஆங்கிலநாட்டுப் பிரபுக்கள் இரண்டுகூறுகளாகப் பிரிந்து, நாட்டின் அரசியல் செல்வாக்குக்காகப் பல ஆண்டுகள் போராடினார்கள். ஒரு கூட்டத்தார் சிவப்பு ரோஜாவை தங்களுக்கு அடையாளமாகக் கொண்டார்கள்; மற்றைய கூட்டத்தார் வெள்ளை ரோஜாவைக் கொண்டார்கள். போர் நீண்டகாலம் நடைபெற்றது. இந்தப்போர்கள் பிரபுக்களின் சூழ்ச்சியாலும் பேராசையாலும் விளைந்தவையாகும். சாதாரண ஜனங்கள் அக்காலத்தில் பிரபுக்களால் மனிதர்களாகப் பாவிக்கப்பட்டதுண்டா ஆங்கிலநாட்டில் என்று மேயோவை நாம் வினவுகின்றோம்.

சிங்க ரிச்சர்டு மன்னன் ஆண்ட காலத்தில் ஆங்கில நாட்டின் சரித்திரம்எத்தன்மைத்து? ரிச்சர்டுமன்னனுடைய வாழ்க்கை வரலாறு தான் அக்காலத்து ஆங்கில நாட்டின்

சரித்திரமாகும். ரிச்சர்டுக்குப்பின் அவர் தம்பி ஜான் என்பார் பட்டத்துக்கு வந்தார். அவரை ரனிமேட்என்றஇடத்தில் பிரபுக்கள் வளைத்துக்கொண்டு, மன்னனுடைய அதிகாரத்தின் பெரும்பகுதியைப்பறிமுதல் செய்து விட்டார்கள். சுமார் 1500 ஆண்டுகளாக (இருபதாம்நூற்றாண்டைக் கூடச் சேர்த்துக் கொள்ளலாம்) ஐரோப்பிய நாடுகளின் சரித்திரம் அந்த நாடுகளின் பெரிய மனிதர்களைச்சுற்றி வந்து கொண்டிருக்கிறது. இந்தியாவின் நிலையை மேயோ வியப்பாகக்கொண்டார். உலக சரித்திரத்தை நடுநிலைகொண்டு ஆயும் எவருக்கும் வியப்புத் தோன்றாது.

"முஸ்லீம் ஆட்சிக்காலத்தில், பிரபுக்கள் சுகக்கடலில் ஆழ்ந்து வசித்தனர். ஏழை ஜனங்கள் மிதிக்கப்பட்டனர்."

> "எல்லா உத்தி யோகங்களும் பதவிகளும் இலஞ்சங் கொடுத்து வாங்கப் பெற்றன. சாகும் சமயத்தில் தனவந் தன் விட்டுப்போகும் செல்வம்யாவும்அரசாங்க கஜானாவைச் சேரும் என்ற நிபந்தனை வட இந்தியாவில் இருந்தமையால் அது அரண்மனைப் பிரபுக்களின் ஆடம்பர வாழ்க்கைக்குத் தூண்டுதலாயிருந்தது."

அடிமை இந்தியாவின் பண்டைச் சரித்திரத்தைமேயோ கூறுகின்றார். சுதந்திர ஆங்கிலநாட்டின் பண்டைச் சரித்திரத்திலும் மேற்கூறியவைபோன்ற பல நிகழ்ச்சிகளை காணலாம். ஏலத்தில் அதிகப் பணம் யார் கொடுக்கின்றார்களோ, அவர்களுக்குத்தான் சில உத்தியோகங்கள் (மேல் வரும்படி அபரிமிதமாய் வரும் உத்தியோகங்கள்) கொடுக்கப்படும் என்ற வழக்கம் ஆங்கில நாட்டில் இருந்து வந்தது. இது யாவருக்கும் தெரியும். "ஒவ்வொரு வனுக்கும் ஒரு விலையுண்டு" என்று கொண்டு, வோட்டுகளை விலைக்கு வாங்கி, அரசியல் நிர்வாகம்

செய்த ஆங்கில நாட்டு முதல் மந்திரி ஸர். ராபர்ட் வால் போல் அவர்களைப் பெரிய மனிதர் என்று இன்றைக்கும் ஆங்கிலேயர்கள் போற்றுகின்றார்கள். இப்பொழுதும் அமெரிக்காவில் "கிராப்ட்" என்ற கூட்டத்தார் எத்தனையோ வகைகளில் இலஞ்சம்கொடுத்து, அமெரிக்க அரசியலைச் சீர்குலைத்து வருகின்றார்கள். டாப்ட், வில்ஸன் முதலிய பெரியார்களுடைய முயற்சிகள்கூட, அமெரிக்காவில் சீர்திருத்தத்தைச் செய்ய முடியவில்லை. அக்காலங்களில் ஒரு நாட்டில், போர் வீரர்களின், பிரபுக்களின், புரோகிதர்களின் சூழ்ச்சிகள் நிறைந்திருந்தன. இப்பொழுது தனவந்தர்கள் உலகத்தையே ஆட்டிவைக் கின்றார்கள். ஒவ்வொரு நாட்டிலும் சாமான்ய ஜனங்கள் (தொழிலாளர்கள்) ஏன் ஒரு கட்சியாகத்திரள வேண்டும்? மேயோ இதைக் கவனிக்க வேண்டியதில்லை. முதலாளிகளின் பேராசைக்குகையில் தொழிலாளர்கள் விழலாகாது என்று மேநாடுகளில் போடும் கூச்சல் கம்பித் தந்தியில்லாமலே, இந்தியாவுக்குக் கேட்கும் போலிருக்கிறது! அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஏழைத்தொழிலாளர்களுக்காக மேயோ அவர்கள் பரிந்துபேசி, பிரசங்கம் செய்து, நூல் எழுதலாகாதா? அவருடைய அனுதாப பாக்கியம் இந்தியாவுக்கு மட்டும் தான் தனித்துக் கிடைக்க வேண்டுமா?

"வீடும் மடமும்" என்று அருமையான நூலொன்று ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. "திக்கற்றவர்கள்" என்ற நேர்த்தியான நூலை விக்டர் ஹூகோ என்ற பேராசிரியர் பிரஞ்சு பாஷையில் எழுதியிருக்கிறார். இதையொத்த நூல்கள் பல ஐரோப்பிய நாடுகளில் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளைப் படித்துப் பார்த்தால், ஐரோப்பிய நாடுகளில் ஏழைகள் படும் கஷ்டங்களை ஒருவாறு தெரி

ந்து கொள்ளலாம். பண்டைக்காலந் தொட்டு விடாமல் கஷ்டங்களை ஏழை இந்தியர்கள் அனுபவித்து வருவதாக மேயோ கூறுவதிலிருந்து, இப்பொழுதும் இந்தியர்கள் கஷ்டம் அனுபவித்தல் பொருத்த முள்ளது என்று கொள்ள வேண்டும் போலும்! பண்டைக் காலத்தில் இறந்த தனவந்தர்களின் செல்வம் அரசன் கஜானுவைப் போய்ச் சேரும் என்று எழுதியிருக்கும் மேயோ, கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆளுகையில், இந்தியாவில் நடை பெற்ற நிகழ்ச்சியைக் கவனிக்க வில்லைபோலும்! டால் ஹௌஸி பிரபு தாம் கவர்னர் ஜனரலாயிருந்த காலத்தில், "வார்சு இல்லாமல் இறந்த மன்னனுடைய ராஜ்யம் கிழக்கு இந்தியக் கம்பெனியைச் சேர்ந்தது" என்று உத்தரவு போட்டு, அவ்வாறே பல சமஸ்தானங்களைக் கம்பெனியோடு சேர்த்து விட்டார். எந்த சட்டத்தைக் கொண்டு, மேயோ டால் ஹௌஸி பிரபுவின் செயலை ஆதரித்துப் பேச முடியும்?

பிரான்ஸ்வா பெர்னியர் என்ற பிறஞ்சுப் பிரயாணி 1660-ம் ஆண்டிலிருந்த இந்தியாவைப் பற்றி எழுதிய குறிப்பொன்றை மேயோ எடுத்துக் கூறுகிறார்.

> "ஜனத்தொகை மிகுதியும் கொண்ட அரண்மனையின் ஆடம்பரச் செலவினாலும் ஜனங்களை அடக்கியாளும் பொருட்டு வைக்கப்பெற்ற பெரிய சேனையின் சம்பளம் முதலியவற்றின் செலவினாலும், நாடு நாசமுற்று வருகின்றது."

இது எப்பொழுதைய இந்தியாவைப்பற்றி எழுதப்பட்டது என்று திகைத்துப்போய், நண்பர்கள் வினவலாம். 1660-ம் ஆண்டு இந்தியாவைப்பற்றி பெர்னியர் எழுதினர்; அவர் 1928-ம் வருஷ இந்தியாவைப்பற்றி எழுதவில்லை. எனவே, நண்பர்கள் திகைப்படையவேண்டாம். ஆனல்

1660-ம் ஆண்டு இந்தியாவுக்கும் 1928-ம் வருஷ இந்தியாவுக்கும் அதிக வேற்றுமை இல்லை. அப்போதைய "அரண்மனையின் ஆடம்பரச் செலவு" என்பதற்குப் பதிலாக ஐ. ஸி. எஸ். க்காரர்களின் சம்பளச் செலவு என்று மாற்றிக் கொண்டால், எல்லாம் சரியாகிவிடும். எல்லாச் சங்கதிகளிலும் பண்டை இந்தியாவின் தொடர்பு ஒழியலாகாதல்லவா!

கிழக்கு இந்திய கம்பெனி என்ற ஆங்கில கம்பெனி இந்தியாவில் அரசுரிமைபெற்ற வரலாறை மேயோ சுருங்கக் கூறியிருக்கிறார். இந்த விஷயத்தில் மேயோவைப் பின்தொடர்ந்து நாம் செல்லவேண்டிய தேவையில்லை. கிழக்கு இந்திய கம்பெனியார், இந்தியாவின் கைத்தொழில்களை சீர்குலைத்த வகைகளைத் தெளிவாக, ரொமேஷ் சந்திரதத்தர் எழுதிய சரித்திர நூல்களில் காணலாம். தாதாபாய் நாரோஜிபோன்ற பொருளாதார நிபுணர்கள் எழுதிய நூல்களிலும் காணலாம். கிழக்கு இந்திய கம்பெனியைப் பற்றி மேயோ எழுதியிருக்கும் குறிப்பொன்றை இங்கு தருகின்றோம்.

> "கிழக்கு இந்தியக் கம்பெனியின் நற்பெயர், சில சமயங்களில், தவறான முடிவுகளாலும் தகுதியில்லாத ஏஜண்டுகளாலும் மங்கிப்போயிருக்கலாம்; இந்த ஏஜண்டுகளிற் சிலர் அகம்பாவிகள்; சிலர் யுக்தி தெரியாதவர்கள்; சிலர் சஞ்சல புத்தியுள்ளவர்கள்; ஓரிரண்டு பேர்கள் அற்பர்கள்; மற்றும் சிலர் (இலஞ்ச) பணத்தாசைப் படுகுழியில் வீழ்ந்தவர்கள். அவர்களுடைய குறைகளைப்பற்றி எவ்வளவோ அபத்தங்கள் (இந்தியரால்) பேசப்பட்டிருக்கின்றன."

கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் "அட்டூழியங்களை"ப் பற்றி மேயோ தமது தங்கக்கைகளால் எழுதலாம். ஆனால்

ஏனையோர் எழுதினால் அது அபத்தமாகிவிடும்." தரித்திரத்தின் தாயகம் என்று மேயோ கூறியிருக்கும் இந்தியாபண்டைக்காலத்தில் எத்தன்மைத் தாயிருந்தது என்று பாரதியார் கூறுவதைப்படிப்போமாக!

"மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்தபொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன்னாடு
புத்தர்பிரான் அருள் பொங்கியநாடு
பாரதநாடு பழம்பெரு நாடே
பாடுவமிஃதை யெமக்கில்லையீடே."

அத்தியாயம் 24.

சீர்திருத்தங்கள்

வங்காளப் பிரிவினைக்காலந்தொட்டு, இந்தியர்கள் சுயராஜ்யக்கூப்பாடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சுயராஜ்யத்தைப்பெற, பலமுறைகளும் கையாளப்பட்டன. மனு, பிரசாரம், தீர்மானம், அன்னியத்துணி பகிஷ்காரம், ஒத்துழையாமை, ஒத்துழைப்பு, வெடிகுண்டு முதலிய சாதனங்கள் பலவேறு கூட்டங்களால் கையாளப்பெற்றன. ஆங்கிலேயர்களைக் கடைக்காரச்சாதியார் என்று நபோலியன் அழைத்தார். அதாவது இலாப நஷ்டக்கணக்குப்பார்க்காமல், எதையும் ஆங்கிலேயர்கள் செய்வதில்லை என்பது இதன்பொருளாகும். மேலும் ஆங்கிலேயர்கள் "சட்டம் செய்யும் பிரிட்டிஷார்" என்று அழைக்கப்படுவதுமுண்டு.

இதிலே ஒரு சூட்சுமம் இருக்கின்றது. "சட்டம் கூறுகின்றது" என்றால் எந்த மனிதனும் திகைத்துப் போவான். அதுவும் இந்தியர்களிடம் சட்டம் என்றால் அவர்கள் பயந்து போவார்கள். சட்டத்துக்கும் மனித இயற்கைக்கும் உள்ள சூட்சுமத் தொடர்பை அறிந்து கொண்டவர்கள் ஆங்கிலேயர்கள். சட்டம் கூறுகின்றது என்றால், "எந்தச் சட்டம்? யாரால் ஆக்கப்பெற்ற சட்டம்? எதற்காக ஆக்கப்பெற்றது? எனக்கும் அதற்கும் சம்பந்தம் என்ன? என்மேரில் ஏன் அந்தச் சட்டம் ஆளுகை செய்யவேண்டும்? சட்டம் கூறுவதை நான் கேட்பேன்; ஆனால் அதற்குப் பணிந்து நடக்கவேண்டுமா என்பதைப் பின்னர் சொல்லுவேன்" என்று எந்த இந்தியனாவது ஒத்துழையாமைக் காலத்திற்கு முன் சொல்லத் துணிந்தானா?

ஜனநாயகதத்துவம் அரிசியலிலும் வாழ்க்கையிலும் அமுலுக்கு வந்து கொண்டிருக்கிறது. இதிலே ஒரு விசேஷத்தைக் காணலாம். சட்ட சபையின் உதவியில்லாமல் அரசாண்ட மன்னன் கொடுங்கோலன் என்று கருதப்பட்டான். அதாவது அரசியல் நிர்வாகத்துக்கான முறைகளுக்கும் கருவிகளுக்கும் கொடுங்கோலன் தான் ஊற்றுக் கண்ணாயிருந்தான். ஜனநாயக தத்துவத்தின்படிக்கு மாறுதல் என்னவெனின், அரசியல் தேவை என்ற காரணம் காட்டி (ஜனங்களை ஏய்த்து என்று கூறலாம்) அதிகாரச் சட்டங்களை அரசியல் நிர்வாகிகள் ஆக்கிக் கொள்ளுகின்றார்கள். "என். கத்தியை வாங்கி வைத்தான்; உன் கத்தியை பிடுங்கிவைத்தான்" என்று விருது கூறுவதில் என்ன வித்தியாசம் உண்டோ, அதைத்தான் மேற்கூறியதில் காணலாம். ஆனால், ஜனநாயக தத்துவத்தின் பெருமையை எவரும் மறக்கலாகாது,

ஏளனமும் செய்யலகாது. உண்மையான ஜன நாயகத்தைத் தேடிக் காணுதல் வேண்டும்.

ஜன நாயகத்தைத் தழுவி நடைபெறுவதாகக் கூறப்படும் அரசாங்கங்கள் யாவும் இப்பொழுது "ஆண்டவன்" களாகக் கருதப்பட்டு வருகின்றன. ஒருவனை அரசியலைக் கும்பிடாத மனிதன் ராஜ நிந்தனைக் குற்றத்துக்கு ஆளாகி விடுவான்; அல்லது தேசத்துரோகியாவான். இந்த விந்தையைத்தான் நண்பர்கள் யோசித்துப் பார்த்தல் வேண்டும். விபரமாய்ச் சொன்னால் விளங்கும். இளைஞன் ஒருவன் விலைமாதின் வீட்டுக்குச் செல்லுகின்றான். அவனிடம் அவனுடைய நண்பனுக்கு நிரம்பப்பிரியம். "தாசி வீட்டுக்குப் போகாதே; மிக்க தீமையுண்டாகும்" என்று இவன் கூறினால், முதலாமவனுடைய விரோதியாவானா? பின்னவன் கூறுவதைச் சரியாய்க் கவனித்தல் "தாசி" இளைஞனுடையகடமையாகும். அரசாங்கமும் குடிமக்களும் பரஸ்பர நண்பர்கள். மேலும் பார்த்தால், தகப்பனும் மகனும் போல. திருட்டு முதலிய குற்றங்களைத்தவிர, அரசாங்கத்தைப் பற்றி, வாதமுறையில், அறிவுக் கேற்ற முறையில் பேசப்படும் யாவும் குற்றங்களாகவே பாவிக்கப்படாலாகாது. ஆனால், தவறு செய்து, தப்பித்துக் கொள்ளப் பார்க்கும் அரசாங்கம் விரைவிலே கோபம் கொள்ளுகின்றது. கோபம் வருகிற தன்மை இந்திய அரசாங்கத்தாருக்கு அதிகமாயிருக்கிறது.

இந்தியாவில் இப்பொழுது ஜனப்பொறுப்பாட்சி இல்லை. "குடிமக்களுக்காகத்தான் அரசியல்; அரசியலுக்காக, குடிமக்கள் உயிர் வாழ்வதில்லை" என்பது தற்கால உலக அரசியல் தத்துவத்தின் முதற் சூத்திரமாகும். இந்தஉண்மை, இது

வரையிலும், இந்திய அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. "பொய்யான சட்டத்தை மீறும் நான் தான், அரசியலை ஜனங்களின் உள்ளத்தில் ஆழமாய்ப்பதியும்படி செய்கிறேன்" என்று தூரோ என்ற அமெரிக்கப்பேராசிரியர் எழுதியுள்ளார். மகாமேதாவியான தூரோவைக்கூட, சட்டத்தை மீறும் குற்றவாளி என்று இந்திய அரசாங்கத்தார் கருதவும் கூடும். இதைப்பற்றி விரிவாகப்பேச வேண்டிய தேவையில்லை. பல்லக்கின் கனம் யாருக்குத்தெரியும்? பல்லக்குத் தூக்குபவர்களுக்குத்தான் தெரியும். பல்லக்கில் உட்காருபவர்களுக்குத் தெரியாது. ஒரு அரசாங்கத்தின் குறைகளைக்குடிமக்கள் எளிதிலே காணமுடியும். ஆனால் அரசியலார்க்கு எளிதிலே தெரியாது. எந்தக்கொடுமையையும் அரசியல் நிர்வாகத்தேவை என்று நிர்வாகிகள் மெழுகி விடமுடியும். "ஊமை ஜனங்களான" இந்தியர்களின் முன்னேற்றத்தைக்கருதியே, இந்திய அரசியல் நடைபெற்றுவருகின்றது என்று இந்திய அதிகாரவர்க்கத்தினர் கூறுகின்றார்கள். இந்தியர்களின் முன்னேற்றத்துக்கான வழிகள், இந்தியப்பொது மக்களுக்கும் அவர்களுடைய வாழ்விலே கலந்து கொள்ளுபவர்களுக்கும் தான் தெரியும் என்பது இந்தியர்களின் கட்சியாகும். இந்த இருவகை நோக்குகளும் ஒன்றுமா? மேலும் "இந்தியாவின் அரசியலை நிர்ணயிக்கும் உரிமை ஆங்கிலப்பார்லிமெண்டு மகா சபையைத்தான் சேர்ந்ததாகும்" என்று மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்ட முகவுரையில் காணப்பெற்றிருக்கிறது. சிறிய பெல்ஜியத்துக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்று ஆங்கில அரசியல்நிர்வாகிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சுயநிர்ணயம் என்றால் என்ன? தனது வாழ்க்கை

யைத்தனக்கு நல்லதென்று தோன்றிய பாதையில் நடத்தும் உரிமைக்கு சுயநிர்ணயம் என்று பெயராகும். இந்தியாவின் பேரில் ஆங்கில நாட்டுக்கு (ஆங்கிலப் பார்லிமெண்டுசபையின் மூலமாக) முதலாளி பாத்தியம் உண்டு என்று ஆங்கில நாட்டின் அரசியல் நிர்வாகிகள் சாதிக்கின்றார்கள். சிறிய பெல்ஜியத்துக்கு இயற்கையிலேயே ஏற்பட்டிருக்கும் உரிமை பெரிய இந்தியாவுக்கு மறுக்கப்பட்டிருப்பதன் காரணம் என்ன? மறுக்கக் கூடிய சக்தி ஒரு கூட்டத்தாரின் கையிலிருப்பதாலும், அந்த உரிமையை நிலைத்துக் கொள்ளும் ஆவலும் ஆற்றலும் இந்தியர்களிடம் தற்போது இல்லாமையாலுமே, மேநாட்டுக்கு ஒருவகை அரசியல் தத்துவமும் ஆசியாவுக்கு வேறு வகைத் தத்துவமும் பேசப்படுகின்றன. எனவே, ஏனை நாடுகளில் சுதந்திரம் என்பது பேசப்படும்பொழுது, இந்தியாவில் சீர்திருத்தம் கொடுக்கப்படும் என்று பேசப்படுகின்றது.

“ சிறிய சீர்திருத்தங்கள் பெரிய சீர் திருத்தங்களுக்கு விரோதியாகும் ” என்று இந்தியாவுக்கு மந்திரியாயிருந்த பேராசிரியர் மார்லிப் பிரபு கூறியிருக்கிறார். அதே பிரபு, இந்தியாவுக்குச் சிறிய சீர்திருத்தங்களை வழங்கி, பெரிய திருத்தங்களை ஒத்திப்போட்டு விட்டார். இந்தச் சீர்திருத்தங்கள் வழங்கப் பெறும் பொழுதெல்லாம், வினோதச் சம்பவம் மொன்றை இந்தியாவில் காணலாம். அதிகார வர்க்கத்தினர் ஒரு கையால் சீர்திருத்தங்களை வழங்குவார்கள். இன்னொரு கையால் அடக்குமுறைச் சட்டங்களை ஆக்கிக் கொள்ளுவார்கள். சீர் திருத்தம் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டு விடுமோ என்று அஞ்சும் சட்டசபையிலிருக்கும் இந்தியர்கள் அடக்குமுறைச் சட்டங்களை எதிர்ப்பதில்லை.

எதிர்த்தாலும் முழு வல்லமையுடன் எதிர்ப்பதில்லை. எதிர்த்தாலும், அது அதிகார வர்க்கத்தினரால் கவனிக்கப்படுவதுமில்லை. கவனிக்க வேண்டும் என்ற தேவை ஏற்படும் வரையில், அதிகார வர்க்கத்தினர் கவலை கொள்ளாததைப் பொதுஜனங்கள் பார்த்திருக்கிறார்கள். அதிகார வர்க்கத்தினரின் கவனத்தை இழுக்க வகையறியாத இந்தியர்கள் மரியாதைக் குறைவான கூச்சல் போடுகின்றார்கள். வெறுங் கூச்சல் அதிகாரவர்க்கத்தினருக்கு வெறுப்பை உண்டாக்குகின்றது. இந்தக் கூச்சலை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அடக்கு முறைச் சட்டங்களை ஆக்கிக் கொள்ளுகிறார்கள் அதிகார வர்க்கத்தினர். அவைகளின் மூலமாய், நாட்டுக்குத் தொண்டு செய்யக் கூடியவர்கள் அடக்கு முறைச் சட்டங்களுக்கு இலக்கு ஆகின்றார்கள். தங்களுக்குத் "தொந்திரை" கொடுக்கக் கூடியவர்கள் காவல் பந்தோபஸ்துக்குள் போய்விடவே, சீர்திருத்தங்கள் இந்தியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று அதிகாரவர்க்கத்தினர் எண்ணிக் கொள்ளுகின்றார்கள். தாங்கள் எண்ணியது தவறு என்று பின்னர் அவர்கள் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அதை மனத்திற் கொண்டு தங்களைத் திருத்திக் கொள்ளுவதில்லை. ஏன்? ஆங்கில பார்லிமெண்டு மகாசபை விருப்புடனும் விசாரணைக்குப் பின்னும் வழங்கும் சீர்திருத்தங்களுக்குத்தவிர, ஏனைய உரிமைகளுக்கு இந்தியர்கள் பாத்தியம் கொண்டாடுவது தகாது, சட்டத்துக்கு விரோதமானது என்று அதிகாரவர்க்கத்தினர் திட்டமாய்த் தங்கள் மனத்திற் கொண்டிருக்கிறார்கள். இந்த மனப்பான்மை மாறும் வரையில், இந்தியர்களுக்குச் சீர்திருத்தங்கள் தான் வழங்கப் பெறும். வழங்கப் பெற்ற சீர்திருத்தங்

க்ள்மேயோவைப் போன்றவர்களால் புகழ்ந்து பேசப்படும். இந்தியர்கள் இதை எதிர்த்தால் ஏளனம் செய்யப்படுவார்கள்.

1909—ம் வருஷத்தில் மார்லி—மிண்டோ சீர்திருத்தங்கள் இந்தியாவுக்கு அளிக்கப்பெற்றன. மாகாணச் சட்டசபைகளில் உத்தியோகப் பற்றற்றவர்களின் பெரும்பான்மையும் அங்கத்தினர்கள் கேள்விகேட்கும் உரிமையும், அந்த சீர்திருத்தங்களின் சிறப்பான தன்மைகள் எனக் கூறப்பட்டன. இதைக்கண்டு, இந்திய மிதவாதிகள் ஆனந்தமடைந்தார்கள். இந்த சிறப்பான தன்மைகளால் இந்தியாவுக்கு நன்மை கிடையாது என்று ஸ்ரீ அரவிந்தர் இயற்றிய கருமயோகிப் பத்திரிகை அக்காலத்தில் எடுத்துக்காட்டிற்று. "உத்தியோகப் பற்றற்றவர்களின் பெரும்பான்மை இருந்தும், சுயேச்சையுடன், முதுகெலும்பு முறியாத இந்தியர்கள் ஒரு சிலர் தான் சட்டசபைக்குள் செல்லமுடியும். சீர்திருத்த வாக்காளர்களின் தொகுதி அவ்வாறு நயமாய் அமைக்கப் பெற்றிருக்கிறது. உத்தியோகச் சார்பில்லாத அங்கத்தினர்கள் சட்டசபைகளில் கேள்விகள் கேட்கலாம். ஆனால், ஸர்க்கார் உறுப்பினர்கள், அவைகளுக்குப் பொறுப்புடன் கட்டுப்பட்டுப் பதில் கொடுக்கவேண்டும் என்ற கடமை கிடையாது" என்று தெளிவாக "கருமயோகி" எழுதிற்று. அதன் எழுத்துப்போலத்தான், பின்னர் நடவடிக்கையும் நடைபெற்றது.

பின்னர் மாண்டேகு— செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் விளைவாக இரட்டைபாட்சி தோன்றிற்று. இரட்டையாட்சி லயனல் கர்ட்டிஸ் துரையவர்களின் கற்பனையாகும். இந்தியர்கள் சென்ற ஐரோப்பியப்போரில்செய்தஉதவிக்காக

(கண்ணைத்துடைக்கும்பொருட்டே) இரட்டையாட்சி முறை வழங்கப்பெற்றது. கர்ட்டிஸ்துரையவர்களின் சாமார்த்தியத்தைப் புகழாமலிருக்கமுடியாது. இரட்டையாட்சிக்குத் தகப்பன்மார்கள் யாராயிருந்தாலென்ன? இரட்டையாட்சிச் சீர்திருத்தத்தின் அடிப்படைக்கொள்கை பிழைகொண்டது என்று அக்காலத்திலேயே காங்கிரஸ் வாதிகள் ஆட்சேபித்தார்கள். "சுதந்திரம்வாங்கி, விற்கக்கூடிய பொருள் அல்ல. பொறுப்பு பழக்கத்தால்தான் உண்டாகும்; போதனையால் ஏற்படாது. சுய நிர்ணயக் கொள்கையைத் தழுவி நடைபெறாத அரசியல் அந்தப் பெயருக்கு உரிமை கொண்டதல்ல" என்று காங்கிரஸ் வாதிகள் வாதாடினார்கள். "தவறுசெய்வதற்கான உரிமையும் சந்தர்ப்பமும் வசதியும் தான் சுயராஜ்யம்" என்றார் காந்தி. வழக்கம்போல, மிதவாதிகள் இரட்டையாட்சியை வரவேற்றார்கள். மந்திரிப்பதவிகளை ஏற்றார்கள். ஆனால் எத்தகைய நிர்வாகப் பொறுப்பும் தங்களுக்கு உண்மையிலே அளிக்கப்படவில்லை என்று நடவடிக்கைகளினின்றும் மந்திரிமார்கள் கண்டுகொண்டார்கள். இரட்டையாட்சியின்படி ஒதுக்கப்பட்ட இலாகா, மாற்றப்பட்ட இலாகா என்று அரசியில் இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒதுக்கப்பெற்ற இலாகாவின் தலைவர்கள் கவர்னரும் நிர்வாக சபையாரும். மாற்றப்பட்ட இலாகாவின் தலைவர்கள் கவர்னரும் மந்திரிமார்களும். வருமானம், நிர்வாகம் அதிகாரம், பாத்தியம் முதலியவை நிர்வாக சபையாரைச் சேர்ந்தவை; செலவு, பாவனை நிர்வாகம், பழி, முதலியன மந்திரிமார்களைச் சேர்ந்தவை. எனவே, மிகுந்த பக்திசிரத்தையுடன் இரட்டையாட்சியை சென்னை மாகாணத்தில் அமுலில் நடத்திபார்த்தக்கூட்டத்தாரும், இரட்டையாட்சியின் பய

னற்ற தன்மையை உணர்ந்து, அதை வெளியிட்டுவிட்டார்கள். வரவு செலவுக்கணக்கின்பேரில் சட்டசபைகளுக்கு உண்மையிலேயே அதிகாரம்கிடையாது என்பது வைஸிராய், கவர்னர்களின் "வீடோ" (தள்ளுபடி செய்யும் அதிகாரம்) சக்தியினுல், நாட்டார்கள் அனுபவ மூலமாக அறிந்து கொண்டார்கள். இந்தியர்களின் அரசியல் பொறுப்பு வளரக்கூடிய வகையில் சட்ட சபைகள் அமைக்கப்படவில்லை என்று கண்ட காங்கிரஸ் வாதிகள் முதலில் சட்டசபை பகிஷ்காரம் செய்தார்கள். பின்னர் சட்ட சபைக்குள் சென்று முட்டுக் கட்டை போட்டார்கள். பின்னர் நடந்த கதை வேண்டாம். ஆனுல் சட்டசபையிலிருக்கும் இந்திய அங்கத்தினர்களைப் பற்றி, பொறுப்பற்ற முறையில் மேயோ எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"மத்திய சட்ட சபையிலோ, மாகாண சட்ட சபைகளிலோ (வேடிக்கை பார்க்கச் செல்லும்) அன்னியன், திடீரென்று ஒரு நேர்த்தியான கைக்கடியாரம் கிடைக்கப் பெற்ற சிறிய, குறும்புத்தனங் கொண்ட பையன்களைப் பார்ப்பது போலத் தோன்றும். தங்கள் விரல்களை அதில் நுழைக்கவும், இரண்டொரு சக்கரங்களைப் பெயர்த்து இழுக்கவும், மத்திய வில்லைத் தொட்டு விளையாடவும் வேறு சில பகுதிகளைப் பிடித்திழுக்கவும் அவர்கள் போராடிக் கூச்சலிடுகின்றுர்கள். கருவியின் அமைப்பின் மதிப்பும் காலத்தின் மதிப்பும் அவர்களுக்குத் தெரியவில்லை. எவ்வாறு சாவி கொடுப்பது என்று அவர்களுடைய உபாத்திமார்கள் தெளிவு படுத்தமுயன்றுல், அவர்கள் கூச்சலிடுகின்றுர்கள், 'கோணங்கித்தனம்' செய்கின்றுர்கள்."

சட்ட சபை அங்கத்தினர்களுக்கு அதிகார வர்க்கத்தினர் உபாத்திமார்களாக விளங்குகிறுர்கள். ஏனைய இந்தி

யர்களுக்கு மேபோ போதகர் போலும்! தங்கள் சொற்களுக்குப் பின்னே யிருக்கும் கருத்துக்கள் சட்ட சபை அங்கத்தினர்களுக்கு விளங்குவதில்லை என்று மேயோ கூறுகின்றார். இது மட்டுமோ மேயோ கூறுவார்? இன்னும் எவ்வளவோ கூறுவார்? ஏன் கூறக் கூடாது? தங்கள் சொற்களுக்குப் பின்னே சக்தி யிருத்தல்வேண்டும் என்பதை உணர்ந்து அதைச் சேகரித்துக்கொண்டு, சட்ட சபைகளுக்குள் செல்லாத மனிதர்களைப் பற்றி மேயோ எவ்வளவு கூறினாலும், பாதகமில்லையோ என்று நமக்குக்கூடத் தோன்றுகிறது. பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நண்பர்கள் அறிதல் வேண்டும். பணத் தேவையினால் பாராளு மன்றத்தைக் கூட்டிய மன்னன், அந்த சபை தனது விருப்பப்படி நடக்கச் சம்மதிக்காதது கண்டு, "சபையை கலைத்துவிட்டேன்" என்றார். உடனே சபையிலிருந்த உறுப்பினர்கள் சபைக் கட்டிடத்தை விட்டுப் பெயர்ந்துபோய், பக்கத்திலிருந்த டென்னிஸ் பந்து விளையாடும் கூடத்திற்குச் சென்று, சபை கூடினார்கள். யோசனையும் வாதமும் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில், "கனவான்களே! நீங்கள் இங்கு கூடலாகாது என்பது அரசன் உத்தரவு" என்று சிப்பாய்கள் வந்து அறிவித்தார்கள். கூட்டத்தில் தலைமை வகித்த மிரபோ என்ற சிங்கமனைய நெஞ்சத்தார், "நாங்கள் இங்கு பொது ஜனங்களின் ஆதரவின் பேரில் கூடியிருக்கிறோம். ஈட்டிகொண்டு நீங்கள் எங்களைத் தாக்கி, சபையைக் கலைத்தாலொழிய, நாங்கள் கலைவதாயில்லை" என்று கர்ச்சித்தார். பொது ஜனங்களின் ஆதரவைப் பெற்றவர்கள் அவமதிப்படைய மாட்டார்கள். அவர்களுடைய நெஞ்சழுத்தமும் காரியம் செய்யும் முறையும் வேறாகும்.

இரட்டையாட்சியால் இந்தியாவுக்கு நன்மைதான் என்றும் அதன் மூலமாய் இந்தியர்கள் பொறுப்பை உணர்ந்து முன்னேறி வருகின்றார்கள் என்றும் மேயோ கூறுகின்றார். வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவக் கூச்சலும், மந்திரிப் பதவிக்காக அவலட்சணமான போட்டியும், சகிக்க முடியாத தேர்தல் செலவும், தேர்தல் தூற்றுதலும் வகுப்புப் பகைமையும் கௌரவப் பதவிகளில் மோகமும்— இவைகள்தான், இரட்டையாட்சியின் மூலமாக இந்தியர்கள் கண்டபலன்களாகும். இரட்டையாட்சிக்காலத்தில் இந்தியர்களுக்குப் பொறுப்புத் தன்மையுண்டாயிருக்கிறது என்பது உண்மை. இரட்டையாட்சிக்காலம் என்று மேயோ கூறியிருந்தால், அதுபொருத்தமாயிருந்திருக்கும். ஆனால் காரணம் வேறு. இந்தியர்களை மனிதர்களாக்கி, தங்கள் பொறுப்பை உணரச்செய்தது ஒத்துழையாமையாகும். இரட்டையாட்சியின் நற்பயனை இந்தியர்கள் ஒப்புக் கொள்ளாததுபோல, ஒத்துழையாமையின் நல்விளைவுகளை மேயோ ஒப்புக்கொள்ளவில்லை, ஒப்புக்கொள்ளவும் முடியாது. ஆங்கிலேயர்களின் வாழ்க்கை முறையையும் மனப்பான்மையின் போக்கையும் அறிய முடியாத இந்தியர்கள், ஆங்கிலேயர்களின் குறைகளைத்தீர்க்க வழிகளைக் காணமுடியுமா? அதைப்போலவே, மேயோவின் கஷ்டமும். "கனடாவின் கம்பளிச்சட்டை இந்தியாவின் உஷ்ணத்துக்கு ஏற்காது" என்று மார்லிபிரபு சூத்திரம் பேசினர். அதாவது இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி விளங்காதாம்! குற்றம் சாட்டுபவனே நீதிபதியாகித் தீர்ப்புச்சொன்னல், குற்றவாளி விடுதலை பெறமுடியுமா? இந்தியாவும் ஜப்பானும் அனேகமாய் சமமான சீதோஷ்ண ஸ்திதியைக் கொண்டவைதான்.

கனடாவின் கம்பளிச்சட்டை ஜப்பானுக்கு ஏற்றுவிட்டது. இந்தியாவுக்கு ஏற்காதா, பார்ப்போம். இந்தியர்களுக்குப் பாரதியார் வேண்டும் சீர்திருத்தவரங்கள் வேறு. அந்த வரன்களை இந்தியர்கள் பெற்றால், காலாட்சி, அரையாட்சி, ஒற்றையாட்சி, இரட்டையாட்சி, பொறுப்பாட்சி, சுயநிர்ணயம்—இவைகளைப்பற்றிப் பேசத்தேவையில்லை. மேயோ முதலியவர்களுடைய பார்வை நேராகிவிடும். பாரதியார் காளியைப் பின்வருமாறு வேண்டுகின்றார்:—

"தோளை வலியுடையதாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக்கொண்டு பிளந்தாலும்—கட்டு
மாறா உடலுறுதி தந்து—சுடர்
நாளைக்கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித்திகழு முகந்தந்து—மத
வேளைவெல்லு முறைகூறித்—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்."

அத்தியாயம் 25.

சுதேசமன்னர்கள்.

இந்தியாவில் அநேக சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. இவைகளை ஆளும் மன்னர்களிற் பெரும்பான்மையோர் தங்கள் தர்பார்களுக்கும் வைஸிராய் நடத்தும் தர்பார்களுக்கும் அலங்காரமாக இருக்கக்கூடியவர்கள். இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பெறும் "ரெஸிடெண்டு" துரைகளால் சொடுக்கி இழுக்கப்படும் சூத்திரப் பாவைகள். "ரெஸிடெண்டு" துரையவர்களின் தயை

இருக்கும் வரையில்தான், இந்தமன்னர்கள் தங்கள் அதிகாரப்பதவிகளில் "அட்டஹாசம்" செய்து கொண்டிருக்க முடியும். இவர்களிடமுள்ள, இந்திய அரசாங்கத்தாரது நோக்கம் மாறிவிடின், இவர்களுடைய தலை தப்பிப்பிழைப்பது "தம்பிரான் புண்ணியம்" தான். இந்தியாவிலிருக்கும் ஏழை இந்தியனுடைய வாழ்க்கை, சுதேச மன்னர்களின் வாழ்க்கையைக் காட்டிலும் உயர்ந்தது என்பது எனது கருத்து. மற்றவர்கள் வேறு விதமாய் நினைக்கலாம். மேயோவும் மாறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறார்.

"இந்திய அரசாங்கத்தாருக்கும் சுதேசமன்னர்களுக்குமிடையே இருக்கும் உறவு உடன்படிக்கை உறவாகும். ஜயித்தவன் தோற்றவன் உறவல்ல. தங்களுடைய அரசியல் முறைகளைத் 'தாங்களே தீர்மானித்துக் கொள்ளவும், தாங்களே வரிவிதிக்கவும், தங்கள் சமஸ்தான எல்லைக்குள் மரண தண்டனைத்தீர்ப்புச் சொல்லவும் சுதேச மன்னர்களுக்கு உரிமை உண்டு. சாதாரணமாக—நெருக்கடி அவசியம் நேர்ந்தாலொழிய—இந்திய அரசாங்கத்தார் சமஸ்தானங்களின் உள் நடவடிக்கைகளில், தலையிடுவதில்லை. பொதுவாக, இந்தியா முழுமையும் காக்கும் பொறுப்பை இந்திய அரசாங்கத்தார் கொண்டிருக்கிறார்கள். சுதேசமன்னர்களுக்கு (பெரிய சமஸ்தானங்களாயிருப்பின்) புத்திசொல்ல, ரெஸிடெண்டு என்ற உத்தியோகஸ்தர் இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப் பெறுகின்றார்."

தோற்றத்திலே, மேயோவின் எழுத்தைபடிப்பவர்கள், சுதேச மன்னர்களின் சுதந்திரத்தையும் சுகவாழ்வையும் அதிகாரப் பெருமையையும் கண்டு, பொறாமை கொள்ளவும் கூடும். உண்மை அறிந்த இந்தியன், "சுதேசமன்னன்"

என்ற கௌரவம் தனக்கு அளிக்கப்படுவதாயிருந்தால், அதைக்கண்டு அஞ்சி ஓட்டமெடுப்பான். "ரெஸிடண்டு' துரைகள் சுதேசமன்னர்களை "பந்தாடும்" வேடிக்கைகளை நண்பர்கள் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். சுதேச சமஸ்தானங்களுக்குள் விஸ்தீரணத்தில் பெரிது நிஜாம் ராஜ்யமாகும். அது ஆங்கில நாட்டைப் போல அவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்று சொல்லலாம். நிஜாம் மன்னர்கள் நல்ல பரம்பரையைச் சேர்ந்தவர்கள். தற்போதைய நிஜாமைச் சிம்மாதனத்தை விட்டு விலக்கப்போவதாக செய்தி உலவிற்று. அந்தச் செய்தி பொய் என்று போகும் காலம் இன்னும் வரவில்லை. அவரை விலக்க யோசிக்கும்படி இந்திய அரசாங்கத்தாருக்கு என்ன நெருக்கடி அவசியம் நேர்ந்ததோ, அது நமக்குத்தெரியாது. பரத்பூர் மன்னன் தனது அரசியலைப்பற்றி விசாரணை செய்வதற்கு, இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பெற்ற கமிஷனை எற்றுக் கொண்டிருக்கிறார். நாபா மாகாராஜா, பதவியினின்றும் நீக்கப்பட்டு, பென்ஷனும் குறைக்கப்பட்டு, இப்பொழுது தமிழ்நாட்டில், கோடைக்கானல் மலையில் கட்டாயப் படுத்தப் பட்டு, வதிந்துவருகின்றனர். சுதேச மன்னர்களின் சுதந்திரமும் உரிமையும் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நண்பர்கள் அறிந்து கொள்ளலாம். சுதேச மன்னர்கள் சாதாரண இந்தியர்களைக்காட்டிலும் திக்கற்ற நிலைமையிலிருக்கின்றார்கள் என்பதைத்தான் முடிவாகவும் உண்மையாகவும் கொள்ளவேண்டியிருக்கிறது.

1920-ம் ஆண்டில் நேர்ந்ததாகச் சம்பவமொன்றை மேயோ குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சியை மேயோவுக்குக் கூறியவர், நீண்டகாலம் இந்தியாவில் வதிந்து வந்த

அமெரிக்கராம். அமெரிக்க நண்பர் சுதேசமன்னர் ஒருவரிடம் சென்றிருந்த சமயத்தில், அவரும் சுதேச மன்னனும் அவரது திவானும் பேசிக்கொண்டிருந்தார்களாம். அவர்கள் பழைய நண்பர்களானபடியால், மனத்தில் யாதொரு ஒதுக்கமுமின்றி, பேசிக்கொண்டிருக்கையில்,

> "ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டுவிட்டுப்போய்விடுவார்கள் என்று மகாராஜா நம்பவில்லை. ஆனால், ஆங்கில நாட்டிலேற்பட்டிருக்கும் புதிய மந்திரிக் குழாத்தின் போதனையின்பேரில், அவர்கள் புத்திதடுமாறி, அவ்வாறு செய்யவும் கூடும். எனவே, (வரப்போகும் சந்தர்ப்பத்தை உத்தேசித்து) மகாராஜா அவர்கள் போர்த்தளவாடங்களையும் வெள்ளி நாணயங்களையும் தயார் செய்து சேனைகளையும் உருவாக்கி வருகின்றார். உண்மையிலேயே, ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டுச் சென்றார்களாகில், மூன்று மாதங்களுக்குள் வங்காளத்தில் ஒரு காசுகூட, ஒரு கன்னிகை கூட மிகுந்திருக்க, வைக்கப்படமாட்டாது."

என்று திவான் சொன்னாராம். அதை மகாராஜா அவர்கள் பூரண மகிழ்ச்சியுடன் அங்கீகாரம் செய்தாராம். இது 1920-ம் ஆண்டில் நடை பெற்றதாக மேயோவால் கூறப்பட்டிருக்கிறது. இதே சம்பாஷணை தமக்கும் ஸர். பிரதாப சிம்மனுக்கும் இடையே நடந்ததாக தற்போதைய ஆங்கில நாட்டுத் தொழிற் கட்சியின் தலைவரான ராம்ஸே மாக்டொனல்ட் அவர்கள் தாம் இந்தியாவைப்பற்றி 1910-ம் வருஷத்தில் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கதை ஒவ்வொரு பத்து வருஷத்திற்கும் உருமாறி வரும் போலிருக்கிறது! மேயோ மேலே குறிப்பிட்டிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றி "டிச்சர்" என்று புனைப் பெயர்கொண்ட

கீர்த்திபெற்ற ஆங்கிலேயர் "காபிடல்" என்ற பத்திரிகையில் கீழ்கண்டவாறு எழுதியிருக்கிறார் :—

"(மேயோ கூறியிருக்கும்) கதையின் அசல், நாற்பது ஆண்டுகளுக்குமுன், சுவையுடனும் நயமாயும் சொல்லப்பட்டதை நான் கேள்விப்பட்டேன். சம்பாஷணை, ஜோதிபுரி சமஸ்தானத்தில் பிரதிநிதியாக அரசு செலுத்திய, ரஜபுத்திர வீரன் ஸர் பிரதாப சிம்மனுக்கும் (அப்பொழுது வைஸிராயாகவிருந்த) டப்பரின் பிரபுவுக்கும் நேர்ந்ததாகக் கதை. "பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு அகன்றால், என்ன நேரும்" என்று வைஸிராய் கேட்டார். "என்ன நேரும்? என்னுடைய ஜவான்களைக் குதிரைகளிலேறச் செய்வேன். ஒரு மாதத்திற்குள் வங்காளத்தில், ஒரு காசும் ஒரு கன்னியும் பாக்கியிருக்கமாட்டார்கள்" என்று ரஜபுத்திர வீரன் பதிலளித்தாராம்."

"எனக்கு பிராதப சிம்மனைத் தெரியும். "இந்த சம்பாஷணை நடந்ததுண்டா" என்று கர்ஸன் தர்பாரில் கேட்டேன். "பொய்! நண்பரே! முழுப் பொய். நிரபராதிகளைத் துன்புறுத்தும் வழக்கம் எங்களுக்கு (ரஜபுத்திரர்களுக்கு)க் கிடையாது. எங்களுடைய எதிரிகளை நாங்கள் அவமானப் படுத்தினால், அவர்கள் கத்தியை எடுத்துக்கொள்ள அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம்" என்று கடுமையாக அவர் பதிலளித்தார்.

ஒன்று விட்டு, இரண்டு விட்டு, மூன்றும் தாமாக, மேயோ இந்தப் பொய்யைத் திருப்பிக் கூறியிருக்கிறார். நோக்கம் தெரியவில்லையா? பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் ஜனங்கள் சுதேச மன்னர்களை நன்றாக்குக் கொண்டுப் பார்க்கலாகாது. சுதேச மன்னர்களும் பிரிட்டிஷ் இந்திய

ஜனங்களும் ஒன்று சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது, பல அரசியல் உபாயங்களில் ஒன்றாகும்.

"எந்த நிமிஷம் இந்தியர்களின் கையில் அரசியல் ஒப்படைக்கப் படுகின்றதோ, அதே நிமிஷத்தில், சுதேச மன்னர்கள் பெரும் சக்திகளாக நாட்டில், நூறு ஆண்டுகளுக்கு முன்போல, வெளித்தோன்றி விடுவார்கள். அவர்களை அலட்சியம் செய்ய முடியாது. இந்தியா இதுவரையிலும் பார்த்திராத, இதுவரையிலும் கீழ்ப்படியாத மனித மாதிரிகளடங்கிய இந்திய சட்ட சபையின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைக்காட்டிலும், சுதேச மன்னர்களுள் திறமைவாய்ந்த ஒருவரை இந்தியச் சேனை பின்பற்றும் என்பதை சுயராஜ்ய வாதிகள் மறந்து விடுகிறார்கள் போலத் தோன்றுகிறது."

மேயோ காங்கிரஸ்வாதிகளுக்கும் தேசபக்தர்களுக்கும் அச்சத்தை உண்டுபண்ணும் வகையை நண்பர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் இந்த சம்பவம் ஏற்படுதல் எளிதுஎன மேயோ இந்தியர்களுக்குப் பயம் காண்பிக்கிறார். எதிர் காலத்தில் வரும் என்பதற்காக, இப்பொழுது முதல் இந்தியர்கள் ஏங்க வேண்டியதில்லை. வைத்தியர்கள் தங்கள் தொழிலுக்காக வைத்தியம் செய்கிறதா அல்லது நோயாளியின் நோயைப் போக்குவதற்கு வைத்தியம் செய்வதா? தொழிலுக்கும் பிழைப்புக்கும் மட்டும் தான் என்று மேயோ கூறக்கூடும். சுதேச மன்னர்கள், பிரிடிஷ் இந்தியாவில் கிளர்ச்சிசெய்யும் அரசியல் வாதிகளை வெறுப்புடனும் இகழ்ச்சியுடனும் நோக்குகின்றார்கள் என்றுமேயோ கூறுகின்றார். காந்தி பல சமஸ்தானங்களில் விருந்தினராகவும் தவமுனியாகவும் உபசாரத்துடன் வரவேற்கப்பட்டதற்குமுன், மேயோதமது நூலை எழுதி விட்டார்போலும்! மேலும் எதிர்

காலநிகழ்ச்சிகள், ஆங்கிலப் பழமொழி கூறுவதுபோல், கடவுளின் மடியிலிருக்கின்றன. மேயோ, ஆண்டவனுடைய அந்தரங்கக் காரியதரிசியல்ல. சுதேச மன்னர்களின் தற்போதைய நிலைமையைக் காட்டிலும், சுயராஜ்யக் காலத்தில் அது கேவலமாகிவிடாது.

சுதேச மன்னர்கள் பிரிட்டிஷ் இந்தியா அரசியல் கிளர்ச்சிக்காரர்களை ஏளனம் செய்கின்றனர்கள் என்று எழுதிய மேயோ, சும்மாயிருப்பாரா? சித்திரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டாமா? எனவே, கீழ்க்கண்டவாறு, அவர் எழுதியிருக்கிறார்:—

"சுயராஜ்யக் கிளர்ச்சிக்கார அரசியல் வாதிகளின் அபிப்பிராயங்களை நான் அந்தரங்கமாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, எனக்காக இந்திய நண்பர் ஒருவர் தில்லியில் நடத்திய விருந்துக் கச்சேரி, எனது நினைவிற்குவருகின்றது. எனக்கு விருந்தளித்தவரைப்போலவே, வந்திருந்த விருந்தினர்களிற் பெரும் பான்மையோர் வங்காளி ஹிந்துக்கள். அவர்கள் மேநாட்டுமுறையில் கல்விபயின்றவர்கள். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்கள் விரைவில் துரத்தப் படப்போவதையும் எதிர்காலத்தில் தாங்கள் இந்த நாட்டில் ஆட்சி செலுத்தப்போவதையும் பற்றி இறுதியில் பேசினர்கள். "சுதேச மன்னர்களைப்பற்றி உங்களுடைய திட்டம் என்ன" என்று நான் கேட்டேன். "அவர்களை நாங்கள் அடியோடு ஒழித்துவிடுவோம்" என்று அவர்களில் ஒருவர் உறுதியுடன் கூறினர். ஏனையோர் 'ஆம்' என்று தலையை அசைத்தார்கள்."

வங்காளத்தைப்பற்றி சுதேசமன்னர் ஒருவர் கூறியதாக, ஒரு "மூட்டையை" மேயோ வெளியே விட்டார்.

பின்னர் சுதேசமன்னர்களைப்பற்றி வங்காளிகள் கூறியதாக, வேறொரு "கம்பளியை" வெளியே காண்பித்திருக்கிறார். இதுவும் பொய் என்று வெளியாயிற்று. மேயோவுக்கு தில்லியில் விருந்துக்கச்சேரியை நடத்தியவர், அஸோஸியேட்டட் தந்திக்கூட்டத்தாரைச் சேர்ந்த ராய் அவர்கள். மேயோ கூறியிருக்குமாறு விருந்துக்கச்சேரியில் நடைபெற்றதா என்று ராய் தம்பதிகளை லாலா லஜபதிராய் விசாரித்தார். ஸ்ரீமதி டொரதிராய் (ராய் அவர்களின் மனைவி) பின்வருமாறு லாலாஜிக்குப்பதில் எழுதியிருக்கிறார்:—

"தாங்கள் விசாரித்ததற்காக அனேக வந்தனங்கள். மேயோமாது தில்லியில் தங்கிய சிறிதுகாலத்தில், நாங்கள் அவருக்கு மெய்டன்ஸ் ஹோட்டிலில் ஒரு விருந்து நடத்தி வைத்தோம். நல்ல அறிமுகக் கடிதங்களைக்கொண்டு, அவர் எங்களிடம் வந்தார். விருந்தில், இரண்டு வங்காளிகள்தான் இருந்தார்கள்; அவர்கள் எனது கணவனும், திரு. ஸேன் அவர்களும். ஏனைய யாவரும் வங்காளியல்லாதார். விருந்தினர்களிற் சிறப்பாயுள்ளவர்கள், சுயேச்சைக்கட்சியின் தலைவர் திரு. எம். ஏ. ஜின்னாவும், திரு. சண்முகம் செட்டியும். இந்திய அரசியல் அமைப்பின் போக்கு, பாதுகாப்பு, வகுப்பு ஒற்றுமை, குழந்தைகளின் சீர், கலை முதலியவைகளைப்பற்றி பேச்சு நடைபெற்றது என்பது எனது ஞாபகம். சுதேச மன்னர்களைப்பற்றி பேச்சு நிகழ்ந்ததாக எனக்கு ஞாபகமில்லை. அவர்களை அழித்துவிடவேண்டும் என்று பேச்சு நடைபெறவேயில்லை என்று எனக்குத்தெரியும்."

மேயோவின் விஷமப் பிரசாரப் பொய்களிற் சிலவற்றை நாம் பூரித்துளைத்து வெளிக்காண்பித்து விட்டோம். இந்தப்பொய்க்கூற்றுகள் யாவும் மேயோவின் நோக்கத்தை நன்

ருக வெளியுலகத்தாருக்குத் தெளிவுபடுத்தும். எனவே, நாம் கடு மொழிகளைப்பெய்து மேயோவைக் கண்டிக்க வேண்டிய தேவையில்லை. பிரிட்டிஷ் இந்தியாவையும் சுதேச சமஸ்தானங்களையும் பிரிக்கப் பிறர் முயன்று பார்க்கலாம். இனியும் அந்தக்காரியம் முற்று பெறுமா?

"பாரத ஸமுதாயம் வாழ்கவே—வாழ்க, வாழ்க
பாரத ஸமுதாயம் வாழ்கவே—ஜய, ஜய, ஜய"

*　　*　　*　　*　　*

"எல்லாருமோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர், வாழ்க

(பாரதஸமுதாயம்)

அத்தியாயம் 26.

தீப்பொறிகள்.

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக, ஹிந்து முஸ்லீம் வேற்றுமை சில சமயங்களில் செழித்தும், மற்றும் சில சமயங்களில் அமிழ்ந்தும் வந்திருக்கின்றது. 1858-ம் ஆண்டில், கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆட்சிமுற்று பெற்றது. பின்னர் விக்டோரியா மகாராணியாரின் விளம்பரம் இந்தியா முழுதும் அறிவிக்கப் பெற்றது. அதுமுதல், மார்லி-மிண்டோ சீர்திருத்தக்காலம் வரையில், ஹிந்து முஸ்லீம்

கலவரங்கள் ஏற்பட்டதில்லை என்று மேயோ கூறி, காரணங்களும் குறிப்பிடுகின்றார். கலவரங்கள் ஏற்பட்டதேயில்லை என்று கூறுவது தவறு. சுயராஜ்யப்பேச்சு இந்த நாட்டில் உதயமானபிறகுதான், ஹிந்துமுஸ்லீம் வேற்றுமைகள் வலுத்து வருகின்றன. இதற்கு இந்திய அதிகாரவர்க்கத்தினர் சிலகாரணங்களைக் கூறுகின்றார்கள். இரண்டு கட்சிகளையும் கவனிப்போம். ஆனால் சிறப்பாக நடைபெற்ற சில சம்பவங்களை ஈண்டு முதலில் குறிப்பிடுவோம். வங்காளப் பிரிவினைக்குப் பின்னர், வங்காள ஹிந்துக்கள் தீவிரமாக சுயராஜ்யக் கிளர்ச்சி செய்தார்கள். வங்காள முஸ்லீம்கள் இந்தக் கிளர்ச்சியில் அதிகமாகக் கலந்து கொள்ளவில்லை. அந்த சமயத்தில் இரண்டு நிகழ்ச்சிகள் நேர்ந்தன. கீழ்வங்காளத்திலிருக்கும் டாக்கா நவாப் அவர்கள் கடனில் மூழ்கித்தத்தளித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர்கள் பேரில் வங்காள அரசாங்கத்தாருக்குக் கருணை பூத்தது. நவாப் அவர்கள் இலேசான வட்டியில் கடன் வாங்க வசதி பெற்றார். கீழ் வங்காளத்தில் மைமன்சிங் என்று ஒரு நகரமிருக்கிறது. மேற்கூறிய சமயத்தில், சிவப்புப் பிரசுரங்கள் என்ற துண்டுப் பிரசுரங்கள் தாராளமாக வழங்கப் பெற்றன. "ஹிந்துக்களுக்கு எந்த வகையில் துன்பமுண்டாக்கினாலும், முஸ்லீம்கள் தண்டனைக்குள்ளாக மாட்டார்கள். ஹிந்துக்களின் கோயில்களை இடிக்கலாம்; ஹிந்துப் பெண்களைக் கற்பழிக்கலாம். என்றாலும் முஸ்லீம்களின் குற்றம் கவனிக்கப்படமாட்டது" என்பது பிரசுரங்களின் பல்லவியாகும். இந்தப் பிரசுரங்கள் யாரால், எதற்காக அச்சிடப்பட்டு வழங்கப்பெற்றன என்பதைப்பற்றி நாளது வரையில் வங்காள அரசாங்கத்தார் கவலைகொண்டு, விசாரிக்கவேயில்லை.

இவைகளையும் மற்றும் சில நிகழ்ச்சிகளையும்கொண்டு, ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகளை வேண்டுமென்றே அரசாங்கத்தார் வளர்க்கின்றார்கள் என்று சுயராஜ்ப வாதிகள் கூறுகின்றார் கள்.

"எதிர் காலத்தில் இந்தியாவுக்கு சுயராஜ்பம் வருவதாயிருந்தால், பெருப்பான்மையோரான ஹிந்துக்களுக்குத்தான் நன்மை யுண்டாகும். எனவே, ஹிந்துக்களின் சுயராஜ்ய முயற்சியைத்தடுத்து, முளையிலேயே கொய்தல் வேண்டும. ஹிந்துக்களைக் காட்டிலும், ஜனத்தொகையில் குறைந்த தங்களுக்கு அரசியலில் ஆதிக்கம் இருத்தல்வேண்டும். இதற்காக அரசாங்கத்தாரின் தயை தங்களுக்குக் கிடைக்கும்படியான வழியில்தாங்கள் நடந்து கொள்ள வேண்டும். ஹிந்துக்களின் இலாபம்தங்களுடைய நஷ்டம்" என முஸ்லீம்கள் நினைக்கின்றார்கள் என்று அதிகார வர்க்கத்தினரில் சிலர் சமாதானம் கூறுகின்றார்கள். இரண்டு கட்சிகளிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் ஹிந்துக்களும் முஸ்லீம்களும் அடித்துக் கொள்ளாத முறையில், அவர்களிருவரையும் கொண்டு வருதல் கடமையறிந்த அரசியலாரின் பொறுப்பாகும். பிசாசு என்று நினைத்து குழந்தை பயப்படலாம்! ஆனால் அந்த பயத்தைப்பெற்றோர்கள் வளர்க்கலாமா? பெற்றோர்கள் வளர்க்கமாட்டார்கள். ஆனால் மற்றவர்களும் அவ்வாறு செய்வார்களா? முஸ்லீம் அரசாங்கக் காலத்தில், ஹிந்துக்கள் உயர்ந்த உத்தியோகப் பதவிகளில் முஸ்லீம் மன்னர்களால் அமர்த்தப் பெற்றனர் என்பதை மேயோவே ஒப்புக் கொள்ளுகின்றார்.

"முஸ்லீம் தனது குர்ஆனை ஓதி, பாரவீகக் கவிதையைப் படித்தாலும், பொதுவாக வெளியுலக மனிதனுவான்.

வேறு ஆள் கிடைக்கக் கூடுமானல், எழுத்து எழுதியும் நூல்களைப் படித்தும் தனது தலையைத் துளைத்துக் கொள்ளுவதில்லை. கூரிய அறிவும் நேர்த்தியான ஞாபகசக்தியும் கொண்ட பிராமணன் பாரவீக பாஷையைக் கற்றுக் கொண்டு, தனது படிப்பை தனது எஜமானனின் உபயோகத்துக்கு அர்ப்பணம்செய்தால் அவன் (முஸ்லீம்) அரசாங்கத்தில் உயர் பதவியை அடைவான். எனவே, சுமார் ஐந்து நூற்றாண்டுகள் பிராமணன் எழுத்து வேலையிற் பெரும்பான்மையைச் செய்து வந்தான்; முஸ்லீம் நாட்டை ஆண்டு வந்தான்.''

முஸ்லீம் அரசாட்சிக் காலத்தில் இல்லாத ஹிந்து முஸ்லீம்வேற்றுமை இப்பொழுது வருவானேன்? ஆங்கிலக்கல்வி இந்த நாட்டில் துவங்கப்பெற்ற காலத்தில், முஸ்லீம்கள் வெகுவாக அந்தக் கல்வியை ஏற்க முன் வரவில்லை. எனவே, அரசாங்க உத்தியோகச் ''சங்கதி''யில் அவர்கள் பின்னடைந்து போயினர். இதுதான் அவர்கள் ஹிந்துக்களின் பேரில் கொண்டிருக்கும் வெறுப்புக்குக்காரணம் என்றுகூறப்படுகின்றது. இது முழுக்காரணமல்ல. ஐரோப்பியர்கள் உலக இஸ்லாமியர்களை அந்தந்த நாடுகளில் மிகுதியும் துன்புறுத்தி வந்தார்கள். எனவே இஸ்லாமியர்களின் உள்ளம் கொதிப்படைந்தது. ஆங்கிலேயர்களால் எகிப்திய-துருக்கிய, அராபிய முஸ்லீம்கள் துன்புறுத்தப்படவே, இந்திய முஸ்லீம்கள் இந்திய அதிகாரவர்க்கத்தினரை இனிப்புடன் நோக்கவில்லை. ஆங்கிலக் கல்வியில் தேர்ந்து அதிகாரவர்க்கத்தினருக்குத் துணையைப் போல நிற்கும் ஹிந்துக்களையும் இந்திய முஸ்லீம்கள் விருப்புக்கண்களுடன் நோக்கவில்லை. இந்த நோக்கமும் ஜமீன்தார் குடியானவன் என்ற வேற்றுமையால் விளைந்த மனஸ்தாபமும்தான் மலையாள மாப்பிள்ளை

மார்க்கலகத்துக்குக் காரணங்களாகும். இவைகளை மறைத்து, மேயோ வேறுவிதமாகக் காரணங்களைக் கூறுகின்றார். "வைக்கத்து அப்பன்" என்ற ஹிந்துக்கடவுளை, விக்கிரக ஆராதனையை வெறுக்கும் முஸ்லீம் மாப்பிள்ளைமார்கள் தொழுகின்றார்கள் என்று கூறப்படும் பொழுது, சமயசம் பந்தமாக ஹிந்துக்கள் தமது விரோதிகளாக முஸ் லீம்களால் பாவிக்கப்படுகின்றார்கள் என்று கூறுவது பொருந்தாது. "அல்லாப்பண்டிகை" விழா, தமிழ் நா டெங்கும் ஹிந்துக்களாலும் கொண்டாடப் பெறுகின் றது. முன்னர் ஹைதர்அலி காலத்தில் ஒரு ஹிந்து திவானாகவிருந்தார். இதே மைசூரில், இப்பொழுது ஹிந்து மன்னன் ஆட்சிக்காலத்தில், ஒரு முஸ்லீம் திவானாக விருக்கின்றார். எனவே ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகள் எங்கிருந்து தோன்றும் என்று நமக்குத் தெரியவில்லை. மனத்திடமுள்ளவர்களிடத்தும் கூட, கரைத்துக்கரைத்துச் சந்தேகத்தை உண்டாக்கிவிடலாம். மாப்பிள்ளைமார் கலகக் காலத்தில், ஹிந்துக்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை ஒன்று விடாமல் பொறுக்கி எடுத்து எழுதியிருக்கிறார் மேயோ. மேயோவுக்கு ஹிந்துக்களிடம் இருக்கும் அன்பையும் அனு தாபத்தையும் கடந்த அத்தியாயங்களில் நண்பர்கள் பார்த் திருக்கிறார்கள். எனவே, மேயோவின் "காலங் கடந்த" அனுதாபம் ஹிந்துக்களுக்குத் தேவையில்லை, மேயோவின் நோக்கம் தெரியுமாதலின். ஆனால் மாப்பிள்ளைமார்கள் மூடுவண்டியில் ஏற்றப்பட்டு, போத்தனூரில் உயிர்க்கொலை செய்யப்பெற்றதை எந்த சரித்திரத்தில், யாருடைய கணக் கில் பற்று எழுதுவது என்பதைப்பற்றி மேயோ வாய் திறக்கவேயில்லை. அதைப்பற்றி எழுதுவது அவருடைய வேலையல்லவே!

பின்னர் சௌரி சௌரா சம்பவத்தை மேயோ குறிப்பிடுகின்றார். சௌரி சௌரா சம்பவத்தால் காந்தியின் உத்தம குணம் உலகத்தாருக்கு வெளியாயிற்று. அதனால், பர்டோலித்திட்டம் தோன்றிற்று. பர்டோலித்தீர்மானத்திற்காக, காந்தியை மன்னிக்க மனம் பொருத கூட்டத்தார் நாட்டில் இருக்கிறார்கள். எல்லோருக்கும் திருப்தியைக் கொடுக்கும் முறையில் எவரும் நடந்து கொள்ளமுடியாது. ஐரோப்பிய பார்லிமெண்டுமகாசபைகளிலேயேகைக்குத்துச் சண்டைகளும், துப்பாக்கிப்பிரயோகங்களும் தாராளமாக நிகழ்கின்றன. அடிமைப்பட்ட நாட்டில், அவலட்சணமான நிகழ்ச்சிகள் நேரும் என்று ஐரோப்பிய அறிஞர்களே கூறுவார்கள். அடிமை தனது அறிவைக் கொண்டுதானே எதையும் அளக்கமுடியும்? அடிமைப் புத்திக்கு ஏற்றுவாறு அவன் தவறுகள் செய்யக்கூடும். அதற்கு மாற்று என்ன? அவனுக்குச் சுதந்திரம் கொடுத்து, பொறுப்பை அவன் தலையில் கட்டுவதுதான் முறையும் அறிவுமாகும். மேயோ எழுகின்றார்:

> "பலகிராமங்களில், ஹிந்துமுஸ்லீம் வேற்றுமை இருப்பதில்லை; வெளியிலிருந்து அரசியல் ஏஜண்டுகள் அவர்களைக் கலக்கும் வரையில், இரண்டு கூட்டத்தார்களும் மிக்க அன்புடன் ஒத்துவாழ்கின்றார்கள்."

இதை நாம் ஆமோதிக்கிறோம். ஆனால் "அரசியல் ஏஜண்டுகள்" என்பதற்கு நாம் வேறு பொருள் கொடுப்போம். அது மேயோவுக்குச் சம்மதமா? பாதிரிமார் அரசியல் ஏஜண்டாக விருக்கலாம். லேபர் (தொழில்) கமிஷனர் (அரசாங்கத்தாரால் நியமிக்கப் பெற்றவர்) அரசியல் ஏஜண்டாயிருக்கலாம். காங்கிரஸ், கிலாபத்து கிளர்ச்சிக்காரர்கள்

அரசியல் ஏஜண்டுகளாயிருக்கலாம். ரயில்பாதை அரசியல் ஏஜண்டாகவும் இருக்கலாம். இவையாவையும் அரசியல் ஏஜண்டுகளாக மேயோ ஏற்றுக்கொண்டால், மேயோவின் பிற்பகுதி எழுத்தை நாம் ஆட்சேபமின்றி ஏற்றுக்கொள்ளுகின்றோம். மேயோ கூறும் தீப்பொறிகள் நமது நாட்டில் இருக்கின்றன. தீப்பொறிகள், அன்னிய ஆட்சி இருக்கும் வரையில், திடீர் திடீரெனத் தோன்றக்கூடும். ஆனால் அறிவுடைத் தேசபக்தர்கள் அவைகளை அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். காலமும் தேவையும் அவர்களுக்குத்துணை நிற்கும் என்பதில் சிறிதுகூடச் சந்தேகமில்லை.

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?"

அத்தியாயம் 27.

"நபிநாயகத்தின் புதல்வர்கள்"

சென்ற அத்தியாயங்களில், மேயோ ஹிந்து நாகரிகத்தை இழித்துக்கூறிவிட்டார். ஹிந்துப்பெண்களைப்பற்றி அவதூறுகளை அவர் நிரப்பியாயிற்று. தீண்டாதார்கள், பார்ப்பனர்கள்—இவர்களைப் பற்றி பேசிமுடிந்து விட்டது. ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகளான தீப்பொறிகளைப்பற்றிப் பொறித்தாகிவிட்டது. சுதேசமன்னர்களுக்கு வாழ்த்தும், இந்திய அரசியல் வாதிகளுக்குச்சாபமும் கொடுத்தாகிவிட்

டது. ரட்சண்யசேனை, பாதிரிமார்கள் புகழ்ந்து பேசப்பட்டுவிட்டார்கள். நூல் வழி நெடுக, அதிகாரவர்க்கத்தினர் ஆசிகூறப்பெற்றிருக்கின்றனர். தனித்துக்கூறப்படவேண்டியவர்கள் யாவர் என தன் மனத்தைத் தூண்டிய மேயோ முஸ்லீம்களைக்கண்டு கொண்டார். எனவே, அவர்களைப் பற்றி ஒரு (அவதூறு) அத்தியாயம் வேண்டாமா? முஸ்லீம்களைப்பற்றி மேயோ துவக்கத்தில் எழுதுவதாவது:—

"இஸ்லாம் மதத்தில்சேரும் எந்தஜனங்களுக்கும் (துடிதுடித்து) தாக்கும் தன்மை ஏற்பட்டுவிடுவதால், இந்திய முஸ்லீம்கள் (அவர்கள் சிறு பான்மையோராய்ப் பலவீனர்களாயிருக்கும்இடத்தில் கூட) தொந்திரைகொடுக்கப்போதுமான தொகையுள்ளவர்கள் எனத்தோன்றுகின்றது. முஸ்லீமுக்கு தேசிய நோக்கு இல்லை. சமயப்பற்றுக்கொண்ட முஸ்லீம் எந்தத்தனி நாட்டையும் தனது தாய்நாடாகக் கொள்ளாமல், வெளியுலகத்தையும்நோக்குகின்றான். எனவே இந்தியாவிலிருக்கும் முஸ்லீம்கள் யாவரும் "நாங்கள் அன்னியர்கள்; நாங்கள் வெற்றி பெற்றவர்கள்; நாங்கள் போர்வீரர்கள். நாங்கள் குறைந்த தொகையினராயிருந்தாலென்ன? தொகை செல்லுமா? தன்மை உபயோகப்படுமோ? பிரிட்டிஷார் போய் விட்டால், நாங்கள் இந்தியாவை ஆளுவோம். எனவே விரைவில், கிடைக்கக்கூடிய நலன்களைப் பெறவேண்டியது எங்கள் கடமை யாகும் எனக் கூறுகின்றார்கள்."

இஸ்லாமியர்களுக்குத் தேசிய நோக்கு இல்லை என்பது உண்மையல்ல. மேயோவின் கூற்று பொய் என்பதற்கு, யாவரும் துருக்கியை நோக்கலாம்; பாரசீகத்தைப் பாக்கலாம்; ஆப்கானிஸ்தானத்தைப்பற்றி விசாரிக்கலாம். துருக்கி முஸ்லீம்கள் பாரசீகமுஸ்லீம்களுக்கு ஒருநாளும் அடிமைபட்

டுக்கிடக்க மாட்டார்கள். பாரசீகம் துருக்கிக்குக் கீழிருக்க இணங்காது. ஆப்கானிஸ்தானத்தின் முறுக்கைப் பற்றி சொல்லத்தேவையில்லை. எகிப்திய நாட்டிலிருக்கும் முஸ்லீம்கள் நபிநாயகம் அவதரித்த அராபி நாட்டைப்போற்றலாம்; ஆனால் அராபியர்களைக்கும்பிட மாட்டார்கள். இந்திய முஸ்லீம்களுக்கு தேசபக்தி கிடையாது என்றுமேயோ குறிப்பிட்டிருப்பது வேறு நோக்கம் கொண்டு என்பதை விளக்கவும் வேண்டுமா? இந்திய முஸ்லீம்கள் முரடர்கள் என்றும் எதேச்சையாய் அவர்கள் விடப்பட்டால், இன்றைக்கே அவர்கள் சண்டைக்குக் கத்தியைக்கையில் எடுத்துக் கொள்ளுவார்கள் என்று கூறிய பின்னர், மேயோ எழுதுகிறார்:—

"இந்திய முஸ்லீம்கள் கத்தியை உருவினால், தனித்த ஒரு கூட்டத்தாராக அவர்கள் எழமாட்டார்கள். எல்லைப் புறச்சேனையால் தடுத்துவைக்கப்பெற்றிருக்கும் சக்தி வெள்ளத்தின் முன்னணிப்பகுதியாக, இந்திய முஸ்லீம்கள் கத்தியை உருவுவார்கள். இது படத்தைப்பார்த்தால் தெரியும். பாஞ்சாலத்தின் வடக்கு எல்லையில், வடமேற்கு எல்லைப்புற மாகாணமிருக்கிறது. அதற்கப்பால், சிறு சிறு முஸ்லீம் சமஸ்தானங்களிருக்கின்றன. இந்த நிலப்பரப்புகள் சுதந்திரமுள்ள முஸ்லீம் கூட்டத்தார்களுக்குச் சொந்தமானவை. அவர்கள் நேர்த்தியான போர்வீரர்கள். தொன்றுதொட்டு, அவர்களுக்குக் கொள்ளைதான் தொழிலாகும். இவர்களுக்குப்பின்னால் ஆப்கானிஸ்தானமும் முஸ்லீம் ஆசியாவும் துணிந்துநிற்கின்றன. கொள்ளைக்குரலும் ஜஹாத் (சமயப்போர்) அழைப்பும் எழுந்தால், இவையாவும் பெரிய சம்மட்டியாக இந்தியாவின்பேரில் வந்துவிழும். அந்த சக்தியின் எழுச்சிக்கு, நொடிப்பொழுதும் ஒரு சொல்

லும் தான் தேவை. இதை ஹிந்து அரசியல் வாதிகள் உணருவதில்லை.''

இந்திய முஸ்லீம்களுக்கு உற்சாகமும் ஹிந்துக்களுக்கு அச்சமும் கொடுக்கும் மேயோவின் எழுத்தை நண்பர்கள் ஊன்றிப் படிக்கவேண்டும். மேயோவின் உபாயம் மிகப் பழைய உபாயம். அதைக்கண்டு முஸ்லீம்கள் மகிழ்ச்சி யடைந்ததும், ஹிந்துக்கள் பயந்து போனதும் பழங்கதை. இதை யார் இனி நம்பப்போகிறார்கள்? ஹிந்துக்கள் சாசுவத மாய் அச்சங்கொண்டு வாழ்ந்தால், அவர்களை எவருமே (மேயோ உள்பட) கரையேற்ற முடியாது. முஸ்லீம்கள் தங்கள் தேசபக்திப் பொறுப்பை உணராவிடின், காலமாக காலமாக அவர்கள் உணர வேண்டிய தேவை உண்டாகி விடும். முஸ்லீம் நாடுகளனைத்தும் தேசிய நோக்குடன் வாழத் தலைப்பட்டால், இந்திய முஸ்லீம்கள் எங்கு நோக்கு வது? மேலும், இந்திய முஸ்லீம்களுக்கு நாட்டுப்பற்றும் தேசிய நோக்கும் இல்லை என்பது முழுப் பொய்யாகும். ஹிந்துக்களை ஏளனம் செய்யும் மேயோ, முஸ்லீம்களை எந் தப் பார்வைகொண்டு நோக்குகின்றார் என்பதை முஸ்லீம் கள் தெரிந்து கொள்ளுவார்களாக! எல்லைப் புறத்தில் "நிரந் தர ஆபத்தாக'' ஆங்கிலேயர்களால் கருதப்பெறும் முஸ் லீம்களைப் பற்றி மேயோ கொள்ளக்கூடிய கருத்தை எவரும் எளிதிலே தெரிந்து கொள்ளலாம். இரண்டு பூனைகள் அடித் துக்கொண்ட சமயத்தில் மத்தியஸ்தம் செய்த குரங்கைப் போல, ராஜி செய்ய வருகின்றார் மேயோ. "வலுத்த கட் சிக்கு, விடாதே'' என்று சொல்லுதலும், "தோற்ற கட் சிக்கு, ஓடாதே'' என்று தைரியம் சொல்லுதலும் இராஜ தந்திரமாகும்.

முஸ்லீம்கள் போர்வீரர்கள் என்று போற்றும் மேயோ வேறு இடத்தில் குறிப்பிட்டிருப்பதைப் பாருங்கள். கீழ்க் கண்டவாறு, பல முஸ்லீம் சங்கங்கள் மனுப் பண்ணிக் கொண்டனவாம்!

"இந்தியாவிலிருக்கும் ஆங்கில ஆட்சியின் சாசுவதத் தன்மையையும் உறுதியையும் கெடுக்கக்கூடிய எந்த மாறுதல்களையும் முஸ்லீம்கள் ஏற்பது அறிவுடைமையாகாது...... ....பல ஜாதிகளும் பல மதங்களும் நிறைந்திருக்கும் இந்தியாவில், பட்சமாதமின்றி, ஆங்கிலேயர்கள் ஆட்சி நடத்தி வருகின்றார்கள்...............இந்தியாவிலிருக்கும் பல வேறு கூட்டத்தார்களுக் கிடையே, ஆங்கிலேயர்கள் அரசியல் தராசைச் சமமாகப் பிடித்துவருவதன் உபயோகத்தை முஸ்லீம்கள் உணருகின்றார்கள்..............கடந்த காலத்தில் அதிகாரவர்க்கத்தினர் எத்தனையோ தவறுகளைச் செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் எளியோர்களை வலியார் தாக்குவதனின்றும் காப்பாற்றி வருகின்றார்கள்."

பெரும்பான்மையோரான ஹிந்துக்கள் முஸ்லீம்களுக்குக் கொடுமை செய்யா வண்ணம் அதிகாரவர்க்கத்தினர் பார்த்துக்கொண்டு வருகின்றார்களாம்! மேற்கூறிய எழுத்துக்கள் துணிவுகொண்ட முஸ்லீம்களுக்குக் கோழைத்தனம் கற்பிப்பதற்காக எழுதப்படவில்லையாயினும், அதிலே சிறிது தொனிப்பொருள் வீசுகின்றது. ஆனால் அவைகள் யாவும் அதிகாரவர்க்கத்தினருக்காக அக்கரையுடன் சேகரிக்கப் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களாகும். ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் எந்த அம்சத்திலும் ஒற்றுமையில்லையாம்! முஸ்லீம்களுக்கு ஆங்கிலேயர்களிடம் நெருங்கிய உறவு உண்டாம்! கிருஸ்தவர்களின் "மும்மைக்" கடவுள் என்ற

தத்துவத்தை முஸ்லீம்கள் அடியோடு வெறுக்கின்றார்கள் என்று மேயோவே, முன்னர் எழுதியிருக்கிறார். ஹிந்து முஸ்லீம் வேற்றுமையைப்பற்றிப் பேசும் இச்சமயத்தில், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அறவே தொடர்பு இல்லை என்று கூறுவதுதான் பொருத்தமுள்ளதாகும்! அதைக்கூறவும் வேண்டுமா?

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலை நாட்ட முயன்ற "ஒத்துழையாமை" இயக்கத்தைப் பற்றி மேயோ கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

> "அரசாங்கத்தாரோடு தொடுக்கப்பெற்ற ஒத்துழையாமை பலிக்காமற்போய் விட்டது. அதை யாவரும் இப்பொழுது அறிகின்றார்கள். சாத்வீகப்போர் என்ற பெயர் மட்டும் தான்; அன்பு என்று பிரசாரம்; ஆனால் பகைமைச் சொற்கள்தான் பிரயோகம். அதன் விளைவு என்ன? மனிதர்கள் கொலையுண்டார்கள். குடும்ப, கூட்ட, சுயநலங்களை மேற்படுத்திக்கொண்டு, பொதுவேலையின் பொருட்டு ஒன்று சேரும் சக்தி (இந்தியர்களுக்கு) இல்லை என்று உருசுப்பிக்கப் பெற்றது. தனித்த ஹிந்துவும், தனித்த முஸ்லீமும், இந்தியாவின் பொது ஜனங்களின் நலன்களைப்பற்றி (முழுப் பார்வையுடன்) பார்க்க முடியாது என்பது நன்றாகத் தெளிவு படுத்தப் பெற்றுள்ளது."

மேற்கூறிய முடிவு மேயோவின் முடிவாகும். அந்த முடிவு நமதல்ல. தமது நோக்கத்திற்கேற்றவாறு, அவர் முடிவு செய்து கொண்டிருக்கிறார். ஒத்துழையாமையின் தன்மையையும் நோக்கத்தையும் அது செய்திருக்கும் அரிய வேலையையும் மேயோ தெரிந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகும். தன்மதிப்பைக் காப்பாற்றிக்கொண்டு, இங்

தியா முன்னேற வேண்டுமானால், அது ஒத்துழைப்பால் நேரக்கூடியதல்ல; இறுதியில் ஒத்துழையாமையால் தான் முடியக்கூடியது என்று இந்தியர்கள் கண்டுகொண்டு விட்டார்கள். இதற்கு சாட்சியம் தேவையானால், சட்டசபை நடவடிக்கைகளைக் காணலாம். நாட்டிலுண்டாகும் புதிய புதிய (அன்னிய) பகிஷ்கார இயக்கங்களினின்றும் தெரிந்து கொள்ளலாம். ஸைமன் கமிஷன் இந்தியாவில் வரவேற்கப்பட்டவகையிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒத்துழையாமையின் நற்பயன்களைப் பற்றிய தனிநூல் ஒன்று எழுதலாம். தன் மதிப்புள்ள முஸ்லீம்கள் ஒத்துழையாமையின் தேவையை உணர்ந்து கொண்டார்கள். ஒத்துழையாமை ஜனசமூகத்தில் ஊறி வருகின்றதா, அல்லது ஒழிந்து மடிந்து போயிற்று, என்பது இனித்தெரியும். "காட்டை விட்டு வெளியேறும் வரையில் கூக்குரலிடாதே" என்பது முதுமொழியாகும். மேயோ நினைக்குமாறு, நபி நாயகத்தின் புதல்வர்கள் (இந்திய முஸ்லீம்கள்) மூடர்களல்ல என்பதை நாம் வணக்கத்துடன் உரக்கக்கூறுகின்றோம்.

"கல்லாதவராயினும் உண்மை சொல்லாதவராயினும்
பொல்லாதவராயினும் தவமில்லாதவராயினும்
நல்லாரை நீதியின்படி நில்லாதவராயினும்
எல்லோரும் வந்தேத்துமளவில் யமபயங்கெடச்செய்தவன்.

(அல்லா, அல்லா, அல்லா!

———

அத்தியாயம் 28.

உலகத்துக்கு ஆபத்து.

தற்போதுள்ள நிலைமையில், இந்தியா உலகத்துக்கு ஆபத்து என்று மேயோ கூறுகின்றார். நாம் இதை ஆமோதிக்கின்றோம். ஆனால் நமது காரணங்கள் வேறு. மேயோ தமது காரணங்களை எடுத்துரைக்கின்றார்.

"பிரிட்டிஷ் இந்தியாவில், களிமண்ணாலாக்கப்பட்ட கிராமங்கள் ஐந்து இலட்சங்கள் இருக்கின்றன. ஒரே இடத்திலிருந்து, மண் எடுத்து, வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, பள்ளம் ஏற்படுகின்றது. பள்ளத்தின் கரையில் வீடுகள் கட்டப்படுகின்றன. முதல் மழை பெய்தவுடன், பள்ளம் நிரம்பிவிடுகிறது. அது கிராமத்தின் குளமாகின்றது. அது முதல் ஊரார் அதில் குளிக்கின்றார்கள்; துணிகளைத் துவைக்கின்றார்கள்; பாத்திரங்களைக் கழுவுகின்றார்கள்; குளக்கரையில் "வெளிக்கு"ப் போகின்றார்கள். குளத்திலிருந்து, குடி நீர் எடுத்துக்கொள்ளுகிறார்கள். நீர் முழுதும் தேங்கிக் கிடப்பதால், கொசுக்கள் உண்டாகின்றன. விஷக்கிருமிகள் சமுதாயமாய்ப் பரவுகின்றன. கொசுக்களால் நாட்டில் மலேரியா பரப்பப்படுகின்றது."

"மலேரியா நாட்டின் கொடிய சாபங்களில் ஒன்று. சாபத்தீடு அதன் மரணவிகிதத்தால் மட்டுமல்ல; அதனால் உடலிலே வலிமை குன்றிப்போகின்றது. மேலும் மலேரியா வேறு நோய்களையும் "விருந்துக்கு" அழைக்கின்றது."

இந்தியாவில், மலையடிவாரப் பிரதேசங்களில் மட்டும் உலவி வந்த மலேரியா நாடுமுழுதும் பரவிவந்து விட்டது. வங்காளம் மலேரியாவின் இருப்பிடமாக மாறிவிட்டது.

வைத்திய இலாகாவில் செலவு செய்ய பெறும் பணம் குறைவா? இல்லை. என் மலேரியா குறையவில்லை? காரணம் வேண்டாமா? பொது ஜனங்களின் துர்ப்பழக்கங்கள் மலிந்து போய் விட்டால், அரசாங்கம் என்ன செய்யக் கூடும் என்று மேயோ கேட்கின்றார். அரசாங்கத்தார் "மலேரியா"ப் பொறுப்பினின்றும் விடுதலை பெறுவதற்கு, மேயோவின் "வக்காலத்து" தேவையில்லை. ஆனால் மேயோவின் நோக்கத்திற்கு, இந்தியர்களைக் குறை கூறுவது பொருத்த முள்ளதல்லவா? ஆனால், மேயோ கூறியிருப்பதில் உண்மைஇல்லாமலும் இல்லை. கிராம வாசிகள் பண்டை இந்தியாவின் நிலைமையை எண்ணி உயிர் வாழ்கின்றார்கள். அது தவறாகும். சென்ற முப்பது ஆண்டுகளாக, நாட்டிலே புதிய புதிய நோய்கள் தோன்றிப் பரவி வருகின்றன என்பதை கிராமத்தான் தெரிந்து கொள்ளவில்லை. இன்புளுவன்ஸாக்காய்ச்சலை இந்தியன் கனவில் நினைத்திருப்பானா? அது எத்தகைய காய்ச்சல், எங்கிருந்து வந்தது என்று எவரேனும் தெரிந்து கொண்டார்களா? முன்பின் இல்லாமல் திடீரென்று இன்புளுவன்ஸா நாட்டில் தோன்றிற்று. அறுபது இலட்சம் இந்தியர்களைக் கொன்று விட்டது. இந்த புள்ளி மரணக்கணக்கில் எடுக்கப் பட்டு விட்டது. இந்தியர்களுக்கு வேறு என்ன வேண்டும்? மேயோ எழுதுகிறார் :—

"சீனாவிலிருந்து இந்தியாவுக்கு 1890-ம் ஆண்டில் பிளேக் முதன் முதல் கொண்டுவரப்பெற்றது. இன்றைக்கு, இந்தியா, உலகத்தின் முக்கியமான தொத்து நோய்த்தொட்டியாக விருக்கின்றது. 1896-ம் வருஷத்திலிருந்து பிளேக் மூலமாக, ஒருகோடியே பத்து இலட்சம் ஜனங்களை இந்தியா இழந்திருக்கிறது......பிறந்த விடத்

தில் பிளேக் தடுக்கப்பெருவிட்டால், அது உலகுத்துக்கே போராபத்தாய் எந்தச் சமயத்திலும் முடியும். இதைப்பற்றி உலக சுகாதார நிபுணர்கள் கருத்தும் கவலையும் கொண்டிருக்கிறார்கள்.''

இன்புளுவன்ஸா ஆயிற்று; பிளேக் ஆகிவிட்டது. இவையிரண்டிலிருந்து நேர்ந்திருக்கும் மரணங்களை நினைத்துப்பார்த்தால், நமக்கு ''பகீர்'' என்கிறது. ஆனால் மேயோவுக்கு எது பயங்கரமாயிருக்கிறது? ''தொத்து நோய்த் தொட்டி'' யாகிய இந்தியாவினால், உலகத்துக்கே ஆபத்து வந்து விடுமோ என மேயோ உள்ளம் பதைக்கின்றார், நமக்கு இந்தியாவைப்பற்றிக் கவலை. மேயோ உயர்ந்தவராகையால், அவருக்கு உலகத்தைப்பற்றிக் கவலை! மேயோவின் மூடமந்திரப்பேச்சை யாவரே ஏற்கக்கூடும்?

> ''சென்னையில் நூற்றுக்கு எண்பது பேர்களும் வங்காளத்தில் நூற்றுக்கு அறுபது பேர்களும் தங்கள் உடல்களில் 'கொக்கிப்புழுக்களை' வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று மதிப்பிடப்படுகின்றது''

என்று மேயோ எழுதியிருக்கிறார். கொக்கிப் புழுக்களால் நேரும் துன்பங்களையும் வலிகளையும் வைத்திய நிபுணர்கள் விரித்துக் கூறுகின்றார்கள். கொக்கிப் புழுக்களை அழித்து ஒழிக்க, அமெரிக்கச் சீமான் ராக்பெலர் அவர்கள் இந்தியாவுக்கு ஏராளமாகப்பொருள் அனுப்பியுள்ளார் என்று டாக்டர் ஆண்ட்ரூ பால்பர் கூறுகின்றார். அந்த உதவிக்காக, இந்தியர்கள் அமெரிக்கர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்திய அரசாங்கத்தாரின் நன் முயற்சிகள் யாவை என்று தெரியவில்லை. வங்காளத்தில் 1921-ம் ஆண்டில் மட்டும், வாந்தி பேதியால் 80547 பேர்கள் இறந்

துபோய் விட்டார்களாம். இந்தப் புள்ளிகள், காண மிகவும் பயங்கரமாகத் தானிருக்கின்றன. இவைகளுடன் பஞ்சங்களால் ஏற்பட்டிருக்கும் "உயிர்ச் சுங்காளை"யும் சேர்த்துப் பார்த்தால், இந்தியர்களுக்கு "மூர்ச்சை" போட்டுவிடும். இந்த நிலைமையைப் பற்றி, அன்னியர்கள் கதை பேசலாம், கொக்கரிக்கலாம். ஆனால், உயிர்போவது இந்தியர்களுக்கல்லவா?

> "இந்தியாவின் உண்மையான நிலைமை தெரிந்து போகுமாகில், உலகத்திலிருக்கும் நாகரிக நாடுகள் யாவும் சர்வதேச சங்கத்தாருக்கு மனுப்பண்ணிக் கொண்டு, இந்தியாவினின்றும் பாதுகாப்புவேண்டும் என்று அமெரிக்கச் சுகாதார நிபுணர் ஒருவர் கூறினர்."

மேயோவினிடம் கூறிய நண்பருக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் விளங்கவில்லை. ஆபத்தை விளைவிக்கக்கூடிய தொத்துநோய்களை, மேநாடுகளிலேதான் அதிகமாகக் காணலாம். மேநாடுகளில், திடீர் திடீரென்று புதுக் கருத்துக்கள் தோன்றுவதுபோல, புதிய நோய்களும் "ஈசல்" போல வெளிப்புறப்படுகின்றன. ஐரோப்பியர்களின் சரஸ வாழ்க்கையாலும் வியாபார வாழ்க்கையாலும் அவைகள் எளிதிலே உலகத்திலே பரவி வருகின்றன. இந்த நிலைமையினின்றும் தற்காப்புத் தேவையை வேண்டக் கூடியது இந்தியாவாகும். இதை அந்த நிபுணர் அறியவில்லை போலும்!

உலகத்துக்கு ஆபத்து, "அழுக்குப் பிடித்த," "தொத்து நோய்த்தொட்டி" யான இந்தியாதேசத்தால் வரப்போகிறதோ, என்னவோ அதை நாம் அறியோம். ஆனல், உலகத்தின் பலநாடுகளிலிருந்து, அங்குள்ள நாகரிக நோய்கள் இந்தியாவுக்கு வந்து புகுந்து கொண்டிருக்கின்றன.

"வெள்ளையர்கள்" சுத்தமான வாழ்க்கையைக் கொண்டவர்களல்லவா? மல, ஜலம் கழிப்பதற்கு, இந்தியாவில், என்ன கண்டிப்பான விதிகளிலிருந்து வந்தன என்பது, இருபது ஆண்டுகளுக்கு முன்னரிருந்த இந்தியக் கிராமவாழ்க்கையிலிருந்துகூடத் தெரிந்துகொள்ளலாம். "நிழலில் நீரைப் பெய்தல் கூடாது; ஓடுகிற நீரில் கூடாது; பரந்து கிடக்கும் நீரில் கூடாது. தண்ணீர்க் கரையில் கூடாது; நடைபாதையில் கூடாது; வெட்ட வெளியில் கூடாது. .... போன்ற" பல நிர்ப்பந்தங்கள் அதாவது சுகாதாரமுறைகள் இருந்து வந்தன. "ஆரோக்கிய வழி" யில் (காந்தி எழுதியநூலில்) சுகாதார முறைகள் கூறப்பட்டுள்ளன. அவைகளிற் பெரும்பான்மை பண்டை முறைகளாகும். இந்தியாவில் சுகாதார முறைகளும், விதிகளும் இல்லை என்று கூறுவதா? பணக்காரனிடத்தில் எல்லா நல்ல தன்மைகளும் உண்டென்றும் ஏழைகளிடம் நல்ல தன்மையொன்றுமேயில்லை யென்றும் கூறுவது எவ்வளவு உண்மை கொண்டது?

இந்தியர்கள் குழாய் நீரை வெறுக்கிறார்கள் என்று மேயோ ஏளனமாக எழுதியிருக்கிறார். 1919-ம் வருஷத்தில் பாஞ்சாலத்தில் ராணுவச்சட்டம் அமுலில் இருந்த காலத்தில், அமிருதசரஸ்நகரம் பட்டபாடு இந்தியர்களுக்குத்தெரியாமலில்லை; அதை அவர்கள் மறந்து விடவும் காலம் வந்து விடவில்லை. அமிருதசரஸ் நகரத்துக்குக் குடிதண்ணீர் வசதி நீர்க்குழாய்கள்தான். தண்ணீர்க்குழாய்களை நம்பி, கிணறுகள் தூர்க்கப்பட்டன. ராணுவச்சட்ட அமுல் காலத்தில், ராணுவ அதிகாரிகள் நீர்க்குழாய்களில் நகரத்து இந்திய ஜனங்களுக்குத் தண்ணீர் அனுப்பவில்லை.

நீர்க்குழாய்களில் குடி தண்ணீர் இல்லாமல், ஜனங்கள் சிலநாட்கள் பட்டகஷ்டங்களைச் சொல்லி முடியாது. தண்ணீர்க் குழாய்களை நம்பி வாழ்ந்த அமிருதசரஸ் நகரத்தின் கதி என்னவாயிற்று? நெருக்கடிக் காலத்தில் உபயோகமாயில்லாத சாதன வசதிகளால் பிரயோசனம் என்ன? நீர்க்குழாய்கள் தேவையில்லை என்றும், பயனற்றவை என்றும் கூற, நாம் முன் வரவில்லை. அடிமை நாட்டில், சுகசாதன வசதிகள்யாவும் நெருக்கடிக்காலத்தில் பொது ஜனங்களுக்கு உபயோகமில்லாமல் எளியோர் அடித்து விடுகின்றார்கள். தவிர, நீர்க்குழாயில், தொத்து நோய்க்கிருமிகள் பிரயாணம் செய்யத் தலைப்பட்டால், நகரம் முழுதும் பாழ்தான். ஆற்று நீர், குழாய் நீர், குளத்துநீர்—இவைகளை அருந்துவதைக் காட்டிலும், கிணற்றுநீர்—உப்புக் கரித்தாலும் பாதகமில்லை—குடிப்பதே உயர்ந்ததாகும், ஆபத்தைக் குறைப்பதாகும்.

உலகத்துக்கே ஆபத்து என்று கூறப்படும் இந்தியாவில் ஜனங்கள் உயிரோடிருக்க முடியுமா? உலகப் பிரசித்திப் பெற்ற அமெரிக்கச் சுகாதார நிபுணர் பின்வருமாறு கூறினார்:—

"கரைத்த சாக்கடை நீரை, நீண்ட காலமாகக் குடித்து வரும் பழக்கத்தால், அவர்களுக்கு (இந்தியர்களுக்கு) நோய் ஆபத்து ஓரளவில் வருவதில்லை. ஆனால், அவர்கள் யாவரும் குடல் கோளாறுகொண்ட நடைக் "கண்காட்சி" களாகும். இந்தக் கோளாறுகளால் அவர்களுடைய ஜீவதாது குறைந்து வருகின்றது; கபவாதக் காய்ச்சல், இன்புளுவன்ஸா முதலிய நோய்கள் வந்தால், அவர்கள் தப்புவதில்லை. அப்பொழுது அவர்கள் ஈக்களைப் போல மடிந்து போகின்றார்கள்.

நோய்களை எதிர்க்கும் ஆற்றல் அவர்களுடைய உடல்களுக்கு இல்லை''

இத்துடன் இளமை மணம், காம விகாரம், புணர்ச்சி நோய்கள் சேர்ந்து கொண்டிருக்கின்றன என்று மேயோ கூறி, இந்தியர்கள் எவ்வாறு இத்தனை நூற்றாண்டுகளாக உயிரோடிருந்திருக்க முடியும் என்று வினவுகின்றார். இந்தக் கேள்வியை அவர் கேட்டிருக்க வேண்டியதேயில்லை. அவரும் அமெரிக்க நிபுணரும் நினைக்குமாறு, இந்தியர்களின் உடல்களுக்கு, நோய்களை எதிர்த்துப் போராடும் ஆற்றல் இல்லையாயின், இதுவரையிலும், இந்தியர்கள் உயிரோடு வாழ்ந்திருக்கமுடியாது. இந்தியர்கள் ஏக்கமுற்று, வறுமையிலாழ்ந்து, மானம் சீர்குலைந்து போய் வாழுகின்றார்கள். இவை மூன்றுமே, இந்தியர்களின் நரம்பு அழுத்தத்தை குலைத்து வருகின்றன. இந்தக்காரணங்களை ஒப்புக் கொள்ள மனமில்லாத மேயோ வேறு சங்கதிகளைப் பன்னிப்பன்னிப் பேசுகின்றார். இந்தியர்கள் உயிரோடிருப்பதற்குக் காரணத்தை வேண்டிய மேயோ, ஐரோப்பியச் சுகாதார நிபுணர் ஒருவரிட மிருந்து, அவைகளைப் பெறுகின்றார். நிபுணர் கூறுவதாவது:—

" இந்தியர்களுக்கு ஒத்துப்போய் விட்டது. மேலும், அவர்கள் இப்பொழுது வாழ்வது (உடற்கூறு சாத்திரப்படி) மிகுதியும் கீழ்த்தரவாழ்வாகும். அவர்களால் உலக ஆபத்து நேரக்கூடிய சாத்தியத்திற்குக் காரணர்கள் பிரிட்டிஷார். அவர்களைப் பிரிட்டிஷார் காப்பாற்றியிராவிடில், வடக்கிலுள்ள ஜீவதாது நிறைந்த ஜனங்கள் அவர்களை அடியோடு துடைத்துவிட்டுக்காலி செய்திருப்பார்கள்.''

நிபுணர் கூறும் காரணங்களை இந்தியர்கள் நன்றாகக் கவனித்தல் வேண்டும். வடநாட்டு ஜனங்கள் ஜீவதாது

நிறைந்திருப்பதற்குக் காரணம் அவர்களுடைய உயர்ந்த ஆகாரமாம். அவர்கள் உடல் கெட்டியாயுள்ளவர்களாம். மாமிசம் உண்ணுகிறார்களாம். காய் நிறையச் சாப்பிடுகின்றார் களாம். வேண்டுமென்ற பால் குடிக்கிறார்களாம்! இந்தக் காரணங்களை ஒப்புக்கொள்ள நாம் தயாராயில்லை. உரமுள்ள உடலையும், நீண்ட ஆயுளையும் கொண்டவர்கள் சைவ உணவு உட்கொள்ளுபவர்கள் என்று லண்டன் நகரிலுள்ள "சைவ சாப்பாட்டுச் சங்கம்" ஒன்றுஅறிக்கை வெளியிட்டிருக் கிறது. அந்தச் சங்கத்தில் எண்பதுக்குமேல் அதிகமான வயதுள்ளவர்கள் பலரிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அனு பவத்தைக் கூறியிருக்கிறார்கள். மேலும் அந்த வயோதிகர் கள் யாவரும் உடல் உழைப்பாளிகள். எனவே உழைப் புக்கு "சைவ உணவு" உடல் தோதுப்படாது என்றும் கூறுவதற்கில்லை தென்னிந்தியத் திராவிடர்களின் பேரில் அனுதாபம் கொண்டவர் போலமுன்அத்தியாயத்தில் பாவனை செய்த மேயோ அவர்கள் "வடக்கிந்திய ஜனங்களாகிய சீக் கியர்கள், பட்டாணிகள், முஸ்லிம்" களால் அடி பட்டுப் போகவில்லையே என்று வருந்துகின்றார் போலும்!

முன் காலத்தில், இந்தியர்கள் வைத்தியர்களை மிகுதி யும் நாடினதில்லை. பண்டை இந்தியர்களின் மனோபாவம் மிகவும் உயர்ந்ததாகும். தன்னம்பிக்கையையும், கடவுளினி டம் பக்தியையும் கொண்டுதான் அவர்கள் வாழ்ந்தார்கள். இதை, வெகு அழகாக, காந்தி தம்மைப் பற்றிக் கூறுவது போல, தெளிவு படுத்தியிருக்கிறார். அதன் நேர்த்தியை நண் பர்கள் கவனிப்பார்களாக! காந்தி கூறுவதாவது:—

"நான் அளவுக்குமிஞ்சி, உண்டு விடுகிறேன். எனக்கு அஜீரணம் நேரிடுகின்றது. உடனே வைத்தியரிடம் செல்லு

கின்றேன். அவர் எனக்கு அவிழ்தம் கொடுக்கிறார். எனக்குக் குணமாகிறது; மீண்டும் அளவுக்கு மிஞ்சி சாப்பிடுகின்றேன்; மறுபடியும் வைத்தியருடைய மாத்திரைகளை உட்கொள்ளுகிறேன். முதல் தடவையிலேயே, நான் மாத்திரைகளை உட்கொண்டிராவிட்டால், எனக்கு தகுதியான தண்டனையை, நான் அடைந்து, அனுபவித்திருப்பேன். நான் மறுபடியும் அளவுக்குமிஞ்சி சாப்பிட்டிருக்கமாட்டேன். விடாமல், தொடர்ந்து, மருந்து சாப்பிட்டால் மனத்தின் உறுதி தளர்ந்து போகும்.''

இந்தியர்களின் நரம்பு வலிமை எந்த அளவில் இருந்தது என்பதற்கு காந்தியின் எழுத்தை அத்தாட்சியாக எடுத்துக் கொள்ளலாம். விடியற்காலத்திலும் நடுநிசியிலும் வைத்தியர்களின் வீடுகளுக்குச்சென்று கதவுகளைத்தட்டும் தேவையும், கெட்டவழக்கமும் இந்தியர்களுக்கு இப்பொழுதுதான் ஏற்பட்டு வருகின்றன. வைத்தியம் என்றால் பண்டைக் காலத்து ஹிந்துக்கள் கேலி செய்வார்கள். ஆனால், வாகடத்தில் (வைத்திய முறையில்) அவர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகள் எல்லையற்றவை. அந்த ஆராய்ச்சியின் பயனாக, இந்தியாவில் ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனானி போன்ற வைத்திய முறைகள் செழித்தோங்கி வந்தன. ''இத்தனை நாட்களில் நோய் குணமாகும்'' என்று பண்டை வைத்தியர்கள் திடமாய்ச் சொல்ல முடியும். குறிப்பிட்ட ஒருவனுடைய நாடியைக்கண்டு, அவனுடைய ஆயுளை மதித்து நிச்சயமாய்ச் சொல்லக்கூடிய நாட்டு வைத்தியர்கள் இப்பொழுது மிருக்கின்றார்கள். ஒடிந்த எலும்புகளைச் சேர்த்தொட்டவைக்கும் பச்சிலையை அறிந்தவர்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றனர். இந்தியாவின் சுதேச வைத்திய முறைகளைப்பற்றி மேயோ இகழ்ந்து கூறுகின்றார்.

"பாமர ஜனங்களின் உள்ளங்களில் இந்த சுதேச வைத்திய முறைகள் இன்னும் ஆளுகை செலுத்தி வருகின்றன என்பதிற் சந்தேகமில்லை; சிலநல்ல மூலிகைகள் இருக்கின்றன. ஜனங்களின் நம்பிக்கையைக்கொண்டும், சில நல்ல மூலிகைகளைக் கொண்டும் வைத்தியர்கள் (தங்கள் கீர்த்தியைக் காப்பாற்றிக் கொள்ள)புதிய சிகிச்சையென ஏமாற்றுகின்றார்கள்."

இதிலே சிறிது உண்மையுண்டு. மேனாட்டு வைத்தியர்கள்புதியமருந்து கொடுத்துச் சோதித்துப் பார்ப்பதில்லையா? சுதேச வைத்திய முறைகளையும் வைத்தியர்களையும் பற்றி மேயோ இகழ்ந்து கூறியிருப்பதை, நான் விபரமாக எடுத்தாளாமல் விட்டுவிட்டேன். அநேகமாய் நூலின் முடிவுக்கு வந்துவிட்டோம். எனவே, மேயோவினிடமிருந்து கோபம் கொண்டு பிரிய நமக்கு மனமில்லை.

"தின்னவரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக்கும்பிடுவாய்—நன்னெஞ்சே."

அத்தியாயம் 29.

இடையோளிகள்.

இந்தியா "தொத்துநோய்த் தொட்டி" யாக விருப்பதால், உலகத்துக்கே ஆபத்து நேரிடும் என்பது மேயோவின் கருத்தாகும். தமது மனம்போனவாறு நடந்து, சுயேச்சையாய்த் திரிந்து இந்தியாவில் சுற்றுப்பிரயாணம்

செய்தும், வாணிபம் நடத்தியும் மற்றும் பொருளீட்டல் தொழில்களில் அமர்ந்துமிருக்கும் அன்னியர்களால் இந்தியாவுக்குஆபத்து என்பதை இந்தியர்கள் அறிவார்கள். பரங்கிப்புண், இன்புளுவன்ஸா,பிளேக் முதலிய நோய்கள் இந்தியாவிலிருந்தவைபல்ல. அவைகள் அன்னியர்களின் கருணையால் வேற்று நாடுகளிலிருந்து இந்த நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டவையாகும். அன்னியர்கள் ஏன் இந்த நாட்டில் வந்து மொய்க்கவேண்டும்? அந்தக்காரணத்தை அறிந்தால், இந்தியா வேறுவகையிலே, வழியிலே, உலகத்துக்கு ஆபத்தை அடிக்கடி விளைத்து வருகின்றது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அன்னியர்கள் இந்தியாவின் மேரில் கண்ணோட்டம் செலுத்தவேண்டுவதற்குக் காரணம் என்ன? இந்தியர்கள் இப்பொழுது சுயராஜ்ய ஆளுகையின் கீழிருக்கவில்லை. உலகத்தின் சென்ற இருநூறு ஆண்டுச்சரித்திரத்தைப்பார்த்தால், இந்தக்காலத்துக்குள் நிகழ்ந்த போர்களை எண்ணிக்கொள்ளலாம். இந்தப்போர்களில் எத்தனை இந்தியாவிலேயே நிகழ்ந்தன? இந்தியா சம்பந்தமாக எத்தனை போர்கள் இந்தியாவுக்கு வெளியே நிகழ்ந்தன? இந்தக் கணக்கைப்பார்த்தால், இரகசியம் தெரியும். நிகழ்ந்தபோர்களில் பெரும்பான்மை இந்தியா சம்பந்தம் கொண்டதாகவிருக்கும். சொந்த நாதனற்ற பெண்ணுக்காக, உலகத்தில் சச்சரவுகளும் மனஸ்தாபங்களும் நேருவது இயல்பு. சுதந்திரமில்லாத இந்தியாவைத்தங்களுடன் சேர்த்துக்கொள்ள, உலகவல்லரசுகள் (பெரியநாடுகள்) தனித்தனியே விருப்பங் கொள்ளும். சென்ற ஐரோப்பியப் போர் நிகழ்ந்ததன் காரணம் என்ன? ஐரோப்பிய வல்லரசுகளுக்குள் உலக வியாபாரத்திற்காகப் போட்டி உண்டாகிவிட்டது. உலகத்

தில் இந்தியா சிறந்த சந்தையல்லவா? தொழில்கள் யாவற்றையும் இழந்து, "சுகவாசிகளாக" வாழும் இந்தியர்களைக் கூலிகளாக்கிச் செல்வச்செழுமையைப்பெற்று, கீர்த்தியும் சக்தியும் அடைய, உலகத்தில் எந்தநாடு உளங்கொள்ளாது? கடவுளாலும் மனிதர்களாலும் நான் கெல்லை கோலப்பட்டு, வகுத்துவைக்கப்பட்டிருக்கும் மண், அதில் வசிப்பவர்களுக்குத்தான் சொந்தம் என்பது அனுபவசூத்திரமாகும். ஆனால் அத்தகைய பாத்தியத்தைக் கொண்டாட, சக்தியுள்ள ஜனங்களுக்குத்தான் முடியும். சக்தியற்றவர்கள் விலைமாதர்களைப் போல, கைமாறிக் கொண்டேபோவார்கள். தற்போது விலைமாதர் நிலையிலிருக்கும் இந்தியாவின் பொருட்டு, உலகத்தில் போர்கள் நிகழுமாயின், அந்த நிலை, உலகத்துக்குப் பேராபத்தல்லவா? உழைத்துச் சம்பாதித்தபொருளை "ஊறும்" வக்கீலிடம் கொடுப்பது போல, உலகவல்லரசுகள், தங்கள் குடிமக்களின் உயிர்களையும் பொருளையும் இந்தியா சம்பந்தமாக பணயம் வைத்து போர்ச்சூது இனியும் ஆடவேண்டுமா? போரை உலகத்தினின்றும் அப்புறப் படுத்த வேண்டுமென ஆசை கொண்டிருக்கும் சர்வதேச சங்கத்தார், நாம் குறிப்பிட்ட உலக ஆபத்தையும் குறித்துக்கொண்டு, கருமம் செய்தல் நலம். சர்வ தேச சங்கத்தின் அமைப்பு நமக்குத் தெரியும். நாம் சர்வ தேச சங்கத்துக்கு மனுப் பண்ணிக் கொள்ளவில்லை. இந்தியாவின் அடிமைத் தனத்தால் உலகத்துக்கு நேர்ந்துவரும் போர் ஆபத்தைக் குறிப்பிட்டோம். அவ்வளவுதான். ஆனால் இந்தியாவின் தற்போதைய நிலைமை கேவலமானதல்ல வென்றும் சுதந்திர, பொருளாதாரப் பாதையில் இந்தியர்கள் முன்னேறி வருகின்றார்கள் என்றும்

மேயோ கூறுகின்றார். கூத்துப் பார்ப்பவனுக்கு "கூத்தாடி"யின் நிலைமை தெரியாது.

"இந்தியாவின் ஜீவ சக்தி இறைக்கப்பட்டு வற்றிவரும் முக்கியமான வழிகள் இந்த நூலில் குறிப்பிடப்பட்டன. ஆனால் இந்திய அரசியல் வாதிகள் அவைகளைப் பற்றிக் கவனிப்பதில்லை. அவர்கள், பஞ்சு, ரேயிலே, ஸர்க்கார் கடனுக்கு வட்டி, தானிய ஏற்றுமதி, சேனைப்பாதுகாப்பு ஸிவில் ஸர்விஸ் (ஐ. ஸி. எஸ்.......) உத்தியோகஸ்தர்களின் சம்பளம் முதலியவற்றால் (இந்தியாவின் பணம்) சுரண்டப்பட்டு வருகிறது என்று கூறுகின்றார்கள். இவைகளை ஆராய்ந்து பார்ப்பது வீண் சொல் போரில் கொண்டுபோய் விடும். வாதம் செய்யச் செய்ய, இந்தியன் ஒன்றைவிட்டு, மற்றொன்றுக்குத் தாவுவான்."

இந்தியாவின் வறுமைக்கும் சுதந்திரப் பறிமுதலுக்கும் காரணங்களாயுள்ளவைகளை, மேயோ ஒருவாறு குறிப்பிட்டு விட்டார். ஆனால் அவைகள்தான் காரணங்கள் என்று மேயோ ஏற்றுக் கொள்ளவில்லை. எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? ஏற்றுக் கொண்டால், இந்தியாவிலிருக்கும் அதிகார வர்க்கத்தினரின் ஆட்சி முறையின்பேரில் குற்றப் பத்திரிகை படிப்பதாக முடியுமல்லவா? மேலும் இந்தியா ஆங்கில ஆட்சியால் முன்னேறி வருகின்றது என்பது மேயோவின் கொள்கை அல்லவா? மேற்கூறிய, இனங்களைப்பற்றி, பிரசங்கிகளும் பத்திரிகைகளும் விபரமாய் அடிக்கடி கூறியிருக்கின்றார்கள். என்றாலும் சுருக்கமாகச் சிறிது கூறுவோம்.

கிழக்கு இந்தியக்கம்பெனி என்ற பெயர் மட்டும் போயிற்றே யொழிய, அதன் தன்மையும் நோக்கமும் இந்

திய அரசியலில் இன்னும் இருந்து வருகின்றன என்று பொருளாதார நிபுணர்களான இந்தியர்கள் கூறுகின்றார்கள். அது பொய்யல்ல. இதற்குத்தக்க சான்றுகள் தாதாபாய் நாரோஜி எழுதிய "இந்தியாவின் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையிழந்த அரசியலும்" என்ற நூலில் காணலாம். டிக்பி அவர்கள் எழுதிய நூலைப்படித்துப் பார்த்தால் தெரியும். ரோமேஷ்தத்தர் எழுதிய இந்தியாவின் பொருளாதாரசரித்திரத்தில் தெளிவாகக் காணலாம். காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே அவர்களின் பிரசங்கங்களில்தேவைக்கு அதிகமான சான்றுகள் கிடைக்கும். சிறிய சங்கதி யொன்றைக் கவனிக்கலாம். இந்தியாவிலிருக்கும் ஐரோப்பியவியாபாரச்சங்கங்களின் யோசனைகளை இந்திய அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். ஐரோப்பிய வியாபாரச் சங்கக்கூட்டத்தில் அரசியலின் போக்கைப்பற்றி அரசியல் நிர்வாகிகளும் கவர்னர்களும் வைஸிராய்களும் பேசுவார்கள். இந்திய வியாபாரச்சங்கத்தை அரசாங்கத்தார்—தங்களுக்குத் தேவையிருந்தா லொழிய—திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. இதிலிருந்தே இந்திய அரசியலின் தன்மை இனிது விளங்கும்.

மான் செஸ்டர்துணிகள் இந்தியாவில் அதிகமாக விற்பதால், ஏழை இந்தியர்களிக்குத்தான் இலாபம் என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள். சீமைத்துணி வியாபாரத்தால், இந்தியாவில் சில இந்தியத்தரகர்களுக்கு ஜீவனோபாயமும் செல்வமும் ஏற்படலாம். ஆனால்பொதுஜனங்களுக்கு நஷ்டம் தான். பொருள் நஷ்டமில்லை யென்றே வைத்துக் கொள்ளுவோம். மனிதன் வாழ்க்கை நடத்துவதும் காலத்தைப் போக்குவதும் எதனாலே? தொழில்களின் மூலமாய். தொழி

வில்லாத மனிதன் சோம்பேறி. சில பொருள்களை உண் டாக்க, சில நாடுகளில் வசதிகளில்லாமலிருக்கலாம். அந்தப் பொருள்களை வேற்று நாடுகளிலிருந்து வரவழைக்கலாம். இந்தியாவில் பஞ்சு விளையாவிட்டால், இந்தியர்கள் வேற்று நாடுகளிலிருந்து தங்களுக்குத் தேவையான துணி களை வரவழைத்துக் கொள்ளலாம். "வித்தும் ஏரும் உளவா யிருப்ப, எய்த்தங்கிருக்கும் ஏழை" மனிதப் பதர் அல்லவா? நெசவுத் தொழிலை எடுத்துக் கொள்ளுவோம். இந்தியா முழு துக்கும் துணி ஸப்ளைசெய்யவேண்டுமானால், எத்தனை இல ட்சம் இந்தியர்கள் நெசவுத் தொழிலில் அமர்ந்திருக்கவேண் டும்? இந்தத் தொழில் இல்லாவிட்டால் அவர்கள் யாவரும் வேறு தொழில்களைப் பார்க்கவேண்டும்; அல்லது சோம்பிக் கிடக்கவேண்டும்; இரண்டு வழிகளிலும் ஆபத்துத்தான். வேறு தொழில்களிலே சென்றால் போட்டியும் சச்சரவும், மனஸ்தாபமும் ஏற்பட்டுவிடும். இந்தியாவில் தற்போது ஏற் பட்டிருக்கும் வகுப்பு வேற்றுமைகளுக்குக் காரணம் ஜீவ னக் கைத்தொழில்கள் அழிபட்டுப் போனது தான். எனவே இனமாகக் கொடுத்தாலும் இந்தியர்கள் அன்னிய நாட்டுத் துணிகளை ஆதரிப்பது கூடாது. துணி வியாபாரத்தின் மூல மாய் ஈடில்லாமல் எத்தனையோ கோடி ரூபாய் வருஷந் தோறும் இந்தியாவை விட்டுப் போகின்றது என்பது யாவ ரும் அறிந்த விஷயம்.

இந்தியாவிலிருக்கும் தேயிலைத் தோட்டங்கள் சணல் தோட்டங்கள் பெரும் பாலும் ஐரோப்பியர்களுக்குச் சொந் தமானவை. தேயிலை மூலமாய்ப் பணம் சப்பாதிக்கும் ஆங் கிலேயர்கள் தங்கள் நாட்டில் டர்பி குதிரைப்பந்தயத்திலும் கப்பல் பந்தயத்திலும் பணத்தைத் தோற்பார்கள். இங்

தியத் தொழிலாளிகள் அதிகமான "கூலி" கேட்டால், கதவடைப்பும் போலீஸ் பந்தோபஸ்தும் நேரும். சுதந்திரங் கொண்ட ஆங்கில நாட்டில் கூட முதலாளிகளின் சார்பாக, தொழிலாளிகளின் பேரில் துப்பாக்கி பிரயோகம் செய்ய தற்போதைய பொக்கிஷ மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் உத்தரவு கொடுக்கவில்லையா?

இந்தியாவுக்குச் சரக்கு அனுப்பும் ஆங்கில வியாபாரிகளுக்கு ஜாமீன்கட்டி யிருப்பதுபோல, இந்திய மந்திரியின் மூலமாய்பெரும் பொருள்—இந்தியாவுக்குச் சொந்தமாயுள்ளது—"பாங்க் ஆப் இங்கிலண்ட்" என்ற பாங்கியில் போடப் பட்டிருக்கிறது. அவ்வளவு பணம் இந்தியாவின் தொழி லபிவிருத்திக்குச் செலவு செய்யப் படலாம். அவ்வாறு செய்யாததற்கும், இந்தியாவின் பணம் ஆங்கில நாட்டில் தூங்குவதற்கும் தக்ககாரணங்களை மேயோ கூற முடியுமா?

இந்தியாவி லிருக்கும் ரெயில் பாதைகள் யாவும் ஆங்கிலக் கம்பெனிகளால் போடப்பட்டிருக்கின்றன. ரெயில் போடுவதற்குரிய ஆதரவுகள் இந்தியக் கம்பெனியெதற்கும் இதுவரையிலும் அளிக்கப்படவில்லை. ஓரிரண்டு இந்தியக் கம்பெனிகள் முயற்சி செய்து அரசாங்கத்தாரின் ஆதரவு பெறுமல், தவித்துத் தத்தளித்த கதை தமிழ் நாட்டில் பலருக்குத் தெரிந்திருக்கலாம். இந்தியத் தொழில்கள் அபிவிருத்தியடையாத வரையிலும், இந்திய ரயில் பாதைகள் இந்தியர்களுக்குச் சொந்தமான உடமையாக ஆகாத வரையிலும், இந்தியாவிலிருக்கும் ரயில் பாதைகளால் இந்தியர்களின் வறுமைதான் அதிகரிக்கும். அன்னிய

நாட்டுச் சாமான்கள் இந்தியாவில் எளிதிலே பரவுவதற்கு ரயில்பாதைகள் சிறந்த சாதனங்களாய் விளங்கும். தொத்து நோய்கள் பரவும்.

தானிய ஏற்றுமதியைப் பற்றிச் சொல்லத்தேவையில்லை. இந்தியாவில் தானியம் விற்பவர்கள் மிராசுதாரர்கள். மிராசுதாரர்கள் தங்கள் செலவிற்காக, தங்கள் தானியங்களை உயர்ந்த விலைக்குத்தான் விற்பார்கள். நாகரிகம் என்ற பொய்ச் சுவையை உடம்பில் ஏற்றிக்கொண்ட இந்திய மிராசுதாரர்கள் ஏழைகளின் நிலைமையைக் கவனிப்பதில்லை. ஒரு இரகசியம். இந்திய ஜனசமூகத்தில், ஒவ்வொரு கூட்டத்தாரும் துண்டு துண்டாகத் தங்கள் நன்மைகளைத் தேடிக் கொள்ளுமாறு தூண்டப்பெற்று வருகின்றார்கள். இந்த மோசடியைப் பொதுவாக இந்தியர்கள் அறிந்துகொள்ள வில்லை. ஒவ்வொருகூட்டமும், ஆங்கிலப்பழமொழி கூறுவது போல, தனது மூக்கிற் கப்பாலிருக்கும் பொருளைப் பார்ப்பதில்லை. தேவையில்லாத தானியம்தான் ஏற்றுமதிசெய்யப்பெறுகிறது என்று மேயோ கூறுவது தவறாகும். யாருடைய தேவை? நாட்டின் தேவையா? அல்லது மிராசுதாரர்களின் தேவையா? தொழில் நடத்தும் முதலாளிகள் நாட்டில் தொழில் இல்லாமையால் தோன்றவில்லை. எனவே, பயிர்ச்செலவு நடத்தும் மிராசுதாரர்கள் அன்னிய நாட்டார்களுக்குத் தமது தானியத்தை ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கிறது. சோப்புத் தொழிலை நடத்தும் பெரிய முதலாளிகள் இந்தியாவிலிருப்பின், மணிலாக் கொட்டை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகுமா? சோப்புகளல்லவா ஏற்றுமதியாகும்? அப்பொழுது மிராசுதாரர், தொழில் நடத்தும் முதலாளி, தொழிலாள இந்தியர் போன்ற பலகூட்டத்தார்கள் இலாப மடைவார்கள். நாட்

டில் தொழில் நடைபெறுவிடின் மிராசுதாரர்கள் தாங்கள் பயிர்செய்த தானியங்களைக் கடலில் கொண்டு கொட்டுவதா?

சேனைச் செலவை எடுத்துக் கொள்ளுவோம். இந்திய அரசாங்கத்தின் வருமானத்தில் அனேகமாயச் சரிபாதி இந்த இனத்தில் வருஷந்தோறும் செலவு செய்யப்பட்டுவருகின்றது. மனிதர்கள் தேவர்களாய்ப் போனாலன்றி, எந்த அரசியலுக்கும் சேனை துணைக்கருவியாய் அமைதல் வேண்டும் என்பதை மூடன் தான் அறியமாட்டான். எனவே, சேனைவேண்டாம் என்று எந்த இந்தியனும் சொல்லமாட்டான். ஆனால் ஆப்கானிஸ்தானம், ருஷியா என்ற நாடுகள் இந்தியாவின் அருகே இருப்பதற்காகப், பெருஞ் சேனைவேண்டுமென்று இந்திய அதிகாரவர்க்கத்தினர் கூறுவது தவறு. ஒவ்வொரு நாட்டிற்கும் பக்கத்தில் இன்னொரு நாடு இருக்கத்தான்செய்யும். ஆனால், அந்த நாடுகள் பகைமையுடன் வாழவேண்டுமென்பதில்லை. இந்தியாவுக்கு இப்பொழுதிருக்கும் பெரியசேனை தேவையில்லை. பெரிய சேனை தேவையாயிருந்தாலும் பணச்செலவு பிடிக்கும் சேனை தேவையில்லை. பொதுவாகக் கல்லூரி மாணவர்களுக்கும் சாரணர்களுக்கும் ராணுவப்பயிற்சி கொடுக்கலாம். அதனால், சேனையின் செலவு குறையும். இந்தியச்சேனையால் நேரும் செலவுகூட பாதகமில்லை. சேனையில் நிர்வாகபதவிகள் சமுதாயமாக இந்தியர்களுக்குக்கிடையாது. இந்தியர்களின் நிர்வாகத்திறனை வற்ற அடிப்பதுதான் பெரும் தீமையாகும். “செத்தமாடு கூடும்; விற்றமாடு கூடாது” என்பார்கள். நிர்வாகம் செய்யத்தெரியாத கோடீசுரனுடைய பொருள் நீடித்திருக்குமா? சேனையாலும் அரசியலின் இதர துணைக்கருவிகளாலும் இந்தியர்களின் பொறுப்பும் நிர்வாகத்

திறனும் அழிபடுவது இந்தியாவிற்கு நேர்ந்திருக்கும் பெரிய நஷ்டமாகும்.

ஐ. ஸி எஸ் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளமதிகம். எந்தநாட்டிலும், ஸிவில் இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு, இந்தியாவில் கொடுக்கப்படுவதைப்போல, அவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு நாட்டு வரவுசெலவுக்கணக்கைப்பார்த்தால், இதன் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். சம்பளம்கூடப் பெரிய சங்கதியல்ல. இந்தியர்களின் செயல் திறன் மூளை சோபிக்காமல் மழுங்கி வருவதற்கு, இந்தக்கூட்டத்தார்தான் காரணம் எனக்கூறலாம். ஐ. ஸி.எஸ். கூட்டத்தாரின் எண்ணத்தைப்பற்றி, நாம் எதுவுமே கூறவில்லை. அவர்கள் எண்ணம் நல்லதாயிருக்கலாம், கெட்டதாயிருக்கலாம். அதைப் பற்றிப் பேச்சுக் கிடையாது. நிர்வாகத்திறன் போதனையால் வராது ; அது பழக்கத்தால் வரவேண்டும். இந்தியர்க்ளின் உடல் வலிமை குன்றியதற்கு சேனையை ஒரு காரணமாகக் கூறலாம். இந்தியர்களின் நிர்வாகத்திறன் அழிந்து வருவதற்கு ஐ. ஸி. எஸ். கூட்டத்தார்தான் காரணமாகும். ஒருவனுடைய கடமையை ஏனையோன் செய்தால், இறுதியில் இருவருக்கும் தீமையுண்டாகும். ஒருவன் அகம்பாவத்தால் அழிவான் ; மற்றவன் சோம்பலினுல் நாசமடைவான்.

> "ஜனங்கள் ஏழையாயிருப்பதால், வரி குறைவாகவிருக்கிறது. வரி குறைவானதால், அரசாங்கத்தின் வருமானம் குறைவு. வருமானம் குறைவாயிருப்பதால், நாட்டின் காப்புச்செலவுகள் அதிகம்போலக் காணப்படுகின்றன. சட்டத்தையும் அமைதியையும்காப்பது அரசாங்கத்தின் தலைமைக்கடமையாகும். அந்தக் கடமையில், தான் செலவழிக்

கவேண்டியதை, எந்த அரசாங்கமும் செலவழித்துத்தான் தீரவேண்டும். மொத்த வருமானம் குறைவாயிருந்தால், ஏனைய வேலைகளுக்குக் குறைவாய்த்தான் செலவு செய்ய முடியும். எனவே, வருமானத்தை அதிகப் படுத்தவேண்டும்.''

மேயோவின் மருந்தும் தீர்ப்பும் ஆராய்ச்சியும் எப்படியிருக்கின்றன? "இந்தியர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைச் சேசரித்துக் கொள்ளவேண்டியதல்லாமல், உலகத்தில் (எந்த நாட்டைக் காட்டிலும்) அதிகச் செலவு கொண்டஅரசாட்சிமுறையையும் தாங்கவேண்டியிருக்கிறது'' என்று மைசூர் சமஸ்தானத்தின் மாஜி திவான் ஸர். விசுவேசுரய்யா கூறுகின்றார். இரண்டையும் நண்பர்கள் நோக்குவார்களாக! நாம் ஏற்கனவே கூறியதுபோல, இந்தியாவின் செல்வம் பல வழிகளிலும் சுரண்டப்படுகின்றது உண்மையானாலும்,பணச் செலவு விழுங்கும் அரசியல் கருவிகளாலும் ஏனைய கருவிகளாலும் இந்தியர்கள் தன் மதிப்பையும் தன்னம்பிக்கையையும் நிர்வாகத்திறனையும் துணிவையும் இழந்து வாழுவதுதான், பெரிய தீமை என நமக்குத் தோன்றுகின்றது.எனவே செலவைப்பற்றிக் கூட நமக்கு அவ்வளவு கவலையில்லை. மக்களுக்கு உயிரைப்போல தேவையான சுதந்திரத்தைப்பற்றித் தான் கவலைப்படுகின்றோம். எந்த நிகழ்ச்சியையும் துளைத்துக் கொண்டு, நமது உள்ளத்தில் தோன்றும் இடையொளியதுவேபாகும்.

"வலிமை, வலிமை'' யென்று பாடுவோம்-என்றும்
வாழுஞ் சுடர்க்குலத்தை நாடுவோம்
கலியைப் பிளந்திடக்கை யோங்கினோம்—நெஞ்சிற்
கவலை யிருளனைத்தும் நீங்கினோம்.''

அத்தியாயம் 30

ஜனசமூக நிர்மாணம்.

இதுகாறும் நாம் மேயோவின் எழுத்துக்களில் காணப்பெறும் அவதூறுகளையும் பொய்களையும் எடுத்துக் காண்பித்தோம். இந்தியர்களின்—ஹிந்துக்களின்—பலவீனங்களுக்கு மேயோ கூறியிருக்கும் காரணங்கள் தவறு என்பது நமது அபிப்பிராயமாகும். ஆனால் இந்தியர்களின் தற்போதைய அடிமை நிலைமைக்கு எவருடைய சாட்சியமும் தேவையில்லை. அது வெளிப்படை. மேயோ இந்தியர்களை இழித்துக் கூறிவதாலும், மேயோவுக்கு இந்தியர்கள் மறுப்பு எழுதுவதாலும், இந்தியர்களின் அடிமை நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிடமுடியாது. மேயோவின் தாக்குதல் இந்தியர்களின் அறிவைத்தூண்டினால், நல்லது தான். அதனால், கோபம் கொண்டால் பயனில்லை. எந்த ஜன சமூகத்தையும் நிர்மாணம் செய்வது எளிதான வேலையல்ல. அதுவும் அடிமைப்பட்டு வாழும் ஜனங்கள் தங்கள் பொது வாழ்க்கையை எளிதிலே அமைத்துக் கொள்ள முடியாது. உலக சரித்திரத்தையும் தன்னம்பிக்கையையும் ஆண்டவன் அருளையும் துணைக்கொண்டு, இந்தியர்கள் ஜன நிர்மாண வேலையில் இறங்குதல் வேண்டும்.

உலகத்தில், இப்பொழுது, முதன்மைப் பதவி பெற்று, வல்லமையுடன் வாழ்பவர்கள் ஆங்கிலேயர்கள். ஆங்கில நாட்டின் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தைப் போல, ஏனைய நாட்டு மக்கள் அனுபவிப்பதில்லை. உலகச் சிறப்பும் சுதந்திர வாழ்வும் சுகப்பெருக்கும் ஆங்கிலேயர்களுக்கு ஒரே

நாளில் திடீரென்று வந்த பொருள்களல்ல. இவைகளுக்காக ஆங்கிலேயர்கள் அரும்பாடு பட்டு உழைத்திருக்கிறார்கள். எனவே ஆங்கில நாட்டுச் சரித்திரத்தை இந்தியர்கள் பிரமாணமாகக் கொண்டால், நன்மை யடைவார்கள். ஆங்கிலேயர்களின் இயற்கையை நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும். உலகத்தில் ஆங்கிலேயர்களைப் போல காரியத்தில் கண்ணுள்ள ஏனையோரைக் காண்டலரிது. அதிகப் பேச்சை இயற்கையிலேயே அவர்கள் வெறுக்கின்றார்கள். பிடித்த பிடியை அவர்கள் எளிதிலே விட்டு விடுவதில்லை. எந்த நெருக்கடியிலும் அசைத்துக் கொடுத்துப்பார்கள். ஆனால் நெருக்கடி பிடித்துக் கொண்டால், அதைக் கண்டு ஓட்ட மெடுக்கமாட்டார்கள். செயலுக்குச் சம்பந்தமில்லாத சொற்களை அவர்கள் அதிகமாகப் பேசுவதில்லை. இப்பொழுது உலகத்தில், இரண்டு நாடுகள் வல்லமை பொருந்திய அரசியல்களை நடத்தி வருகின்றன. அவை ஆங்கில நாடும் இதாலியாவும். இவை யிரண்டையும் இந்தியர்கள் பார்த்து, விஷயங்களை நேரே தெரிந்து கொள்ளவேண்டும்.

நாட்டுக்குப் பொதுவான ஆபத்து நேர்ந்தால், ஆங்கில நாட்டில் கட்சிப் பிரதி கட்சிகள் தொலைந்து போகும். ஆங்கில நாட்டைப்பிரித்து விடலாம் என்ற எண்ணங்கொண்டு, எதிரி போரில் இறங்கமுடியாது. சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்னர், ஆங்கில நாட்டில் ரோமன் கத்தோலிக் கிருஸ்தவர்களும் பிராடஸ்டண்டு கிருஸ்தவர்களும்—இரண்டு கூட்டத்தார்களும் ஆங்கிலேயர்கள் தாம்—ஒருவரை யொருவர் தாக்கிக்கொன்று கொண்டிருந்தார்கள். இந்த நிலைமையிலே இலாபம் அடையலாம் என்று பகற்கனவுகண்டு, ஸ்பெயின் மன்னன் தனது கடற்படையைத்திரட்டி, ஆங்

கில நாட்டை படை யெடுக்கும்படியாக அனுப்பிவைத்தான். இந்தச்செய்தி ஆங்கிலநாட்டுக்கு எட்டிற்று. "நாடு முன்னே; நாம் பின்னர்தான்" என்று பகைமை கொண்ட இரண்டு கூட்டத்தார்களும் ஒன்று சேர்ந்து, கைகுலுக்கிக்கொண்டு, எதிரியின் படைகளை நீரில் அமிழ்த்தி, தங்கள் அருமை ஆங்கில நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார்கள். ஆங்கிலேயர்களுக்கல்லவா நாட்டுப்பற்று உண்டு என்றுசொல்லவேண்டும்? சென்ற ஐரோப்பியப் போர்க்காலத்திலும் ஆங்கில நாட்டில் சமூகச்சீர்திருத்தங்களைப் பற்றியிருந்த கலவரத்தைச் சொல்லமுடியாது. அயர்லாந்துக்குச் சுதந்திரம் அளித்தல், பிரபு சபையைச் சீர்திருத்தம் செய்தல், பெண்களுக்கு வோட்டுரிமை கொடுத்தல், தொழிலாளர்களின் இயக்கம், படைகளைக் குறைத்தல், முதலிய பல பிரச்னைகளைப்பற்றி கொலை நேரக்கூடிய கடும்பகை, கட்சிகளுக்குள் இருந்து வந்தது. போர் என்ற சத்தம் கேட்டது. சீர்திருத்தங்களை, கடலுக்கு அடித்துக் கொண்டு போய்விட்டது காற்று. ஆங்கிலேயர்கள் அனைவரும் தாய்நாட்டின் பொருட்டுப் போருக்குத்தயாரானுர்கள். அது அல்லவா நாட்டுப்பற்று?

இந்தியாவில் சாசுவதமாய் வசிக்கும் ஜனங்களுக்கு இந்தியா சொந்தமாகும். இந்தியர்கள் பல மொழிகளைப் பேசலாம். பலவகையான கொள்கைகளைக் கொண்டவர்களாயிருக்கலாம். அதனுல் பாதகமில்லை. ஹிந்துவை முஸ்லீமாக்க முஸ்லீமுக்கு உரிமை யுண்டு. முஸ்லீமை ஹிந்துவாக்க ஹிந்துவுக்கு உரிமை உண்டு. கிருஸ்தவர்கள் தங்கள் கொள்கைகளை நாடு முழுதும் பரப்பலாம். சீக்கியர்கள் அவ்வாறே செய்யலாம். பொது உடமைக் கொள்கையுடையவர்கள் வேண்டுமளவு இந்த நாட்டில் பிரசாரம் செய்யலாம்.

வருணாச்சிரமப் பிரசங்கம் செய்யலாம்; மனுஸ்மிருதி கொளுத்தப்படலாம்; பெண் விடுதலைப்போரை நிகழ்த்தலாம். இவை யாவற்றிற்கும் எல்லாருக்கும் உரிமை உண்டு. ஆனால் அந்த உரிமையை எந்தக் கூட்டத்தாரும், இந்தியா அடிமைபட்டுக்கிடக்கும் வரையில் பூரணமாய் அனுபவிக்க முடியாது. சமூகச் சீர்திருத்தங்களை யோசிக்க வேண்டியவர்கள் சுதந்திரம்பெற்று வாழ்பவர்கள். அடிமைக்கும் சீர்திருத்தத்திற்கும் என்ன சம்பந்தம்? "கடா என்றால் உழக்குப்பால் மட்டும்" என்று மீண்டும் பொருளின்றிக் கேட்கும் மனிதனுடைய அறிவு எத்தன்மைத்து? அடிமை சதா சிந்தனை செய்யவேண்டிய சங்கதி சுதந்திரமாகும். சுதந்திரம் பெற்றவர்கள் சீர்திருத்தத்தைப் பற்றி நினைக்கலாம். பொதுக் குடும்பத்திலிருப்பவர்கள் முதலில் பொருள் தேட வேண்டும்; பின்னர் பங்கு போட்டு கொள்ளுவதைப்பற்றி யோசிக்கலாம். அதாவது குறிப்பிட்ட ஒரு சமயத்தில் எந்த உணர்ச்சி ஓங்கி நிற்றல் வேண்டும் என்பதை ஆய்தல் வேண்டும்.

ஜனசமூக நிர்மாணத்தில் கவலை கொண்டிருப்பவர்கள் ஒரு நாட்டிற்கு அல்லது ஒரு கூட்டத்திற்குத் தேவையான அடிப்படையான உணர்ச்சியை நிலைத்துக் கொள்ளவேண்டும். ஒருவன் தனது நிலத்துக்குப் பாய்ச்சல் நீர் வேண்டினால் ... ஊருக்குப் பொதுவாயிருக்கும் வாய்க்காலைச் செப்ப
... கொள்ளவேண்டும். ஊர் வாய்க்கால் செப்
... லத்தின் பேரிலே தான், அவன்
... . பொது நலத்தில் வேர்
... ; எனவே பயனுள்ள
... தேவையான அடிப்

படையுணர்ச்சி தேசபக்தியாகும். என் நாட்டை ஒரு புள்ளியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தியன் இப்பொழுது கேட்பதுதகாது. இந்தியா தனிநாடாக அயல் நாட்டார்களாலும் ஆட்சி முறையாலும் ஒதுக்கி, வகுக்கப் பட்டுவிட்டது. எனவே, அந்த நான்கெல்லையிலிருந்து தான் துவக்கவேண்டும். வீட்டுப் புழுதியைப் போக்கி விடலாம்; வெளிப்புழுதி முழுமையும் போக்க முடியாது. எனவே, நாடுதான் சௌகரியமான நான்கெல்லையாகும். நாட்டுப்பற்று இல்லாதவனுக்கு வீட்டுப் பற்று இருந்தும் பயனில்லை; உலகப்பற்று இருக்கமுடியாது.

அடிப்படை யுணர்ச்சி தேசபக்தியாயின், பின்னர் இந்தியனுக்கு வேண்டியது அளவுக்கண். ஒருவனுக்கு தேசபக்தியிருந்தால் மட்டும் போதாது. அளவுக்கண் இல்லாவிட்டால், தேசபக்தன் தெளிவான காரியம் ஒன்றையும் செய்ய முடியாது. நாகரிகத்தில் ஆசை கொள்ளும் புதுப்பணக்காரன் கடைக்குள் சென்றால், கடையிலிருக்கும் சாமான்களையெல்லாம் அப்படியே வாங்கி விடவேண்டும் என்று தோன்றும். ஜீவதாது ததும்பும் இளைஞன் எல்லாப் பெருமுயற்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினால், அவன் வீணன் ஆவான். ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு எல்லாச் சீர்திருத்தங்களும் தேவைதான். ஆனால் அடிமை நாடு, விடுதலை யடையவதற்கு வேண்டிய கருமங்களிலே தான் புகுதல் வேண்டும். எ[illegible]
முதன் முதலாகச் செய்ய வேண்[illegible]
செய்ய முடியும்? இவைகளை [illegible]
முறுக்கு ஏறிவிட்டகயிற்றை[illegible]
அறுத்து எரிவது அ[illegible]

விட்டால், எந்த விடத்தில் தலைமையான சிக்கலிருக்கிறது என்று கவனிக்க வேண்டும். அதைக் கவனிக்கா விட்டால், முதற்சிக்கல் இன்னும் அதிகமாய்ப் போய் விடும்.

மூன்றாவதாக வேண்டியது விட்டுக் கொடுக்குந்தன்மை. இந்த உலகில் கடவுளின் கருணையைப் பெற்ற மேதாவிகளும் சாதுக்களும் சக்திவான்களும் ஒரு சிலரேயாவர். ஏனை யோர் ஒவ்வொரு படித்தரமான அறிவையும் சாதுத்தன்மை யையும் சக்தியையும் கொண்டவர்கள். அதாவது பலவீனங் கள் நிறைந்தது உலகம். எனவே, மனிதர்கள் தவறு செய்வது இயற்கை. சுயநலம் பாராட்டுவதும் பலவீனமானதால், அது ம் அடிமை நாட்டில் மலிந்து கிடக்கும். எனவே, மனிதனு ப கேவலமான உணர்ச்சிகளை, கேவலமான உணர்ச்சி களால் போக்க முடியாது; ஆனால் வளர்க்கலாம். முள்ளை முள்ளால் எடுப்பதில் கூட ஆபத்து இருக்கிறது. சந்தேகம் கொண்ட மனிதன் பிறன் சந்தேகத்தைப் போக்கமுடியாது. நம்பிக்கை வைத்துத்தான் பிறன் சந்தேகத்தைப் போ க்க முடியும். விட்டுக்கொடுக்கும் தன்மையைப் பழக்கிக் கொ ண்டிருக்கும் மனிதர்கள் தான் ஒருவரை யொருவர் ஒட்டிக் கொண்டு வாழமுடியும். விட்டுக்கொடுக்கும் தன்மையைக் கொண்டிராத அல்லது பழக்கிக்கொண்டிராத மனிதர்கள் ஜனசமூகநிர்மாணம் செய்யமுடியாது.

நான்காவதாக வேண்டியது பொதுவான திட்டம். பொதுவான திட்டம் குறைந்த இலட்சியம் கொண்ட தாயி னும் பாதகமில்லை. அந்தத் திட்டம் எல்லோராலும் ஏற்கப் பட்டு, பூர்த்திசெய்யப் பெற்றால், அதனால் எழும் சக்திப் பெருக்கை அளவிட முடியாது. தீண்டாமை என்பதை எடுத்துக் கொள்ளுவோம். இந்த ஒரு சங்கதியில் மட்டும்

இந்திய ஜன சமூகம் தலையிடட்டும்; தீண்டாமையை ஒழிக்கட்டும். கடல் மடை திறந்து விட்டதைப்போல, இந்தியர்களுக்கு மன எழுச்சி உண்டாகும். இந்தியர்களின் சக்திப் பெருக்கை அளந்து கூறமுடியாது.

ஐந்தாவதாக வேண்டியது சங்கற்பம். தொடங்கிய காரியத்தைத் "தலை போனாலும்" விடுவதில்லை என்ற வைராக்கியம் கொண்டவர்கள் தான் ஜனசமூக நிர்மாணவேலைக்குத் தகுதி பெற்றவர்கள். குறியும் சாதனமும் தெளிவுப்பட்டாலும், வெற்றியைக்காணாத போது ஜனங்கள் மனம்குழம்பிப் போவார்கள்; தலைவர்களைத்தூற்றுவார்கள். ஆனால் ஜன சமூக நிர்மாணிகள் சித்தத்திற் கலக்கம் கொள்ளலாகாது.

ஆறாவது உண்மையோடிசைந்த அன்பு வேண்டும். காரியவாதிகள் என்ற பெயரைக் கொண்டு, பொய் பேசலாகாது; பிறர்க்குக் கொடுமை செய்யலாகாது. காரியவாதி பொய்யனானாலும், கொடியவனானாலும், அ... அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டை விடுதலை பெறச்செய்... முடியாது. தன்னுடைய கட்சியிலும் தவறு இருக்கலாம்... மையே தவறையும பிரசாரம் செய்து கொடுமையையு... விளைக்கலாகாது.

ஏழாவது ராஜி மனப்பான்மை வேண்டும. இதுவ... யிலும் பரம்பரையாக வந்திருக்கும் உலக சரித்திரம் ... மனப்பான்மையின் பயனாகும். எந்தக் கட்சியும் ... தும் நிறைவேறியதில்லை; நிறைவேறவும் முடியாது. ... ளின் அழிக்க முடியாத எந்த முயற்சியிலும் உண... யிலும், உண்மை உண்டு. பலநோக்குகள் மனிதர்க... குண்டாதலின், இறுதியில் ராஜி யொன்றே சாத்தியமா...

சங்கதியாகும். புரட்சியும் ராஜியாக, மத்தியஸ்தமாகத் தான் முடியும்.

மேற்கூறிய தன்மைகளைப் பெற்றவர்கள் தான் ஜன சமூக நிர்மாணம் செய்யமுடியும். செயல்திறன் கொண்டவர்கள் அவர்கள் தான். நிர்வாகிக்கு இலக்கு காந்தியாவார். வந்தேமாதரம்!

"ஓமென்றுரைத்தனர் தேவர்—ஓம்
ஓமென்று சொல்லியுறுமிற்று வானம்
பூமியதிர்ச்சி யுண்டாச்சு—விண்ணைப்
பூழ்திப்படுத்திய தாம் சுழற்காற்று;
சாமிதருமன் புவிக்கே—என்று
சாட்சி உரைத்தன பூதங்களைந்தும்
நாமும் கதையை முடித்தோம்—இந்த
நானில முற்று நல்லின்பத்தில் வாழ்க."

"ஆனந்த விக

தமிழ் மாதசஞ்சிகைகளில், இது [illegible] பெற்றது
பல்லாயிரக் கணக்கான சந்தாதார்களையுடைய
ராஜீய கழுகவிடுதலைக்கு முன்னின்று உழைப்பது
எந்த ஒரு விஷயத்தையும் விகடமாக எடுத்து
கூறுவதில் ஆனந்த விகடனுக்கு மிஞ்சிய பத்திரிகை
இல்லை. இப்பொழுது இது மூன்றாவது வருஷ
நடைபெறுகிறது. நாட்டில் எந்த ஊருக்கு
சென்றாலும் நமது ஆனந்த விகடன் பிரதியை
காணலாம். நீங்கள் இதுவரை சந்தாதாராக இல்லா
விட்டால் உடனே முன்பணமனுப்பி சந்தாதாராக
சேர்ந்துகொள்ளுங்கள்,

இந்தியா, பர்மா, இலங்கைக்கு

வருஷ சந்தா தபால் கூலியுள்பட ரூ. 1 0 0

வெளி நாட்டிற்கு முன் பணம் ரூ. 1 4 0

மாதிரி காபி இனாம்.

"ஆனந்த விகடன் ஆபீ

தபால் பெட்டி 119, மதராஸ்.

தந்தி விலாசம் "விகடன்" சென்னை. டெலிபோ